சிலம்பொலியார்

அணிந்துரைகள்

(தொகுதி – 2)

அணிந்துரையாளர்

முனைவர் **சிலம்பொலி சு. செல்லப்பன்**

தொகுப்பாசிரியர்

முனைவர் **மணிமேகலை புஷ்பராஜ்**

பழனியப்பா பிரதர்ஸ்

'கோனார் மாளிகை'

25, பீட்டர்ஸ் சாலை, சென்னை – 600 014.

கிளைகள்

திருச்சி – 620 002 சேலம் – 636 001

கோயமுத்தூர் – 641 001 மதுரை – 625 001

ஈரோடு – 638 001.

ISBN : 81-8379-364-9

நூல் விவரப் பட்டியல்

நூலின் பெயர்	சிலம்பொலியார் அணிந்துரைகள் (தொகுதி – 2)
அணிந்துரையாளர்	முனைவர் சிலம்பொலி சு. செல்லப்பன்
தொகுப்பாசிரியர்	முனைவர் மணிமேகலை புஷ்பராஜ்
பொருள்	இலக்கியத் திறனாய்வு
பதிப்பாளர்	பழனியப்பா பிரதர்ஸ் சென்னை – 600 014.
அச்சகம்	ஏஷியன் பிரிண்டர்ஸ், சென்னை – 600 014.
அச்சுப்புள்ளி	10 pt
தாள்	70 ஜி. எஸ். எம். மேப் லித்தோ
நூலின் அளவு	21 x 13.5 செ.மீ. (டெம்மி 1 x 8)
பக்கம்	XL + 280 (320 பக்கங்கள்)
முதற்பதிப்பு	ஜூன், 2006
விலை	ரூ. 120–00
© பதிப்புரிமை	ஆசிரியர்க்கு

பாயிரங்களா
பரிசுகளா?

— கவிஞர் ஈரோடு தமிழன்பன்

தமிழ் இலக்கிய உலகம் நன்கறிந்த முனைவர் சிலம்பொலி செல்லப்பனாரின் முன்னுரைகளின் தொகுப்பு நூல் ஒன்றற்கு முன்னுரை எழுதும் வாய்ப்பைப் பெருமிதத்தோடு எதிரேற்று மகிழ்கின்ற இவ்வேளையில், முன்னுரை என்பதன் பொருண்மைபற்றிய நம் முன்னைய தமிழ்ச்சான்றோர் எண்ணங்களையும் தொகுத்துப் பார்க்கிறேன். 'பாயிரம்' என்னும் சொல்லால் சுட்டப்படும் 'முன்னுரை' என்பதற்குப் பழைய மரபில் பல பெயர்கள் இருக்கின்றன. இன்று பல்வேறு வார்த்தை வார்ப் படங்களால் முன்னுரை முறுவல் பூத்த முகத்தோடு வெளிவருவதை நாம் பார்க்கிறோம்.

முகவுரை பதிகம் அணிந்துரை நூன்முகம்
புறவுரை தந்துரை புனைந்துரை பாயிரம்

இது நன்னூல் காண்டிகை உரைப் பொதுப்பாயிரப் பகுதியின் முதல் நூற்பாவில் காணப்படும் முன்னுரைக்குரிய பெயர்ப்பட்டியல். இவற்றுள் இன்றும் முகவுரை, அணிந்துரை என்பன வழக்கில் தொடர்ந்து வருவதை நாம் அறிவோம். இலக்கணக்கடல் பாவலரேறு பாலசுந்தரனார் அண்மையில் எழுதி வெளிவந்திருக்கும் 'நன்னூல் திறனாய்வுரை' என்னும் நூலில் 'பாயிரத்தின் பெயர்களைத் தொகுத்துச் சொல்லுகிறது இந்நூற்பா' என்று குறித்துவிட்டு 'இவற்றுள் புனைந்துரை தவிர்ந்த ஏழும் பாயிரம் எனின் பொருந்தும்' என்று சொல்கிறார். ஆயின், அணிந்துரையும் புனைந்துரையும் ஒன்றே என்று பொருள்படுத்தும் காண்டிகை உரைகாரர், நூலினது பெருமை முதலியன விளங்க அலங்கரித்துச் சொல்வது அவற்றின் இயல்பு என்று விளக்குகிறார். அவ்வாறே நூல் சொல்லிய பொருள்

அல்லாதவற்றைச் சொல்வனவே புறவுரை, தந்துரை என்னும் பெயரிய பாயிரங்கள் என்கிறார்.

நம் முன்னைய நூல்களில் பொதுப்பாயிரம், சிறப்புப் பாயிரம் என்னும் பெயர்களில் இடம் பெற்றுள்ளவை, நூற்பாயிரத்தை விளக்க வந்த உரையாசிரியர்களால் பல இலக்கண நூல்களிலிருந்து தொகுக்கப்பெற்றவையென்றும், எனினும் அவற்றை நூலாசிரியர் இயற்றியதாகவே கருதி உரையாளர்கள் உரை எழுதிச் சென்றுள்ளனர் என்றும் பாவலரேறு பாலசுந்தரனார் கூறுவார். தொல்காப்பியத்தின் பாயிரப்பகுதியாய் - எழுத்ததிகாரத்திற்கு முன்னதாய் - உள்ள பகுதியில் உரையாசிரியர்கள் இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் தொகுத்துக் கூறுவனவும், நன்னூல் உரையாசிரியர்கள் பாயிரப்பகுதியில் தொகுத்துக் கூறுவனவும் சிற்சில சிறு வேறுபாடுகளைக் கொண்டிருப் பினும் ஒத்த தன்மையனவாகவே இருக்கின்றன.

நூலுக்கு எழுதப்படும் முன்னுரைகள் குறித்த பொது, சிறப்புப் பகுதிகளில், நம் முன்னையரின் நூல், நூலாசிரியர், பயில்வோர் ஆகியோர் குறித்த திட்பநுட்பம் செறிந்த கருத்து களை நாம் காணமுடியும்.

ஒரு நூல் ஆயிரம் வழிகளில் சிறப்புடையதாய் இருப்பினும் அதற்கு என ஒரு முன்னுரை அமையாவிடின் அதனை நூல் என்று ஒப்ப அறிவுலகம் அன்று மறுத்திருக்கிறது.

ஆயிரம் முகத்தான் அகன்ற தாயினும்
பாயிரம் இல்லது பனுவல் அன்றே

என வரும் பாடலடிகளை உரையாசிரியர்களான இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் தொல்காப்பியப் பாயிரத்திற்கு உரை செய்யும்போது எடுத்த எடுப்பில் குறிப்பிட்டுச் சொல்வர்; சொல்வதோடு, உவமை நயம் கனிந்த விளக்கங்களையும் அருவிருந்தெனப் படைப்பர்.

"பாயிரம் என்பது புறவுரை. அது நூற்குப் புறவுரையேல் அதுகேட்டு என்னை பயன் எனின், கற்றுவல்ல கணவற்குக் கற்புடையாள்போல் இன்றியமையாச் சிறப்பிற்றாயும் திருவமைந்த மாநகரத்திற்கு உருவமைந்த வாயில் மாடம்போல் அலங்காரமாதலு் சிறப்பிற்றாயும் வருதலானும், பாயிரம் கேளாதே நூல் கேட்குமேயெனில்

குறிச்சி புக்க மான்போல் மாணாக்கன் இடர்ப்படுமாகலானும், பாயிரம் கேட்டல் பயனுடைத்தாயிற்று"

என்று எழுதுவார், இளம்பூரணர்.

"பாயிரம் என்றது புறவுரையை. நூல் கேட்கின்றார் புறவுரை கேட்கின் 'கொழுச்சென்ற வழித் துன்னூசி இனிது செல்லுமாறு போல' அந்நூல் இனிது விளங்குதலின் புறவுரை கேட்டல் வேண்டும். என்னை?

பருப்பொருட் டாகிய பாயிரம் கேட்டார்க்கு
நுண்பொருட் டாகிய நூல்இனிது விளங்கும்

என்றாராகலின்.

அப்பாயிரம்தான் 'தலையமைந்த யானைக்கு வினையமைந்த பாகன்போலவும்', 'அளப்பரிய ஆகாயத்திற்கு விளக்கமாகிய திங்களும் ஞாயிறும் போலவும்', நூற்கு இன்றியமையாச் சிறப்பிற்றாயிருத்தலின், அது கேளாக்கால் 'குன்று முட்டிய குரீஇப் போலவும்', 'குறிச்சி புக்க மான்போலவும்' மாணாக்கன் இடர்ப்படும் என்க"

– நச்சினார்க்கினியர் இவ்வாறு விளக்குகிறார், பாயிரச் சிறப்பை.

இவர்கள் இருவரின் பாயிர விளக்கங்களைத் தொகுநிலையில் நாம் காணும்போது, ஒரு நூலின் முன்னுரையின் முதன்மையான கடமைகளாய்ப் பின்வரும் இரண்டனைச் சுட்டலாம்.

1. நூலை அழகுபடுத்தி இன்புறுதல்.

2. நூலை எளிமைப்படுத்தி இடர் தவிர்த்தல்.

இன்றைய இலக்கிய விமரிசன மொழியில் எடுத்துச் சொல்வதெனில்,

படைப்பாளி (Author)

பிரதி (Text)

வாசகன் (Reader)

என்னும் மூன்று இன்றியமையாத் தளங்களில் இயங்குவதே ஒரு நூலின் முன்னுரை என்று சொல்லலாம். இம்மூன்றன் மீதான சொல்லாடல்களைத் திறம்பா அறிவின் செயல்பாடுகளாய் வெளிப்படுத்த, வல்லமை மிக்க ஒருவராலேயே சரியான முன்னுரையை எழுதமுடியும்.

பொதுவாய், முன்னுரை என்பது பல வேளைகளில் நூலாசிரியனுக்கும் நூலுக்கும் செய்யப்படும் ஓர் எழுத்துச் சடங்காகவே நடந்து முடிவதை நாம் காண முடிகிறது. நுழைவுச்சீட்டாய், கடவுச்சீட்டாய், பரிசுச்சீட்டாய், பட்டயச்சான்றிதழாய், பரிந்துரை வரிகளாய் - நூலாசிரியனுக்கும் இம்முன்னுரை சிற்சில வேளைகளில் பயன்பாட்டுத் தேவையாய் - அமைந்துவிடுகிறது. நூலுக்கும் நூலாசிரியனுக்கும் அப்பாலான சில கூறுகள் முன்னுரைகளை இயக்க முற்படும்போது அவற்றின் இலக்கியத் தேவை புறந்தள்ளப்பட்டுவிடுகின்றது. முன்னுரை எதற்காக, எவரால், எப்படி இயற்றப்பட வேண்டும் என்ற முன்னைய இலக்கண விதிமுறைகள் விலகி நின்று விடுகின்றன.

'நாட்டுதும் யாமொரு பாட்டுடைச் செய்யுள்'

என்னும் பெருமிதக் குரலோடு நூலாசிரியன் 'தான்தற் புகழ்தல் தகுதி யுடையதே' என்னும் உணர்வோடு 'தன்னுரை யாத்தும் நிறைவடையாமல் முன்னுரை கேட்டுப் பெறல்' இலக்கிய உலகில் அன்றும் இன்றும் இருந்து வருவதை நாம் காண்கிறோம்.

நூலாசிரியரே விரிவான முன்னுரை எழுதுதற்கு ஓர் எடுத்துக்காட்டாய் விளங்கியவர், ஆங்கில நாடகப் பேராசான் ஜார்ஜ் பெர்னாட்ஷா ஆவார். அவர் தம் நாடகங்களுக்கு நீண்ட முன்னுரைகளை எழுதினார். அம்முன்னுரைகள் எல்லாம் தொகுக்கப்பட்டு, 1934இல் ஒரு நூல் வெளிவந்தது. அதற்கும் பெர்னாட்ஷா ஒரு முன்னுரை எழுதினார்.

"முன்னேறிக்கொண்டிருப்பதாய்க் கருதப்படும் நமது நாகரிகப் பயணத்தில் பின்தங்கிவிட்டவை என்பதைக் காட்டிலும் இம்முன்னுரைகள், இப்போதுங்கூட நம் காலத்தைக் கடந்த தொலைநோக்குக் கொண்டவை" என்று அதில் குறிப்பிட்டார். எனவே, தம் நூலுக்குத் தாம் எழுதிய முன்னுரைகள் எக்காலத்திலும் அறிவாளிகளிடையே விவாதிப்பதற்குரிய கனதியைக் கொண்டு விளங்கும் என்று அவர் கருதினார்.

"நாடகத்தின் அடிக்கருத்து சிறப்பானதாய் இருக்குமெனில், அதனைப்பற்றி மேடையில் வழங்க

முடியாதவையாய் - ஆனால், கட்டுரையில் சொல்லப்பட வேண்டியனவாய்க் கருத்துகள் அதிக அளவில் இருக்கும்" என்று பெர்னார்ட்ஷா தம் விரிவான முன்னுரைகள்பற்றி விளக்குவார். இது, 'முன்னுரை' என்பது மிக்க பொறுப்புணர்ச்சியோடு எழுதப்படுவது என்பதையும், அதற்கென ஆற்றுவதற்கு மிகப்பெரிய கடமை உண்டென் பதையும் ஒரே வேளையில் சுட்டிக்காட்டிவிடுகிறது.

பெர்னார்ட்ஷாவின் முன்னுரைகள் அவர் காலமான பிறகு மூன்று பெரிய தொகுதிகளாய் வெளியிடப் பட்டுள்ளன. அவற்றின் தொகுப்பாசிரியர்களான தான் எச். லாரன்ஸ், தானியல் ஜே. லீயரி ஆகியோர் எழுதியுள்ள முதல் தொகுப்பின் நீண்ட முன்னுரையில் பெர்னார்ட்ஷாவின் முன்னுரைத் தன்மைகளை ஆராய்ந்து விளக்கியுள்ளார்கள்.

தமிழ் இலக்கியத்தில் பதிப்புத்துறையின் முன்னோடி யான டாக்டர் உ.வே.சா. அவர்களும் தாம் பதிப்பித்த ஒவ்வொரு நூலுக்கும் விரிவான ஆராய்ச்சி முன்னுரை எழுதியிருக்கிறார். அம்முன்னுரைகளை முறையாய்ப் படித்துவிட்டு நூலுக்குள் நுழைவோர், தெரிந்த ஊருக்குள் புகுவதுபோல் புகுந்து, அரிய பயன்களை அரிய முயற்சியின்றியே பெறலாம். அம்முன்னுரைகள் தம் அளவிலேயே ஒரு நூலாகும் தகுதி கொண்டனவாய் இருக்கும். அம்முன்னுரைகளுக்கென அவர் எடுத்துக் கொண்ட அறிவார்ந்த முயற்சியும் அயரா உழைப்பும் விதந்து சொல்லத்தக்கவை. பண்டைய தமிழ்ப்பனுவல்கள் எளிதாய் அவர் கைக்குக் கிடைத்துவிடவில்லை. அவ்வாறே அவற்றுக்கு அவர் ஆக்கிய முன்னுரைகளும் எளிதில் எழுதப் பட்டுவிடவில்லை.

இப்பின்னணியோடு சிலம்பொலியாரின் முன் னுரைகள்பற்றி நாம் சிந்திக்கலாம். பழைய இலக்கிய மரபில் சொல்வதென்றால், தமிழில் ஆயிரம் முன்னுரை எழுதியவர் என்று இவருக்கு ஒரு பரணி பாடலாம். தமிழ் உலகில் அறிஞர் இராய. சொக்கலிங்கம் போலத் தமிழ்க்கடல் எனப் புகழ்தற்குப் பொருத்தமான, விரிந்து பரந்த படிப்புக் கொண்டவர் இவர்; அவரை ஒத்த நினைவாற்றலும் நிரம்பப் பெற்றவர்; சுவைபடச் சொல்லும் ஆற்றலாலும் அவரைப் போல அவையை அப்படியே கட்டிப்போட்டுவிடும் திறன்

பெற்றவர். தமிழ்நாட்டில் மூத்த எழுத்தாளர்களும், இளம்படைப்பாளிகளும் இவரிடம் தங்கள் படைப்புகளுக்கு முன்னுரை பெறுவதை ஒரு பேறென்று கருதுகின்றனர் என்றே சொல்லவேண்டும். பெரியோரை வியத்தலும் சிறியோரை இகழ்தலும் இல்லாத மனச்சமன்மையோடு முன்னுரைகளைச் சிலம்பொலியாரின் பட்டறை இடையறாது தயாரித்துக் கொடுத்து வருகிறது.

மதிப்புரைக்குத் தம்மிடம் தரப்படும் ஒவ்வொரு நூலையும் அப்படி இப்படிப் புரட்டிப் பார்த்துவிட்டு, இரண்டு மூன்று பக்கங்களில் எதையாவது நிரப்பிக் கொடுத்துவிடுவது இவர் வழக்கமின்று. ஒவ்வொரு பக்கத்திலும் பயணம் செய்து, குறிப்புகள் எடுத்து, வகை தொகைப்படுத்தி, எழுதியவரே நினைத்துப் பார்த்திராத நயப்பாடுகளை அகழ்ந்தெடுத்து, அழகுபடத் தோரணப் படுத்தி நூலின் வாயிலை அலங்கரிப்பதென்பது சிலம்பொலியாருக்கே கைவந்த கலை. நூலாசிரியர், முன்னுரை எழுதும் இவரளவுக்கு அந்நூலை ஆக்க, முயற்சி எடுத்திருப்பாரா என்னும் ஐய வினாவைப் படிப்பவர்கள் எதிர்கொள்ளாமல் இருக்கமுடியாது.

தமிழ் இலக்கியம்பற்றிய எண்ணங்களாகவும், தாம் முன்னுரை செய்யும் நூல்பற்றிய எண்ணங்களாகவும் ஒரே சமயத்தில் தரவுகளை இணைத்து வளர்பவை இவர் முன்னுரைகளாகும். தமிழ் அக்கறையும் தமிழ்ச்சமுதாய அக்கறையும் ததும்பி வழியும் வகையில் வரலாற்றுத் தளத்தின் தட்பவெப்பங்களைப் பதிவு செய்தபடி வளரும் இவர் வாக்கியங்களால், முன்னுரைகளின் தொழில்படு நிலை அமைகிறது. தன் பக்க அளவுகளையும் தாண்டி, நூலுக்குள் நுழைந்து செல்வோரின் கூடவே முன்னுரை தொடர்ந்துவரும் என்பதை இவரளித்த பல முன்னுரைகள் நமக்கு முன்னுதாரணங்களாய் இருந்து உணர்த்துகின்றன.

முன்னுரை, தான் எடுத்துக்கொண்ட நூலை அறிமுகம் செய்வது என்னும் நிலையைக் கடந்து, அதனை எழுதும் ஆசிரியனின் மனப்பதிவுகளையும், அவற்றால் ஏற்பட்ட தாக்கங்களையும் விரித்துச் சொல்ல முற்படும் நிலையில் ஒருவகையில் அது திறனாய்வாகவே மாறிவிடுகிறது என்று சொல்லலாம். சிலம்பொலியாரின் முன்னுரைகளுள் பல,

திறனாய்வு வட்டத்திற்குள் வைத்துப் பேசப்படும் தகுதியை உடையன என்று நான் உறுதியாய் நம்புகிறேன். நம் பண்டைய உரையாசிரியர்கள் சிலரையும் ஒருவகையில் திறனாய்வர்கள் என்று நாம் கருத முடியும். 'வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முன்னோர்' கண்டது படைப்பென்று கொண்ட நம் உரைகாரர்கள், படைப்புப் பற்றிய . குறைகளை எடுத்துச் சொல்லாமல் நிறைகளை மட்டுமே விதந்து பேசினர். உரையாசிரியர் ஒருவர் வேறு உரையாசிரியர் ஒருவரிடம் குற்றம் கண்டு சொல்வாரன்றி, நூலாசிரியரை ஒருபோதும் குறை சொல்ல முற்படார்.

நம் சிலம்பொலியாரும் நூலில் காணப்படும் சிறப்புகளைப் பாராட்டும்முகத்தான் முன்னுரை எழுதுவதன்றி, ஒருபோதும் அந்நூலில் காணப்படும் குறைகளை முற்படுத்திப் பேசுவதில்லை. குறைகளைக் காண நேர்ந்தபோதும், நூலின் கருத்துகளோடு முரண்பட நேர்ந்தபோதும் அவற்றையெல்லாம் தம் முன்னுரைகளில் ஆக்கியவன் காயப்படும்படி சொல்லாத சால்புடையவர், இவர். எனவே, கடந்த நூற்றாண்டின் முதல் இருபது ஆண்டுகள்வரை இலக்கியத் திறனாய்வு உலகில் பேசப்பட்ட அணுகுமுறைகளின் வரிசையில் வைத்துச் சிலம்பொலி யாரின் முன்னுரைகளைப் பார்க்கலாம்

பேராசிரியர் க. த. திருநாவுக்கரசு அவர்கள் இவ்வகைமையில் பதின்மூன்று அணுகுமுறைகளைப் பட்டியலிட்டுக் காட்டுகிறார்.

1. படைப்புவழித் திறனாய்வு அல்லது தொகுப்புவழித் திறனாய்வு
2. மரபுவழித் திறனாய்வு அல்லது நலம் பாராட்டும் திறனாய்வு
3. விதிமுறைத் திறனாய்வு
4. அழகியல் திறனாய்வு
5. மதிப்பீட்டுமுறைத் திறனாய்வு
6. வாழ்க்கை வரலாற்றுமுறைத் திறனாய்வு
7. வரலாற்றுமுறைத் திறனாய்வு
8. அறிவியல் திறனாய்வு
9. விளக்கநிலைத் திறனாய்வு

10. வகைப்பாட்டுத் திறனாய்வு

11. பாத்திரப் படைப்புத் திறனாய்வு

12. மூலநூல் திறனாய்வு

13. ஒப்பீட்டுத் திறனாய்வு

இப்படி வகைப்படுத்தப்பட்டுள்ள திறனாய்வு அணுகு முறைகள் பெரும்பாலும் மனப்பதிவுமுறைத் திறனாய் வாகவே அமைவன என்பதையும் பேராசிரியர் க.த. திருநாவுக்கரசு சுட்டிக்காட்டுகிறார்.

சிலம்பொலியாரின் முன்னுரைகளில் பெரும்பாலன நலம் பாராட்டும் திறனாய்வு (Appreciative Criticism) நெறியில் நிற்பன. இவ்வாறு நலம் பாராட்டும் திறனாய்வை நிகழ்த்த அவருக்குள்ள தமிழ் இலக்கியத்தின் ஆழங்கால்பட்ட பயிற்சியும் புலமையும் கைகொடுத்து உதவுகின்றன. இத்திறனாய்வு முன்னுரை, நூலாசிரியனை உயர்த்துகிற தருணத்திலேயே, வாசகனுக்கு அவன் அரிதின் முயன்று பெற வேண்டிய இலக்கிய இன்பத்தை எளிதில் எடுத்துக் கொடுத்துச் சொக்கவைத்துவிடுகின்றது. ஆக்கியோன் பெற்ற வெற்றிக்குச் சமன்மையான வெற்றியை வாசகனும் பெறச் சிலம்பொலியாரின் தமிழும் வெற்றிப் பதாகையை விரித்துப் பறக்கவிடுகிறது.

இங்கு, சிலம்பொலியாரின் முன்னுரைகளின் இரண்டாம் தொகுதிவழி வெளிப்படும் திறப்பாடுகள் சிலவற்றைத் திரட்டிப் பார்க்கலாம். இத்தொகுப்பில் முப்பத்தொரு நூல்களுக்கு உரிய முன்னுரைகள் இடம் பெற்றுள்ளன; அளவில் மிக நெடியனவும், மிகக் குறுகியனவும், இடைநிலைப்பட்டனவுமாய் அவை அமைந்துள்ளன.

சில நூல்கள் நெடிய முன்னுரையை அவாவும் தகுதி படைத்தனவாய் இருப்பதும், சில குறுகிய வரையறைக்குள் இருக்கும் முன்னுரையை எதிர்பார்ப்பனவாய் இருப்பதும், அளவில் குறுமையும் நெடுமையும் இல்லாத முன்னுரைக்குப் பொருத்தப்பாடு உடையனவாய்ச் சில இருப்பதும் காரணமாய்க் கொள்ளலாம். இவை அல்லாமல் சிலம்பொலியாருக்கு ஏற்பட்ட அவசர வற்புறுத்தல்களும், அவரை ஆட்கொள்ளும் பிற பணிகள் தரும் அனுமதி

அளவுகளுங்கூடக் காரணமாய் இருக்கக்கூடும். சிலம்பொலியார் எவ்வாறு எழுதியிருப்பினும், முன்னுரையை விரும்பியவர் தாம் நூல் எழுதி அடையும் மன நிறைவை இவர்தம் முன்னுரையாலும் பெறுகிறார்.

இத்தொகுப்பில் முன்னுரை பெற்றிருக்கும் நூல் வகைமைகளைப் பின்வருமாறு பிரித்துக் காணலாம்.

கவிதை நூல்கள் : 24

மரபுக் கவிதை நூல்கள்	*18*
புதுக்கவிதை நூல்கள்	*4*
நாட்டார் பாடல் மரபில் எழுதப்பெற்றது	*1*
நாட்டார் பாடல்-தொகுப்பும் விளக்கமும் -	*1*

உரைநடை நூல்கள் : 7

ஆய்வு நூல்கள்	*5*
கட்டுரை நூல்கள்	*2*

சிலம்பொலியார் உரைநடை நூல்களின் பல்வகைமைகளையும் படிக்கும் வழக்கம் உடையவர் எனினும், இவருள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தவை கவிதை நூல்களாகவே இருக்கின்றன. இவரிடம் இயல்பாய் அமைந்துள்ள கவிதை நுகர்வு ஆர்வமே இதற்குத் தலையாய காரணமாய் இருக்கக்கூடும். இவர் எழுத்தாளர் என்பதைக் காட்டிலும் தலைசிறந்த தமிழ்ப்பேச்சாளர் என்பதே உலகு அறிந்த உண்மையாய் இருக்கிறது. நம் இலக்கிய மேடைகளில் - பள்ளி, கல்லூரி, மற்றுள மன்றங்கள் எவற்றிலும் - பேச்சுகள், கவிதையை மையம் கொண்டே நிகழ்த்தப்படுவனவாய் உள்ள நிலையில், கட்டுரைகள் குறித்தோ கதைகள் குறித்தோ ஆய்வு மையங்கள் தவிர்த்த மற்ற இடங்களில் பெரும்பாலும் பேசப்படாத நிலையில், தலைசிறந்த சொற்பொழிவாளர் சிலம்பொலியாரின் மனப்பாட ஆற்றலை, விளக்கவுரைத் திறனைக் கவிதைகளே கையகப்படுத்திக்கொண்டன என்று உறுதியாய்ச் சொல்லலாம். சொல்லின் செல்வர் இரா.பி. சேதுப்பிள்ளை இவரது சிலப்பதிகாரச் சொற்பொழிவில் சிந்தையைப் பறிகொடுத்துத் தந்த பட்டமே 'சிலம்பொலி' என்பதை நாடறியும். சிலப்பதிகாரக்கவிதை இவருக்குச் சேதுப்பிள்ளை

வழியாக இப்பட்டத்தைக் கொடுத்தது என்றும் நாம் கருதலாம்.

கவிதைக்கும் இவருக்குமான 'கொள்வினை, கொடுப்பினை' உறவுகள் தமிழுக்கு ஆக்கமாய் விளைந்தன. அவ்வாக்கங்களின் ஒரு கூறுதான் கவிதை நூல்களுக்கு இவர் இயற்றியுள்ள முன்னுரைகள்.

தொடர்ந்து கவிதையோடு தோழமை கொண்டு வாழ்ந்துவரும் சிலம்பொலியாரின் பொதுநிலையான கவிதை விமரிசனம் சிலவற்றை இங்கே குறிப்பிடலாம். படிப்புகளின் - பார்வைகளின் - சாரமாய் இவருள் படிந்துள்ள அத்தகைய கருத்துரைகள் அங்கங்குப் பதிவாகியுள்ளன.

"மரபுக்கவிதை, புதுக்கவிதை இரண்டும் நோக்கிலும் போக்கிலும் யாப்பிலும் முற்றும் மாறானவை. எனவே, இரண்டையும் ஒன்றுபடுத்தி நோக்குவது அல்லது ஆய்வுசெய்வது பொருத்தமாகாது." – பக். 264

''புதுக்கவிதை கவிதை ஆகுமா என்ற ஆராய்ச்சியில் ஈடுபடுவதைவிட, தோன்றிவிட்ட புதுக்கவிதை கவிதையாய் இருக்கிறதா என்று பார்ப்பதே நம் நோக்கமாய் இருக்கவேண்டும்.'' —பக். 269.

"காலந்தோறும் அடைந்துவரும் மாறுதல் நிலைகளுள் ஒன்றே இன்றைய புதுக்கவிதை. கவிதையில் புதியவை, பழையவை என்றில்லை. உருவத்தால் மாறுபட்ட நிலையைக் குறிக்கப் 'புது' என்னும் அடைமொழி சேர்க்கப்பட்டுள்ளது. அவ்வளவே! யாப்புச் சிந்தனையின்றி, கருத்துகளை மையமாய்க்கொண்டு, எழுதுவோர்க்கு இயைந்து வரும் வடிவத்தில் படைக்கப்படுவனவே இன்றைய புதுக்கவிதைகள்.'' – பக். 274.

இப்படி நறுக்குத் தெறித்தாற்போன்ற செறிவின் திரட்சியான கருத்துமணிகள் இத்தொகுப்பில் அங்கங்கு மின்னலடித்து நம் எண்ணம் கவர்கின்றன. புதுக் கவிதையைத் தூக்கி எறியாமல் தூக்கிப்பிடிப்பவர், சிலம்பொலியார். ஆதலால், இத்தொகுப்பினுள் குறைவான எண்ணிக்கையில் முன்னுரை பெற்றுள்ள புதுக்கவிதைத் தொகுப்புகள்பற்றிய மதிப்பீடுகளோடு தம் எண்ணங்களை யும் பதிவு செய்திருப்பதைப் பாராட்ட வேண்டும்.

திறனாய்வின்போதிருக்கும் மனநிலை நூலாசிரியர் களைப் பாராட்டும்போது திறந்த மனநிலையாய் மாறித் தாயுள்ளத்தோடு தாராளமாகிவிடுவது சிலம்பொலியாரின்

தனிச்சிறப்பென்று கூறலாம். எவரையும் ஊக்கப்படுத்தினால் உயர்ந்துவிடும் சாத்தியங்கள் அவர்களிடம் உருவாகிவிடும் என்பதே இவரின் நம்பிக்கையும் எதிர்பார்ப்புமாகும். ஆயின், அதற்கென வார்த்தைகளை வரம்பின்றி ஊதாரித்தனமாய்ச் செலவிடவும் மாட்டார், சிலம்பொலியார். தணிக்கை செய்யப்படாத கனிவு நிலையிலும் தம் கணக்கு, பிழையாக இவர் ஒப்பமாட்டார். அழகு ததும்பும் நடையில், உவமை நலன் சிறக்க நூல்களை - நூல் ஆசிரியர்களை இவர் பாராட்டும் சில இடங்கள்

"நூல் முழுதும் கவியின்பம் சிறகடித்துப் பறக்கக் காண்கிறோம். பறவைகளைக் கூட்டிலடைப்பது கொடுமை! ஆனால், பாவலர்கள் கவிதை வானில் பறக்க விட்டுள்ள இப்பாட்டுப் பறவைகளைப் பிடித்து நம் நெஞ்சக் கூட்டிலடைப்பதோ பெருமை!

– புலவர் அன்பரசன் தொகுத்துள்ள
'வண்ணப் பறவைகள்', அணிந்துரை, பக். 67

"எண்ணங்களின் உடையே மொழி என்றார், அறிஞர் ஜான்சன் (Language is the dress of thought). நண்பர் கலைக்கூத்தனின் எண்ணங்களின் கவின்மிகு உடையாய் இக்கவிதை நூல் திகழ்கிறது. ஆறு பகுதிகளைக் கொண்டுள்ள இந்நூல், கவிதை வானில் ஆறு கலைகளைக் கொண்ட அழகுப்பிறையாய் ஒளி வீசிச் சிறக்கிறது."

– 'கலைக்கூத்தன் கவிதைகள்', பக். 77

"நண்பர் பாலசுப்பிரமணியனின் 'கவிதை மேகங்கள்' பொழிந்த தமிழ்வெள்ளம் இந்நூலாற்றில் கரை புரண்டு ஓடுகிறது. உங்களை நான் சிறிதே அதில் நனைய வைத்துள்ளேன். நீங்களாகவே அக்கவிப்புனலில் நீந்தித் திளைத்து மகிழ வேண்டும் என்பது என் ஆசை. இருபதாம் நூற்றாண்டில் இந்த ஒப்பற்ற உயரணிகலத்தைத் தமிழ்த்தாய்க்குச் சூட்டியுள்ள நண்பர்க்கு என் நெஞ்சார்ந்த வாழ்த்துகள்."

– மு.பி. பாலசுப்பிரமணியனின்
'கவிதை மேகங்கள்' அணிந்துரை பக். 91

"கவிஞரின் ஒவ்வொரு கவிதையும் கற்கண்டாய் இனிக்கிறது என்று சொல்லி உங்களுக்கு ஆசை காட்டிவிட்டு, அத்துணையையும் நானே சுவைக்க முற்படுவது சரியாகுமா? எனவேதான், நான் சில துண்டுகளைச் சுவைத்ததோடு நிறுத்திக்கொண்டு எஞ்சியவற்றை நீங்கள் சுவைக்க உங்களுக்குக் கொடுத்து மகிழ்கிறேன்."

– ஜெயமாலிகா கண்ணனின்
'வெளிச்சம் வருகிறது' அணிந்துரை, பக். 273

"திரு. எழிலரசு, பாவேந்தர் பாரதிதாசனின் கவிதைகளில் ஊறித் தோய்ந்தவர். பாவேந்தரின் கருத்துகளைப் பாடுபொருளாய்க் கொண்டவர்; ஆயினும், பாடல் வடிவத்தில் அவரினின்றும் வேறுபட்டுப் புதுக்கவிதைகள் புனைந்துள்ளார். இவருடைய கன்னிமுயற்சியிலேயே வெற்றிக்கனியை எட்டிப் பிடிக்கும் நிலையை எய்தியுள்ளார்."

– எழிலரசுவின் 'இன்னொரு விடுதலை' அணிந்துரை, பக். 279

இப்படி, முன்னுரை முத்தாய்ப்புகள், சிலம்பொலி யாரின் தமிழாற்றலையும், நூலாசிரியர்கள்மீதான முதிர்பரிவு முழுமையையும் வெளிப்படுத்துகின்றன.

முன்னுரை முகங்கொள்ளும் முறையிலும் சிற்சில சிறப்புத்தன்மைகள் நம்மைக் கவர்கின்றன. இருபதாம் நூற்றாண்டின் தமிழ் இலக்கிய உலகத் திருப்புமுனையாய் விளங்கிய சுப்பிரமணிய பாரதியை எடுத்த எடுப்பில் சில முன்னுரைகள் கொண்டிருப்பது சிலம்பொலியாரின் பாரதிப்பற்றைப் பளிச்சென்று உணர்த்துகிறது.

கலைக்கூத்தன், செவ்வியன், கபிலவாணன், வேழவேந்தன், சங்கரலிங்கம் ஆகியோரின் நூல்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் முன்னுரைகளிலெல்லாம் பாரதி முதன்மை பெறுகிறார்.

முன்னுரைகளுள் சில ஆக்கியோன்பற்றிய அறிமுகத்தோடு தொடங்குகின்றன. 'பாரதிதாசனின் காதல் பாடல்கள்' என்னும் நூலின் முன்னுரை, பாவேந்தர் என்னும் தலைப்பிட்ட பத்தியோடு தொடங்குகிறது. அவ்வாறே, முனைவர் சௌரிராசன்பற்றிய குறிப்புகளோடு அவரெழுதிய 'சித்திரச் சிலம்பு' என்னும் நூலும், தே.ப. சின்னசாமிபற்றிய அறிமுகம்வழி அவர் எழுதிய 'திருக்குறளில் மருத்துவம்' என்னும் நூலும், ப. முத்துசாமி பற்றிய அறிமுகம்வழி அவர் எழுதிய 'ஒரு மழலையின் தொடக்கம்' என்னும் நூலும் முன்னுரை பெறுவதைக் காண்கிறோம்.

இம்முறைக்கு மாறாய்ச் சில முன்னுரைகள், ஆக்கமாய் வெளிப்பட்டிருக்கும் நூலை நோக்கியே தொடங்குகின்றன. அன்பரசன் தொகுத்தளித்துள்ள 'வண்ணப் பறவைகள்' என்னும் நூலும், இறையரசனின் 'நாலும் பொருளும்' என்னும் நூலும், கு.சா. கிருஷ்ணமூர்த்தி யின் 'தமிழ் நாடக வரலாறு' என்னும் நூலும் நேரடியாய்த்

'நேத்தாஜி காவியம்' என்னும் படைப்புக்கு முன்னுரை எழுதும்போது சிலம்பொலியார் அக்காவிய நாயகர் வரலாற்றை நான்கு பக்க அளவில் சுவைபடச் சுருக்கித் தந்து படிப்பவர்களுக்குப் படிக்கட்டுகள் போட்டுக் கொடுத்திருக்கிறார். சங்கரலிங்கம் எழுதியுள்ள குறுங்காவியமான 'தமிழ்ப்பாவை'க்கும் மூன்று பக்க அளவில் முன்னுரையிலேயே கதைச்சுருக்கம் ஒன்று படிப்பவர்க்கு உதவியாய்க் கிடைத்துவிடுகிறது. நூலாசிரியர்கள் செய்திருக்க வேண்டிய கடமையை முன்னுரையாளர் செய்து, அவர்களுக்கு முன்னுரைக்கும் மேலதிக உதவியைச் செய்ய வல்லவர் தாம் என்பதைச் சிலம்பொலியார் உணர்த்தியுள்ளார். பொதுவாய் இத்தகு நிலை ஏற்படும்போது 'கதைச்சுருக்கத்தைப் படைப்பாளி தனியாய்த் தந்திருந்தால் படிப்பவர்களுக்கு நல்வாய்ப்பாய் அது இருந்திருக்கும்' என்னும் ஒரு குறை சுட்டலாகவே முன்னுரையாளர் அதனைக் குறித்துவிட்டு நகர்வார். ஆயின், சிலம்பொலி சால்பு அத்தகையது அன்றே!

முன்னுரைக்கு எடுத்துக்கொண்ட நூல்பரப்பில் நின்று, அதன் கருத்தமைவை, கலைத்திட்பத்தை எடுத்து மொழிதலாகவும், அதனை ஆக்கிய ஆசிரியரின் அருந்திறல் தகுதியை அறிமுகப்படுத்தலாகவும் சிலம்பொலியார் முன்னுரைகள் அமைகின்றனவெனினும், சில நூல்களுக்கு வரலாறு கூறலாகவும் ஒப்புமை காணலாகவும் இருப்பதையும் தனிச்சிறப்பெனச் சுட்டிக்காட்டலாம். இத்தகைய முன்னுரை எழுதப்படும்போது, சிலம்பொலியார் நினைவிலும் கண்முன்னும் தமிழ் இலக்கியப்பரப்பு விரிந்து நின்று இவர் வளர்க்கும் வாக்கியங்களுக்குள் வந்துவிடத் துடிக்கின்றது. கடும் உழைப்பைக் கட்டளைப்படுத்தும் இப் பணியைச் சிலம்பொலியார் இயல்பாயும் எளிதாயும் நிறைவேற்றுகிறார்.

இத்தொகுப்பில் இறையரசன் எழுதியுள்ள 'நாலும் பொருளும்' என்னும் நூலுக்கு முன்னுரை வழங்கும்போது நாலடியார் என்னும் பதினெண்கீழ்க்கணக்கு நூலுக்கு அவர் முழு விருத்தப் பாக்களில் படைத்துள்ள உரைபற்றிய கருத்துகளை வழங்குவதோடு நின்றுவிடாமல், அந்நூலுக்கு டாக்டர் ஜி.யூ. போப் வரைந்துள்ள பதிப்புரையில்,

'சிறந்த ஒழுக்கத்தில் மிகப் பற்றுள்ள மக்களாவார் தனிப்பட்ட பேரின்பத்தை எய்துவார்களென நான் கருதுகிறேன்; அன்னாரை இவ்வழியில் நிலைநாட்டியது திருக்குறளும் நாலடியுமே ஆகும்' எனக் கூறியுள்ளார் என்பதனை எடுத்துக்காட்டி, திறமான புலமைக்கு வெளிநாட்டார் வணக்கம் செய்ததைப் படிப்பவர்க்கு ஓர் எதிர்பாரா இனிய இணைப்பாய்க் கொடை செய்கிறார்.

பாட்டுக்குப்பாட்டு வடிவிலான உரைகள் தமிழ் இலக்கியப்பரப்பில் எங்கெங்குத் தட்டுப்படுகின்றன என்பதைப் பட்டியலிட்டுக் காட்டி, திருக்குறளுக்குப் பாடல் உரைகள் எழுந்த வரலாற்றைச் சுட்டும்போது பண்டித செகவீர பாண்டியனார், இராய. சொக்கலிங்கம், வேதாசலம் ஆகியோரின் முயற்சிகளைத் தொகுத்துத் தருகிறார்.

சிலம்பொலியாரின் இத்தகு திறனுக்கு இன்னுமோர் எடுத்துக்காட்டு 'ஒரு மழலையின் தொடக்கம்' என்கிற தலைப்பிலான ப. முத்துசாமியின் மொழிபெயர்ப்பு நூலுக்கு இவர் எழுதியுள்ள முன்னுரை. வங்கக் கவிஞர் இரவீந்தரரின் கவிதைகளிலிருந்து 109 பாடல்களைப் ப. முத்துசாமி தமிழாக்கம் செய்துள்ள இந்நூலில், மொழிபெயர்த்து அதர்ப்பட யாத்தலில் அவர் சிறப்புகளை விதந்து சொல்லி முன்னுரையை முடித்திருக்கலாம். ஆயின் சிலம்பொலியார், மொழிபெயர்ப்பாளியின் ஆங்கிலம், தமிழ் ஆகிய இருமொழி வல்லன்மையை அடித்தளமாய்க்கொண்டு ஆக்கப்பட்ட இந்நூலின் பல்வேறு சிறப்புகளைச் சொல்வதோடு அமையாது, இரவீந்தரரின் கவிதைத் தமிழாக்கங்கள் பலவற்றையும் படித்து ஒப்பிட்டுக் காட்டுகிறார். மொழிபெயர்ப்புச் செய்த முத்துசாமியே எதிர்பார்த்திருக்க முடியாது, தம் தமிழாக்கம் இப்படித் தராசில் நிறுத்தப்படும் என்பதை. இப்படி ஒப்பிடும்போதும், மொழிபெயர்ப்பின் உயர்வு தாழ்வுகளை நிறுவ முற்பட வில்லை.

"ஒரே பகுதியைப் பலர் மொழிபெயர்க்கும்போது அவரவர் மொழிவளம், சொல்லாட்சி, யாப்பு வகைமைக்கேற்ப மொழிபெயர்ப்பு நடை வேறுபட்டிருப்பதை அறிவோம்." – பக். 120

சிலம்பொலியாரின் நடுவுநின்ற நன்னெஞ்சம் இப்படி வெளிப்பட்டிருக்கிறது.

ப. முத்துசாமி தமிழாக்கம் செய்துள்ள இரவீந்தரரின் கீதாஞ்சலியில் வருகிற ஒரு பகுதி

"This is my prayer to thee my Lord
Strike strike at the root of my heart
Give me the strength lightly
to bear my joys and sorrows
Give me the strength to make my love fruitful in service"

இதற்குப் பேராசிரியர் சீனிவாசராகவன், வீ.ஆர்எம். செட்டியார், பா. வரதராசன், கோ. நடராசப்பிள்ளை ஆகிய பலர் செய்துள்ள தமிழாக்கங்களையும் சிலம்பொலியார் நம் பார்வைக்கு எடுத்து வைத்துச் சுவை படைப்பதோடு, தமது படிப்பினது அகலத்தையும் புலப்படுத்திவிடுகிறார்.

இம்முன்னுரையில் மொழிபெயர்ப்பைப்பற்றிப் பல்வேறு ஆய்வுக் கருத்துகளை நமக்குத் தருகிற தருணத்தில் மொழிபெயர்ப்பாளர் மொழிபெயர்க்க எடுத்துக்கொண்ட ஒன்றையே திரும்பத்திரும்ப மொழிபெயர்க்கும்போது அது மெருகேறுவதையும், இதை இப்படி மாற்றியிருக்கலாமோ என்று பெயர்ப்பின் பின் மொழிபெயர்ப்பாளர்க்கே தோன்றுவதையும் சுட்டிக்காட்டி, இவ்வகையில் வங்க மொழியில் பக்கிம் சந்திரர் இயற்றிய 'வந்தே மாதரம்' என்னும் பாடலைப் பாரதியார் இரு முறை தமிழாக்கம் செய்ததை எடுத்துரைத்திருப்பது, காட்டுகள்மூலம் தமது கருத்தை நிலைநாட்டும் சிலம்பொலியார் திறத்தை நம் கருத்தில் பதிய வைப்பதாய் உள்ளது.

மேற்குறித்த முன்னுரைச் சாயலிலேயே ஏறத்தாழ அமைந்ததாக உள்ளது, என்.ஏ. ரசீத் பதிப்பித்துள்ள குணங்குடி மஸ்தான் சாகிபு அவர்களின் 'திருப்பாடற் றிரட்டு' நூலுக்குச் சிலம்பொலியார் செய்துள்ள முன்னுரை. இசுலாமியப் படைப்பாளிகள் பலருக்கு இவர் எழுதியுள்ள முன்னுரைகளை மட்டுமே தொகுத்தால் இசுலாமிய இலக்கிய வரலாறு அல்லது இசுலாமிய இலக்கியக் களஞ்சியம் ஒன்று பெரிய அளவினதாய்த் தமிழுக்குக் கிடைத்துவிடும்.

குணங்குடியாரின் வரலாற்றுச் சுருக்கத்தோடு தோற்றம் கொள்ளும் இக்கட்டுரை, இத்தொகுப்பிலேயே மிக

விரிவானதென்று சொல்லலாம். குணங்குடியாரின் கருத்து வளம், சமய ஒருமைப்பாடு ஆகிய கருத்துத் தளங்கள்மீது கண்ணோட்டம் செலுத்தியபின், அவர் பாடல்களில் காணலாகும் பேச்சுவழக்குச் சொற்களையும் வட்டார வழக்குச் சொற்களையும் எடுத்துக்காட்டுகிறார்.

பிறகு, தம் பரந்துபட்ட படிப்பின் பயனாய்க் குணங்குடியாரைத் தாயுமானவர், திருவள்ளுவர், இடைக்காடர், அவ்வையார், பட்டினத்தார் ஆகியோர் கருத்து நிலைகளோடும் கவிதை வடிவங்களோடும் ஒப்பிட்டுக் காட்டிப் படிப்பவர்கள் எதிர்பார்க்காத பயன்களைத் தம் கட்டுரையில் சிலம்பொலியார் கொட்டிக் கொடுக்கிறார். தாகம் என்று வந்தவனுக்குத் தண்ணீர் மட்டுமா, அடுத்தடுத்து இளநீர், மோர், பதநீர் ஆகிய எல்லாமே கிடைத்தால் இன்பத்தின் எல்லை அவனுக்கு எட்டிப்பிடிக்காத தொலைவிலா இருக்கும்?

கு. சா. கிருஷ்ணமூர்த்தியின் 'தமிழ் நாடக வரலாறு', சேமுமு. முகம்மதலியின், 'தமிழ்க்கவிதை நாடகங்களில் பாத்திரப்படைப்பு' ஆகிய உரைநடை நூல்களின் முன்னுரைகளின் முடிவுரைகளில், தொகுத்துச் சுட்டல் என்கிற உத்தியைக் கையாண்டிருப்பதோடு, நூல்களின் நுதல் பொருள்களைப் பகுத்துச் சொல்லிப் பயன்மிக்க பணியைச் சிலம்பொலியார் ஆற்றியிருக்கிறார். ஆய்வாளர் பொன். சௌரிராசனின் 'சித்திரச் சிலம்பு' என்னும் கட்டுரை நூலின் முன்னுரை முடிபு, நூலாசிரியரின் பாடறிந்தொழுகும் பண்பாடு குறித்த புகழ்ச்சொற்களால் அமைந்து, அவர்மீது சிலம்பொலியார் கொண்டுள்ள தனிப்பட்ட ஈடுபாட்டின் வெளிப்பாடாயும் அமைந்துள்ளது. இவ்வாறே பேராசிரியர் ந. சஞ்சீவியின் 'இலக்கியத் தலைவர் கலைஞர்' என்னும் நூலுக்குச் சிலம்பொலியார் எழுதியுள்ள முன்னுரையில், 'காமம் செப்பாது கண்டது மொழியும்' நூலாசிரியர் திறன் வெளிப்படும் இடத்தைச் சுட்டிக்காட்டியிருப்பதை இங்குக் குறிப்பிடலாம்.

முன்னுரை என்பது வெறும் முகமன் மொழிதல் அன்று என்பதை உணர்த்துவதுபோலச் சிலம்பொலியார், நூலாக்குவார்க்குத் தேவையான சில நெறிமுறைகளையும் காய் விட்டுக் கனி கவர்ந்த சொற்களால் எடுத்துரைக்கிறார்

முன்னுரை என்பது வெறும் முகமன் மொழிதல் அன்று என்பதை உணர்த்துவதுபோலச் சிலம்பொலியார், நூலாக்குவார்க்குத் தேவையான சில நெறிமுறைகளையும் காய் விட்டுக் கனி கவர்ந்த சொற்களால் எடுத்துரைக்கிறார் என்பதற்கும் இம்முன்னுரைத் தொகுப்பில் சில இடங்கள் இருக்கின்றன.

என். ஏ. ரசித் பதிப்பித்துள்ள குணங்குடி மஸ்தான் சாகிபு அவர்களின் 'திருப்பாடற்றிரட்டு' என்னும் நூலுக்குச் சிலம்பொலியார் எழுதியுள்ள முன்னுரையில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்

"இசுலாமியக் கோட்பாடுகள், சமயக் கதைக்குறிப்புகள், தத்துவக் கருத்துகள் ஆகியன கூறப்பட்டுள்ள இடங்களில் அவற்றிற்கு விளக்கம் தந்திருப்பின் இன்னும் பயனுள்ளதாய் இருந்திருக்கும். அடுத்த பதிப்பில் இஃது இடம் பெறுமென நம்புகிறேன்." – பக். 110.

ஜெயமாலிகா கண்ணனின் 'வெளிச்சம் வருகிறது' என்னும் கவிதைத் தொகுப்பு முன்னுரையில்,

"புதுக்கவிதையாளர்களுள் பலர் வடமொழிச் சொற்களையும் ஆங்கிலச் சொற்களையும் வலுக்கட்டாயமாய்ப் புகுத்துவதும், பொருளே புரியாத புதிர்க்கவிதைகளைப் படைத்துப் படிப்போர்க்கு மயக்கம் ஏற்படும்படி செய்வதும் ஒரு குறையாகத்தான் அமைந்து வருகிறது." – பக். 269.

என்று எழுதுகிறார்.

பெரும்பாலும், நூலின் உட்பொருள்மீதே கவனம் குவிக்கும் முன்னுரையாளர், சில இடங்களில் புற வடிவம் பற்றிய தம் பார்வையையும் வெளிப்படுத்தியிருக்கிறார். ஓர் எடுத்துக்காட்டு

"பதிப்பு மிகச்சிறந்த முறையில் அமைந்துள்ளது. ஒவ்வொரு பாடலுக்கும் தனித்தனியே தலைப்புகளை அழகுற எழுதி வார்ப்படமெடுத்து அச்சிடப்பட்டிருப்பதும், பாடல்களைப் பெரும் பிரிவுகளில் தனித்தனியே வகைப்படுத்திச் செய்திருப்பதும் பாராட்டத்தக்கவாறு உள்ளன. சிறந்த அச்சு. இந்நூல் இவ்வளவு சிறப்புற அமைய அச்சுப்பொறுப்பை ஏற்றுச் செய்த கவிஞர் அன்பரசன் பாராட்டுக்குரியவர்." – பக். 149.

இப்பகுதி சிலம்பொலியாரின் அழகியலுணர்வை எடுத்துக்காட்டுவதோடு, பதிப்பாளர்கள் எடுத்துக்கொள்ளும்

சிறந்த பதிப்பு முயற்சிகளுக்காக அவர்கள்மீது காட்டும் அன்புள்ளத்தையும் புலப்படுத்துகிறது.

சிலம்பொலியாரின் முன்னுரைகள், நூலாசிரியர்களுக்குக் கிடைத்த பரிசுகள் என்று கருதி மகிழ வாய்ப்பிருப்பது போலவே, தமிழ் இலக்கிய வரலாறு எழுதுகிறவர்களுக்குக் கையேடு போல உதவவல்ல கொடைகள் என்று பெருமைப்படவும் வாய்ப்பிருக்கிறது. சிலம்பொலியார் இம்முன்னுரை முயற்சிகளுக்கென எடுத்துக்கொண்ட காலம், உழைப்பு, கவனம் ஆகியவற்றைத் தம் நூலாக்கங்களுக்கெனப் பயன்படுத்தியிருந்தால் அவர் பெயரில் பெரியதொரு பட்டியலைத் தமிழ் மக்கள் கண்டிருக்க முடியும். எந்தத் தாயும் தன் பிள்ளைகளுக்குத் தரும் உணவையும் தானுண்டால் தனக்கு வாழ்நாள் கூடும் என்றோ உடல்நலம் வளரும் என்றோ கருதுவதுண்டோ? அத்தகைய தாயுள்ளம் வாய்ந்தவர் சிலம்பொலியார். அவரால் அப்படித்தான் இருக்கமுடியும். அவரே நினைத்தாலும் அவரால் தம்மை மாற்றிக்கொள்ள முடியாது. தாய்மையை மறக்க முடிந்தால் மட்டுமே தமிழ் இலக்கிய உலகம் சிலம்பொலி செல்லப்பனாரை மறக்க முடியும். முடியுமா?

தொகுப்பாளரின் உரை

— முனைவர் மணிமேகலை புஷ்பராஜ்

இதுவரை தமிழில் பல்வேறு துறைகளிலும் வெளிவந்துள்ள ஏறத்தாழ அறுநூற்றுக்கு மேற்பட்ட நூல்களுக்கு என் தந்தையார் திரு. சிலம்பொலி சு. செல்லப்பனார் ஆராய்ச்சி முன்னுரைகள், மதிப்புரைகள், அணிந்துரைகள் அளித்துள்ளார் என்கின்ற செய்தி தமிழ்கூறும் நல்லுலகில் உள்ள பலரைப் போன்றே எனக்கும் மலைப்பையும் வியப்பையும் ஏற்படுத்திய ஒன்றாகும்.

என் தந்தையாரைக் காணவரும் தமிழறிஞர்களிடம் உரையாடுகின்ற வாய்ப்பு எனக்கு அடிக்கடி கிடைத்தது; கிடைத்தும் வருகிறது. சென்னையில் நடைபெறும் இலக்கிய நிகழ்ச்சிகளுக்கெல்லாம் அவருடன் செல்லும்போது அவருக்கு நெருங்கிய நண்பர்களாயுள்ள தமிழ்ச்சான்றோர் பலரையும் சந்தித்துப் பேசுகின்ற வாய்ப்புக் கிட்டியது; கிட்டிக்கொண்டுமிருக்கிறது. அவர்களுடன் உரையாடும் வேளைகளில், என் தந்தையார் அளித்துள்ள அணிந்துரைகள்பற்றிப் பேச்சு எழுவதுண்டு; அணிந்துரைகள் மிகவும் சிறப்பாய் உள்ளன என்றும், அவற்றையெல்லாம் யாராவது தொகுத்து வெளியிட்டால் தமிழிலக்கிய உலகிற்கும், வரும் தமிழ்த் தலைமுறையினர்க்கும் பயனுள்ளதாய் அமையுமென்றும் அவர்கள் சொல்லக் கேட்டபோது, நாமே அவற்றைத் தொகுக்கலாமே என்ற எண்ணமும் ஆவலும் என்னுள் எழுந்தன.

என் எண்ணத்தை என் தந்தையாரிடம் வெளிப் படுத்தியபோது இசைவளித்தார். முதற்கட்டமாய்த் தந்தையார் அணிந்துரைகள் அளித்துள்ள நூல்களைத் தேடி, அணிந்துரைகளின் படியினை எடுக்கும் பணியைத்

தொடங்கினேன். என் தந்தையாரின் நூலகத்திலேயே சில நூல்கள் கிடைத்தன. என் தந்தையாரின் நூலகம்பற்றி இங்குக் குறிப்பிடுவது பொருத்தமாய் இருக்குமென்று கருதுகிறேன். தமிழ்நாட்டில் தனிப்பட்டவர்கள் வைத்திருக்கும் நூலகங்களுள் மிகச்சிறப்பானவையாயும் பெரியனவாயும் உள்ள மிகச்சில நூலகங்களுள் என் தந்தையார் தம் வீட்டில் வைத்திருக்கும் நூலகமும் ஒன்றாகும் எனில் அது மிகையன்று. அவர் நூலகத்தில் இலக்கியங்கள், இலக்கணங்கள், அகராதிகள், நிகண்டுகள், கலைக்களஞ்சியங்கள் என வகைவகையான அரிய நூல்கள் பத்தாயிரத்திற்கும்மேல் உள்ளன. தந்தையாரின் நூலகத்தில் மாக்கவி பாரதிக்குப்பின் தமிழில் வெளிவந்த மரபுக் கவிதை நூல்கள் மட்டும் ஈராயிரத்துக்கும் மேல் உள்ளன. சென்ற நூற்றாண்டின் பிற்பகுதி தொடங்கி எழுந்துள்ள புதுக்கவிதை நூல்கள் ஆயிரத்துக்கும் மேற்பட்டு உள்ளன. இன்னும் கூடுதலாகவே இருந்தன. எல்லா நூல்களையும் சேர்த்து வைக்க வீட்டில் போதிய இடமில்லையாதலின் ஆயிரக் கணக்கான நூல்களை நன்கொடையாய் அளித்துவிட்டார். உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கும், நண்பர்களுக்கும், வெளிநாடுகளிலிருந்து வரும் தமிழார்வலர்களுக்கும் ஏராளமான நூல்களைத் தந்துவிட்டார். அதனால் அவர் அணிந்துரை எழுதிய நூல்கள் பல அவரிடம் இல்லாமல் போயின. எனவே, வெளி நூலகங்களில் தேடி எடுக்க வேண்டியதாயிற்று.

என் கணவர் திரு. புஷ்பராஜ் அவர்கள் சென்னையில் கன்னிமாரா நூலகம், தேவநேயப் பாவாணர் நூலகம், மறைமலையடிகள் நூலகம் போன்ற பெரிய நூலகங்களிலும் இன்னும் பல்வேறு சிறிய நூலகங்களிலும் நூல்களைப் பெற்று, என் தந்தையாரின் அணிந்துரைகளைப் படியெடுத்து வந்தார். சென்னையில் அவர் சென்று தேடாத நூலகமே இல்லை எனலாம். நூலகங்களிலும் இருபது முப்பது ஆண்டுகட்கு முற்பட்டு வெளிவந்த நூல்கள் கிடைக்க வில்லை; கிடைத்தவரை படியெடுத்துக் கொணர்ந்தார்.

ஓரளவுக்கு அணிந்துரைகள் சேகரிக்கப்பட்டதும், அவற்றைப் பதிப்பித்து வெளியிடுவதுபற்றி எண்ணிக் கொண்டிருந்த வேளையில், பழனியப்பா பிரதர்ஸ் திரு. சுப்பு அவர்கள், என் தந்தையாரின் அணிந்துரைகளைச் 'சிலம்பொலியார் அணிந்துரைகள்' என வெளிக் கொணரலாம் எனச் சொன்னபோது அளவிடற்கரிய மகிழ்ச்சி அடைந்தேன்.

என் தந்தையார்போல் நூல்களுக்கு அரிய விரிவான ஆராய்ச்சி அணிந்துரைகள் வழங்கியவர் எவருமிலர் என்று சொன்னால் அது மிகையன்று. இத்தகைய அணிந்துரைகளைத் தொகுக்கும் பணியை மேற்கொண்டது வாழ்க்கையில் எனக்குக் கிடைத்த பேறுகளுள் ஒன்று என்று கருதுகிறேன்.

இந்நூல், சில தொகுதிகளாய் வெளிவருகின்றது. ஒவ்வொரு தொகுதிக்கும் சிறந்த தமிழறிஞர் ஒருவர் அணிந்துரை வழங்கியுள்ளார். அணிந்துரை வழங்கியுள்ள பேராசிரியப் பெருமக்கட்கு என் பணிவான வணக்கத்தை உரித்தாக்குகின்றேன். அணிந்துரைகள் அடங்கியுள்ள நூல்களுக்கு அணிந்துரை எழுதியுள்ள அறிஞர்கள் அவற்றை மிகச்சிறந்த திறனாய்வுரைகளாகவே விரிவாய், வளமாய், இலக்கிய முத்துகளாய் வழங்கியிருக்கின்றனர். இவ் அணிந்துரைகள் அப்பெருமக்களின் அயரா உழைப்பையும், அரிய தமிழ்ப்புலமையையும், திறனாய்வுத் திறனையும் மற்றும் என் தந்தையார்மீது அவர்கள் கொண்டுள்ள அன்பினையும் வெளிப்படுத்துகின்றன. குறுகிய காலத்தில் மிகச்சிறப்பான அணிந்துரைகளை வழங்கியுள்ள இப் பெருமக்களுக்கு மீண்டும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பதிப்புலகில் பழனியப்பா பிரதர்ஸ் பெருமைக்குரிய மூத்த நிறுவனம்; தரமான நூல்களைமட்டுமே வெளியிடுவதைக் குறிக்கோளாய்க் கொண்டது. இந்நூலை மிக அழகாயும் அருமையாயும் வெளியிட்டிருக்கும்

இப்பதிப்பகத்தார்க்கு குறிப்பாய் அமரர் பழனியப்பச் செட்டியார், அவர் இளவல் திரு. மெ. செல்லப்பன், மகன் திரு. ப. செல்லப்பன், மருகர் திரு. இராம. சுப்பு ஆகியோர்க்கு என் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நூலை உருவாக்குவதில் துணைநின்ற ஏசியன் அச்சக மேலாளர் வெற்றியூர் திரு. சுப. திருஞானம், செம்மையாய் மெய்ப்புத் திருத்தம் செய்து நூற்பதிப்பில் பெருந்துணைநின்ற திரு. பெ. நடராசன் (தேனி திருமாவளவன்) அவர்களுக்கும், கணினி ஒளிஅச்சு அமைத்துத்தந்த திருமதி லோகாம்பிகை ஜெய்கிருஷ்ணன் அவர்களுக்கும் என் நன்றி.

என் முயற்சிகளுக்கு ஊக்கம் தந்து, என்றும் துணைநிற்கும் என் அன்புத் தந்தையார்க்கும், கணவர் திரு. நா. புஷ்பராஜ் அவர்களுக்கும், மகன் பு. கிருபாவுக்கும் என் நெஞ்சம் நிறைந்த நன்றி.

அணிந்துரையாளரின் முன்னுரை

— சிலம்பொலி சு. செல்லப்பன்

அணிந்துரை பண்டு பாயிரம் என வழங்கப்பட்டது. நூலின் தொடக்கத்தில் நூலாசிரியரோ மற்றவரோ அந்நூல்பற்றி எழுதிய பாயிரம் இருக்கவேண்டும். எத்துணைச் சிறப்புடையதாயினும் பாயிரம் இல்லாத நூல் ஒன்றனை நூல் என்றே கருத இயலாது என்கிறது, நன்னூல் இலக்கண நூற்பா[1]. எந்நூல் உரைப்பினும் அந்நூலுக்குப் 'பாயிரம் உரைத்து உரைக்க' என்பது மரபு என்கிறார், உரையாசிரியர் இளம்பூரணர்.

பாயிரம் என்பது நூலைப்பற்றிய சிறுகுறிப்பு. அதற்கு வரலாறு என்றும் பொருள் கூறுவர். ஒரு நூலைப் பயில விரும்புவோர் அதுபற்றிய வரலாற்றினை அறிய அவாவுதல் முறைமை (கடமை)யாதலின் பாயிரம் நூலுக்கு இன்றியமை யாததோர் உறுப்பாகிறது[2].

முகவுரை, பதிகம், அணிந்துரை, நூன்முகம், புறவுரை, தந்துரை, புனைந்துரை என்னும் பெயர்களாலும் பாயிரம் வழங்கப்பெறும்[3].

நூலுக்கு முகமாய் (முகப்பாய்) இருப்பதால் முகவுரை;

நூலிலுள்ள பல்வகைப் பொருள்களையும் பதித்திருப்பதால் பதிகம்;

நூலுக்கு அழகு சேர்ப்பதால் அணிந்துரை;

நூலின் தொடக்கமாய் இருப்பதால் நூன்முகம்;

நூலுக்குப் புறத்தேயிருந்தும் செய்திகளைச் சொல்வதால் புறவுரை;

நூலில் சொல்லப்படாத பொருளைத் தந்துரைப்பதால் தந்துரை;

1. நன்னூல், 54
2. கோ. வில்வபதி, நன்னூல் உரை
3. நன்னூல், 1

நூலின் பெருமையைப் புனைந்து கூறுதலால் புனைந்துரை;

என்னும் பொருளில் பாயிரத்திற்கு வேறு பெயர்கள் வழங்கப்படலாயின. நூற்பொருள், நூலாசிரியர் பெயர் முதலாயவற்றை முன்னின்று காட்டுவதால் பாயிரம் அப்பெயர் பெற்றது.

தொல்காப்பியத்திற்குப் பனம்பாரனார் வழங்கியுள்ள பாயிரந்தான் இன்று கிடைப்பவற்றுள் மிகவும் தொன்மை வாய்ந்தது. அவர் பாயிரத்தின் பொருள் :

"வடவேங்கடம் தென்குமரி இவற்றிற்கிடைப்பட்டது தமிழ் பேசும் மக்கள் வாழும் தமிழகம். இந்நாட்டினகத்தே வழங்கும் பேச்சு வழக்கு, செய்யுள் வழக்கு ஆகிய இருவகை வழக்குகளையும் அடிப்படையாய்க்கொண்டு இந் நூலின்கண் எழுத்திலக்கணமும் செய்யுளிலக்கணமும் பொருளிலக்கணமும் ஆராய்ந்து உரைக்கப்பட்டுள்ளன.

"செந்தமிழ் நாட்டின் இயல்பொடு பொருந்த இந்நூல் செய்யப்பட்டுள்ளது. இந்நாட்டில் பழங்காலந்தொட்டு வழங்கிவரும் முந்தைய நூல்கள் அனைத்தையும் கற்றும் தெளிந்தும் ஆய்ந்தும், அங்ஙனம் ஆய்ந்தறிந்தவற்றை யெல்லாம் தொகுத்தும் இந்நூல் செம்மையாய் எழுதப் பெற்றுள்ளது.

"இது நிலந்தருதிருவிற்பாண்டியன் எனும் வேந்தன் அவையில் அரங்கேற்றப்பட்டது. இவ்வரங்கேற்றம், அறம் உரைக்கும் நாவினையுடையவரும் நான்மறை வல்லுநரு மாகிய அதங்கோட்டாசான் தலைமையில் ஆன்றவிந் தடங்கிய கொள்கைச் சான்றோர் குழுமியிருந்த அவைமுன் நிகழ்ந்தது.

"தொல்காப்பியர் எனும் தம் இயற்பெயரே நூற்பெயராய் விளங்குமாறு, 'தொல்காப்பியம்' என்னும் இந்நூலை இவர் இயற்றியுள்ளார். தொல்காப்பியர் ஐந்திரம் கற்ற அறிவாற்றலுடையவர்; இவர் பல்துறை சார்ந்த நுண்ணறிவும் மிகுபுகழும் கொண்டு தூய துறவியாய் விளங்கிய பெரியவர்."

வடவேங்கடம் தென்குமரி
ஆயிடைத்
தமிழ்கூறு நல்லுலகத்து

வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலின்
எழுத்துஞ் சொல்லும் பொருளும் நாடிச்
செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு
முந்துநூல் கண்டு முறைப்பட எண்ணிப்
புலந்தொகுத் தோனே போக்கறு பனுவல்
நிலந்தரு திருவிற் பாண்டியன் அவையத்து
அறங்கரை நாவின் நான்மறை முற்றிய
அதங்கோட் டாசாற்கு அரில்தபத் தெரிந்து
மயங்கா மரபின் எழுத்துமுறை காட்டி
மல்குநீர் வரைப்பின் ஐந்திரம் நிறைந்த
தொல்காப் பியனெனத் தன்பெயர் தோற்றிப்
பல்புகழ் நிறுத்த படிமை யோனே![1]

தொல்காப்பியத்திற்குத்தான் முதன்முதலில் பாயிரம் எழுதப்பட்டது போலும்! அதனாற்றான் தொல்காப்பியர் பாயிரத்திற்கு இலக்கணம் வகுக்கவில்லை எனக் கருதலாம். பாவலரேறு பாலசுந்தரனார், "பாயிரம் என்பது செய்யுள் வகையோ நூல்வகையோ ஆகாமையின் தொல்காப்பியர் அதுபற்றி விளக்கவில்லை எனக் கருதலாம்" என்கிறார்.[2]

பனம்பாரனார் பாயிரத்தில் தொல்காப்பிய நூல் வழங்கும் எல்லை, முன்னோர் நூலின் வழி, நூல் நுவலும் பொருள், நூல் எழுந்த காலம், நூலைக் கேட்போர், நூலை ஆக்கியோன் பெயர், நூற்பெயர் என்பன அடங்கியுள்ளன. இதனையொட்டியே தொல்காப்பியத்திற்குப் பின்னர் எழுந்த இலக்கண நூலாகிய நன்னூலில் அதன் ஆசிரியர் பவணந்தி முனிவர் பாயிரத்திற்கு இலக்கணம் வகுத்துள்ளார். பாயிரத்தைப் பொதுப்பாயிரம், சிறப்புப் பாயிரம் என இரு பிரிவாய்ப் பிரித்துள்ள அவர், சிறப்புப் பாயிரத்திற்கு வகுத்துள்ள இலக்கணம் தொல்காப்பியப் பாயிரத்தை அடிப்படையாய்க் கொண்டுள்ளது என்பதனை அறிய முடிகிறது.

ஆக்கியோன் பெயரே, வழியே, எல்லை,
நூற்பெயர், யாப்பே, நுதலிய பொருளே,
கேட்போர், பயனோ(டு) ஆயஎண் பொருளும்
வாய்ப்பக் காட்டல் பாயிரத்(து) இயல்பே.[3]

1. பனம்பாரனார், தொல்காப்பியப் பாயிரம்
2. ச. பாலசுந்தரம், தொல்காப்பியம் எழுத்ததிகாரம், காண்டிகையுரை
3. நன்னூல், 47

தொல்காப்பியத்திற்குப் பிறகு சங்ககால இலக்கியங்களில் பாயிரமோ, பதிகமோ, இவற்றையொத்த பகுதியோ இல்லை. சங்க இலக்கியங்கள் தனிப்பாடல்களின் தொகுப்பு. ஆதலின், பாயிரம் இடம் பெறவில்லை. ஆயினும், தொகுத்தோர், தொகுப்பித்தோர்பற்றிய விவரங்கள் கிடைத்துள்ளன. அதுவுங்கூட முழுமையாய்க் கிடைக்கவில்லை. பதிற்றுப்பத்தில் மட்டும் ஒவ்வொரு பத்தின் இறுதியிலும் பதிகம் அமைந்துள்ளது. பாடலைப் பாடியோன், அவன் பெற்ற பரிசில், அப்பரிசிலின் பெருமை ஆகிய செய்திகளும், பாடப்பட்டுள்ள மன்னன் பெருமையும் அவன் ஆட்சியாண்டுகளும் கூறப்பட்டுள்ளன.

தமிழின் முதற்காப்பியமாய சிலப்பதிகாரத்தில்தான் விரிவான பதிகத்தைக் காணமுடிகிறது. அப்பதிகம் சிலப்பதிகாரக் காப்பியம் எழுந்த வரலாற்றையும், நூலின் அமைப்பையும், நூல் எழுதப்பட்டதற்கான நோக்கத்தையும், சிலப்பதிகாரத்தில் அடங்கியுள்ள பொருள்பற்றியும் தெளிவாய்ச் சுட்டுகிறது.

மணிமேகலைக் காப்பியப்பதிகம், காப்பியத்திலுள்ள ஒவ்வொரு காதையின் சுருக்கத்தை ஓரிரு அடிகளில் கூறுகிறது. இளங்கோவடிகள் கேட்பச் சாத்தனார் இதனைப் பாடியருளியதாயும் கூறப்பட்டுள்ளது.

சீவகசிந்தாமணிப்பதிகம் கடவுள் வாழ்த்துடன் தொடங்குகிறது. கடவுள் வாழ்த்தோடு தொடங்கும் பதிகத்தை முதன்முதலில் சீவகசிந்தாமணியில்தான் காண முடிகிறது. கதைத்தலைவன் வரலாற்றினைப் பதின்மூன்று இலம்பகங்களில் இக்காப்பியம் எடுத்துரைக்கிறது. ஒவ்வொரு கலம்பகத்தின் கதைச்சுருக்கம் ஒவ்வொரு விருத்தப்பாவில் கூறப்பட்டுள்ளது.

கம்பராமாயணத் தற்சிறப்புப்பாயிரம் கடவுள் வாழ்த்து, அவையடக்கம், நூல் வந்த வழி ஆகியவற்றைக் கூறுவதோடு, நூலின் பெயர், நூற்பயன், நூல் அரங்கேறிய இடம் ஆகிய செய்திகளையும் கூறுகிறது.

இதையடுத்துத் தோன்றிய காப்பியங்களும் இதே போக்கில் பாயிரத்தைக் கொண்டுள்ளன.

ஒரு நூலின் சிறப்புப்பாயிரத்தை அந்நூலாசிரியருக்கு ஆசிரியர், நூலாசிரியருடன் ஒருங்கு கற்ற ஒருசாலை

மாணாக்கர், நூலாசிரியரிடம் பயின்ற மாணவர், அந்நூலுக்கு உரை வகுப்பவர் ஆகிய இந்நால்வருள் ஒருவர் இயற்றுதல் முறைமை.

தன்னா சிரியன்; தன்னொடு கற்றோன்;
தன்மா ணாக்கன்; தகும்உரை காரனென்று
இன்னோர் பாயிரம் இயம்புதல் கடனே![1]

ஆயின், இக்காலத்தே இந்நால்வர் என்பது மாறி, பெரும்பான்மை நூலாசிரியர் தாம் விரும்பும் தக்கார் ஒருவரிடம் அணிந்துரை பெறுவது நடைமுறையாயுள்ளது. இன்னார் எழுதினால், அவர் பெருமையால் அல்லது செல்வாக்கால், பதவியால் அந்நூலுக்குப் பெருமை கிட்டும் என்ற எண்ணம் கொண்டும் அணிந்துரைகள் பெறப்படுகின்றன.

பாயிரம் பண்டை நாளில் பா வடிவில் அமைந்தது. அதுவும் ஆசிரியப்பாவானும் வெண்பாவானும் இயற்றுதல் மரபாயிருந்தது.

பாயிரத்(து) இலக்கணம் பகருங் காலை,
நூல்நுதல் பொருளைத் தன்னகத் தடக்கி,
ஆசிரிய மானும் வெண்பா வானும்
மருவிய வகையால் நுவறல் வேண்டும்.[2]

அந்நாளில் அனைத்துமே பா வடிவில் எழுதப்பட்டதால் இவ்விதி பொருந்துவதாயிருந்தது. இன்றோ கட்டுரை, சிறுகதை, புதினம், நாடகம் எனப் பல திறத்தன உரைநடை வடிவில் உள்ளன. அதனால் அணிந்துரைகளும் உரைநடையிலேயே உள்ளன.

செய்யுள் நூல்களுக்காவது அணிந்துரை செய்யுளிலேயே இருப்பின் மரபு காக்கப்பட்டதாகும். அணிந்துரை தருவோர் செய்யுளியற்றக்கூடியவராய் இருந்தால்தான் இஃது இயலும்; அத்தகையவரை அணுகி அணிந்துரை பெறுவது பொன்மலர் நாற்றமுடைத்தாம்! எந்நூல் எவ்வகையில் அமைந்திருக்கிறதோ அவ்வகையிலேயே அணிந்துரை அமைய முயற்சி செய்யலாம். அப்படிச் செய்யின் அணிந்துரை வரலாற்றில் அஃது ஒரு புதுமைப் படைப்பாய்த் திகழும். நாடக நூலின் முன்னுரை அல்லது

1. நன்னூல், 51
2. நச்சினார்க்கினியர், தொல்காப்பியப் பாயிர உரை.

அணிந்துரை நாடக வடிவில் இருக்கலாமே! இந்நிலையிருந்திருப்பின் நூற்றுக்கணக்கான என் அணிந்துரைகள் எழுந்திருக்கவே வாய்ப்பில்லை! இவ்வணிந்துரை நூற்றொகுதிகள் வெளிவரும் நிலையும் உருவாகியிராது. ஆயினும், அப்படிப்பட்டதொரு முயற்சி தோன்றவேண்டும் என்பது என் அவா.

அணிந்துரை இன்று நுழைவாயில், அழகுரை, மதிப்புரை, ஆய்வுரை, சுவையுரை, சிறப்புரை, பொருளுரை முதலாய பெயர்களாலும் வழங்கப்பட்டு வருகின்றது.

இப்போது வெளிவரும் நூல்களுள்ளும் சிலவற்றில் அணிந்துரைகளைப் பா வடிவில் காணமுடிகிறது. அணிந்துரை 'சாற்றுக்கவி'யாயும் உள்ளது. நூலின் பெருமையை அக்கவி சொல்வதால் அது சாற்றுக்கவி என வழங்கப்படுகிறது. துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் இயற்றிய திருவெங்கைக் கோவை எனும் நூலுக்கு,

கற்றோர்க்(கு) இனியதொரு தமிழமுதாய் அகப்பொருளின்
கருத்தாய்க் காண
முற்றாரும் மணற்கேணி தொட்டென்ன அணிகள்பல
முனைந்து தோன்றி
சொற்றோறும் நயம்பெருகத் திருவெங்கை நாயகன்நற்
துணைய டிக்கே
வற்றாத பேரன்பிற் கோவையாம் ஒருநூலை
வகுத்திட் டானால்

எனப் பெரும்புலவர் கா. நமசிவாய முதலியார் சாற்றுக்கவி அளித்துள்ளார். இக்காலப் பெரும்புலவர்கள் தாம் படைத்துள்ள நூல்களுக்குப் பலரிடம் சாற்றுக்கவிகள் பெற்றுள்ளதை அறியமுடிகிறது.

18, 19ஆம் நூற்றாண்டுகளில் ஓலைச்சுவடிகளைத் தேடிக் கண்டெடுத்துப் பண்டைய நூல்களைப் பதிப்பித்த சி.வை. தாமோதரம் பிள்ளை, டாக்டர் உ.வே.சாமிநாதையர் போன்றவர்கள் தாங்கள் பதிப்பித்த நூல்களில் நீண்ட முகவுரைகள் எழுதியுள்ளனர். அவற்றில் அவர்கள் நூல்களைப் பதிப்பிப்பதற்கு ஓலைகளைத் தேடியலைந்த தொல்லைகள், பார்வையிட்ட ஓலைகள் முதலியவற்றை விரிவாய்க் குறிப்பிடுவதோடு, அந்நூல்களிலிருந்து அறியக் கிடக்கும் முக்கியச் செய்திகளையும் குறிப்பிட்டுள்ளனர்.

டாக்டர் உ.வே. சாமிநாதையர் பதிப்பித்துள்ள நூல்களில் மிக நீண்ட முகவுரையைக் காணமுடிகிறது;

முகவுரைபற்றிய அவர் கருத்தும் புலனாகிறது. "அக்காலத்தில் அச்சிடப்பெற்ற தமிழ்ப்புத்தகங்கள் பலவற்றில் முகவுரை முதலியன காணப்படவில்லை. அவை இருந்தால் படிப்பவர்க்கு மிக்க உபயோகமாயிருக்கும் என்பதை உணர்ந்த நான் (சிந்தாமணிக் காப்பியத்தைப் பதிப்பித்த போது) அதற்கு அங்கமாக அவற்றை எழுதிச் சேர்த்துப் பதிப்பிக்கலாமென எண்ணினேன். என்ன என்ன விஷயங்களை முகவுரையில் எழுதவேண்டுமென்பதைப் பற்றி ஆலோசித்தேன். நூலைப் படிப்பதற்குமுன் அதிலுள்ள முக்கியமான செய்திகளையும், நூலின் பெருமையையும், உரையின் தன்மை முதலியவற்றையும் படிப்போர்கள் தெரிந்துகொள்ளுவது நலமென்பது என் கருத்து" என உ.வே.சா. தம் சிந்தாமணிப்பதிப்பின் முகவுரையில் குறிப்பிடுகிறார்.[1]

அவரது இக்கருத்துக்கேற்பவே அவர் பதிப்பித்துள்ள நூல்களின் முகவுரைகள் அமைந்திருப்பதைக் காண்கிறோம். அவரது சிலப்பதிகாரப் பதிப்பின் முகவுரையில் ஒரு பகுதி : "இக்காலத்தில் வேறொரு வகையாலும் அறிதற்கியலாத இசையிலக்கண வகை, நாடக இலக்கணம், பரத இலக்கணம், அவிநய வகைகள், நகர் அமைப்பு, கோயிலமைப்பு முதலியன; ஐவகைத் திணைகளின் அமைதிகள், இன்னின்ன சாதியார் இன்னின்ன தொழில்கள் செய்தார் என்பது, பலவகை நீதிகள், சமயக் கோட்பாடுகள், இராசபக்தி, ஆச்சிரம அமைதி, ஆசிரிய பக்தி, மாணாக்கரியல்பு, ஆபரண வகை, தானிய வகை, ஊர்தி வகை, கருவி வகை, மந்திர வகை, பூ வகை, செடி வகை, கொடி வகை, மர வகை ஆகிய இவையும் இவைபோல்வன பிறவும் இந்நூலால் (சிலப்பதிகாரத்தால்) அறியலாகும்" என எழுதியுள்ளார். நூலுள் அடங்கியுள்ள செய்திகளை, பழக்கவழக்கங்களைத் தொகுத்து முகவுரையில் தரவேண்டும் என்பது அவரது எண்ணமாய் இருந்திருக்கிறது.

அவர் எவ்வெந் நூல்களுக்கு முகவுரை எழுதுகிறாரோ, அவற்றுக்கு இலக்கண விளக்கம் அளிக்கவேண்டியிருப்பின் அவற்றையும் தருகிறார். தூது நூல்களுக்கு முகவுரை எழுதும்போது தூது இலக்கணங்களையும், பிற தூதுகளைப் பற்றிய பொதுச் செய்திகளையுங்கூட வெளிப்படுத்தி

1. டாக்டர் உ.வே. சாமிநாதையர், என் சரித்திரம், பக். 608

யுள்ளார்; சில இடங்களில் நூலாசிரியர் கருத்து இன்னவாயிருக்கும் என்பதையும் புலப்படுத்துகிறார். புகையிலைவிடு தூது பதிப்பின் முகவுரையில், "இந்நூல் 59 கண்ணிகளையுடையது. இத்தூதில் புகையிலையின் பெருமைகள் 53 கண்ணிகளில் சொல்லப்படுகின்றன. தூது விடும் செய்தி ஏனைய ஆறு கண்ணிகளில் சுருக்கமாய் அமைந்துள்ளது. இதனால் இதைப் பாடிய புலவர் புகையிலையைச் சிறப்பிப்பதற்காகவே இதனைப் பாடியிருக்க வேண்டும் என்பது தெரிகிறது" என எழுதுகிறார்.[1]

இவர் காலத்தில் நூல்களைப் பதிப்பித்த பிற ஆசிரியர்கள் இவரைப் போன்று நீண்ட முகவுரைகள் எழுதவில்லையாயினும் சற்றொப்ப இதே போக்கில் எழுதியிருக்கக் காண்கிறோம்; சிலர் மிகுவிரிவான முகவுரை எழுதியுள்ளதையும் காணமுடிகிறது. ரா. இராகவய்யங்கார் தாமியற்றியுள்ள 'பாரிகாதை'யின் முகவுரையில் பாரி, கபிலர் ஆகியோர்பற்றிச் சங்க இலக்கியங்களில் கிடைக்கும் குறிப்புகளை விரிவாய்த் தந்துள்ளதோடு முகவுரையிலேயே காப்பியக்கதை முழுவதையும் சுருக்கமாய்த் தந்துள்ளார்.

மனிதன் ஒருவனுக்கு முகம்போல நூலுக்கு முகவுரை அமைகிறது. முகத்தை நோக்கி ஒருவரது அகநிலைமையைத் தெரிந்துகொள்கிறோம். அவ்வாறே முகவுரையைக்கொண்டு நூலின் உள்ளடக்கத்தைச் செவ்வையாய் அறிந்துகொள் கிறோம்.

மாளிகை, கட்டட வேலைப்பாடமைந்ததாயினும் அதற்குப் பொலிவூட்ட அழகிய ஓவியம் இன்றியமையாதது. ஒரு நகரம் மிகவும் பெரியதாய் அமைந்திருந்தாலும் அதற்கு மேலும் பெருமை சேர்க்கக் கோபுரத்தோடு கூடிய தலைவாயில் இன்றியமையாதது. பெண்கள் இயற்கையிலேயே அழகுடையவர்களாயினும் அவ்வழகுக்கு அழகூட்ட அணிகலன் இன்றியமையாது இருப்பதுபோல் ஒரு நூல் சிறப்புடையதாயினும் அதற்கோர் அணிந்துரை இன்றியமையாததாம்!

---

1. டாக்டர் உ.வே. சாமிநாதையர், புகையிலை விடுதூது பதிப்பு, பக். 3

மாடக்குச் சித்திரமும் மாநகர்க்குக் கோபுரமும்
ஆடமைத்தோள் நல்லார்க் கணியும்போல் – நாடிமுன்
ஐதுரையா நின்ற அணிந்துரையை எந்நூற்கும்
பெய்துரையா வைத்தார் பெரிது.[1]

முகவுரைகள் குறித்துப் பிற நாட்டறிஞர்களும் இவற்றையொத்த கருத்துகளையே கூறியிருக்கக் காண்கிறோம்.

"முகவுரைகள் முன்வாயில்களைவிட முக்கியத்துவம் வாய்ந்தவை. அவை நூலின் நோக்கத்தைத் திறந்து காட்டும் சாவிகளாயும், ஆசிரியரின் இலக்கியப் பயணத்தைக் காட்டும் அருங்கருவிகளாயும் அமைந்துள்ளன.[2]

அணிந்துரை என்பது நூலின் நுழைவாயில் என்பதால் அஃது அந்நூலைப் படிப்போரை நூலினுள் நுழையத் தன் கவர்ச்சியால் ஈர்க்கக்கூடியதாய் இருக்கவேண்டும். காண்பதற்கினிய தோரணவாயில் உள்மாளிகையின் நேர்த்தியினை உணர்த்தி நிற்கும்.[3]

ஒரு நாடகத்தின் விறுவிறுப்பூட்டக்கூடிய தொடக்கம் போலவும், ஓர் இசைக்கூத்திற்கு வாய்த்த நேர்த்தியான இசைக்கருவிகள் போலவும் படிப்பவரை மனமகிழச் செய்வதற்கு சிறந்த அணிந்துரை இன்றியமையாத ஒன்றாம்.[4]

இத்தாலியர்கள் முன்னுரையை நூலின் தாளிதக்கூட்டு என வழங்குகிறார்கள்; பக்குவமாய்த் தாளிக்கப்பட்டால் அது படிப்பவர்க்குப் பெரும் பசியை உருவாக்கி, நூல் முழுவதையும் விழுங்கச் செய்துவிடும்.[5]

அணிந்துரைபற்றிய இக்கருத்துகள், என் அணிந்துரைகளின் தன்மையை எண்ணிப் பார்க்கப் படிப்போர்க்குத்

---

1. நன்னூல், 55

2. George Arthur Buttrick (Editor),. Interpreters' Bible, P. XVII

3. A Preface being the entrance of a book should invite by its beauty. An elegant porch announces the splendour of the interior - Disraeli.

4. A good preface is an essential to the reader into good humour, as a good proloque is to a play; or a fine sympony to an opera. - Disraeli.

5. The Itallians call the preface 'the sauce of the book' and if well seasoned, it creates an appetite to the reader to devour the book itself. - Disraeli

துணைசெய்யும் என்று நம்புகிறேன். பண்டைய இலக்கண நூலார் கூறியுள்ள அணிந்துரை இலக்கணங்களை முற்றிலும் பின்பற்றி அணிந்துரைகளை நான் எழுதியுள்ளேன் எனச் சொல்லுதற்கியலாது; ஆயினும், அணிந்துரையைப் படிப்போர்க்கு அந்நூலை முற்றாய்ப் படிக்க வேண்டும் எனும் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் அதை எழுதியிருப்பதாகவே கருதுகிறேன்.

தமிழ்த்தாய்க்கு அணி சேர்க்கும் நன்னோக்கில் நூல்கள் எழுதும் அன்பர் பலர் தம் படைப்புகட்கு 'அணிந்துரை' அளிக்குமாறு எனக்கு அன்புக் கட்டளையிட்டனர். அதனையேற்று நூற்றுக்கணக்கானவர்களின் நூல்களுக்கு அணிந்துரை எழுதும் நல்வாய்ப்பு எனக்குக் கிட்டியது.

"நான்கு பக்கங்கள் மட்டுமே அணிந்துரைக்கு ஒதுக்கியுள்ளோம்; அதற்குள் அடங்குமாறு எழுதித் தரவேண்டும்" என்று கூறியவரும் உண்டு; "எவ்வளவு விரிவாய் வேண்டுமானாலும் எழுதுங்கள்" என்று கூறியவர்களும் உண்டு. ஆதலின், என் அணிந்துரைகள் 4 பக்கங்களிலிருந்து 40 பக்கங்கள் வரையினவாய் அமைந்திருக்கக் காணலாம். நான் எழுதித் தந்ததை முழுமையாய்ச் சேர்க்க முடியாமல் சிலர் அளவைக் குறைத்து, சில பகுதிகளை நீக்கி அச்சிட்டதும் உண்டு. அவ்வாறு விடுபட்டவை இந்நூலில் சேர்க்கப்பட்டுள்ளன. எந்த அளவினதாய் இருந்தாலும் அணிந்துரையை அந்நூலுக்கு ஓர் அணியாய் இருக்கும் முறையிலேயே எழுதியுள்ளேன் என நம்புகின்றேன்.

நான் எழுதிய அணிந்துரைகளைத் தொகுத்து நூலாக்க வேண்டுமென என் மகள் திருமதி மணிமேகலை கூறியபோது, அணிந்துரை நூலாக வேண்டுமா எனச் சற்றுத் தயங்கினேனாயினும், பேராசிரியப் பெருமக்கள் பலர், 'உங்கள் அணிந்துரையைப் படித்தால் நூலை முழுமையாய்ப் படித்ததுபோன்ற நிறைவைத் தருகிறது; ஆதலின், அவற்றைத் தொகுத்து வெளியிடுவது பயனுடையதாகவே இருக்கும்' என்றனர்; ஆதலின், இந்நூல் வெளிவருகிறது.

நான் எழுதித்தந்த அணிந்துரைகளின் படிகளை வைத்துக்கொள்ளும் பழக்கம் எனக்கில்லாது போயிற்று. இஃது ஒரு பெருங்குறையே! என் மகளும், மருமகன் திரு. புஷ்பராஜ் அவர்களும் நூலகங்கட்குச் சென்று, நூல்களைத்

தேடியெடுத்து, ஐந்நூறுக்கு மேற்பட்ட அணிந்துரைகளைப் படியெடுத்துச் சேர்த்தனர். இன்னும் தேடுதல் பணி நடந்து கொண்டுள்ளது. கிடைத்தவற்றை முதலில் அச்சிட்டு நூலாக்க முனைந்துள்ளனர்.

அணிந்துரை எழுதுதற்கென நான் ஒரு தனித்த முறையை மேற்கொண்டுள்ளேன். கொடுக்கப்பட்ட நூலை முழுமையாய்ப் படித்து, முதலில் அதன் உட்பொருளை மனத்தில் உள்வாங்கிக்கொள்வேன். இரண்டாம் முறை படித்து, அணிந்துரைக்குத் தேவைப்படும் முக்கியப் பகுதிகளைக் குறித்துக்கொள்வேன். பின்னர், அக்குறிப்பு களை நோக்கி, அவற்றை விரிக்கவோ சுருக்கவோ இடமுண்டா என ஆய்வேன். அடுத்து, எம்முறையில் எழுதுவது எனச் சிந்திப்பேன்; பிற இலக்கியங்களுடன் ஒத்திட்டுப் பார்க்க இடமுளதா என்பதையும் அறிவேன். அதன் பின்னரே எழுதத் தொடங்குவேன்.

ஆசிரியர் கருத்துகள், அவர் படைப்புகளில் வெளிப்படுவது தவிர்க்க இயலாததாகும். படிப்போர் அவற்றோடு உடன்படலாம் அல்லது முரண்படலாம். நான் வழங்கும் அணிந்துரைகளில், நூலில் உள்ள கருத்து முரண்பாடுகளையோ கொள்கை வேறுபாடுகளையோ சுட்டிக்காட்டி முன்நிறுத்துவதில்லை. அவற்றை எண்ணிப் பார்க்கும் பொறுப்பைப் படிப்போர்க்கு விட்டு, நூலின்கண் காணும் சிறப்புக்கூறுகளை மட்டும் சுட்டிச் செல்வேன். என் அணிந்துரைகள் பெரும்பாலும் பாராட்டுரைகளாகவே இருக்கும். 'அணிந்துரை திறனாய்வுரையினின்றும் வேறுபட்டது. திறனாய்வுரை குறைநிறைகளைச் சுட்டிக் காட்டுவது. அணிந்துரை நூற்பொருளின் அழகைக் கூறுவது' என்னும் கருத்துடையேன் நான். இப்பாராட்டு முறையால் ஏற்படும் பெரும் நன்மை ஒன்றுண்டு. படிப்போர், நூலுள் ஆர்வத்துடன் நுழைவதற்கு விருப்பமூட்டும் தூண்டு கோலாய் இஃது அமைவதே அந்நன்மையாம்.

"கன்னல் பொருள்தரும் தமிழே, நீ ஓர் பூக்காடு; நான் அங்கோர் தும்பி" என்பார், பாவேந்தர் பாரதிதாசன். பூக்காட்டில் உள்ள பிறவற்றைப் பொருட்படுத்தாமல், பூக்களில் உள்ள தேன்துளிகளை மட்டுமே வண்டு சுவைத்துண்ணுகிறது; தான் சுவைத்துண்டதோடு மட்டும் அமையாமல் தேனடையாய்ச் சேர்த்தும் வைக்கிறது.

அதுபோன்றே நானும் அன்பர்களின் நூல்கள் என்னும் பூக்காட்டில் நுழைந்து, சிறப்புக் கூறுகளாகிய தேன் துளிகளைச் சுவைத்துண்டு மகிழ்கிறேன்; அவற்றைத் தொகுத்து அணிந்துரை எனும் தேனடையாயும் தருகிறேன். தேனடையின் தேனுண்டு மகிழ்வோர், அத்தேன் எடுக்கப்பட்ட பூக்காடுகளுக்குள் நுழைந்து நிறையவே தேனுண்ண வேண்டும் என்பது என் அவா!

அணிந்துரைகளை எழுதச் சொல்வதன் வாயிலாய், நான் ஏராளமான நூல்களைப் படிப்பதற்கும் இன்பம் துய்ப்பதற்கும் வழியேற்படுத்தித் தருகின்ற நூலாசிரியர்கட்கு என் உளமார்ந்த நன்றி.

அணிந்துரைகளை முயன்று தேடித் தொகுத்துள்ள என் அருமை மகள் மணிமேகலைக்கும், மருகர் புஷ்பராஜுக்கும், இவர்களை இப்பணியில் ஈடுபடத் தூண்டுகோலாயிருந்த இவர்கள் மகனும் என் பெயரனுமாகிய செல்வன் கிருபாவுக்கும் நான் பெரிதும் கடப்பாடுடையேன்.

அணிந்துரை நூற்றொகுதியை வெளியிடத் தமிழகத்தின் புகழ்மிக்க பதிப்பகமாகிய பழனியப்பா பிரதர்ஸ் ஏற்றுக்கொண்டதை நான் எனக்குக் கிடைத்த பெருமையாகவே கருதுகிறேன். இதற்கு ஒரு காரணம் உண்டு. எனக்குச் 'சிலம்பொலி' எனும் பட்டத்தைத் தந்தவர் சொல்லின் செல்வர் இரா. பி. சேதுப்பிள்ளை ஆவார். அவர் எழுதிய அனைத்து நூல்களையும் வெளியிட்டுப் பெருமை சேர்த்துள்ளவர்கள், பழனியப்பா பிரதர்ஸார் ஆவர். என்னைப் பாராட்டிய சொல்லின் செல்வரால் பாராட்டப் பெற்றுள்ள பழனியப்பா பிரதர்ஸ் என் எழுத்துகளை நூலாக்கி வெளியிடுகிறது என்பதைவிடப் பெரிய மகிழ்ச்சி எனக்கு வேறு என்ன இருக்கமுடியும்? இந்நிறுவனத்தைச் சார்ந்த அனைவர்க்கும் என் நெஞ்சுநிறை நன்றி.

இந்நூலைப் படிப்பதன் வாயிலாய் இத்தொகுதியில் இடம்பெற்றுள்ள அனைத்து நூல்களையும் படித்த நிறைவு, படிப்போர்க்கு ஏற்படும் என்று நம்புகிறேன்.

பதிப்புரை

கொங்குதமிழ் நாட்டினிலே
தோன்றியநல் தமிழாறு!
இசையோடு பாய்ந்தோடும்
இன்னிசைத் தேனருவி!
வைகைநதித் தமிழ்ச்சேயை
வளர்க்கின்ற தாய்ச்செவிலி!
மேடை தொறும் நற்றமிழின்
புகழ்பாடும் பூங்காற்று!
சங்கமெனும் கடல்கடைந்து
தமிழமுதம் தரும்நெடியோன்!
புலமையெனும் பூந்தடத்தில்
பூத்தசெந் தாமரை!
பாத்தோறும் தேனெடுத்துக்
கூடுகட்டும் கோத்தும்பி!
தமிழோடு தனைக்கரைத்த
செம்புலப் பெயல்நீரான்!
இத்தகைய
சிறப்புகள் அத்தனையும்
சேர்ந்தொன்றாய் உருவானான்
சிலம்பொலியாம் செல்லப்பன்
எனுந்திருப் பெயர்கொண்டான்!

கவிதையொடு கட்டுரைகள்
காப்பியம்நல் திரைஇசையும்
தகவுடைய சிறுகதைகள்
தன்வரலா றாய்வுநூல்
என்றுபல துறைநூல்கள்
இவன்தோய்ந்தே ஆராய்ந்து
சொல்லழகும் பொருளழகும்
துள்ளிவரும் கருத்தழகும்
பல்சுவையும் நடமிடவே
அணிந்துரைகள் வனைந்துள்ளான்!
பரந்துள்ள கடல்நீரைப்
பருகிட்ட குறுமுனிபோல்
விரிந்துள்ள நூற்சிறப்பை
வித்தகமாய்த் தான்தொகுத்துச்
சிறுதுளியாம் பனித்துளியில்
பெரும்பனையும் தோன்றுதல்போல்

அணிந்துரையில் முழுநூலை
அடக்கிஇவன் காட்டிவிட்டான்!

இந்நூல்
கல்லூரி மாணவர்க்குக்
கரைகாட்டும் ஒளிவிளக்கு!
கற்பிக்கும் ஆசானுக்(கு)
உற்றதொரு ஊன்றுகோல்!
ஆய்வுநூல் மாணவர்க்கு
அரியதொரு புதையலாகும்!
கல்லாரைக் கற்றாராய்க்
கரைசேர்க்கும் பெருந்தோணி!
கருத்துபல கசிந்தூறும்
கன்மலையின் சுனையாகும்!
அணிந்துரைகள் அணிவகுக்க
அழகியதோர் நூலாக
எம்மொழியாம் தமிழ்மொழியில்
இதுபோல வந்ததில்லை!

எனவே இவன்
தன்திறத்தால் தமிழ்மொழியைத்
தானுயர்த்தி வைத்தானா?
தானுரைத்த தமிழாலே
தானுயர்ந்து நின்றானா?
எம்மாலே பதிலுரைக்க
இயலாது பெரியோரே!
உம்மாலே விடைகூற
ஒல்லுமோ இயம்பிடுக!

நன்னூல்கள் தருவதுவே
நமதுகடன் என்றிருக்கும்
பன்னூலின் தாயகமாம்
பழனியப்பா பிரதர்ஸார்
இந்நூலைத் தமிழன்னைக்(கு)
ஏற்புடைய ஆரமெனச்
சூட்டுதற்கு முன்வந்தோம்
தொடர்ந்தெம்மை ஆதரிப்பீர்!
பாத்திரத்தை எடுத்துவைத்துப்
பருகிடவே முன்வைத்தோம்!
பாத்திறமும் பல்திறமும்
பயன்துய்த்து மகிழ்ந்திடுக!

— பதிப்பகத்தார்

அணிந்துரை அடங்கல்

வ.எண்	நூற்பெயர்	பக்கம்
	சிறப்புரை	III
	தொகுப்பாளரின் உரை	XXI
	அணிந்துரையாளரின் முன்னுரை	XXV
	பதிப்புரை	...XXXVII
1.	காதல் பாடல்கள் *பாரதிதாசன்*	1
2.	சித்திரச் சிலம்பு *பொன். சௌரிராஜன்*	15
3.	இலக்கியத் தலைவர் கலைஞர் - *ந. சஞ்சீவி*	27
4.	அருந்தமிழ் வளர்த்த ஆன்றோர் *மு. வலவன் (தொகுப்பு)*	33
5.	கேட்டதும் கிடைத்ததும் *இரா. கனகசுப்புரத்தினம்*	45
6.	திருக்குறளில் மருத்துவம் *தே.ப. சின்னசாமி*	55
7.	வண்ணப் பறவைகள் *அன்பரசன் (தொகுப்பு)*	58
8.	கலைக்கூத்தன் கவிதைகள் *கலைக்கூத்தன்*	68
9.	கலைஞர் ஐம்பது *இ. தேவநேயச் சித்திரன்*	78
10.	நெருப்புப் பூக்கள் *செவ்வியன்*	81
11.	வண்ணை வளவன் கவிதைகள் *வண்ணை வளவன்*	83
12.	கவிதை மேகங்கள் *மு.பி. பாலசுப்பிரமணியன்*	88
13.	மஸ்தான் சாகிபு பாடல்கள் *என். ஏ. ரஷீத் (பதிப்பு)*	92
14.	ஒரு மழலையின் தொடக்கம் - *ப. முத்துசாமி*	112

வ.எண்	நூற்பெயர்	பக்கம்
15.	நான் ஒரு கவிதைத் தொழிலாளி *கபிலவாணன்*	129
16.	மனத்தூறல் *ம. ஏ. கணேசன்*	141
17.	மறுமலர்ச்சிக் கவிதைகள் *ப. கணேசன்*	151
18.	ஏக்கங்களின் தாக்கங்கள் *கா. வேழவேந்தன்*	157
19.	தமிழ்ப்பாவை *சங்கரலிங்கம்*	168
20.	நேதாஜி காவியம் *வாய்மைநாதன்*	179
21.	நாலும் பொருளும் *இறையரசன்*	190
22.	தமிழ் நாடக வரலாறு *கு.சா. கிருஷ்ணமூர்த்தி*	207
23.	தமிழ்க்கவிதை நாடகங்களில் பாத்திரப் படைப்பு *சேமுமு. முஹம்மதலி*	215
24.	சோழமண்டல நாட்டுப்புறப் பாடல்கள் *வேணுகோபாலன்*	224
25.	வடார்க்காடு நாட்டுப்புறப் பாடல்கள் *மா. கோதண்டராமன்*	236
26.	பாலைமலைப் பாடல்கள் *கோ.பெ. நாராயணசாமி*	244
27.	அறிவியல் பாட்டு *ஒற்றியூர் உத்தமன்*	254
28.	ஊமை ராகங்கள் *பெரு. மதியழகன்*	257
29.	ஓர் அழகின் வெளிச்சம் *பா. உதயகுமார்*	264
30.	வெளிச்சம் வருகிறது *ஜெயமாலிகா கண்ணன்*	268
31.	இன்னொரு விடுதலை *எழிலரசு*	274

ஆயிரம் முகத்தான் அகன்றது ஆயினும்
பாயிரம் இல்லது பனுவல் அன்றே!"

- நன்னூல்

1

காதல் பாடல்கள்

பாவேந்தர்

இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற பாவேந்தராய் விளங்குபவர், பாரதிதாசனார்; புரட்சிக்கவிஞர், புத்துலகச் சிற்பி, சீர்திருத்தக் கவிஞர், சிந்தனைச் செம்மல் எனப் பல்லோராலும் பாராட்டப்படுபவர். இவர் தமிழ்க்கவிதை வானில் இரு சுடராகவும் ஒளி வீசியவர். சமுதாயத்தில் மண்டிக்கிடந்த சாதி சமயக் கொடுமைகள், உயர்ந்தோர் தாழ்ந்தோர், ஆண்டான் அடிமை என்ற ஏற்றத் தாழ்வுகள் ஆகிய தீமைகளைச் சுட்டெரிப்பதில் பகலவனாயும்; இயற்கை, அழகு, காதல் நெஞ்சம் போன்ற இனியனவற்றைப் பாடுவதில் குளிர் நிலவாயும் திகழ்ந்தவர். வெண்மதியின் தண்ணொளிக் கதிர்களை ஒருங்கு தொகுத்தது போலப் பாவேந்தருடைய காதற்பாடல்கள் இங்கே தொகுக்கப் பட்டுள்ளன. சில பாடல்களைத் தவிர, பெரும்பான்மையானவை இதுவரை வெளிவந்துள்ள அவருடைய நூல்களில் இடம் பெறாதவை.

மாறாக் காதல்

ஒரு காலத்திய அரசியல், பொருளாதாரக் கொள்கைகள் மற்றொரு காலத்தில் மாறக்கூடும், மறக்கப்படக்கூடும். ஆனால், உற்ற பருவமடைந்ததும் உயிரினத்தே தோன்றும் காதலுறவோ, உலகு தோன்றியக்கால்தொட்டு - அன்றும் இன்றும், இனி என்றும் - மாறாதது, மறையாதது. "காதலடைதல் உயிரியற்கை." ஆகவேதான், பாடத் தொடங்கிய கவிஞர் எவரேயாயினும் காதலுறவுபற்றிப் பாடாதார் இலர். பாவேந்தர் எழுதிய காதற்பாடல்கள் என்றும் நின்று நிலைக்கும் தன்மையவை.

காதற்பாடல்கள்

சங்க காலப் பாக்கள் பொதுவாய்த் தலைவன் - தலைவியரைக்கொண்டு காதல் உணர்ச்சிகளைப் படம் பிடித்துக் காட்டும் தனிப்பாக்களாய் உள்ளன. இடைக்காலத்திய சிற்றிலக்கியங்களில் சுவைமிக்க காதற்பாக்கள் இடம் பெற்றுள்ளனவாயினும், அவை கதையிடையே அல்லது நிகழ்ச்சிக்கோவையிடையே அமைந்துள்ளனவேயன்றித் தனிப் பாக்களாய் இல்லை. இலக்கிய வரலாற்றில் காதற்பாடல்களைத் தனிப்பாடல்களாய்ப் பெருமளவில் அமுதூறப் பாடியுள்ளவர் பாரதிதாசனாரே ஆவார். நூல்களில் பெருந்தலைப்புகள் பிரிக்கப்படும்பொழுது காதலை ஒரு தலைப்பாக்கி, அதன்கீழ்க் கவிதைகள் இடம் பெறத் தொடங்கியது, முதன் முதலில் பாரதிதாசனாரின் நூல்களில்தாம் என்று கூறலாம். அவருக்குப் பின்வந்தோர் அவரைத் தொடர்ந்து அதே போக்கில் கவிதைகளை யாத்தமையால் 'பாரதிதாசன் பரம்பரை' உருவான செய்தியைத் தமிழகம் அறியும்.

> என்நடை தம்நடை; என்யாப்பு தம்யாப்பென்று
> இந்நாள் எழுந்துள பாவலர் தம்மை
> எண்ணினால் இருப்பவர் தம்மில், நூற்றுக்குத்
> தொண்ணூற் றொன்பது பேர்எனச் சொல்லுவர்[1]

எனப் பாரதிதாசனார் அவர்களே இதைக் குறிப்பிடக் காண்கிறோம்.

நுணுக்கமறிந்து, சுவை கெடாது காதற்கவிதைகளைப் பாடுவதில் பாரதிதாசனார்க்கு ஒப்பு அவரே. வெளிப்படக் கூறவியலாத அகத்துறை நிகழ்ச்சிகளைக்கூடத் தம் புலமைத் திறத்தால், அழகிய சொற்களால், பண்புக்கேடின்றி அவரால் பகர்ந்திட முடிகிறது.

பாரதிதாசனார் பாடலில், குறிப்பிட்ட நிலையில் உள்ளவர்தாம் காதல் தலைவர், தலைவியர் என்ற நிலை இல்லை. ஆலைத் தொழிலாளி, மாடு மேய்ப்பவன், வண்டியோட்டி, சுண்ணம் இடிப்பவள், களத்துமேட்டில் நெல்லரி எடுத்துத் தருபவள், பூக்காரி எனச் சமூகத்தின் எல்லாத் தளத்திலுள்ள எல்லோர் காதலையும் அவர்களுக்குரிய களத்தோடு படம்பிடித்துக் காட்டியுள்ளார்.

---

1. திரு. ந. இராமநாதன் அவர்கள் எழுதிய, 'காதலும் கவிஞரும்' என்னும் நூலுக்குப் பாவேந்தர் எழுதியுள்ள முன்னுரையில் உள்ளது.

அவளும் அவனும்

அவன்-அவள் இணைப்பே காதல் அடிப்படை. இந்த இணைப்பின் வலிமையை, தன்மையைப் பாரதிதாசனார் அழகாக எடுத்துக் கூறுவார். அவன் பாடுகிறான்

> பாடல் அவள்; நான் நல்உரை[1]
>
> வளவயல் நான்; அவள் சம்பா நடவு[2]

அவள் பாடுகிறாள்

> மழையும் பயிரும் அவனும் நானும்[3]

இருவருக்கும் பொது

> நானுனக்கும் நீஎனக்கும்
> நாமளித்த அன்பளிப்பு[4]

ஆணும் பெண்ணும் ஒருவர் மற்றொருவர்க்குத் தந்த அன்பளிப்பு.

காட்சி

காதலுக்கு அடிப்படை காட்சி இன்பம்; ஒருவரை ஒருவர் காணும்போது காதலர் கவரப்படுகின்றனர். காதல் கொண்டோர் கண்கள், "ஒன்றையொன்று கவ்வி உண்பன." காதலர் ஒருவரையொருவர் காணுகின்ற காட்சி, அவர்கள் உள்ளத்தே இன்ப ஊற்றைப் பெருக்கெடுக்கச் செய்கிறது. காதலனுக்குக் காதலி, கண்டதும் தேனாய் இனிக்கிறாள். மலரில் உள்ள தேன், உண்டால்தான் இனிக்கும்; ஆனால், காதலி என்னும் தேனோ பார்க்கும்போதே இனிக்கின்றதாம்;

> உண்டாலே தேன்மலரின் தேன் – இவள்
> கண்டாலே தித்திக்கும் தேன்![5]

திருக்குறள் இதனை,

> உண்டார்கண் அல்லது அடுநறாக் காமம்போல்
> கண்டார் மகிழ்செய்தல் இன்று[6]

என்று குறிப்பிடும். மணிமேகலை வெண்பாவில் மணிமேகலையின் அழகைக் கூறுமிடத்தில் பாரதிதாசனார் இதே கருத்தை,

---

1. பாரதிதாசன், காதல் பாடல்கள், பக். 29
2. மேலது, பக். 34
3. மேலது, பக். 51
4. மேலது, பக். 53
5. மேலது, பக். 69
6. திருக்குறள், 411

குன்றத்துக் கொம்புத்தேன், முல்லைவா ழைப்பழத்தேன்,
மன்றத்து மாப்புலவர் செந்தமிழ்த்தேன் – என்றமுத்தேன்,
உண்டாலே தேன்;இம் மணிமேக லைஒருத்தி
கண்டாலே தித்திக்கும் தேன் [1]

எனக் குறிப்பிடுவார்.

கண்டாலே தித்திக்கும் தேன் என்று பெண்ணைக் கூறுவதற்குக் காரணம் இருக்கிறது. தேனை உண்டால் அதன் சுவை சிறிது நேரம் மட்டுமே நீடிக்கும். ஆனால், காதலியை நினைத்தாலோ எப்போதும் இனிக்கும்.

செந்தேன் உண்டநினைவு சிறிதுநேரம் இருக்கும்;
சேயிழை இன்பநினைவு எப்போதும் இருக்கும்.[2]

அவன் பார்த்தான். அவளும் பார்த்தாள். முல்லைப் பற்கள் வெளிப்படப் புன்முறுவல் பூத்தாள். அவன் காதலை அவள் ஏற்றுக் கொண்டதற்கு அஃது அடையாளம்!

விழியினால் எழுதினாள் ஒப்பந்தம்;
வெண்ணகையால் இட்டாள் கையெழுத்து.[3]

காதலர் ஒருவரை ஒருவர் பார்ப்பது எழுதப்பட்ட ஓர் ஒப்பந்தப் பத்திரம். கையெழுத்திடப்படாத பத்திரத்திற்கு மதிப்பில்லை. பத்திரம் எழுதப்பட்டால் மட்டும் போதாது; கையெழுத்திடப் பட்டுப் பதிவு செய்யப்பட வேண்டும். புன்சிரிப்பாகிய கையெழுத் திடப்பட்டதும் காதல் ஒப்பந்தம் நிறைவேறுகிறது!

காதல் அறிவித்தல்

அவள், அவன்மேல் ஆசை கொண்டிருப்பதை அவன் உணரவேண்டும். குறிப்பால் தன் காதலைப் புலப்படுத்துகிறாள். அவன் பார்த்திருக்கத் தன் உடையைத் திருத்துகிறாள். அப்படி இப்படி போகும்போது, தோளால் அவனை இடித்துச் செல்கிறாள்; கொல்லைக்கு அவன் போகும்போது அவள் மெல்ல மெல்லப் பாடுகிறாள்; இவை மட்டுமா? அவனுடைய நாய்க் குட்டிக்கு அவன் எதிரில் முத்தமும் தருகிறாள். 'என்மேல் ஆசை இல்லாவிட்டால் என்னைக் கண்டு சிரிப்பாளா, மேலும் இவற்றைச் செய்வாளா?' என்றெண்ணி அவன், அவள் கொண்டுள்ள காதலை உறுதிப்படுத்திக்கொள்கிறான்.[4]

---

1. பாரதிதாசன், மணிமேகலை வெண்பா, 41
2. பாரதிதாசன், காதல் பாடல்கள், பக். 133
3. மேலது, பக். 34
4. மேலது, பக். 41 & 42

காதல் ஏக்கம்

ஆசையிருப்பதைக் குறிப்பால் அறிவித்ததும் அவன் அவளின் ஒவ்வொரு செயலையும் நோக்குகிறான். அவள், இடுப்பில் குடத்தை அணைத்து நீர் எடுத்துவரச் செல்வதையும், அவள் புறப்படும்போது அவள் வளர்க்கும் மான்குட்டி எதிரே வர அதற்கொரு முத்தம் கொடுப்பதையும், நீர் எடுக்கச் சென்றவள் மணிக்குளத்தில் தன் மலர்மேனி மூழ்கும்படி நீந்தி விளையாடுவதையும் காண்கின்றான்.

நானேஅப் பொற்குடமாய்
நாட்டில் பிறந்தேனா? [1]

அந்த மான் நானாய்
அமைந்தேனா? [2]

ஆழப் புனலும்நான்
ஆனேனா? [3]

என ஏங்குகின்றான். "குடமாய் இருந்திருந்தால் அவள் அணைப்புக் கிடைத்திருக்கும்; மானாய் இருந்திருந்தால் மணிமுத்தம் கிடைத்திருக்கும்; புனலாய் இருந்திருந்தால் அவள் பொன்மேனி படிந்திருக்கும். இவையாய் இல்லாமற்போனேனே! வாய்ப்பை இழந்தேனே!" - காதல் ஏக்கத்தின் அரிய வெளிப்பாடு இது.

இதேபோல் பெண் உள்ளத்தின் ஏக்கமும் தவிப்பும் காட்டப் படுகின்றன. ஆசை கொண்டவன் அவளைப் பார்க்காமலேயே சென்றுவிட்டான். 'என்னைப் பார்க்காமல் சென்றுவிட்டாரே; இதைவிட அவருக்கு அங்கே என்ன பெரிய வேலை?' என்று பொருமுகிறது அவளுள்ளம்!

பெரிய வேலை உள்ளவன் போலே
பெண்ணை வெறுத்தவன் போலே
அரும்பும் சிரிப்பை அடக்கிச் சென்றான்
அசையும் தேரைப் போலே – அவன்

திரும்பிப் பார்த்தால் என்ன?
விரும்பிப் பார்த்த என்னை அவன்
திரும்பிப் பார்த்தால் என்ன?[4]

காதற்பொருமலாய் வெளிப்படும் இவ்வினா நியாயமானதே!

---

1. பாரதிதாசன், காதல் பாடல்கள், பக். 45
2. மேலது, பக். 45
3. மேலது, பக். 46
4. மேலது, பக். 36

இற்செறிப்பு

மகளின் காதலை ஒருவாறு குறிப்பால் அறிந்த பெற்றோர் அவளை வீட்டினுள்ளேயே இருக்குமாறு கட்டுப்பாடு செய்துள்ளனர். காதலுக்குத் தடையாயிருக்கும் பெற்றோர்மீது அவளுக்கு வெறுப்பே தோன்றிவிடுகிறது.

நான்கு பக்கமும் வேடர் சுற்றிட
நடுவில் சிக்கிய மான்போல் – இங்கு
ஏன்பிறந்தேன் இவர்கள் வீட்டில்
கரையில் இட்டதோர் மீன்போல்![1]

காதல் கொண்ட மங்கைக்குக் காதலனே நீர்க்குளம்; வீடோ அவளைக் கரையிலிட்ட மீனாக்கிவிடுகிறது.

அலர் தூற்றல்

அவள் காதலை அறியும் ஊரார், அலர் கூறத் தொடங்குகின்றனர். ஒருவனுக்கும் ஒருத்திக்கும் இடையே கனவாய் மலர்ந்த காதலை அறிந்து ஊரார் ஒருவர்க்கொருவர் மறைவாய்ப் பேசிக்கொள்வது அலர் எனப்படும். இப்பழிச் சொல்லால் காதலை அழிக்க முடியாது; மாறாய் அது வளரவே செய்யும் என்பார், திருவள்ளுவர்.

ஊரவர் கௌவை எருவாக, அன்னைசொல்
நீராக, நீளும்இந் நோய்[2]

என்பது திருக்குறள். ஊரவர் சொல்லுகின்ற அலரே எருவாகவும், அதுகேட்டுத் தாய் வெகுண்டு சொல்லுகின்ற வெஞ்சொல்லே நீராகவும் கொண்டு காம நோயாகிய பயிர் வளர்கின்றது என்பது இதன் பொருள். பாரதிதாசனாரோ, காதலுக்கு எதிராக எழுப்பப் படும் அலர், அக்காதல் வளர்ச்சியால் அழிந்து போகுமே தவிர அதனால் காதலை அழிக்க முடியாது என்பதை,

மோதும் அலையில்
உப்பைக் கொட்டும்
மூடர்கள் ஏதும்
செய்யட்டும்[3]

---

1. பாரதிதாசன், காதல் பாடல்கள், பக். 56
2. திருக்குறள், 1147
3. பாரதிதாசன், காதல் பாடல்கள், பக். 60

எனப் பாடுகிறார். காதல், மோதுகின்ற அலை; அலர் அதிலே கொட்டப்படும் உப்பு; அலையால் உப்பு அழியுமே தவிர, உப்பால் அலையைத் தடுக்க முடியுமா?

பிரிவு

தலைவன் பிரிந்திருக்கும்போது தலைவிக்குத் தென்றலோ பாம்பின் சீற்றமாகப் படுகிறது; குயிலின் இனிய குரலோ பழிக்கும் குரலாய்க் கேட்கிறது; மாலையோ மற்றோர்க்கு மகிழ்வைத் தந்தாலும் அவளுக்குச் சுடுகாடாய்த் தோன்றுகிறது!

தேம்பி அழவைத்தான் மாலைச் சுடுகாட்டில்[1]

அந்தி அழகோ புந்தியை அள்ளுவது; ஆயினும், பிரிவுத்துயர் அவளை அதைச் சுடுகாடாய் எண்ண வைக்கிறது. தலைவியைப் பிரிந்த தலைவன் நிலையும் இதுவே! தலைவி தாய்வீடு சென்றிருக் கிறாள்; தனித்திருக்கும் தலைவனுக்கு வீடு சுடுகாடாய்த் தோன்றுகிறது.

தாய்வீடு போய்விட்டாய் – மானே
தனிவீ டேனைப்படுத் தும்பாடு காணாய்;
நாய்வீடு, நரிவீடு, நீஇலா வீடு;
நடுவீடு பிணம்எரிக்கும் சுடுகாடு[2]

என்று புலம்புகிறான்.

குடும்பப் பாங்கு

பெண்கள் பகட்டின்றி இருக்க வேண்டும்; உடல் மறைய உடை உடுத்த வேண்டும்; நாகரிகம் என்ற பெயரால் மெல்லிய ஆடைகளை உடுத்தி உறுப்புகளை வெளிப்படுத்துவது நகைப்புக் கிடமானது; உறுப்புத் தெரிய ஆடை அணிவது கற்பு நிலையிலிருந்து வழுவியது ஆகும் என்பன பாரதிதாசனாரின் கருத்துகளாய் உள்ளன.

மேனி யெல்லாம் வெளியில் தெரிய,
வெங்கா யத்தோல் சேலை கட்டி,
மான மெல்லாம் விற்பவளா பெண்டாட்டி?[3]

செப்புப்போல் உறுப்பு – வெளித்
தெரிவதே நகைப்பு[4]

---

1. பாரதிதாசன், காதல் பாடல்கள், பக். 83
2. மேலது, பக். 111
3. மேலது, பக். 87
4. மேலது, பக். 147

மார்பு தெரிய விடுதல் – தமிழ்
மாண்பினைக் கைவிடுதல்[1]

அமைவான உடுப்பு – நீ
அணிவதுதான் கற்பு[2]

மேலும், பெண்கள் காலையில் எழுதல், கணவனைக் கருத்துடன் பேணல், மாமன், மாமி மனங்கோணாது நடத்தல் முதலியவற்றில் தவறக்கூடாது என்ற கருத்துடையவராகவும் இருக்கிறார். நல்ல மனைவியாய் இருப்பவள்,

கீழ்க்கடல்மேல் கதிர்வருமுன் விழிமலர்ந்திடுவாள் எனைத்
(கணவனைத்)
தொழுதெழுந்திடுவாள்[3]

என்றும்,

கண்ணவள் மாமியார்க்கே; காப்பவள் மாமனார்க்கே;
உண்மையில் வாழ்க்கையிலே உயிரொப்பாள் கணவனுக்கே[4]

என்றும் அவர் குறிப்பிடக் காணலாம். இவற்றால், போலி நாகரிகத்திற்கு ஆட்படாது குடும்பப் பாங்குடன் நடப்பதே பெண்கட்குச் சிறப்பு என்பதை அவர் வலியுறுத்தக் காண்கிறோம்.

பெண்கள் முன்னேற்றம்

குடும்பப் பாங்காய் இருக்கவேண்டும் என்பது, பெண்கள் அடிமைகளாயிருக்க வேண்டும் என்பதாகாது. மணாளனைத் தேர்ந்தெடுப்பதிலும், மற்ற வாழ்க்கை நடப்புகளிலும் அவர்கள் உரிமை பெற்று விளங்க வேண்டும் என்பதை அவர் வலியுறுத்தத் தவறவில்லை. தன்னை மணக்க வருபவன் படித்தவனாய், இலக்கியம் அறிந்தவனாய் இருக்க வேண்டும் என்கிறாள், மங்கை ஒருத்தி; இல்லாவிட்டால் ஓடிப்போ என்கிறாள். பத்து இலக்கம் பணத்துக்குச் சொந்தக்காரன் என்றாலும் பாட்டறியாதானாயின் தன் வீட்டுப் படியேற வேண்டா என்கிறாள், பெண். அவன், 'திருவள்ளுவர் படித்தேன்' என்றதும், "அப்படியானால் வா; இன்பம் வழங்கிடு; நான் கொள்வேன்" என்று வரவேற்கிறாள்.[5]

---

1. பாரதிதாசன், காதல் பாடல்கள், பக். 147
2. மேலது, பக். 147
3. மேலது, பக். 102
4. மேலது, பக். 103
5. மேலது, பக். 72

படித்த ஆணைத்தான் மணம் முடித்துக்கொள்வேன் என்று உரிமைக் குரலெழுப்பும் பெண்ணை இங்குக் காண்கிறோம்.

பெண்கள் படிக்க வேண்டும்; முன்னேற்ற நோக்குடன் வாழ வேண்டும்; பழமைக் கருத்துகளை அகற்ற வேண்டும்; பகுத்தறிவுப் பாதையில் நடக்க வேண்டும் என்று கவிஞர் விரும்புகிறார். தமக்கை மகள் ஒருத்தியை மணக்க மாமன் மகன் மறுக்கிறான். அவள் காரணம் கேட்கிறாள். அப்போது அவன் கூறுகிறான் : 'நான் எழுதியிருந்தும் நீ பள்ளிக்குப் போகவில்லை. ஆதலின் நீ சிறு நெருஞ்சி; உருவ வணக்கம் உனக்கு இன்பம் தருகிறது; பிறகு வேறொருவனை ஏன் மணக்க வேண்டும்? பிடித்த அந்த உருவத்தையே மணந்துகொள்ளலாமே! மக்களுள் ஏற்றத் தாழ்வில்லை என்ற கருத்துடையவன் நான்; நீயோ பார்ப்பனரைச் சாமி என்றழைக்கிறாய்; அதனால் உன் குடியையும் நாணமுற வைத்தாய். பெரியாரின் நெறியைப் பேணாதவளாய் இருக்கிறாய்! இவ்வாறிருக்க நான் உன்னை எப்படி மணக்க முடியும்?" என வினவுகிறான்.[1]

மணமகன் தேர்வு

பாவைப் பாட்டில் மங்கையர், இறைவனை நோக்கி, "யாம் நின் அன்பர் தோளே சேர வேண்டும்" என்று வேண்டுவர். ஆனால், பாரதிதாசனார் காட்டும் மங்கையோ தொழிலாளியின் தோளைச் சேர வேண்டுமெனத் துடிக்கிறாள்.

> தொழிலாளியின் தோள்களைத்தான் அணைப்பேன் – அவன்
> தொடத்தொடத் தான்இன்பம் திளைப்பேன்[2]

என்பது அவள் கூற்று. "தொழிலாளி, மக்கட்கு உழைப்பவன். ஆதலின், அவனுக்குத் துணையாய் இருப்பதிலே பெருமை அடைகிறேன்" என அவனை மணப்பதற்குக் காரணமும் கூறுகிறாள்.

> நீங்கா உழைப்பால்
> நீளுல குயர்த்த
> ஓங்கும் தொழிலைப் புரியும் தோழன்[3]

உறவை விரும்புகிறது நங்கையுள்ளம்!

---

1. பாரதிதாசன், காதல் பாடல்கள், பக். 119
2. மேலது, பக். 101
3. மேலது, பக். 104

பரத்தமை

மறுமணம் வேண்டும் என்பது கவிஞர் கொள்கை. ஆயினும், ஒருவன் ஒருத்தியோடு வாழும்போது வேறொருத்தியிடம் கருத்துக் கொள்ளலாகாது என்பதை அவர் வலியுறுத்துகிறார். பரத்தமை வேறு, மறுமணம் வேறு. மறுமணத்தை ஆதரிக்கும் கவிஞர் பரத்தமையை எதிர்த்திடக் காண்கிறோம்.

ஒருத்தியை மணந்தபின்பு – வேறு
ஒருத்தி யிடத்திலா அன்பு? – இது
பொருத்தமா அறத்தின் முன்பு?[1]

என்னுடம்பில் நான்பாதி; மனைவி பாதி;
என்றுசொல்லும் ஆடவர்கள் மறுவி நாடி,
தன்மையிலாக் கோவலன்க ளாகின்றார், என்ன நீதி[2]

என்று கவிஞர் கேட்கின்றார்.

பலதார மணம்

பரத்தை வீடு செல்பவன் புகழ் இழப்பான் என்றும் அவர் சுட்டிக் காட்டுகிறார். பரத்தை வீடு சென்ற கணவனை அவன் மனைவி,

பொன்னாய் இருந்தவன் பித்தளையாய் அங்கே
போனால் போகட்டுமே[3]

என்கிறாள். தன்னை விட்டு அவன் பரத்தை வீட்டுக்குச் செல்வது, புறா தன் கூட்டைவிட்டு ஆந்தைக் கூட்டிற்குச் சென்று அடைவதற்கு ஒப்பாகும் என்றும் குறிப்பிடுகின்றாள்!

மனைவியிருக்க வேறொருத்தியை மணப்பதைக் கவிஞர் கண்டிக்கிறார். பலதார மணத்தடைச் சட்டத்தைக் கொண்டுவந்த அரசைப் பாராட்டுகிறார்.

அறுபதி னாயிரம் பெண்டாட்டி – மாரை,
அடைந்தானாம் முன்னொரு காமாட்டி; – பெண்கள்
குறைபாடெல்லாம் இன்றுதீரச் சட்டந் தீட்டிக்
கொடுத்த அரசுதன்னைக் கும்பிட்டேன் பாராட்டி[4]

என்பது அரசுக்குக் கவிஞர் தரும் பாராட்டு!

---

1. பாரதிதாசன், காதல் பாடல்கள், பக். 123
2. மேலது, பக். 161
3. மேலது, பக். 113
4. மேலது, பக். 121

காதலும் தமிழும்

காதலுக்குக் கண்ணில்லை என்பர். சாதி, உயர்வு தாழ்வு போன்ற வேறுபாடுகளைக் காதல் பார்ப்பதில்லை என்பது அதன் பொருள். பாரதிதாசனாரின் காதலும் சாதி, சமூக வேறுபாடு ஆகியவற்றைப் பார்ப்பதில்லை. ஆனால், தமிழை நோக்கும்போது, அவர் காதற்பார்வை குருடாவதில்லை. சாதியை, மற்ற வேறுபாடுகளைக் காதலுக்காக இழக்கத் தயாராய் இருக்கும் அவர், காதலுக்காகத் தமிழை இழக்கத் தயாராயில்லை. காதலில் சாதி கூடாது; கலப்பு மணம் வேண்டும் என்பது அவர் கொள்கை.

> வந்தவன் ஆண்சாதி என்றால் – அவனை
> மணந்தவள் பெண்சாதி தானே? [1]

அதற்குமேல் வேறு சாதி ஏது என்பது அவர் வினா. தமிழையும் காதலையும் ஒன்றுசேர்த்துப் பார்க்கும்போது காதலுக்காகத் தமிழைத் துறக்கக்கூடாது என்கிறார். தன்மீது ஆசை கொண்டாலும் தமிழறியா ஒருத்தியைத் தமிழ் அறிந்தவன் மணக்கக்கூடாது என்று தடை விதிக்கிறார்.

> உன்மேல்,நான் ஆசைவைக்க வில்லை; – நீதான்
> உண்மையிலே தமிழ்மகள் இல்லை; – ஆதலால்
> என்மீதில் ஆசைவைக் காதே [2]

என்கிறான், தமிழ் மகன். காதலில் சாதிகள் அழிந்திட வேண்டும்; ஆனால், தமிழ் வீழ்ந்திடக் கூடாது.

> மாதொருத்தி வேண்டும் எனக்கும்; – தமிழ்
> மகளா யிருந்தால்தான் இனிக்கும் [3]

என்பது தமிழ் மகனின் சூளுரையாக வேண்டும். தமிழ் மகனின் காதல்மொழி தமிழாகவே இருக்க வேண்டும்.

> தேமதுரத் தமிழின்றிக் காதல்இன்பம் செல்லுமோ? [4]

என்பது கவிஞர் வினா!

நகைச்சுவை

காதற்சுவையோடு நகைச்சுவையையும் கலந்து பாடுவதில் நம் கவிஞர் வல்லவர். நீண்ட நாள் பாராதிருந்த காதலன் ஒருநாள்

---

1. பாரதிதாசன், காதல் பாடல்கள், பக். 170
2. மேலது, பக். 70
3. மேலது, பக். 70
4. மேலது, பக். 194

காதலியைக் காண வந்தான். காதலியிடம் வளர்ந்து வந்த கிளி, அவன் அங்கு வந்த வேளையில் 'அக்கக்கா' என்று கத்தியது. தலைவிக்குத் தெக்குவாய்த் தங்கை ஒருத்தி இருந்தாள். 'அக்கக்கா' என்ற கிளிமொழி தலைவனுக்குத் தெக்குவாய்த் தங்கையின் குரலாய்த் தோற்றியது. அதனால் தன் காதலியோடு அவள் தங்கையும் அங்கே இருக்கிறாள் என்றெண்ணி, அவளைக் காண்பதற்கு அது வேளையன்று என்று சென்றுவிட்டான். இதையறிந்த தலைவி கிளியைத் திட்டுகிறாள்.

கட்டழகி நான்நாளும்
 காத்திருந்தேன்; ஓர்நாள்என்
கிட்ட வந்தான்! இந்தக்
 கிளிக்கழுதை, மட்டின்றி
அக்கக்கா என்றதனால்,
 தெக்குவாய்த் தங்கைவந்தாள்,
எக்கேடோ என்றுபறந்தான் [1]

கிளிக்குரலைத் தெக்குவாய்ப் பெண்ணின் குரலாய்க் கருதித் திரும்பும் தலைவன் தன்னுள் வேதனை கொண்டிருப்பான் எனினும் நம்முள் நகைப்பை விளைவிக்கின்றான்.

உவமைகள்

பாரதிதாசனாரின் உவமைகள் தனித்தன்மை வாய்ந்தவை. இந்நூலின் பாக்களில் அரசியல் கருத்துகளை அவர் உவமைகளாக்கிக் காட்டுமிடங்கள் நம் நெஞ்சைத் தொடுகின்றன. காதலியின் நினைவால் காதலன் ஒருவன் மெலிந்து வருகிறான். அவன் மெலிவுக்கு அவன் தோழன் கூறும் உவமை மிகச் சிறந்ததாயுள்ளது.

இகழடைந்த தமிழரசு போல நெஞ்சம்
இளைக்கின்றாய் [2]

என்கின்றான், தோழன். ஆட்சிக்கு இகழ்ச்சி வந்தால் அஃது இளைத்துப்போகும் என்பதை இந்த அரிய உவமை புலப் படுத்துகிறது.

காதலியை எதிரே கண்ட காதலனுக்குத் தோன்றும் இன்பத்திற்கு, ரூபாய்க்கு இரண்டு படி அரிசி கொடுக்கும் ஆட்சியில் மக்கள் பெறும் இன்பம் உவமையாக்கப்பட்டுள்ளது.

1. பாரதிதாசன், காதல் பாடல்கள், பக். 86
2. மேலது, பக். 81

ஒருவெண் பொற்காசுக்(கு) இரண்டுபடி அரிசி
கண்டநல் லாட்சி கண்டான் போல,
மகிழ்ச்சி மனத்தில் தாண்டவம் ஆட[1]

என்ற இவ்வுவமை படிப்போர் மனத்தில் மகிழ்ச்சியைத் தாண்டவமாட வைக்கும் தன்மையது.

காதல் கொண்ட உழவனும் உழத்தியும் மகிழ்ந்து மெதுவாய் நடந்து செல்வதற்கு அவர்களறிந்த எருமைகளே உவமையாக்கப்படுகின்றன.

மழையிடை எருமை கள்போல
மகிழ்வொடும் நடந்து சென்றார்.[2]

மழையில் எருமைகள் மகிழ்ந்து நடப்பதைக் கூர்ந்து நோக்கிய கவிஞர் அதனைப் பொருத்தமான இடத்தில் உவமையாக்கி விட்டார்.

தம் கொள்கையை உவமையிடையே வைத்துத் தொடுப்பது பாரதிதாசனாரின் தனிச்சிறப்பாகும். பார்ப்பனர் உணவுக்கடையில் உண்ணக்கூடாது என்பது அவர் கொள்கை. அதை ஓர் உவமையில் அவர் சொல்லிக் காட்டுகிறார். காதல் இன்பம் துய்த்தவன் பிற இன்பத்தை விரும்பமாட்டான் என்பதை, முல்லை மலரில் படிந்து தேனுண்டு திளைத்த வண்டு, பார்ப்பனன் உணவுக்கடையில் நுழைந்து உண்டு இன்பம் அடையப் போவதில்லை என்ற உவமையால் விளக்குகிறார்.

கமழ்ந்திடும் முல்லையிற் படிந்த வண்டு,
கடைப்பார்ப்பான் உணவுண்ணல், எங்கே உண்டு?[3]

நன்றி

காதல் துறைகள் அனைத்தும் கொண்ட பாடல்கள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. இதுவரை வந்த நூல்களில் இடம் பெறாத பாவேந்தர் பாக்களைத் தொகுத்து வெளியிட முயற்சிகள் மேற்கொண்டிருப்பது கவிதைச் சுவைஞர்களின் நெஞ்சில் தேனாய்த் தித்திக்கும் செயல். இத்தொகுதி, காதற்பாடல்களைக் கொண்டது. அடுத்தடுத்து வெவ்வேறு தலைப்புகளில் இதே போன்று இன்னும் நான்கு தொகுப்புகள் வெளிவர இருக்கின்றன என்பது மகிழ்ச்சிக்குரியது. பூம்புகார் பதிப்பகத்தினர் இத்தொகுதிகளை அழகிய முறையில் வெளிக்கொணர முன்

1. பாரதிதாசன், காதல் பாடல்கள், பக். 189
2. மேலது, பக். 192
3. மேலது, பக். 34

வந்துள்ளனர். இது தமிழன்னைக்கு அவர்கள் செய்யும் அரிய தொண்டாகும். பாவேந்தரின் பாடல்களைத் திரு. த. கோவேந்தன் தொகுத்துள்ளார். திரு. த. கோவேந்தன் பாவேந்தருடன் நெருங்கிப் பழகியவர். பாடல்களை மிகச்சிறந்த முறையில் தொகுத்துள்ள தோடு, வேண்டிய இடங்களில் பாவேந்தர் எழுதியுள்ள பொருத்தமான அடிக்குறிப்புகளையும் தந்துள்ளார். பாவேந்தரின் பாடல் நூலுக்கு முன்னுரை எழுதக் கிடைத்த வாய்ப்பினை எனக்குக் கிடைத்த பெரும் பேறாய் நான் கருதுகிறேன். இவ்வரிய வாய்ப்பினை நல்கிய பூம்புகார் பதிப்பகத்தாருக்கும், பாவேந்தரின் குடும்பத்தார்க்கும் என் உளமார்ந்த நன்றியினைப் புலப்படுத்திக் கொள்கின்றேன்.

நூல் ஆக்கம்	பாவேந்தர் பாரதிதாசன்
வகைமை	கவிதை
வெளியீடு	பூம்புகார் பிரசுரம், சென்னை–1. (1977)

2

சித்திரச் சிலம்பு

சித்திரச் சிலம்பு

திருவேங்கடவன் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் டாக்டர் சௌரிராசன் அவர்கள் அரிதின் முயன்று உருவாக்கிய பதினொரு பரல்களைப் பெய்து செய்யப்பட்டுள்ளது, இச் 'சித்திரச் சிலம்பு'. சிலப்பதிகாரம்பற்றிய இவ்வரிய நூல் 11 ஆராய்ச்சிக் கட்டுரைகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. திரு.சௌரிராசன் அவர்கள் பன்னெடுங்காலம் சிலம்பிலே நுழைந்து, புகுந்து, துழாவி, படிந்து, சேர்த்த அறிவின் வெளிப்பாடாய் இந்நூல் இலங்குகிறது.

கண்ணகியின் காற்சிலம்பு

சிலப்பதிகாரக் காப்பியத்தின் தலைப்பிற்குக் காரணமாயிருப்பது கண்ணகியின் சிலம்பா, கோப்பெருந்தேவியின் சிலம்பா என்னும் சர்ச்சை எழுந்துள்ள நிலையில், கண்ணகியின் காற்சிலம்பே காப்பியப் பெயர்க்குக் காரணமாய் அமைந்தது என்பதை முதற்கட்டுரையில் ஆசிரியர் நன்கு நிறுவிக் காட்டுகிறார். "அடிகள் நெஞ்சம் கண்ணகியின் நிழலாகவே சிலம்பைக் காணுகிறது; சிலப்பதிகாரம் எனப் பெயரிட்டுச் சிலம்பைப் படைத்த பாங்கிலேயே கண்ணகியின் பண்பியல்புகளை, வாழ்க்கை நிலைகளைக் கற்றார் நெஞ்சம் கசிந்திடுமாறு, நுட்பமாய், நெஞ்சையள்ளும் சிலம்பாய் அடிகள் யாத்திருக்கிறார்" என்பதை இக்கட்டுரை நன்கு விளக்குகிறது.

இளங்கோ எனும் எழுத்தாளர்

தமிழ்நாட்டில் வாழும், "தமிழ் மகன், தமிழ் மகள், வளமார்ந்த உடலும் நலமார்ந்த உளமும் பெற்று, வீறுடனும் சீருடனும் விளங்க வேண்டு"மென விழைந்த இளங்கோ, காப்பியத்தைக் "கற்பாரைச் சான்றாண்மையில் நிற்கச் 'செய்வதோடு சமயக்காழ்ப்பற்ற அன்பர்களாய் வாழவும் தம்

எழுதுகோலைப் பயன்படுத்தியுள்ளார்." "பண்பாளனாய், சமயக் காழ்ப்பற்ற அன்பாளனாய்த் தமிழன் வாழ்வதோடு அரசியலிலும் நெறியாளனாய் வாழவேண்டும் என்பதையும் இளங்கோ உணர்த்துகிறார்". "இவ்வாறு இளங்கோ இந்த நாட்டு மக்கள் பண்பை, அன்பை, அறிவை வளர்க்கத் தம் எழுத்தாற்றலைப் பயன்படுத்தியுள்ளதை", 'இளங்கோ என்னும் எழுத்தாளர்' என்னும் இரண்டாம் கட்டுரை புலப்படுத்துகிறது.

பிறர் நெஞ்சு புகாப் பெண்மை

"தாய், தங்கை, தமக்கை, பாட்டி, பேத்தி இப்படிப் பெண்மைப் பெருவடிவுகள் பலப்பல. இவையெல்லாம் பிறபிற ஆண்கள் நெஞ்சுகளில் இடம்பெறுவது தவறில்லை. ஆனால், ஒருவனுக்குரிய தலைவி - இல்லத்தரசி ஒருத்தி - இன்னொருவன் கண்ணுக்குக் காமப்பொருளாய்த் தோன்றி, அவன் நெஞ்சம் புகக்கூடாது" என்னும் கருத்து, 'பிறர் நெஞ்சு புகாப் பெண்மை' என்னும் கட்டுரையில் விளக்கம் பெறுகிறது. இக்கருத்தை வலியுறுத்த, "காப்பியம் முழுவதும் கண்ணகியோடு பேசியவர், பழகியவர், கண்ணகியைப்பற்றி உரைத்தவர் ஆகியோர் அனைவரும் பெண்பாலராகவே படைக்கப்பட்டுள்ளனர். ஆண்மக்கள் முன்னர் அஞ்சத்தக்கவளாய், காளியாய், தெய்வமாய்த் தோன்றுமாறே இளங்கோ கண்ணகியைப் படைத்துள்ளார்" என்பதை நுணுகித் தேர்ந்து, 'பிறர் நெஞ்சு புகாப் பெண்மை'க்கு ஆசிரியர் புதிய விளக்கம் சேர்ப்பது நயமாய் உள்ளது.

இளங்கோ கண்ட அரசியல்

இளங்கோ கண்ட அரசியல்பற்றி ஆசிரியர் மிக விரிவாகப் புதிய போக்கிலும் நோக்கிலும் ஆய்ந்து அரிய பல செய்திகளைத் தந்துள்ளார். பாண்டியன் நெடுஞ்செழியன் வாயிலாய், (அ) அரசியலில் உள்ளமெலிவுகட்கு இடம் இருக்கக்கூடாது, (ஆ) ஆட்சி நிகழ்த்தும்பொழுது குடும்ப உணர்வுகட்கு இடந்தருதல் கூடாது, (இ) நீதித் தலைவனாகிய மன்னன் தன்னைச் சார்ந்த வழக்குகளைப் பிறரிடம் ஒப்படைத்தல் வேண்டும் என்பன போன்ற அரசியல் சிந்தனைகளை இளங்கோ கொண்டிருந்ததாய் ஆசிரியர் குறிப்பிடுவது போற்ற வேண்டியனவாம்.

தமிழ்த் தேசியம்

ஆட்சிப் பாங்கினைச் சிறப்புற விளக்கி வரும் ஆசிரியர், இளங்கோ அடிகள் தமிழ்த் தேசியத்தைக் காண முயல்வதைப்

படிப்படியே அழகுற வளர்த்துச் சென்று முடித்துக் காட்டுகிறார். முந்நாட்டை மறந்து, ஒரு நாடு - திருநாடு - தமிழ்நாடு காண விழைவதே அடிகளாரின் அரசியல் நோக்கமாய் இருந்தது என்பதை இக்கட்டுரையில் ஆசிரியர் விரிவாய் ஆராய்ந்துள்ளார்.

தமிழ் வரம்பறுத்த தண்புனல் நன்னாடு,

தென்தமிழ் நன்னாடு,

தமிழ்நாடு.

என்ற மூன்று தொடர்களைத் தம் காப்பியத்தில் உருவாக்கித் தந்ததன்வழி, மூவகைத் தேசியச் சிந்தனைகளைத் தமிழனுக்கு இளங்கோ வழங்குகிறார்; அவற்றுள், 'முந்நாடு', 'மூவேந்தர்' என்ற எண்ணம் மாறி நன்னாடு, தண்புனல் நன்னாடு, தமிழ் வரம்பறுத்த தண்புனல் நன்னாடு, அது எம் நாடு என்ற உணர்வு தமிழ் மக்களுக்கும் தமிழகத் தலைவர்கட்கும் உண்டாக வேண்டும்" என்பதே இளங்கோ கண்ட அரசியலாய் இருக்க வேண்டும் என்பதை ஆசிரியர் சான்றுகளுடன் நிறுவுகிறார்.

சங்க காலத்திலிருந்து - ஏன், அதற்கு முன்பிருந்துங்கூட- இன்றுவரை தமிழன் தமிழ்நாட்டை ஆண்டதில்லை. கேட்க அதிர்ச்சியாய் இருக்கலாம்; ஆனால், உண்மையிலும் உண்மை. சங்க காலத்திலும் முன்னரும் சேரன் சேரநாட்டு மக்களை ஆண்டான்; சோழன் சோழ நாட்டு மக்களை ஆண்டான்; பாண்டியன் பாண்டிய நாட்டு மக்களை ஆண்டான். தமிழன் தமிழனை ஆண்டதாய் எங்கும் கூறப்படவில்லை. தமிழ்நாடு என்ற பெயரே இருந்ததில்லை. இளங்கோ அடிகள்தாம் முதன்முதலாய்த் 'தமிழ்நாடு' என்ற பெயரையே தருகிறார். ஆனால், அப்பெயர் நடைமுறையில் இருந்ததில்லை. வெவ்வேறு ஆட்சி மாற்றங்கள் தோன்றின. வெள்ளையர் ஆட்சிக் காலத்தில் தமிழ், கேரள, கன்னட, ஆந்திரப் பகுதிகள் இணைந்த பகுதி, சென்னை இராஜஸ்தானி (Madras Presidency) ஆயிற்று. 1956இல் மொழிவழி மாநிலங்கள் பிரிக்கப்பட்டன. அப்போதும் தமிழ்ப்பகுதி, 'சென்னை மாகாணம்' என்றுதான் வழங்கப்பட்டது. பேரறிஞர் அண்ணா அவர்கள்தாம் 14-1-1968இல், 'தமிழ்நாடு' எனும் பெயரை இந்நிலத்திற்குத் தந்து சட்டமியற்றினார்கள். 'தமிழ்நாடு' என்ற பெயர் அப்போதுதான் முதன்முதலாய் உருவாகி நடைமுறைக்கு வருகிறது. 'தமிழ்நாடு' என்று பெயர் ஏற்பட்ட போதிலும், தமிழன் தனியாட்சி செய்ய முடியாத நிலை; மைய அமைப்பின் மேலாண்மைக்கு உட்பட்ட ஒரு பகுதியாகவே இயங்க வேண்டும். அதனால்தான் தோன்றிய காலந்தொட்டு இன்றுவரை தமிழ்நாடு

தமிழனால் தனியாக ஒருபோதும் ஆளப்பட்டதில்லை என்பது மறுக்க முடியாத வரலாற்று உண்மை. இளங்கோவடிகள்தாம் முதன் முதலாய்த் தமிழ்நாடு ஒரே நாடாய் விளங்கித் தமிழனால் ஆளப்பட வேண்டும் எனும் கனவு கண்டார்; அது கனவாகவே இருந்துவிட்டது; நனவாகவில்லை.

கனவில் கதை வளர்ச்சி

''அச்சத்தோடு அல்லது ஆர்வத்தோடு ஒன்றை எதிர் பார்ப்பதற்குக் கருவியாகவும், பின் நிகழப்போவதை முன்கூட்டியே ஓரளவு அறிந்துகொள்வதற்கு வாய்ப்பாகவும், கதையையோ காவியத்தையோ நடத்திச் செல்வதற்குரிய ஒரு கலைநுட்பமாகவும் கனவை இலக்கியச் சான்றோர்கள் கையாண்டுள்ளனர்'' என்ற பொது விதியைக் கூறி, இவ்விதிக்கு ஏற்பக் கோவலன், கண்ணகி, கோப்பெருந்தேவி கண்ட கனவுகள் எப்படி இயைந்து வருகின்றன என்பதை ஐந்தாவதாய் உள்ள, ''கனாத் திறமும் இளங்கோ கலைத்திறமும்'' என்னும் கட்டுரை குறிப்பிடுகிறது.

கண்ணகியின் தோழி தேவந்தி, கண்ணகியிடம், ''நீ உன் கணவனைப் பெறுவாய்'' என்றாள். உடனே கண்ணகி, "பெறுகேன், தோழியே! உன் வாய்ச்சொற்படி நான் கணவனைப் பெறுவேன். ஆனால், நான் கண்ட கனவில் என் கணவன் வந்து என் கைப் பற்றினான்; இருவரும் இவ்வூர் விட்டு வேறு ஓர் ஊர் சென்றோம். அங்கு என் கணவன்மீது ஒரு பொய்ப்பழி சுமத்தப்பட்டது. கணவனுக்கு அதனால் பெருந்தீங்கு நேர்ந்தது. நான் அவ்வூர் அரசன்முன் சென்று முறையிட்டேன். அதனால் அரசனையும் அந்நகரையும் கேடு சூழ்ந்தது. அது தீக் (தீய) குற்றமாயிருந்தது. துன்புற்ற யான், பின்னர்க் கணவனுடன் சேர்ந்து பெற்ற நன்மைகளைக் கேட்டால் நீ நகைப்பாய்'' என்றாள். இதுவே காப்பியத்தில் கண்ணகியின் முதற்பேச்சு.

முதற்பேச்சின் முதற்சொல், 'பெறுகேன்' என்பது. பெறுவேன் என்பது அதன் பொருள். 'பெறுவேன்' என்றே அடிகள் எழுதியிருக்கலாமே! 'பெறுகேன்' என்று கூறும்போது, 'பெற மாட்டேன்' என்ற பொருள் புலப்படுவதுபோன்ற மயக்கத்தை யும் தோற்றுவிக்கிறது. கோவலனை அவள் பெற்றபோதும், அவன் அவளோடு சேர்ந்து வாழ்வதற்கே இடமில்லாமல் போய்விட்டது. எனவே, 'பெறுகேன்' என்ற அச்சொல் அவனைப் பெற்றும் பெறாதவள்போல் ஆவாள் என்பதைக் குறிப்பாய்ப் புலப்படுத்துவதாய் அமைகிறது.

கண்ணகி இக்கனவுபற்றிக் கூறிக்கொண்டிருக்கும்போதே கோவலன் வந்து சேர்கிறான். கோவலன் கண்ணகியோடு மதுரைக்குப் புறப்பட்டதும், கண்ணகியின் கனவு உண்மையில் நடைபெறப்போவதே என்பதை நாடகத்தைப் பார்ப்போர் உணர்வர். உடனே, மதுரையில் கோவலனுக்கு எத்தகைய தீங்கு நேர இருக்கிறது, மதுரைக்கும் அம்மன்னனுக்கும் விளைய இருக்கும் தீங்குகள் என்னவாய் இருக்கும், இறுதியில் கண்ணகி அடையப்போகும் நன்னிலை யாது என்பவற்றையெல்லாம் எதிர் நோக்கி இருக்கும் ஆர்வத்தை நாடகத்தைக் காண்போரிடம் (அல்லது படிப்போரிடம்) இக்கனவுப் பேச்சு உண்டாக்கிவிடுகிறது. முதற்பேச்சே கதை முழுதும் முடிக்கும் பேச்சாகவும் அமைகிறது.

கோவலன், தான் கடையாமத்தில் கண்ட கனவினைக் காவுந்திக்கும் மாடலனுக்கும் எடுத்துரைத்தான். "மதுரை மாநகரில் கீழ்மகன் ஒருவன் செயலால் கண்ணகிக்குப் பெருந்துயரம் விளைந்தது; என் ஆடையைப் பிறர் பறித்தனர். எருமைக்கடா மீதேறி நான் கண்ணகியுடன் விண்ணகம் புகுந்தேன். மாதவி மணிமேகலையைப் போதி அறவோனிடம் அளித்தாள்" என்பதே தான் கண்ட கனவு எனக் கூறினான். இக்கனவின்மூலம் கோவலன்மீது திருட்டுக்குற்றம் சாட்டப்பட்டு அவன் கொலையுண்ண இருப்பதும், கண்ணகியோடு அவன் விண்ணுலகடைவதும், மாதவியும் மணிமேகலையும் பௌத்தத் துறவிகளாய் மாற இருப்பதும் முன்கூட்டியே குறிப்பாய்ப் புலப்படுத்தப்பட்டுள்ளன.

பாண்டிமாதேவியின் கனவு மூன்றாவது. கண்ணகி, கோவலன் ஆகியோர் கனவுகளில் எதிர்கால நிகழ்வுகள் இவ்வாறு இருக்கும் என்பது கூறப்பட்டது. ஆனால், பாண்டிமாதேவியின் கனவில் தீமைக்கான அறிகுறிகள் சொல்லப்படுகின்றனவேயன்றிக் குறிப்பிட்டு இன்னாருக்கு இன்ன தீங்கு விளையும் என்பது கூறப் பெறவில்லை. செங்கோலும் வெண்கொற்றக் குடையும் நிலத்தில் வீழ்ந்தன. அரண்மனை வாயிலில் இருந்த ஆராய்ச்சி மணி நீண்ட நேரம் ஒலித்தது; வானவில் இரவில் தோன்றியது; விண்மீன்கள் பகலில் நிலத்தில் வீழ்ந்தன; எட்டுத் திக்குகளும் அதிர்ந்தன. - இந்நிகழ்ச்சிகளே அவள் கண்ட கனவு. இக்கனவு, அரசனுக்குத் துன்பமும், நீதிக்குக் கேடும் விளையும் என்பதைப் புலப்படுத்து வதாய் உள்ளது.

'கனவு, காவியத்தை நடத்திச் செல்லும்' என்பதை இம் மூன்று கனவுகள் வாயிலாகவும் அறிகிறோம்.

சொற்காத்த பெண்

'கண்ணகி, கோவலனுக்கு உணவு படைத்து, அவன் உணவருந்தியதும் அவனுக்கு வெற்றிலைபாக்கு மடித்துக் கொடுத்தாள். கோவலன் அவளை அருகழைத்து அணைத்தவாறு, "உனக்கு எல்லையற்ற துன்பமிழைத்திருந்தும் நான் அழைத்தவுடன் புறப்பட்டு வந்துவிட்டாயே; உன்னை என்ன சொல்லிப் பாராட்டுவது?" என நெஞ்சு நெகிழ்ந்து பேசினான்.

இதற்கு முன்னர்க் கண்ணகி கோவலனிடம் பேசியன வெல்லாம், 'சிலம்புள கொள்ளுங்கள்', 'மதுரை மூதூர் யாது?' என்பனவே. இப்பொழுதுதான் அவளுக்கு மனந்திறந்து பேச வாய்ப்புக் கிடைக்கிறது. கோவலன் தான் செய்த தவறுகளை வாய்விட்டுச் சொல்கிறான். அப்போது அவள், அவன் ஏதும் தவறு செய்யவில்லை என்று கூறினால் உண்மையை மறைத்தவள் ஆவாள்; தனக்கு அவன் தவறிழைத்ததாகச் சொன்னால், தன் துயரைப் பெரிதென எண்ணுபவளாகவும், அவன் துயரைப் பொருட்படுத்தாதவளாகவும் கருதப்படுவாள். அவன் தவறிழைத்ததையும் சொல்ல வேண்டும்; அதே வேளை, அத்தவற்றை அவன் தகாச் செயல்களோடு காரணப்படுத்தியும் சொல்லக்கூடாது. எனவே, அவள், "நீங்கள் என்னைப் பிரிந்ததால் என் அறக்கடமைகளைச் சரிவர ஆற்றமுடியாதவ ளானேன். உங்கள் தாய் தந்தையர் என்னைக் காணவந்தால், நான் துயருற்றிருப்பதைக் கண்டு அவர்கள் வருந்தக்கூடாது என்பதற்காக அவர்களைப் பார்த்துப் புன்முறுவல் பூப்பேன். ஆனால், அம்முறுவலோ உண்மையானதன்று என்பதை அவர்கள் அறிவார்கள். அம்முறுவலின் பின்னே என் உள்ளத்தின் ஆழத்தில் இருந்த துயரத்தை எண்ணி அவர்கள் மனம் வருந்திச் செல்வார்கள். இப்படி உங்கள் பெற்றோர் வருந்தும்படியான செயலை நீங்கள் செய்தீர்கள். என்றாலும், உங்கள் சொல்லை மாற்ற நினையாத உள்ளம் உடையவள் ஆதலால், நீங்கள் கூறிய உடனேயே புறப்பட்டுவிட்டேன்," என்றாள்.

உங்கள் பெற்றோர் வருந்தும்படியாக நீர், "போற்றா ஒழுக்கம் புரிந்தீர்" எனக் கண்ணகி கூறியதற்குத் தகாத ஒழுக்கத்தை மேற்கொண்டீர் எனப் பொருள் கொள்ளக்கூடாது. கண்ணகி இங்குத் தன்னைப் பிரிந்திருந்ததையே, 'போற்றா ஒழுக்கம்' என்கிறாள். அவன் மாதவியோடு வாழ்ந்திருந்ததையோ, நகரப் பரத்தரோடு திரிந்ததையோ, குன்றனைய செல்வத்தை அழித்ததையோ அவள் குறிப்பிடவில்லை. அவற்றை உட்படுத்தி

அவள் பேசுவாளேயானால் அது கோவலனைக் குத்திக் காட்டுவதாய் ஆகிவிடும். தன்னளவில், தன் மாமன் மாமி அளவில் நேரிட்ட துன்பங்களை மட்டுமே கண்ணகி எடுத்துரைத்தாள். எனவே, "போற்றா ஒழுக்கம் புரிந்தீர்" எனும் அத்தொடர்மூலம் கண்ணகி, தற்காத்துத் தற்கொண்டான் பேணி, தகைசான்ற சொற்காக்கும் சோர்விலாள் பெண் என்ற உண்மை, உலகுக்கு விளங்கிற்று என்ற உண்மையை ஒரு கட்டுரையில் நிலை நிறுத்துகிறார்.

அவலச்சுவை

"நெஞ்சை அள்ளும் சிலம்பு அல்லது அவலம் அமைந்த பாங்குகள்" என்பது ஏழாவது கட்டுரைத் தலைப்பு. சிலப்பதிகாரத்தின் தலையாய சுவை அவலச்சுவை என்பதைக் காட்டி, அச்சுவையை நாடகக் குறிப்பு, தற்குறிப்பேற்றம், மடக்கு, சொல்லடுக்கு, தனிச் சொல்லாட்சி, கதைமாந்தரின் உணர்ச்சி மிக்க சொற்கோவை ஆகிய உத்திகளைக் கையாண்டு, அனைவர் நெஞ்சங்களையும் ஈர்க்கும் வகையில் அமைத்துக் காட்டியிருப்பதைத் தக்க எடுத்துக்காட்டுகளுடன் ஆசிரியர் காட்டியிருப்பது மிகவும் சிறப்பாய் உள்ளது.

கோவலனும் கண்ணகியும் வையை ஆற்றின் கரையை அடைந்தனர். அஃது இளவேனிற்காலம். வையையில் நீர், பெருக்கெடுத்து ஓடுகிறது. மரங்கள் உதிர்த்த மலர்கள் நீரை மறைத்து மிதந்து செல்கின்றன. 'இந்நன்மக்களுக்குப் பெருந்தீங்கு நேர இருக்கிறதே' என வையைத்தாய் அழுது சிந்திய கண்ணீரே அங்குப் பெருகியோடும் தண்ணீராம்! தன் கண்ணீரைக் கண்டால், ஆற்றுத்தாய் அழுகிறாளே என அவர்கள் மயங்குவார்கள் என்பதால், பூக்களாகிய முன்றானையால் தன் கண்ணீரை மறைத்து வையை நடந்தாளாம். அடுத்து நிகழ இருக்கும் அவலத்தை ஆற்றுக்காட்சிகொண்டு அடிகளார் விளக்குகிறார்.

> வையை என்ற பொய்யாக் குலக்கொடி
> தையற்கு உறுவது தான்அறிந் தனள்போல்
> புண்ணிய நறுமலர் ஆடை போர்த்துக்
> கண்நிறை நெடுநீர் கரந்தனள் அடக்கிப்
> புனல்யாறு அன்றுஇது பூம்புனல் யாறுஎன
>
> (சிலப். புறஞ்சேரி. 170–74)

ஓடியது.

வையையைக் கடந்து மதுரைக் கோட்டையின் வெளிப்புறம் வந்து சேர்ந்தனர். அகழி சூழ்ந்த கோட்டையைச் சுற்றியுள்ள

நீர்நிலைகளில் குவளை, ஆம்பல், தாமரை ஆகிய பூக்கள் பூத்துக் கிடக்கின்றன. இளங்காற்று வீசும்போது பூக்கள் அசைவதால் அவற்றில் உள்ள தேன் துளிகள் சிதறுகின்றன. தேனுண்ண வந்த வண்டுகள் பூக்களைச் சூழ்ந்து ஒலியெழுப்பிப் பறக்கின்றன. மாசாத்துவான் மகனுக்கும் மாநாய்கன் மகளுக்கும் நேர இருக்கும் துன்பத்தை அறிந்து, பூக்கள் நடுங்கிக் கண்ணீர் சிந்தி அழுததாக இக்காட்சியை இளங்கோ சித்திரிக்கிறார். மலர்களைக் கண்களாக்கி, சிதறும் தேன் துளிகளைக் கண்ணீராக்கி, காற்றால் பூக்கள் அசைவதை அவை நடுங்குவதாய்க் கூறி, வண்டுகளின் ஒலியை அழுகைக் குரலாக்கி அரியதோர் ஓவியத்தைப் படைத்துக் காட்டும் அடிகளார், அதே வேளையில், அடுத்துத் துன்பம் நேர இருக்கும் அவலத்தை நம் நெஞ்சில் சூழ விடுகிறார்.

மதுரைக் கோட்டையின்மீதுள்ள கொடிகள், காற்றில் அசைந்தாடுவது, "நீங்கள் இங்கு வாராதீர்கள்" என்று கையை அசைத்துக் கோவலன் - கண்ணகியைத் தடுப்பது போன்றிருந்தது என்றும் இளங்கோ கூறுகிறார்.

> போர்உழந்து எடுத்த ஆர்எயில் நெடுங்கொடி
> வாரல்என் பனபோல் மறித்துக் கைகாட்ட (சிலப். புறஞ்சேரி. 189–90)

தற்குறிப்பேற்ற அணியை இவ்வாறு எடுத்துரைத்த முதற்பாவலர் இளங்கோ அடிகளே ஆவர். கொடி இயல்பாய் அசைய, அதன்மீது தம் குறிப்பை ஏற்றி, வர இருக்கும் அவலத்தைக் குறிப்பால் புலப்படுத்தியுள்ளார்.

கதைபுனை திறன்

எட்டாம் கட்டுரையில், 'இளங்கோவின் கதை சொல்லும் திறன்' ஆராயப்பட்டுள்ளது. கதை, உண்மை நிகழ்ச்சியே என்றதோர் உணர்வு கற்பவர் நெஞ்சில் எழுமாறு சொல்லுதல்; காப்பியப் புலவன் தான் கூறுவதோடமையாது காப்பிய மாந்தர்தம் கூற்றாய் வைத்துக் கதையை நடத்திச் செல்லுதல்; முன்னர் அறிந்திருந்த - இடையே மடிந்துபோன - கதைநிகழ்ச்சிகளைப் பின்னர் நினைவூட்டும் பின்னோக்கு உத்தியைக் கையாளுதல்; பின்வருவனவற்றைக் குறிப்பாய் முன் உணர்த்திக் கற்பவர் நெஞ்சில் ஒருவகை எதிர்பார்ப்பு உணர்வை எழுப்புதல்; கற்பவர்தம் செவிக்கு இனிய ஓசையும் கண்ணுக்கினிய காட்சியும் நெஞ்சுக்கு இனிய நினைவும் குமிழிடுமாறு நிரந்தினிதுரைத்தல்; பல்வேறு பாக்களும் பாவினங்களும் பயின்று வருமாறு வரிப் பாடல்கள்மூலமும் குரவைகள்மூலமும் கதைப்போக்கை அமைத்துச் செல்லுதல் ஆகிய முறைகளைக் கையாண்டு

அடிகளார் திறமாய்க் கதை சொல்லிச் செல்வது இக்கட்டுரையில் நன்கு புலப்படுத்தப்பட்டுள்ளது.

மண்ணக மடந்தை

கண்ணகியும் கோவலனும் கவுந்தியடிகளுடன் மதுரை செல்கின்றனர். பகலில் வெயில் கடுமையாய் இருந்ததால் பகற்பயணத்தைத் தவிர்த்து இரவில் நடக்கிறார்கள். ஒரு நாள் இரவு, நிலவு பொழிகிறது; தென்றல் வீசுகிறது. தென்றலை இளங்கோ, பூமியின் பெருமூச்சாய்க் கூறுகிறார். நிலமகள் நெட்டுயிர்க்க நேர்ந்தது எதனால்? "கண்ணகி கணவனைப் பிரிந்திருந்தபோது வெண்மதி அவளுக்கு வெய்யதாய் இருந்தது; இப்போதோ அவள் தன் கணவனுடன் இருப்பதால் நிலவொளியில் மகிழ்ச்சியுடன் நடக்கிறாள். இஃது அவளுக்கு நிலைக்கப்போவதில்லையே; மதுரையில் அவனை இழக்க இருக்கிறாளே! மேனியிற்படும் வெயிலையே தாங்கமுடியாதவள் மனத்தின் மேற்படும் வெயிலை - அஃதாவது - கோவலன் இறப்பை - எவ்வாறு தாங்கப்போகிறாளோ" என்றெண்ணியே மண்மடந்தை பெருமூச்சு விட்டாளாம்!

'வேனில் திங்களும் வேண்டுதி' என்றே
பார்மகள் அயாஉயிர்த்து அடங்கிய பின்னர்
(சிலப். புறஞ்சேரி, 28–29)

பெருமூச்சோடு நிலமகள் அயர்ந்து மயங்கி மூர்ச்சை அடைகிறாள்.

கண்ணகி மதுரையில், மாதரி வீட்டில் உணவு சமைத்துக் கோவலனுக்குப் பரிமாறுகிறாள். பனையோலையில் புனையப்பட்ட தடுக்கு ஒன்றில் கோவலன் அமர்ந்தான். இலைபோடும் இடத்தில் கண்ணகி தண்ணீர் தெளித்துத் தரையை மெழுகினாள்; இச்செய்கை, மயங்கியிருந்த தரைமகளின் முகத்தில் நீர் தெளித்து மயக்கம் தெளிய வைத்ததுபோல இருந்தது என்பார், இளங்கோவடிகள். 'கணவனுக்கு ஆசையுடன் உணவு படைக்க இருக்கிறாளே, கண்ணகி; இதுதானே கோவலனுக்குக் கடைசி உணவு; உண்டு மதுரை சென்றதும் கொலை செய்யப்பட இருக்கிறானே' - இந்த எண்ணத்தால் வருந்திய நிலமகள் மூர்ச்சை அடைந்துவிட்டாள். தண்ணீர் தெளித்துத் தடவியது அவள் மயக்கத்தை நீக்குவது போன்றிருந்ததுவாம்.

மண்ணக மடந்தையை மயக்குஒழிப் பனள்போல்
தண்ணீர் தெளித்துத் தன்கையால் தடவி (சிலப். கொலைக். 40–41)

இலையை விரித்தாள் கண்ணகி என்கிறார், இளங்கோவடிகள்.

இவ்வாறு கண்ணகிக்குப் பின்வருவனவற்றையெல்லாம் முன்னரே அறிந்து, தான் வருந்தி, குறிப்பாய் நமக்கும் அறிவித்து, நம்மையும் கலங்கச்செய்கின்ற ஒரு பாத்திரமாய், 'மண்ணக மடந்தை' படைத்துக் காட்டப்பட்டிருப்பதை, 'மண்ணக மடந்தையும் கண்ணகியும்' என்னும் கட்டுரையில் ஆசிரியர் சுட்டிக் காட்டுகிறார்.

சிலம்பு – வழிகாட்டி

சிலப்பதிகாரம் சங்க இலக்கியச் சாரமாகவும், தமிழ் இலக்கிய வரலாற்றின் புதியதொரு திருப்புமுனையாகவும் விளங்குவதை, 'சங்க இலக்கியமும் சிலப்பதிகாரமும்' என்னும் பத்தாவது கட்டுரை விளக்குகிறது. சங்கப்பாடலின் கருத்துகளையும், தொடர்களையும் அடிகள் எடுத்தாண்டுள்ள இடங்கள் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. "தனித் தனிப் பாடல்களாய் அமைந்த சங்க காலப் பாடலமைப்பைக் கடந்து, ஒரு கதையை மையமாய் வைத்து, முதல், கரு, உரி எனும் அனைத்துப் பொருள்களும் இடம் பெறுமாறு பாடிய வகையில், சிலம்பு தமிழ் இலக்கிய வரலாற்றில் ஒரு திருப்புமுனையாய் அமைவதை" ஆசிரியர் விளக்குகிறார். "சங்க காலப் பரத்தமையின் கேட்டை உணர்த்தியதோடு, பரத்தமை இழிவு மறைய மாதவியைப் படைத்துக் காட்டியிருக்கும் வகையில் சிலப்பதிகாரம் சங்க இலக்கியங்களினின்றும் மாறுபட்டிருக்கிறது; பிற்காலத் தேவார, திவ்வியப் பிரபந்தப் பாமழை கருக்கொள்ளச் சிலம்பு காரணமாய் உள்ளது. பிற்கால விருத்தம் முதலான பாடல்களின் வளர்ச்சிக்குச் சிலப்பதிகார வரிப்பாடல்கள் பல, வழி வகுத்துக் கொடுத்தன எனலாம்; பாவகைகளேயன்றிப் பாவின வளர்ச்சிக்கும், விருத்தப் பாடல்களின் தோற்றத்திற்கும் சிலப்பதிகாரமே வழிகாட்டுகிறது" என்னும் செய்திகளையும் ஆசிரியர் இக்கட்டுரையில் புலப்படுத்துகிறார்.

சமய ஒருமைப்பாடு

'சிலம்பில் வைணவம்' என்பது நூலின் இறுதிக் கட்டுரையாய் அமைந்திருக்கிறது. "அடிகளார் தாம் இயற்றிய சிலப்பதிகாரத்தில் தாம் வாழ்ந்த காலச் சமயம் அனைத்தினையும் கலைக்கண்ணால் கண்டு, ஞான நெஞ்சில் நினைந்து, அருட் கையால் எழுதிச் சென்றுள்ளார்" என்பதைக் குறிப்பிட்டு, அவற்றுள் வைணவம்பற்றி அடிகளார் கூறியுள்ளதை விரிவாக இக்கட்டுரையில் ஆசிரியர் ஆராய்கிறார். வைணவ தத்துவம் இருபத்தாறாகும். அவற்றை "வைணவச் சான்றோர் அறிவுள பொருள் (சித்து), அறிவில் பொருள் (அசித்து), இறை (ஈசுவரன்)

என முப்பொருளாய்க் கொள்வர்." இவற்றைப் பொதுநிலையிலும் தத்துவ நோக்கிலும் இலக்கியப் போக்கில் இளங்கோ எவ்வாறு எடுத்துரைக்கிறார் என்பதை மிக விரிவாகவும் ஆழமாகவும் ஆய்ந்து நூலாசிரியர் நமக்கு எடுத்துரைக்கிறார். சமயக் கருத்துகளை, "பிற மதச் காழ்ப்பு கற்பார் நெஞ்சில் தோன்றாத வண்ணம் அன்போடும் பண்போடும் அமைத்துச் செல்வதில் இளங்கோ அடிகளார் பெற்றுள்ள வெற்றி தமிழுக்கும் தமிழர்க்கும் ஆக்கம் தரும் பணி" என எண்ணி எழுத்தாளர், பேச்சாளர் ஆகிய அனைவரும் அதனைப் போற்றி அவ்வழியைத் தாமும் ஏற்று நடக்க வேண்டுமென ஆசிரியர் வேண்டிக்கொள்கிறார்.

உள்ளத்துள்ளதே உரை

கோவலனும் கண்ணகியும் கவுந்தியடிகளுடன் மதுரை செல்லும் வழியில் உறையூர்ச் சோலையில் தங்கியிருந்தனர். அங்கு வந்த வம்பப் பரத்தையும் வறுமொழியாளனும் அடிகளிடம், 'உடனிருப்போர் யார்?' என வினவினர். அடிகள், 'என் மக்கள்' என்றனர். அவர்களோ, "அடிகளே!

உடன்வயிற் றோர்கள் ஒருங்குடன் வாழ்க்கை
கடவதும் உண்டோ? (சிலப். காடுகாண். 226–27)

எனத் தங்களைப் போலவே அவர்களையும் எண்ணி எள்ளி நகைத்தனர். சிலம்பில் இஃது ஒரு காட்சி; மற்றொரு காட்சி; மதுரை ஆயர்பாடியில் மாதரி வீட்டில் தங்கியிருந்த கண்ணகி, கோவலனுக்கு உணவு சமைத்துப் படைக்கிறாள். அதைக் காணும் மாதரியும் அவள் மகள் ஐயையும்,

"ஆயர் பாடியின் அசோதைபெற் றெடுத்த,
பூவைப் புதுமலர் வண்ணன் கொல்லோ,
நல்லமு துண்ணும் நம்பி! ஈங்குப்,
பல்வளைத் தோளியும், பண்டுநம் குலத்துத்
தொழுனை யாற்றினுள், தூமணி வண்ணனை
விழுமம் தீர்த்த விளக்குக் கொல்"என (சிலப். கொலைக். 46–51)

கோவலனையும் கண்ணகியையும் கண்ணனாகவும் நப்பின்னைப் பிராட்டியாகவும் கருதிப் பெருமிதத்தோடு பார்க்கின்றனர். சிலம்பின் இவ்விரு காட்சிகளும் காண்பவரின் உளப் பாங்கிற்கேற்பவே கருத்துகள் தோன்றும் என்பதைத் தெளிவுபடுத்துகின்றன.

ஆய்வாளர் சௌரிராசன்

பேராசிரியர் டாக்டர் சௌரிராசன் அவர்கள் அன்புருவானவர்; அருள் சுரக்கும் நெஞ்சினர்; தூயவர்; தன்னல

மற்றவர்; ஒப்புரவாளர்; உயிர் வருத்தம் காணப் பொறாதவர்; நற்குணங்கள் எல்லாம் இயல்பாகவே வாய்க்கப்பெற்ற சான்றாண்மையர்; தமிழினம் ஒன்றுபட்டுத் தழைத்துச் சிறக்க வேண்டுமென்னும் உளத்துடிப்பினர். இத்தகைய பண்பாளர் ஒருவர் சிலப்பதிகாரத்தைக் காணும்பொழுது எத்தகைய கருத்துகள் உருவாகும் என்பதை இந்நூல் வழி நாம் உணர்கிறோம். அதே வேளை, சிலப்பதிகாரம்பற்றிப் பேராசிரியர் சௌரிராசன் கூறும் கருத்துகள் வாயிலாய் அவரது உள்ளப் பாங்கினையும் நாம் அறிந்துகொள்கிறோம். நற்பண்பாளரின் நற்றிறனாய்வினால் உருவானதே இச்சித்திரச் சிலம்பாம்!

நன்றியும் விழைவும்

இந்நூலுக்கு, 'அணிந்துரை' எழுதும் பெருமையை எனக்கு நல்கிய பேராசிரியர்க்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவருடைய இத்தகு அரிய புதிய ஆராய்ச்சி நூல்களை அடிக்கடி காணும் வாய்ப்புத் தொடர்ந்து உருவாக வேண்டுமெனும் என் விழைவையும் புலப்படுத்திக்கொள்கிறேன்.

நூல் ஆக்கம்	முனைவர் பொன். சௌரிராசன்
வகைமை	ஆய்வுக் கட்டுரை
வெளியீடு	பாரி நிலையம், சென்னை. (1981)

3

இலக்கியத் தலைவர் கலைஞர்

'இலக்கியத் தலைவர் கலைஞர்' எனும் இந்நூல் கலைஞர் பற்றி, ஆய்வுச்செம்மல் பேராசிரியர் ந. சஞ்சீவியார் எழுதியுள்ள பதினாறு ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்பாகும்.

'பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்க' என வாழ்த்துவது மரபு. "என் கட்டுரைகள் பதினாறையும் பெறுகின்ற நீவிர் பல்லாண்டு பல்லாண்டு பயன் பெருக்கி வாழ்வீராக" எனப் பேராசிரியர் சஞ்சீவியாரின் எழுத்து வாழ்த்தாய்த் தலைவர் கலைஞர் அவர்களின் 66ஆவது பிறந்த நாள் விழாவின்போது இந்நூல் வெளியிடப்பெறுகிறது. கலைஞர் பதினாறு பேறுகள் பெறுவது மட்டும் அன்று; அவர் 'என்றும் பதினாறாய்ப்' பெருமை பூத்துச் சிறக்க வேண்டுமெனும் சஞ்சீவியாரின் ஆவல் இந்நூலிலுள்ள பதினாறு கட்டுரைகளிலும் ததும்பி நிற்பதை நன்கு உணரலாம்.

கலைஞரின், 'சிலப்பதிகார நாடகக் காப்பியத்திற்கு'ப் பேரறிஞர் அண்ணா அளித்துள்ள முன்னுரையை விளக்கிக் கலைஞரைப் போற்றும் கட்டுரை 1; கன்னித் தமிழ்க் காவலராம் கலைஞரின் குணநலன்களைக் கொஞ்சுதமிழில் கூறுகின்ற கட்டுரைகள் 3; கவிஞர் முதல்வராம் கலைஞரின் கவிதைகள் பற்றிய திறனாய்வுக் கருத்துகளைத் தாங்கி நிற்கும் கட்டுரைகள் 9; தன் வரலாறு என்பதினும் நம் காலத்தின் தமிழ் வரலாறு - தன்மான இயக்க வரலாறு என்று போற்றுதற்குரிய, 'கலைஞரின் நெஞ்சுக்கு நீதி' பற்றிய கருத்தீடான கட்டுரை 1; அயலகத் தூதரகங்களில் பணிபுரிந்து ஒய்வுபெற்ற திரு. இராமன் என்பார் கலைஞர்பற்றி எழுதியுள்ளதை எடுத்து மொழிபெயர்த்துச் சஞ்சீவியார் தம் குறிப்பையும் சேர்த்துத் தந்துள்ள கட்டுரை 1 எனப் பதினாறு அரிய கட்டுரைகள் அடங்கியதாய் இந்நூல் அமைந்திருக்கிறது.

ஆயப்புகும் எதனையும் பட்டியலிட்டுக் காட்டுவது சஞ்சீவியாரின் ஆய்வு முறைகளுள் ஒன்று. அதனை

இந்நூலுள்ளும் பல இடங்களில் காணலாம். இந்நூலுள் அவர் ஆய்வுக்கு ஆட்பட்டிருப்பவர், கலைஞர் கருணாநிதியார். கருணாநிதி யார்?

"நடுத்தர உயரம், வழுக்கை விழும் தலை, ஒளிவு மறைவு இல்லாத மனத்தைத் திறந்து காட்டும் முகம், தோற்றத்திலேயே மதிப்பைத் தோற்றுவிக்கும் தன்மை - இவற்றின் இணைப்பே கருணாநிதி.

அவர் தி.மு.க. இயக்கத்தின் பெருந்தலைவராய்த் திகழ்பவர்; மக்கள் வெள்ளத்தைக் கிளர்ந்தெழச் செய்யக்கூடிய ஈடு இணையற்ற நாநலம் வாய்ந்தவர்; உயிர்த்துடிப்பூட்டுபவர்; திறமை மிக்க அரசியலாளர்; அனைவராலும் மதிக்கப்படுகின்ற தமிழறிஞர்.

அவரிடம் புலமை மட்டுமன்று, அடக்கமும் மனித நேயமும் உடன் உறைகின்றன. மரியாதை, பண்பாடு ஆகியவற்றின் உறைவிடம் அவர். உண்மையில் 'பண்பு' எனும் உயர் தனித்தமிழ்ச் சொல்லுக்கு உலவுகின்ற வடிவமாய் இலங்குபவர், கருணாநிதி."

இக்கருணாநிதியைச் சஞ்சீவியார் பல்வேறு கோணங்களில் கண்டு பாராட்டி மகிழ்கிறார்.

கலைஞர்

(அ) மக்கள் - மனிதர் தலைவர் (People leader) (பக். 61)

(ஆ) பேரறிஞர் புகழ்ப்பெருமையாளர் (பக். 18)

(இ) அறிஞர் வழியில் ஆட்சி நடத்தும் அண்ணல் (பக். 74)

(ஈ) வன்முறைக்கு எதிராய் முரசொலி செய்யும் முதல்வர் (பக். 75)

(உ) பூம்புகார் படைத்த பொன்னிப் புரவலர் (பக். 146)

இவை ஒப்பற்ற தொடர்களால் அமைந்துள்ள புகழுரைகள்.

பெருங்கலைஞர் - இன்றைய நம் முதல்வர்,

"படிப்படியாய் வளர்ந்தவர் - படித்துப் படித்து வளர்ந்தவர். தம்பியுடையான் படைக்கஞ்சான் என்னும் பழஞ்சொல்லுக்கு எல்லாத் துறைகளிலும் புத்துரை காண்பவர்." (பக். 17)

"பின்னணி (சாதி, செல்வம், குடும்பப் பரம்பரை அல்லது வழிமரபு முதலிய) பலம் ஏதுமில்லா நிலையில் இயற்கை நுண்ணறிவுத் திறத்தாலும் ஓயாத உழைப்பாலும் மக்களின் இதயத் தெய்வமாய் உருவானவர்." (பக். 28)

"நூலறிவும், செயலாற்றும் கண்டிப்பும், கருணையும், அடக்கமும், அறிவாய்வும் ஒருங்கே படைத்தவர்." (பக். 28)

"ஒன்றாரும் ஒப்பும் சொல்லாற்றல் செயலாற்றல் ஒருங்கிணைந்த ஒரு பெரும் முதல்வர்.... தமக்குப் பிறவியிலேயே அமைந்த பேராற்றல்களைக் கூர் தீட்டிக்கொண்டவர், சீராட்டிக் கொண்டவர்... பதவி ஏறஏறப் புகழ் ஏறஏற அவர் பண்புகளும் ஏற்றம் பெறுகின்றன." (பக். 39)

எனப் பல்தொடர் ஓவியங்களாய்ப் படைத்துக் காட்டுமிடங்கள் பல. மேலும், "நம் கலைஞர் பட்டதாரி அல்லர்; ஆனால், பட்டதாரிகளுக்குப் பட்டமளிப்பு விழா உரையாற்றும் அறிவாண்மை பெற்றவர். நம் கலைஞர், வழிவழிச் செல்வர் அல்லர்; ஆனால், செல்வர்கள் எல்லோரையும் நல்வழிக்குக் கொண்டுவரத் தெரிந்த வல்லாளர்." (பக். 33)

"கலைஞரின் கை, கன்னித்தமிழ் வளர்க்கும் கை; ஏழை எளியோர் கண்ணீர் துடைக்கும் கை; வயிற்றுக்காக நடிக்கும் புல்லரினும் வாய்மைக்காக இடிக்கும் புலவரைப் போற்றும் கை; உண்மைக்கும் உழைப்புக்கும் ஒழுக்கத்துக்கும் உயர்வு தரும் கை; அறிஞர் வழியைக் கலைஞர் வழியாக - அறிவைக் கலையாக மாற்றும் கை." (பக். 37)

"கலைஞர் பெருந்தகை தகுதி காக்கும் தகுதியாளர் - தயாளர். தம் தகுதி காக்கிறார்; தம் தாய்மொழியை - தாய்நாட்டைக் காப்பவரைக் காக்கிறார்." (பக். 40)

"செயல்வீரத்தை உயிராகப் பெற்ற, சிந்தனை வீரத்தை உள்ளமாகப் பெற்ற - சொல்வீரத் திருவுருவர் அன்றோ நம் கலைஞர் முதல்வர்." (பக். 137)

எனக் கலைஞரின் குணநலன்களைக் குன்றின்மேலிட்ட விளக்காக்கிக் காட்டுகிறார்.

"நடை - படை இரண்டிலும் பேரறிஞர் அண்ணாவை எதிரொலி செய்யும் ஏந்தல் கலைஞரே." (பக். 158)

"பேரறிஞர் அண்ணாவும் விண்ணிலிருந்து வியப்பும் விம்மிதமும் கொள்ள ஏடாளும் நாடாளும் - நல்லோர் நெஞ்சமெல்லாம் ஆளும் சான்றோர் நம் முதல்வர் கலைஞர்." (பக். 140)

என அண்ணா வழிநின்று அருந்தொண்டாற்றிப் பெருமை கொள்பவர் எனப் பெருமிதத்துடன் எடுத்து மொழிகிறார்.

அண்ணாவைப் 'பெருந்தலைவன்' என்று கலைஞர் கொள்வது எவ்வளவு உண்மையோ அவ்வளவு உண்மை, இவர் நம் முதல்வரைப் 'பெருங்கலைஞர்' எனத் தெரிந்து தெளிதலும்.

இத்தகு கலைஞரின் கவிதைகளைச் சொல்லுக்குச் சொல் ஊன்றிப் படித்துத் திளைத்துத் தாம் பெற்ற இன்பத்தை அனைவரும் பெறும் வகையில் அரிய கட்டுரைகளை ஆக்கித் தந்துள்ளார், திரு. ந. சஞ்சீவியார்.

கலைஞரின் கவிதைகளைத் துருவி ஆய்ந்து, கலைஞர் தமிழைப் போற்றும் சொற்களையும் சொற்றொடர்களையும் வகைதொகை செய்து, வளங்கண்டு, இவ்வகைதொகை ஆராய்ச்சியால் தமிழிலக்கியப் பரப்புள் வேறு எந்தப் புலவரும் இந்த அளவிற்குப் பைந்தமிழின் பல்வளத்தையும் பல்திறனையும் ஒருசேரப் பாடினார் இலர் என்பதைத் தெளிவுபடுத்துகிறார். (ப. 56)

கலைஞருடைய கவிதைகளின் அமைப்பு போற்றுதற் குரியது; உணர்ச்சி அளவிடற்கரியது; உவமை, உருவகம், கற்பனை ஆகியன ஊற்றெடுத்துப் பெருகுகின்றன. அவர் கவிதைகளில் சிலேடை பேரிடம் பெறுகிறது. கவிதை நெடுக ஆங்காங்கே அண்ணாவைப்பற்றிய அருமைபெருமைகள் பொதிந்து நிற்கின்றன என்பவற்றைச் சான்றுகள் காட்டி நிறுவுகிறார்.

கலைஞரின் கவிதைகளை மையமாய்க்கொண்டு ஆராய்ந்து, கலைஞர் அவர்களின் கவிதைகளில் வேறு எந்தத் தமிழ் இலக்கியத்தைவிடவும் திருக்குறள் ஆட்சி மிகுதியாய் இருப்பதை நிறுவிக் காட்டுகிறார். அவருடைய கவியரங்கக் கவிதைகளில் 53 குறட்பாக்களை எடுத்தாண்டுள்ளமையைப் பட்டியலிட்டுக் காட்டி மெய்ப்பிக்கிறார். சில குறட்பாக்களை ஒரே முறையும், சிலவற்றை இரு முறையும் ஆண்டுள்ள கலைஞர் அவர்கள், இரு குறட்பாக்களை மும்மூன்று முறை எடுத்தாண்டுள்ளதை மிக நுட்பமாய் ஆராய்ந்துள்ளார்.

> அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை; பொருளில்லார்க்கு
> இவ்வுலகம் இல்லாகி யாங்கு. (குறள், 247)
>
> கடிதோச்சி மெல்ல எறிக; நெடிதாக்கம்
> நீங்காமை வேண்டு பவர் (குறள், 562)

என்னும் இவ்விரு குறட்பாக்களுமே மாண்புமிகு கலைஞரின் இரு மலர்விழிகள் என்பது தம் கருத்து என ஆசிரியர் கூறுவது நம்மைப் புல்லரிக்கச்செய்கிறது; அவரது ஆய்வின் ஆழத்தை எண்ணி இறும்பூதடைய வைக்கிறது. (பக். 123)

கலைஞருடைய கவிதைகள் சுருங்கிய சொற்களில் சுடர்விடும் உணர்வுகளின் நிறைவாய் அமைந்திருப்பதை ஆய்வு வழி நின்று உணர்த்துகிறார்.

ஓர் இலக்கியத்துக்கு இருக்க வேண்டிய, 'முன்னோர் மொழி பொருளே அன்றி அவர் சொல்லையும் பொன்னேபோல் போற்றும் புலமை - பண்புநலன்' கலைஞரிடம் நிரம்ப உண்டு என்பதைத் தக்க எடுத்துக்காட்டுகள் கொண்டு மெய்ப்பிக்கிறார்.

'புலவர் புகழ் தமிழ்' என்றே இருந்த நிலையை இந்நூற்றாண்டின் - இருபதாம் நூற்றாண்டின் - இயல்புக்கும் இன்றியமையாமைக்கும் ஏற்பப் 'பொது மக்கள் புகழ் தமிழ்' ஆக மாற்றிய பெருமை கலைஞரின் கவிதைக்கு உண்டு என்பதைச் சஞ்சீவியார் மகிழ்வு பொங்கக் கூறுகிறார்.

உண்மையையும், தம் மனத்துக்குச் சரியெனப்பட்டதை எது பற்றியும் கவலையின்றிச் சொல்லுதலும் ஆய்வாளனின் முக்கிய இரு பண்புகளாம். இந்த இரண்டையும் சஞ்சீவியார் நிரம்பப் பெற்றிருக்கிறார் என்பதை ஆய்வுலகம் நன்கறியும். இந்நூலும் இதற்குத் தக்க சான்றாய் அமைகிறது. கலைஞரின் நெஞ்சுக்கு நீதியை மதிப்பிடுகின்ற சஞ்சீவியார், 'நான் முதன் முதலாகத் தன் வரலாறு ஒன்றை ஆய்ந்து எழுதும் கட்டுரை இதுதான்' எனத் தன்னடக்கத்தோடு உண்மையை ஒளிவு மறைவின்றிக் கூறுகிறார். கலைஞர் அவர்களின் நெஞ்சக் கூற்றாக 123 செய்திகளை அவர் பட்டியலிட்டுக் காட்டியிருப்பது அவரது பேருழைப்புக்கும் அழுத்தமான ஆய்வுக்கும் சான்றாம். அவற்றுள் ஒன்றாய் அந்நூலில் பிறமொழிக் கலப்பு (நூல் முழுதும் அழகுத் தமிழ் முகத்தில் அம்மை வடுக்கள் போல) உள்ளது என அவர் சொல்வது, 'காமம் செப்பாது கண்டது மொழியும்' ஆய்வுப் பண்புக்கு எடுத்துக்காட்டாம்.

தம் ஆராய்ச்சியைப்பற்றிய உயர்வான மதிப்பீடு தன்னம்பிக்கை - கொண்டிருந்தவர், சஞ்சீவியார். கலைஞரின் கவிதைகள், ஆராய்ச்சி நெறிமுறைகள் அத்துணைக்கும் ஈடுகொடுப்பனவாய் அமைந்துள்ள சிறப்பைச் சொல்லப் புகுகின்ற அவர், "என் ஆண்மைகொள் ஆராய்ச்சிக்குரிய கருவூலமாய் விளங்குவன கலைஞர் கவிதைகள்" என்கிறார். (பக். 77)

தம் ஆராய்ச்சியை, 'ஆண்மைகொள்' ஆராய்ச்சி என்று சொல்லுகின்ற தன்வீறு கொண்ட தண்டமிழ்க் கொண்டல் நம் சஞ்சீவியார்.

> தாமரைத் தண்தா(து) ஊதி, மீமிசைச்,
> சாந்தின் தொடுத்த தீந்தேன் போலப்,
> புரைய மன்ற, புரையோர் கேண்மை; (நற். 1 : 2–4)

என்பன நற்றிணைப்பாடலடிகள். பொய்கையில் மலர்ந்த தாமரையின் தாதினை ஊதி, உயர்ந்த மலையிடத்து நின்ற சந்தன மரத்தில் வைக்கப்பெற்ற இனிய தேனைப் போல, உயர்ந்தோர் நட்பு என்றும் உயர்ந்ததேயாம் என்பது இவ்வடிகளின் பொருள்.

பூக்களுள் சிறந்தது, தாமரை. மலைமீது நிற்கும் மரங்களுள் சிறந்தது, சந்தனம். சிறந்த பூவின் இனிமையான தேன் உயர்ந்த சந்தன மரத்தில் சேர்ந்து மணம் பெறுவதுபோல, மனிதருள் மாமனிதராகிய கலைஞரின் படைப்புகளை, ஆய்வுலக மேருவாய் விளங்கும் சஞ்சீவியார் ஆய்ந்திருப்பது, 'சாந்தின் தொடுத்த தாமரைத் தீந்தேன்' ஆகும். இத்தமிழ்த்தேனை மாந்தி மகிழ்வோமாக!

நூல் ஆக்கம்	பேராசிரியர் முனைவர் ந. சஞ்சீவி
வகைமை	ஆய்வுக் கட்டுரை
வெளியீடு	அருள்வாழ்வுப் பதிப்பகம், சென்னை. (1989)

④

அருந்தமிழ் வளர்த்த ஆன்றோர்

தொகுப்பு நூல்

அருந்தமிழ் வளர்த்த ஆன்றோர் என்ற தலைப்பில், நண்பர் வலவன் அவர்கள், தமிழ்நாட்டில் வாழ்ந்து வருகின்ற புகழ்மிகு கவிஞர் அறுபத்து ஐவரின் கவிதைகளைத் தொகுத்து இந்நூலை வெளியிட்டுள்ளார்.

பாட்டுடைத் தலைவர்கள்

நூலில், தமிழ்க்கடல் மறைமலையடிகளும், மொழிஞாயிறு தேவநேயப் பாவாணரும் தனித்தமிழ் ஆல்களாய்க் கிளை பரப்பி நிற்கின்றனர். தமிழில் நாடகம் இல்லையென்ற குறையைப் போக்கிய நாடகத் தந்தை மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளையும், நாடக இலக்கணத்தை நற்றமிழிலாக்கித் தந்த திராவிட சாத்திரி பரிதிமாற்கலைஞரும் நாடகத்தமிழ் காத்த நல்லோராய் அரங்கேறியுள்ளனர். தம் உள்ளக் கருத்துகளுக்கு உணர்ச்சி உருக்கொடுத்துக் கவிதை வழங்கியுள்ள தேசியக்கவிஞர் பாரதியார், பாவேந்தர் பாரதிதாசனார், புலவரேறு பெருஞ்சித்திரனார் ஆகியோர் இசைத்தமிழ் முழங்கிய இனியோராய்க் காட்டப் பட்டுள்ளனர். மேடைப் பேச்சுக்கு மெருகேற்றியோராய்த் தமிழ்த்தென்றல் திரு.வி.க., சதாவதானி கலைக்கடல் செய்குத்தம்பிப் பாவலர், பேரறிஞர் அண்ணா ஆகிய மூவரும் படம் பிடிக்கப் பட்டுள்ளனர். இங்ஙனம் தமிழின்பாற் பற்றினராய பதின்மரைப் பாட்டுடைத் தலைவர்களாய்க்கொண்டு இந்நூல் விளங்குகிறது.

பாட்டுடைத்தலைவர் தன்மை

இந்நூலிலுள்ள கவிதையொன்றில், முனைவர் சாலை இளந்திரையன், கவிஞர்க்கு ஓர் இலக்கணம் அமைத்துள்ளார்.

வெறிகளெலாம் கும்மாளம் அடிக்கக் கண்டும்
'வீட்டுக்குள் நமக்கென்ன?' என்றி ருக்கும்

அறிவிலியோ கவியாவான்; அவற்றின் மீதில்
அனல்வீசும் அவனன்றோ கவிஞர் கோமான்! (பக். 67)

இந்த இலக்கணத்திற்கேற்ப, 'வீட்டுக்குள்ளேயே நமக்கென்ன?' என்று வாளா இருந்திடாமல் சமுதாயம் திருந்திடப் பாடுபட்ட, பாடுபடுகின்ற உத்தமர் பதின்மருக்கு நன்றிப் படையலாய் நூல் மிளிர்கிறது.

பாடியோர் தன்மை

நூலிலுள்ள மற்றொரு கவிதை

பூண்போட்ட உலக்கையோ நெல்லைக் குத்தும்;
பூமானோ உளக்கையால் நெல்லைக் குத்தி,
வீண்மொழியாம் உமிகளையே ஒதுக்கி, நல்ல
வெண்மணியாம் மொழியாலே விருந்து தந்தார். (பக். 126)

இப்பாடலுக்கேற்பவே, இந்நூலின் பாடல்களைப் புனைந்துள்ள புலவர்கள், உளமாகிய கைகளால், காட்சிகளாகிய நெல்லைக் குத்தி, வீண் மொழிகளாகிய உமிகளை அகற்றி, நல்ல கருத்து வெண்ணரிசிகளாலான சுவை விருந்தைப் படைத்து நம்மை உண்டு சுவைக்க அழைக்கிறார்கள். உண்போம்; மகிழ்வோம்.

பாட்டுடைத் தலைவர் பொலிவு

பாட்டுடைத் தலைவர்களின் உருவ அமைப்பைக் கவிஞர்கள் சொல்லோவியப்படுத்துகின்ற தன்மை அழகாயுள்ளது. மறைமலையடிகளாரை,

காவியுடை; செம்மேனி; பொன்னாற் செய்த
கண்ணாடி அணிந்தமுகம்; இனிய ஓசைக்
காவியங்கள் பலபயின்ற சிவந்த நாக்கு;
கற்றதிரு வாசகமே உறையும் நெஞ்சம் (பக். 11)

என்றும், பாவாணர் அவர்களை,

கறுத்த மேனி; வெளுத்த உள்ளம்;
கனிந்த அறிவு சான்றவர்; குறு
குறுத்த வாறு, புதிய சொற்கள்
கொள்கை நூற்கள் ஈன்றவர் (பக். 24)

என்றும், பாவேந்தர் அவர்களை,

பரந்திருக்கும் இவ்வுலகைப் பார்த்திருக்கும் வான்போலப்
பரந்திருக்கும் ஒளிநெற்றி; பவளஇதழ் மேலே,
வண்டிரண்டு தமிழறிய வந்தமர்ந்த தைப்போலே,
கொண்டிருப்பான் குறுமீசை... (பக். 76)

என்றும், பெருஞ்சித்திரனாரை,

நேர்வகிடும், கருத்தடர்ந்த முடியும், அன்பின்
 நிழலாடும் ஒளிவிழியும், அமைதி தோய்ந்த
சீர்முகமும், அருள்நோக்கும், கனிவு சான்ற
 சிரிப்புதிர்க்கும் நல்லிதழும், அரிமா வைப்போல்
ஊர்புகழும் குறுந்தாடி மீசை கொண்டும் (பக். 91)

என்றும் கூறுகின்ற பாடலடிகள் பாடப்பட்டோருடைய வடிவத்தை நம் மனத்தில் பதிய வைப்பனவாய் அமைந்து சிறக்கின்றன.

பாட்டுடைத்தலைவர் தொண்டு

பாட்டுடைத்தலைவர்கள், 'அருந்தமிழ்த் தொண்டு செய்த ஆன்றோர்' எனப் பாராட்டப்பட்டுள்ளனர். அவர்கள் செய்த தொண்டுகள் யாவை?

கவிஞர்கள் வாயிலாகவே அவற்றைக் கேட்போம்.

மறைமலையடிகளாரின் தமிழ்ப்பணியினால் தமிழ் மேன்மை நிலை எய்தியமை,

மேதகை யோரின் மாதமிழ்ப் பணியில்
மலர்ந்தது தமிழகம் மேனிலை; – மக்கள்
கிளர்ந்தனர் மகிழ்ச்சியில் பேரலை (பக். 8)

என்று பாடப்படுகிறது.

பாவாணர் கூறும் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் தமிழின் பெருமையை உலகுக்குணர்த்திடும் என்ற உண்மையை,

பாவாணர் செந்தமிழ்ச் சொற்பிறப்புப் பண்ணூலே
நாவாணர் வாழ்வின் முதுகெலும்பாம் (பக். 27)

என்ற அடிகளால் அறிகிறோம்.

தமிழில் நாடகம் இல்லாதிருந்த குறையை நீக்கும் முறையில் சுந்தரம்பிள்ளை மனோன்மணீயத்தை எழுதினார். அதனால்,

தமிழுக் கணிகலம் தருதற் கியைந்தே,
அமிழ்தினு மினிய அருந்தமிழ் நாடகம்,
மனோன்ம ணீயத்தை மகிழ்வாய்த் தந்தவன் (பக். 31)

என்று பாராட்டப்படுகிறார்.

அந்நாடகம்,

உயிரே எழுத்தாய், உணர்வே வரியாய்,
உடலே உலகாய், உலவிடும் ஞானமே
மனோன் மணீயம் (பக். 39)

'என்று வழங்கப்படும் சிறப்பைப் பெறுகிறது.

பண்டிருந்த நாடக இலக்கண நூல்களெல்லாம் மறைந் தொழிந்த நிலையில்,

முத்தமிழில் பூந்தமிழாம் நாட கத்தை,
முறையாக எழுதிடவே, இலக்க ணத்தை,
இத்தரையில் செய்திட்ட மேதை யாவார்! (பக். 44)

பரிதிமாற்கலைஞர் இவ்வாறு பாராட்டப்பெறுகிறார்.

வறுமையிலாச் சமுதாயம்
வையத்துள் காணவே,
சிறுமையெலாம் தகர்த்தெறிந்(து) (பக். 62)

சிந்தனையைத் தூண்டிவிட்டவனாகவும்,

முடியாது தமிழி லென்று
முயலாது போன குற்றம்... (பக். 58)

மடிந்தொழிய,

புத்தமைப்பில் கவிதை பாடிப்
புரட்சிக்கு விதையை ஊன்றி (யவனாகவும்) (பக். 59)

பாரதி காட்டப்படுகிறான். பாரதிதாசனோ,

முற்றிய மூடக் கொள்கைகள் மாய்ந்து,
தலைநிமிர்ந் துலகில் தமிழர்
நிலைபெறச் செய்தோனாய் (பக். 83)

நம் நெஞ்சில் இடம் பெறுகின்றார்.

தனித்தமிழ் இயக்கத்தில் மறைமலையடிகளாரைப் பின்பற்றிப் பாவாணரும், பின்னர் அவர் வழியில் பெருஞ் சித்திரனாரும் இயங்கி வருவதை நாடறியும்.

ஆதலின், சித்திரனார்,

கலப்பினை யொழித்துத், தூய
தமிழினைத் துவக்கி வைத்தே,
இலங்கிடும் மறைம லையின்,
பணியினைத் தொடரும் பாவோன் (பக். 96)

என்று பாராட்டப்படுகிறார்.

வாழ்வின் இறுதிவரை புலமை நலம் விளையப் பேச்சாலும் எழுத்தாலும் அரசியலிலும் தொழிலாளர் உலகிலும் சிறிதும் மடியின்றித் திரு.வி.க. அவர்கள் இயங்கி வந்ததை,

தளராத தமிழ்ப்பற்றும் புலமையிலும் மிக்கோன்;
தள்ளாடும் அகவையிலும் சோம்பலினை வென்றோன் (பக். 106)

என்ற அடிகள் விளக்குகின்றன.

தாம் ஒரு மகம்மதியராயினும், இராமலிங்கரின் திருவருட்பாவை மருட்பா என்று சிலர் தூற்றித் திரிந்தபோது அவர்கள் வாயடைக்குமாறு இராமலிங்கரின் பாக்கள் அருட்பாக்களே என மேடைதோறும் முழங்கி நிலைநாட்டிய செய்குதம்பிப் பாவலரைத் தமிழுலகம் மறக்கமுடியுமா?

மருட்கவியா இராமலிங்கன் அருட்கவிகள்? என்றார்த்து,
பொருட்பகுதி தனைவிளக்கிச், சொல்லாடி எதிர்நின்று,
அருட்கவியே இராமலிங்கன் அருளியநற் கவியெல்லாம்,
மருட்டாதீர்.... (பக். 134)

என்றுரைத்த பாவலரின் வாதங்களை நாடு மறந்திட முடியுமா?

பேரறிஞர் அண்ணா ஆட்சிப் பொறுப்பில் ஈராண்டுக் காலம் இருந்தவர்.

அதனால் நாட்டில்,

எண்ணற்ற பெயர்மாற்றம்; எவ்விடத்தும் புதுமாற்றம்;
ஏட்டிலெல்லாம் தமிழேற்றம்; எளிய தொழிலேற்றம்;
மின்சார விளக்கேற்றம்; மீனவரின் குடியேற்றம் (பக். 145)

என மாற்றங்களும் ஏற்றங்களும் நிகழ்ந்ததனைக் கவிஞர் உளங்குளிரப் பாடுகிறார்.

பாட்டுடைத்தலைவர் பெருமை

பாடப்படுபவர்களின் பெருமைகளையும் கவிஞர்கள் உள்ளவாறே உள்ளத் துள்ளலுடன் பாடியிருப்பதை நூலுள் காண்கிறோம். கதிரவன் தோன்றியதும் உலகைச் சூழ்ந்துள்ள இருள் அகல்வதுபோல, மறைமலையடிகளாரின் தோற்றத்தால் தமிழைச் சூழ்ந்திருந்த இருள் அகன்றோடியமையால் அடிகளாரைக் கவிஞர் கதிரவனாகவே காணுகிறார்.

காரிருளின் மூட்டத்தைக் கடிந்தே ஓட்டும்
கதிரொளியே, மறைமலையாய்ப் பிறந்த திங்கு. (பக். 15)

மேலும்,

பசுமைத் தமிழின் அங்கமவர்;
பத்தரை மாற்றுத் தங்கமவர் (பக். 6)

என்றும்,

தண்டமிழை நாட மறைமலையார் எம்மில்
தனியுணர்வை ஊட்டிட்டார் (பக். 14)

என்றும் கவிஞர்கள் பாராட்டுவதைக் காண்கிறோம்.

திரு.வி.க.வை நல்லவர் என்றழைக்கக் கவிஞர் விழை கின்றார். அவர் நல்லவர் என்று மட்டும் கூறினால் அது கவியாகுமா? ஆகவே,

நல்லோர்கள் எல்லோரும் நல்லவரே என்றழைக்கும்
கல்யாண சுந்தரனார் (பக். 116)

என்று புகழ்கிறார் ஒரு கவிஞர்; மற்றொரு கவிஞர்,

வள்ளுவத்தின் செந்நெறியில் வாழ்ந்ததனால், ஞாலத்தார்
உள்ளத்தில் எல்லாம் உறைகின்றார் (பக். 112)

என்கிறார். நமக்கென வாழ்ந்த திரு.வி.க.வை நாம் மறக்கமுடியுமா? ஆதலினால்,

தங்கமெனும் தமிழ்த்தென்றல் திரு.வி. க.வைத்
தலைவணங்காத் தமிழன்,நன்றி கொன்றோ னாவான் (பக். 114)

என்று கூறுவது நியாயந்தானே!

பாவாணர் அவர்கள்,

குற்றாலக் குளிர்ச்சியினைக் குலைத்தமிழில் காட்டிக்,
குலையாத கலைக்கோவில் எனத்தமிழை நாட்டும்,
கற்றாவின் கலையுடைய கலையாரும் மேதை,
கனிந்தமொழி யியலாய்வின் கதிரான சான்றோன். (பக். 21)

ஆதலினால், கவிஞர் ஒருவர்,

நேயமிகு பாவாணர் என்று சொலவே – எம்
நெஞ்சமெலாம் இன்பமது பொங்கி எழுமே (பக். 25)

எனப் பூரிப்புடன் பாடுகிறார்.

மற்றொரு கவிஞர்க்குப் பாரதிதாசன் என்றிடும்போதே உள்ளம் துள்ளுகிறது.

பாரதிதாசன் என்றிடும் போது
பாவலர் உள்ளமெல்லாம் – தமிழ்க்
காவலர் இல்லமெல்லாம் – நல்
பூரண இன்பம் பொங்குதல் உண்மை
பொய்மை இல்லையடா (பக். 69)

எனப் 'பூரண' இன்பத்தைப் புலப்படுத்திப் பாடுகிறார். பாரதிதாசன்,

தமிழ்வாழத் தன்வாழ்வை முழுதும் ஈந்தான்
தமிழோடு தமிழாகக் கலந்து விட்டான். (பக். 80)

ஆதலால் அவனை நினைக்கும்போது பாவலர்கட்கு உள்ளம் துள்ளுவது இயல்புதானே! பாரதிதாசன் புதுமையைப் பாடினான்

என்றாலும் தமிழின் வளங்கெடாது பாடினான்; எளிமையாய்ப் பாடினாலும் தமிழின் இயல்பு கெடாது பாடினான். அதனால் கவிஞர் ஒருவர்,

பாரதிதாசன் பாட்டில்
பாவளம் உயரும் நாட்டில் (பக். 74)

என்று குறிப்பிடுவது மிகவும் பொருத்தமானதாகும்.

அண்ணா அவர்களை எண்ணும்போதே அவருடைய பேச்சழகும், தமிழ்த்தொண்டும் நினைவுக்கு வருவதால் கவிஞர்கள்,

அதிமதுரப் பழந்தமிழை மேடைப் பேச்சால்
அழகொளிரக் காட்டியவர் அண்ணா அன்றோ? (பக். 149)

அடித்தளத்து மக்களெல்லாம் தமிழைத் தங்கள்
ஆருயிராய்க் கொண்டதுவும் அண்ணா வாலே; (பக். 154)

மாகுலந் தமிழினம் வாழ்ந்திட வேதன் – வாழ்
நாளெல்லாம் உழைத்த நல்லவர் அண்ணன்; (பக். 157)

அறிவார்ந்த நற்றமிழ்போல் வைய கத்தில்
அறிஞரண்ணா புகழென்றும் நிலைத்து நிற்கும்; (பக். 144)

என உள்ளத்தின் ஆழத்தே ஊற்றெடுக்கும் அன்பு வெள்ளப் பெருக்கோடு புகழாரம் சூட்டி வாழ்த்துகிறார்கள்.

தமிழர்கள் ஒரு வேளை பாரதியை மறந்தாலும், 'யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்' என்று தன் உயர்வைப் பாடிய பாரதியைத் தமிழ் மறக்குமா? மறக்கவே மறக்காது என்பதனைக் கவிஞர்,

தமிழர் மறந்தாலும் தமிழ்மற வாது
தவமிகும் தெய்விகக் கவிஞன் பாரதி (பக். 57)

என்று பாடிடக் காண்கிறோம்.

வாழ்கின்ற பாரதியின் நெஞ்சம் போல
வையத்தில் நாமெல்லாம் வாழ்ந்தி ருப்போம். (பக். 61)

வாழ்கின்ற பாரதியின் நெஞ்சம்போல் நாமும் நிலைபெற்று வாழ வேண்டுமென வாழ்த்துகிறது, கவிதையுள்ளம்!

மாடத்திற்குச் சித்திரமும், மாளிகைக்குக் கோபுரமும், ஆடமைத் தோள் மகளிர்க்கு அணிகளும் அழகொளியைக் கூட்டுவதுபோல் தமிழுக்கு அழகென்னும் புகழ் சேர்ப்போராய்ச் செய்குதம்பிப் பாவலர் விளங்கிய தன்மையை,

ஈடில்நலங் கெழுமியநல் லார மிழ்தாய்
இலகுகின்ற புனிதம்நிறைத் தமிழன் னைக்கோர்
நீடுபுக ழாயமைந்தோன் நேயன் செய்கு
தம்பிப்பா வலன்— (பக். 132)

என்ற அடிகள் மூலம் அறிந்து மகிழ்கிறோம்.

உருவகத்தில் தலைவர்கள்

கவிஞர்கள் தாம் பாடவந்த தலைவர்களை உருவகித்து மகிழும் நிலையை நூலின் பல இடங்களில் நாம் அறிகிறோம்.

ஏற்றமிகு கருத்தெல்லாம் எடுத்துரைத்த தோப்பு;
மாற்றாரின் பகைக்கெல்லாம் மலைபோலும் காப்பு; (பக். 3)

என மறைமலையடிகளைத் தோப்பாகவும் காப்பாகவும்,

தமிழ்க்கென வாழும் தமிழே (பக். 21)

எனப் பாவாணரைத் தமிழாகவும், மேலும் அவரையே

பைந்தமிழ்ப் பைங்கூழைப் பாதுகாக் கின்றநல்
விந்தையிற் பூத்தவோர் வேலியே யாவார் (பக். 23)

எனத் தமிழ்வயலுக்கு அமைந்த வேலியாயும்,

தனித்தனி முக்கனி காப்பியக் கரும்பு;
தாயகச் சோலையில் இவர்தமிழ்ச் சுரும்பு (பக். 98)

எனப் பெருஞ்சித்திரனாரைக் கரும்பாகவும் சுரும்பாகவும்,

கலைக்குருசில், மகாமதி; கவிதை மேரு;
கனித்தமிழில் முழங்குவதில் பிளிறும் யானை (பக். 127)

எனச் செய்குதம்பிப் பாவலரைக் குருசில், மதி, மேரு, யானை யாயும் என உருவகித்திருப்பதை நூலைப் படிப்போர் உணரலாம்.

கவிதை நயங்கள்

கவிதைக்குரிய நயங்கள் யாவும் நூலில் அமைவுற இசைந்துள்ளன. நல்ல உவமைகள் ஆங்காங்கே பளிச்சிடுகின்றன.

கார்மேகம் நன்னீரை வழங்கு தல்போல்
கற்கண்டாம் தமிழ்பொழிந்தார் அறிஞர் அண்ணா. (பக். 147)

மேடைப் பேச்சுக்கு, மேகம் நீரைப் பொழிதல் உவமையாக்கப் பட்டுள்ளது.

ஊட்டுகின்ற தாயெனவே உறவு காட்டி,
உயர்த்திட்டோன் நம்மை,அண்ணா உறுதி யாக. (பக். 159)

அவர் மக்களிடையே கொண்டிருந்த அன்புக்குத் தாய்ப்பாசம் உவமையாக்கப்படுகிறது.

காலை இருளை நீக்கிக் கதிரவன் தோன்றுகிறான். இருட்டிருந்த இடத்தில் வெளிச்சம் தோன்றுகிறது. இதற்கோர் அழகிய உவமை கூறப்பட்டுள்ளது.

கருங்குமரி சுடர்மகவைப் பெறுதல் போலக்
  கங்குலெனும் தாயீன்ற காலைச் சேய்— (பக். 117)

காரிருள் நீக்கிக் கதிரொளி தோன்றுவதற்குக் கரிய நிறமுடைய பெண், வெண்மை நிற மகவை ஈன்றெடுப்பது பொருத்தமான உவமையாகிறது.

படிப்பின் பயன் பகுத்தறிவு பெறுதலே. படித்தும் அறிவில்லாதவர்க்கு உவமை என்ன தெரியுமா? பழுத்தாலும் சுவைக்காத பழம்!

பழுத்தாலும் சுவைக்காத பழத்தைப் போலப்
  படித்தாலும் பகுத்தறிவே இல்லா மாந்தர் (பக். 162)

என்பது நெஞ்சில் நிறையும் உவமையாகிறது.

சொற்பொருள் அழகு

சொல்லழகும் கருத்தழகும் படிப்போரை ஈர்க்கும் வகையில் நூலின் பல இடங்களில் உள்ளன. சுந்தரம் பிள்ளையைப் பாடுகின்ற கவிஞர், அவர் பெயரிலுள்ள 'பிள்ளை' என்ற சொல்லைப் பாடலிலாண்டு நம்மை மகிழ்விக்கின்றார்.

சந்தனம்போல் உழைத்துழைத்துத் தேய்ந்த பிள்ளை;
  சரித்திரத்தில் நிலையாக நின்ற பிள்ளை;
சிந்தையுள்ளே வைத்துநிதம் போற்று கின்ற,
  சீரார்ந்த மனோன்மணியம் இவரின் பிள்ளை. (பக். 34)

பரிதிமாற்கலைஞரை இளங்கலையில் செயங்கொண்டா ராய், கல்வியிற் கம்பராய், சொல் நேர்மையில் நக்கீரராய், நாடக இலக்கணம் வகுத்ததில் பவணந்தியாய், தோலாத புலமையில் தொல்காப்பியராய், இன்னும் பண்டு வாழ்ந்த பெரும் புலவர் களாய்க் காண்பது பெருஞ்சுவை பயக்கிறது. (பக். 46-52)

இரக்காத கவிஞனவன்; எல்லாம் இறந்தாலும்
இறக்காத புலவனவன். (பக். 95)

இடையின ரகரமும் வல்லின றகரமும் பரிதிமாற்கலைஞர்க்குப் புகழ் சேர்க்கின்றன!

மற்றொரு கவிஞர் அனலிலே குளிர்ச்சியைக் காட்டுகிறார்.

அரசியலோர் அனற்பிழம்பு என்பார்; அந்த
அனற்பிழம்பில் குளிர்நிலவாய் நீயி ருந்தாய்! (பக். 163)

அண்ணாவை அனற்பிழம்பில் குளிர்நிலவாய்க் காணுகிறது கவிநெஞ்சு.

தாறுட னாடும் கதலிப், பலா,மா, கனிந்திடுதேன்,
ஆறுட னோடிக், கழனியில் சேரும், அழகுறுங்கோட்
டாறெனு மூருள், அருமைத் தமிழில், அருஞ்சுவைப்பாட்
டாறினை யோட்டி, அகமகிழ் விந்தவர் பாவலரே! (பக். 129)

தாறுடன் ஆடுகின்ற வாழை, பலா, மா ஆகியவற்றின் கனிகள் சிந்திடும் தேன், ஆற்றுடன் கலந்து ஓடி வயல்களில் பாயும் அழகிய கோட்டாறு என்னும் ஊரில் பாட்டாற்றினை ஓட்டி வரும் பாவலரே என்று பொருள்படும் இப்பாடல் அழகிய ஒன்று. ஆற்றூரில் தேனாறும் பாட்டாறும் போட்டியிட்டு வளங் கொழிக்கின்றன.

உலகில் பிறந்தார், இறந்தார் என்பாருடைய வாழ்க்கை முழு வாழ்க்கையாகாது.

காலமகன் வரலாறோ
கையேடாய் ஆகிடாமல்
சீலமுடன் சரித்திரத்தில்
சீரிடத்தைப் பெற்றதடா! (பக். 108)

பெரியோர் வாழ்க்கை, வரலாறு மட்டுமன்றி வழிகாட்டும் ஒளிவிளக்குமாகிறது என்பதனை,

அன்னவரின் வாழ்க்கையெலாம்
தென்னகத்தின் வரலாறு;
பின்நடக்கும் தோழர்க்கு
வழிகாட்டும் ஒளிவிளக்கு; (பக். 167)

என்று குறிப்பிடுவதைக் காணலாம்.

பாடப்படுபவர்கள் எழுதியுள்ள நூல்களைப் பாட்டோடு இணைத்துப் பாடுவதும் ஓர் அழகே! அண்ணா அவர்கள் பேசிய பேச்சுகள் நூல் வடிவில் பல உள்ளன. அவற்றுள் நாடும் ஏடும், நல்ல தீர்ப்பு என்பன முக்கியமானவை. இதைக் கவிஞர்,

'நாடும் ஏடும்' நமக்களித்தார்;
'நல்ல தீர்ப்பு'ம் வழங்கி வந்தார்; (பக். 140)

என்று குறிப்பிடக் காணலாம். பாவேந்தர் பாரதிதாசன் சஞ்சீவி பர்வதத்தின் சாரலைப் பாடியுள்ளார். இதைக் கவிஞர்,

சஞ்சீவி பர்வ தத்தால்
தமிழனை உயிர்க்க வைத்தார் (பக். 87)

என நயமாய்ப் பாடுகிறார். இராமாயணப்பாடலில் வரும் சஞ்சீவி பருவதம் இலக்குவனின் மயக்கத்தைப் போக்கி உயிர்ப்பிக்க வந்ததாகப் புராணிகர் கூறுவர். பாரதிதாசனின் சஞ்சீவி பருவதமோ மயங்கிக் கிடக்கும் தமிழனை உயிர்க்க வைக்கிறது எனக் கவிஞர் கூறுவது அறிந்து இன்புறத் தக்கது.

இலக்கணச் செய்திகள்

இலக்கணச் செய்திகளை எடுத்தியம்புகின்ற பாடல்களும் உள்ளன.

பரிதிமாற்கலைஞர் குற்றியலுகர இலக்கணத்தில் பெரும் புலவராய்த் திகழ்ந்தார் என்பதைக் கவிஞர்,

கூற்றுவன்போல் நடுங்கவைக்கும், குற்றுகர
இலக்கணத்திற், குன்றைப் போல
ஆற்றலுடன் திகழ்ந்தார்... (பக். 54)

என்று குறிப்பிடுகிறார். குற்றுகரம் கூற்றுவனைப்போல் நடுங்க வைக்கக்கூடியதாய் இருக்கிறது!

அண்ணாவைப் பாடுகின்ற கவிஞர் அவரை,

கனிச்சீரில் பேர்விளங்கும் துரையே! அன்புக்
கைப்பிடியில் அகப்படுமோர் வரையே! (பக். 165)

என்கிறார். அண்ணாதுரை - நேர் நேர் நிரை - தேமாங்கனி. கனிச்சீரிலும் அவர் தேமாங்கனியாய்த்தான் திகழ்கிறார்!

சொல்லாக்கம்

வளரும் மொழியில் புதிய புதிய சொற்கள் ஆக்கப்படுவது வரவேற்கப்பட வேண்டிய ஒன்று. திரு.வி.க.வைப் பாடுகின்ற கவிஞர்,

தொழிலாளர் வாழ்வைச் செழிப்பாக்க, அந்நாள்
தொழிற்சங்கம் கண்ட முதற்சங்கன் (பக். 109)

என்கிறார். சங்கத்தைத் தோற்றுவித்தவரைச் சங்கன் என்று வழங்குவது புதிய சொல்லாக்கமாய்த் திகழ்கிறது.

வளர்ச்சிக்கான சில குறிப்புகள்

இங்ஙனம் பல்வேறு சிறப்புகளைக் கொண்டுள்ள நூல் மேலும் சிறப்படைய அடுத்த பதிப்பில் மேற்கொள்ள வேண்டிய ஓரிரு கருத்துகளும் உண்டு. ஆங்காங்கே காணப்படுகின்ற

அச்சுப்பிழைகள் தவிர்க்கப்படலாம். கவிஞர் சிலரின் நிழற்படங்கள் அச்சிடப்பட்டுள்ளன; சிலருக்கு இல்லை. பதிப்பு பொலிவுடன் விளங்க எல்லாருடைய படங்களும் ஒரே அளவில் இருக்குமாறு அச்சிடுதல் சிறப்பாம். தொகுப்பாசியர் இதில் கவனம் செலுத்த வேண்டும். ஒரே ஆசிரியர் எழுதும் நூலில் ஓரிரு இடங்களில் தொய்வு ஏற்படலாம்; அந்நிலை ஏற்படின் அதைத் தவிர்க்கத் தொகுப்பாசிரியரால் முடியும் அன்றோ?

வாழ்த்து

நற்றமிழ் வாணர்களை நாட்டுக்குப் பாட்டிலே எடுத்துக் காட்ட முயன்று இந்நூலினைத் தொகுத்துள்ள தொகுப்பாசிரியர்க்குப் பாராட்டுகள்.

முயற்சி வெல்க! நலம் விளைக!!

நூல் ஆக்கம்	ஓவியப் பாவலர் மு. வலவன்
வகைமை	கவிதைத் தொகுப்பு
வெளியீடு	சுமதி பதிப்பகம், சென்னை. (1976)

5

கேட்டதும் கிடைத்ததும்

திருக்குறட் கருவூலம்

பதின்கவனகர் திரு. இராமையா அவர்கள் திருக்குறள் கருவூலமாய்த் திகழ்ந்து வந்தார். அள்ள அள்ளக் குறையாத அக்கருவூலத்திலிருந்து தமிழ் மக்கள் அரும்பெரும் கருத்துகளை - குறள் விளக்கங்களை - பெற்று வந்தனர். அவர் மறைவு தமிழகத்திற்குப் பேரிழப்பு.

கவனகர் திரு. இராமையா அவர்களுடைய கவனக நிகழ்ச்சிகளில் அன்பர்கள் கேட்ட வினாக்களுக்கு அவர் அளித்த மறுமொழிகளைத் தொகுத்து இந்நூலை அவர் மைந்தர் கனகசுப்புரத்தினம் உருவாக்கியுள்ளார். திரு. கனகசுப்புரத்தினம் அவர்களும் தந்தையாரைப் போன்றே நாடு போற்றும் பதின்கவனகராய் விளங்கி வருகிறார். வள்ளுவர் சொன்ன, தந்தை மகற்கு ஆற்றும் நன்றிக்கும், மகன் தந்தைக்கு ஆற்றும் உதவிக்கும் தக்க எடுத்துக்காட்டுகளாய்த் திரு. இராமையா அவர்களையும் திரு. கனகசுப்புரத்தினம் அவர்களையும் நாடு கண்டு மகிழ்கிறது.

வேடிக்கை வினாக்கள்

திரு. இராமையா அவர்கள் வினாக்களுக்கு அளித்த மறுமொழிகள் குறட்பாக்களுக்குச் சிறந்த விரிவுரைகளாய் அமைந்துள்ளன. அவர் சிறந்த திருக்குறள் உரையாசிரியராகவே விளங்கியிருக்கிறார்.

இந்நூல், வினா விடை வாயிலாய்த் திருக்குறளுக்கு விளக்கம் தருகிறது. சில வினாக்கள் வேடிக்கையாய்க் கேட்கப் பட்டவைபோல் அமைந்துள்ளன. கேட்பதற்கு வேடிக்கையாய்த் தோன்றினாலும் அவற்றிற்கு விடை கவனகரால் மட்டுமே தரமுடியும். அதுவும், திருக்குறளை எழுத்து எண்ணிப் படித்த திரு. இராமையா அவர்களால்தான் தரமுடியும் என்பதை நன்கு உணர முடிகிறது.

கவனகரிடம் கொம்பு முளைக்காத குறள் - அஃதாவது, 'கொம்புக்குறி' இடம் பெறாத குறள் - ஒன்றைக் கேட்கிறார், நண்பர் ஒருவர். "ஒன்றென்ன? 17 தருகிறேன்" என்கிறார், கவனகர். 1330 அருங்குறட்பாக்களுள் கொம்பு இடம் பெறாத குறட்பாக்கள் 17 எனத் துல்லியமாய்க் கணக்கிட்டுச் சொல்கிறார். அதே போன்று கால் இல்லாத குறளாக, 'கற்க கசடற' எனும் குறளை எடுத்துக் காட்டுகிறார். இவற்றைப் படிக்கும்போது அவரது கவனகத் திறமையை எடுத்துரைக்கச் சொற்கள் இல்லாமல் தவிக்கிறோம் என்பது உண்மை.

கருத்துநிலை வினாக்கள்

இதே போன்று, நீட்டலளவை, நிறுத்தல் அளவைக்கு ஒரு குறள், விதையில்லாப் பழம் உள்ள குறள், தோல்வியே வெற்றி ஆகின்ற குறள், ஐந்து உவமைகள் இடம் பெறும் ஒரு குறள், ஒரே எழுத்தைக் கடைசிச் சீராய்க் கொண்டு முடியும் குறள், ஈற்றடியில் குறைந்த எண்ணிக்கைகொண்ட எழுத்துகள் வரும் குறட்பாக்கள், மூன்று பகா எண்கள் இடம் பெறும் ஒரு குறள், தொடங்கிய சொல்லைக் கொண்டே முடியும் குறள், கன்னிப் பெண்ணுக்குத் திருமணம் செய்யாமல் வேடிக்கை பார்க்கும் குறள், சுண்ணாம்பு வரும் குறள், விக்கல் வரும் குறள், நாள் - மலர் - காசு - பிறப்பு என்னும் வாய்பாட்டில் முடியும் குறட்பாக்களின் எண்ணிக்கை, சொல்லும்போது உதடுகள் ஒட்டாத முறையில் எழுதப்பெற்றுள்ள குறட்பாக்கள் எவையெவை என்பன போன்ற வினாக்களுக்கு அவர் தயக்கமின்றித் தந்துள்ள விடைகள் அவர் திருக்குறளில் எவ்வளவு ஆழங்கால் பட்டிருக்கிறார் என்பதை நமக்கு அறிவிக்கும் சான்றுகளாய் விளங்குகின்றன.

1) ஐந்து உவமைகள் இடம் பெறும் ஒரு குறள்

முறிமேனி, முத்தம் முறுவல், வெறிநாற்றம்,
வேல்உண்கண், வேய்த்தோள், அவட்கு. (குறள் 1113)

இந்தக் குறளில் ஐந்து உவமைகள் வருகின்றன. காதலன் காதலியை வருணிக்கும் குறள் இது.

மாந்தளிர் வண்ண மேனி!

வெண்முத்துப்போல் ஒளிமிக்க பற்கள்!

வெறியூட்டும் நறுமலர் மணம்!

வேல் போன்ற கூர்மையான கண்கள்!

மூங்கில் போன்ற தோள்கள்!

இவை அந்த ஐந்து உவமைகள் எனச் சொல்லிவிட்டு,

இந்த ஐந்து உவமைகளும் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐவகை நிலங்களின் கருப் பொருள்களாகவும் அமைந்திருப்பது இன்னும் அழகு என்ற விளக்கமும் தருகிறார்.

பயிர்களை விளைய வைக்கும் நிலத்தையும், உயிர்களை விளைய வைக்கும் நிலத்தையும் (பெண்களையும்) இப்படி ஒன்றிணைத்துக் காட்டியிருப்பது நுட்பமான சிந்தனையாம்.

2) ஒரே எழுத்தில் முடியும் குறள்

தொடிற்சுடின் அல்லது காமநோய் போல
விடிற்சுடல் ஆற்றுமோ தீ. (குறள் 1159)

3) ஒரே குறளில் மூன்று பகா எண்கள் வரும் குறள்

ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து. (குறள் 126)

இந்தக் குறளில் ஒன்று, ஐந்து, ஏழு என்னும் மூன்று பகா எண்கள் வருகின்றன.

வினாக்களைக் கேட்டதும் ஒருமணி நேரம், இரண்டு மணி நேரம் அல்லது ஒன்றிரண்டு நாள்கள் எடுத்துக்கொண்டு, பின்னர் மறுமொழி சொல்வதன்று கவனகம். கவனகர் மேடையில் இருக்க, எதிரே இருப்பவர் வினா கேட்க, கேட்ட அடுத்த கணமே விடை சொல்வதுதான் சிறப்பினும் சிறப்பு; நினைவகக் கலையின் நெடுமுடி.

சொல்பயில் வினாக்கள்

ஒன்று, இரண்டு, மூன்று என்னும் சொற்கள் இடம்பெற்றுள்ள குறட்பாக்கள் எவை, 'பாவி' என்னும் சொல் வரும் குறட்பா எது, 'காரறிவு' என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ள குறட்பா எது, எழுமை என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ள குறள் எது என்பன போன்று வினவிய வினாக்களும் நூலுள் உள்ளன. அவற்றுக் கெல்லாம் தங்கு தடையின்றி உடனுக்குடன் விடையளிக்கும் கவனகத் திறனை நேரில் நாம் கண்டுள்ளோம்; அவர் விடைகளை இந்நூல் நமக்கு எழுத்தில் வழங்குகிறது.

பொதுமை நோக்கு

அருவினை என்ப உளவோ கருவியான்
காலம் அறிந்து செயின் (குறள் 483)

என்னும் குறளில் வள்ளுவர், 'கருவி' என்றாரே தவிர, இன்ன கருவி என்று சொல்லவில்லை. தாம் எடுத்துக்கொண்ட பணிக்கு ஏற்ற கருவியால் அதைச் செய்து முடிக்க வேண்டும் என்கிறார், வள்ளுவர். கருவி என்ற இடத்தில், 'கலப்பை'யிலிருந்து, 'கணினி' வரை எதை வேண்டுமானாலும் பொருத்திக்கொள்வது நமது பணி என வள்ளுவரின் பொதுமை நோக்கைக் கூறுவார், டாக்டர் வா.செ. குழந்தைசாமி.

> அற்றார்க்கொன்று ஆற்றாதான் செல்வம் மிகநலம்
> பெற்றாள் தமியள்மூத் தற்று (குறள் 1007)

எனும் குறளுக்கு விளக்கம் சொல்கின்ற கவனகர், இந்தப் பொதுமை நோக்கை நன்கு விளக்குகிறார். "இந்தக் குறளை அற்றார்க்கு எனத் தொடங்கி உள்ளார். ஆனால், என்ன அற்றார்க்கு என்பதைக் கூறவில்லை. உண்ண உணவு அற்றார்க்கு, இருக்க இடம் அற்றார்க்கு, உடுக்க உடை அற்றார்க்கு, உழுவதற்கு நிலம் அற்றார்க்கு, பிழைக்கத் தொழில் அற்றார்க்கு.... இப்படி எதை வேண்டுமானாலும் போட்டுப் பார்த்துக்கொள்ளலாம். மீதிக் குறள், அத்தனைக்கும் இடம் கொடுக்கும் என்கிறார், பதின் கவனகர்.

குறளில் முரண் இல்லை

'ஊழையும் உப்பக்கம் காண்பர்' என்கிறது, ஒரு குறள். 'ஊழிற் பெருவலி யாவுள?' என்கிறது, மற்றொரு குறள்.

'உழுதால் போதும்; எருவே வேண்டா' என்கிறது, ஒரு குறள். மற்றொன்றோ, 'உழுவதைக்காட்டிலும் எருப்போடுவது முக்கியம்' என்கிறது.

இவ்வாறான குறட்பாக்கள் ஒன்றுக்கொன்று முரண்படுவனபோல் மேல் எழுந்தவாரியாக நோக்கினால் தோன்றுகின்றன. ஆனால், ஆழ நோக்கின் அவற்றின் பொருட் பொருத்தத்தை உணரலாம் என்பதைத் தக்க சான்றுகளுடன் விளக்கும் கவனகர், "முரண்பாடு நம்மிடமே! திருவள்ளுவரிடமா?" என நயமாய் நம்மைத் திருப்பிக் கேட்டுவிடுகிறார்!

நகைச்சுவை உணர்வு

நகைச்சுவை, கவனகருக்குக் கைவந்த கலையாய் இருக்கிறது. நன்செய், புன்செய், புறம்போக்கு என்று நிலத்தில் பலவகை உள்ளன. வள்ளுவப்பெருந்தகை பெண்களை அப்படி வகைப்படுத்திக் காட்டுவதாய்க் கவனகர் குறிப்பிடுகிறார்.

செல்லான் கிழவன்.... (1039) எனத் தொடங்கும் குறளை விளக்கி, அக்குறள் கூறும் பெண், புன்செய் நில இயல்பினள் என்றும், இலம் என்று அசைஇ இருப்பாரை.... (1040) எனத் தொடங்கும் குறளை விளக்கி, அக்குறள் கூறும் பெண் நன்செய் நில இயல்பினள் என்றும் ஒரு வினாவிற்கு விடை பகர்கிறார்.

உடனே ஒருவர், "நன்செய், புன்செய்பற்றிக் கூறினீர்கள்; புறம்போக்குபற்றிச் சொல்லவில்லையே" என்றதும், கவனகர் அவரிடம், "ஏன் அதைக் கைப்பற்றப்போகிறீர்களா?" என்று கேட்கிறார். இதைவிட இயல்பான நகைச்சுவை வேறு என்ன இருக்க முடியும்? பிறகு விடையாக, "பெண்ணின் புறம்போக்கு இயல்புக்கு, 'வரைவின் மகளிர்' என்னும் ஓர் அதிகாரமே திருக்குறளில் ஒதுக்கப்பட்டிருக்கிறது. பார்த்துக்கொள்ளுங்கள்" என்று விடையும் தருகிறார்.

உப்பு வரும் குறள் வேண்டுமென்கிறார் ஒருவர். உடனே கவனகர், "கரிக்கின்ற உப்பு வேண்டுமா, இனிக்கின்ற உப்பு வேண்டுமா?" எனக் கேட்டு, அவையில் பெரிய நகைப்பொலியை உண்டாக்கிவிடுகிறார். வினாக் கேட்பவரோ, "இருவகை உப்பும் வேண்டும்" என்கிறார். தராமல் விடுவாரா, கவனகர்? ஊடல் உப்பைக் கரிக்கும் உப்பு என்றும், நுதல் வெயர்ப்பக் கூடலில் தோன்றும் உப்பை இனிக்கும் உப்பு என்றும் விளக்கி, அவையிடையே நகைச்சுவையோடு இருவகை உப்பினையும் தூவிவிடுகிறார்.

சுவைபடச் சொல்லுதல்

அவையில் ஒருவர் கவனகரிடம் புதிர் போட்டார். "ஐயா! மெய் தீண்டலில் உடலுக்கு இனிமை இருந்தது! ஆனால், தீண்டியவள் மனைவி அல்லள்!" என்கிறார். உடனே கவனகர், "மனைவி அல்லளென்றால் மக்களைத் தீண்டி இருப்பீர்கள்!" என்று திறமையாகப் புதிரை அவிழ்க்கிறார்.

> மக்கள்மெய் தீண்டல் உடற்கின்பம்; மற்(று)அவர்
> சொற்கேட்டல் இன்பம் செவிக்கு. (குறள் 65)

குறள் சரிதானா? என வினாக் கேட்டவரையே வினவுகிறார். இத்தகைய இனிமையான சாதுரியம் நிறைந்த மறுமொழியைக் கேட்க நம் காதுகள் கொடுத்து வைத்திருக்க வேண்டும்!

வினாக் கேட்பவரையே வியக்கச் செய்தல்

ஒருவர், "ஐயா! நோயும் அதற்கு மருந்தும் ஒரே குறளில் வருகின்றன. அது எது?" என்று கேட்கிறார். கவனகர் உடனே

அவரை, "நீங்கள் என்ன ஓமியோபதி மருத்துவரா?" என்கிறார். அவரும், "ஆம் ஐயா, சரியாகச் சொல்லிவிட்டீர்கள்" என்று மகிழ்கிறார். "அதுதானே பார்த்தேன்! எது நோயை உண்டாக்குமோ அதுவே நோயைக் குணப்படுத்தும் (Like Cures Like) என்பது ஓமியோபதி கூறும் ஒப்பற்ற தத்துவம். இதைக் கி.பி. 1755இல் ஜெர்மனி நாட்டின் ஹானிமன் (Dr. Hahnemann) என்ற மருத்துவ அறிஞர் உணர்ந்து உலகிற்கு மெய்ப்பித்துக் காட்டினார்" என ஓமியோபதிக்கு விளக்கம் சொல்லி, வினாக் கேட்டவரையே வியக்கச் செய்கிறார்.

தூய தமிழ் நாட்டம்

தூய தமிழ்ச்சொற்களைக் கையாள்வதில் கவனகர் வல்லவராய் இருக்கிறார். ஈர்ப்பாற்றல் (Magnetic force), விழிப்புணர்வு (Alertness), மாற்றாள் (Substitute), இணைப்புருகி (Fuse), உயிர் ஆற்றல் உறுப்புகள் (Vital Organs) என அவர் ஆண்டிருக்கும் சொற்கள் சான்று பகர்வனவாய் உள்ளன.

எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்பது அவர் நோக்கமாய் இருக்கிறது. மாணவி ஒருத்தி வினா கேட்கிறாள். கவனகர், "உன் பெயர் என்ன?" என்று அந்த மாணவியிடம் கேட்கிறார். "நிர்மலா" என்கிறாள், அப்பெண்.

"உன் பெயருக்குப் பொருள் தெரியுமா?" - இது கவனகர் வினா. "தெரியாது, ஐயா!" - இது மாணவியின் மறுமொழி. "மலம் என்றால் என்னவென்றாவது தெரியுமா?" - இது கவனகர் வினா. அனைவரும் சிரிக்கின்றனர். கவனகர் மேலும் சொல்கிறார் : "நான் பகடி செய்து சிரிப்பதற்காக இதைச் சொல்லவில்லை. மலம் என்றால் கழிவு அல்லது அழுக்கு என்று பொருள். நிர்மலம் என்றால் அழுக்கற்றது என்று பொருள். எனவே, நிர்மலா என்ற பெயருக்குத் 'தூயவள்' என்று வைத்திருக்கலாம். அதை விட்டுவிட்டு வடமொழியில் பெயர் வைக்கப்போய் மலமற்றவள், அழுக்கற்றவள் என்று மலத்தையும் அழுக்கையும் ஒட்டி வைக்க வேண்டிய நிலையல்லவா ஏற்பட்டுவிட்டது. இப்போது சொல், உனக்கு நிர்மலா என்ற பெயர் பிடித்திருக்கிறதா, தூயவள் என்ற பெயர் பிடித்திருக்கிறதா?" என்கிறார். மாணவியும், "தூயவள் என்ற பெயரே எனக்கு வேண்டும்" என்று கூறுகிறாள். இவ்வாறு கவனகர் நிகழ்ச்சியூடே,

> **தமிழரின் தமிழ்க்குழந்தை**
> **தமிழ்ப்பெயர் பெறுதல் வேண்டும்**

என்னும் சிந்தனையையும் தூண்டிவிடுகிறார்!

பல்துறைப் பயிற்சி

கவனகர் பல கலைகளில் பயிற்சி உடையவராய் இருக்கிறார். இலக்கிய அறிவு, இலக்கண அறிவு, கணித அறிவு, கவிதை புனையும் ஆற்றல், அறிவியல் திறன், மனத்தை ஒரு நிலைப்படுத்தும் திறன் என்பன சிறந்த கவனகருக்கு இருக்க வேண்டிய பண்புகளாகும். இவை அனைத்திலும் திரு.இராமையா அவர்கள் தன்னிகரற்றவராய் விளங்கித் திகழ்ந்தார். அவர், 'மக்கள் மெய் தீண்டல்...' என்னும் குறளுக்கு உளவியல் முறையிலும், 'ஆரா இயற்கை அவா நீப்பின்...' என்னும் குறளுக்கு அறிவியல் முறையிலும், 'நோய்நாடி நோய் முதல்நாடி' என்னும் குறளுக்கு மருத்துவ முறையிலும் விளக்கம் தந்திருப்பதும், சித்தாந்தக் கருத்துகளை விளக்குவதும் மேற்சொன்ன கூற்றுக்குச் சான்றுகளாம்.

நய உரை

திருக்குறள் தொடர்களுக்கு அவர் சொல்லும் விளக்கம் நம் உள்ளம் கொள்ளை கொள்வதாம்.

பாலொடு தேன்கலந் தற்றே; பணிமொழி
வாலெயிறு ஊறிய நீர். (குறள் 1121)

பால், தேன், நீர் என்ற மூன்று நீர்மங்களும் இக்குறளில் நிறைந்து வருகின்றன. அது மட்டுமன்று. எப்போதும் தலைவனிடம் பணிவாய்ப் பேசும் மென்மொழியாளின் நாவில்தான் இந்த இனிய நீர்மங்கள் சுரக்கும் என்பது திருவள்ளுவர் சொல்லும் இரகசியக் குறிப்பு" என்கிறார், கவனகர். பணிமொழி என்பதற்கு அவர் கொண்ட பொருள்நயத்தினை இங்குக் காண முடிகிறது.

'குழலினிது யாழினிது'.... என்ற குறளில், 'குழல்' என்பது ஆண் மகவையும், 'யாழ்' என்பது பெண் மகவையும் குறிக்கும் என்ற அவரது நுண்மையான விளக்கம், குழலினும் யாழினும் இனிமையானதாய் இனிக்கிறது.

ஆராய்ச்சித் திறன்

குறளில், 'ஒன்பது' என்ற சொல் எண்ணுப் பெயரில் இல்லை என்பதைச் சொல்லி, 'தொண்டு' என்பது ஒன்பதைக் குறிக்கப் பண்டு வழங்கி வந்தது என்பதை ஆராய்ச்சித் திறனோடு தெளிவு படுத்துகிறார்.

மனிதனுக்கு ஆறாவது அறிவு மட்டும் அன்று, ஏழாவது, எட்டாவது அறிவுங்கூட உண்டு எனக் குறிப்பிடுகிறார். எதிரில் உள்ளவரின் மனத்துடன் நம் மனத்திற்குத் தொடர்பு ஏற்படுத்திக்

கொண்டு அவர் மனத்தின் ஓட்ட எண்ணங்களை அறியும் அறிவை ஏழாவது அறிவு என்றும், எங்கிருந்து எதையும் அறியும் வாலறிவை (வியாபக அறிவு - Universal Sense) எட்டாவது அறிவு என்றும் நமக்குப் புலப்படுத்துகிறார்.

தமிழ் என்ற சொல் திருக்குறளில் இடம் பெறவில்லை என்றாலும் முதல் குறளை மொழி முதல் எழுத்தாகிய, 'அ'கரத்தில் தொடங்கி, இறுதிக் குறளைத் தமிழ் நெடுங்கணக்கின் இறுதி எழுத்தாகிய, 'ன்' இல் முடிந்துள்ளமை நமக்குத் தமிழை நினைவுபடுத்துகிறது என்கிறார்.

ஆகும் வழியும் போகும் வழியும் (வாழும் வழி)

ஒருவர் கவனகரிடம், "ஐயா, நான் வரவிற்கு மிஞ்சிய செலவாளி; என்னைப்பற்றித் திருவள்ளுவர் என்ன சொல்கிறார்?" என்று கேட்டார்.

உடனே கவனகர், "நீங்கள் இயற்கை விதிக்கே முரண்பட்டவர்" எனப் பளிச்செனக் கூறினார். பிறகு, அவருக்கு விளக்கம் சொல்கிறார் :

ஒருவரது வருமானம் அதிகமா குறைவா என்பது பிரச்சினையன்று; அவரது செலவு, வருமானத்திற்குள் அடங்கி யிருக்கிறதா, அன்றா என்பதுதான் பிரச்சினை. அடங்கியிருந்தால், வாழ்க்கை இயக்கத்தில் தடை ஏற்படாது. அடங்காது; செலவு வருமானத்தை மிஞ்சிவிட்டால் உறுதியாய் இந்த இயக்கம் தடைப்படும்."

இவ்வாறு கூறியவர் இதற்கோர் எடுத்துக்காட்டும் தருகிறார். கிணற்றில் நீர் இறைக்கும் எந்திரத்தைப் (Pumping motor) பார்க்கிறோம்.

எந்திரத்தின் கீழே, கிணற்றிலிருந்து நீரை உறிஞ்சும் குழாய் (Suction pipe) இருக்கும். மேலே, நீரை வெளியேற்றும் குழாய் (Delivery pipe) இருக்கும். இதில்

உறிஞ்சும் குழாய்தான் ,வருமானம் - ஆகாறு.

வெளியேற்றும் குழாய்தான் ,செலவு - போகாறு.

உறிஞ்சும் குழாய் மூன்றரை அங்குலம் விட்டம் உடையதென்றால், வெளியேற்றும் குழாய் அதைவிடக் குறைவாய் மூன்றங்குலம் அல்லது மூன்றேகால் அங்குலம் விட்டமுள்ளதாய் இருந்தால்தான் எந்திரம் வேலை செய்து தண்ணீரை உறிஞ்சி வெளியேற்றும். மாறாக, உறிஞ்சும் குழாய் சிறியதாகவும்

வெளியேற்றும் குழாய் பெரியதாகவும் இருந்தால் எந்திரம் உறிஞ்சி வெளியேற்றாது இயக்கம் தடைப்பட்டுவிடும். எனவேதான், எம்பெருமான் திருவள்ளுவர் இப்படி எச்சரிக்கிறார்.

ஆகாறு அளவிட்டி தாயினும் கேடில்லை;
போகாறு அகலாக் கடை. (குறள் 478)

(ஒருவர் வருவாய் சிறிதாயினும், செலவு அதனைவிடப் பெரிதாய் இல்லாது இருக்குமாயின் அவர்க்குக் கெடுதல் இல்லை.) வினா கேட்டவர் வரவைவிடச் செலவைக் குறைத்திருப்பார் என்பது உறுதி.

திருவள்ளுவரும் உலக அறிஞர்களும்

அறிவுடையவர்கள் பெருகினால் உலகம் மேன்மையடையும் என்கிறார், பிளேட்டோ. குடியரசு நோக்குடையவர்கள் பெருகினால் உலகம் மேன்மையடையும் என்கிறார், ரூசோ. பொதுவுடைமை நோக்குடையவர்கள் பெருகினால் உலகம் மேன்மையடையும் என்கிறார், காரல் மார்க்சு. இவையெல்லாம் கண்பார்வை இல்லாதவர்கள் யானையைத் தடவிப் பார்ப்பது போன்றது. உலகிலேயே திருவள்ளுவர் ஒருவர்தாம் மாந்த இனத்திற்கு முழுமையான, அறிவுப்பூர்வமான, உணர்வுப்பூர்வமான பரிமாணம் சொன்னவர். அஃதாவது, சான்றாண்மையுடையவர்கள் பெருகினால் உலகம் மேன்மையடையும் என்பது நம் பெருந்தகை கூறும் ஒரே கோட்பாடு. அதுவே உண்மையுங்கூட.

இவ்வாறு உலக அறிஞர்களுடன் ஒப்பிட்டுத் திருவள்ளுவரின் உயர்வை வெகுவாய் உயர்த்திக் காட்டுகிறார், திருக்குறள் கவனகர்.

தம்மைப்பற்றி

தம் கண் பார்வையற்ற நிலையைச் சில குறள்களோடு பொருத்திக் கவனகர் விளக்கம் தருவது நம் கண்களில் நீரை நிச்சயம் கசியச்செய்யும்.

கருமணியிற் பாவாய்நீ போதாய்யாம் வீழும்
திருநுதற்(கு) இல்லை இடம். (குறள் 1123)

காதலியைக் கண்டு மகிழ்ந்த தலைவன், "என் காதலியை எனக்குக் காட்டிய என் கண்மணியின் பாவையே, நீ போய் வா" என்று சொல்வதாய் விளக்கம் சொல்லிவிட்டுக் கவனகர் உட்பொருளுக்குச் செல்கிறார். "எனக்கு 30 வயதில் கண் பார்வை மறைந்துவிட்டது. அப்போது என் அருமை மனைவி சீதையம்மாளுக்கு 23 வயது. அஃதாவது, அழகும் இளமையும் நிறைந்த என் மனைவி என்ற பாவையைக் கண்ணில் நிறைத்ததும்

என் கருமணியின் பாவை போய்விட்டது; எனக்கு இப்போது வயது அறுபது. என் மனைவிக்கு ஐம்பத்து மூன்று. மற்றவர்கள் எல்லாம் நரை, திரையோடு சீதையம்மாளைப் பார்த்துக் கொண்டிருக்க நான் மட்டும் எனக்குக் கண் பார்வை தெரிந்தபோது பார்த்த அதே இருபத்து மூன்று வயது அழகான சீதையம்மாளைத்தான் இன்னும் மனக்கண்ணில் பார்த்துப் பேசிக் கொண்டிருக்கிறேன். வள்ளுவர் கருமணியின் பாவையைப் போகச் சொன்னதில் என்ன தவறு?" என்று கவனகர் கேட்கின்றபொழுது, அவை, உணர்வு வயப்பட்டு 'உச்' கொட்டாமல் எப்படி இருக்க முடியும்?

20ஆம் நூற்றாண்டில் இணையற்ற நடமாடும் திருக்குறளாய் உலவிய பதின்கவனகராகிய இராமையாவை நாம் உடல் அளவில் இழந்துவிட்ட நிலையிலும், அவர் உள்ளக் கருத்துகளை நூலாய் உருவாக்கி நம்முடன் உலவ விட்டுள்ள பதின்கவனகர் இரா.கனகசுப்புரத்தினம் அவர்களை நாம் உள்ளம் குளிரப் பாராட்டுகிறோம். அவரது உயர்ந்த நோக்கம் வெல்க என வாழ்த்துகிறோம்.

> ஆயிரத்து முந்நூற்று முப்பது) அருங்குறளும்
> பாயிரத்தி னோடு பகர்ந்ததன்பின் – போய்ஒருத்தர்
> வாய்க்கேட்க நூல்உளவோ? மன்னு தமிழ்ப்புலவ
> ராய்க்கேட்க வீற்றிருக்க லாம்

என்னும் நத்தத்தனாரின் பாடலுக்கு ஏற்ப, ஆயிரத்து முந்நூற்று முப்பது அருங்குறள் வெண்பாக்களையும் ஓதி உணர்ந்த கவனகர், பிறர் பன்னிப் பன்னிக் கேட்ட வினாக்களுக்கெல்லாம் அனைவரும் உன்னி உன்னி மெய்சிலிர்க்கும் வகையில் மறுமொழி தந்து வந்தவர். ஆதலால், என்றென்றும் அவர் நம் உள்ளத்தே "மன்னு தமிழ்ப் புலவராய் வீற்றிருப்பார்" என்பது திண்ணம்.

தந்தைக்கேற்ற மகனாய் அந்நுண்கலையைப் பேணி வரும் மைந்தர் பதின்கவனகர் திரு.இரா. கனகசுப்புரத்தினம் அவர்களின் கலைத்தொண்டு நாளும் வளர்க என வாழ்த்துவோமாக!

நூல்	திருக்குறள் பதின் கவனகர் இரா. கனகசுப்புரத்தினம்
வகைமை	கவனகக் கலை
வெளியீடு	இளமதி பதிப்பகம், தான்தோன்றிமலை, கரூர். (1990)

6

திருக்குறளில் மருத்துவம்

அருமை நண்பர் தே.ப. சின்னசாமி அவர்கள் தமிழறிவும், மருத்துவவியல் அறிவும் நிரம்பப் பெற்றவர். அவர், 'திருக்குறளில் மருத்துவம்' என்னும் இவ்வாய்வு நூலை மிகத் திறம்பட எழுதியுள்ளார். இந்நூல் திறம்பட அமைந்துள்ளதற்கு இந்நூலாசிரியர் பெற்றுள்ள மருத்துவ அறிவே பெரிதும் கைகொடுக்கிறது என்பதை இந்நூலைப் படிப்போர் நன்குணர்வர்.

திணையளவு போதாச் சிறுபுல்நீர், நீண்ட
பனையளவு காட்டும் படித்தால்; – மனையளகு
வள்ளைக்(கு) உறங்கும் வளநாட! வள்ளுவனார்
வெள்ளைக் குறட்பா விரி (திருவள்ளுவ மாலை)

என்ற பாடலின் வாயிலாக, சிறிய பனித்துளி தன்னுள்ளே மிகப் பெரிய பனை மரத்தையே அடக்கிக் காட்டுவதுபோல, ஒன்றே முக்கால் அடியைக் கொண்ட திருக்குறள் உலகத்தையே தன்னுள் அடக்கிக் காட்டுகிறது என்று கூறுகிறார், கபிலதேவர். அத்தகைய திருக்குறள் போலவே இந்த நூலும் அளவில் மிகச் சிறியதாயிருந்தாலும் மருத்துவத்தின் அருமை பெருமைகள் அனைத்தையும் தன்னுள் அடக்கிக்கொண்டுள்ள சிறப்பைப் பெற்றுத் திகழ்கிறது. திருவள்ளுவர் நோய், பிணி என்ற சொற்களைப் பயன்படுத்தி, 'நோய்'பற்றி 22 குறட்பாக்களிலும், மருந்தைப்பற்றி, 'மருந்து' என்ற ஓர் அதிகாரத்திலும் மற்றும் பல குறட்பாக்களிலும் கூறுகின்றார் என்பதைப் பாடல் எண்களோடு சுட்டிக்காட்டி நூலைத் தொடங்குகிறார், ஆசிரியர்.

கருப்பையில் பெண், ஆண் நாத விந்து ஒன்றாய் இணையும் போது வளி, தீ, நீர் அளவை ஒட்டியே மூவகை உடல்கள் - அஃதாவது, வளி (வாத) உடல், தீ (பித்த) உடல், நீர் (சிலேட்டும) உடல்கள் அமைகின்றன என்பதை நிலைநிறுத்திக் காட்டி, அம்மூவகை உடற்கூறுகளுக்கும் ஏற்படக்கூடிய நோய்கள் பற்றியும் விளக்கமாய்ச் சொல்லிச் செல்கிறார், ஆசிரியர்.

உணவு, உழைப்பு, உறக்கம், உடலுறவு ஆகியவை அளவோடு அமைவது நன்று என்றும், இவை குறைந்தாலும் மிகுந்தாலும் உடலில் உள்ள வளி, தீ, நீர் ஆகியவை தம்முள் மாறுபட்டுப் பற்பல நோய்களை உண்டாக்கிவிடும் என்றும், அவ்வாறு தோன்றும் நோய்கள் 4448 என மருத்துவ நூலோர் கூறுவர் என்றும் ஆசிரியர் விளக்கிச் செல்லுவது அவருடைய மருத்துவ அறிவை நமக்குப் புலப்படுத்துகிறது.

சரியான உணவு எது, சரியான அளவு எது, உண்ண வேண்டிய காலமெது என்பனவற்றிற்கெல்லாம் சிறந்த விளக்கங்களை அளிக்கிறார், ஆசிரியர். வாதம், பித்தம், சிலேட்டுமம் என்றமைந்த உடற்கூறுகளுக்கு ஏற்படக்கூடிய நோய்கள் இவையிவை என்பதையும், அவை ஏற்படாமல் அவர்கள் தடுத்துக்கொள்ளும் வகையில் பருவ காலங்களுக்கேற்ப அவர்கள் உண்ண வேண்டிய உணவுகள், சுவைகள், பொருள்கள் இவையிவை என்பதையும் ஆசிரியர் பட்டியல் போட்டுக் காட்டிச் செல்லும் முறை, உடலைப் பாதுகாக்க விரும்பும் ஒவ்வொருவருக்கும் மிகவும் பயனுடையதாய் அமைவதாகும்.

நோய்நாடி, நோய்முதல் நாடி, அதுதணிக்கும்
வாய்நாடி, வாய்ப்பச் செயல் (குறள் 948)

என்னும் குறளை நாம் பொதுப்படையாய்ப் படித்து, மேம் போக்கான பொருளை மட்டும் அறிந்துகொண்டு அமைந்து விடுவோம். ஆனால், இந்நூலாசிரியர் இக்குறளுக்கு மருத்துவ முறையிலான விரிபொருள் தருவது நமக்கு மகிழ்ச்சியூட்டுகிறது. 'நோய் நாடி' என்றால், தமிழ் மருத்துவ நூலோர் நுவலுகின்ற முறைப்படி நாடிநிலை அறிதல், தொட்டறிதல், வரலாறறிதல் முதலியனவாய எண்வகைத் தேர்வு முறைகளால் நோயின் தன்மையை ஆய்ந்து அறிதல் என்று ஆசிரியர் பொருள் கூறி விளக்குவதும்; 'நோய் முதல் நாடுதல்' என்பதற்குப் பல வகையான நோய்களைப்பற்றியும், அவை ஏற்படுவதற்கான காரணங்கள் பற்றியும் விளக்கிக் கூறிப் பொருள் காண்பதும் சிறப்பாயுள்ளது.

மருத்துவவியலின் இத்தனை உடற்கூறுகளையும் அடக்கியே வள்ளுவப்பெருந்தகை தம் வாய்மொழியைச் சுருக்கமாய் வழங்கியிருக்கிறார் என்றெண்ணி நம்மை இறும்பூதடையச் செய்கிறது, இந்நூல்.

"உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே" என்னும் திருமூலரின் வாக்குப்படி, பெறற்கரிய மனித உயிரைப் பேணிக் காப்பதற்கு அவ்வுயிர் உலாவுகின்ற உடலை நோயின்றிக் காப்பது

இன்றியமையாததாகிறது. அதற்கு இந்நூல் பெரிதும் பயன்படும் என்பது உறுதி. கரும்பு தின்னக் கூலியும் கொடுத்ததுபோல, திருக்குறளோடு மருத்துவத்தையும் இணைத்து நாம் நெடிது வாழ வழி காட்டியிருக்கிறார், இந்நூலாசிரியர். துறைதோறும் தமிழுக்குத் தொண்டு செய்யும் தமிழ்த்தொண்டர்களுள் ஒருவராய் விளங்கும் புலவர் திரு. சின்னசாமி அவர்களை மனமாரப் பாராட்டுகிறேன்; அவர்தம் தொண்டு சிறக்க வாழ்த்துகிறேன். இத்தகைய அறிவார்ந்த நூல்களை வெளியிட்டுச் சிறப்பிக்கின்ற தேன்தமிழ்ப் பதிப்பகத்தாரின் தொண்டு போற்றுதற்குரியது.

நூல் ஆக்கம்	புலவர் தே.ப. சின்னசாமி
வகைமை	சித்த மருத்துவம்
வெளியீடு	தேன்தமிழ்ப் பதிப்பகம், சேலம். (1984)

7

வண்ணப் பறவைகள்

இனிய பறவைகள் இருபத்திரண்டனை முச்சங்கத் தமிழில் முப்பத்து ஒன்பதின்மர் அணிநலம் சிறக்கப் பாடியுள்ள பாடல் தொகுப்பு இவ்வரிய கவிதை நூல். புலவர் அன்பரசன் அவர்கள் மற்றையோர் பின்பற்றத் தக்க முறையில் இந்நூலினை அமைத்துள்ளார்கள். ஒற்றைப்படைப் பக்கங்களின் மேலே வலப்புறம் தலைப்பும், இரட்டைப்படைப் பக்கங்களின் அடியில் இடப்புறம் பாடியோர் படமும் அமையுமாறு ஒவ்வொருவரின் கவிதையையும் இரண்டிரண்டு பக்கங்கள் வருமாறு தொகுத்துள்ளார்.

பாவலர்கள் பாப்புனையத் தொடங்கிய அந்நாள்தொட்டு இந்நாள்வரை, பறவைகளின் தன்மைகளையும் பண்புகளையும் பாடாத புலவர்கள் இல்லையென்றே கூறலாம். அவர்களுடைய பாக்களில் குயிலின் குரலும், அன்னத்தின் நடையும், அணிமயிலின் சாயலும் பெருமை பெறுகின்றன. காக்கையின் கூட்டுறவும், கொக்கின் அடக்கமும், புறாவின் ஒழுக்கமும் போற்றிப் பேசப்படுகின்றன. இம்மரபையொட்டி இந்நூலிலும் புலவர்கள் பறவைப் பண்புகளைப் பாநல அடிகளில் பாங்குறப் பாடியுள்ளனர்.

> "இருங்கானின் இலக்கியமே!"

> "ஏற்றமிகு உயர்பறவை எத்தனையோ இருந்தாலும்
> ஆற்றல்சால் இசைப்பறவை அவனியிலே நீதானே!"

என்று குயிலும்,

> "அன்புமிகும் காதலரின் தூதுக்கோர் சின்னம்"

என்று அன்னமும்,

> "பண்பட்டுச் சிறக்கின்ற ஒழுக்கத் தாலே
> பறவைகளில் உயர்வடைந்தாய் இமயம் போல"

என்று புறாவும்,

ஏழையர் காணும் இலவச நடனம் உனதன்றோ

என்று மயிலும்,

ஏதும் அறியா ஏழைப் புள்நீ
ஓதும் உண்மை ஒருமைப் பாடே;

விதைத்ததுவே சமதர்மச் சோலையிலே விண்ணுலகில்;

காலையில் கரைதல்; காணாதே புணர்தல்;
மாலையிற் குளித்தல்; மாநெறி சீலன்

என்று காக்கையும்,

புலமை அடிகளில் புகழ்ந்து பேசப்படுகின்றன.

அரிய உவமைகளும் சொல்லாட்சிகளும் நூல் முழுதும் நிறைந்து காணப்படுகின்றன. செம்மாப்புலவர் சுரதா அவர்கள் புதிய உவமைகளைப் பொருந்திய முறையில் கூறி உவமைக்கவிஞர் என்ற பட்டம் பெற்றவர்! தினைக்கதிரை உண்ணுகின்ற மயிலைப் பாட வரும் அவர்,

அணிலின் சிறுவால் அதுபோல் விளங்கும்
செந்தினைக் கதிரைத் தின்னும் மயிலே

என்று குறிப்பிடுகின்றார். அணில் வால் பெருமை பெறுகிறது, அவரது அழகு தமிழில்! மேலும் அவர் மயிலை,

ஆடும் பறவையின் அடிகள் இரண்டும்
ஈர நொச்சியின் இலைகளே ஆகும்

என்கிறார். இவ்வுவமை சங்ககாலந்தொட்டே இருந்து வருகிறது.

மயிலடி இனைய மாக்குரல் நொச்சி

எனக் குறுந்தொகைப்பாட்டலடியில் கொல்லனழசி என்பார் மயிலின் காலடியை நொச்சியின் இலைக்கு உவமை கூறியுள்ளார்.

கவிஞர் எழில்முதல்வன் கிளியின் மூக்கை, "அவரை மலர்நிகர் அலகு" எனப் பொருந்திய வடிவொடு பொருத்தி மகிழ்வதோடு, கிளி மரகத உருக்கு போலவும், பச்சைப் பட்டின் முடிப்புப் போன்றும், தொங்கும் மாங்காய் போன்றும் தோன்றுவதாய்ச் சொல்கிறார்.

மரகத உருக்கோ நின்சிறு மேனி?
பச்சை வண்ணப் பட்டின் முடிச்சோ?
வீங்கித் தொங்கும் மாங்காய் கொல்லோ?

புலவர் மா. சண்முகம் ஆற்றுக்குருவியின் அலகுக்கு உவமை தேடுகிறார். அவர்முன் நிற்கிறது பூவரசின் மலர் மொட்டு!

உன்றன் அலகுக்(கு) உவமை தேடினேன்
வந்தது பூவின் அரசு மொட்டே

என்று உவப்போடு பாடுகிறார்.

மீன்கொத்தியின் மூக்கு, கவிஞர் முகம்மது மொய்தீனுக்கு, "நீண்ட கூர்த்தொரட்டி"யாய்த் தென்படுகிறது.

வேம்பின் கனிதன்னைக் கூம்பாக்கிப் பிளந்தன்ன
பொன்னிறத்து மூக்கதனைப் பெற்றுள்ள மைனாவே

எனப் புலவர் ஆ.வே. இராமசாமி, கசப்பு வேம்பில் இனிப்புவமை காட்டுகிறார்.

புலவர் கிருட்டிணன், காடை,

சாடைதனில் பம்பரம்போல் இருக்கும்;
மூக்கு சாமணந்தான்

என்று குறிப்பிடுகின்றார். காடையைக் குறவர் சிறு கூட்டினுள்ளே அடைத்து வைப்பர். அது கூட்டுக்குள்ளே அங்குமிங்கும் ஓடிய வண்ணம் இருக்கும். அதைப்போல,

நான்குபக்கச் சுவருக்குள் இருக்கும் கைதி,
நடமாடி நடமாடித் தங்கு தல்போல்,
கான்குறவர் கையிலுறை பெட்டிக் குள்ளே,
கைதாகி வாழ்கின்ற பறவை காடை.

கடற்கரையில் வெண்மணலும் இடையிடையே கருமணலும் விரவிக் கிடக்கும் தோற்றத்தைப் பாவேந்தர் பாரதிதாசனார், "சீரியின் உடல்வண்ணம்போல் மணல் மெத்தை" என்று குறிப்பிடுவார். அதே பாங்கில், கூகையின் சிறகில் காணப்படும் புள்ளிகளைக் காணும் கவிஞர் கபிலவாணன், "மென்சிறகில் வெந்தயம்போல் புள்ளி பெற்றாய்" என்று குறிப்பிடுகிறார்.

பண்டைய சத்திமுற்றப் புலவனின் வழிநின்று வாழை கந்தசாமி,

பனங்கிழங்கைப் பிளந்திட்ட நிறந்தன்னில்
பார்வைக்கு நீண்டிருக்கும் அலகுகள்தாம்

என்று கொக்கலகுபற்றிக் குறிப்பிடுகின்றார்.

நாராய் நாராய் செங்கால் நாராய்
பழம்படு பனையின் கிழங்குபிளந் தன்ன
பவளக் கூர்வாய் செங்கால் நாராய்

என்பது சத்திமுற்றப் புலவர் நாரையை விளித்துப் பாடும் பாடல்.

புலவர்கள் பறவைகளைக் கேட்கும் கேள்விகள் நயம் மிக்கனவாய்க் காணப்படுகின்றன. கவிஞர் வேழவேந்தன் வானம்பாடியை,

> கானகத்துக் கவியரசே! வான கத்தில்
> கட்டணம்ஏன் வைக்காமல் பாடு கின்றாய்?

என்று கேட்கின்றார்.

மேலும் கவிஞர், வானம்பாடியை நோக்கி, "உனக்கு மயிலைப் போன்று அழகிய தோகையில்லை; அன்ன நடை இல்லை; கிளியின் மழலை இல்லை. ஆனாலும் உன்னை எல்லோரும் விரும்புகிறார்களே, ஏன், ஏன், ஏன்?" என மும்முறை கேட்டு, அவரே மறுமொழியும் சொல்லிவிடுகிறார். "இதயமெலாம் கவர்ந்த பாட்டால்" என்பதே அம்மறுமொழி.

> பலகவிஞர் கற்பனைக்கே விதைநீ அன்றோ?
> பறவையெலாம் உன்சிறப்பைப் பெற்றதுண்டா?

என்றும் கேட்கிறார். குயில், கவிஞர் பலரின் கற்பனைக்கு விதையாய் உள்ளது.

> இன்னமுதைக் காற்றினிடை எங்கும் கலந்ததுபோல்,
> மின்னற் சுவைதான் மெலிதாய், மிகஇனிதாய்,
> வந்து பரவுதல்போல், வானத்து மோகினியாள்
> இந்தஉரு எய்தித்தன் ஏற்றம் விளக்குதல்போல்,
> இன்னிசைத் தீம்பாடல் இசைத்திருக்கும்;

எனப் பாரதியாரும்,

> கூக்கூ எனும்அக் குயிலின் குரல்கேட்டேன்;
> ஆக்காத நல்அமுதோ! அடடாநான் என்சொல்வேன்!
> விட்டுவிட்(டு) ஒளிக்குமொரு மின்வெட்டுப் போல்,நறவின்
> சொட்டுஒன்று ஒன்றாகச் சுவையேறிற்று என்காதில்

எனப் பாரதிதாசனும் குயிலின் இசையைப் பாடியதைப்போல் பிற பறவைகளின் இசையைப் பாடவில்லையே!

கவிதைகளில் பறவைகளும் பேசுகின்றன. வான்கோழி புல்லுணவுப் புள். மக்களோ ஊன் சோறாக்க அதைக் கொன்றழிக்கின்றனர். கவிஞர் வா.மு. சேதுராமன் வான்கோழியைப் பேச வைக்கிறார்!

> நானோ பெருஞ்சைவன்! நண்பரே! நீரெல்லாம்
> ஏனோ எனைஅசைவ மாய்க்கொண்டே ஊனைத்தான்
> உண்டு கொழுக்கின்றீர்?........

வான்கோழி நியாயம் கோரும் வினா இது. விடை சொல்ல வேண்டுவது, 'அசைவர்'களின் பொறுப்பேயாம்!

மக்கள் உணவுக்காக நாள்தோறும் எண்ணற்ற பறவைகளைக் கொன்று குவிக்கின்றனர். இவர்கள் எத்தகையவர்?

தன்னுடலில் சிறுகாயம் பட்டுவிட்டால்
தாளாமல் துடிதுடிக்கும் மக்கள்.....

ஆவர். ஆனால் இவர்களோ, பறவைகளின் மெல்லுடலை வெட்டி, வேகவைத்து, நாக்கைச் சப்பிட்டு உண்கின்றனர். என்ன கொடுமை இது! இதைக் கண்ணுறும் புலவர் அன்பரசன்,

அன்பெனும் பண்புதனை மறந்த மாக்கள்
அழியும்நாள் வந்தால்தான் பறவை வாழும்

என மனிதக் கொடுமையைச் சாடுகின்றார்! வாத்தினைப் பாடும் இப்புலவர் சிந்தனைக்குரிய ஒரு செய்தியையும் சொல்லுகின்றார். வண்டு, விட்டில், ஈசல், தேனீ, வண்ணத்துப்பூச்சி, தும்பி, கொசு ஆகியவை உயரத்தில் பறந்தாலும் பறவை ஆகா. கவுதாரி, காடை, சேவல், நெருப்புக்கோழி ஆகியவை இறகிருந்தும் வானில் நீண்ட தொலைவு பறப்பதில்லை. வாத்தோ தரைவிட்டு ஓரடியும் பறப்பதில்லை. பறப்பது என்ற சொல்லின் முழுப்பொருளுக்குப் பொருத்தமில்லா இவை பறவை எனப் பெயர் பெறுகின்றன. ஆகவே,

பறக்கின்ற இனம்அனைத்தும் பறவை இல்லை;
பறவைஇனம் அத்தனையும் பறப்ப தில்லை

எனும் முடிவைத் தருகிறார்.

கைகேயி தசரதனிடம், "இராமன் பதினான்கு ஆண்டுகள் காடு செல்ல வேண்டும்; பரதன் அயோத்தி நாட்டை ஆள வேண்டும்" எனும் இருவரங்களைக் கேட்டாள். "பரதன் நாடாளட்டும்; இராமனைக் காடேகச் சொல்லாதே" எனத் தசரதன் கைகேயியின் கால்களில் விழுந்து அழுது புலம்பிக் கெஞ்சிக் கேட்டான். மனம் இரங்காத அவள், "வரங்களைத் தாராவிடில் சாவேன்" என்று உறுதிபடச் சொன்னாள். வேறு வழியின்றி வரந்தந்த தசரதன் மூர்ச்சித்துத் தரையில் வீழ்ந்தான். விடியற்காலை நேரம்; கோழி இயல்பாய்த் தன் இறக்கைகளை அடித்துக்கொண்டு கூவுகிறது; ஆனால் கம்பன், குறிப்பிடுகின்றான், "தசரதன் புலம்பியதைப் பார்த்து மனம் கலங்கி, கோழிகள் தம் சிறகுகளாகிய கைகளால் தம் வயிற்றில் பல முறை அடித்துக்கொண்டு அழுவன போன்றிருந்தது" என்று. கைகேயியின் கொடுமையால் நிகழ்ந்த இந்நிகழ்ச்சியினை,

—நெஞ்சு கலங்கி, அம்சிறை ஆன
காமர் துணைக்கரம்

> கொண்டுதம் வயிறுஎற்றி எற்றி விளிப்ப
> போன்றன கோழியே

என்று, கம்பர் தற்குறிப்பேற்றமாய்ப் பாடியுள்ளார்.

வைகறையில் கோழி தன் இருசிறகுகளாலும் வயிற்றிலறைந்துகொண்டு குரலெடுத்துக் கூவுவது, பேராசிரியர் ம. இராசமாணிக்கனார் கவிதையில் வேறோர் அழகிய தற்குறிப்பேற்றமாகிறது.

பொழுது புலரப்போகிறது! செய்ய வேண்டிய வேலைகள் ஏராளமாய் உள்ளன. சோம்பேறிகளாய் உறங்கிக்கொண்டிருக் கிறீர்களே! விழித்தெழுங்கள் எனத் தட்டியெழுப்புவது போன்றிருக்கிறதாம், கோழியின் கூவல்!

> வேலை எவ்வளவு! வேண்டுமோ உறக்கம்?
> ஏனோ பிறந்தீர் என்றுளம் பதைத்து
> வயிற்றி லறைந்து வாரீர்! பாரீர்!
> என்றிடும் பண்பை யாவரே பேசுவார்?

செய்ய தாள், வெள்ளைச் சிறையன்னம் இலக்கியச் செய்தியாய் உள்ளதே தவிர நாம் இன்று காணுமாறில்லை. அன்னம் இன்றில்லாதிருப்பதற்கு அழகிய காரணம் கற்பிக்கின்றார், புலவர் கல்லை ஆ. துரை. அந்நாளில் உண்மைக்காதல் இருந்து வந்தது. அதனால் தூதுவிட அன்னம் தேவைப்பட்டது. சேதியனுப்பும் காதல் இன்றில்லை. எனவே, தூது செல்லும் அன்னமும் இல்லை!

> சேதியெதும் தூதனுப்பும் காதல் இன்று
> சிறக்கவில்லை! அதனால்தான் அன்னம் இல்லை!

வலிமையுள்ளதாயும் பிற உயிர்களுக்கு ஊறு செய்வதாயும் உள்ளதால் வல்லூறு அப்பெயர் பெற்றது. மக்கள்,

> எல்லாரும் இதுபோன்றே இப்பார் தன்னில்
> இயல்பதனைத் தம்பெயராய்ச் சூட்டிக் கொண்டால்
> நல்லாரை, தீயாரை நாட்டு மக்கள்
> நன்கறிந்து சேர்ந்தொதுங்கி வாழ்வா ரன்றே!

எனப் புலவர் மணியன் சொல்வது சரியே!

அமைதியாய் வாழும் கவுதாரிகளைப் பிடித்து, அழிவு செய்யும் சண்டையில் ஈடுபடுமாறு மக்கள் அவற்றைப் பழக்குகின்றனர்? அது ஏன்?

> பெண்ணுக்கும் சொத்துக்கும் பேசாத கல்லுக்கும்
> மண்ணுக்கும் நாள்தோறும் மாளாத சண்டையிடும்

மானிடர்கள் உம்மினத்தை மல்லிற் பழக்குவதேன்?
கானகத்தும் இப்போர்கள் காலூன்றச் செய்திடவா?

இது கவிஞர் வெற்றியழகனின் வினா!

பறவைகள் தம்மைப்பற்றித் தாமே பேசிக்கொள்ளும் பாங்கில் பல பாக்கள் அமைந்துள்ளன. குயிலின் தாய், வீடு கட்டத் தெரியாதவள். கருத்தாங்கும் தாய் ஒருத்தி! எடுத்து வளர்ப்பவளோ காக்கை என்ற செவிலி. அடையாளம் தெரிந்ததும் அவளும் அடித்து விரட்டும் அவல நிலை! வாழ்வில் இத்தகைய குறைகளை வைத்ததால்தான் இவற்றை ஈடுசெய்யும் முறையில் இறைவன் எங்கட்கு இனிய குரலைத் தந்தான் போலுமெனக் கவிஞர் வகாப்பின் குயில் பேசுகிறது.

வாழ்வில் குறையை வைத்தஇவ் விறைவன்,
ஆழ்ந்து சிந்தித்தே, அருமைக் குரலினை
எங்களுக் களித்தான், என்பதால் உய்ந்தோம்.

ஆந்தை, மரப்பொந்தில் வாழ்வதால் அதை இழிவாய்க் கருதுகிறார்களாம்! அவ்வாறெல்லாம் கருதாதீர்கள். "மனிதனும் மரப்பொந்தில் வாழ்ந்தவன்தான். அதனால் நான் ஒன்றும் தாழ்வாய் ஆக மாட்டேன்" என்று அருணா பொன்னுசாமியின் ஆந்தை பெருமை பேசுகிறது!

..........மனிதர் முன்னர்
இட்டமுடன் வாழ்ந்ததெல்லாம் மரத்தின் பொந்தே
இதனாலேயே நான்தாழ்வாய் ஆக மாட்டேன்!

மனிதனுக்கு மாடி வீடமைக்கும் கலை தெரிவதற்கு முன்னரே மாடி வீடமைத்து, அதில் 'மின்மினி' விளக்கையும் ஏற்றி வாழ்ந்த பெருமை தனக்குண்டு என்று அருணாசலத்தின் தூக்கணாங்குருவி கூறுவதை யாரே மறுக்க முடியும்?

மாடியுடை வீடமைக்கும் சிறப்பு வேலை
மனிதனுக்குத் தெரியாத காலந் தன்னில்
பாடிமகிழ் வோடிருந்தேன் மாடி வீட்டில்.

வெண்மையும் கறுப்பும் சேர்ந்த நிறம், சிட்டின் நிறம். இதைக் காணும் இளங்கவிஞர் இரா. மைக்கேல்,

உண்மையும் பொய்யும் சேர்ந்த
  உலகினைக் காட்டு தற்கோ
வெண்மையும் கறுப்பும் சேர்ந்த
  மென்னுடல் ஏற்றாய் சிட்டே

எனக் கேட்கிறார்.

ஆயிரம் கண்ணும் முடியும் பெற்ற இந்திரன் விண்ணுக்கு மன்னனாகிறான், அதனால் தோகையில் ஆயிரம் கண்ணும்,

தலையில் கொண்டை முடியும் பெற்றுள்ள மயில்தான் மண்ணில் வாழும் பறவைகட்கு மன்னனாக வேண்டுமெனப் புலவர் நாகலிங்கம் வாதாடுகிறார்.

கண்ணொன்று ஆயிரந்தான் முடியைச் சூட்டிக்
  கொண்டதனால் விண்ணிற்கு மன்ன னாகும்;
கண்ணோடு கொண்டையையும் பெற்ற தோகை
  மண்ணில்வாழ் பறவைகளுக் கரச னாகும்.

கிளி மூக்கின் உறுதியினை, புலவர் ந. ஞானசேகரன்,

உளிதோற்கக் கொட்டையினை உடைத்தெ டுக்கும்
உறுதியிலே பாக்குவெட்டி தானே தோற்கும்

என்று கூறுவதும், அதன் வளைந்த தன்மையைப் பார்த்து,

மூக்கை வளைத்திட்ட காரணந்தான் – பொல்லா
முன்கோபம் கொண்டிடக் கூடாதென்றோ

என்று புலவர் சொ. இராமகிருட்டிணன் கேட்பதுவும் சுவை பயப்பனவாய் உள்ளன.

பாரி, இரப்போர்க்கு இல்லையெனாது ஈந்த பெருவள்ளல். அவனுடைய பறம்பு மலை முற்றுகைக்குள்ளானபோது, கிளிகள் செந்நெற்கதிர்களைக் கொய்து சென்று அவன் படைக்கு உணவாகத் தந்தன. இதை நினையும் இளம்புலவர் மு. சண்முகம்,

கடையெழு வள்ளலாய்ச் சிறந்த பாரிப்
படைக்கே செந்நெற் கதிரை ஈந்தே
கொடைதரும் வள்ளல்எனப் பெயர்பெற்று

வள்ளலுக்கே வள்ளலானாயே என அஞ்சுகத்தை வாய்விட்டுப் பாராட்டுகிறார்.

வள்ளுவர், தன்னை உவமையாய் எடுத்துக் கூறியதால் தன் பெருமை அளவிடற்கரியதெனப் பேசுகிறது, கொக்கு.

எவரும் செயல்முடிக்கக் காலம் அறிய
உவமை எனைக்கொண்டார் வள்ளுவனார் என்னென்பேன்.

'பாரதிதாசன் மயிலைப் பாடினார்; அவர் பாடிய தமிழில் நானும் பாடுவதால் மயிலே நீ மகிழ்ந்து ஆடு' என்கிறார், கவிஞர் கலியபெருமாள்

பாரதி தாசன் பாடிய தமிழில் – நான்
பாடுவ தாலே மகிழ்ந்துநீ ஆடு!

கூழெனினும் உழைத்துக் குடிப்போம் என்ற கொள்கைக்கு இலக்கணமாய்,

..................உன்னைப் போன்று
வாழ்ந்திடத்தான் துடிக்கின்றேன் இயல வில்லை

எனக் கவிஞர் தங்கராசன் ஊர்க்குருவியைப் பார்த்து அங்கலாய்க்கிறார்.

கவிஞர் பகவதீசுவரனோ தத்தை, தம் "செத்த கவியுளத்தைச் சீர்பெற வைப்பதாய்" இயம்புகின்றார்.

கவிஞர் சி. நடராசன் அவர்களின்,

காடுமலை திரிந்து, காட்டாற்றி லேகுளித்து,
வீடுதனக் கென்று வேய்ந்துகூ டமைத்து,
நாடி வேளையினிலே நற்குஞ்சுக் குணவூட்ட,
தேடி அலைகின்ற தேன்சிட்டே!

என்னும் அடிகளில் சிட்டின் சுழற்சி தெற்றெனத் தோற்ற மளிக்கிறது.

வானம்பாடி,

'விண்' ணென்று பறக்கும் போதும்
'விர்'ரென்று இறங்கும் போதும்

இன்னிசை தோன்றுவதாய்ப் புலவர் இராமசாமி குறிப்பிடுகிறார்.

இந்நூலில் புலவர் சீ. இலலிதா என்ற ஒரே பெண்பாற் புலவர் இடம் பெற்றுள்ளார். அவர் கவிஞர்களையும் வானம்பாடி யாக்குகிறார் :

எண்ணத்தால் உயர்ந்துபெரு வானில் தாவி
ஏற்றமிகு கவிபாடும் கவிஞர் தானும்
திண்ணமதாய் உலகையே எண்ணி பாத
தீம்பறவை யாம்வானம் பாடி ஆவான்.

புலவர் ஏகாம்பரம், முத்தமிழை மூன்று பறவைகளில் காண்கிறார். கிளிமொழியில் இயலையும், குயிலோசையில் இசையையும், மயிலாட்டத்தில் கூத்தையும் கண்டுகளிக்கிறது கவிமனம்.

முத்தமிழைப் பொருள்மூன்றில் கண்டு கொண்டேன்;
முருகனது மயிலாட்டம் நடனக் கூத்து;
தத்தையதன் பேசுமொழி இயலின் இன்பம்;
தரமிக்க குயிலோசை இசையின் ஊற்று.

சிறந்த கற்பனைகளும் இந்நூற்கவிஞர்களின் பாடல்களில் பளிச்சிடுகின்றன.

பற்றுகள் பல சூழ்ந்திருந்தாலும் அப்பற்றுகள் தம்மைப் பற்றாவண்ணம் வாழ்வர், ஞானியர். இந்த உயரிய நிலையைப் பறவை ஒன்றன் செயலோடு இணைத்துக் காட்டப்படுகிறது. இரையைப் பிடிக்க மீன்கொத்திப் பறவை நீருள் பல முறை பாய்ந்தாலும் அதன் சிறகில் நீர் ஒட்டுவதில்லை அன்றோ? பற்றிலா

வாழ்க்கையை இவ்வாறு காட்டுகிறார், கவிதைப் பற்றாளராகிய கவிஞர் முகம்மது மொய்தீன்.

காக்கை, 'கா கா' எனக் கரைகிறது. ஏன் தெரியுமா? பகலவன் தோன்றியதும் முதலில் உலகில் உள்ள இருட்டை எல்லாம் வாரி விழுங்குகிறான். எனவே, 'நாம் கறுப்பாய் இருக்கிறோம். நம்மையும் இருட்டு என்று கதிரவன் விழுங்கிவிட்டால் என்ன செய்வது?' என நினைத்துக் காக்கை அஞ்சுகிறது. எனவே, பகலவனைப் பார்த்துப் பின்வருமாறு முறையிடுகிறதாம்: 'பகலவனே! நான் கறுப்பாய் இருப்பதால் என்னை இருட்டு என்று கருதி விழுங்கிவிடாதே! நான் ஒரு பறவை! என்னைக் காப்பாற்று, காப்பாற்று!' (கா, கா; கா- காப்பாற்று.) இப்படியொரு கற்பனையைச் செய்கிறார், மனோன்மணீயம் சுந்தரனார். இதை மனத்திற்கொண்டு, காக்கை கரைவதற்கு ஒரு காரணம் கற்பிக்கிறார், கவிஞர் கோ. மா. இராசகோபால். மக்கள் பண்பாளர்களாய் உயர்வு பெறப் பரிவெனும் கருணையைக் காக்கவேண்டும் என்பதற்காக, 'கா கா' என்று கரைகிறதாம்!

உருவார் மக்கள் உயர்பெற் றுய்ய
பெருந்துணைப் பண்பாம் பரிவெனும் கருணை
காக்க வேண்டி, 'கா' 'கா' என்றே
கரையும்.

காக்கை, கரைவது நேர் வழியில் நடக்க வேண்டும் என்பதையும் காட்டுகிறதாம். யாப்பிலக்கணத்தில், 'கா, கா' என்பதை அசை பிரித்தால் 'நேர் நேர்' ஆகிறதல்லவா? ஆதலின், நேர் நட, நேர் நட என்பதையும் காக்கையின் கரைதல் அறிவிக்கிறதாம்.

'கா கா' என்னும் கனிவார் மொழியின்
சீரினை உணர்ந்தோர் 'நேர்' 'நேர்' என்பார்!

இவ்வாறு நூல் முழுதும் கவியின்பம் சிறகடித்துப் பறக்கக் காண்கிறோம். பறவைகளைக் கூட்டிலடைப்பது கொடுமை! ஆனால், பாவலர்கள் கவிதை வானில் பறக்க விட்டுள்ள இப்பாட்டுப் பறவைகளைப் பிடித்து நெஞ்சக் கூட்டிலடைப்பதோ பெருமை!

நூல் ஆக்கம்	புலவர் அன்பரசன் (தொகுப்பாசிரியர்)
வகைமை	கவிதை
வெளியீடு	கல்வி வெளியீடு, சென்னை. (1972)

8

கலைக்கூத்தன் கவிதைகள்

பண்டைத் தமிழர்கள், அலைகடலுக்கப்பால் உள்ள நாடுகள் பலவற்றை வென்று தம் புகழ்க்கொடியைப் பறக்கவிட்ட செய்தியைப் பாரதியார்,

சிங்களம் புட்பகம் சாவகம் – ஆகிய
தீவு பலவினும் சென்றேறி – அங்குத்
தங்கள் புலிக்கொடி மீன்கொடியும் – நின்று
சால்புறக் கண்டவர் தாய்நாடு

என்று பாடிக் களித்தார். இவ்வாறு அயல் நாடுகளை வென்று அரசோச்சிய தமிழினம், பின்னர்ப் பிழைக்க வழிதேடிப் பிற நாடுகளில் சென்று குடியேறவும் நேரிட்டது! இன்று தமிழர்கள் மிகுதியாய் வாழும் இந்திய மாநிலங்களுள் பம்பாய் (மும்பை) முதன்மையானது. நண்பர் கலைக்கூத்தன் பம்பாயில் வாழ்ந்து வரும் தஞ்சைத் தமிழர்; மராட்டிய மண்டலத்தில் தம் பேச்சாலும் எழுத்தாலும் தமிழ்ப்பண்பை நாட்டி வரும் அன்பர். அவரியற்றி யுள்ள இக்கவிதை நூலுக்குப் பாராட்டுரை எழுதுவதில் பெருமகிழ்ச்சி கொள்ளுகின்றேன்.

தாயன்பிலிருந்து விடுபட்டார் எவருமிலர். முற்றும் துறந்த பட்டினத்தடிகளாராலும் முந்தித் தவம் கிடந்து முந்நூறு நாள் சுமந்து பெற்ற தாயின் அன்பைத் துறக்க முடியவில்லை. அத்தகைய தாயன்பையும் விஞ்சியது ஒன்று உண்டெனின் அது தாய்மொழி அன்பேயாம்! இதைப் பாவேந்தர் பாரதிதாசன்,

பயிலுறும் அண்ணன் தம்பி – அக்கம்
பக்கத் துறவின் முறையார்
தயைமிக உடையாள் அன்னை – என்னைச்
சந்ததம் மறவாத் தந்தை

குயில்போற் பேசிடும் மனையாள் – அன்பைக்
கொட்டி வளர்க்கும் பிள்ளை
அயலவ ராகும் வண்ணம் – தமிழ்என்
அறிவினில் உறைதல் கண்டீர்

என்று குறிப்பிடக் காணலாம். இக்கருத்தினை நண்பர் கலைக் கூத்தன் அவர்களும்,

> முச்சங்கம் கண்டவளே! மூன்றும் வேண்டா
> முனிவரெலாம் தனைவேண்ட வைத்த தாயே!

என அழகுபெறக் குறிப்பிடுகின்றார். மண், பெண், பொன் ஆகிய மூன்றையும் வேண்டாத முனிவர்கள்கூடத் தாய்மொழியை -தமிழ்மொழியை - வேண்டிக் கேட்டுப் பெறுவர் என மொழியேற்றம் பேசுகிறார், கவிஞர்.

யாழ்ப்பாணத்து இளம்புலவர் ஒருவர், "சாவில் தமிழ் படித்துச் சாக வேண்டும்; என் சாம்பல் தமிழ்மணந்து வேக வேண்டும்" என்று தம் வேட்கையை வெளிப்படுத்தினார். கலைக் கூத்தன் அவர்களும் இத்தகையதோர் ஆசையை வெளியிடுகிறார். தமிழ்மொழியின் பெருமையை இந்த ஞாலம் உணர்ந்தது என்ற நிலை ஏற்பட்டால் அக்கணமே அவர் உயிரிழக்கவும் ஒருப்படுகிறார். அவ்வாறு இறக்கும் தம் சிதைக்குத் தமிழ் பாடித் தீ மூட்ட வேண்டுமென்று விழைகிறது அவர் தமிழுள்ளம்.

> '..............இம்மா ஞாலம்
> வெல்தமிழின் சிறப்புணரக் கேட்ட பின்பு
> எனைக்கொன்று விடுபடைப்பே! புலமை மூத்தோன்
> என்சிதைக்குத் தமிழ்பாடித் "தீமூட் டட்டும்"

என்ற அவர் கவிதை அடிகள் மொழிப்பற்றின் மொத்த உருவமாய்த் திகழ்கின்றன என்பதில் ஐயமில்லை. தமிழை வளர்க்க அவர் தம்மை அர்ப்பணித்துக் கொண்டுள்ளார் என்பதைத் "தமிழ்ப் பகைவென்று வளர்க்கவே நான்" என்ற அடி குறிப்பிடுகிறது.

'ஆலயமும் அருச்சனையும்' என்ற கவிதை, தமிழ்நாட்டுக் கோவில்களில் வழிபாடு செய்யத் தமிழே ஏற்றது என்பதை மறுக்க முடியாத காரணங்களைக் காட்டி மெய்ப்பிக்கிறது. இன்பத்திலும் துன்பத்திலும் மக்கள் தம் உள்ளத்தில் உள்ளதைப் பிறரிடம் எடுத்தியம்பி மகிழ்ச்சியும் ஆறுதலும் பெறுவது உலக இயற்கை. இறைவனிடம் உருகியழுது குறை வேண்டவே மக்கள் கோவிலுக்குச் செல்லுகின்றனர். அங்குச் சென்று, இராமலிங்க அடிகளார் கூறுவது போல, "நினைந்து நினைந்து, உணர்ந்து உணர்ந்து, நெகிழ்ந்து நெகிழ்ந்து, அன்பே நிறைந்து நிறைந்து, ஊற்றெழும் கண்ணீரதனால் உடம்பு நனைந்து நனைந்து, அருளமுதே! நன்னிதியே! ஞான நடத்தரசே! என் உரிமை நாயகனே! என்று வனைந்து வனைந்து" வணங்க அவன் தாய் மொழியால் அன்றி வேறு எம்மொழியால் முடியும்? அதனாற்றான் கலைக்கூத்தன்,

> தமிழனுக்குத் தமிழ்தெரியும்; மனத்தை விட்டுத்
> தான்நம்பும் இறைவனிடம் புலம்பு தற்குத்
> தமிழ்போதும்!

என்று கூறுகின்றார். நியாயந்தானே?

பாரதியார், பாரதிதாசன் ஆகியோர் கவிதைகளில் கலைக்கூத்தன் ஆழ்ந்து திளைத்தவர் என்பதை நூலின் பல இடங்களில் காணமுடிகிறது. 'எனை ஈன்ற நாடு' என்ற அவருடைய கவிதை, பாரதியாரின், 'பாருக்குள்ளே நல்ல நாடு' என்ற பாடலையும் பாரதிதாசனின் திராவிட நாட்டுப் பண்ணையும் நினைவூட்டுகிறது.

> தோட்டத்தி லே,மரக் கூட்டத்திலே, — கனி
> ஈட்டத்தி லே,பயிர் ஊட்டத்திலே;
> தேட்டத்தி லே,அடங் காத நிதியின்,
> சிறப்பினி லேஉயர் நாடு

என்று பாரதியாரும்,

> அகிலும் தேக்கும் அழியாக் குன்றம்
> அழகாய் முத்துக் குவியும் கடல்கள்

என்று பாரதிதாசனும் பாடி மகிழ்ந்தவாறே, நம் கவிஞரும்,

> கடலெல்லாம் அடிப்பாகம் முத்து — பாரில்
> கலமெங்கும் பொருளீட்டத் தவழும்பூங் கொத்து
> ....
> கருங்காலி வைரங்கள் தேக்கு — மணம்
> கவர்கின்ற மயிற்பீலி அகில்மிளகு பாக்கு

என்று பாடிக் களிக்கின்றார்.

தாய்மொழி காப்பதற்காகத் தம்மை எரியுள் உய்த்து உயிர்த் தியாகம் செய்த வரலாறு தமிழகம் தவிர, உலகின் எங்கும் எப்போதும் நிகழ்ந்ததில்லை. இந்தி எதிர்ப்புப் போரில் தீக்குளித்து வீரம் விளைத்த தியாகிகட்கு நன்றி செலுத்தும் வகையில் தீயூட்டிக் கொண்ட தீரர்களுள் ஒருவரான சின்னச்சாமியின் மறைவைக் கவிஞர் அவலம் ததும்பப் பாடுகிறார்.

> 'அப்பப்பா' என்றழைக்கும் குழந்தைவிட்டு, — 'வா!என்
> அன்பே'என் றழைக்கின்ற மனைவி விட்டே,
> ஒப்பற்ற அன்னைதனை விட்டுவிட்டு, — நந்தம்
> உயிர்நாடித் தமிழ்காக்க எரிந்தே விட்டாய்!

நண்பர் கலைக்கூத்தனைப்போல், "தமிழ் காக்க நான்" என்று கிளம்பிடும் மறவர் கூட்டம் பெருகிவிட்டதால் தமிழ்நாட்டில் இனி என்றும் இத்தகைய சோக நிகழ்ச்சி நிகழ இடமில்லை என்ற

நிறைவும், சின்னச்சாமி அனையவர்களின் தியாகம் வீண் போகவில்லை என்ற பெருமிதமும் ஏற்படுகின்றன.

'கன்னியும் காதலும்' என்ற பகுதி காதலைப் போலவே இனிமை தருவதாய் அமைந்துள்ளது.

சின்ன நடையினில் என்ன நளினமோ
எங்குப் பயின்றதடி?
....
எத்தனை நாளாகப் பித்தனைப் போலுனை
நத்திக் கிடப்பதடி?

என்ற வினாக்களில் ஆசையும் உரிமையும் பெருக்கெடுத்து நிற்பதைக் காண முடிகிறது!

காதலன் காதலியை எண்ணி மகிழுவதாய்ப் பாடப் பட்டுள்ள 'சான்று' என்ற கவிதை அவருடைய புலமைக்கும் சான்றாய் உள்ளது.

முக்கனிச் சர்க்கரைக் கன்னம் – நானும்
முத்திரை குத்திய சின்னம்

இது காதலியின் கன்னத்தை எண்ணும்போது காதலனின் மனத்தில் எழும் இனிய எண்ணம்.

அவன், மேலும் நினைக்கிறான் : 'நானும் அவளும் இருவராய்ப் பிறருக்குத் தோன்றலாம்; எங்களைப் பொறுத்தவரை இருவரும் ஒருவரே! ஒருவரான இந்தத் தன்மையினால் விரைவில் வேறோர் உயிரும் தோன்றிவிடும்; அதில் நான் அவள் சாயலைக் கண்டு மகிழ்வேன்!'

அவளும் நானும் ஒன்று, – பிறர்தான்
அறிய நாங்கள் இரண்டு;
தவழும் பிறகு மூன்று, – அவளின்
சாயல் சொல்லிடும் சான்று.

இஃது ஒவ்வொரு காதலனின் உள்ளத்திலும் தோன்றுகின்ற உயிர்த்துடிப்பான எண்ணமே!

காதலி ஒருத்தி, தன் காதலன்மேல் கொண்டுள்ள அன்பை மறைத்து, அவனைத் துடிக்க வைக்க வேண்டும் என்று எண்ணுகிறாள். மனம் அவ்வாறு எண்ணுகிறதே தவிர, உடல் அவளுடன் ஒத்துழைக்கவில்லை. அருகே நெருங்கும் அவனைப் 'போ' என்று சொல்லி அவனைக் கெஞ்ச வைக்க வேண்டும் என உள்ளம் நினைக்கிறது. ஆனால், நாவோ புரள மறுக்கிறது. 'போ' என்று சொல்ல நினைத்தும் முடியவில்லை. அவனோ, 'வா' என்றழைத்துவிட்டான்; செல்லாமல் இருக்கத்தான் எண்ணுகிறாள்.

ஆனால், அவன் சொல்லி முடிக்கும் முன்னேயே கால்கள் தாவின; கைகள் அவனை அணைத்துக்கொண்டன.

'போ'வென்று கூறிட எத்தனித் தேன்'நா'
புரள மறுத்ததேன் சொல்லிடடி! – அவன்
'வா'வென்று கூறி முடிக்குமுன் னே,சென்று
வயப்பட்ட தேனென்று கூறிடடி.

காதலியின் இன்ப மயக்கத்தைக் கூறும் இந்த அடிகள் காதல் இலக்கியத்தைக் கூத்தன் சுவை கெடாமல் பாட வல்லவர் என்பதைக் காட்டுகின்றன.

இருபுறமும் அகன்று இடை சிறுத்துள்ள உடுக்கையைப் பெண்களின் இடையோடு ஒப்பிட்டுப் புலவர்கள் வண்ணிப்ப துண்டு. கவிஞர் கபிலவாணன், "எட்டைப் போல் இடையுடை யாள்" என்று புதியதோர் உவமை கூறுவார். இராமனுடன் சீதை செல்வதைப் பாட வந்த கம்பர்,

வெய்யோன்ஒளி தன்மேனியின் விரிசோதியின் மறைய,
பொய்யோஎனும் இடையாளொடும், இளையானொடும் போனான்

என்று குறிப்பிடுவார். இடை இல்லையோ என்று சொல்லுமாறு மிக நுண்ணியதாய் இருந்தது என்பதைப் 'பொய்யோ என்னும் இடையாள்' என்ற சொற்றொடர் விளக்குகிறது. திருமணம் முடிந்த பிறகு நளன் தமயந்தியுடன் தன் நாடு திரும்புகின்றான். அவர்கள், வழியில் ஒரு பொழிலிடத்தே இளம் காதலர்கள் மகிழ்ந்து விளையாடும் காட்சிகளைக் கண்டனர். காதலன் ஒருவன் கொத்தான மலர் பறித்தான். அதைத் தன் காதலியின் கூந்தலிலே சூடச் சென்றான். அவளோ ஊடி நின்றாள். ஊடலைத் தீர்க்க எண்ணியவன் அவள் கூந்தலில் சூட இருந்த மலரைப் பாதங்களில் இட்டுப் பணிந்தான். இதைக் காணும் தமயந்தி சிரித்தாள். "என்ன இருந்தாலும் ஆண்கள் பெண்களிடம் பணிந்துதானாக வேண்டும்" என்று குறிப்பிடுவது போன்றிருந்தது, தமய்ந்தியின் சிரிப்பு. நளன் ஆணன்றோ? ஆண்மையைக் கேலி பேசுவதை அவனால் ஒப்புக்கொள்ள முடியுமா? அவன் கூறினான் "தமயந்தி! அவன் கொத்தான மலர்களைக் கூந்தலிற்றான் சூட எண்ணினான்; கூந்தல் அருகேயும் கொண்டுசென்றுவிட்டான்; அதற்குள் ஓர் ஐயம்! கொத்தான இந்த மலர்க்கனத்தை அவள் இடை தாங்குமா? கனம் தாளாது இடையொடிந்துவிட்டால் என்ன செய்வது என்ற இரக்கத்தினால்தான் அவள் பாதங்களில் வைத்துவிட்டான், புரிகிறதா?" என்றான். இந்த ஓவியத்தை உள்ளடக்கியுள்ள புகழேந்தியின் பாடல் இதோ

கொய்த மலரைக் கொடுங்கையி னால்அணைத்து,
மொய்குழலிற் சூட்டுவான் முன்வந்து, – தையலாள்,
பாதார விந்தத்தே சூட்டினான்; பாவையிடைக்கு
ஆதாரம் இன்மை அறிந்து. (நள. 186)

இவ்வாறு புலவர்களின் கற்பனையை வளர்த்த 'இடை' கலைக்கூத்தனை மட்டும் விட்டுவிடுமா? அவரும் பாடுகிறார்

இடையில்லை எனப்பலர் செப்புவார் – இல்லை
இருக்(கு)அங்கு இழைபோல எனச்சிலர் ஒப்புவார்.

கவிஞர்கள் தாம் வாழும் காலத்தையும் இடத்தையும் கவிதைகளில் வெளிப்படுத்தாமல் இருக்க முடியாது. நண்பர் பம்பாயில் வாழ்பவராதலால் சிவப்பு விளக்குப்பகுதியும் கவிதையிடையே தலை நீட்டுகிறது. காதலியிடம் கூறுகிறார் :

தெருக்கதவைத் திறந்துவைத்து வருகை கண்டு
சிரிக்கின்ற பெண்களுண்டாம்; பார்த்த தில்லை.

செய்தியை அறிந்திருக்கிறார்; நல்ல வேளை, இடத்தைப் பார்த்ததில்லை! ஒருவேளை, காதலியை மிரட்ட இவ்வாறு பாடுகிறாரோ? காதலியை, "உன் சிரிப்பால் உதவாயா?" என்று வேண்டுகிறார். அவளோ சிரிக்கவில்லை. "இதோ பார்! நீ சிரிக்க மறுக்கிறாய்! சிரிக்காவிட்டால் போகிறது; இதைக் கேட்டுக்கொள்; இங்கே தெருக்கதவைத் திறந்து வைத்து வருகை கண்டு சிரிக்கிறவர்களும் உண்டு" என்று சொல்லி முடிக்கிறார். இதன் பின்னரும் சிரிக்காமலிருக்க அவளுக்குப் பைத்தியமா என்ன?

வித்தகமும் தத்துவமும் என்ற தலைப்பில் சிந்தனைக்குரிய சில செய்திகள் குறிப்பிட்டுக் காட்டப்படுகின்றன.

உழைத்தும் மக்கள் வாழமுடியா திருப்பது ஏன்?

இறைவனென்று எவனொருவன் எங்கே இருக்கின்றான் – இருந்தால்
ஏழைகளை ஏனோ கண்ணால் பார்க்க மறுக்கிறான்.

இந்த வினாக்கட்கு விடை காண்பதே மனித குலத்தின் முயற்சியாய் இருக்க வேண்டும்.

கவிஞர் தமக்குச் சரியெனத் தோன்றுவதை அஞ்சாது கூறும் இயல்பினர்.

சாத்திரங்கள் வளருமெனில் மடமை தேங்கும்;

புனிதமாகச் சிலர்பிழைக்கப், புதுமையாகப் பலர்நினைக்க,
புராணஇதி காசம்என்று புனைந்து சிரித்தான்.

மேலேயுள்ள கூற்றுக்கு இவை சான்றுகள்.

மக்கள் எதை வேண்டுமானாலும் இழக்கலாம். ஆனால், நிலையிலிருந்து தாழ்ந்துவிடக்கூடாது. நிலையில் தாழ்ந்த மக்களைச் சமுதாயம் தலையினின்று உதிர்ந்த முடியொப்ப இகழ்ந்துரைத்து ஒதுக்கிவிடும் என்பதனைக் கீழ்வரும் திருக்குறள் விளக்குகிறது.

> தலையின் இழிந்த மயிரனையர், மாந்தர்
> நிலையின் இழிந்தக் கடை (குறள் 964)

மக்கட்கு நன்னிலையைத் தருவது அவர்களின் குணமேயாம். அதனால் குணத்தை எந்நிலையிலும் இழந்துவிடக்கூடாது என்பதனை வலியுறுத்தும் முறையில் கவிஞர்,

> குணத்தை இழந்துவிட்டால் மறுபடியும் – பல
> கோடிதந்து கேட்டாலும் கிடைக்காதே;

ஆகவே, நிதானம் கெடாமல், நல்லதையும் கெட்டதையும் எடை போட்டுப் பெரியோர் நடந்த பாதையில் நடந்து நல்லன செய்யவேண்டும் என்று அறிவுரை பகர்கிறார்.

கேள்விச்சுவையை விடுத்து வாய்ச்சுவை மட்டும் விரும்பும் மக்கள், இருந்தாலும் இறந்தாலும் ஒன்றேயென வள்ளுவர் வன்மையாய்ச் சாடுகின்றார்.

> செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்;
> அவியினும் வாழினும் என்? (குறள் 420)

என்ற திருக்குறளை மனத்திற்கொண்டவராய்க் கலைக்கூத்தனும், "இவ்வுலகிலே சிலர் இருந்தாலும் இறந்தாலும் ஒன்று; அவர் இருப்பதைக்காட்டிலும் இறப்பதே நன்று" என்கிறார். யாவர் அந்தச் சிலர் என்பதை 'ஒழிங்கடா' என்ற கவிதையில் (பக். 96) அவர் பட்டியலிட்டுக் காட்டுவதைக் காணலாம்.

'பாக்களும் பல கோணங்களும்' என்ற பகுதியில் கீழ்க் காணும் அரிய கருத்துகள் பேசப்படுகின்றன.

> வள்ளுவத்தைப் படியாதோன் படியாதோனே.
>
> உழவருடைய கையால்தான் உலகம் இயங்குது.
>
> வறுமை ஒழிய வேண்டும்.
>
> கலைகள் மலர வேண்டும்.
>
> நடித்து ஏமாற்றுபவர்களை நம்பிப் பயனில்லை.
>
> சமுதாயச் சீர்திருத்தம் சரியான முறையில்
> நடைபெற வேண்டும்.

நாட்டில் இன்று கவியரங்குகள் பெருமளவில் நடைபெறுகின்றன. கவியரங்கம், பட்டி மன்றம் இல்லாத இலக்கிய விழாக்களே இல்லையெனலாம். கவியரங்கக் கவிதைகள் பொது மக்களுக்கெனப் பாடப்படுவதால் அவற்றில் எளிமையும் இனிமையும் பேரிடம் பெறுவதைக் காண முடிகிறது. மரபு நிலை பிறழாது, இலக்கணச் செறிவு, கருத்தாழம், சந்த நலம் ஆகியவற்றுடன் கூடிய பாக்கள் எளிமையும், சொல் விளையாட்டுகளும் இல்லாத காரணத்தால் கவியரங்குகளில் எடுபடாமல் போவதுண்டு! கவியரங்கக் கவிதையாக்க முறையே தனி. அதில் கலைக்கூத்தன் நல்ல பயிற்சியைப் பெற்றுள்ளார் என்பதை அவருடைய கவியரங்கக் கவிதைகளிலிருந்து அறிய முடிகிறது.

பம்பாய்த் தமிழ்ச்சங்கத்தில் நடைபெற்ற கவியரங்கம் ஒன்றற்குத் தலைமையேற்ற கவிஞர், சங்கத் தலைவர் மூவர்க்கும் வணக்கம் சொல்ல விழைகின்றார். 'மூன்று' என்ற எண்ணின் பெருமையைக் கூறி மூவர்க்கும் வணக்கம் தெரிவிக்கின்றார். தேங்காய்க்குக் கண் மூன்று; சிவனுக்குக் கண் மூன்று; தமிழின் பிரிவு மூன்று; நெற்றியில் துலங்கும் 'நாமத்தில்'கோடுகளும் மூன்று; (திருநீற்றுக் கோடுகளும் மூன்றுதாம்); சங்கத் தலைவர்களின் எண்ணிக்கையும் மூன்று என அவர் மூன்றை முறைப்படுத்திக் கூறிய பொழுது கரவொலியைப் பெற்றிருப்பார் என்பதில் ஐயமில்லை.

சொல்லைப் பிரித்து நயங்கூட்டுவது கவியரங்க முறைகளுள் ஒன்று. கவியரங்கில் பாட வரும் கவிஞர் பாலையா அவர்களை அறிமுகம் செய்துவைப்பது சுவையாய் உள்ளது. பாலையா என்னும் சொல்லை வைத்துக் கவிஞர் விளையாடுகிறார். "இவர் எல்லோர்க்கும் பால் அய்யா! அன்பில்லா நெஞ்சினர்க்கு வேல் அய்யா! நண்பர்களுக்குச் சுவையான தேன் அய்யா! கல்விக் கண்ணில்லார்க்குக் கோல் அய்யா! கவிதை பாட இயலார்க்கு யாப்பு அய்யா!" என்ற சொல்விளையாட்டு சுவையைப் பெருக்குகிறது.

வரலாற்றுப்புதினங்கள் எழுதுவோர் வரலாற்று நிகழ்ச்சிகளோடு கற்பனையாகச் சில நிகழ்ச்சிகளைக் கலந்து எழுதுவதுண்டு. அந்த முறையில் இவரும் சில வரலாற்று நிகழ்ச்சிகளைக் கற்பனை நோக்கில் தம் கவிதையில் காண முனைகிறார். தில்லையாடி வள்ளியம்மை தென்னாப்பிரிக்காவில் வாழ்ந்த தமிழ் மங்கை. அவள் தன் 14ஆவது வயதில், தென்னாப்பிரிக்காவில் நடந்த இந்தியர்களின் அறப்போரில்

ஈடுபட்டுச் சிறை புகுந்தாள்; நோயுற்று, உடல் நிலை பாழாகி வெளியே வந்தாள்! வந்த சின்னாள்களில் (22-2-1914இல்) அவள் மாண்டாள். அவள் தியாகத்தைக் காந்தியடிகள் உளமார நினைந்து பாராட்டினார். வள்ளியம்மையின் நினைவாகத் தென்னாப்பிரிக்க இந்தியர்கள், மண்டபம் ஒன்றை எழுப்ப முயன்றனர். என்ன காரணத்தாலோ அஃது ஈடேறாது போயிற்று. அப்போது காந்தியடிகள், "மண்டபம் கல்லினாலும் காரையினாலும் கட்டினால்தான் என்ன, கட்டாவிட்டால்தான் என்ன? வள்ளியம்மையின் தொண்டு அழியாதது. தன் கரங்களினாலேயே சேவை என்னும் கோயிலை அவள் எழுப்பினாள். அவளது மாண்பார் உருவம் பலர் இதயங்களில் நிரந்தரமாய்ப் பதிந்துள்ளது. இந்தியா உள்ளவரையில் தென்னாப்பிரிக்க அறப்போர் வரலாற்றில் வள்ளியம்மையின் பெயரும் நீங்கா இடம் பெற்றிருக்கும்" என்று மனமுருகிப் பாராட்டினார். அத்தகைய வள்ளியம்மையின் மறைவுபற்றிய செய்தியில் நண்பர் கற்பனையைக் கலக்கிறார். ஆப்பிரிக்காவில் கொடியவனொருவன் காந்தியடிகளைச் சுட்டதாகவும், அதுவேளை வள்ளியம்மை குறுக்கே பாய்ந்து, குண்டினை ஏற்று மாய்ந்து, காந்தியடிகளைக் காப்பாற்றி, அவரை உயிருடன் தந்த தமிழ் மகள் என்று கூறித் தமிழ்க் குடிக்கு - சிறப்பாகத் தமிழ்ப் பெண்ணினத்திற்கு - பெருமை சேர்க்க விழைகின்றார். காந்தியடிகள் 1948, சனவரி 30இல் கொடியவன் கோட்சேயின் குண்டு பட்டு மாய்ந்த வேளையில் கவிஞரின் இந்தக் கற்பனை உண்மையில் நிகழ்ந்திருக்கக்கூடாதா, யாராவதொருவர் குறுக்கே பாய்ந்து குண்டினையேற்று அடிகளைக் காத்திருக்கக்கூடாதா என்ற ஏக்கம் உண்டாகிறது.

காதலியை, 'மஞ்ச மனக்கணக்கு' என்று கூறுவது போன்ற புதிய சொல்லாட்சிகளும், பேரறிஞர் அண்ணாவை, "வறியவர் மன்ம் உழும் ஏர்" என்று கூறுவது போன்ற உருவகங்களும், பம்பாயை இருளில் வானவூர்தியிலிருந்து பார்க்கும்போது கீழே தோன்றும் மின் விளக்குக் கூட்டம், விண்மீன்கள் அனைத்தும் பம்பாயில் குடியேறி வாழ்வதற்காக விண்ணிலிருந்து இறங்கிவந்து விட்டனவோ என்று எண்ணத் தோன்றுவதாய்க் கூறும் கற்பனை வளங்களும் நூலில் தென்பட்டு மகிழ்வூட்டுகின்றன.

இடைக்காலக் கவிதை மரபிற்கேற்ப, 'முப்பாலுள் நான்' என்னும் கவிதையை அந்தாதி முறையிலும், சிலேடை என்ற தலைப்பில் மூன்று சிலேடைப் பாடல்களையும் சேர்த்துள்ளார். சிலேடைப் பாக்களுள் ஒன்றில் காதலரையும் பைத்தியக்காரர்

களையும் ஒன்றாக்கியுள்ளார். ஆங்கிலப்புலவர் ஷேக்ஸ்பியர், "உலகில் கற்பனையாளர்கள் மூவர்; அவர்கள் பைத்தியக்காரர்கள், காதலர்கள், கவிஞர்கள்" என்றார். (The lunatic, the lover and the poet are of imagination all compact.) இம்மூவரும் கற்பனையின் மொத்த உருவமாயினும், அவர்கள் நோக்கு வேறானவை என்பதை, "பைத்தியக்காரன் தன் எதிரே தோன்றும் யாரையும், எதையும் பேயாகவே கற்பனை செய்வான்; காதலன், பார்க்கும் அனைத்திலும் தன் காதலியைக் கற்பனை செய்வான்; கவிஞர்களின் கற்பனையோ விண்ணுக்கும் மண்ணுக்கும் தாவி, எளிய செய்திக்கும் ஓர் ஏற்றத்தையும் பெருமையையும் தரும் வல்லமை வாய்ந்தது" என்று அழகுபட விரித்துரைப்பார். இவ்வாறு கற்பனை மிக்கவராய்க் காதலரையும் பைத்தியங்களையும் ஷேக்ஸ்பியர் அடக்குவது போலக் கலைக்கூத்தனும் தம் சிலேடைப் பாட்டில், தானாய்ச் சிரித்தல், தடுமாறிப் பேதலித்தல், வாய் பிதற்றுதல், தூக்கமிழத்தல் ஆகிய பண்புகளை ஏற்றிக் காதலர்களையும் பைத்தியக்காரர்களையும் ஒன்றாக்கிக் காட்டுகிறார்.

எண்ணங்களின் உடையே மொழி என்றார், அறிஞர் ஜான்சன் (Language is the dress of thought). நண்பர் கலைக்கூத்தனின் எண்ணங்களின் கவின்மிகு உடையாய் இக்கவிதைநூல் திகழ்கிறது. ஆறு பகுதிகளைக் கொண்டுள்ள இந்நூல் கவிதை வானில் ஆறு கலைகளைக் கொண்ட அழகுப் பிறையாய் ஒளி வீசிச் சிறக்கிறது. வண்ணமதியின் வளர்கலை யொப்பக் கூத்தனின் கவிதைக்கலை மேன்மேலும் வளர்ந்து முழுநிலவாக முகிழ்ப்பதாகுக!

வாழ்க, நண்பர் கலைக்கூத்தன்!

வளர்க, அவர்தம் கவியாற்றல்!

நூல் ஆக்கம்	கவிஞர் கலைக்கூத்தன்
வகைமை	கவிதை
வெளியீடு	தமிழ்ப் படைப்பு மேம்பாட்டு மன்றம், பம்பாய்–19. (1973)

9

கலைஞர் ஐம்பது

தமிழகத்தை ஒளிமயமாக்கித் திகழ்ந்துவரும் எழில்ஞாயிறாம் கலைஞருக்குத் செந்தமிழ்ப்புலவர் திரு.தேவநேயச் சித்திரன், சங்கப்புலவர் வழிநின்று, இங்கு ஐம்பது கவிதைகள் பாடியுள்ளார். குவளையந் தோன்றலும், தென்றமிழ்ப் படைப்பனும், முத்தமிழ்த் தும்பியுமாகிய முதல்வரைக் கண்ணின் பாவையாய், பூவின் மணமாய், தளிரின் பொலிவாய், வளநில விளைவாய், ஏரதன் சீராய்ப் 'பீடுற நெடிது வாழ்க'வென வாழ்த்துகிறது, கவி நெஞ்சம்!

கவிஞர் இந்நூலினைப் புறநானூறு அமைப்பு முறையைப் பின்பற்றிப் பாடியுள்ளார். புறநானூற்றில் அமைந்துள்ளது போலவே இந்நூலிலும் திணை, துறைகள் அமைந்து சிறக்கின்றன. பாடப்பெறும் தலைவனுடைய புகழ் முதலியவற்றை ஆய்ந்து கூறுவது பாடாண்திணை எனப்படும். இந்நூல் பாடாண் திணையில் கலைஞரின் தாய்மை நெஞ்சும், தந்தைமைப் புரப்பும், கொள்கையாகவே வாழ்ந்துவரும் குன்றாச் சிறப்பும், பகைவரிடத்தும் பண்பு காக்கும் பாங்கும், ஒப்பிலாத் தமிழால் ஒப்பிலா விளைக்கும் உயர்தனிச் சிறப்பும் பரக்கப் பேசப்படுகின்றன.

பெற்ற வெற்றிகளைச் சொல்லிப் புகழ்வது, வாகைத்திணை. கலைஞர் ஈட்டியுள்ள வெற்றி, கடலினும் பெரிது. 'பூம்புகார் புதுக்கியவர், இரவலர் வாழ்ந்திட இல்லம் அமைத்தவர், உழுதாண் விளைத்திட நிலமில்லார்க்கு நிலம் ஈந்தவர், பசுமைப்புரட்சியால் பசிப்பிணி தவிர்த்தவர், மக்களை மக்களே இழுத்திடும் இழிவினைத் துடைத்தவர், நெசவாளரின் வற்கடத்தை ஓட்டியவர் என்ற சில துளிகளை மட்டுமே கவிஞர் இந்நூலில் எடுத்துக் காட்டியுள்ளார். இவ்வாறே வஞ்சி, தும்பை, பொதுவியல் திணைகளையும் பண்டைய இலக்கண மரபு வழாது பாடியுள்ளார்.

கலைஞர், பகைவர் பக்கம் கண் திருப்பிய அளவிலேயே பகை அழிந்தது என்பது தவிர, எதிர்த்து நிற்கும் ஆற்றல் பெற்றதில்லையாதலாலே காஞ்சித்திணை இங்கு வேண்டாத தாயிற்று. பகைவரால் சூழப்பட்டார் தம்மைப் பாதுகாத்துக் கொள்ள முயலுதல், நொச்சித்திணை. கலைஞர், பகையைச் சூழ்ந்து சாடி அழிப்பவர்; ஆனால், அ வரைப் பகை வலியழித்ததாய் வரலாறு இல்லை. எனவே, நொச்சி, பகைவர்க்கு வேண்டுமே தவிரக் கலைஞர்க்கு எதற்கு? வெட்சியும் கரந்தையும் இவ்வாறே!

கடலால் கொள்ளப்பட்டு அழிந்து மறைந்த பூம்புகார், இன்று கலைஞரின் கண்பார்வை பட்டதால், பட்டினப்பாலை யிலும் சிலப்பதிகாரத்திலும் கூறப்படுவதுபோல பொலிவுடன் தோற்றமளிக்கிறது. கவிஞர் இதனை நயம் பொருந்தக் குறிப்பிடுகிறார்.

பூவாய்ப் போகிய பூம்புகாரப் பெருநகர்
பூம்பொழில் நேரப் பொலிவுறப் புதுக்கியே –

மண்ணோடு மண்ணாய்ப் போகிய பூம்புகார் இன்று மலர்ச் சோலையாய்க் காட்சி தருகிறது என்பது இதன் பொருள். பூ நிலையில் இருந்த புகாரைப் பொழில் நிலைக்குக் கலைஞர் மாற்றிவிட்டார் என்ற நயமும் ஈண்டு மிளிர்கிறது. இந்நூலின் கவிதை நயத்திற்கு இவ்வடிகள் எடுத்துக்காட்டு.

தமிழகம் இன்பப் பூங்காவாய் இயங்கிவரக் கலைஞரின் அறிவும் ஆற்றலும் தொண்டும் தொடர்ந்து வேண்டும் என்பதால் அவர் நெடிது வாழத் தம் வாழ்நாள், அவர் வாழ்நாளோடு சேர்ந்து கூடவேண்டும் என்ற ஆசையை

.........என்னுயிர் முகந்தே
நின்னுயிர் சொரிந்தே பின்னும் வாழிய

என்று வெளிப்படுத்துகின்றார். இவ்வடிகளில், "யான்வாழு நாளும் பண்ணன் வாழிய" என்று சிறுகுடி கிழான் பண்ணனைச் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் பாடிய குரல் ஒலித்திடக் கேட்கின்றோம்.

சிந்தனை வளமும் செயல் துடிப்பும் மிக்க கலைஞர் ஒருவராற்றான் நாட்டுக்கு நாளும் வேண்டுகின்ற நல்ல செயல்களை ஆற்றமுடியும் என்ற நம்பிக்கையில் அனைத்துக்கும்,

நீ ஆள்போழ்தே காலிடல் வேண்டும்

'என்கிறார். இது புரவலனுக்குப் புலவர் விடுக்கும் வேண்டுகோள்.

ஐம்பது பாடிய நினக்கே ஈரைம்பது
யானே பாடிடல் வேண்டும்.

இது கவிஞரின் ஆசைமட்டுமன்று; தமிழ் மக்கள் அனைவரின் விருப்பமுமாகும். தமிழ் நெஞ்சங்களின் ஒருமித்த குரலை இவ்வடிகளில் உணர்கிறோம்.

கலைஞரின் தொண்டுபோல் இந்நூல் கவிச்சுவையும், கவிச்சுவைபோலக் கலைஞரின் தொண்டும் ஒன்றோடொன்று இணைந்து இனிக்கின்றன. இனிப்பும் இனிப்பும் சேருவதால் அதனை உண்ணும் நமக்கு மகிழ்ச்சிதானே!

வாழ்க கலைஞர்! வளர்க திரு. தேவநேயச்சித்திரனின் கவிச்சுவை!

நூல் ஆக்கம்	இ. தேவநேயச் சித்திரன்
வகைமை	கவிதை
வெளியீடு	சித்திரச் செல்வி விளைப்பகம், சென்னை. (1974)

10

நெருப்புப் பூக்கள்

'பாஞ்சாலி சபதம்' பாடுகின்ற பாரதியார், துரியோதனன் மாளிகை கட்டினான் என்பதைக் கூறும்போது,

> கல்லையும் மண்ணையும் பொன்னையும் கொண்டு,
> காமர் மணிகள் சிலசில சேர்த்துச்,
> சொல்லை யிசைத்துப், பிறர்செயு மாறே
> சுந்தர மாம்ஒரு காப்பியஞ் செய்தார்

என்று குறிப்பிடுகின்றார். கல்லையும் மண்ணையும் கலந்து, ஆங்காங்கே மணிகளையும் பதித்து அழகுற மாளிகையை உருவாக்குவது, புலவர்கள் சொற்களைச் சேர்த்து அவற்றுடன் கற்பனையையும் கூட்டிக் காவியம் படைப்பதுபோல இருக்கிறது என்று கூறி, மாளிகையைக் காப்பியமாக்குகின்றார், அம் மாக்கவிஞன். கல்லையும் மண்ணையும் கொண்டு வீடு கட்டும் துறையில் கோட்டக் கணக்காயராய்ப் பணியாற்றும் என் அருமை நண்பர் செவ்வியன், வீடு கட்டும் வேலையுடன் பாரதியார் கூறுவதுபோலச் சொல்லையிசைத்துச் சுந்தரமானதொரு கவிதை நூலை இயற்றியுள்ளார். மாளிகையில் வரவேற்பறை, சமையலறை, புனைவறை, பள்ளியறை எனப் பல்வேறு அறைகள் இருப்பது போல இந்நூலிலும் இறைமை, சமுதாயம், தாய்த்திருநாடு, அரசியல், பல்சுவை எனப் பல பகுதிகள் உள்ளன.

ஒவ்வொரு வகை அறையும் அவ்வவற்றிற்குரிய அமைப்பு களையும் ஒழுங்குகளையும் செவ்வனே பெற்றுத் திகழுமாறு போல, இந்நூல் மாளிகையில் உள்ள அறைகளாகிய பல்வேறு பகுதிகளும் அவ்வவற்றிற்குரிய எல்லாம் பொருத்தமுற அமைந்து சிறக்கின்றன.

கவிஞர் இறையிடம் வேண்டுவன பொன்னும் பொருளுமன்று.

> எண்ணத்தில் உயர்வைத் தந்தே
> ஏழையைக் காப்பாய் அம்மா

என்றும்,

விரிவுடை உள்ளம் தந்து
வெற்றியை ஏழைக் கீவாய்

என்றும், எண்ண உயர்வையும், விரிந்த உள்ளத்தையுமே வேண்டிக் கரைகின்றார்.

கவிஞர்கள் புதுமையைப் படைக்கவேண்டும்; தீமைகளைத் தளராது எதிர்க்கவேண்டும்; வளமை காணவேண்டும் என்று செவ்வியன் விரும்புகிறார். அந்த விருப்பத்தை, ஆர்வத்தை நூல் முழுதும் நம்மால் காணமுடிகிறது.

புதுக்கருத்தைப் பூமிதனில் விதைப்போம் வாரீர்!

மாறுபட்டுத் துயரதனைப் படைப்போர் தம்மை
மாய்த்திடவே தூவிடுவோம் நெருப்புப் பூக்கள்!

உரங்கொண்ட தோள்களினால்
உலகமதை மாற்றிடுவோம்.

வீணர்களை அழித்திங்கே அறத்தைக் காக்கும்
விதிசெய்வோம் சமநீதி வழங்கு தற்கே.

வற்றிய மனிதர் தாமும்
வளமுறும் வகையைச் செய்வோம்.

என்ற அவர் கவிதை அடிகள் கவிஞரின் துடிப்பு உள்ளத்தை, தூய்மை உள்ளத்தை, பொதுமை உள்ளத்தை, பொல்லாங்கு களையும் உள்ளத்தை நமக்குப் புலப்படுத்துகின்றன.

நண்பர் செவ்வியன் அவர்களின் முதல் படைப்பு, இந்நூல். முதற்படைப்பே முழுமையான படைப்பாய் அமைந்திருப்பது பாராட்டுக்குரியது. சூலுற்ற மேகம்போல, இவர் கவிதைகள் கருத்துச்செறிவோடு உள்ளன. துய்ப்பாகிய குளிர்காற்றுப் படும்போது அவை இன்ப மழையைக் கொட்டுவனவாய் இலங்குகின்றன.

தீமையைச் செய்து போற்றும்
செய்ந்நன்றி அழிக்கும் கூட்டம்,
ஈமத்தில் கிடத்தித் தீயை
ஏற்றிடக் கவிநா னுள்ளேன்

என்று கூறும் அவருடைய தன்னம்பிக்கை உள்ளம் நின்று நிலவி வளர்வதாகுக!

நூல் ஆக்கம்	கவிஞர் செவ்வியன்
வகைமை	கவிதை
வெளியீடு	பூவழகி பதிப்பகம், சென்னை. (1973)

11

வண்ணை வளவன் கவிதைகள்

வாழையடி வாழை!

வளமான கவிதைகளைப் படைத்து வளர்ந்து வருகின்ற இளங்கவிஞர் பரம்பரையில் நண்பர் வண்ணை வளவன் ஒருவராய்த் திகழ்ந்து வருகிறார்.

> ஆண்டுவரும் தீந்தமிழில் ஆர்வமுடன் பாடலினை
> மூண்டுவரும் கற்பனையில் முன்னின்று.....

என்று கூறுகின்ற முன்னணிக் கவிஞராய் இந்நூலுள் இவர் காட்சியளிக்கின்றார். தம் கவிதைப் பிறப்புக்குப் பாரதிதாசனையும் பாரதியாரையும் முறையே தாய் தந்தையராக்கி,

> எந்தைதாய் பெருமை நிலைக்க
> எந்நாளும் முயல்வேன்; கஞ்சி
> கந்தலில்லா மனிதர் உயரக்
> கவிதன்னைப் புனைவேன் நாளும்

என வாழையடி வாழையாய் வருகின்ற புதுமைப் பரம்பரையில் தாமும் ஒருவர் என்பதை உறுதிப்படுத்துகிறார்.

நூலின் உட்பொருள்

இந்நூலுள் 22 தலைப்புகளில் இனிய கவிதைகள் அடங்கி யுள்ளன. ஈன்றெடுத்த தம் தாய் தந்தையரையும், வாழ்வில் துணைநிற்கும் தம் இல்லாளையும், கவிதைப்பணியில் ஊக்குவிக்கும் நண்பர்களையும், கவிதைப்புரவலராய்த் திகழ்ந்து வரும் நண்பர் பலராமனையும், 'ஏத்தும் என் நெஞ்சு' என உளங்குளிர்ந்து பாடுகிறார். அடுத்து, 'அன்னைத் தமிழை' வாழ்த்துகிறார்; இறைவனை வேண்டி வரம் கேட்கிறார். தம் உள்ளம் நிறைந்த அம்பிகையாம் கருமாரியைக் 'கருமாரிக் கவிமாலை', 'அன்பு வெள்ளம்' என்று இருபாக்களில் அன்புருக இறைஞ்சுகிறார். 'கூட்டலும் கழித்தலும்', 'எல்லோரும் என்னை வெறுக்குறான்' என்னும் இருபாடல்களையும் நாட்டுப்புறப்

பாடலமைப்பில் படைத்திருக்கிறார். 'ஓடும் நதி', 'பெரியபாளையம் போக' என்னும் இரு கவிதைகளும் இயற்கையை அழகுறப் படம் பிடித்திருக்கின்றன. 'துணிந்து நில்' என்னும் பாட்டு உலகுக்கு இவர் கூறும் எழுச்சி உரையாகும். 'விண்மீன்கள்', 'பனித்துளி' என்னும் இருகவிதைகளும் இவரது 'உருவகத் திறமை'க்குச் சான்று பகர்கின்றன. 'என் மனைவி', 'துயரெல்லாம் தீர்த்திடவே', 'பக்கம் வாவா' என அழைக்கும் மூன்று கவிதைகளும் காதற் பாக்களாகும். ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எழுபத்து ஏழாம் ஆண்டுக்கு விடை கொடுக்கிறது, 'அன்பே போய்வா' என்னும் பாடல். 'பூப்பு', 'மது' என்னும் இரு பாக்களிலும் தலைப்புச் சொல்லே ஒவ்வோர் அடியிலும் சொற்பின்வரு நிலையில் அமைந்திருப்பதைக் காண்கிறோம். 'வழிகாட்டி', 'வாழிய பல்லாண்டு' என்னும் இரு பாடல்களிலும் தமக்கு வழிகாட்டிய, காட்டுகின்ற தலைவர்களை வாழ்த்துகிறார். 'பாரதியும் தாசனும்' என்னும் பாடலில் அவர்கள் இருவரும் தம் கவிதைக்கு வழிகாட்டியாய்த் திகழ்வதை எடுத்துக் கூறி, 'வெண்பாக்கள்' என்னும் தலைப்பில் வெண்பாப் புனையும் தம் ஆற்றலை வெளிப்படுத்திக் காட்டுகிறார். இதுவே இந்நூலின் சாரமாகும்.

நன்னெஞ்சம்

கள்ளமற்று, கடமையுணர்வோடு, பொல்லாங்கை நினையாது, பொறுமையின் சின்னமாய், எல்லோர்க்கும் இனியவே செய்து, ஏழ்மையை அகற்றி, பிறர் துன்பம் களைந்து தாம் வாழ வேண்டுமெனக் கவிஞர் வேண்டுவது அவரது நன்னெஞ்சைக் காட்டுகிறது.

கணிதக் கருத்து

கடமையைக் கூட்டி, மடமையைக் கழித்து, நாட்டின் மதிப்பினைப் பெருக்கி, கட்டுப்பாட்டை எல்லோரும் வகுத்து வாழ வேண்டும் என்னும் கணிதக் கருத்து அருமையாய் உள்ளது.

கற்பனை

நதியை மங்கையாக்கி, கடலைக் கணவனாக்கி, அவர்கள் கலந்து மகிழ்வதைப் பிரிக்கின்ற கொடுமையாளனாய்க் கோடையைக் குறிப்பிடுவது நல்ல கற்பனை.

உருவகம்

> வானப் பிள்ளைகள் நிலவுப் பானையில்
> வடித்த சோற்றை வாரி யிறைத்ததோ

என விண்மீன்களையும்,

கடற்கன்னி தருகின்ற
கவின்முத்தை ஒக்க – மண்
உடற்கன்னி தருகின்ற
சிப்பியிலா முத்து

எனப் பனித்துளியையும் கூறியிருப்பது அரிய உருவகங்கள். பனித்துளியைச் சிப்பியிலா முத்து என்று கூறுவது உள்ளத்தை கொள்ளை கொள்கிறது.

வரிசையில் ஒருவர்

விண்மீன்கள் கவிஞர்களிடம் அரிய கருத்துகளைத் தோற்றுவித்துள்ளன. தமிழன்பன் அவர்கள் விண்மீன்களை,

வானம் எழுதிய காதல் வரிகளின்
அச்சுக் குலைந்த எழுத்துச் சிதறல்;

விசும்புக் குடையில் விழுந்த ஓட்டைகள்;

மெருகிட்டு மேகம் துடைத்து வைக்கும்
வானக் கடையின் வயிரத் துண்டுகள்

என்கிறார்.

கவிஞர் தேசிகவிநாயகம் பிள்ளை அவர்களோ, "நிலவுக்குத் திருமணமோ? அவன் உலா வரப்போகிறானோ? அதற்காக அமைக்கப்பட்ட முத்துமலர்ப்பந்தல்தானோ இவ்விண்மீன்கள்?" என்ற கருத்தில்,

முல்லை மலர்ப்பந்தல் இட்டனரோ? – தேவர்
முத்து விதானம் அமைத்தனரோ?
வெல்லும் மதியின் திருமணமோ? – அவன்
விண்ணில் விழாவரும் வேளையிதோ?

எனச் சுவைபடக் குறிப்பிடுகிறார்.

நிலவுப்பெண்ணைக் கதிரவன் கூடியபோது அவள் கூந்தல் தளர்ந்து கட்டவிழ்ந்ததால் கொட்டிய பூக்களே விண்மீன்கள் என்கிறார், கவிஞர் முடியரசன்.

நிலவணங்கே! உனைக்கதிரோன் கூடுங் காலை,
நீலமுகிற் குழல்தளரக், கட்ட விழ்ந்து,
பொலபொலவென் றுதிர்ந்தநறு மலர்கள் தாமோ,
பூத்திருக்கும் விண்மீன்கள்?

என்பது அவர் கூற்று.

கவிஞர் வாணிதாசன் உடுக்களைப் பார்த்து,

.... நீலவான
நெடுவயலில் தெளித்திட்ட தூள்பின் ணாக்கோ

என வியக்கிறார்.

தேங்காயின் வெண்முடி நிலவோ நீதான்?
திருகிவிட்ட பூத்தானோ விண்மீன் கூட்டம்?

எனக் கேட்கிறார், புலவர் சொக்கலிங்கம்.

விண்மீன்களோ, கோலம் போடுவதற்காக வைக்கப்பட்ட புள்ளிகள். நிலவோ, கோலப்பொடி வைக்கப்பட்டுள்ள கிண்ணம். புள்ளிகள் வைத்தவர்கள் கோலத்தை முடிக்காமல் கிண்ணியையும் அங்கேயே வைத்துவிட்டு எங்கே சென்றுவிட்டார்களோ?

புள்ளிமட்டும் வைத்துவிட்டுக்
கோலம் போடவே – மறந்து
போனதும்யார், கிண்ணிமட்டும்
தனியாய் வாடவே?

என்பது தமிழழகன் கேள்வி.

இரவு என்ற வறுமையாளன் அணிந்துள்ள கந்தல் ஆடையில் உள்ள ஓட்டைகளாய் விண்மீன்கள் தென்படுகின்றன, கவிஞர் தமிழொளிக்கு.

இரவெனும் வறுமையின் கந்தல்உடை – தனில்
எண்ணற்ற கண்களோ விண்மீன்கள்?

என்ற இக்கூற்றில் வறுமையின் கொடுமை இழைந்தோடுகிறது.

சோளப் பொரியை வானத்தில்
தூவிப் பரப்பி விட்டதுபோல்
கோலப் புள்ளி இட்டதுபோல்
குறுகுறு வென்னும் அழகைப்பார்

என மழலையர்க்கு விண்மீன்களைக் காட்டுகிறார், கவிஞர் பாலசுந்தரம்.

இவ்வாறாய் எண்ணற்ற இன்றைய கவிஞர்கட்குக் கருத்து வித்துத் தந்துள்ள விண்மீன் கூட்டம் கவிஞர் வளவனுக்குத் தாராதிருக்குமோ? இவரும்,

வான வங்கியில் துட்டன் போட்ட
வாடும் ஏழை காணாப் பணமோ?

என்னும் அருமையான உருவகத்தைப் படைத்துக் காட்டி வளர்ந்துள்ள கவிஞர் வரிசையில் தம்மையும் இணைத்துக் கொள்கிறார்.

தமிழ்ப்பற்று

முன்னம் மொழியினில் முதலவள் – என்
மூச்சில் உயிரெனக் கலந்தவள்

என்று தமிழைக் குறிப்பிடுவது இவரது தமிழ்ப்பற்றினை வெளிப்படுத்துகிறது.

பயணக் காட்சி

பயணம் செய்கின்றபோது இயற்கை தரும் இன்பத்தைக் கீழுள்ள அடிகள் தெற்றெனப் புலப்படுத்துகின்றன.

> வழிநெடுகப் பூவிறைத்து
> வரவேற்கும் புளியம்;
> பழுங்களையே தரையிறைத்துப்
> பசிதீர்க்கும் நாவல்;
> வழியெல்லாம் குளுமைதரப்
> பசியநிற ஆலம்;
> விழாக்கோலம் பூண்டுநிற்கும்
> வரிசையாகப் பனைதான்!

இங்குக் காட்டப்படும் இயற்கையின் வரவேற்பும் விருந்தோம்பலும் விழாக் கோலமும் நம் நெஞ்சில் ஆலின் நிழல்போலக் குளுமையை நிறைக்கின்றன.

முத்திரை அடிகள்

> பழுத்தஇலை துளிர்ப்பதில்லை உணரணும்; – பழம்
> பஞ்சாங்கப் புத்தியெல்லாம் மாறணும்;
> வளைநண்டாய் வாழுவதில் பயனென்னடா? – அந்த
> வாழ்வினிலே வருகின்ற சுவையென்னடா?

என்னும் அடிகள் இந்நூலில் அவரின் முத்திரை அடிகளாய்த் திகழ்கின்றன.

வளர்க நன்றே

புதுமை நோக்குடன் கவிதைகளைப் படைத்து நாட்டுக்கு நற்றொண்டாற்ற விழைகின்ற நண்பர் வளவன், வளமான கவிதைகட்குச் சொந்தக்காரராய் நாளும் வளர்ந்து சிறக்க வேண்டுமென உளமார விழைகின்றேன்.

நூல் ஆக்கம்	உ. பலராமன் (தொகுப்பாசிரியர்)
வகைமை	கவிதை
வெளியீடு	இளங்கோ இலக்கிய மன்றம், சென்னை. (1978)

12

கவிதை மேகங்கள்

பச்சையப்பன் கல்லூரித் தமிழ்த் துணைப்பேராசிரியர் திரு.மு.பி. பாலசுப்பிரமணியன் என் அருமை நண்பர். அவர் சிறந்த கவிஞர்; இளமையும், எதையும் துடிப்புடன் சொல்லும் திறனும், நல்ல பண்பும் வாய்க்கப்பெற்றவர். பல்வேறு வாய்ப்புகளில் அவர் கவிதைகளைக் கேட்டுச் சுவைத்திருக்கிறேன். இனிய அவர் கவிதைகள் நூலாய் வெளிவந்தால் தமிழுலகம் மகிழும் என்று அடிக்கடி அவரிடம் நான் எடுத்துச் சொன்னதுண்டு. எனது அவ்வெண்ணம் நிறைவேறும் வகையில் அவர் கவிதை நூல் இப்போது வெளிவருவதறிந்து உவகை கொள்கிறேன்.

பாடுபொருளுக்கேற்பக் கவிதைகள் இந்நூலில் பல தலைப்புகளில் அடக்கப்பட்டுள்ளன. தலைப்புகளின் பெயர்களே மிகவும் அழகாயுள்ளன.

கவிஞரின் பாடல்களில் எளிமை தென்படுகிறது; இனிமை தவழ்கிறது; கற்பனை சிறகடித்துப் பறக்கிறது; உணர்ச்சி ஊற்றெடுக்கிறது; வடிவம் வகையுடன் அமைந்திருக்கிறது; கருத்து காண்போரை ஈர்க்கிறது; நயம் நடமிடுகிறது; சுருங்கச் சொன்னால், ஒவ்வொரு கவிதையும் அவரது கவிதைத் திறனை உலகுக்கு உணர்த்துவதாய் அமைந்து சிறக்கிறது.

பாரி வள்ளல் வஞ்சனையால் கொல்லப்படுகிறான்; அவன் மகளிர் பரிதவிக்கின்றனர். கபிலர் கண்ணீர் சிந்துகிறார்; கதறிப் புலம்புகிறார்; அவன் மகளிருக்குத் தாமே தந்தைபோல் இருந்து கடமைகள் செய்வதாய்க் கூறுகிறார். இந்தக் காட்சியைக் கவிஞர் 15 பாடல்களில் துன்பம் இழையோட வரைந்து காட்டுகிறார்.

மலைமுகடு சரிந்ததுவோ? மல்லிகைப்பூ
  மணம்வீச மறந்ததுவோ; கீதம் பாடும்
அலைகடலும் ஓய்ந்ததுவோ?— (பக்.20)

என்பது கபிலரின் உள்ளக் குமுறல்.

இப்பகுதி முழுமையும், "அற்றைத் திங்கள் அவ்வெண்ணிலவில்" என்ற புறப்பாட்டின் விரிவுரையாய் அமைந்து நம்மைப் பாரி மகளிரின் துன்பத்தில் பங்குகொள்ளச் செய்கிறது.

'இதயத் துடிப்புகள்' எனும் பகுதி ஆசிரியரின் அளவிட முடியாத தமிழ்ப்பற்றையும், தமிழ்நாட்டுச் சிறப்பையும், இந்திய ஒருமைப்பாட்டையும் வலியுறுத்துகிறது.

'தமிழ்த்தாய் திருப்பள்ளி எழுச்சி' நம் நெஞ்சில் நீங்கா இடத்தைப் பெறுகிறது. சூடிக்கொடுத்த சுடர்க்கொடியும், தொண்டர்கட்கு அடிப்பொடியும், வாதவூர் வள்ளலுந்தாம் பள்ளியெழுச்சி பாட முடியுமா என்ன? கவிஞர் மு.பி.பா.வும் அந்த வரிசையில் அமையத் தக்கவரே என்பதை இக்கவிதை நிலை நாட்டுகிறது.

சதிபல செய்துனை அழித்திட நினைக்கும்
சழக்கரும் வாழ்கிற காலம்இக் காலம்;
இதயநற் சுடரே; எங்களின் உயிர்ப்பே!
எந்தமிழ்த் தாய்,பள்ளி எழுந்தருள் வாயே! (பக். 31)

என்று தமிழ்த்தாயைத் துயிலெழுப்புகிறார், நம் கவிஞர்.

தமிழ்நாட்டில் பிறந்த தமிழன் தமிழில் பேசக் கூசுகிறான்; ஆனால், தமிழ்த்தாய்க்குப் பிறந்தோம் என்று மட்டும் பேசுகிறான். இந்த இழிநிலையை உலகில் வேறெங்கும் காண முடியாது. தமிழ் வளர்ச்சியில் நாட்டமில்லாரோ இந்நிலை வளர ஊக்கமூட்டுகின்றனர். இது நீடித்தால் என்னாகும்?

ஆழ்கடலே பொங்கிவரும் நிலையைக் கண்டும்
அஞ்சாத தமிழ்மறவர் வழியில் வந்தோர்,
தாழ்வடைந்து போவதுவோ? அவர்கள் பேசும்
தனித்தமிழும் சாவதுவோ? வரலாற் றேட்டில்
வாழ்விழந்து மாய்வதுவோ? தமிழர் என்றும்
வகையற்றுத் திரிவதுவோ? என்றன் தோழா!
சூழ்ச்சியினை முறியடித்து வெல்வோம் என்னும்
சூளுரையை மேற்கொள்வாய் தமிழைக் காப்பாய் (பக். 37)

என்ற கவியின் ஆணை தமிழனுக்குத் தன்மானத்தை ஊட்டுகிறது. இது பாலசுப்பிரமணியன் பாடலா, பாரதிதாசன் பாடலா என்று எண்ணுமளவுக்கு வேக உணர்வு கொண்டதாய் விளங்குகிறது.

சமுதாய நலமே கவிஞர்களின் குறிக்கோள். சமுதாயத்தில் தீய சக்திகள் வளர்ந்து ஆக்கம் குறைகின்றபோது அவர்கள் உள்ளம் அல்லலுறுகிறது. மூடநம்பிக்கைகள், சாதி சமயச் சண்டைகள், முதலாளி - தொழிலாளிப் போராட்டங்கள், சுரண்டல்கள் ஆகியவை தலைவிரித்தாடினால் சமுதாயம் முன்னேறுவதெங்கே?

விதியை நம்பி மனிதஇனம் தேம்புதல் நன்றோ? – சிலர்
வீதியிலே நாதியற்றுச் சாதலும் நன்றோ?
சாதியினால் மதங்களினால் தாழ்வதும் ஏனோ? – அந்தச்
சாக்கடையில் சமுதாயம் வீழ்வதும் ஏனோ?

என்று கவிஞர் வருந்துகிறார்.

புதிய சமுதாயம் பூக்கவேண்டும் என்பது கவிஞரின் ஆசை.

கவிஞர்கள் அழகைச் சுவைக்கத் தெரிந்தவர்கள். நாம் கண்டும் காணாதவற்றைக் கண்டு சொல்லும் ஆற்றல் அவர்கட்குப் பிறவியிலேயே அமைந்துவிடுகிறது. கவிஞரின், 'அழகின் சிலிர்ப்புகள்' எனும் பகுதி இயற்கை இன்பம் விழைவோர்க்கு ஒரு சொர்க்கப் பகுதியாகவே அமைந்துள்ளது.

சலசலக்கும் சிற்றாறு; சாய்ந்த தென்னை;
சதிராடும் நீர்வீழ்ச்சி; சரியும் பூக்கள்;
கலகலக்கும் மலைச்சாரல்; கமழும் பூங்கா;
கார்மேக விளையாட்டு; மின்னல் வெட்டு. (பக். 57)

'பருவக் கனவுகள்' எனும் பகுதி காதல் வயப்பட்டோர்க்குக் கற்கண்டுக் கட்டி. உள்ளங்கள் ஒன்றிவிட்டால் மட்டும் போதாது; அவ்வுள்ளங்கள் உறுதி தளராதிருக்க வேண்டும்.

மணந்தாலும் அவளைத்தான் மணப்பேன் – நான்
மடிந்தாலும் அவளோடு சேர்ந்தேதான் மடிவேன் (பக். 86)

என்று தடைகளை மீறிக் காதலன் ஒருவன் உறுதியோடு இருப்பது உண்மைக் காதலின் உயர்வைக் காட்டுகிறது.

தமிழகத்தின் தனிப்பெருந்தலைவராய் விளங்கும் அறிஞர் அண்ணாவின் மறைவு கேட்டுக் கவிஞரின் உள்ளமே வெடிக்கிறது.

வெடிக்கட்டும் பூமிப்பந்து;
வீழட்டும் விண்மீன் கூட்டம்;
துடிக்கட்டும் நெஞ்சம்; கெட்டுத்
தொலையட்டும் கவலை யில்லை;
பிடிக்கட்டும் காலன் எம்மைப்
பிணிக்கட்டும் அண்ணா வோடு— (பக். 157)

என்று தொடங்கிப் பலவாறாய்க் கவிஞர் புலம்புவது அண்ணாவை இழந்த ஒவ்வோர் உள்ளத்தின் ஏக்கக் குரலாகும். மேலும், "அவர் அண்ணாவிற்குச் சூட்டியிருக்கும் பாமாலை, படிப்போர் உள்ளத்தைப் பாகாய் உருகச்செய்வதாய் உள்ளது.

ஏடகத்தில் மடல்எழுதி
எழுச்சியினை ஊட்டிவந்த ஏந்தல் எங்கே?
நாடகத்தில் நெடுங்கதையில்
நற்கருத்தை வழங்கிவந்த நல்லோன் எங்கே?

வீடகத்தில் இருள்விலக்கி
  விழிப்புணர்ச்சி ஒளிகொடுத்த வேங்கை எங்கே?
ஆடகத்தில் பசும்பொன்னாய்
  அருந்தமிழை ஆக்கிவைத்த அண்ணா எங்கே?

அண்ணா எங்கே? அண்ணா எங்கே? கண்ணீர்த்துளிகள்தாம் மறுமொழி. இங்கே உணர்ச்சிக்கேற்பச் சொற்கள் கவிஞரிடம் கைகட்டிப் பணி செய்துள்ளன.

அக்காலத் தமிழ் மன்னன் பாரியைப் பிரிந்த அவன் மகளிர் புலம்புவதில் தொடங்கிய ஆசிரியர், இக்காலத் தமிழ் மன்னன் அண்ணாவைப் பிரிந்த தமிழ் மக்கள் புலம்புவதோடு நூலை முடித்திருப்பது அவரது பதிப்புத் திறனை வெளிப்படுத்துகிறது.

நண்பர் பாலசுப்பிரமணியனின் 'கவிதை மேகங்கள்' பொழிந்த தமிழ் வெள்ளம் இந்நூலாற்றில் கரைபுரண்டு ஓடுகிறது. உங்களை நான் சிறிதே அதில் நனைய வைத்துள்ளேன். நீங்களாகவே அக்கவிப்புனலில் நீந்தித் திளைத்து மகிழ வேண்டும் என்பது என் ஆசை. இருபதாம் நூற்றாண்டில் இந்த ஒப்பற்ற உயரணிகலத்தைத் தமிழ்த்தாய்க்குச் சூட்டியுள்ள நண்பர்க்கு என் நெஞ்சார்ந்த வாழ்த்துகள்.

நூல் ஆக்கம்	கவிஞர் மு. பி. பாலசுப்பிரமணியன்
வகைமை	கவிதை
வெளியீடு	பாரி நிலையம், சென்னை. (1979)

13

குணங்குடி மஸ்தான் சாகிபு அவர்களின் திருப்பாடற்றிரட்டு

சிறந்த மெய்ஞ்ஞானியாகிய குணங்குடி மஸ்தான் சாகிபு அவர்களின் பாடல்களைத் தக்க குறிப்புரைகளுடன் அறிஞர் ரஷீத் அவர்கள் பதிப்பித்துள்ள செயல் பாராட்டுக்குரிய ஒன்று. இசுலாமியத் தத்துவ ஞானியரும், புலவர்களும் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு ஆற்றியுள்ள தொண்டினை அறிந்து மகிழ இத்தகு நூல்கள் இன்னும் பெருமளவில் வெளிவர வேண்டும்.

மஸ்தான் சாகிபு (கி. பி. 1788–1835)[1]

மஸ்தான் சாகிபு இசுலாமிய ஞானியேயாயினும் அவரிடம் பக்தி பூண்டிருந்த இந்துக்கள் பலர் அவருக்குச் சீடராய் இருந்திருக்கின்றனர். அவருள் ஒருவராய ஐயாசாமி முதலியார் என்பார், 'குணங்குடிநாதர் பதிற்றுப்பத்தந்தாதி' என்னும் ஒரு நூலை இயற்றியுள்ளார். மகாவித்துவான் திருத்தணிகைச் சரவணப் பெருமாளையர் அவர்கள் மஸ்தான் சாகிபு பேரில், 'நான்மணி மாலை' யாக நாற்பது பாடல்களைப் பாடியுள்ளார். வெங்கட்ராயப் பிள்ளைக்கவிராயர், கோவளம் அருணாசல முதலியார் மகன் சபாபதி முதலியார் ஆகியோர் பாடியுள்ள மஸ்தான் சாகிபு தோத்திரப் பாடல்கள், இந்துக்கள் இவர்மீது எத்தகைய அன்பும் பக்தியும் பூண்டிருந்தனர் என்பதை வெளிப்படுத்து கின்றன.

காயற்பட்டினம் ஷெய்கப்துல் காதிர் நயினார் லெப்பை அவர்கள் பாடியுள்ள, 'வாயுறை வாழ்த்தி'லிருந்து மஸ்தான் சாகிபின் வாழ்க்கை வரலாற்றினை நாம் ஓரளவு அறிய முடிகிறது.

---

1. தமிழ்க் கலைக்களஞ்சியம், இதனை 1800-1847 எனக் குறிப்பிடுகிறது.

வரலாறு

மஸ்தான் சாகிபின் முன்னோருள் ஒருவராய (அவர் முப்பாட்டனார்) நூறுத்தீன் என்பார் மதுரையில் வாழ்ந்தவர். அவர் கலைக்கடலின் கரை கண்டவர்; இசை வல்லுநர்; குர்ஆனைத் தமிழில் மொழிபெயர்த்துத் தந்த மேதையுமாவார். மஸ்தான் தந்தையார் இல்லறம், துறவறம் ஆகிய இருவகை ஒழுகலாறுகளையும் நல்லறமாய் நடத்திய பெரியவர். மஸ்தான் சாகிபின் இயற்பெயர் சுல்தான் அப்துல் காதிரு லெப்பை என்பதாம். இவர் பிறந்த இடம் மதுரை எனச் சிலரும், இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள குணங்குடி எனச் சிலரும் கூறுவர். இவர் இளம் வயதிலேயே இலக்கண இலக்கியங்களை நன்கு கற்றுணர்ந்தார். திருமணத்தை வெறுத்துத் தவவொழுக்கம் மேற்கொள்ள விரும்பித் தம் 17ஆம் வயதில் தந்தையார் ஆசி பெற்றுக் கீழக்கரை சென்று, அங்கிருந்த செய்கப்துல் காதிரி லெப்பை ஆலிம் என்பாரிடம் இசுலாமிய மார்க்கக் கல்வி பயின்றார். கற்று முடித்ததும் ஆலிம்[1] என்ற சிறப்புப் பெயர் பெற்றார்.

> அருள்நபி கிசுறத்து ஆயிரத்து இருநூற்று
> இருபதோடு இருநான்கு ஆண்டினில், உலகம்
> முற்றுந் துறந்து[2]

என்ற அடிகளால் ஹிஜிரி 1228 (கி.பி. 1805) இல் துறவறம் பூண்டார் எனத் தெரிகிறது.[3] பின்னர், ஞான குருவைத் தேடி, அதுவேளை திரிசிரபுரத்தில் சிறந்த ஆலிமாய் விளங்கிய மௌலவி ஷாம் சாகிபு அவர்களை அடைந்து, தீட்சை பெற்று, 'பகலெல்லாம் நோன்பும் இரவெல்லாம் தொழுகையுமாய்' இருந்து வந்தார்.

உலகச் சந்தடியிலிருந்து சிறிது காலம் ஒதுங்கியிருக்க விரும்பிய இப்பெரியார், சிக்கந்தர் மலை சென்று, அங்கிருந்த குகைகளில் யோக நிலையில் இருந்தார். இவ்வாறே இன்னும் நாகமலை, யானைமலைக் குகைகளிலும், இருளடர்ந்த வனங்களிலும் கால்மேலாகவும் தலை கீழாகவும்

1. இது இமாம்களையும் முப்திகளையும் காஜிகளையும் மௌலவிகளையும் குறிக்கும். இது தமிழ்நாட்டில் அரபு மதரசாக்களில் மார்க்கக் கல்வி பயின்றவர்களைக் குறிக்கப் பயன்படுகிறது. (இஸ்லாமியக் கலைக்களஞ்சியம், தொகுதி-1- அப்துற்றஹீம், பக். 666)

2. ஷைகு அப்துல் காதிர் நயினார் லெப்பை பாடிய வாயுறை வாழ்த்து, அடி 77-79.

3. இதைக்கொண்டு பார்க்கும்பொழுது சாகிபின் காலம் 1788-1835 என்பதே பொருத்தமாய்த் தெரிகின்றது.

சருகுங் கிழங்குந் தழையுங் குழையுங்
கருகுங் கனியுங் காயும் புசித்து

(சிரசாசனத்தில்) இருந்து யோக நிலையில் இறைவனை வழிபட்டு வந்தார். இதுவேளை அவர் பெயர் குணங்குடி மஸ்தான் என்றாயிற்று. பல ஊர்களுக்கும் பயணம் செய்து இறுதியில் சென்னை வந்தடைந்தார். அங்குப் பன்னிரண்டு ஆண்டுகள் தங்கித் தம் 47ஆம் வயதில் முக்திநிலை அடைந்தார்.

அவர் பக்தர்களுள் சிறந்து விளங்கிய சீயமங்கலம் அருணாசல முதலியார் என்பார், சாகிபு அவர்கள் இறை அருளில் தோய்ந்து பாடிய பாடல்களை அனைவரும் அறிந்து பயன்பெற அச்சிட விழைந்து, சாகிபிடம், 'கண்ணோட்டமிட்டு அருள் தருக' என வேண்டி அனுமதியினைப் பெற்றார் என்று தெரிகிறது.

பாடல் தொகுப்பு

மஸ்தான் சாகிபின் பாடல்கள் (1) குரு வணக்கம் (2) முகியித்தீன் சதகம் (3) அகத்தீசர் சதகம் (4) மகமூது நபியாண்டவரைச் சுகானுபவமுறத் துதித்தல் (5) குறையிரங்கி யுரைத்தல் (6) தவராஜ மகிமை சாற்றல் (7) வானருள் பெற்றார் மனநிலையுரைத்தல் (8) ஆனந்தக் களிப்பு (9) கண்ணிகள் (10) கீர்த்தனைகள் என்னும் தலைப்புகளில் அடங்குகின்றன.

குரு வணக்கம்

அவரே கூறுவதுபோல, 'குருபரனை ஒருபரனாகக் கொண்டாடிக் தோத்திரஞ் செய்கிறது' இப்பகுதி. நான் மாபாவி; கல் மனம் கொண்டவன்; கவலைகட்கு நிலையமானவன்; பொல்லார்கள் நேசமே பூண்டவன்; அவகீர்த்தியை ஆள்பவன்; எத்தனைதான் கற்றாலும் கேட்டாலும் மனம் நல்லதோடிணங்கு வதாயில்லை; குருவே உன்னையன்றி என்னை ஆள்வார் எவருமிலர். ஆதலின்

இகபரம் இரண்டினுஞ் சுகதுக்கம் அற்றுயான்
ஈடேற அருள்புரிகவே

என வணங்குகிறது, இப்பகுதி.

முகியித்தீன் சதகம்

வள்ளல் இறசூலின் அருளைப் பெறும்பொருட்டு முன்னிலைக் குருவாகிய குணங்குடி முகியித்தீன் ஆண்டகையைத் தொழுது குறையிரந்து அருளை வேண்டும் நூறு பாடல்களைக் கொண்டது.

அகத்தீசர் சதகம்

குணங்குடி வாழும் அகத்தீசரைக் குருவருள் நிலை, தவ நிலை, துறவு நிலை, நியம நிலை, வளி நிலை, தொகை நிலை, பொறை நிலை, காட்சி நிலை, தியான நிலை, சமாதி நிலை ஆகியவற்றை அருளுமாறு வேண்டுகின்ற - ஒவ்வொரு நிலைக்கும் பத்துப் பத்துப் பாடல்களாக - நூறு பாடல்கள் இப்பகுதியில் உள்ளன.

மகமூது நபியாண்டவரைச் சுகானுபவமுறத் துதித்தல்

பாச வினையென்ற பெரிய முட்காட்டினை வெட்டி, நிர்த்தூளி பண்ணி, வேண்டாதனவற்றையெல்லாம் களைந்து, சமனாக்கி, அறிவுழவு செய்து, பக்தி நீர் பாய்ச்சி, முக்திப் பயிர் விளைவிக்கும் அருளாளனாகிய நபியாண்டவரை இன்பம் பொங்க வணங்கி, தம் நெஞ்சமானது தீமைகளைப் பற்றாதிருக்க அருள் செய்யுமாறு வேண்டுவது, இப்பகுதி.

தவமே பெற வேண்டுமெனல்

ஓடியலைந்து சேர்த்த செல்வமோ உறவோ செத்த பின்பு உடன் வருவதில்லை. இருந்தும் பெண்ணாசை, மண்ணாசை, பொன்னாசை என்ற பேய்கள் விட்டகன்றபாடில்லை. பொய்யான வாழ்விலே பட்டுப் புத்தி தடுமாறுகிறது. குணங்குடி இறைவன் அருளே நிலையானது; நற்றவம் செய்திடின் இக்குணங்குடிப் பதம் தப்பாது வாய்த்திடும் என்பதைப் புகல்கிறது, இப்பகுதி.

குறையிரங்கியுரைத்தல்

என்ன சொன்னாலும் மனம் எள்ளளவும் ஏற்பதில்லை; பாவையரையே நினைந்து பதைக்கிறது; பயமின்றித் திரிகிறது; புன்மையையே நினைக்கின்றது. இக்குறைகளை நீக்கி அருள் புரியுமாறு குணங்குடியாரை இரங்கி வேண்டுவது, இப்பகுதி.

தவராஜ மகிமை சாற்றல்

இது நாகூர் மீரான் சாகிபு அவர்கள்மேல் பாடப்பெற்ற பாடலாகும்.

வானருள் பெற்றோர் மனநிலை யுரைத்தல்

வேல் கொண்டு மார்பில் எறிந்தாலும், தழல் மூட்டி அதிலிட்டு எரித்தாலும், நஞ்சூட்டி நலியச்செய்தாலும் வானருள் பெற்றோர் அஞ்சிடாராயிருப்பர் என உரைக்கிறது, இக்கலி விருத்தம்.

ஆனந்தக் களிப்பு

ஆண்டவனை நினைந்து ஆனந்த மேலீட்டால் பாடுவது. தமக்கிருக்கும் குறை முழுவதையும் இறைவனிடம் நிகழ்த்தி அவற்றை நீக்க இரக்கத் துணிதலை இப்பகுதி கூறுகிறது.

கண்ணிகள்

இரண்டிரண்டு அடிகளால் பாடப்பெற்றுள்ள ஒருவகை இசைப்பாடல். இறைவன் தன்மை, பெருமை, உயிரை வருத்தும் துயர், அத்துயர் நீங்க இறையை வேண்டுதல் ஆகிய செய்திகள் இப் பகுதியில் இடம் பெற்றுள்ளன.

கீர்த்தனைகள்

இறையருளை வேண்டி இசையோடு பாடக்கூடிய இருபத்தொரு கீர்த்தனைகள் இப்பகுதியில் உள்ளன.

கருத்து வளம்

1. பரம்பரையாய்த் தொடர்ந்து ஒரு சாராரிடம் அடிமையாயிருத்தல், 'கொத்தடிமை' எனப்படும். சமுதாயத்தில் கொத்தடிமைத்தனம் அகல வேண்டுமென்னும் எழுச்சிக்காலமிது. ஆயினும், ஆண்டவனிடம் கொத்தடிமை என்பது அடியவர் விரும்பி ஏற்கக்கூடியதும் வரவேற்கத்தக்கதும் என்கிறார், மஸ்தான் சாகிபு. அதனாற்றான் அவர்,

> கொத்தடிமை யானஅடி யேனுமுமை நம்பினேன்[1]

என்று குறிப்பிடுவதைக் காண்கிறோம்.

2. எடுத்துச் சொல்லுகின்ற பொருளுக்கு வரையறையும் விளக்கமும் தருவதில் மஸ்தான் சாகிபு சிறப்பிடம் பெறுகிறார். சான்றாய் முகியித்தீன் சதகத்தில் (5ஆம் பத்தில்) 'சமாதி' என்றால் என்ன என்பதற்குப் பத்துப் பாடல்களில் தந்துள்ள விளக்கம் நெஞ்சை ஈர்ப்பதாயுள்ளது.

> எதுவந்து நேரினும் மாறினும், இரண்டுமொன்(று)
> என்றிருப் பது,ச மாதி[2]
> எனதுயான் என்பதை இடம்பொருளோ(டு) ஏவல்முதல்
> ஈடழிப் பது,ச மாதி[3]

என்பன போன்று ஐம்பது சொற்றொடர்களைச் 'சமாதி'க்கு வரையறையாய்க் கூறியிருக்கக் கண்டு வியக்கிறோம்.

---

1. மஸ்தான் பாடல், முகியி. சத. 10
2. மேலது, 43 : 5
3. மேலது, 47 : 2

3. இறையவன் திருவருளைத் தாம் பெற இயலாது போய்விடுமோ என்பதனை,

நண்டளந் திடுநாழி யாவனோ?[1]

எனக் குறிப்பிடுவது நயம் நிறைந்தது. நாழி என்பது முகத்தலளவைக் கருவி. அதாவது - படி. படி, சிறந்த உணவுப் பொருள்களை அளக்கவும் பயன்படும்; நாற்றம் மிக்க நண்டு, கருவாடு போன்றவற்றை அளக்கவும் பயன்படும். உயர்ந்த பக்திக்கு உறைவிடமாய் உள்ள இந்த உடல், கீழ்மைக் குணங்கட்கு இருப்பிடமாய்த் திகழ்வதைக் குறித்திட, 'நண்டளந்திடு நாழி' என்று குறிப்பிடுவது சிறந்த எடுத்துக்காட்டாகிறது.

4. ஓரிடத்தில் சிறப்புப்பெறும் பொருள் பிறிதோரிடத்தில் அச்சிறப்பினைப் பெறுவதில்லை. 'நான் சிறப்புறும் நிலையில் இருப்பேனோ சிறப்பின்றித் தாழ்வேனோ' என்பதைக் கூறவரும் சாகிபு,

கொலுமன் னரசர்கைக் கோலாவனோ; பாவி
குருடர் கைக்கோ லாவனோ?[2]

என்று குறிப்பிடுகின்றார். கோல் ஒன்றேயாயினும் அஃது அரசன் கையிலிருக்கையில் பெருமையுடனும், குருடன் கையிலிருக்கையில் பெருமையின்றியும் இருக்கின்றது. உலகப்பாசமாகிய குருடன் கைக்கோலாய் இராமல், இறையருளாகிய அரசன் கைக்கோலாய் இருக்கவேண்டுமென்ற அடியவரின் ஆர்வம் இங்குப் புலனாகின்றது. இதே கருத்தை வெளிப்படுத்த,

ஆலா விருஷமென மேலாவ னோ,உதிர்
அதன் சருகுபோ லாவனோ?[3]

என்று கேட்பதும் பொருள் பொதிந்த வினாவாகிறது.

5. ஒன்றோடு நெருக்கமாய் இருந்தும் அதன் இயல்பு உணரார்க்குப் பூஞ்சோலை ஓணானையும், தாமரைக் குளத்துத் தவளையையும் எடுத்துக்காட்டுகளாக்குகிறார். ஓணான், காலம் முழுவதும் பூஞ்சோலையிலேயே வாழ்ந்தாலும் பூவின் மணத்தை உணர்ந்து நுகர்வதில்லை. அதே போலத்தான் பொற்றாமரைக் குளத்திலே பொழுதெல்லாம் அலைந்து திரிந்தாலும், தவளை அங்குள்ள தாமரையின் தேனைச் சுவைத்தறிவதில்லை. உயிர்

1. மஸ்தான் பாடல், குருவணக்கம், விளையாட்டினானந்தம் 7
2. மேலது, முகியி. சத. 40 2
3. மேலது, 40 5

இறைவனுடனே சேர்ந்திருந்தும் அவன் தன்மையை உணர்ந்து துய்க்காதிருக்கிறதே என்ற ஏக்கத்தால்,

பூஞ்சோலை வாழும் ஓணான் எனவும், வீணில்நான்
போகாமல் அருள்பு ரியவும்;
பொற்றா மரைக்குளத் தவளையா காது,உனைப்
புணருதற் கருள்பு ரியவும்[1]

இறைவனிடம் அருள்வரம் வேண்டுகின்றார். கடவுளின் மேன்மையை அறியாத பாவிகளாய் மக்களிருப்பதை,

அரிசிவிலை உலைஅறியுமோ?[2]

என்ற வினாவின்மூலம் வெளிப்படுத்துகின்றார்.

6. மனத்தைப் பேய்க்கு ஒப்பிடுகிறார். பேய் தன் கீழே உலை நெருப்பாய் உலக வாதைகள் இருப்பதை அறியாமல் ஆடிக் களிக்கிறது. அவ்வாறு தெரியாமல் அது ஆடினாலும், 'ஐயனே! அஃது அந்த நெருப்பிலே வீழ்ந்து வெந்தொழிந்து மாயாமல் காப்பாயாக' என, கூடு கொள்ளாது குதிக்கும் மனமானது அஞ்சி அடங்க வரம் கேட்கிறார்.

கொல்லன் உலைமேல் நின்று கூத்தாடும் குறளி, குதி
கொள்ளாமல் அருள்பு ரியவும்[3]

'கொல்லன் உலைமேற் கூத்தாடும் குறளி' என்பதிலுள்ள செய்தியை அறிந்து உணர வேண்டும்.

7. வேட்டைமேற்செல்வோர் தம்முடன் வேட்டைநாயைக் கொண்டுசெல்ல வேண்டுமே தவிர வெறிநாயைக் கொண்டு செல்லக்கூடாது. வெறிநாய் வேட்டைமேல் பாய்வதை விடுத்து இட்டுச் செல்பவன்மீது பாய்ந்து அவனையே கடிக்கும். பிற நாய் கடித்தால் அதனால் பெருங்கேடு இல்லை. ஆனால், வெறிநாய் கடித்தாலோ உயிருக்கே கேடு. மக்கள் இறையருளைப் பெறத் தவம், அன்பு, அருள், தொண்டு ஆகிய பண்புகளைத் தம்முடன் இணையச்செய்யாமல் ஆசை, வெகுளி, அழுக்காறு முதலிய வெறிக் குணங்கட்கு இடமளித்து, வெறிநாய் கொண்டு வேட்டைக்குச் செல்வார்போலத் தம்மையே அழித்துக்கொள்கிறார்களே என்று ஞானி மஸ்தானின் மனம் கவல்கிறது. அதனால்,

வேட்டை பெரிதென்றே, வெறிநாயைக் கைபிடித்துக்,
காட்டிற் புகலாமோ, என்கண்ணே றகுமானே[4]

என்ற கண்ணியும் பிறக்கிறது.

1. மஸ்தான் பாடல், அகத். சத. 100 1-2
2. மேலது, முகியி. சத. 70 : 3
3. மேலது, அகத். சத. 91 : 2
4. மேலது, றகுமான் கண்ணி 22

8. குரு அற்ற நிலையில் ஒருவன் சீர்பெற்று வாழ முடியாது. மாணாக்கர் தவறுங்கால் குரு அவர்களை நெறிப்படுத்தித் திருத்துவார். அதுபோல, மக்களும் இறைவனாகிய குருவை நாடினால் நல்வழிப்படுத்தப்படுவர். இன்றேல், நன்னெறியில் இட்டுச் செல்ல ஆளின்றி மனம்போன போக்கிற்சென்று மாண்டொழிய நேரிடும். எனவே, மஸ்தான் சாகிபு அவர்கள்,

குருவற்ற சீடன்என ஆகாத வண்ணம்நற்
குணமேற்றி அருள்புரிய [1]

ஆண்டவனை வேண்டுகின்றார்.

வண்டுள்ள மாங்கனி சுவையுள்ளதாயிருக்கும். அதனால் இறைவன்,

மாங்காயில் வண்டுபோல், நீங்காத வண்ணம்உள்
மருவிநின்று அருள்புரிய [2]

வேண்டுமென்ற விண்ணப்பம் எழுகிறது. இறைவன் உயிர்கட்கு அருள வேண்டியவை யாவை?

இதயம் திறக்கவும், எதையும் துறக்குமோர்
ஏகாந்தம் அருள்பு ரியவும் [3]

வேண்டுமென்பது மஸ்தான் சாகிபின் விழைவு. இவ்வடிகளில் அவருடைய பரந்த, பற்றற்ற, தூய, தெளிந்த தொண்டு உள்ளம் நன்கு புலனாகின்றது.

9. குணங்குடியார் ஆசைகளைப் பெரிதும் வெறுக்கிறார். உணவு, உடை, உறவு ஆகியவற்றின்மீதுள்ள ஆசையால் உலகம் அல்லலுற்றுழல்வதை எண்ணி நைகிறார். அதனால்,

புதல்வரெனும் முதலைகள் பிடித்துக் கடித்துப்
புசிக்கக் கொடுத்(து) உழல்வனோ;
பொல்லாத காமக் கடற்புலால் என்னுமோர்
பூவை,கைப் பட்டு ழல்வனோ;
கதகதென்(று) எரியும் பணத்தீ மிதித்(து)எனது
கால்கொப்பு ளித்(து) உழல்வனோ;
கட்டுபட் டாடைகள் எனும்நமன் கைவலைக்
கட்டுண்டு நின்று ழல்வனோ [4]

என்ற ஏக்கப் பாடல் பிறக்கிறது.

---

1. மஸ்தான் பாடல், அகத். சதகம் 32 : 6
2. மேலது, 40 : 4
3. மேலது, 68 : 5
4. மேலது, முகியி. சதக. 37 : 1-4

10. உலகில் காணும் தீமைகளை ஞானியர் தாம் செய்த தீமைகளாய்க் கூறி அவற்றை நீக்கியருளுமாறு இறைவனை இறைஞ்சுதல் இயல்பு.

> நஞ்செலாம் ஒன்றாய்த் திரண்டு,உரு எடுத்த,கெடு
> நாசகச் சரீர வம்பன்.[1]

மஸ்தான் தம்மேல் வம்புத் தன்மையை ஏற்றி, உலகினர் சார்பாய் எழுப்புகின்ற உயிர்ப்புக்குரல் இது. முகியித்தீன் சதகத்தில் 6ஆம் பத்தில் உள்ள பாக்களில், மக்கள் எத்தகைய வம்பர்களாயுள்ளனர் என்பதையும், 7ஆம் பத்தில் எத்தகைய பாவிகளாயுள்ளனர் என்பதையும் விளக்கிப் பாடுகின்றார். 8ஆம் பத்தில் உலகைப் பற்றியுள்ள கொடுமைகளைக் கண்டு கலங்கியழுகிறார். 9ஆம் பத்தில் இவ்விடர்ப்பாடுகளிலிருந்து உலகம் நீங்கி உய்வது எக்காலமோ என்றேங்குகிறார்.

இவ்வாறு குறைகளை இறைவனிடம் சொல்லி அழுது, புலம்பி, ஈடேற்ற வேண்டுமென்ற விண்ணப்பமே நூல் முழுதுமுள்ள பாடல்களின் திரண்ட கருத்தாய் அமையக் காண்கிறோம்.

11. தவ வேடம் பூண்ட பலர் பொய்யொழுக்கில் வாழ்வதையும், கஞ்சா, அபினி, கள் முதலியன உண்டு காலம் கழிப்பதையும் காணுகின்ற மஸ்தான் சாகிபு,

> 'கற்பங்க ளுண்டோம்நாம் என்றே', – வெறி
> கஞ்சாவும் கள்ளும் அபினியும் தின்றே,
> துப்புக்கெட் டலையாமல் நின்றே, – அருள்
> தூயமெய்ஞ் ஞானச் சுடரிணைப் போற்றி[2]

வாழ வேண்டுமென வலியுறுத்துகிறார்.

12. ஆசை பெருகப்பெருக உயிர்க்கு நேரும் துன்பங்களும் மிகுந்துகொண்டே போகும்; குறையக்குறையத் துன்பமும் குறையும். ஆசையை அறவே துறக்கும்போது துன்பமே இல்லாத இன்பநிலை கிட்டும். இதைத் தக்கதோர் எடுத்துக்காட்டின்மூலம் சாகிபு விளக்குகிறார். குளிருக்காக ஆடையை மிகுதியும் போர்த்தப் போர்த்தக் குளிரும் மிகுதியாய்த் தோன்றும். ஆடை குறையக் குறையக் குளிரும் குறையும். ஆடையை அறவே இல்லா தொழித்தால் குளிரும் இல்லாதொழியும். குளிருக்கேற்ப உடல் பழகிக்கொள்வதால் குளிர் உடலைப் பாதிப்பதில்லை. தொடக்கத்தில் கடினந்தான். ஆனால், பழக்கம் ஏற்பட்ட பிறகு

1. மஸ்தான் பாடல், முகியி. சதக. 57 5
2. மேலது, ஆனந்தக் களிப்பு 33

குளிர் என் செய்யும்? அதுபோன்றே, ஆசைகளை அகற்றுவது கடினந்தான். ஆயினும், முயன்று அகற்றிடினோ மாயையாகிய குளிரால் எதுவும் செய்ய இயலாது போகும்.

மெத்தத் துணிபோர்க்க மெத்தமெத் தக்குளிரும்;
சற்றுதுணி போர்த்துவரச் சற்றுகுளிர்; – இற்றதுணி
இல்லைக் குளிருமில்லை; இல்லையிது தானுளமே
செல்லக் குணங்குடியார் சீர்.[1]

'ஆசை அறுமின்கள்' என்பதை விளக்க வந்துள்ள அருமையான தத்துவப் பாடல் இது.

சமய ஒருமைப்பாடு

மஸ்தான் சாகிபு அவர்கள் சாதி, மத, சமய வேறுபாடுகள் மக்களைப் பிரிக்கக்கூடாது என்ற கொள்கை உடையவர்.

தீதுமத பேதங்கள் அற்றுமே, எங்குமிது
 செல்வதுவும் எக்கா லமோ?
சாதிவரை யற்றகுரு நாதனே, முத்திநிலை
 தருவதினி எக்கா லமோ?[2]

என்ற அடிகள் அவரது சாதி சமய வேறுபாடற்ற நோக்கினை வெளிப்படுத்துகின்றன.

சாகிபு அவர்கள் இந்து மதக் கோட்பாடுகளை நன்கு உணர்ந்தவர்.

மன்றுள்நின் றாடும்,மெய்த் தவராஜ சிங்கமே.[3]

தெக்ஷிணா மூர்த்தமே.[4]

அளகேசனே, துளவ மணிமார்பனே.[5]

முப்பத்து முக்கோடி தேவர்க்கு முதல்வனே.[6]

என இந்து மதக் கடவுளர்களைக் குறிக்கும் சொற்றொடர்களால் அவர் குணங்குடி அகத்தீசனைப் பாடிப் பரவியிருக்கக் காண்கிறோம்.

இந்துக் கடவுளர்களையும் அவர் பாடிப் பரவியுள்ளார். மனோன்மணிக் கண்ணி, நந்தீஸ்வரக் கண்ணி என்பன இந்துக் கடவுளரை முன்னிலைப்படுத்திப் பாடிய பாடல்களாம்.

---

1. மஸ்தான் பாடல், குறையிரங்கியுரைத்தல் 7
2. மேலது, முகயி. சதக. 89
3. மேலது, அகத். சதக. 4 : 7
4. மேலது, அகத். சதக. 7 : 4
5. மேலது, அகத். சதக. 9 : 7
6. மேலது, அகத். சதக. 7 : 4

இவற்றைப் பாடுதற்கு அவர், 'உமையாள் பாதம் முன்னிற்க' என வேண்டுகிறார்.

ஆதிஅந்தம் கடந்தஉமை யாள்தன் பாதம்,
அகண்டபரி பூரணமாம் ஐயர் பாதம்,
சோதிஅந்தம் கடந்தகண பதியின் பாதம்,
தொழுதிறைஞ்சிக் கரங்குவித்துப் போற்றி செய்து,
ஆதிஅந்தம் கடந்தநந்தி பாதம் என்றும்,
வாலைமனோன் மணியம்மை பாதம் என்றும்,
ஓதிஅந்தங் கடந்தண்டம் இரண்ட தாக
ஒன்றும்அறி யா,வறிஞன் உரைசெய் தானே[1]

என்பது அவர் பாடல். நந்தீஸ்வரக் கண்ணி பாட அவர் உமையாள், சிவபெருமான், கணபதி, நந்தீஸ்வரர் ஆகியோரை வணங்குவதைக் காண்கிறோம். மஸ்தான் சாகிபு சமய ஒருமைப் பாட்டாளராய் விளங்கினார் என்பது இவற்றால் நன்கு புலனாகும்.

பேச்சு வழக்குச் சொல்லாட்சி

மஸ்தான் சாகிபின் பாடல்கள் பேச்சுப் போக்கில் சொல்வது போல அமைந்திருப்பதால் அவற்றில் பேச்சு வழக்குச் சொற்களும் வட்டார வழக்குச் சொற்களும் பல இடங்களில் காணப்படுகின்றன.

(அ) அடியேனும் உமை நம்பினேன் சலுதி வந்தாளுதற்கே[2] - இங்கு, விரைந்து என்பதற்குச் சலுதி (ஜல்தி) என்ற சொல்லை ஆண்டுள்ளார்.

(ஆ) புன்மை குடிகொண்ட கெசபோக்கிலிகள்[3] : மிகவும் குறும்பு செய்பவர்கள், 'கெசபோக்கிலிகள்' எனக் கூறப் பட்டுள்ளனர்.

(இ) சண்டை நின்றிடுவதும் மண்டை பிண்டுடைவதும் சள் என்பது எக்காலமோ?[4] மண்டை பிளந்து உடைவது பிண்டுடைவது எனக் கூறப்பட்டுள்ளது. சாரமற்றது என்பதைக் குறிக்கச் 'சள்' என்ற சொல் ஆளப்பட்டுள்ளது.

(ஈ) உடலும் லொடலொட்டை[5] : லொட லொட்டை என்பதற்கு உள்ளீடற்றது - உறுதியற்றது என்பது பொருளாம்.

---

1. மஸ்தான் பாடல், நந்தீஸ்வரக் கண்ணி, தொடக்கப்பாடல்
2. மேலது, முகியி. சதகம் 18 6
3. மேலது, 53 4
4. மேலது, 82 4
5. மேலது, 85 3

(உ) கொட்டமெல்லாம் விட்டுக் குணங்குடி கொள்ளா வீணர்[1] : இறுமாப்பு என்பதற்குக் 'கொட்டம்' என்ற சொல் பயன்படுத்தப் பட்டுள்ளது.

(ஊ) ஏமசாமம் என்றிலாது தேம்பித் தேம்பி எறிமுச்செறிந்து அழுவனோ?[2] - நள்ளிரவு என்பது பேச்சு வழக்கில், 'ஏமசாமம்' எனப்படுகிறது.

(எ) குணங்குடிக்கு வாரவரை[3] - வருகின்றவர்களை என்ற தொடர், 'வாரவரை' எனக் கூறப்பட்டுள்ளது.

(ஏ) துட்டத் துடுக்கெனும் காமாட்டி ஆட்களும்[4] : காமாட்டி என்ற சொல் மூடனைக் குறிக்கிறது.

(ஐ) டம்ப ஜம்ப நடை உள்ள நீர்[5]

(ஒ) வேடிக்கையும் பகட்டும் பிலுக்கும் சொகுசும் விட்டொழிவது எக்காலமோ![6] - டம்ப ஜம்பம், பகட்டு, பிலுக்கு என்பன பேச்சு வழக்குச் சொற்கள்.

(ஓ) பேச்சு வழக்கிலிருக்கின்ற இரட்டைக்கிளவித் தொடர்கள், பல இடங்களில் ஆளப்பட்டுள்ளன.

மடமட எனவடி நடனம் உள்ளநீர்[7]
கதகத என்று எரியும் பணத்தீ[8]
சதசத என்று அழுகும் துர்க்கந்தச் சாக்கடை[9]
களகள என்று ஆனந்த பாஷ்பம்[10]
குமுகுமு என அதிரசத் தேனொழுகு கனி[11]
நச்சுநச்சு என்று எனை அரற்றுறான்[12]
வங்குவங்கு என்று ரீங்காரமுடனே[13]

---

1. மஸ்தான் பாடல், முகியி. சதகம். கொச்சகக் கலிப்பா 2 : 3
2. மேலது, 80 2
3. மேலது, கொச்சகக் கலிப்பா 3 : 3
4. மேலது, முகமது நபி. சுகானு. 20
5. மேலது, முகியி. சதகம் 59 : 7
6. மேலது, 82 1
7. மேலது, 26 7
8. மேலது, 37 3
9. மேலது, 37 5
10. மேலது, அகத். சதக. 16 4
11. மேலது, முகமது நபி. சுகானு. 58
12. மேலது, அகத். சதக. 3 4
13. மேலது, 85 1

(ஔ) பயன்படாதவர்களைக் குறிக்க, 'வெங்கப்பயல்'[1] என்றும், மனத்திலேயே வெந்து குமைபவனைப் 'புழுக்கப் பயல்'[2] என்றும் கூறுகிறார்.

(க) 'மானம் அழியின் உயிர் மயிர்தான்'[3] - இது மறை பொருளற்ற வெளிப்படைக் கூற்றாய் அமைகிறது.

மஸ்தான் சாகிபும் தாயுமானவரும்

மஸ்தான் சாகிபு, தமக்குமுன் இந்நாட்டில் தோன்றிய மெய்ஞ்ஞானியரின் மொழியையும் பொருளையும் எடுத்தாண்டிருக்கிறார். குறிப்பாகச் சாகிபு அவர்கள் தாயுமானவரிடம் பெரிதும் ஈடுபாடு கொண்டவர் என்று தெரிகிறது. அவர் நடையையும் கருத்தையும் பெருமளவில் பின்பற்றியுள்ளார். சில அடிகளைத் தனித்துக்கொடுத்தால் அவை தாயுமானவர் பாடலா மஸ்தான் சாகிபு பாடலா என்று பிரித்துச் சொல்லமுடியாத அளவுக்கு அவை ஒன்றிணைந்து இருப்பதைக் காணமுடியும். சான்றுக்குச் சில கீழே தரப்பட்டுள்ளன.

(அ) தாயு ஆழாழி கரையின்றி நிற்கவிலை யோகொடிய
ஆலம்அமு தாகவிலையோ?[4]

மஸ் ஆழாழி தானும் அணைகட வாது,ஆணைதனிற்
தாழா(து) இலையோஎன் தாயே நிராமயமே[5]

(ஆ) தாயு சொல்லால் முழக்கிலோ சுகமில்லை மௌனியாய்ச்
சும்மா இருக்க அருளாய்[6]

மஸ் சொல்லுமெய்ஞ் ஞானச் சுகக்கடலை உண்டுயான்
சும்மா இருக்க அருள்வாய்[7]

(இ) தாயு அங்கிங்(கு) எனாதபடி எங்கும் ப்ரகாசமாய்
ஆனந்த பூர்த்தியாகி[8]

மஸ் அங்கிங்(கு) எனவொண்ணா அகண்டபரி பூரணமாய்
எங்கும் நிறைந்த இறையே நிராமயமே[9]

1. மஸ்தான் பாடல், கீர்த்தனை 3 : 1
2. மேலது, 16 3
3. மேலது, மனோன்மணிக் கண்ணி 67
4. தாயு. பாடல், பரிபூரணானந்தம் 9 1
5. மஸ்தான் பாடல், நிராமயக் கண்ணி 40
6. தாயு. பாடல், சுகவாரி 3 : 4
7. மஸ்தான் பாடல், குருவணா. இரக்கத்தினானந்தம் 5
8. தாயு. பாடல், திருவருள் விலாசப் பரசிவ வணா. 1
9. மஸ்தான் பாடல், நிராமயக் கண்ணி 17

(ஈ)	தாயு	பார்க்குமிடம் எங்கும்ஒரு நீக்கமற நிறைகின்ற பரிபூர ணானந்தமே[1]
	மஸ்	பார்க்குமிடம் எல்லாம் பரிபூ ரணமாக ஏர்க்கை யுடன்நின்ற இயல்பே நிராமயமே[2]
(உ)	தாயு	கல்லேனும் ஐய,ஒரு காலத்தில் உருகும்;என் கல்நெஞ்சம் உருகவிலையே[3]
	மஸ்	கல்லும் உருகும்ஒரு காலத்தில், என்இதயம் அல்லல் இறுவதில்லை, ஐயா நிராமயமே[4]
(ஊ)	தாயு	எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணியெண்ணி ஏழைநெஞ்சம் புண்ணாகச் செய்ததினிப் போதும் பராபரமே[5]
	மஸ்	எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி இடைந்து மனம் புண்ணாவ தற்கோ புகுந்தேன் நிராமயமே[6]
(எ)	தாயு	தூங்காமல் தூங்கிச் சுகப்பெருமான் நின்நிறைவில் நீங்காமல் நிற்கும் நிலைபெறவுங் காண்பேனோ[7]
	மஸ்	தூங்காமல் தூங்கித் தொழுதுதொழுது உன்னருளைக் காண்க எனக்கருள்செய் கண்ணே றகுமானே[8]
(ஏ)	தாயு	தாயிருந்தும் பிள்ளை தளர்ந்தாற்போல், எவ்விடத்தும் நீயிருந்தும் நான்தளர்ந்து நின்றேன் பராபரமே[9]
	மஸ்	தாயிருக்கப் பிள்ளை தளராது ஒருபோதும், நீயிருக்க நான்தளரல் நேரோ நிராமயமே[10]
(ஐ)	தாயு	ஆரிருந்தென்? ஆர்போய்என்? ஆரமுதாம் நின்னருளின் சீரிருந்தால், உய்வேன் சிவமே பராபரமே[11]

1. தாயு. பாடல், பரிபூரணானந்தம் ஒவ்வொரு பாடலிலும் இறுதி அடி
2. மஸ்தான் பாடல், நிராமயக் கண்ணி 14
3. தாயு. பாடல், சுகவாரி 3 1
4. மஸ்தான் பாடல், நிராமயக் கண்ணி 124
5. தாயு. பாடல், பராபரக் கண்ணி 35
6. மஸ்தான் பாடல், நிராமயக் கண்ணி 53
7. தாயு. பாடல், காண்பேனோ கண்ணி 10
8. மஸ்தான் பாடல், றகுமான் கண்ணி 36
9. தாயு. பாடல், பராபரக் கண்ணி 349
10. மஸ்தான் பாடல், நிராமயக் கண்ணி 64
11. தாயு. பாடல், பராபரக் கண்ணி 120

மஸ் ஆரிருந்தென்? ஆர்போய்என்? ஆவிக்கு உறுந்துணையாம்
பேறுபெறச் செய்தால் பிழைப்பேன் நிராமயமே[1]

(ஒ) தாயு அண்டபகி ரண்டம் அறியாத நின்வடிவைக்
கண்டவரைக் கண்டால் கதியாம் பராபரமே[2]

மஸ் அண்டபகி ரண்டம் அகண்டபரி பூரணமாய்க்
கொண்டநின்னை யாரறிந்து கொண்டார் நிராமயமே[3]

(ஓ) தாயு எத்தனை விதங்கள்தான் கற்கினும் கேட்கினும்என்
இதயமும் ஒடுங்கவில்லை[4]

மஸ் எத்தனை விதங்கள்தான் கற்கினும் கேட்கினும்
என்மனது இணங்கு திலையே[5]

(ஔ) பேரிருள் நிறைந்த ஆணவம் என்னும் பெருங்காட்டை முற்றிலுமாய்க் களைந்து, வெளியாக்கி, அகங்காரம் என்னும் கல்லை முற்றும் பிளந்து, மனமெனும் நிலத்தைத் துப்புரவு செய்து திருத்தி, அதில் மோன விதையைப் பதித்து, அன்பு நீரை நன்றாய்ப் பாய்ச்சி, மோன விதை முளைத்துச் செவ்வையாகப் பயிராகும்மட்டும், மாயை என்னும் வலிய பறவைகள் சிறிதும் அணுகாதவண்ணம் நன்கு காத்து, அதனால் விளைகின்ற போகமாம் உணவைப் புசித்து இறையன்பர் வாழ்கின்றனர் என்ற கருத்தை,

காராரும் ஆணவக் காட்டைக் களைந்(து),அறக்
  கண்(டு),அகங் காரமென்னுங்
கல்லைப் பிளந்து,நெஞ் சகமான பூமிவெளி
  காணத் திருத்தி,மேன்மேல்
பாராதி யறியாத மோனமாம் வித்தைப்
  பதித்(து),அன்பு நீராகவே
பாய்ச்சி,அது பயிராகு மட்டும்,மா மாயை,வன்
  பறவை,அணு காதவண்ணம்,
நேராக நின்றுவிளை போகம் புசித்(து),உய்ந்த
  நின்னன்பர் கூட்டமெய்த,
நினைவின் படிக்கு,நீ முன்னின்று காப்பதே
  நின்னருட் பாரமென்றும்,

1. மஸ்தான் பாடல், நிராமயக் கண்ணி 32
2. தாயு. பாடல், பராபரக் கண்ணி 323
3. மஸ்தான் பாடல், நிராமயக் கண்ணி 112
4. தாயு. பாடல், ஆனந்தமான பரம், 9
5. மஸ்தான் பாடல், குருவணக். தன்னிலையினானந்தம் 3

ஆராரும் அறியாத சூதான வெளியில்,வெளி
 யாகின்ற துரியமயமே,
அண்டபகி ரண்டமும் அடங்கவொரு நிறைவாகி
 ஆனந்த மானபரமே[1]

என்ற தாயுமானவர் பாடலில் அறியலாம். இந்த உருவங்களின் விரிவே மஸ்தான் சாகிபு அவர்களின் மகமூது நபியாண்டவரைச் சுகானுபவமுறத் துதித்தல் என்ற பகுதியாம்.

மஸ்தான் சாகிபும் திருவள்ளுவரும்

மஸ்தான் சாகிபு பிறவியைக் கடலாய்க்கொண்டு அதைக் கடக்கும் பெருங்கலமாய் இறைவனைக் காணுகிறார்.

மட்டறு பவக்கடல் தொலைக்கு(ம்)ஒரு கவிழா
 மரக்கலமும் நீயல்லவோ?[2]

என்ற மஸ்தான் சாகிபின் பாடல் அடி நமக்கு,

பிறவிப் பெருங்கடல் நீந்துவர், நீந்தார்
இறைவன் அடிசேரா தார்[3]

என்ற அருமைத் திருக்குறளை நினைவூட்டுகிறது.

நிற்கும் பொழுது,ஆடை நெகிழ்ந்தால் உபசாரம்
கைக்குஞ் சொல்வதுண்டோ? கண்ணே பராபரமே[4]

என்ற மஸ்தான் சாகிபின் கண்ணியில்

உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு[5]

என்ற திருக்குறள் கருத்து அடங்கியிருப்பதைக் காண்கிறோம்.

நேற்று இருந்த ஒருவன் இன்று இல்லாமல் இறந்து போனான் என்று சொல்லப்படும் நிலையாமை உடையது இவ்வுலகம் என்பதனை,

நெருநல் உளன்ஒருவன், இன்றுஇல்லை; என்னும்
பெருமை உடைத்து,இவ் வுலகு[6]

என்று திருக்குறள் விளக்குகின்றது. இதனையே,

---

1. தாயுமா. பாடல், ஆனந்தமான பரம் 6
2. மஸ்தா. பாடல், குருவண. வலிமையினானந்தம் 2
3. திருக்குறள் 10
4. மஸ்தா. பாடல், கண்மணி மாலைக் கண்ணி 89
5. திருக்குறள் 788
6. மேலது, 336

இன்றைக் கிருந்தாரை நாளைக் கிருப்பரென்(று)
எண்ணவோ திடமில்லையே [1]

என்று தாயுமானவரும்,

இன்றுள்ளோர் நாளை இருப்பதுவும் பொய்யெனவே
மன்றுளோர் சொல்லும் வகையறிவது எக்காலம்[2]

என்று பத்திரகிரியாரும் கூறிப்போந்தனர். மஸ்தான் சாகிபும் இதே கருத்தை,

இன்றுள்ளோர் நாளைக் கிருப்பதுபொய் என்பதையான்
கண்டுகொண்டேன் ஐயா,என் கண்ணே றகுமானே[3]

என்று குறிப்பிடக் காண்கிறோம்.

மஸ்தான் சாகிபும் இடைக்காடரும்

கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்.[4]

திருக்குறளின் பெருமை கூற வந்த இடைக்காடனார் கூற்று இது. சிறிய வடிவினுள் பெரிய பொருளை அடக்கிக் காட்டுவதற்குக் கடுகைத் துளைத்து ஏழு கடலைப் புகுத்தும் செயலை ஒப்பாக்கிக் காட்டினார். 'கடுகைத் துளைத்துக் கடலைப் புகுத்துகின்ற' தன்மையைப் பிற புலவர்களும் தம் பாக்களில் எடுத்தாளக் காண்கிறோம்.

கைக்கெளிய பந்தா எடுத்துவிளை யாடுவீர்
  கனகவட் டத்தையெல்லாம்;
கடுகிடை இருத்தியே அஷ்டகுல வெற்பையும்
  காட்டுவீர் மேலும்மேலும்;
மிக்கசித் திகளெல்லாம் வல்லநீர், அடிமைமுன்
  விளங்கவரு சித்திஇலிரோ.[5]

சித்தர் கணத்தின் பெருமையைத் தாயுமானவர் இவ்வாறு பாடுகின்றார். கடுகினுள்ளே எட்டு மலைகளை நிறுத்திக் காட்டுகின்ற செயலை அவர் குறிப்பிட்டுள்ளார். மஸ்தான் சாகிபும் இறைவனின் ஆற்றலைக் குறிப்பிடுகையில்,

அண்டகோ டிகளுமோர் பந்தெனக் கைக்குள்
  அடக்கிவிளை யாட வல்லீர்—

1. தாயுமா. பாடல், சச்சிதானந்த சிவம் 5
2. பத்திரகிரியார், மெய்ஞ்ஞானப் புலம்பல் 35
3. மஸ்தா. பாடல், றகுமான் கண்ணி 37
4. திருவள்ளுவ மாலை
5. தாயுமா. பாடல், சித்தர் கணம் 3

> கண்டித்த கடுகில்எழு கடலைப் புகட்டிக்
> கலக்கிவிளை யாட வல்லீர்;
> கருதரிய சித்தெலாம் வல்லநீர், அடிமையென்
> கண்முன்வரு சித்தில் லையோ?[1]

எனப் பாடுகின்றார். இடைக்காடர் ஒரு முழுக் கடுகைத் துளைத்து அதில் ஏழு கடலைப் புகுத்துவதைக் கூறினார். மஸ்தான் சாகிபோ, கடுகைத் துண்டிக்கக் கிடைக்கும் ஒரு சிறு துண்டினுள் எழு கடலைப் புகுத்தியதோடு மட்டுமன்றி அவற்றைக் கலக்கி விளையாடுகின்ற செயலையும் கூறி அருமையை விரிவு செய்துள்ளார்.

மஸ்தான் சாகிபும் ஔவையாரும்

அறம் முதலாய நற்செயல்களைச் செய்யாமல், தேடிய பணத்தைப் புதைத்து வைப்பதால் யாது பயன்? உடல் அழியக் கூடியது. இறந்த பிறகு அப்பணத்தைத் துய்க்க வழியேது? ஆதலின் உயிருடன் இருக்கும்போதே அதை நல்வழியில் செலவு செய்து, இறந்த பிறகும் நிலைத்திருக்கக்கூடிய புகழை ஈட்டிக் கொள்ளவேண்டும்.

> பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்துவைத்துக்
> கேடுகெட்ட மானிடரே! கேளுங்கள்; – கூடுவிட்டிங்கு
> ஆவிதான் போயினபின்பு, யாரே அனுபவிப்பார்
> பாவிகாள் அந்தப் பணம்.[2]

ஔவையாரின் இந்நல்வழிப் பாடலை அனைவரும் அறிவோம். இதே கருத்தினை மஸ்தான் சாகிபும்,

> ஓடி யலைந்தும்,இவ் வையகம் முற்றும் உழன்றுழன்றும்,
> தேடி யெடுத்த திரவியம் யாவையும், செத்தபின்பு
> நாடி யெடுப்பதும் உண்டோ? மறந்து நடக்கும்நெஞ்சே!
> வாடி யிறந்துஅறஞ் செய்வாய், குணங்குடி வாய்த்திடுமே[3]

என்ற பாடலில் கூறிடக் காண்கிறோம்.

மஸ்தான் சாகிபும் பட்டினத்தாரும்

ஊர், உறவு, பொருள் ஆகியன நிலையானவையல்ல; இறைவன் அருளே நிலையானது என்ற கருத்தை ஒரே பாங்கில் பட்டினத்தடிகளும் மஸ்தான் சாகிபும் கூறியிருப்பதைப் பின்னுள்ள பாக்களால் அறியலாம்.

---

1. மஸ்தான். பாடல், குருவணை. விளையாட்டினானந்தம்
2. ஔவையார், நல்வழி 22
3. மஸ்தா. தவமேபெற வேண்டுமெனல் 1

பட்டி ஊருஞ் சதமல்ல; உற்றார் சதமல்ல; உற்றுப்பெற்ற
பேருஞ் சதமல்ல; பெண்டீர் சதமல்ல; பிள்ளைகளுஞ்
சீருஞ் சதமல்ல; செல்வஞ் சதமல்ல; தேசத்திலே
யாருஞ் சதமல்ல; நின்தாள் சதம்கச்சி ஏகம்பனே![1]

மஸ் உற்றா ரிருந்தென்ன? பெற்றா ரிருந்தென்ன? உனக்குதவி
சற்றா யினும்இல்லை, சொன்னேன்சொன் னேன்இது சத்தியமாய்ச்;
செத்தாலும் வைத்தடி வாங்காமல் நிற்கிற் செயம்பெறலாம்;
கற்றார் குணங்குடி கொண்டிடு வாய்மனக் கண்மணியே[2]

இவ்வாறாய் இந்நாட்டில் தொன்றுதொட்டு வந்த சான்றாண்மையாளர்களின் கருத்தை ஏற்று மஸ்தான் சாகிபு பாடியிருப்பதை இதுவரை கூறியவற்றால் அறிகிறோம்.

உரைக்குறிப்பு

மஸ்தான் சாகிபு பாடல்கள் எளிய நடையில் அமைந்தவை. பாடல் அடிகளைத் தொடர்புபடுத்திப் படிக்குமளவிலேயே சிக்கலின்றிப் பொருள் விளங்குவனவாயுள்ளன. அதனாற்றான் உரையாசிரியர் பொழிப்புரையாய் உரைக்குறிப்புகளைத் தந்துள்ளார். ஆங்காங்கே கடினசொற்களுக்குப் பொருள் தரப்பட்டுள்ளது. இசுலாமியக் கோட்பாடுகள், சமயக் கதைக் குறிப்புகள், தத்துவக் கருத்துகள் ஆகியன கூறப்பட்டுள்ள இடங்களில் அவற்றிற்கு விளக்கம் தந்திருப்பின் இன்னும் பயனுள்ளதாய் இருந்திருக்கும். அடுத்த பதிப்பில் இஃது இடம் பெறுமென நம்புகின்றேன்.

மஸ்தான் சாகிபு அவர்கள் இருநூறு ஆண்டுகட்கு முன் வாழ்ந்தவர். அவரது முழுமையான முறையான வரலாறு கிடைக்கவில்லை என்பது வருந்துதற்குரியது. வரலாற்றுக் குறிப்புகளைத் தமிழ்நாட்டினர் வகைப்படுத்தி முறைப்படுத்திச் சேகரிப்பதில் அக்கறை கொள்வதில்லை என்பதற்கு இஃது ஒரு சான்றாய் அமைகிறது. இருநூறு ஆண்டுகட்கு முன் இருந்தவர்க்கே வரலாறு காண முடியவில்லையெனில் ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பிருந்தவர்க்கு வரலாறு கிட்டாததில் வியப்பில்லை. சென்னையில் மஸ்தான் சாகிபு தங்கியிருந்த தோட்டம் இன்றும் காணப்படுகிறது; தொண்டியில் அவர் தங்கியிருந்த வாழைத் தோப்பிடமும் இன்றும் உள்ளது. இவ்வளவு அண்மைக் காலத்தில்

1. பட்டி. பாடல், திருவேகம்ப மாலை 13
2. மஸ்தா. பாடல், தவமே பெற வேண்டுமெனல் 7

வாழ்ந்தவரைப்பற்றிய முழு வரலாறு கிடைக்காதது பெருங்குறையே. அவர் உடல் தோற்றம், உணவுப் பழக்க வழக்கங்கள், அவர் குருமார், மாணாக்கர், அவர் ஆற்றிய தொண்டுகள், அருஞ்செயல்கள், அவர் முக்தியடைந்த நிலை ஆகியவைபற்றிய முழுச் செய்திகள் - முறையான செய்திகள் - கிடைக்க வேண்டும். அவரோடு தொடர்பு கொண்டிருந்தவர்களின் வழியினர் நாட்டின் பல்வேறு இடங்களில் இன்று வாழ்ந்து வரக்கூடும். அவர்களையெல்லாம் கண்டு, அவர்கள் தரும் செய்திகளைச் சேகரித்து, முடிந்த அளவில் விரிவான வரலாறு காண இலக்கிய ஆர்வலர்கள் முன்வரவேண்டும்.

மஸ்தான் சாகிபு பாடல் வெளியீடு மிகச்சிறந்ததொரு முயற்சி. பதிப்பாசிரியர் கவிஞர்கோ அப்துல் ரஷீது பாராட்டுக்குரியவர். இசுலாமியப் புலவர்களால் எழுதப்பட்டு இன்னும் வெளிவரவேண்டிய நூல்கள் பல உள. இது போன்றே அவற்றையும் வெளியிட்டு இலக்கியத் தொண்டாற்ற ஆசிரியர்க்கு எல்லா நலங்களும் வாய்ப்பதாகுக.

நூல் ஆக்கம்	என். ஏ. ரஷீத் (பதிப்பாசிரியர்)
வகைமை	கவிதை
வெளியீடு	ஞானவள்ளல் பதிப்பகம், சென்னை–35. (1977)

14

ஒரு மழலையின் தொடக்கம்

கவிஞர் ப. முத்துசாமி, சேலம் மாவட்டம், நாமக்கல் வட்டம், சிவியாம்பாளையம் என்னும் சிற்றூரைச் சார்ந்தவர்; எளிய வேளாண் குடியில் பிறந்தவர். அவர் மரபில், முதன் முதலில் பட்டப்படிப்புப் பெற்றவர் அவரே. கணிதத்தில் இளங்கலைப் பட்டம் பெற்ற அவர், தமிழ்மீது கொண்ட ஆர்வத்தால், தனியே பயின்று, தமிழிலும் ஆங்கிலத்திலும் முதுகலைப்பட்டம் பெற்றார். 'தமிழன்பன்' எனும் புனைபெயரும் கொண்டார். யாப்பிலக்கணத்தைச் செவ்வனே பயின்று, மரபு வழியிலான கவிதை புனையும் அருந்திறன் பெற்றுள்ளார். இனிமையும் எளிமையும் கொஞ்சும் தமிழில், அருமையும் செறிவும் பொதிந்த கவிதைகள் எழுதும் ஆற்றலாளராய் விளங்கி வருகிறார். என் ஊரினர் உறவினர் மாணவர் என்ற நிலைகளைப் பெற்றுள்ள அவருடைய இந்நூலுக்கு அணிந்துரை எழுதுவதில் பெருமை கொள்கிறேன் - நெஞ்சு நிறைவு கொள்கிறேன்.

இந்நூல் மொழிபெயர்ப்பு நூல். தம் கவிதைகட்காக நோபல் பரிசு பெற்றுப் பாரதத்துக்கே பெருமை தேடித் தந்துள்ள வங்கக் கவிஞர் தாகூரின் பாடல்கள் மொழிபெயர்க்கப் பட்டுள்ளன. தாகூரின் The crescent moon (3), Fruit gathering (19), Gardener (21), Lover's gift (22), Fugitive and other poems (4), Githanjali (17), Crossing (23) என்னும் கவிதை நூல்களிலிருந்து அடைப்புக் குறிகளுக்குள் உள்ள எண்ணிக்கையிலான பாடல்களின் மொழிபெயர்ப்புகளாய் இந்நூலுள் 109 கவிதைகள் உள்ளன.

தாகூர், கற்றுத் தேர்ந்த செல்வக் குடும்பத்தில், கவிதை புனைவதற்கான வளமான சூழலில் வாழ்ந்தவர். முற்றிலும் வேறுபட்ட குடும்ப வளர்ப்பில் கவிஞராய் மலர்ந்துள்ள திரு. முத்துசாமி, தாகூரின் மனநிலையையும் சூழல்களையும் முற்றிலும் புரிந்து உணர்ந்தவராய், தாகூரே தமிழில் எழுதியிருப்பதுபோல

அவ்வளவு அருமையாய் மொழிபெயர்த்திருப்பது பெரிதும் பாராட்டுக்குரியது.

தாகூருக்கு உலகப்புகழ் பெற்றுத்தந்தது, 'கீதாஞ்சலி' என்னும் ஆங்கில நூலாகும். கீதாஞ்சலியைத் தாகூர் முதலில் வங்க மொழியில் எழுதினார். வங்க மொழி கீதாஞ்சலி, 157 பாடல்களைக் கொண்டது. அவற்றுள் 51 பாடல்களையும், 'நைவேத்யம்', 'கேகயம்' என்னும் அவருடைய வேறு இரு நூல்களிலிருந்து 52 பாடல்களையும் எடுத்துச் சேர்த்து அந்நூற்று மூன்று பாடல்களையும் தாமே பெயர்த்து ஆங்கிலத்தில் கீதாஞ்சலியை உருவாக்கினார். காதற்பரிசு, பட்டிப் பறவைகள், கனி கொய்தல், வளர்பிறை போன்ற கவிதை நூல்களையும் தாகூர் இயற்றியிருக்கிறார்.

சொற்கட்டு களுக்கு அடிமை யாகாமல்
சுதந்திர மாக, என்இசைப் பாடல்கள்
கீத அலைகளாய் பொங்கிப் பெருகும்

(my songs would swell in melodies, free as waves,
free from all bondages of words - Githanjali 42)

எனத் தம் கவிதையாப்புப்பற்றித் தாகூரே குறிப்பிட்டிருக்கக் காண்கிறோம். சுதந்தரமாய்ப் பொங்கிப்பெருகிய உணர்வுகளை, அவர் பல்வகைச் சந்தங்களிலே ஆக்கியுள்ளார். "படித்தபின்பு சொற்களை மறப்பினும் செய்யுள்களின் இனிய ஒலிநயம் படிப்போரின் காதுகளில் ஒலித்துக்கொண்டே இருக்கும்" எனத் தாகூரின் கவிதைகள்பற்றி அறிஞர்கள் குறிப்பிடுவர். "வங்காளி மூலத்தில் உள்ள ஒலி வேறுபாடுகள் அற்புதமானவை. அப்பாடல்களில் விதம் விதமாய் நடனமாடி வரும் மோனையும் எதுகையும் சந்தமும் என்னென்னவோ மாயங்களை இழைக்கின்றன. இவற்றை அப்படியே வேறு எந்த மொழியிலும் தரமுடியாது" என்பது பேராசிரியர் அ.சீனிவாசராகவன் கூற்று. என்றாலும், கவிஞர் முத்துசாமி, தாகூரைப் போலவே பல்வேறு யாப்பு முறைகளில், தக்க ஒலி நயங்களை இணைத்து மொழிபெயர்ப்பில் வெற்றி கண்டிருக்கிறார் என்று சொல்லலாம்.

இரவீந்தரரின், 'கீதாஞ்சலி' தமிழில் பெருமளவில் தமிழாக்கம் பெற்றுள்ளது. வி.ஆர்.எம்.செட்டியார், பா.வரதராசன், தஞ்சை நடராச பிள்ளை ஆகியோர் கீதாஞ்சலியைத் தமிழாக்கியுள்ளனர். பேராசிரியர் அ.சீனிவாசராகவன், கீதாஞ்சலி யுடன் தாகூரின் வேறு சில பாடல்களையும் சேர்த்துப் பெயர்த்துக் 'கவியரசர் கண்ட கனவு' என்று வழங்கியுள்ளார். இவையெல்லாம் தாகூர் பாடல்களின் ஆங்கில ஆக்கத்தை மூலமாய்க்கொண்டு

பெயர்க்கப்பட்டவை. கவிஞர் அரங்க.சீனிவாசன் வங்க மொழியிலுள்ள கீதாஞ்சலி மூலநூலைத் தமிழில் பெயர்த்து, 'தாகூரஞ்சலி' என வெளியிட்டுள்ளார். இது போன்றே திரு.த.நா. குமாரசாமியும் வங்க மொழிக் கீதாஞ்சலியிலிருந்தும் அவருடைய பிற வங்க மொழிப் பாடல்களிலிருந்தும் 101 பாடல்களைத் தேர்ந்தெடுத்துத் தமிழாக்கம் செய்துள்ளார். 'இரவீந்திரர் கவிதைத் திரட்டு' என்னும் தலைப்பில் இந்நூல் வெளிவந்துள்ளது.' இன்னும் சிலரும் தாகூரின் சிற்சில பாடல்களை மொழிபெயர்த்திருக்கின்றனர். தாகூரின் Stray birds என்பதைத் திரு.பெரியசாமித் தூரன், 'பட்டிப் பறவைகள்' எனத் தமிழாக்கி வெளியிட்டுள்ளார். தொடர்ந்துவரும் தாகூர் பாடல்களின் தமிழ்ப்பெயர்ப்பு முயற்சியில் குறிப்பிட்டுச் சொல்லத்தக்க வகையில் கவிஞர் முத்துசாமியின், 'ஒரு மழலையின் தொடக்கம்' என்னும் இந்நூல் அமைந்திருக்கிறது. மொழிபெயர்ப்புக்குத் தாகூரின் பல்வேறு கவிதைத் தொகுப்பிலிருந்தும் பாடல்களை எடுத்துக்கொண்டுள்ளார்.

மொழிபெயர்ப்பு ஓர் அரிய கலை. இருப்பதைப் பார்த்து எழுதுவதுதானே என்று எளிதாய் எண்ணிவிடமுடியாது. "மூலநூல் எழுதுவதைக்காட்டிலும் தொல்லை கொடுப்பது மொழி பெயர்ப்பு" என்பார், கு.ப. இராசகோபாலன். "மூலமொழியில் (Source language) உள்ளவற்றைப் படைப்பு மொழியில் (Target language) மாற்றித் தருவது மொழிபெயர்ப்பு. இது சொல்லுக்குச் சொல் கூறுவதன்று. பொருளை முழுமையாய்த் தருவதாகும்" என்பார், மாலின் ஒஸ்கி என்னும் அறிஞர். மூலத்திலுள்ள கருத்துகளை உள்ளவாறு வெளிப்படுத்துவதே மொழிபெயர்ப்பின் முதன்மை நோக்கம்.

மொழிபெயர்ப்பு மூலத்தை ஒட்டியிருக்க வேண்டும். படிப்பதற்கு ஆற்றொழுக்காகவும் இனிமையாகவும் திகழ வேண்டும். எளிமை, இனிமை, செறிவு, தெளிவு ஆகிய நான்கும் ஒருசேரப் பெற்றிருக்க வேண்டும். படிப்பது, மொழிபெயர்ப்பு நூல் என்று தோன்றாத வகையில் மொழிபெயர்ப்பு இயல்பானதாய் அமைய வேண்டும். மரபறிந்து, வழக்கறிந்து, ஏற்ற சொற்களை ஆளவேண்டும். "எந்த மொழியிலிருந்து பெயர்க்கிறோம் என்பதை விட எந்த மொழியினர்க்கு அதைப் புரிய வைக்கப்போகிறோம் என்பதுதான் முக்கியம்" என்பார், தீபம் நா.பார்த்தசாரதி.

மூல நூலாசிரியரின் நோக்கம் என்ன, எந்தக் கருத்தை வலியுறுத்துகிறார், அவற்றைப் பெயர்ப்பில் கொண்டுவந்து

விட்டோமா என்பதை மொழிபெயர்ப்பாளர் கருத்தில் கொள்ள வேண்டும். மூல நூலாசிரியர் பயன்படுத்தியுள்ள சொற்களுக்கு முன்னுரிமை கொடுப்பதைக்காட்டிலும், அவர் எந்த உணர்வுடன் எழுதியுள்ளாரோ, அந்தக் கருத்தை அதே உணர்வுடன் வெளிப்படுத்திவிட்டோமா என்பதையே மொழிபெயர்ப் பாளர்கள் முக்கியமாய்க் கவனிக்க வேண்டும். சில இடங்களில் கருத்து வலிமை கருதி விளக்கம் செய்வதும், வேறு சில இடங்களில் செறிவு கருதிச் சுருக்கிக் கூறுதலும் மொழிபெய்யர்ப்பை உயிரோட்டம் உள்ளதாகச் செய்யும்.

மொழிபெயர்ப்பாளர் மூல மொழியிலும், படைப்பு மொழியிலும் ஆற்றலாளராய் இருக்க வேண்டும். இருமொழி மரபுகளையும் நன்குணர்ந்தவராகவும் இருக்க வேண்டும். அந்தந்த மொழியினரின் நடையுடை, பழக்கவழக்கங்கள், பண்பாடுகள் ஆகியவற்றை அறிந்திருத்தல் வேண்டும். எந்த மொழியில் பெயர்க்கிறோமோ அந்த மொழியின் தெளிவும் தூய்மையும் இயன்றவரை காக்கப்பட வேண்டும். ஒரே சொல் பலபொருள் தருவதாய் இருக்கலாம். அத்தகு சொற்களைப் பெயர்க்கும்போது இடத்திற்கேற்ப எப்பொருள் பொருத்தமுடையதெனத் துணிதல் வேண்டும். அறிவியல் நூல்களைப் பெயர்க்கும் பொழுது கலைச் சொல்லாக்க இடர்ப்பாடு முன்னிற்கும். இலக்கிய நூல்களைப் பெயர்க்கும்போதோ மூல நூலாசிரியரின் கற்பனை நயம், சொல்லாட்சித்திறன், மரபுவழிச் சிறப்பு ஆகியவற்றை அவ்வாறே கொண்டுவந்து சேர்ப்பதெவ்வாறு என்பதே முன்னிற்கும்.

"மொழிபெயர்ப்பாளர்கள் அனைத்துலக அறிவு இணைப்பாளர்கள்" என்கிறார், கவிஞர் புஷ்கின். தமிழில் சங்க காலத்திலேயே மொழிபெயர்ப்புத் தோன்றியுள்ளது. குறிப்பாக, வடமொழிச் சொற்கள் தமிழாக்கம் பெற்றுள்ளன. வெளிநாட்டு வாணிகத் தொடர்பாலும் மொழிபெயர்ப்பு நேர்ந்துள்ளது. சங்க காலத்திலேயே பதினெட்டுக்கு மேற்பட்ட மொழிகள் தமிழ் நாட்டுடன் தொடர்பு கொண்டிருந்தன என்பதை அறிய முடிகிறது.

சமய நூல்கள், காப்பியங்கள் ஆகியன மொழிபெயர்க்கப் படலாயின. ஆங்கிலேயர் வருகையால் ஆங்கிலம் பாட மொழியாகவும் ஆட்சி மொழியாகவும் ஆயிற்று. உலகின் அறிவுக் கருவூலம் அனைத்தையும் ஆங்கிலம் தன்னிடத்தே பெயர்த்து வைத்துள்ளமையால், ஆங்கிலத்தின் வழி, உலகின் பல்வேறு மொழிநூல்கள் தமிழில் வெளிவரலாயின. உலக மொழிகள் பலவற்றின் தமிழ்ப் பெயர்ப்புகளுள் பெரும்பான்மை அவ்வந்

நூல்களின் ஆங்கிலப் பெயர்ப்பை மூலமாய்க்கொண்டே தமிழாக்கம் பெற்றுள்ளன. கவிஞர் முத்துசாமியும் தாகூர் கவிதைகளின் ஆங்கிலப் பெயர்ப்பை அடிப்படையாகக்கொண்டு, மேலே கூறப்பட்டுள்ள மொழிபெயர்ப்பின் தன்மை, மொழி பெயர்ப்பாளர் திறன் ஆகிய அனைத்துமே பொருந்திவர இந்நூலை ஆக்கித் தந்துள்ளார்.

"மொழிபெயர்ப்பும் ஒரு புதுப் படைப்பே! புதுப் படைப்பினும் அரியது, மொழிபெயர்ப்பு. ஒரு கவிஞனது உள்ளம், ஒரு மொழியின் உயிரோட்டமாய் உருக்கொண்டதனை, மற்றொரு மொழியின் உயிரோட்டமாய், வேறொரு கவிஞன் உருக் கொடுப்பதுவே கவிதையின் உண்மையான மொழிபெயர்ப்பு" என்பார், அறிஞர் தெ.பொ.மீ. இக்கூற்றுக்கு ஏற்ப மூலக் கவிதை, அம்மொழியில் படிப்பவர்களை எந்த அளவுக்கு ஈர்க்குமோ, அதே ஈர்ப்புத் தன்மையைத் தரத்தக்க வகையில் கவிஞர் முத்துசாமியின் தமிழாக்கம் அமைந்துள்ளதெனத் துணிந்து கூறலாம்.

கவிஞர் முத்துசாமியின் மொழிபெயர்ப்புச் சிறப்புக்கான காட்டுகள் சில :

My bonds are cut, my debts are paid, my doors have been opened, I go everywhere[1] என்பதை,

என்னுடை விலங்குகள் அறுபட்டுப் போயின;
என்னுடைக் கடன்கள் அடைபட்டுப் போயின;
என்னுடைக் கதவுகள் திறந்திடப் பட்டன;
எவ்விடத் தாயினும் யான்செலற் குரியேன்! (பக். 197)

என மொழிபெயர்த்துள்ளார். ஆங்கிலத்தில் உள்ள சுருக்கமும் தெறிப்பும் ஒன்றிணைந்துள்ள மொழிபெயர்ப்பு இது.

மூலம்

Women cover in their unlit homes afraid to weep aloud[2]

மொழிபெயர்ப்பு

விளங்கொளிச் சுடர்தீர் வீட்டினில் மகளிர்
அழுதற்கும் அஞ்சியே அடைந்தார். (பக். 194)

unlit home என்பதை, 'விளங்கொளிச் சுடர்தீர் வீடு' என அழகிய எழுத்தோவியமாய் ஆக்கியிருக்கிறார்.

Clasping the baby to her breast[3] என்பதை,

1. Tagore, Fruit gathering, 74
2. Tagore, Fugitive and other poems, 31
3. Tagore, The crescent Moon, 1

காதல் அமுதினை மார்பில் – அவள்
கட்டி அணைத்துக் கொண்டு (பக். 1)

என மொழியாக்கம் செய்துள்ளார். குழந்தையைப் பாரதியார், 'பிள்ளைக் கனியமுதே' என்பார்; 'இறுகா அமிழ்தின் இளகல் உடம்பு' என்பார், பாவேந்தர் பாரதிதாசன். முத்துசாமி baby என்பதை, 'காதல் அமுது' எனப் பெயர்த்திருப்பது கவிஞரின் மரபு நலம் காக்கும் புலமையை வெளிப்படுத்துகிறது.

The waves will stand a tiptue to kiss your neck and whisper in your ears[1] :

ஒளிர்நீலப் பட்டாடை கரையினிலே கிடக்க,
உயர்நீலப் புனல்உன்றன் உடலையே மறைக்கும்;
வளையவரும் அலை,எழுந்துன் ஒளிமிகுந்த கழுத்தில்,
வலியவொரு முத்தமிட்டுச் செவியில் முணுமுணுக்கும் (பக். 115)

அவள் அழகில் மயங்கிய அலை வளையவந்து முத்தமிட்டு, செவியில் முணுமுணுப்பது போல இந்த மொழிபெயர்ப்பும், 'நான் எவ்வளவு நயமாய் இருக்கிறேன் பார்' என்று நம் காதில் வந்து முணுமுணுக்கிறது.

It was the dancing girl, starred with jewels, clouded with a pale blue mantlè, drunk with the wine of her youth[2]

நடனமிடும் நங்கையவள் நகைகளில் மின்னிட்டாள்;
நறுநீல மென்துகிலில் முகமறைத்து நின்றாள்;
வடிவிளமை மதுவருந்தி மயக்கமிக்க மங்கை
வனப்புமிகப் பேரெழிலின் வண்ணமுடன் நின்றாள். (பக். 57)

இது மூலத்தின் வனப்பினை முற்றிலும் கொண்டதாகவும்– ஏன் மூலத்தை மின்ன வைப்பதாகவும் – உள்ளது எனலாம்.

The sea surges up with laughter and
Pale gleams the smile of the sea beach என்பது,

சிரிப்புடன் கடல்எழுந்து அலைமுழங் கிட்டது;
சிறுமுறுவல் சிந்திக் கடற்கரை ஒளிர்ந்தது (பக். 93)

எனப் பெயர்க்கப்பட்டுள்ளது. கடலை வாயாகவும், கரையை உதடாகவும் கொண்டு, உதட்டில் புன்சிரிப்பு தவழ்ந்ததை வெளிப்படுத்துகிறது இப்பெயர்ப்பு.

When a strange boy came and greeted him with fruits and flowers and bowing low at his feet, spoke in a bird like voice[3] என்பதைக் கவிஞர் முத்துசாமி,

1. Tagore, Gardener, 12
2. Tagore, Fruit Gathering, 37
3. Tagore, Fruit Gathering, 44

போற்றியே, மலரும் கனிகளும் கொண்டு,
புதியவோர் சிறுவன்,வந் திறைஞ்சிக்
காற்றிடைப் பறவை போற்,சிறு மழலை
கசியுமென் குரலினால் வாழ்த்தி (பக். 4)

என மொழிபெயர்த்திருக்கிறார். 'பறவைபோல் சிறுமழலை கசியும் மென்குரல்' என்பது 'a bird like voice' என்னும் மூலத்திற்கு மெருகூட்டும் மொழிபெயர்ப்பாயுள்ளது. இப்பாடல், குருவின்முன் மாணவன் நிற்கும் நிலையில் பாடப்பெற்றுள்ளது. எனவே, 'spoke' என்பதை, 'வாழ்த்தி இசைத்தான்' எனக் கூறியிருப்பது மிகவும் பொருத்தமானதாகும்.

ஊர்வசியின் அழகு முனிவர்களையும் பணிய வைப்பதெனத் தாகூர் பாடுகிறார்.

The ascetic lays the fruit of his austerities at your feet [1]

பழியறியாத் துறவி, நின்றன்
இணையடியில் கொணர்ந்து,
பசித்திருந்த நோன்புகளின்
பயனையெல்லாம் வைப்பான் (பக். 24)

துறவிக்குப் 'பழியறியா' என்றும், நோன்புக்குப் 'பசித்திருந்த' என்றும் அடைகொடுத்தும் துறவுக்கும் நோன்புக்கும் பெருமை சேர்த்துள்ளார், மொழிபெயர்ப்பாளர்.

why did the harp - string break?

I tried to force a note that was beyond its power,

That is why the harp-string is broken[2] என்பதை நம் கவிஞர்,

பற்றான யாழ்நரம்பு இற்றுவிண் ஆனதேன்?
பரிந்துநான் எண்ணுகின்றேன்;
பண்ணுயாழ் வலிமைக்கு மீறும்இசை முயன்றதால்,
பாண்நரம்(பு) அறுதல் கண்டேன் (பக். 8)

எனப் பெயர்த்திருப்பது உள்ளத்தே இனிமை சேர்க்கிறது; நடையோட்டமும் சொல்லொழுங்கும் ஒன்றுசேர்ந்து யாழை மீட்டக் கிடைக்கும் செவியமுதாய் இனிக்கிறது.

To all things else you give; from me you ask-[3]

இது இறையைப்பற்றிய பாடலில் உள்ள ஓர் அடி. இதைக் கவிஞர்,

1. Tagore, Fugitive and other poems, 11
2. Tagore, Gardener, 52
3. Tagore, Fruit Gathering, 78

மற்றெலா வற்றுக்கும் நீகொடுத்(து) அளிக்கிறாய்;
மகன்என்னை நோக்கிக் கேட்கவே செய்கிறாய்! (பக். 10)

என மொழிபெயர்த்துள்ளார். இறைவனுக்கு நாம் மக்கள் என்பதால் 'me' என்பதை மகன் எனப் பெயர்த்திருப்பது இடமறிந்து மொழிபெயர்க்கும் திறனைப் புலப்படுத்துகிறது.

Where I have come from, where did you pick me up-the baby asked its mother[1] என்பதன் மொழிபெயர்ப்பு வருமாறு :

எங்கிருந் தேநானும் வந்தேன் – அம்மா
எங்கிருந் தேயென்னை
எடுத்துநீ வந்தாய்?
பொங்கிடும் ஆர்வத்தி னாலே – ஒரு
பூங்கண் மகவொன்று
தாயினைக் கேட்கும். (பக். 1)

தமிழ் யாப்பு முறை கருதியும், ஒலி நயம் கருதியும், மூலத்தினும் சற்று விரிவான முறையில் செய்யப்பட்டுள்ள மொழி பெயர்ப்பு இது. குழந்தை கேட்டது என்று மட்டுமே இருக்க வேண்டிய இடத்தில் அக்குழந்தையின் உணர்வைப் புலப்படுத்தும் வகையில் பொங்கிடும் ஆர்வத்தினாலே கேட்டதாய்க் கவிஞர் சொற்களைச் சேர்த்துக்கொண்டுள்ளார். 'baby' என்பதை அதன் இளமைத் தன்மை தோன்றப் 'பூங்கண் மகவு' என மிகப் பொருத்தமாய்க் கூறுகிறார்.

It was dusk and the lamp was not lit
I was listlessly braiding my hair [2]

என்பதைக் கவிஞர்,

வெயில் குறைந்த மாலை, இன்னும்
விளக்கேற்ற வில்லை;
வெறுங் கூந்தல் மலரின்றிப்
பின்னிமுடித் திருந்தேன். (பக். 13)

என நயம்படப் பெயர்த்துள்ளார். list என்பதற்கு விருப்பு, மனங்கொள், பிடித்தமாயிரு என்னும் பொருள்களை அகராதி தருகிறது. எனவே listlessly என்பதற்கு விருப்பமில்லாமல், மனங் கொள்ளாமல், பிடித்தமின்றி என்றவாறு பொருள் கொள்ளலாம். பின்னி முடித்துப் பூச்சூடிக்கொள்வதுதான் பெண்ணுக்கு விருப்பமானது. பூ இல்லாக் கூந்தல் பொலிவற்றது. விருப்பமின்றி ஏதோ கடமைக்காகக் கூந்தலை முடிந்திருந்தாள் என்பதை,

1. Tagore, The Crescent Moon, 7
2. Tagore, Fruit Gathering, 8

'வெறுங்கூந்தல் மலரின்றிப் பின்னி முடித்திருந்தேன்' எனும் தொடர் வாயிலாகக் கவிஞர் நன்குணர வைக்கிறார். மூல ஆசிரியரின் கருத்துக்கு வளஞ்சேர்க்கும் மொழிபெயர்ப்பு இது.

In the fragrant days of sunny April[1] என்பது

செங்கதிர் காயும் சித்திரைத் திங்களின்
சீர்கெழும் மணம்மிகும் நாட்களிலே (பக். 112)

என்றும், In the rainy gloom of July night[2] என்பது

மழைக்காலத்தின் மங்கிய ஆவணி
மாதத்து இரவுகள் (பக். 112)

எனவும், இடமரபிற்கேற்ப மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

(April - சித்திரை July - ஆவணி)

தார்அணி மாலைகொண்(டு) அவள்நினைந்து
தமிழ்எடுத்(து) அவள்நலம் புகழ்ந்தேன்[3] (பக். 15)

நங்கையின் நலத்தைத் 'தமிழில் புகழ்ந்தேன்' எனப் பெயர்க்கப்பட்டிருப்பது, பெயர்க்கப்பட்டுள்ள மொழி எழில் கருதி ஆம்.

Royal temple என்பதை, "வடிவேலோய்! நின் பொன்னார் கோவில்" என்றும், my master என்பதை யாப்பமைதிக்கேற்பப் 'பகவன்', 'தலைவன்', 'தேவன்' என்றும் மொழிபெயர்த்திருப்பது கவிஞரின் சொல்லாட்சித்திறனைக் காட்டி நிற்கின்றன.

ஒரே பகுதியைப் பலர் மொழிபெயர்க்கும்போது அவரவர் மொழிவளம், சொல்லாட்சி, யாப்புவகைக்கேற்ப மொழிபெயர்ப்பு நடை வேறுபட்டு இருப்பதை அறிவோம்.

This is my prayer to thee my Lord-
strike, strike at the root of penury in my heart

Give me the strength lightly
to bear my joys and sorrows

Give me the strength to make my love fruitful
in service[4]

1. Tagore, Githanjali, 45
2. Tagore, Githanjali, 45
3. Tagore, Fruit Gathering, 37
4. Tagore, Githanjali, 36

இதனை,

என்னரசே உன்னை வேண்டுகின்றேன், உள்ளே
    என்னிதயந் தன்னில் மண்டியெழும்
சின்னத் தனத்தை வறுமையை வேரொடு
    சீறி மிதித்துச் சிதைத்துவிடு;
இன்ப துன்பங்களை எண்ணி மலையாமல்
    ஏற்கும் வலிமை வழங்கிவிடு;
அன்பினை உன்பணி ஆற்றிக் கனிவிக்கும்
    ஆற்றல் எனக்கு அருளிவிடு;

எனப் பேராசிரியர் அ.சீனிவாசராகவன் மொழிபெயர்த்துள்ளார்.

எம்பெருமானே! உன்னிடம் எனது பிரார்த்தனை இதுவே!

என் இதயத்தில் வறுமையின் வேரை வெட்டுவாயாக!

என் இன்பதுன்பங்களை எளிதில் தாங்கச் சக்தி அருள்வாயாக!

எனது அன்பு, சேவையிலே கனியும்படி செய்யும் ஆற்றல்
அருள்வாயாக!

- இது திரு.வி.ஆர். எம். செட்டியார் அவர்களுடைய மொழி பெயர்ப்பு.

திரு. பா. வரதராசன் அவர்கள் கீழ் உள்ளவாறு பெயர்த்துள்ளார்.

எம்இறை! ஒன்றியான் வேண்டுவேன்; மனத்தின்
நல்குரவு வேரினைக் களைந்தெறி;
சுகதுக்கச் சுமைகெட, வேண்டுதல் வேண்டாமை
மனஇயல் நிலையை அருளுதி!
என்கடன் பணியில் அன்பின் பயனுறும்
வன்மையே அருளுதி!

திரு. கோ. நடராச பிள்ளையின் மொழிபெயர்ப்பு :

பெரும! இதுவே என்றன் பிரார்த்தனை!
என்றன் நெஞ்சுறும் ஈனத் தனத்தினை
வேரினுக் கடியிலே வெட்டிச் சாய்ப்பாய்!
இன்ப துன்பமாம் இரண்டையும் எளிதாய்த்
தாங்கிட எனக்கு வல்லமை தருக!
என்றன் அன்புதான் சேவையிற் கனிந்து
நன்கு பயனுற வலிமைதந் தருளும்

என அமைகிறது. இதனையே கவிஞர் முத்துசாமி,

என்னுடை வேண்டல் நின்னிடம் சொல்வேன்
    என்னுடைத் தலைவனே! எனது
புன்மைசேர் நெஞ்சத் தேழ்மையாம் வேரைப்
    புடைத்துநீ நொறுக்கியே விடுவாய்!
இன்னலும் மகிழ்வும் ஒன்றெனத் தாங்கும்
    இதயநல் வலிமையைத் தருவாய்!

என்னுடை அன்பு பணிகளாய்க் கனிய
என்னுயிர்க்கு உரத்தினை அளிப்பாய் (பக். 82)

என்று பெயர்த்திருக்கிறார்.

'My Lord' என்பது, 'என்னரசே!', 'எம்பெருமானே!', 'எம் இறைப்பெரும!', 'என்னுடைத் தலைவ' என அவரவர் கருத்துக்கேற்ப மொழியாக்கம் பெற்றுள்ளது.

Penury in my heart பேராசிரியர் சீனிவாசராகவன், 'இதயத்தில் மண்டியெழும் சின்னத்தனம், வறுமை' என விரிவாக்கிக் கூறுகிறார். திரு.வி.ஆர்.எம். செட்டியார், 'இதயத்தில் வறுமையின் வேரை' என்றும், திரு. வரதராசன், 'மனத்தின் நல்குரவு வேரினை' என்றும் பெயர்த்துள்ளனர். திரு. சீனிவாசராகவனை ஒத்து நடராசப் பிள்ளை, 'நெஞ்சுறும் ஈனத்தனத்தினை' என்கிறார். கவிஞர் முத்துசாமியோ, 'நெஞ்சத்து ஏழ்மை' என்கிறார்.

Service என்பதை 'இறைபணி' எனக்கொண்டிருக்கிறார், சீனிவாசராகவன். மற்றையோர் 'உயிர்ச்சேவை' எனக் கொண்டுள்ளனர்.

கவிஞர் முத்துசாமியின் மொழிபெயர்ப்பு மூலத்திற்கு மிக நெருங்கியதாயும், சொல்வளம், ஓசைநயம், நடையோட்டம் ஆகியவை நிறைந்ததாயும் இருந்திடக் காண்கிறோம். சிறந்த கவிதை மொழிபெயர்ப்பாளர் வரிசையில் கவிஞர் தமிழன்பன், முத்துசாமி தனியிடம் பெறுகிறார் என்பதை ஒப்பீடு நமக்கு உணர்த்துகிறது.

மொழிபெயர்ப்பு, சிந்திக்கச் சிந்திக்க மெருகேறும் தன்மையுடையது. ஒருவரே பலமுறை மொழிபெயர்த்தாலும் அவரே படிக்கும்போது இந்த இடத்தை இப்படி மாற்றியிருக்கலாமோ என்று எண்ணத் தூண்டுவது. பாரதியார், பக்கிம் சந்திர சட்டோபாத்தியாயர் எழுதிய 'வந்தே மாதரம்' என்னும் பாடலைத் தமிழில் மொழிபெயர்த்தார். அதை அவரே மேலும் வளம் கூட்டும் முறையில் இரண்டாவது முறையாகவும் மொழிபெயர்த்திருக்கிறார். முதல் மொழிபெயர்ப்பு,

இனியநீர்ப் பெருக்கினை! இன்கனி வளத்தினை;
தனிநறு மலயத் தண்காற் சிறப்பினை!
பைந்நிறப் பழனம் பரவிய வடிவினை![1] (வந்தே)

எனத் தொடங்குகிறது. இதையே இரண்டாம் முறையாய்,

1. பாரதியார், ஜாதீய கீதம், 1

நளிர்மணி நீரும், நயம்படு கனிகளும்
குளிர்பூந் தென்றலும், கொழும்பொழிற் பசுமையும்
வாய்ந்துநன்(கு) இலகுவை வாழிய அன்னை' (வந்தே)

என மொழிபெயர்த்திருக்கிறார். ஆகவே, மொழிபெயர்ப்பு என்பது எத்துணை முறை செய்தாலும் மீண்டும் திருத்தத்திற்கும் மாறுதலுக்கும் உட்பட்டதேயாம்! ஆதலின், ஒரு மொழி பெயர்ப்பை, 'இப்படி இருக்கலாம்' என்று சொன்னால் அது குறையன்று; மொழிபெயர்ப்பாளரின் மறு சிந்தனைக்கு என்று கொள்ள வேண்டும். அவ்வகையில் சில இடங்கள் இங்குச் சுட்டிக் காட்டப்படுகின்றன.

But how great my surprise at the day's end [2]

என்பதைக் கவிஞர் முத்துசாமி,

பெருவியப்பை என்னென்பேன் ஒருநாளின் முடிவில் (பக். 75)

என்று பெயர்த்துள்ளார். கடவுள் வந்து பிச்சையெடுக்கும் ஒருவனிடம் பிச்சை கேட்டார். அவன் தன் பிச்சைப்பையைத் துழாவி ஒரு சிறு தானிய மணியை எடுத்துத் தந்தான். மாலையில் அப்பிச்சைக்காரன் தன் பையிலிருந்தவற்றைக் கொட்டிப் பார்த்தபோது, தன் பிச்சைப் பொருள்களுக்கு இடையே அவன் காலையில் பிச்சையாய்ப் போட்ட சிறுதானியமணி அளவில் தங்கம் கிடப்பதைக் கண்டான். ஆகவே, கவிஞரின் மொழி பெயர்ப்பில், 'ஒரு நாளின் முடிவில்' என்றிருப்பது, 'அந்நாளின் முடிவில்' என்றிருக்கலாம். இதையே, 'இன்று மாலையில்', 'அன்று அந்தியில்' என மற்றவர்கள் மொழிபெயர்த்துள்ளனர்.

clear stream of reason : இதைச் 'சர்ச்சையின் ஊற்று' என்று மொழிபெயர்த்திருக்கிறார், த.நா. குமாரசாமி; 'பகுத்தறிவென்னும் தெளிந்த ஆறு' என்கிறார், வி.ஆர்.எம். செட்டியார்; 'பழமையில் தோய்வுறாத் தெளிநீர் ஒழுக்கெனும் பட்டறிவு' என்பது பா. வரதராசனின் மொழிபெயர்ப்பு. திரு. முத்துசாமியோ இதனை,

காரணமாய் திறனென்னும் தெளிவோடை (பக். 44)

எனத் தருகிறார். 'காரணம் ஆய்திறன்' என இதனை அன்வயப்படுத்திக் காரணத்தை ஆய்கின்ற திறமை எனப் பொருள்கொள்ள வேண்டியிருக்கிறது. செய்யுள் மரபறிந்தவர்கள் தவிர, பிறர், பொருளறிய இடர்ப்படுவர். இயன்ற அளவு இத்தகு இடர்ப்பாடில்லா எளிய மொழிபெயர்ப்பு கூடுதல் பலனை நல்கும்.

1. பாரதியார், ஜாதீய கீதம், 2
2. Tagore, Githanjali, 50

The desire at once puts out the light from the lamp it touches with its breath [1] இது கீதாஞ்சலியின் ஓர் அடி. புலன்வழி அவா உள்ளொளியை மாய்க்கும் என்னும் கருத்தைத் தாகூர் கூறுகிறார். 'ஆசை மூச்சு தான் பட்ட அளவிலேயே விளக்கின் ஒளியை அணைக்கிறது' எனும் பொருள்கொண்ட இத்தொடரை,

நின்னுடைய விருப்பம் தொடுகின்ற விளக்கை
நெடியமூச் சொன்றினால் அணைக்கும் (பக். 76)

என முத்துசாமி தந்துள்ளார். ஆங்கிலத் தொடருக்கு ஏற்ற மொழி பெயர்ப்பு என்றாலும் எளிதில் பொருள் விளங்கக்கூடியதாய் இல்லை.

உன்ஆசைப் பெருமூச்சு விட்டதும் விளக்கிலே
ஒளிச்சுடர் அவிந்து போகும்

என்பது பேராசிரியர் அ. சீனிவாசராகவனின் மொழிபெயர்ப்பு; இதுவும் தாகூர் கருத்தை முற்றாய் வெளிப்படுத்தவில்லை.

'உனது ஆசை உனது உள்ளொளியை அணைக்கிறது' என்ற வி.ஆர்.எம். செட்டியாரின் மொழிபெயர்ப்பில் கருத்து பொருந்தி வருகிறது. அவருடைய மொழிபெயர்ப்பு உரைநடையில் இருப்பதால் நெருடல் சற்றுக் குறைவு.

உள்நின்(று) ஒளிரும் உண்மையொளி தானும்
அருத்தியின் பயனால் அடர்ப்பு மிக்குண்டு
ஒளிமாழ்கும்.....

எனும் பா.வரதராசனின் மொழிபெயர்ப்பில் கருத்துப் புலப்பாடு இருக்கின்றதாயினும், நடை, எளிய மக்கள் புரிந்துகொள்ளத் தக்கதாய் இல்லை.

உன்உள் விளக்கின் ஒளியை உன்றன்
ஆசையின் மூச்சு, தீண்டும் அப்போதே
அணைக்கிறது......

எனும் நடராச பிள்ளையின் பெயர்ப்பு, கவிதை நடையில் பொருள் புலப்படுமாறு அமைந்ததாய் விளங்குகிறது. இந்தப் பாடலை வங்க மூலத்திலிருந்து மொழிபெயர்த்துள்ள கவிஞர் அரங்க சீனிவாசனின் பாடல்,

அச்சமற நீகாட்டும் ஒளிவி ளக்கை
அரைக்கணத்தில் அவித்திடும்என் ஆசைக் காற்றே

எனத் தொடங்குகிறது. ஆங்கில மூலத்திலிருந்து செய்யப்பெற்ற பெயர்ப்பையும், இப்பாடலையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது கருத்து வைப்பிடம் மாறியிருப்பதையும் காணமுடிகிறது.

1. Tagore, Githanjali, 9

மொழிபெயர்ப்பை எத்துணைச் சிறப்பாகச் செய்தாலும், அதை மேலும் இவ்வாறு செய்திருக்கலாம் என்று சொல்ல இடமிருக்கத்தான் செய்யும்.

சிறுவன் ஒருவன் தன் தாயிடம் தன் தந்தை யார் என்று கேட்கிறான். அவளோ தலை குனிந்து, "இளமையில் நான் ஏழை, பலரிடம் பணிபுரிந்தவள்; கணவன் என்று ஒருவரைக் குறிப்பிட்டுச் சொல்ல இயலாதவாறு நீ என் கையில் குழந்தையாய்த் தவழ்ந்தாய்" என்கிறாள்.

In my youth I was poor and had many masters. Thou didst come to thy mother Jabala's arms, my darling who had no husband[1] – என்ற இவ்வாங்கிலப் பகுதியை,

> பேதையேன் இளமைப் பருவத்தில் ஏழை
> பிறர்மனைத் தொழில்செய்து பிழைத்தேன்!
> காதலின் கணவர் ஏதிலேன், பலராம்
> காவலர்க் கீழ்ப்பணி புரிந்தேன்;
> தாதையில் மனையில், சபாலைஎன் மடியில்
> தவழ்ந்துநீ வந்தனை கண்ணே! (பக், 6)

எனக் கவிஞர் முத்துசாமி மொழிபெயர்த்துள்ளார். 'காதலின் கணவர் ஏதிலேன்', 'தாதையில் மனை' என்னும் தொடர்கள் சற்றுச் சிந்தித்துப் பொருள் கொள்ள வேண்டியவையாய் உள்ளன. அவளும் நுணுக்கமாய், இலைமறை காயாகச் சொல்வதால், மொழிபெயர்ப்பும் அவ்வாறே உள்ளது. கருத்துத் தெளிவுக்குச் சற்றுக் கூடுதல் கவனம் தந்திருக்கலாம். த.நா. குமாரசாமி அவர்கள், 'கணவன் இலாத ஜபாலையின் மடியில் கண்விழித்தாய் நீ' எனப் பெயர்த்துள்ளார். 'பலருடன் வாழ்ந்தவள்; உனக்குத் தந்தை யார் எனக் குறிப்பிட்டுச் சொல்ல இயலவில்லை' என்ற கருத்தை மொழிபெயர்ப்பில் பெற முடியவில்லை.

அப்படி இருக்கலாம், இப்படி இருக்கலாம் என்று சொல்லிவிடுவது எளிது. ஆனால், மொழிபெயர்த்துப் பார்க்கும் போதுதான் தெரியும், அச்செயலின் அருமை. இவை இங்கு குறைகளாகச் சுட்டிக்காட்டப்படவில்லை. எவ்வளவு எச்சரிக்கை யாய்ச் செய்தாலும், மேலும் திருத்தத்திற்கு இடமளிக்கும் என்பதைச் சுட்டவே இவ்வாறு கூறப்படுகிறது.

Where is the market for you my song?[2] எனும் அடிகொண்ட ஒரு பாடலின் மொழிபெயர்ப்பில்,

1. Tagore, Fugitive poems, 44
2. Tagore, Lovers Gift

பாட்டே நீ,

சிண்டுபிடிச் சண்டையில்
முடிவிலா வாதங்கள்
செய்குவார், கிண்ணம் நெய்யைத்
தன்னிடம் தாங்குமோ
தங்கிடும் நெய்வந்து
தாங்குமோ கிண்ணமென்றே (பக். 61)

தகுதியில்லாது, வாது செய்கின்ற தருக்கரிடம் நிற்பையோ என மொழிபெயர்ப்பு முடிகிறது. முத்துசாமி இவ்வாறு பெயர்த்துள்ள இதே பகுதியை, த.நா.கு.,

மோகஇருள் அகற்றும் மெய்கண்டார்
சுவடிகளைப் பிரித்து, 'நெய்க்குத் தொன்னை ஆதாரமா?
தொன்னைக்கு நெய் ஆதாரமா?' என
இரவும் பகலும் நுண்ணிய வாதங்கள்
தொடுக்கும் இடத்தில் ஒரு மூலையில்
இடங்கொள்ள விரும்புகின்ற னையா?

எனப் பெயர்த்திருக்கிறார். புழக்கத்தில் இருக்கும் பழமொழிகள், மரபுத்தொடர்கள் ஆகியவற்றை மொழிபெயர்ப்பில் ஏற்ற இடங்களில் சேர்ப்பது மொழிபெயர்ப்புக்கு ஒரு புதுப் பொலிவை உண்டாக்கும். 'நெய்யுக்குத் தொன்னை ஆதாரமா, தொன்னைக்கு நெய் ஆதாரமா?' எனப் புழக்கத்திலிருந்துவரும் தொடரை, த.நா.கு. அவ்வாறே ஆண்டிருக்கிறார். 'கிண்ணம் நெய்யைத் தன்னிடம் தாங்குமா? தங்கிடும் நெய்வந்து தாங்குமோ கிண்ணம்?' என அதையே விவரித்திருக்கிறார், திரு. முத்துசாமி. தெரிந்த தொடர்ந்து நடைமுறையிலிருந்துவருகிற தொடர்களை அப்படியே எடுத்தாளுவது சிறப்பாய் இருக்கும்.

கோவிலிலிருந்து இறைவன் வீதியுலா வரும் நாள். அரசன் அரசியுடனும் தன் பரிவாரங்களுடனும் உலாக் காணச் சென்றான். அரண்மனைக்கு விளக்குமாறு செய்து தருகின்ற ஒருவனைத் தவிர மற்ற அனைவருமே அரசனுடன் சென்றனர். அரசனும் மற்றவர்களும் செல்லும் வழியில் அவன் குடிசை இருந்தது. பணியாளர் தலைவன் அவனையும் உலாக் காண அழைத்தான். அவன் மறுத்துவிட்டான். அவ்வழியே யானைமீது சென்ற அமைச்சரும் அவனை அழைத்தார். அவன், 'அரசரைப்போல் இறைவனை நான் அங்குச் சென்று பார்க்க விரும்பவில்லை' என்றான். 'இறைவனைக் காண இதைவிடச் சிறந்த வாய்ப்பு உனக்கு எங்கே கிடைக்கும்?' என்றார், அமைச்சர். அவனோ, 'இறைவனே என் குடிசையைத் தேடிவரும்போது அவனை நான்

கண்டுகொள்வேன்' என்றான். அமைச்சர், 'முட்டாளே! இறைவன் உன்னை நாடியா இங்கு வருவான்?' என ஏளனம் செய்தார். அவன் உறுதியாய்,

> ஏழையைக் காணவே இறைவனை அன்றிஎவர்
> இங்குவரு வார்கள் ஐயா! (பக். 136)
>
> ('who except God visits the poor' said the man)[1]

என மறுமொழி தந்தான். 'ஏழையைக் காண இறைவனை அன்றி வேறு எவர் வருவர்?' என்ற அழுத்தமிகு தாகூரின் குரலை அப்படியே எதிரொலிக்கிறார், கவிஞர். தாகூரின் இத்தகைய அருமையான - எழுச்சிமிக்க - புரட்சிகரமான பல கதைப் பாடல்களின் மொழிபெயர்ப்பு இந்நூலுள் அமைந்துள்ளது சத்தியகாமன் (பக். 4), ஊர்வசி (பக். 21), நரோத்தமன் (பக். 35), பசித்தவர்க்குணவூட்டும் பாவை (பக். 40), தருணம் வந்தது (பக். 56), தேரிலேறிவந்த திருமன்னன் (பக். 73), ஓவியன் பழிவாங்கல் (பக். 165), சிரிப்பு ஓய்ந்தது (பக். 194), விழாச்சந்தை (பக். 203).

ஆசை அழிவுண்டாக்கும்; அன்பே இன்ப ஊற்று; மக்கட் சமுதாயத்தோடு ஒன்றி வாழா வாழ்வு வாழ்வாகாது; வாழ்க்கை நிலையற்றது - இயற்கை நிலையானது; பிறவியில் உயர்வு தாழ்வு சொல்லல் பேதைமை; இயல்புக்கு மீறிய செயல் இடர் விளைக்கும்; பகுத்துண்டு பல்லுயிர் ஓம்ப வேண்டும்; நாடு உரிமையும் வளமும் பெற்று உயரவேண்டும்; இறைவனே உலகை இயக்குபவன்; இறைவன் நற்றாள் தொழுதலே பெறற்கரிய பேறு; உழைப்பே கடவுள்; மக்கள் தொண்டே மகேசன் தொண்டு; துன்பமடைந்தோர் துயர் துடைப்பதே உண்மையான இறை வழிபாடு; ஏழையைக் காண இறைவனே வருவான்; வையத்து வாழ்வாங்கு வாழ்வதே துறக்கம் என்பன போன்ற கருத்துகளைத் தாகூர் வங்க மொழியிலும் ஆங்கிலத்திலும் தந்துள்ள அதே ஆளுமையுடன் கவிஞர் முத்துசாமி இந்நூலில் தமிழாக்கம் செய்துள்ளார். தாகூரின் தமிழ்ப்பெயர்ப்பு நூல்களுள் இந்நூல் தனியிடம் பெறத்தக்க சிறப்புடையது என்பதில் இருவேறுபட்ட கருத்துக்கே இடமில்லை. தாகூரின் கவிதைகள் எனும் ஆழ்கடலில் மூழ்கி, அருமையான முத்துகளை எடுத்துத் தேர்ந்து கவிஞர் முத்துசாமி அழகிய மாலையாக்கித் தந்துள்ளார்.

---

1. Tagore, Fugitive poems, 19

ஒரு மொழியில் உள்ள பாடலை அப்படியே ஒலி நயம் கெடாமல் பிறிதொரு மொழியில் தருவது எளிய செயலன்று. அதனாற்றான் பெரும்பாலான நேர்வுகளில் கவிதை மொழிபெயர்ப்பு உரைநடையிலேயே அமைந்திடக் காண்கிறோம். தாகூரே, வங்க மொழியில் தாம் முதலில் இயற்றிய பாடல்களை ஆங்கிலப்படுத்தும்போது உரைக்கவிதை நடையையே பின்பற்றியுள்ளார். ஆனால், கவிஞர் முத்துசாமி, அரிதின் முயன்று, கவிதையைக் கவிதையாகவே மொழிபெயர்த்து வெற்றியைத் தேடிக்கொண்டிருக்கிறார் என்பது பெரிதும் போற்றுதற்குரியது.

என்னுடைய பாட்டு (My Song) என்னும் தலைப்புள்ள பாடலில் தாகூர், ஒரு தாய் தன் குழந்தையிடம் சொல்வதுபோலப் பாடுகிறார் :

My song will sit in the pupils of your eyes and will carry your sight in to the heart of things.[1]

என்னுடைப் பாட்டு நிலைபெற்று, நின்றன்
  இனியநற் பார்வையைக் கொண்டு,
நன்னர்தான் எல்லாப் பொருள்களின் இதய
  நடுவினுக்(கு) உயர்த்திடும் கண்டாய்! (பக். 185)

கவிஞர் முத்துசாமியின் மொழியாக்கத்திற்கும் இது முற்றிலும் பொருந்தும். ஆம்! அவர் பாட்டு என்றும் நிலைபெற்று உண்மைப் பொருளோடு நம்மைக் கொண்டு சேர்க்கும் திறனுடையது.

நண்பர் கவிஞர் முத்துசாமியின் சொந்தக் கவிதைப் படைப்பு நூல்களும், மொழிபெயர்ப்பு நூல்களும் பெருமளவில் தொடர்ந்து வெளிவந்து அவர் புகழ், 'என்றுமுள தென்தமிழ் போல்' ஓங்கிப் பெருக வேண்டுமென உளமார வாழ்த்துகிறேன்.

நூல் ஆக்கம்	கவிஞர் தமிழன்பன் ப. முத்துசாமி.
வகைமை	மொழிபெயர்ப்பு (ஆங்கிலத்திலிருந்து)
வெளியீடு	சிவிகைப் பதிப்பகம், சிவியாம்பாளையம், நாமக்கல் மாவட்டம். (1991)

1. Tagore, Crescent Moon

15

நான் ஒரு கவிதைத் தொழிலாளி

கவிதைத் தொழிலாளி

"நமக்குத் தொழில் கவிதை" என்றார், பாரதியார். நண்பர் கபிலவாணரோ,

நானொரு கவிதைத் தொழிலாளி
நாட்டுக் குழைக்கும் பாட்டாளி (பக். 45)

என்று தம்மை அறிமுகப்படுத்திக்கொள்ளுகின்றார்; நூலுக்கும் அப்பெயரையே அமைத்துள்ளார். உருவற்றுக் கிடக்கும் ஒன்றை உருப்படுத்தி உயர்வாக்கும் தொழில் செய்பவன் எவனுமே தொழிலாளிதான். கண்டபடி கிடந்த கல்லைச் செதுக்கிக் கலைவளம் காட்டிச் சிலை செய்பவன் சிற்பத் தொழிலாளி; பல்வேறு வண்ணங்களை ஒன்றுகூட்டி உயிரோவியம் படைப்போன் ஓவியத் தொழிலாளி; வியர்வை சிந்தப் பஞ்சடித்து நூல் நூற்று மானங்காக்கும் ஆடை நெய்வோன் நெசவுத் தொழிலாளி; உழுது பயிரிட்டுப் பழுதற்ற தொழில் செய்வோன் உழவுத் தொழிலாளி. அவைபோல, சமுதாய வயலில் புலமையெனும் ஏர் பூட்டிச் சொற்களெனும் விதை விதைத்துச் சீர்திருத்தப் பயன் காணும் தொழில் செய்வோன் கவிதைத் தொழிலாளி! நண்பர் கபிலவாணனின் இந்நூல் அவர் ஒரு கவிதைத் தொழிலாளி என்பதை உறுதிப்படுத்துகிறது.

எப்பொருளையும் சுவையாகச் சொல்ல முடியும் என்பதை இவர் கவிதைகள் மெய்ப்பிக்கின்றன. எளிமையும் இனிமையும் புதுமையும் இவர் கவிதைகட்கு மெருகூட்டும் புறச்சாதனங்களாய் அமைந்து சிறக்கின்றன. நூல் முழுவதிலும் பல்வேறு சிறப்புகள் அமைந்துள்ளன.

சொற்பொருள் நயம்

மிளகாய்ப்பழத்தை, "நாட்டழகி அதிகார மாதே" (பக். 41) என்று கவிஞர் அழைக்கிறார். 'நாட்டழகி என்பதில் 'நாட்டில்

இருக்கும் அழகிகளுள் மிகச்சிறந்த அழகியே' என்று ஒரு பொருளும், 'நாட்டுப்புறத்தில் தோன்றும் அழகியே' என்று மற்றொரு பொருளும் தோன்றிச் சிறப்பதைப் பார்க்கிறோம். 'அதிகார மாதே' என்பதில் 'அதிகாரம் செய்யும் பெண்ணரசியே' என்று ஒரு பொருளும், 'மிகுந்த காரத் தன்மை (அதி + காரம்) உடைய மாதே' என்று மற்றொரு பொருளும் மிளிர்வதை அறிந்து மகிழ்கிறோம்.

தண்ணீர் வீதியைப் பாடும் கவிஞர்,

தரைமெத்தை யிற்படுத்துப் புரள்வ தால்தான்
தரணிமுப் போகத்தைப் பெற்ற தன்றோ? (பக். 21)

என்று கூறுகின்றார். இங்கு நீரானது நிலத்தோடு பொருந்துவ தால்தான் நிலமங்கை பெரிய இன்பத்தை அனுபவிக்கிறாள் என்று ஒரு பொருளும், அவள் மூன்று போக விளைச்சலைத் தருகிறாள் என்று மற்றொரு பொருளும் தோன்றி அழகூட்டு கின்றன. இவ்வாறான சொற்பொருள் நயங்கள் இந்நூலின் பலவிடங்களில் மிகுந்து இன்பம் நல்குகின்றன.

இயற்கை எழில்

இயற்கை, கவிஞர்களுக்கு என்றும் இன்ப ஊற்றாய்த் திகழ்கிறது. காடும் மலையும், கடலும் நிலவும், வானும் வண்ண மலரும் கவிஞர்தம் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுவன. அவ்வியற்கைக் கடலில் கற்பனைப் படகின் துணைகொண்டு கவிஞர்கள் மிதக்கிறார்கள். அவர்களின் உள்ளம் உள்ளவாறும் விரும்பியவாறும் கற்பனை செய்து அதில் ஒன்றுகிறது. கபிலவாணரும் அதற்கு விதிவிலக்கானவர் அல்லர். உயர்ந்து நிற்கும் வானத்திடத்தே ஒளிவீசும் திங்களையும், விண்மீன் கூட்டங்களை யும் அவர் பார்க்கிறார். நீலவானம் ஒரு மேடையாகவும், திங்கள் ஒரு நடிகையாகவும், விண்மீன் கூட்டங்கள் அந்நடிகையைக் காண நெருங்கும் சுவைஞர் கூட்டமாகவும் அவருக்குத் தோன்றுகின்றன. அதுமட்டுமன்று, இயற்கைக் குலமகள் வானத் தரையில் எழிற்கோலம் இடுவதற்கு வைத்திட்ட புள்ளிகளாகவும் விண்மீன்கள் அவருக்குத் தோன்றுகின்றன. அழகான இயற்கைக் கற்பனை! இதோ அவருடைய சொல்லோவியம் :

சீர்மிகு திங்களாம் நடிகையைக் கண்டிட
நீலவான் மேடையில் நெருங்கும் விசிறிகள்!
கோலம் இடுதற்கு இயற்கைக் கோமகள்
வானத் தரையினில் வைத்திட்ட புள்ளிகள்! (பக். 24)

மற்றும், வானத்தைக் காம்பில்லாத குடை என்கிறார், கவிஞர்.

காம்பில்லாக் குடையான வானத்திற்குள் (பக். 122)

என்பது அவரின் கற்பனையடி.

நிலத்தின் பசுமையான காட்சி, மலையிலிருந்து வீழும் அருவி முதலியவற்றில் உள்ளம் போக்கிய கவிஞர்,

பூமித் தாயின் மேனியிலே
பச்சைப் பட்டுப் பொலிகிறது!
நிமிர்ந்த மலையின் காம்பிருந்து
நதிநீர் அமுதம் வழிகிறது (பக். 173)

என்று அவற்றைச் சொல்லோவியமாக்கிக் காட்டுகிறார்.

உணர்ச்சிப் பெருக்கு

இங்ஙனம் இயற்கையையும் கற்பனையையும் குழைத்துப் பாடும் கவிஞரின் பாடல்களில் உணர்ச்சி வெள்ளமும் பெருக்கெடுத்தோடுகிறது. சிறைச்சாலையில் வாடும் வேங்கை வீரன் சிவாஜியிடம் உள்ளத்தைப் பறிகொடுக்கிறாள், ஔரங்கசீப்பின் மகள் ஜெபுனிஸ்ஸா. தன் உள்ளத்துச் சுமையையெல்லாம் கடித வண்டியில் ஏற்றி அவனிடம் அனுப்பி வைக்கிறாள். தன் நிலைமைகளை விரிவுபடச் சொல்லிய அவள்,

வாழ்வதற்கு விரும்புகின்ற பருவச் செய்நான்
வான்மழையே மழைபொழிந்து வாழச் செய்வீர்! (பக். 133)

என்றும் வேண்டிக்கொள்ளுகின்றாள். இரண்டே அடிகளில் நாம் அக்கன்னிப் பெண்ணின் துடிப்புகளை அறிந்து கொள்ளு கிறோம்; எதுவும் செய்ய முடியாது ஏங்கும் அந்த இளஉள்ளம் வேண்டிக்கொள்ளும் காதற்பாதுகாப்பையும் உள்ளபடி உணர்ந்துகொள்ளுகிறோம்.

இது ஒருபுறமாக, காதலனை இழந்து தவிக்கும் காரிகையின் கதறலையும் கையறுநிலையாய்ப் பாடியுள்ளார், கவிஞர். "பன் னிரண்டு மணி காட்டும் சிறிய முள்ளும் பெரிய முள்ளும் போல் நானும் என் கணவனும் முன்பெல்லாம் பஞ்சணையில் இணைந் திருப்போம். அவன் என்னைத் தவிக்கவிட்டு மறைந்த பிறகு அப்பஞ்சணையை நான் சுருட்டி வைத்துவிட்டேன். இப்படி யிருந்துங்கூட என் விழிஅடுப்புகள் எரிந்து எரிந்து கண்ணீரைக் கொதிக்க வைக்கும் காரணந்தான் என்ன?" என்று அவள் விம்முகிறாள்.

பன்னிரண்டு மணிகாட்டும் மணிப்பொறியின் முள்போல்
படுத்திருந்த பஞ்சணையைச் சுருட்டிவிட்ட பின்னும்,
என்னிரண்டு விழியடுப்பும் எரிந்தெரிந்து, கண்ணீர்
இரவுபக லாய்க்கொதிக்க வைக்கிறது (பக். 86)

என்ற கவிஞரின் பாடலடிகள் நம்மையறியாமல் நாம் அக் கைம்பெண்ணின் துன்பத்தில் பங்கெடுக்குமாறு செய்துவிடுகிறது.

உவமை நயம்

இங்ஙனம் உணர்ச்சிக் கவிதைகளால் மட்டும் நூல் அழகுடன் மிளிர்கிறது என்பதில்லை; உயர்ந்த உவமை நயங்கள் பலவும் அமைந்து நம்மை நூலுள் செல்லத் தூண்டுகின்றன. பெண்ணின் இடையை வருணிக்க வந்த கவிஞர்,

> எட்டென்னும் இலக்கத்தின் இடையைப் போல
> இடையெடுத்தாள் (பக். 80)

என்று சொல்லுந்திறம் நுண்ணியதாய் உள்ளது. இதுவரை யாரும் கூறாத புதிய உவமையாகவும் இருக்கிறது. மலையில் ஒரு தினைப்புனம்; அதைக் காவல் செய்யும் காவலர் கவண் கல் வீசுகின்றனர் : அக்கவண் ஒலி, மலையின் பிறிதொரு பக்கம் தன் உணவுக்காகப் பசிய மூங்கிலை வளைத்துப் பிடித்திருந்த யானையின் காதில் படவே அது பயந்து, பிடித்திருந்த மூங்கிலை விடுகிறது. வளைந்திருந்த அம்மூங்கில் விசுக்கென மேலே செல்கிறது. இவ்வாறு மூங்கிலேறிய காட்சி, மீன் பிடிப்போன் மீன் அகப்பட்டதும் தான் பிடித்திருக்கும் தூண்டிற்கோலை விரைவாய்த் தூக்கும்போது அக்கோல் மேலெழும்புவதை ஒத்திருந்தது என்பதைப் புலவர் ஒருவர்

> ஏனல் காவலர் கவண்ஒலி வெரீஇக்
> கான யானை கைவிடு பசுங்கழை
> மீனெறி தூண்டிலின் நிவக்கும்.... (குறுந். 235)

எனப் பாடியுள்ளார். இப்புலவரின் இயற்பெயர் தெரியவில்லை. யானையால் விடப்பட்டதும் மேலெழும் மூங்கிலுக்கு மீனெறி தூண்டிலை உவமையாய்க் கூறியமையால், 'மீனெறி தூண்டிலார்' என்றே வழங்கப்படுகிறார். இவ்வாறு தாம் கூறியுள்ள உவமையால் சங்கப்புலவர் பலர் பெயர் பெற்றுள்ளனர்; அந்த அடிப்படையில் இடைக்கு, எட்டின் இடையை உவமையாகக் கூறியுள்ள புலவர் கபிலவாணனை 'எட்டிடையார்' என்றே வழங்கலாம் எனத் தோன்றுகிறது. பெண்களின் இடையைத் துடியிடை, கொடியிடை, உண்டோ இலையோ எனும் இடை எனப் பலவாறாகப் புலவர்கள் பாடியுள்ளனர். கபிலவாணரோ 8 என்ற எண்ணைப் பார்க்கிறார். அவ்வெண்ணில் மேல் பகுதிக்கும் கீழ் பகுதிக்கும் இடைப்பட்ட பகுதி எவ்வாறு சிறுத்திருக்கிறதோ அவ்வாறே பெண்களின் இடையும் சிறுத்திருக்கிறது என்று அருமையானதோர் உவமையைத்

தந்திருப்பதால் அவரை 'எட்டிடையார்' என்று வழங்குவது பொருத்தந்தானே!

முகத்திலே குடியிருக்கும் மூக்கின் வடிவத்தைத் தலைகீழாய்த் தொங்கும் ஏழின் வடிவமாய் ஆசிரியர் உவமைப் படுத்துகிறார். இதனை,

தலையினைச் சாய்த்துத் தொங்கும்
　தகைமிகு ஏழு போன்றஓர்
நிலையினில் வடிவம் காட்டி
　நிற்கிறேன் முகத்தில் மூக்காய் (பக். 16)

என்று மூக்கு கூறுவது போலக் கவிஞர் கூறுவது எண்ணி எண்ணி மகிழ்தற்குரியது. இதுபோலவே,

ஐந்தென்னும் இலக்கத்தின் அடியைப் போல
அடிபெருத்த இளநகில்கள் பெற்ற மானே! (பக். 120)

என்று கவிஞர் கூறுவதும் இன்பம் அளிக்கிறது.

அகமும் புறமும்

அகப்பொருள் துறை பாடுவதிலும் கவிஞர் வல்லவர் என்பதை அவர் பாடல்களால் உணர முடிகிறது. காதலி செய்த சிறு குற்றத்திற்காக ஊடல் கொண்டான் காதற்கணவன். இரண்டு நாள்களாய் உணவுண்ணவில்லை. அம்மங்கை நல்லாள் மனம் கலங்குகிறது. எனவே, தன் அத்தானிடம்,

செல்விநான் செய்த தென்ன?
　சிறுபிழைக் காக என்னைக்
கொல்லுதல் நீதி தானா? (பக். 91)

என்று கெஞ்சி உணவுண்ண வேண்டுகிறாள். மேலும், அவன் மனம் கொள்ளுமாறு,

உமக்கெனப் பிறந்த என்னை
உருக்குதல் சரியா அத்தான்? (பக். 92)

என்று அன்புடன் முறையிடவும் செய்கிறாள். இவ்வளவுக்குப் பிறகும் காதலன் மனம் என்ன கல்லா? உடனே அவன்,

பனிமலரை வண்டென்ன மறந்தா போகும்?
　　பாப்புனைவான் கவிதையினை மறந்தா போவான்?
இனிக்கின்ற கரும்பெதுவும் வெறுப்ப துண்டா? (பக். 93)

என்று சொல்லி, ஊடல் தணிந்து, அவளுடன் ஒன்றுபடுகிறான். இனிய எளிய நடைமுறையைக் கவிஞர் இங்ஙனம் அகப் பொருளாக்கி அழகூட்டுகிறார்.

அக வாழ்க்கை இன்பமுடன் அமையப் புறவாழ்க்கை சிறப்புற அமைதல் தேவையாகிறது. எனவே, கவிஞர் புற வாழ்க்கையின் தூய்மைக்காகவும் கவித்தொண்டு செய்கின்றார். புற வாழ்க்கை சமுதாயத்தோடு தொடர்புடையது. தனி ஒருவனை விடச் சமுதாயமே அனைத்திலும் பெரும்பங்கு எடுத்துக் கொள்கிறது. அச்சமுதாயம் பிற்போக்கானதாய் இருக்குமாயின் அஃது உயர்தல் அரிது. கவிஞர்கள் தமக்கென வாழாப் பிறர்க்குரியர் ஆதலின் அஞ்சா நெஞ்சங்கொண்டு அச்சமுதாய ஓட்டை உடைசல்களை எடுத்துக் காட்டிச் சீர்திருத்துகிறார்கள். இக்கவிஞரும் அப்பெரும்பணியிலிருந்து நழுவிக்கொண்டா ரில்லர். மக்களை வழி நடத்திச் செல்லவேண்டிய அரசியலாளர்கள் தமக்கென நிலையான கொள்கைகளைப் பெற்றிருக்கவில்லை என்பதைக் கவிஞர் மின்னலின்மேல் ஏற்றிக் கூறுகிறார். மின்னலானது தோன்றி உடன் மறையும் காட்சி, அரசியலாரின் கொள்கைபோல் அன்றோ இருக்கிறது என்கிறார்.

வலைவீசும் அரசியற் காரரின் கொள்கைபோல்
தோன்றி மறையும் தொடரொளிச் சித்திர
வான்மின்னலை... • (பக். 38)

என்பது அவர் கூற்று.

சமுதாயச் சந்தையில் கலப்படமும் கையூட்டும் எவ்வாறு மலிந்துவிட்டன என்பதை ஆசிரியர், கலப்படம் கந்தசாமியின் வாயிலாய்க் காட்டுகிறார்.

மிளகிலே பப்பாளி விதைகலந்தால் – எந்த
மேதாவி வந்தென்னைக் கேட்டிடுவான்?
உளத்திலே ஊக்கமாய்க் காவலர்கள் – என்னை
உருட்டினால் கையூட்டால் தப்பிடுவேன்! (பக். 50)

என்று கவிஞர் கூறுவது சமுதாயப் படப்பிடிப்பாகும்.

வணிகர் மட்டுமா இத்தவற்றைச் செய்கிறார்கள்? அரசியலார், அலுவலர் ஆகியோர் மட்டங்களிலும் கரண்டலும் கையூட்டும் தாண்டவமாடுகின்றன என்பதை,

அரசியலில் புகுந்தவர்கள் சட்டைப் பைக்குள்
அமுக்குகிறார் கிடைத்தவற்றைத் திறமை யாலே;
சரசரெனச் செயல்நடக்க வேண்டு மானால்
சரியான தொகைகொடுப்பாய் என்று கேட்டுத்
திரட்டுகிறார்.... (பக். 64)

என்று கூறிச் சமுதாய ஊழல்களைச் சுட்டிச் சாடுகிறார்.

ஏடும் நாடும்

கதைகளில், திரைப்படங்களில் வரும் காதல் திருமணங்கட்கும் கலப்புத் திருமணங்கட்கும் ஆதரவு தருவோர் தம் வீட்டில் அந்நிகழ்ச்சி நடப்பதாயிருந்தால் மட்டும் ஏனோ கொதிப்படைகிறார், வெறுக்கிறார். மேடையில் அவற்றை வாய் கிழியப் பேசுவோர், மேடையிலிருந்து கீழே இறங்கியதும் அக்கொள்கையைக் காற்றில் பறக்க விட்டுவிடுகிறார்களே! ஊருக்கு மட்டுந்தான் உபதேசமோ என்று கவிஞர் உள்ளம் கொதிக்கிறார். அமராவதியின் காதலை அவள் தந்தை எதிர்ப்பதனால் அவளை மணமுடிக்க முடியாத அம்பிகாபதியின் கூற்றிலே வைத்துப் பாடுகிறார்.

ஏட்டினிலே காதலென்றால் தலைய சைப்பார்;
ஏற்றத்தாழ் வில்லையென்று முழக்கம் செய்வார்;
வீட்டிற்குள் களவியலைக் கண்டு விட்டால்,
வெறிபிடித்த விலங்கெனவே சீற்றம் கொள்வார் (பக். 120)

என்பது அம்பிகாபதியின் ஆற்றாமை. ஏட்டெழுத்தும் வீட்டு நிகழ்ச்சியும் ஒன்றாகவே இருக்க வேண்டும்.

சட்டமும் சமுதாயமும்

சட்டம் சமுதாயத்திற்கு நன்மை செய்யவே இருக்கிறது. நல்லதற்குப் பாடுபடுவது அதன் பணி. அதைத் தம் வாதத்திறமையால் வேண்டியவாறெல்லாம் மனிதர்கள் வளைத்துக் கொள்ளுகிறார்கள். உண்மை மறைக்கப்பட்டுப் பொய்ம்மைக்கு வெற்றியும் கிடைத்துவிடுகிறது. அப்பாவி பாதிக்கப்படுகிறான். அவன்தான் பின்பு திருடனாகவும், கொலை கொள்ளைக் காரனாகவும் மாறுகிறான். இப்படியொரு நிகழ்ச்சியைக் கவிஞர் அமைத்து, சட்டம் ஓட்டையற்றதாய் இருக்கவேண்டும், அது நீதிக்கு மட்டுமே வளைந்து கொடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகிறார். ஒருவன் கற்பரசியைக் காவலர்கள் அவன் வீட்டில் இல்லா நேரம் பார்த்துக் கற்பழித்துவிட்டார்கள். தக்க நேரத்தில் வந்து எதிர்த்த அவனுக்குத் திருட்டுப்பட்டம் கட்டிச் சிறைத்தண்டனை வாங்கிக் கொடுத்துவிட்டார்கள். அந்த இளம்பெண்ணும் மானம் நீங்கியபின் வாழ மனமின்றிக் கிணற்றில் வீழ்ந்து இறந்துவிட்டாள். சிறைத்தண்டனை முடிந்து திரும்பிய அவன் நேர்மையுடன் உழைத்தான். வேலை செய்யுமிடங்களிலெல்லாம் பதுக்கலும் கலப்படமும் கையூட்டும் ஏமாற்றுதலும்

மிகுந்திருப்பது கண்டு அஞ்சாது போராடினான். சமுதாயம் சட்டத்தின் கண்ணில் பொடியைத் தூவி, மீண்டும் அவனுக்குத் தூக்குத்தண்டனை வாங்கிக் கொடுத்துவிட்டது. தூக்கு மேடையில் நிற்கும் அவன் பேசுகிறான்

புற்றுக்குள் பாம்புதனை வைத்துக் கொண்டே
புறஞ்சுற்றி வருவதைப்போல் குறையை வைத்து,
குற்றத்தை ஒழிப்பதற்குச் சட்டம் செய்தால்,
குற்றங்கள் ஒழிந்திடுமா?.... (பக். 147)

சட்டத்தைக் கட்டியழும் பாவி யர்காள்!
சமூகத்தை மாற்றுங்கள் சீராக் குங்கள். (பக். 149)

இவ்வடிகள் தூக்குக்கயிற்றில் தொங்கும் ஒருவனின் கூற்றுகளே; ஆனாலும், ஒவ்வொருவரையும் சிந்திக்கத் தூண்டும் சிலம்பு மொழியாய் இருப்பதை அறிகிறோம்.

காலம் மாறும்

உழைக்கின்ற பாட்டாளி மக்கள் என்றுமே ஏழைகளாய்த் தான் இருக்க வேண்டுமா என்ற கேள்வி கவிஞரை வாட்டுகிறது.

சொல்லத் துடிக்குதென் நெஞ்சமிங்கே – ஏழை
சோற்றுக்கு வழியில்லை வாழ்வுமெங்கே?
அல்லும் பகலுமே உழைத்திருந்தும் – வாழ்வில்
ஆடையு மின்றியே வருந்துகிறான் (பக். 55)

என்று அவன் நிலைக்கு வருந்துகிறார். காலம் இப்படியே போய்விடாது.

முதலாளி தொழிலாளியைச் சுரண்டி ஏமாற்றும் காலம் விரைவில் அழிந்தொழியப்போகிறது. முதலாளிகளே முன்வந்து தொழிலாளிகட்கு எல்லா நன்மையும் செய்தல் வேண்டும்; இல்லையேல்,

கட்டை வண்டியை இழுக்குங் கைகள் – உங்கள்
கழுத்தினை நெரிக்கின்ற காலம் வரும் (பக். 56)

என்று முதலாளி முதலைகட்கு அச்சுறுத்தி அறைகூவல் விடுக்கிறார், கவிஞர்.

தனி மனித ஒழுக்கம்

இங்ஙனம் சமுதாயத்தில் உள்ள பற்பல குறைகளைச் சுட்டிக்காட்டி அவற்றைக் களைய முற்படும் கவிஞர், தனி மனிதனிடத்தில் உள்ள சிறு கெட்ட பழக்கத்தையுங்கூட அவன் மனம் புண்படாமல் கண்டிக்கவும் செய்கிறார். பொடி போடுவதை

ஒரு பொடிச் (சாதாரண) செயலாகப் பலர் கருதுகிறார்கள். ஆனால், அஃது உடல்நலத்தை எத்துணையளவு பாதிக்கிறது! கவிஞர் இதை மூக்கு, தானே பேசுவதுபோல அமைத்து, அப்பழக்கத்தைக் கைவிடுமாறு வேண்டிக்கொள்ளுகின்றார்.

கலைபயில் அறிவி ருந்தும்
கருநிறப் பொடியை வைத்துக்
கொலைசெயப் பார்க்கின் றீர்கள்
கொதித்துநான் தும்மு கின்றேன்! (பக். 116)

இது மூக்கின் பேச்சு. எவ்வளவு நயமாகவும் பிறர் மனம் புண்படாமலும் கவிஞர் பொடி போடும் செயலைக் கண்டிக்கிறார் என்பதை இங்குக் காணுகிறோம்.

இலக்கண ஓவியம்

இங்ஙனமெல்லாம் பற்பல கோணங்களில் கவிதைத் தொழில் செய்யும் கபிலவாணன், தமிழ் மொழியின்மீது ஆறாக் காதல் கொண்டவர் என்பதும் நன்கு தெரிகிறது. தமிழ் இலக்கணங்களையேகூட உவமையாய் வைத்துச் சுவைபடக் கவிதை பாடமுடியும் என்பதை அவர் பல இடங்களில் நிறுவிக் காட்டுகிறார். அம்பிகாபதியை நினைத்துப் புலம்பும் அமராவதி,

உடலின் மேல்உயிர் வந்தே
 ஒன்றுதல் இயற்கை என்றீர்; (பக். 126)

இப்போது என்னைப் பிரிந்து நின்று வாட்டலாமா என்று ஏங்குகிறாள். மேலும்,

எதுகையும் மோனை யும்போல்
 இருவரும் ஒன்றாய்க் கூடி,
புதுவகை உணர்ச்சி யாழைப்
 பூரித்து மீட்டி னோம்நாம் (பக். 126)

என்று அவனுக்கு அவள் பண்டை நினைப்பையும் ஊட்டுகிறாள். வேறோர் இடத்தில் வேங்கை வீரன் சிவாஜி தன்னை நினைத்து ஏங்கும் ஜெபுன்னிசாவுக்குத் தான் திருமணமானவன் என்பதை அறிவிக்க விரும்புகிறான். மனைவி ஒருத்தி இருக்க இடைப்பிற வரலாக வேறொருத்தி வந்து தொடரக்கூடாது. அப்படி வந்தால் தொடர்ந்து தொல்லைகளே தோன்றும். இலக்கணத்தில்தான் இடைப்பிறவரலும் அந்தாதித் தொடையும் அழகு தருமே தவிர, வாழ்க்கையில் இடைப்பிறவரல் கலகத்தையே உண்டாக்கும் என்பதை அவன் அழகாய்க் கூறுகிறான்.

இலக்கணத்தில் இடைப்பிறசொல் வருமென் பார்கள்;
இல்லறத்தில் இடைப்பிறவாய் எதுவும் வந்தால்,
கலகமெனும் அந்தாதித் தொடைதான் தோன்றும். (பக். 143)

இவை, இலக்கணச் சொற்களைக்கொண்டே இனிய கவிதைகள் பாடமுடியும் என்பதற்குக் கவிஞர் காட்டும் முத்திரைகளாய் அமைந்துள்ளன.

மொழிப்பற்று

ஆசிரியர் தமிழின்மேல் கொண்டுள்ள பற்று அளவற்றது. கோவில்களில்கூடத் தமிழ் மொழியை எதிர்க்கின்றார்களே! அந்தப் பாவிகள் இருந்தால் என்ன, ஒழிந்தால் என்ன என்று வருந்துகிறார்.

தேன்துளியின் சிறப்பறியாக் குழுவே! பக்தித்
திருப்பாடல் தமிழ்ப்பாடல் கோயிற் குள்ளே
ஏன்வருதல் கூடாதென் றாடுகின்றீர்?

ஊன்பெருத்த உதிமரங்காள்! நீங்கள் எல்லாம்,
உயிரோடு வாழ்வதனால் யார்க்கு நன்மை? (பக். 69)

என்று அவர் ஒலிக்கும் சங்கொலி இன்னும் பலர் காதில் விழவில்லையே!

பெரியோரைப் போற்றுதல்

தமிழ்ச்சான்றோர்களை வேறுபாடின்றிப் போற்றி வணங்கும் பண்பும் கவிஞரிடம் காணப்படுகிறது. பாவேந்தர் பாரதிதாசனை,

இதுவரைக்கும் உனைப்போன்ற கவிஞ னைநான்
இலக்கியத்தின் அடிச்சுவட்டில் கண்ட தில்லை (பக். 153)

என்று பாராட்டுகிறார். தமிழகத்தின் தலைவர்களுள் ஒருவராகிய கர்ம வீரர் காமராசர் மறைந்தபோது,

கரும்பொன்போல் உங்கள்மெய்; தங்க நெஞ்சம்;
காமராச ரென்றாலே அறியும் வையம்... (பக். 159)

என்று கூறிப் பாராட்டி அவர் மறைவிற்கு வருந்துகிறார். ஈரோட்டுச் சிங்கம் ஈ.வெ.ரா.பெரியார் அவர்களை,

எழுத்துகளை வேலாக்கி மாற்றார் நெஞ்சை
இருகூறாய்ப் பிளந்திட்ட தாடி வேந்தர் (பக். 162)

என்று புகழ்கிறார். அன்பின் வடிவமான அறிஞர் அண்ணாவுக்கு,

தூக்கியவர் கைகளையும் தடவி, சான்றோர்
தரமுயர்த்தி மிகவுயர்ந்த குள்ளக் காந்தி (பக். 164)

என்று பாமாலை சூட்டி மகிழ்கிறார்.

இங்ஙனம், கட்சி வேறுபாடின்றிப் பெரியோரைப் போற்றும் பெருங்குணம் இக்கவிதைகளால் வெளிப்படுகிறது.

உலகப் பார்வை

கவிஞர்கள் 'தன் பெண்டு, தன்பிள்ளை, தன் வீடு, தானுண்டு என்கின்ற சின்னதொரு கடுகு உள்ளம்' கொண்டவர்கள் அல்லர்; 'தொல்லுலக மக்களெலாம் ஒன்றே' என்ற தாயுள்ளம் கொண்டவர்கள். யாருக்கேயானாலும், உலகில் எப்பகுதியில் என்றாலும் அநீதி இழைக்கப்படுவதைக் கண்டிக்கத் தவற மாட்டார்கள். கவிஞர்களின் பார்வை உலகப் பார்வையாகும்.

கவிஞர் கபிலவாணனும் இந்த இலக்கணத்திற்குக் கட்டுப்பட்டவரேயாதலின், வியத்நாம் மக்கள் வல்லரசை எதிர்த்து வெற்றி கண்டதை,

வியத்நாம் வீரரின் தியாகத்தீ
வெற்றி கொடுத்தது இன்றைக்கு;
பயனிலாப் போர்க்கோர் முடிவுரையைப்
படைக்க வைத்தார் நல்லவர்கள். (பக். 73)

என்று மனங்களிக்கப் பாடுகிறார்.

கிழக்கு வங்கத்தில் யாகியாகான் நடத்திய பேயாட்டத்தைக் கண்டு அவருடைய கவிதையுள்ளம்,

கொஞ்சும் குழந்தைகளை, – மின்னற்
கொடியிடை நிலவுகளை,
வஞ்சகன் தின்றுவிட்டான்; – உலகின்
வாய்மையைக் கொன்றுவிட்டான்

எனக் குமுறுகிறது. "வஞ்சகன் செயல் கண்டும் இந்த வையகம் தூங்கலாமா" எனத் தட்டியெழுப்பி, மனித இனத்திற்கெதிரான கொடுமைகள் நிகழும்போது உலகம் ஒன்றுதிரண்டு அத்தீய சக்திகளை ஒழிக்க வேண்டுமென ஆவேசமூட்டுகிறார்.

பூந்தோட்டம்

சுருக்கமாய்ச் சொல்லுவதென்றால், நண்பர் கபிலவாணன், தாம் ஒரு கவிதைத் தொழிலாளி என்பதை இதில் நிறுவிக் காட்டியுள்ளார். அவருடைய இக்கவிதை நூல் ஒரு பூந்தோட்டமாய்த் திகழ்கிறது. சில மலர்களை மட்டும் நான் பறித்து

வந்து உங்களை அவற்றின் மணம் நுகரச் செய்திருக்கிறேன். நான் பறிக்காது விட்ட வண்ண வண்ண மலர்கள் எண்ணிறந்தனவாய் இதில் பூத்துக் கிடக்கின்றன. அவற்றைப் பறித்துக்கொள்ளவும், மணம் நுகரவும், மாலையாக்கி மகிழவும் உங்கட்கே உரிமை தந்துள்ளேன். இலக்கியத் தும்பிகள் இன்பமுடன் தேன்பருக இக்கவிமலர்த்தோட்டத்தைப் படைத்துள்ள நண்பர் கபிலவாண னுக்கு என் வாழ்த்துகள்! வெல்க தமிழ்!

நூல் ஆக்கம்	புலவர் கபிலவாணன்
வகைமை	கவிதை
வெளியீடு	பாண்டியன் பதிப்பகம், சென்னை. (1979)

16

மனத்தூறல்

மீண்டும் சங்க காலம்

சங்க காலம் தமிழின் பொற்காலம்; எங்கும் எதிலும் தமிழே ஆட்சி செய்த காலம். அக்காலத்தில் அனைவரும் தமிழை முறையாகப் பயின்றிருந்ததால் சமுதாயத்தின் எப்பிரிவின ராயினும், எப்பணியினராயினும் கவிதைகள் எழுதியிருப்பதை நம்மால் காண முடிகிறது. அறுவை வணிகரும், மருத்துவரும், கணியரும் அன்று கவிதைகள் எழுதினர். தமிழகத்தில் பிற மொழி ஆதிக்கம் ஏற்பட்ட பிறகோ அனைவரும் தமிழில் புலமை பெற்றவர் என்ற நிலை போய், சிலரே தமிழ் பயின்று புலவர்களாகும் நிலை உருவாகிவிட்டது. அதனால், புலவர்களே கவிதை புனைய முடியும் என்றாயிற்று. இந்நிலை மாறி, இன்று பல்வேறு துறைகளில் உள்ளவர்களும் தமிழ் பயின்று கவிதை புனையும் ஆற்றல் பெற்று வருவதைக் காண்கிறோம். தொழிலகத்தில் தொழிலாளியாய் வாழ்க்கையைத் தொடங்கி, இன்று ஒரு தொழிலகத்தையே இயக்கி வரும் அருமை நண்பர் திரு. ம.ஏ. கணேசன் சிறந்த கவிஞராய் விளங்குவதும், இது போன்றே பல்துறைப் பணிகளில் இருப்போரும் கவிஞர்களாய்க் காட்சி தருவதும் தமிழகத்தில்-சங்க காலத் தமிழ்வளம் மீண்டும் உருவாகி வருகிறது என்பதைப் புலப்படுத்துகிறது.

பண்பட்ட கவிஞர்

'பொன்னி' - தமிழில் சிறந்த இலக்கிய ஏடாய்த் திகழ்ந்து வந்தது. திரு. கணேசனின், 'மாது வந்தாள்' என்னும் முதல் கவிதை அவ்வேட்டில் இடம் பெற்றிருக்கிறது என்பதே இவரது பாடல் இலக்கியத்தரம் வாய்ந்தது என்பதற்குச் சான்றாம். ''எளிய சொற்கள், பொருத்தமான பொருள், தங்கு தடையற்ற நடையோட்டம்'' கொண்டு பண்பு நலம் வாய்ந்தனவாய் இவர் கவிதைகள் திகழ்கின்றன. இடையே இசைப்பாடல்களும் இணைந்துள்ளன.

வாழ்வு தரும் ஒளிவிளக்கம்

பாடல்கள் அழகுணர்ச்சியுடன் மட்டும் இருந்தால் போதாது; சமுதாய வளர்ச்சிக்கும் எழுச்சிக்குமான கருத்துகள் அவற்றில் பொதிந்திருக்க வேண்டும். வெறும் அழகியல் உணர்வுக்காக மட்டும் எழுதப்படும் கவிதைகள் காகிதப்பூ மாலைகளாய்த் தான் காட்சியளிக்க முடியும்.

புலவர் கணேசனின் மன ஓட்டங்களை அவர் கவிதைகள் நன்கு வெளிப்படுத்துகின்றன. கவிஞர் பொன்னடிதாசனைப் பாடும் இக்கவிஞர் அவர் கவிதைகள் சமுதாயத்தில்,

விழியற்ற ஏழைக்கு ஊன்று கோலாய்
விளங்கட்டும் வாழ்வுதரும் ஒளிவி ளக்காய்!
வழியற்ற பலபேர்க்கு வழிச மைத்து
வாழட்டும்! வளரட்டும்! காலம் வென்று (பக். 185)

என வாழ்த்துகிறார். கவிதை எத்தகையதாய் இருக்க வேண்டும் என இக்கவிஞர் விரும்புகிறார் என்பதை இவ்வடிகள் நமக்கு நன்கு உணர்த்துகின்றன.

மக்கள், உழைப்பின் மேன்மையை உணர்ந்தாரில்லை; தொழிலாளர்களை மதிப்பதில்லை; காலமெல்லாம் பேசிப்பேசியே வீண்பொழுது கழிக்கின்றனர்; காரியம் நடத்த இன்னும் இராசி, எமகண்டம் பார்ப்பவர்களாய் மடமையில் உழல்கின்றனர்; இப்போக்கை மாற்றி உழைப்பின் பெருமையை மக்கள் அறியச் செய்ய வேண்டும்.

இப்புரட்சி நடத்திடவே நாமெல் லோரும்
இனியதமிழ்க் கவியெழுத வேண்டும் என்பேன் (பக். 55)

என்றெழுதுவதன் வாயிலாய், இக்கவிஞர் இலட்சியப் பிடிப்புள்ளவர் என்பதையும், ஒப்புக்கு எழுதாமல் உலக முன்னேற்றம் கருதி எழுதுபவர் என்பதையும் நிலைநாட்டுகிறார்.

பரந்துள்ள இயற்கைத்தாய் என்நெஞ் சத்தைப்
பரியாலிக் கும்போது கவிதை தோன்றும்

என்பதால், இவர் அழகுணர்ச்சியில் திளைப்பவர் என்பதையும், அதே வேளை,

அயர்வின்றி உழவர்கள் சிந்தும் வேர்வை
அடிநெஞ்சில் கருக்கொள்ளக் கவிதை தோன்றும்

என்பதால் உழைப்பின் மேன்மையை உணர்ந்த சமுதாயக் கவிஞராய்த் திகழ்கிறார் என்பதையும் அறிய முடிகிறது.

நயவுரைகள்

கவிஞரின் வினாக்களுள் சில நயமானவையாயும் அதே வேளை பொருளாழம் மிக்கனவாயும் இருக்கக் காண்கிறோம்.

புயல்வீசி விட்டபின்னே தென்றல் வந்து
பூமணத்தை வீசுவதால் என்ன உண்டு? (பக். 70)

விரும்புகின்ற குணமிருந்தும் நிறத்தைப் பார்த்து
வெறுக்கின்ற மனிதரெல்லாம் மூட ராவார்! (பக். 108)

சத்தியத்தைப் புதைகுழிக்கே அனுப்பி விட்டால்
சரித்திரமா தோன்றும்? தரித்திரந்தான் தோன்றும். (பக். 209)

இவை போன்று சிந்தனையைத் தூண்டுகின்ற சொற்றொடர்கள் நூலுள் பெருமளவில் காணப்படுகின்றன.

கருமியின் பெட்டியில் பணமிருந்து என்ன பயன்? இதைத் தக்கதோரிடத்தில் கவிஞர் அமைத்துக் காட்டுகிறார்.

"புலிபோலச் சீறி வருவது புயற்காற்று; பூ மணத்தில் ஊறி வருவது தென்றற்காற்று; நெஞ்சுக்கு இதமளிப்பது கடற்காற்று; அகத்துறை விருந்தளிப்பது ஊதற்காற்று; சூரிய வெப்பத்தால் சூடேறியதோ அனற்காற்று" எனக் காற்றின் நிலைகளையும் பயன்களையும் தொகுத்துரைத்திருப்பது பாராட்டத்தக்கதாய் உள்ளது. (பக். 33)

காதல் பாக்கள்

காதல் பாக்களை இனிமை சொட்டப் பாடுவதில் இக் கவிஞர் வல்லவராய் இருக்கிறார்.

வில்லெடுத்துக் கணைதொடுக்கும்
விழிகள் பேசும்,
வியப்பூட்டும் இலக்கியமே
காதல் என்பேன் (பக். 96)

எனக் காதலுக்கு இவர் இலக்கணம் வகுக்கிறார்.

நாணத்தால் தலைகீழ் நோக்கி,
நவரசத்தை இதழில் தேக்கி,
மோனத்தால் முறுவல் போக்கி (பக். 57)

முல்லை மலராய்க் 'காதல் மாது' வருகிறாள். அவளோ,

மேலிருந்து இறங்கிவந்த மின்னல்; – நல்ல
மேதைகளும் சரணடையும் கன்னல்!

அவளுடைய காதலனோ,

கன்னல்மொழி பேசியெனை மகிழ வைத்தாள்; – செங்
கரும்பினையும் கசப்பென்றே ஆக்கி வைத்தாள் (பக். 78)

என அவள் பேச்சினிமையைப் புகழ்கிறான்.

சிலைவிழிப் பார்வையில் காவியம் படிக்கும்;
செவ்விதழ் தேன்சுவை சிந்திடத் துடிக்கும்;
கலைவளர் கொடியெனத் துடியிடை நடிக்கும்;
கலித்தொகைக் காட்சிகள் கண்களில் நடக்கும்! (பக். 145)

எனப் பாடிக் களிக்கிறான்.

என்றும் இருப்போர்

உயர்வாழ்வு வாழ்ந்து உடலால் மறைந்தாலும் மக்கள் உள்ளங்களில் என்றும் இருப்போராகிய பெருமக்கள் காந்தியடிகள், பெரியார், காமராசர், அண்ணா, பாரதியார், பாரதிதாசன், டாக்டர் மு.வ., கண்ணதாசன் ஆகிய பெருமக்களைக் கவிஞர் உளமாற நினைந்து அவர்கள் குறிக்கோள்களைப் போற்றிப் பாராட்டுகிறார்.

உவமைகள்

பொதுவாக, கவிஞர்கள் உவமைகளைக் கையாள்வதில் தனித்திறமை காட்டுவர். இக்கவிஞர் எளிய உவமைகளில் அரிய பொருள்களை விளக்குவதில் வெற்றி கண்டிருக்கிறார்.

காற்று மிகவும் குளிர்ந்திருக்கும்; வேகமாய் இடம் விட்டு இடம் மாறும் என்பதைச் சொல்லவரும் கவிஞர், காற்று,

கொடுத்திட்ட பாரிவள்ளல் நெஞ்சி னைப்போல்
குளிர்ந்திருக்கும்; இமைப்போதில் உறையை விட்டு
எடுத்திட்ட பாண்டியனின் வாளைப் போல
இடம்விட்டே இடம்மாறும் (பக். 34)

எனக் கூறி, குளிர்ச்சிக்குப் பாரி வள்ளலின் உள்ளத்தையும், வேக வீச்சுக்குப் பாண்டியனின் வாள் வீச்சையும் கூறியிருப்பது பொருத்தமான உவமைகளாம்!

நாடு விடுதலை பெற்றுவிட்டது; காந்தியடிகள் வழிகாட்ட மக்கள் நல்வாழ்வு பெறுவர் என எதிர்பார்த்திருந்த வேளையில் அடிகள் மறைந்தார் என்பதைக் கூற வரும் கவிஞர் அரியதோர் உவமையைக் கையாளுகிறார்

கவிகின்ற கருமேகக் கூட்டம், சற்று
கண்திறந்து பெருமழையைப் பெய்யு மென்று,
புவிவாழும் மக்களெதிர் பார்த்த வேளை,
போனவிதம் தெரியாமல் கலைந்த தைப்போல் (பக். 122)

மக்கள் எதிர்பார்ப்பு ஏமாற்றத்துக்குள்ளாகிவிட்டது.

நகைச்சுவை

நகைச்சுவைபடக் கவிதை எழுதுவது எல்லோருக்கும் இயலக்கூடியதன்று. அஃது ஒரு தனி ஆற்றல். இன்று மின்சாரம் இல்லாமல் எதுவும் நடைபெறுவதில்லை என்பதை நகைச்சுவை படக் கவிஞர் கூறுவதை இங்கே காணுங்கள் :

இன்றைய நாளில் மின்சா ரந்தான்
சம்சா ரம்போல் சமமாய் வாழ்வில்
எங்கும் நிறைந்து ஏற்றம் தருவது!
சம்சா ரத்தின் நினைவு கூடச்
சமயத் தில்தான் சிலருக் கேவரும்!
மின்சா ரத்தின் நினைவில் லாமல்
சிறுபொழு தேனும் இருப்ப தரிது. (பக். 194)

மின்-சாரம்,.சம்-சாரம் ஆகிய இரண்டையும் ஒப்பிட்டுச் சாரமுடன் கூறியுள்ள நகைச்சுவையாகுமிது.

கற்பனை

கவிதையென்றாலே கற்பனையும் உடன் சேர்ந்தது என்பதை நாமறிவோம். கவிஞர் கணேசனின் கற்பனை வளத்தை இந்நூலுள் பல இடங்களில் காண்கிறோம்.

பார்த்தவுடன் காதலிக்கத் தூண்டு கின்ற
பருவமெழில் அத்தனையும் ஒன்று கூட்டி
வார்த்தெடுத்த பொற்சிலை—

யாய்த் தாமரை, இளஞ்சிவப்புடன் விளங்குகிறது. தாமரை மலர் மட்டுமே தண்ணீர்மேல் தெரிய, அதைத் தாங்கும் கொடியோ நீரினுள் மறைந்து நிற்கும். அத்தாமரையைப் பெண்ணின் முகமாக்கி, கவிஞர் கேட்கிறார் "இளஞ்சிவப்பு வடிவழகி! உன் முகத்தை மட்டும் காட்டி உடலை மறைத்துக்கொண்டாயே, ஏன்? பொல்லாதார் பார்வைபட வேண்டாமென்றோ?" எனக் கேட்டிருப்பது சிறந்த கற்பனையாம்.

தமிழ்

பாரதி, பாரதிதாசன் ஆகியோர் போலவே இக்கவிஞரும தமிழை உயிரெனப் போற்றி வழிபடுகிறார்.

—தமிழேநீ ஆல்,நான் உன்றன்
நிழல்கண்டு இளைப்பாறும் பறவை யானேன்! (பக். 203)

என விளக்குகிறார்.

மங்கை யொருத்தி தரும்சுகமும் எங்கள்
மாத்தமிழுக்கு ஈடில்லை என்று ரைப்போம்

என்றார், பாரதிதாசன். இக்கவிஞரோ மனைவியிடம் திருக்குறளை விளக்கி,

இகத்திருக்கும் இன்பமெல்லாம் இதற்கீ டாமோ?

என்று கேட்கிறார். துணைவியோ,

நானதற் கீடில்லையா?

என்று கேட்க, இவரோ,

உண்மைதான்! என்னுயிரே! எனினும் இந்த
ஒப்பில்லாத் தமிழ்நூலைச் சுவைக்கும் போது
பெண்ணெழிலே! நீதந்த இன்பம் கூடப்
பிறகேதான்....... (பக். 58)

என்று கூறுகிறார். தமிழ் நைந்தால் தமிழர் வாழ்வு நையும் என்பதை உணரும் கவிஞர், தமிழுக்கு ஊறு செய்யும் தமிழ்ப் பகையை அழிக்கத் தமிழர்கள் முற்பட வேண்டுமென வலியுறுத்துகிறார்.

நோக்கட்டும் தமிழ்நெஞ்சம் தமிழ்ப்பகையை;
நொறுக்கட்டும் தூள்தூளாய் விறுகொண்டு (பக். 53)

என்பது இவரது வீரவுரை.

தமிழ்நாடு

தமிழைப் போற்றும் கவிஞர் தமிழ்நாட்டின் எழிலையும் எழிலுறப் பாடியிருக்கிறார். பாவேந்தர் பாரதிதாசன்,

புனலிடை மூழ்கிப் பொழிலிடை உலவி
பொன்னார் இழையும் துகிலும் பூண்டு
கனிமொழி பேசி இல்லறம் நாடும்
காதல் மாதர் மகிழ்வுறும் நாடு,

வாழ்க வாழ்கவே என்றார்.

பாவேந்தர் மரபில் வரும் கணேசனோ,

அகில்மணக்கும் கூந்தலிலே தென்றல் வந்து
அமர்ந்து,மணம் அள்ளுகின்ற அழகு கொண்ட
துகில்உடுக்கும், கற்புநிறை பெண்கள் பேசும்,
தூயதமிழ் முழங்குவதும் எங்கள் நாடு (பக். 156)

என எக்களிப்போடு பாடிப் போற்றுகிறார்.

சமுதாயப் பார்வை

கவிஞர் கணேசன், ஏழை எளிய மக்கள் ஏற்றம் பெற்று எல்லார்க்கும் எல்லாம் என்றிருப்பதாய் இவ்வையம் அமைய வேண்டுமெனும் உயர்கொள்கை உடையவராய் உள்ளார். ஆதலின்,

எதனையும் மக்கள் வாழ்க்கையுடன் இணைத்துப் பார்க்கும் சமுதாயக் கவிஞராய் அவர் திகழ்கிறார்.

வானம் காலையில் நீல நிறத்துடன் விளங்குகிறது; நடுப் பகலில் சூரிய ஒளியால் வெண்மையாய்த் திகழ்கிறது; மாலையிலோ செந்நிறம் பூக்கிறது; மழைமுகில் நிறைந்த போது கருநிறம் காட்டுகிறது. வேளாவேளைக்கு வானம் வெவ்வேறு வண்ண வண்ண ஆடைகளைப் புனைவதாய்க் கவிஞர் கூறுகின்ற வேளையில் தம் சமுதாயச் சிந்தனையையும் அங்கே இழையோட விடுகிறார். வானத்தை நோக்கி, "வானமே! நீயோ வேளைக்கோர் ஆடை விதவிதமாய் அணிகிறாய்! ஆயினும்,

விண்மகளே! புவிமீது வாழும் மக்கள்,
தரிக்கின்ற ஆடையினை மாற்றிக் கட்டத்
தகுந்தஉடை இன்றி,பலர் வாழும் வாழ்க்கை
சுருக்கென்று தைக்காதோ உனது நெஞ்சை (பக். 44)

எனக் கேட்கிறார். மக்கள் உடுக்க ஆடையின்றி உழலும்போது, வீணுக்கு விதவிதமான ஆடையுடுத்தும் ஆடம்பரக்காரர்களை நோக்கிக் கேட்கும் கேள்வியாகும் இது.

நடைபாதையையே வீடெனக்கொண்டு அவல நிலையில் வாழும் மக்கள் பலருண்டு. அங்கு வாழ்பவர்களும் குடும்பம் நடத்தி மக்களைப் பெற்றெடுக்கத்தானே செய்கிறார்கள். இருக்கவே இடமற்ற அவர்கட்குப் படுக்கையறை ஏது? இருள்தான் அவர்கள் இன்ப வாழ்க்கைக்குத் துணையாகிறது. இருளைப் பாடும் கவிஞர்,

வானந்தான் கூரை யென்று
வாழ்கின்ற பாதை வாசி,
தானமாய்த்தன் மனைவிக் காங்கே
தருகின்றான் வாரிசு, உன்னால்! (பக். 97)

இருளையே போர்வையாய்க்கொண்டு நடைபாதையையே மஞ்சமாய்க்கொண்டு வாழ வேண்டிய நிலையில் மக்கள் இருக்கும் அவலநிலை கண்டு கவிஞன் வடிக்கின்ற கண்ணீராகும் இப் பாடல்.

பேடகன்ற அன்றிலைப்போல் மனைவி செத்தால்,
பெருங்கிழவன் காதல்செயப் பெண்கேட் கின்றான்;
வாடாத பூப்போன்ற மங்கை நல்லாள்,
மணவாளன் இறந்தால்,பின் மணத்தல் தீதா?

எனக் கேட்கிறார், பாவேந்தர் பாரதிதாசன். இக்கருத்தை இந்நூலாசிரியரும் சிறப்புற எடுத்துக் கூறுகிறார்.

பொங்கிவரும் இளமையெனும் கடலுக் குள்ளே
பூவிழந்து பொட்டிழந்து மூழ்கி (பக். 111)

எழில் மங்கையர் கண்ணீர் சிந்தி அழியக்கூடாது. ஒளி தந்து வந்த திரி அழிந்துவிட்டால் அதற்காக விளக்கையே தூக்கி எறிந்து விடுவதா? மறு திரி இட்டால் அவ்விளக்கு ஒளியைக் கொடுக்கத் தானே செய்யும்!

எரிந்துவிட்ட திரிபோனால் விளக்(கு) இருக்கும்; – மீண்டும்
ஏற்றதொரு திரியிட்டால் எரியும்! அன்றோ? (பக். 78)

கைம்மை இருள் போக்க, கவிஞர் தரும் ஒளி வீச்சே இக்கவிதை அடிகள்!

'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்' என உழவர்கள் ஏட்டளவில் பாராட்டப்பட்டுள்ளனரே தவிர, நாட்டளவில் அவர்கள் நிலை என்ன?

ஓடிஓடி வயல்வெளியில் வேலை செய்தே,
உச்சிவெயில் அத்தனையும் உடலில் தாங்கிப்,
பாடுபடும் உழவன்,இந்தச் சமுதா யத்தின்
பார்வையிலே புழுவாக வாழ லாமா? (பக். 105)

உழவன் நிலை உயர்ந்தால்தான் உலகம் உயரும் என்பதை வாயளவில் சொல்லிக்கொண்டிராமல் செயலளவில் காட்ட வேண்டுமென்பதைக் கவிஞர் பெரிதும் வலியுறுத்துகிறார்.

சமதருமச் சமுதாயம் உருவாகவேண்டும் என்னும் அவர் ஆர்வத்தை,

பூங்காற்று புயலாக மாறி விட்டால்
பூமியிலே புதுப்புரட்சி ஓர்நொ டிக்குள்
நீங்காத கர்வத்தால் நிமிர்ந்து நிற்கும்;
உயர்மாட மாளிகைகள் எல்லாம் மாறி,
ஏங்குகின்ற சமதர்மச் சமுதா யத்தை,
எளிதாக, எதிர்ப்பின்றிப் படைத்துக் காட்டும்

எனும் அவருடைய பாடலடிகளில் அறிகிறோம்.

அனிச்ச மலர்

இந்நூலில் 'அனிச்சமலர்' என்னும் கதைப்பாடல் ஒன்று இடம் பெற்றுள்ளது. மனித இனத்தில், "தகாத செயல் செய்யும் தறுதலைகளால்" மென்மையான அனிச்சமலர்கள் நசுங்கிச் சிதைவதை இக்கதைப்பாடல் எடுத்தியம்புகிறது (பக். 111-118).

தவிர்த்திருக்கலாம்

இவ்வளவு சிறப்பான கருத்துகளைக் கொண்டுள்ள இந்நூலில் கீழ்க்காணும் ஓரிரு கருத்துகள் தவிர்க்கப் பட்டிருக்கலாம் என்பது என் கருத்து. காற்றினைப்பற்றிப் பாடும் போது (பக். 34), மாற்றானின் மனைவியைத் தீண்டி இன்பம் துய்க்கவும், கன்னிப் பெண்கள் மானங்காக்க மேலே போட்டிருக்கும் மேலாடையை விலக்கிப் பார்ப்பதற்கும் தடையில்லை என்று பாடியுள்ள இப்பகுதி, பண்பாடு கருதி நீக்கப்பட்டிருக்கலாம். மறக்க முடியாத மழைக்காலம் (பக். 65) எனும் பாடலில் பாட்டிக்கு நலமில்லை என, ஆபத்தில் உதவி செய்ய அழைக்க வந்தவளை, மழையையும் மின்னலையும் சாக்கிட்டு ஒரு குடைக்கீழ்,

> ஒருவர்தம் அணைப்புக்குள் ஒருவ ராக
> உலகத்தை மறந்தபடி நீண்ட நேரம் (பக். 66)

இருக்கச் செய்வதுவும் ஏற்புடையதன்று. இது நடைமுறையில் உண்மையாகக்கூட இருக்கலாம்; ஆனாலும், ஒழுக்க நெறி கருதி எழுதாது விட்டிருக்கலாம்.

உடனிருப்போம்

பிறந்த நாள் வாழ்த்துக் கூறுவோரிடம் கவிஞர்,

> முயற்கொம்பாய் மாறாமல், என்முயற்சி
> முற்றுப்பெற, வெற்றிபெற, நீங்களெல்லாம்
> இயன்றவரை உடனிருந்தால் போதுமென்பேன்;
> எப்படியும் செயல்செய்ய முனைந்து நிற்பேன் (பக். 186)

எனக் கேட்டுக்கொள்கிறார். அவர் முயற்சி முற்றுப்பெற நிச்சயமாய் உடனிருப்போம்! அவர் முனைந்து செய்யும் செயலால் இது போன்று இன்னும் பல நூல்கள் விரைவில் உருவாகட்டும்! குளிர்வோம்!

பதிப்பு மிகச்சிறந்த முறையில் அமைந்துள்ளது. ஒவ்வொரு பாடலுக்கும் தனித்தனியே தலைப்புகளை அழகுற எழுதி, வார்ப்படமெடுத்து அச்சிடப்பட்டிருப்பதும், பாடல்களைப் பெரும்பிரிவுகளில் தனித்தனியே வகைப்படுத்திச் செய்திருப்பதும் பாராட்டத்தக்கவாறு உள்ளது. சிறந்த அச்சு. இந்நூல் இவ்வளவு சிறப்புற அமைய அச்சுப் பொறுப்பை ஏற்றுச் செய்த கவிஞர் அன்பரசன் பாராட்டுக்குரியவர்!

கவிஞரின், 'மனத்தூறல்' சில இடங்களில், தெளிக்கப்பட்ட பன்னீர்த் திவலைபோல் சிந்தையில் இனிய மணமெழுப்புகிறது;

சில இடங்களில் அருவிச் சிதறலாய்ப் படிந்து அகத்தைக் குளிர்விக்கிறது; சில இடங்களில் கோடை மழையாய்ப் பெய்து சமுதாய நிலத்தைக் குளிர்விக்கிறது; சில இடங்களில் நுங்கும் நுரையுமாய்ப் பெருக்கெடுக்கும் பெருவெள்ளமாகி, ஆகாதவற்றை, வேண்டாதவற்றை அடித்துச் செல்கிறது.

நண்பர் கணேசனின் 'மனத்தூறலால்' பெருக்கெடுத்துக் கொட்டுகின்ற, 'கவிதை அருவியில்' நாம் ஆடிக் குளிர்வோமாக!

நூல் ஆக்கம்	கவிஞர் ம. ஏ. கணேசன்
வகைமை	கவிதை
வெளியீடு	செல்வம்–சேகர் பதிப்பகம், சென்னை–13. (1982)

17

மறுமலர்ச்சிக் கவிதைகள்

வலசை ப. கணேசன் அவர்கள் நல்ல வளமார்ந்த தமிழ்க் கவிஞர். 'மறுமலர்ச்சி' எனும் தலைப்பில் இவ்வரிய நூலை அவர் யாத்துள்ளார்.

தமிழின் பெருமை உலகெங்கும் ஓங்க வேண்டும், எல்லாத் துறைகளிலும் எந்நிலையிலும் பயன்படுத்தத் தக்கதாய்த் தமிழ் வளம்பெற வேண்டும், தமிழ் மக்கள் நல வாழ்வு வாழ வேண்டும் என்னும் கவிஞனின் உள்ளத் துடிப்பை நூல் எடுத்துரைக்கிறது.

" 'தமிழ் எங்கும் எதிலும் முதன்மை பெறவேண்டும்'. 'தமிழ் வாழ்க, தமிழ் வாழ்க' என்ற வெறும் முழக்கங்களால் மட்டும் தமிழ் வளர்ந்துவிடாது. பழம்பெருமையை மட்டுமே பேசிக்கொண் டிருப்பதை விடுத்து, தமிழை இன்றைய உலக நடைமுறைக் கேற்றதாய், உலக மக்கள் தமிழைப் பாராட்டிப் போற்றத்தக்க 'ஆற்றல் கொண்டதாய் உயர்த்துவதே உண்மையான தமிழ் வளர்ச்சி" என்பதைக் கவிஞர் கணேசன் மிகவும் அழுத்தந் திருத்தமாய்க் கூறுகிறார்.

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
　　தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்;
இறவாத புகழுடைய புதுநூல்கள்
　　தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்;
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
　　சொல்வதிலோர் மகிமை இல்லை;
திறமான புலமையெனில் வெளிநாட்டோர்
　　அதைவணக்கம் செய்தல் வேண்டும்

என்றார், மாக்கவி பாரதியார். அக்கருத்தினை உளங்கொண்டு கவிஞர் கணேசன் அவர்கள்,

தமிழ்க்கவிதை பிறமொழியில் பெயர்த்து, நல்ல
　　திறனாய்வு செய்கின்ற மோகந் தன்னைத்,
தமிழ்கல்லாப் பிறநாட்டார் உள்ளத் துள்ளே
　　தினவெடுத்துச் செயலிலவர் காட்ட வேண்டும்;

இமிழ்கடலுக் கப்பாலும் இருக்கும் மாந்தர்,
இங்குவந்து தமிழ்கற்றுச் சென்றா லன்றே,
கமழ்கின்ற தமிழதனில், மலர்ச்சிச் சாயல்
கண்டதாகக் கொள்வதற்கு ஏற்புண் டாகும்;

என வெளிநாட்டார் தமிழ்ப்புலமைக்கு வணக்கம் செலுத்த வேண்டும் எனும் பாரதியின் வாக்குக்கு உரை வகுக்கிறார்.

மொழி, இனம் ஆகியவைபற்றிப் பாடும் போதெல்லாம் பாரதியும் பாரதிதாசனும் கவிஞர் கணேசனுக்கு வழிகாட்டிகளாய் விளங்குகின்றனர்.

தமிழரென்றே சொல்லிக்கொள் கின்றோம் நாமும்;
தமிழ்நாட்டின் முன்னேற்றம் விரும்பு கின்றோம்;
எமதென்று சொல்கின்றோம் நாள்தோ றுந்தான்;
எப்போது, தமிழினுக்குக் கையா லான
நமதுழைப்பை, ஒருகாசைச் செலவு செய்தோம்

எனப் பாவேந்தர் பாரதிதாசன், குடும்ப விளக்கில் குடும்பத் தலைவியைப் படுக்கையறையில் பேச வைக்கிறார். கவிஞர் கணேசனும்,

இற்றைவாழ் தமிழர்களில்
எத்தனைபேர் மொழிகாப்போர்?
வெற்றோலம் இடுகின்றோம்;
விரைப்பாக நடக்கின்றோம்;
சற்றேனும் இனம்வாழ
தன்னுழைப்பை ஈந்ததுண்டா?

எனக் கேட்கிறார்.

திருக்குறள், சிலப்பதிகாரம் போன்ற பண்டைய இலக்கியக் கருத்துகளும், இந்நூற்றாண்டில் இவருக்குமுன் வாழ்ந்த பெரும்புலவர்களின் மொழிநடையும் கவிஞர் கணேசனிடம் இயல்பாய் வந்தமைந்துள்ளன. பாரதியின் பாட்டுப்பெருமையை நாமக்கல் கவிஞர் இராமலிங்கனார்,

படித்தறியா மிகஏழைக் கிழவ னேனும்,
பாரதியின் பாட்டிசைக்கக் கேட்பா னாகில்,
துடித்தெழுந்து தன்மெலிந்த தோளைக் கொட்டித்,
துளைவிழுந்த கந்தலுடை சுருக்கிக் கட்டி,
'எடுத்தெறிய வேண்டுமிந்த அடிமை வாழ்வை;
இப்பொழுதே, இக்கணமே' என்றென் றார்த்(து)இங்கு
அடித்துரைத்தே ஆவேசம் கொள்வார் என்றால்,
அப்பாட்டின் பெருமைசொல யாரே வல்லுநர்?

என்றுரைப்பார். பாரதியின் பாடல் தன்மையைக் கணேசன்,

பாரதியின் குரல்தன்னைக் கேட்டால் போதும்;
படுத்தபடி நலியாகக் கிடப்போன் கூட,
தீரமுடன் எழுந்து,மிக வேக மாக,
தோள்சிலிர்த்துக் கிளம்பிடுவான் களத்தை நோக்கி

எனக் கூறுகிறார். நலிந்து படுத்துக் கிடப்பவன்கூடத் துடித்தெழுந்து வீரச்செயல் புரிவானாம். எளிமையான சொற்கள் ஆயினும் அவற்றில் புதைந்து கிடக்கும் உணர்ச்சியோ எல்லையுள் அடங்காதது.

உலகில் என்றும் அழியாது நிற்கவல்லது புகழ் ஒன்றே; மற்றெதுவும் இல்லை என்கிறார், திருவள்ளுவர்.

ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால்
பொன்றாது நிற்பதொன்று இல்.

காந்தியடிகள் தம் ஈக வாழ்வால் புகழ் பெற்றார். அப்புகழ்வாழ்வே நிலைத்தது என்பதை, கணேசன் உரைக்கிறார்

முகில்நமக்கு மழைதந்து மறைந்து போகும்;
அகில்நமக்கு மணந்தந்து மறைந்து போகும்;
அகிலத்தில் தியாகமெனும் செயலால், மக்கள்
அகத்திலெல்லாம் இறையாகி நின்றார் காந்தி.

நிலையானவற்றைக் காட்டி, நிலைத்திருப்பதைச் சுட்டிக் காட்டியிருப்பது சிறப்பு.

மதுரை வீதியில் கோவலன் செல்கிறான். எதிரே பொற்கொல்லன் வருகின்றான். கோவலன் அவனிடம் பேசிய பொழுது பொற்கொல்லன் வணங்கிப் பேசினான் என்பதை இளங்கோவடிகள்,

கூற்றத் தூதன் கைதொழுது ஏத்த

என்று கூறுவார். பின்னால் கோவலன் கொலைக்கு அவன் காரணமாய் அமைவதால் அவனைக் கூற்றத்தூதன் என்கிறார். தூக்குமரத்தைப் பாடுகின்ற கணேசன் அதனை,

கூற்றுவன் விட்ட தூதே

என இளங்கோவழி நின்று கூறுகிறார்.

பசியும் பிணியும் பகையும் நீங்கி
வசியும் வளனும் சுரக்க

என வாழ்த்தி, பூம்புகாரில் முரசறையும் வள்ளுவன் கூறியதாய் மணிமேகலைக் காப்பியம் கூறும். நாடு பசியும் பிணியும் பகையும் நீங்கி, மழையும் வளமும் பெருகிச் சிறக்க வேண்டும் என்னும் இக்கருத்தை,

வாழ்க நாடு; வாழ்க மக்கள்;
  வளமை யாவும் வாழ்கவே;
ஏழ்மை யற்ற, மகிழ்வி னோடு,
  இந்தி யத்தாய் வாழ்கவே;

என நாடு ஏழ்மை அகன்று வளம் பெருகியதாய் விளங்க வேண்டுமெனக் கணேசன் எடுத்துரைக்கிறார்.

தம் உள்ளத்தில் நிறைந்துள்ள நாட்டுத்தலைவர்களைக் கவிஞர் போற்றிப் புகழ் பாடுகிறார். தலைவர்களைக் கொள்கை களுக்கேற்ப, அவர்களைப் பாடல்களில் முன் நிறுத்திக் காட்டுவது நிறைவாய் உள்ளது.

பாழ்முடத் தனத்தையும்,
  பார்ப்பனச் சூழ்ச்சியும்,
பாரோர்க்கும் புரியவைத்தார்!
  தாழ்வாக வாழ்ந்திடும்,
சமுதாயம் வாழ்ந்திடச்
  செய்தோனை வாழ்த்து நெஞ்சே!

எனத் தந்தை பெரியாரை அவர் கொள்கைவழி நின்று வாழ்த்துகிறார். தோழர் ஜீவாவை,

சேவையில் இமயம்; செயல்களில் நேர்த்தி;
  செங்கொடி அவரின் கீர்த்தி;

எனவும், பட்டுக்கோட்டை கலியாணசுந்தரம் அவர்களை,

கட்டிவெல்லச் சுவையைப்போலே,
  காதல்ரசமும் கொடுப்பார்;
பட்டுப்போன சமுதாயப்
  பாழ்களையும் தடுப்பார்;

என, திரைத்துறையில் அவர் செய்த மாபெரும் இரு செயல்களை மனத்திருத்தியும் பாடியிருக்கும் திறம் போற்றுதற்குரியது.

எளிய இனிய நடையழகு, அரிய சொல்லாட்சி, உணர்ச்சி தோய்ந்த இசை ஆகியன இந்நூலைப் பெருமைப்படுத்துகின்றன.

மலைபோன்ற பண்பும், மகிழ்வூட்டும் அன்பும்,
  மனம்யாவும் தோய்ந்த தூயன்;

என்பன போன்ற தெளிந்த நீரோட்ட நடைகொண்ட அடிகளும்,

வருங் காலத்தில் மனப்பயிர் செழிக்க,
  உரமாய் இருந்து உதவுவோன் ஆசான்;

என்பன போன்ற கருத்துச் செறிவுடை அடிகளும்,

நகமதில் புண்ணி ருந்தால்,
  நறுக்குதல் விரலை நன்றோ?

என்பது போன்ற வினாக்கள் வாயிலாய்ச் சிந்தனையைத் தூண்டும் அடிகளும்,

தேனீயின் கூட்டத்தில்,
செந்தேள்கள் குடியிருப்பு;

என்பது போன்ற செய்தியை ஒவியப்படுத்திக் காட்டும் அடிகளும் எனப் பல்வேறு நடையழகுகள் நூலை நயம் செய்கின்றன.

கவிஞர் கணேசன் சமுதாய நல்வாழ்வுச் சிந்தனை கொண்டவர்; சமுதாய முன்னேற்றக் கருத்துகள் நிறைந்தவர்; இளைஞர்கள் எழுச்சியுடன் விளங்கவேண்டும் என விரும்புபவர். இக்கருத்துகளை அவர் கவிதைகளில் நிறையவே காணமுடிகிறது.

சாதி என்னும் நச்சுத்தன்மை மக்கள் குருதியிலேயே படிந்து கிடக்கிறது. மக்களைச் சாகடிக்கும் சாதிச் சனியனை நாம் சாகடிக்க என்ன வழி? கவிஞர் சொல்கிறார்.

வேண்டாத வேற்று மைகள்
விலகிட, திருமணங்கள்
மாண்போடு கலப்பே யானால்,
மாள்வது திண்ணம் சாதி.

சாதிகளை ஒழிக்கக் கலப்புத் திருமணம் சிறந்த வழி.

சுற்றுச்சூழல் மிகவும் கெட்டு வருகிறது. காற்றிலும் நீரிலுமாய்ச் சேரும் மாசுகள் கணக்கிலடங்கா. அவற்றைக் கண்டு வேதனைப்படும் கவிஞர், சுற்றுச்சூழலைத் தூய்மையாய் வைத்திருக்க உரிய முறையில் மக்களுக்குப் பயிற்றுவிக்க வேண்டும். அதன் இன்றியமையாமையைப் புலப்படுத்த வேண்டுமென்கிறார்.

சுற்றுச் சூழல் சுகாதாரச்
சேவைகளைப் பற்றியே, — நாம்
கற்றுத்தர வேண்டுமம்மா
கல்விக்கூடம் யாவிலும்;

கவிஞரின் இக்கருத்துரையைக் கல்விக்கூடங்கள் உடனே செயற்படுத்த வேண்டும்.

'எய்ட்ஸ்' என்றாலே எவருக்கும் நடுக்கம். ஆனாலும், அதற்கு ஆளாகின்றவர்களும் இருக்கத்தானே செய்கிறார்கள். அந்நோயின் கொடுமையைச் சொல்லும் வகையிலேயே மக்கள் மனத்தில் அத்தீமை சேர்ந்திடக்கூடாது என்ற எண்ணத்தை அழுத்தமாய்ப் பதியவைக்கக் கவிஞர் முற்படுகிறார்.

உடலில் உள்ள எலும்பு யாவும்
துளைக ளாகுமே; – சிறுசிறு
துளைக ளாகுமே;

என்பதைச் சொல்லி, இதை நீக்க ஒரே ஒரு மருந்து உண்டு; அது மனிதன் ஒழுக்கத்தோடு வாழ்வதுதான் என வெகு நயமாய்க் கூறகிறார். அந்நோய்,

உண்டாகக் காரணமே
ஒழுக்க மின்மைதான்; – மனித
ஒழுக்க மின்மைதான்;

ஆம், ஒழுக்கம் உயிர்காக்கும் மருந்து.

இளைஞர்கள் உள்ளத்தில் உணர்ச்சிமிகு சொற்களைப் பாய்ச்சி அவர்களை எழுச்சி கொள்ளச் செய்கிறார்.

உயர்ந்து நில்லடா; – தினம்
உண்மை சொல்லடா; – வீண்
பயத்தைப் போக்கிப்,
பண்பைப் போற்றி,
பகையை வெல்லடா; – தமிழ்ப்
பகையை வெல்லடா.

இன்றைய இளைஞர் இந்த அறிவுரையை ஏற்றால், எதிர்காலச் சிற்பிகளாய் விளங்குவர் என்பது திண்ணம்.

கடித்திடும் ஒவ்வொரு கணுவிலும், அமுதம்
வடித்திடும் கரும்பென விளங்கிடும்

எனத் திருக்குறளின் இனிமையைக் கவிஞர் கணேசன் குறிப்பிடுகிறார். அவர், குறளுக்குக் கூறியுள்ளதுபோலவே அவர்தம் கவிதை அடிகளும் கரும்புச்சாறாய் இனிக்கின்றன.

கவிஞர் கணேசன் இதுபோன்ற இன்னும் பல நூல்களை எழுதி, வாழ்வில் வெற்றிகளைக் குவிக்க வேண்டுமென உளமார வாழ்த்துகிறேன்.

நூல் ஆக்கம்	வலசை ப. கணேசன்
வகைமை	கவிதை
வெளியீடு	நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை. (1996)

18

ஏக்கங்களின் தாக்கங்கள்

பாரதிதாசன் பரம்பரைக் கவிஞர்

இருபதாம் நூற்றாண்டில் தமிழ்க்கவிதை, பாரதியாரின் பாடல்களில் தொடங்கி மலர்ச்சி பெறுகிறது. புலவர்களிடையே மட்டுமே புழங்கி வந்த கவிதைகளை, மக்கள் மன்றத்திற்குக் கொண்டுவந்தவர், பாரதியார். மக்கள் அறியமுடியாத கடின நடையை அகற்றி, அனைவரும் படித்துணரத்தக்க எளிய நடையில் பாரதியின் கவிதைகள் அமைந்தன.

> சுவைபுதிது; பொருள்புதிது; வளம்புதிது;
> சொற்புதிது; சோதி மிக்க
> நவகவிதை, எந்நாளும் அழியாத
> மகாகவிதை.....

எனப் பாரதியே தம் கவிதைச்சிறப்பை உரைக்கக் காண்கிறோம். பாவேந்தர் பாரதிதாசனும், பாரதியின் சொல்லும் முறையை வியந்து பாராட்டி, அதையே பின்பற்றியதாய்ப் பெருமையுடன் பேசுகிறார்.

> பாடலிற் பழமுறை பழநடை என்பதோர்
> காடு முழுதும் கண்டபின், கடைசியாய்ச்
> சுப்பிர மணிய பாரதி தோன்றி,என்
> பாட்டுக்குப் புதுமுறை புதுநடை காட்டினார்

என்கிறார், பாரதிதாசன்.

பாரதி – பாரதிதாசன் கவிதைகள் மக்கள் இலக்கியங்களாய் மலர்ந்தன. மக்களிடையே விடுதலை வேட்கையைத் தூண்டுவதைத் தம் பாடல்களின் முதல் நோக்கமாய்க் கொண்டார், பாரதியார். பாரதிதாசனோ மொழி, இன உணர்வுகளை முதன்மைப்படுத்திப் புரட்சிக் கவிதைகளை இயற்றினார். பாரதிதாசனைப் பின்பற்றி ஆயிரக்கணக்கில் கவிஞர்கள் கவிதை புனையத் தொடங்கினர். 'பாரதிதாசன் பரம்பரை' என ஒரு பரம்பரையே உருவெடுத்தது. அப்பரம்பரையைச் சேர்ந்த

முதல்நிலைக் கவிஞர்களுள், 'கவிவேந்தர்' வேழவேந்தனார் குறிப்பிடத்தக்கவராவார். முன்னரே சில கவிதைநூல்களை வெளியிட்டுள்ள வேழவேந்தனார், இப்போது, 'ஏக்கங்களின் தாக்கங்கள்' என்னும் இக்கவிதை நூலை நமக்குத் தருகிறார்.

ஏக்கங்களின் தாக்கங்கள்

- மேதினியில் நம் நாடு எல்லாத் துறைகளிலும் முதன்மையிடம் பெற்று விளங்குகிறது எனும் ஏற்றமிகு நிலை மலர்ந்திடாதா?
- வாழ்நாளெல்லாம் குறள் நெறியைக் குவலயமெங்கும் பரப்பிடோமா?
- நல்லார்க்குத் தாழ்வும், அல்லவர்க்கு உயர்வும் மக்களிடையேதான் உண்டு என்றால், இயற்கையிலுமா இந்த் மாறுபாடு இருப்பது? உண்ண முடியா எட்டிப் பழம் வனப்பான வண்ணம் பெற்றிருக்கக் கன்னல் நிகர் பலாப்பழத்திற்கு மேனியெல்லாம் முள்ளா?
- போகாத சாதிப்பேயை, பொல்லாங்கை, மடமை நோயை ஆகுதி ஆக்கும் அந்த அரிய நாள் வந்திடாதா?
- நல்ல நூல்களை நாளும் படித்து மக்கள் அறிவுச் செல்வத்தைச் சேர்த்துக்கொள்ள வேண்டாவா?
- புத்தர், ஏசு, வள்ளலார், மார்க்சு, காந்தி, பெரியார், அண்ணா ஆகியோர் கருத்தெல்லாம் உயிர் பெற்றே மலர்வது எந்நாள்?
- காதலினைப் பகிர்ந்துகொள்ளக் கூலி கேட்கும் கயமைத்தனம் இருக்கலாமா?
- விடுதலை கிடைத்தும் நாட்டில் இன்னும் வேதனைகள் மறையாதது ஏன்?
- மக்கள் சிந்தனையால், அறிவால் உயர்ந்திடாமல் அத்திக்கனியுள்ளே பிறந்து வாழ்ந்தே, அதனுள்ளே மடிகின்ற கொசுவைப்போல் செத்தொழிதல் ஒரு வாழ்வா?
- மீன்ஒன்று பசியாலே தான்இங்கே சாவதுண்டா?
வான்பறவை இரையின்றி மடிவதனைப் பார்த்தோமா?
ஈனமற்ற மனிதன்மட்டும் இன்னமும் பூமியின்மேல்
தானுண்ணும் உணவின்றிச் சாகின்றான் எனச்சொன்னால்,
ஏனிந்த இழிந்தநிலை...?

* பொன்னான 'தமிழரினம் ஒன்றே' என்னும்
  பட்டான கருத்திங்கே நிலைத்தி டாதா?
  பகுத்தறிவுச் சமுதாயம் உருவா காதா?
  'ஆடுகளும் மந்தையெனக் கூடும் போது
  ஆறறிவு மனிதஇனம் பிரிதல் நன்றா?'
* நாட்டில் வேலையின்மை, வறுமைப்பேய் ஒழிந்த துண்டா?
* தேசிய நூலாய் நம் எழிற்குறள் நூல் ஏன் இன்னும் ஆகவில்லை?
* 'லிங்கன்'களை, 'காந்தி'களைக் கொல்ல, 'பூத்'துகளும், 'கோட்சே'க்களும் தோன்றும் கொடுமை ஏனோ?
* கருத்தடைக்குத் தடைபோடல் தேவைதானா?
* ஊர்களின் அழகிய தமிழ்ப்பெயர்கள் வடமொழி யாக்கப்பட்டதை மீண்டும் தமிழுக்குக் கொண்டுவர வேண்டாவா?
* வரலாற்றில் இடம் பெறும் வகையில் நாம் வாழ்ந்திட வேண்டாவா?

வேழவேந்தனாரின் இவ்வெண்ணங்களின் தாக்கங்களே இந்நூலுள் கவிதைகளாய் உருவடுத்துள்ளன.

வேழவேந்தனார் கவிதை

'ஆன்றோரால் போற்றப்படுவதாய், சிறந்த பொருளைத் தருவதாய், கற்போர்க்கு நுண்ணறிவை ஊட்டுவதாய், அகப்பொருட் பாகுபாடுகள் அமைந்ததாய், ஐந்திணை ஒழுக்கங்களை உரைப்பதாய், மயக்கத்திற்கிடமின்றித் தெளிந்த நடையுடையதாய், நல்லோசை இயல்வதாய்க் கவிதை இருக்க வேண்டும்,' என்கிறார், கம்பர்.

'எழுத்து அசைகள் - சீர் தளைகள் - அடி தொடைகள் சிதையாததாய், பாடலுக்குரிய பத்து வகைப் பொருத்தங்களும் பாங்குற அமைந்ததாய், இனிமையும் கவர்ச்சியுமுடைய சொற்களைக் கொண்டதாய், குறளுக்கொப்பான பொருட் செறிவுடையதாய், பாவினங்கள் பயின்று வருவதாய், இசைச் சிறப்பு இணைந்ததாய் இருப்பதே சிறந்த கவிதை' என்கிறார், குமரேச சதகம் பாடிய குருபாத தாசர்.

'எளிய பதங்கள், எளிய நடை, எளிதில் அறிந்து கொள்ளக்கூடிய சந்தம், பொதுமக்கள் விரும்பும் மெட்டு –

இவற்றையுடைய காவியமொன்று தற்காலத்திலே செய்து தருவோன் நமது தாய்மொழிக்குப் புதிய உயிர் தருவோன் ஆகின்றான். ஓரிரண்டு நூற்பழக்கமுள்ள தமிழ்மக்கள் எல்லோருக்கும் பொருள் விளங்கும்படி எழுதுவதுடன், காவியத்துக்குள்ள நயங்கள் குறைவுபடாமலும் நடத்துதல் வேண்டும்' - இது பாட்டுக்குப் பாரதி கூறும் இலக்கணம்.

பொதுமக்கள் நலம்நாடிப் புதுக்கருத்தைச் சொல்க;
புன்கருத்தைச் சொல்லுவதில் ஆயிரம்வந் தாலும்
அதற்கொப்ப வேண்டாமே!

எனத் தமிழர்களின் எழுதுகோல் எத்தகையவற்றை எழுத வேண்டும் என்பதைச் சொல்கிறார், பாவேந்தர் பாரதிதாசன்.

பாடு படாமல் பாடம் பண்ணவும்,
நினைவில் எளிதில் நிற்கவும் தக்கதாய்,
இணைந்த சொற்களே கவிதை எனப்படும்;
கவிதை என்பது கற்பனை உள்ளது!

என்கிறார், நாமக்கல் கவிஞர்.

உள்ளத் துள்ளது கவிதை – இன்பம்
உருவெ டுப்பது கவிதை;
தெள்ளத் தெளிந்த தமிழில் – உண்மை
தெரிந்து ரைப்பது கவிதை

என்கிறார், கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை.

'அறிந்ததனை அறிந்தோர்க்கு அறிவிக்கும் போதினிலே அறிந்ததுதான் என்றாலும் எத்தனை அழகம்மா என்று அறிந்தோரையே மகிழ வைக்கும் அருங்கலையே கவிதையாகும்' என்பது பேரறிஞர் அண்ணாவின் வாக்கு.

என் கவிதை
யாப்பின்றிப் போனாலும் போகட்டும் –
நம்நாடு, மொழி, மான உணர்வெல்லாம்
காப்பின்றிப் போதல் கூடாதென்னும் கொள்கை யொன்றால்,
வாய்ப்பின்றிப் போனாலும் செய்யுள் கற்க,
காய்ப்பின்றி நிற்கின்ற மரமாக ஆகாமல் – நெஞ்சில்
ஊறுகின்ற உணர்ச்சிகளை வரிகளாக்கித்

தாம் பாடுவதாய்த் தமிழவேள் டாக்டர் கலைஞர் அவர்கள் குறிப்பிடுகிறார்.

கம்பர் கூறும் 'தெளிந்து தண்ணென்ற ஒழுக்கம்' கொண்டதாய், குமரேச சதகம் கூறும் கருத்தழுத்தம் உடையதாய், பாரதியார் கூறுவதுபோல் தமிழுக்கு உயிரூட்டம் தருவதாய்,

பாவேந்தர் கூறும் புதுமைக் கருத்துகளை உடையதாய், நாமக்கல்லார் கூறும் கற்பனையைத் தழுவியதாய், கவிமணி கூறும் உணர்ச்சிப் பெருக்குடையதாய், அண்ணா கூறும் அழகுணர்ச்சி அமைந்ததாய், கலைஞர் கூறும் நாடு, மொழி, மான உணர்வை ஊட்டுவதாய் வேழவேந்தனாரின் கவிதைகள் விளங்குகின்றன என்பதை இந்நூலைப் படிப்போர் ஒப்புவர் என்பது திண்ணம்.

சமுதாய மேடுபள்ள ஏற்றத் தாழ்வைச்
சமப்படுத்தும் பரம்புக்கோல் கவிஞர் அன்றோ?
இமைக்குளத்துக் கண்ணீரில் நீந்தி வந்த
இளம்விதவை, மறுவாழ்வைப் பெறுவ தற்குச்,
சுவைசுவையாய்க் கவிதைகளைத் தீட்டித் தந்தோர்,
சுடர்க்கவிஞர் பாவேந்தர் அணியே யன்றோ?
உமிபோன்று சாதிவெறி, சமுதா யத்தில்
ஒட்டுவதை வெட்டியவர் கவிஞர் அன்றோ?

என்னும் வேழவேந்தனாரின் இப்பாடலில் அவர் கவிதைபற்றிய தம்முடைய கருத்தைத் தெளிவுபடுத்துவதோடு, தாம் பாவேந்தர் அணியினர் என்பதையும் பக்குவமாய்ப் புலப்படுத்திவிடுகிறார்.

யாப்புச் சிறப்பு

அடிதோறும் ஈற்றிலுள்ள எழுத்தேனும் சொல்லேனும் ஒன்றிவரின் அஃது இயைபுத் தொடையாகும். அதாவது, அடியின் இறுதி ஒன்றிவருவது இயைபு. இயைபுத் தொடை வேழவேந்தனார்க்கு இயல்பாய் வாய்க்கிறது.

ஏடெடுத்த கவிஞருக்கோ கற்பனையே பொங்கல்;
இசையெடுத்த குயிலுக்கோ இளவேனில் பொங்கல்;
பாடெடுத்த உழவனுக்கோ பயிர்ச்சிரிப்பே பொங்கல்;
பசியெடுத்த வறிஞனுக்கோ சிறுகவளம் பொங்கல்;

எனத் தொடங்கும் 'எது பொங்கல்?' (பக். 49-50) என்ற பாடலும், மற்றும் 'வாயில்' (பக். 67-68), 'படைப்புலகம் காட்டும் பாடங்கள்' (பக். 78-79) என்னும் தலைப்புள்ள பாடல்களும் முற்றிலும் இயைபுத் தொடையிலேயே இயற்றப்பட்டிருக்கின்றன. இன்னும் சில தலைப்புகளில் இடையிடையே இயைபு எடுத்தாளப் பட்டுள்ளது.

விருத்தம், கலித்தொகையின் தாழிசைகளிலும், சிலப்பதிகாரத்தின் வரிப்பாடல்களிலும் காணப்படும் அளவுக்குத் தொன்மையானது. இவற்றை அடுத்து ஆழ்வார்கள், நாயன்மார்கள் பாடல்களில் விருத்தங்கள் இசையுடன் கூடி அமைந்திருக்கின்றன.

சீவக சிந்தாமணி, கம்பராமாயணம் போன்ற நூல்களில் இசை நோக்கு குறைந்து யாப்பு நோக்கில் விருத்தப் பாக்கள் அமைந்தன. இருபதாம் நூற்றாண்டுக் கவிஞர்கள் பெரும்பாலும் விருத்தப் பாக்களே பாடுகின்றனர். பாவேந்தர் பாரதிதாசன் பெருமளவில் விருத்தப்பாக்களையே பாடியுள்ளார். அவர் பரம்பரையினரான வேழவேந்தனாரும் விருத்தங்களிலேயே பாடல்களை இயற்றி வருகிறார். இந்நூலில் ஓரிரு பாடல்கள் தவிர மீதி அனைத்துமே எண்சீர், அறுசீர் விருத்தப் பாக்களிலேயே அமைந்துள்ளன. புதிய சிந்தனைகள் பழைய இலக்கண மரபில் இம்மியும் வழுவாது தரப்பட்டுள்ளன.

முன்னோர் மொழிபொருளும் முறையும்

கவிஞர் வேழவேந்தனார் முன்னோர் மொழிபொருளைப் பொன்னேபோல் போற்றுவதோடு அவற்றிற்குப் புது மெருகும் தோற்றமும் தந்து பொலியச் செய்கிறார்.

தலைவனைப் பிரிந்து வருந்தும் தலைவியின் விழிக் கடையில் இமையையே தீய்த்துவிடுவது போன்ற சூடான கண்ணீர்த்துளி ததும்பித் திரண்டு நிற்பதை,

> இமைதீய்ப் பன்ன கண்ணீர் தாங்கி.....
> நோம்என் நெஞ்சே!

எனக் குறுந்தொகை குறிப்பிடும். துன்ப வெளிப்பாடே கண்ணீர் எனும் கருத்தை வேழவேந்தனார்,

> தேம்புகின்ற விழிநீரோ நெஞ்சத் துள்ளே
> தேக்கிவைத்த துயரத்தின் முகப்பு!

என எழிலூட்டியும் சுவை கூட்டியும் சொல்லக் காண்கிறோம்.

'கல்வி கரையில; கற்பவர் நாள்சில' - கல்வியின் விரிவும் நாளது குறைவும் நாலடிப்பாடலின் ஓரடியில் நவிலப் பட்டிருக்கின்றன. இக்கருத்தை வேழவேந்தனாரும்,

> கல்விக்கும் வயதேது கற்பதற்கும் நாளேது?

என ஓரடியிலேயே கூறி நம் உள்ளங்களைக் கொள்ளை கொள்கிறார்.

> கப்பலுடன் அயல்நாட்டார் வந்தே நந்தம்
> கடலோரம் பொருள்களுக்கே ஏங்கு வாரா?

என்னும் வேழவேந்தனாரின் பாடலடி,

> முத்துக் குளிப்பதொரு தென்கடலிலே,
> மொய்த்து வணிகர்பல நாட்டினர் வந்தே,

நத்தி நமக்கினிய பொருள்கொணர்ந்து,
நம்மருள் வேண்டுவது மேற்கரையிலே

எனும் பாரதியின் பாடலை நினைவுக்குக் கொண்டுவருகிறது.

சங்கப்புலவர்கள்முதல் பாரதிவரை உள்ள பெருங் கவிஞர்கள் அனைவருமே நம் கவிஞரின் எண்ணத்தில் நின்ற போதிலும், பாரதிதாசனே இவரை முழுமையாய் ஆட்கொண் டிருக்கிறார் என்பதை இவருடைய ஒவ்வொரு கவிதையும் மெய்ப்பிக்கிறது.

அழகு, 'தொட்ட இடமெல்லாம் கண்ணில் தட்டுப் படுவதாய்'ப் பாவேந்தர் பாடி உள்ளார். அதுபோன்றே, வேழவேந்தனார் கவிதைகளில் தொட்ட இடமெல்லாம் பாவேந்தர் தட்டுப்படுகிறார். பாரதிதாசனாரின், 'எந்நாளோ?' என்ற பாடல் இக் கவிஞரைப் பெரிதும் ஈர்த்திருக்கிறது. பாவேந்தர் 'எந்நாளோ?' என்று அடுக்கிக் கேட்பது போல, வேழவேந்தனார்,

'குறள்தான் இந்தத்
தொல்லுலகின் 'பொதுச்சட்டம்' ஆயிற் றென்ற
சுவைச்செய்தி வாராதா? எங்கே அந்நாள்?'

என 'எங்கே அந்நாள்?' என்ற வினாக்களை அடுக்கிய பாடலைத் தந்துள்ளார்.

அள்ளும் வறுமை அகற்றாமல், அம்புவிக்குக்
கொள்ளைநோய் போல்மதத்தைக் கூட்டியமும் வைதிகத்தைப்,
போராடிப் போராடிப், பூக்காமல் காய்க்காமல்,
வேரோடு பேர்க்கவந்த, வீரா! இளவீரா!

என ஆண் குழந்தைக்குத் தாலாட்டுப் பாடுகிறார், பாவேந்தர். வேழவேந்தனார், 'தளிருக்கு ஒரு தாலாட்டு' என்னும் தலைப்பில்,

கீழ்ச்சாதி, மேற்சாதி, கிழமடமைப் பேதங்கள்,
பாழ்நாட்டில் போய்மாயப், பாடைகட்ட வந்தவனே!
வாழ்வதற்கே வழியின்றி ஆழ்கடலைக் கடக்கின்ற,
தாழ்நிலையை நொறுக்கவந்த யாழிசையே! விடிவிளக்கே!

எனப் பாடி நம் உள்ளங்களில் எழுச்சியூட்டுகிறார்.

குழந்தையை, 'மாங்கனியே! தீங்கரும்பே! பொற்சிலையே! மென்காற்றே! யாழிசையே! விடிவிளக்கே! தளிர்மகனே! அடலேறே!' என்றெல்லாம் விளிக்கும் அழகே அழகு!

காதலுக்கு வழிவைத்துக் கருப்பாதை சாத்தக்
கதவொன்று கண்டறிவோம்; இதிலென்ன குற்றம்?

எனப் பாடலில் கருத்தடைக்கு முதற்குரல் கொடுத்தவர், பாவேந்தர். அக்குரல் நீண்டு ஒலிக்க,

இருக்கின்ற மனிதகுலம் இவ்வே கத்தில்
  இனப்பெருக்கம் செய்திட்டால், எதிர்கா லத்தில்,
இருப்பதற்கும் படுப்பதற்கும் இடமா உண்டு?
  இவ்வழிக்கே கருவழியைச் சாத்த வேண்டும்

எனக் குரல் கொடுக்கிறார், வேழவேந்தனார்.

மக்கள் உள்ளங்களைக் கடுகு உள்ளம், துவரை உள்ளம், மாம்பிஞ்சு உள்ளம் என வகைப்படுத்தி, முடிவில் தன்னலமற்ற தாயுள்ளத்தின் சிறப்பை எடுத்துரைக்கும் பாவேந்தரின் சிறந்த பாடலை நாமறிவோம். வேழவேந்தனாரோ மக்களைப் பண்பாலே தேள், மூட்டைப்பூச்சி, முயல் என வகைப்படுத்தி அத்தகைய வாழ்க்கையின்றி,

சிலர்இருப்பார் 'பாரி'யைப்போல்; செத்த பின்னும்
  செய்திட்ட அறத்தொண்டே நிலைக்கும்! வாழும்!

என்று கூறுகின்ற பேருள்ளத்தைக் கண்டு பெருமைப்படுகிறோம்!

சொல்லாட்சி

அருமையான சொல்லாட்சிகள் கவிஞரிடம் அடைக்கலம் புகுந்துள்ளன. 'நாற்றங்கால்', பயிர் நெருக்கத்திற்கு எடுத்துக்காட்டு; நாற்றங்காலிலுள்ள நாற்றுகளைத் தக்கவாறு வயலில் நட்டாலோ பெருவிளைச்சல் பெறுகிறோம்.

நாற்றங்கால் போல்நெருக்கக் குழப்பம் இன்றி,
நாமிருவர் நமக்கொருவர் நிலைவா ராதா?

எனக் குடும்பக் கட்டுப்பாடுபற்றிக் கூறும்போதும்,

(நாளை) குலுங்கப் போகும்
விளைச்சலுக்கே 'நாற்றங்கால்' நீங்கள்!

என இளைஞர்களின் பெருமையைக் கூறும்போதும், ஆக, இருவகைப் பொருள் நிலைகளிலும் நாற்றங்காலை அருமையாய் எடுத்தாண்டுள்ளார்.

பயிர்த்தொழிலுக்கு மழையே அடிப்படை. மழையின்றேல் மானம் காக்கும் உணவில்லை, உடையில்லை; ஏன், மழையின்றேல் மாநிலமே இல்லை. மழை தரும் வானத்தைப் பேச்சு வழக்கில் 'மானம்' என்றும் குறிப்பிடுவதுண்டு. வானமே மானம் என்பதைக் கவிஞர்,

மண்ணகத்தில் உழுபவரின் மானம் காக்கும்
வானகமே! 'மானம்'எனச் சொல்வோம் உன்னை!

என அருமையாய் இணைத்துக் கருத்துக்கு அழகு சேர்க்கிறார்.

நெசவாளி சாயமிட்டுத் துணி நெய்கிறார். இயற்கையும் ஒரு நெசவாளியே! எவ்வாறு? பூக்களைக் குறிப்பிடும்போது,

அருமைமிகு பலநிறத்தின் 'சாயம்' தோய்த்தே,
அற்புதமாய் உமை'நெய்தோன்' இயற்கை தானா?

எனக் கவிஞர் கேட்கிறார். சாயம் நெய்தோன் எனக் கவிதை நெசவு நெய்துள்ள திறம் போற்றுதற்குரியது.

செறிவுரை

பொருட்செறிவு நிறைந்த உரைகள் இக்கவிதை நூலெங்கும் பொதிந்து கிடக்கின்றன. ஒரு பள்ளிக்கூடத்தைத் திறப்பது ஒரு சிறைச்சாலையை மூடுவதற்கு ஒப்பாகும் என்பர், அறிஞர். சிறைச்சாலை அறச்சாலையாய் மாறவேண்டுமென ஆசைப் படுகிறார், மணிமேகலை ஆசிரியர் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார். வேழவேந்தரோ, திருக்குறள் கருத்துகள் நெஞ்சில் ஏறின் சிறைச்சாலை குறையும் என்கிறார். இதோ அவர் செறிவுரை :

திருக்குறள் நெஞ்சில் ஏறின்
சிறைச்சாலை குறையும்.

குறையும் என்பதைவிட மறையும் என்றே சொல்லிவிடலாம்.

உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேரா தியல்வது நாடு

என்கிறார், திருவள்ளுவர். நாட்டில்,

பசியும் பிணியும் பகையும் நீங்கி
வசியும் வளனும் சுரக்க

என இளங்கோவடிகள் வாழ்த்துகிறார். பசியின் கொடுமை பகர ஒண்ணாதது.

கண்இளைப் பாறிடத் தூக்கமுண்டு; – அற்பக்
கழுதை இளைப்பாறத் துறையுமுண்டு;
பண்இளைப் பாறிடத் தாளமுண்டு; – எங்கள்
பசியும் இளைப்பாற உண்டோஇடம்?

எனக் கேட்கிறார், கம்பதாசன். பசியால்தானே உலகில் பல கொடுமைகள் நிகழ்கின்றன. வயிறு இருப்பதால்தானே பசி! வயிறொன்றை,

மறைத்துடலில் வைக்காமல் இருந்தி ருந்தால்
மண்ணகத்தில் போராட்டம் நிகழ்வ தேது?

என்னும் வினாவின் வாயிலாய்ப் பசியின் கொடுமையாலேயே உலகில் அனைத்துப் பாதகங்களும் நடைபெறுகின்றன என்பதைத் தெளிவாக்குகிறார், வேழவேந்தனார்.

'வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய்க்கு அலைவதா?' என்பது பழமொழி. 'உழைப்பிருக்க வறுமையில் நாம் வாடுவதா?' என்னும் அரிய கருத்தை இப்பழமொழி வாயிலாய் வேழவேந்தனார் வெளிப்படுத்துகிறார்.

வெண்ணெயை மறைத்து, நெய்க்கு
வீணாக அலைவ தேன்? ஏன்?

இவ்வினாவுக்கு விடை கண்டால் நாடு வளம் குலுங்கும் பூஞ்சோலையாகிவிடும்.

கருத்தாழம் மிக்க உரைகளின் களஞ்சியமாய் இந்நூல் திகழ்கிறது.

விழுதுவிடும் ஆல்போல நிழலைத் தந்து
வியனுலகில் வாழ்பவரே என்றும் வாழ்வார்!

தின்பதெலாம் குடல்புகுந்தால் மறைந்தே போகும்;
தினம்படிக்கும் ஏட்டறிவு மறைவ தேது?

மதிநலத்தால் பொதுத்தொண்டால் பிறந்த மண்ணின்
மதிப்புலகில் ஓங்குதற்கே உழைக்க வேண்டும்.

நெஞ்சில் அசைபோட்டுப் பயன் கொள்ளத்தக்க இத்தகைய நுட்ப உரைகள் நூல் முழுவதும் நிறைந்து கிடக்கின்றன.

தமிழ்நெஞ்சம்

இருந்தமிழே உன்னால் இருந்தேன் – இமையோர்
விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்

என்கிறார், 'தமிழ்விடு தூது' ஆசிரியர். தமிழிருக்க அமிழ்தெதற்கு? வேழவேந்தனாருக்கோ ஆயிரம் துன்பங்கள் நெஞ்சைத் தாக்கினாலும் அவற்றைப் போக்கும் ஆறுதல் மருந்தாய்த் தமிழ் அமைந்துவிடுகிறது. இல்லாமை என்னும் இன்னலும், ஏற்றத்தாழ்வுச் சுமையும், தொழில் வளமில்லாச் சூழலும், நாட்டிலிருக்கின்றனவே என்று கவிஞர் உளங்கலங்குகிறார். இருந்தாலும்,

'தேன்தமிழைத் தாய்மொழியாய்ப் பெற்றேன் என்ற
தேறுதலில் ஆறுத'லைக்

காணுகிறது கவிஞர் உள்ளம். நாவுக்கு அறுசுவை சுவையன்று. தமிழே சுவை என்கிறார்.

கயலாடும் காவிரியால் செழுமை ஆடும்!
கண்ணாடும் பருவத்தால் காதல் ஆடும்!
வயலாடும் நெற்கதிரால் வளமை ஆடும்!
வண்டாடும் சோலையினால் அழகோ ஆடும்!

தயிராடும் மத்தாலே வெண்ணெய் ஆடும்!
தமிழாடும் நாவாலே சுவையோ ஆடும்!

இப்பாடலைப் படித்து,

வேழவேந்தர் கவிதையிலே வீரம் ஆடும்;
வெற்றிகொளும் தமிழ்எழுச்சி ஆடும்! ஆடும்!

என்று ஆடிப்பாடிக் களிக்கலாம்.

வாழ்க கவிஞர் வேழவேந்தனார்! வளர்க அவர்தம் கவித்தொண்டு!

நூல் ஆக்கம்	கவிவேந்தர் கா. வேழவேந்தன்
வகைமை	கவிதை
வெளியீடு	வேந்தர் பதிப்பகம், சென்னை. (1992)

19

தமிழ்ப்பாவை

பாரதியார் தமிழ்க்கவிதையுலகின் ஒரு விடிவெள்ளி. பாரதிதாசனோ உதய ஞாயிறு.

எளிய நடையில் எல்லோருக்கும் புரியும்வண்ணம் சமுதாய மறுமலர்ச்சிக் கவிதைகளைப் பாவேந்தர் எழுதிவந்ததால் பல்லாயிரக்கணக்கோர் அவரைப் பின்பற்றி எழுதலாயினர். 'பாரதிதாசன் பரம்பரை' எனத் தமிழ்க் கவிதையுலகில் தனித்ததொரு வழியினர் உருவாயினர். 'பாரதிதாசன் பரம்பரை'யில் தோன்றியுள்ள கவிஞர்களுள் உரத்தநாடு சங்கரலிங்கம் ஒருவராய்த் திகழ்கிறார். கவிஞர் சங்கரலிங்கத்தின் தீந்தமிழ்க் குறுங்காவியமாய் இத்'தமிழ்ப்பாவை' விளங்குகிறது.

காப்பியச் சுருக்கம்

முல்லைநாட்டு மன்னன் சீராளன் சிறந்த கலைஞன்; உலகு அமைதிப்பூங்காவாய்ச் செழிக்க வேண்டும் என்னும் ஆர்வத்தினன்; எல்லா நாட்டுக் கலைஞர்களும் கலந்துகொள்ளத் தக்க வகையில் தன்னாட்டில் கலைவிழா ஒன்றை நடத்தினான். வீரப்போட்டிகளில் முல்லை நாட்டுப் படைத்தலைவன் முருகவேளே வெற்றி பெற்றான். அவனுக்குப் பரிசளிக்குமாறு மன்னன் தன் மகள் தமிழ்ப்பாவையிடம் கூறினான். தமிழ்ப்பாவை பரிசினைத் தந்ததோடு தன் உள்ளத்தையும் அவனுக்கு ஈந்தாள். ஆயினும், பாவையின் எண்ணத்தை முருகவேள் அறியான்; விழா நிறைவுநாளில் தமிழ்ப்பாவை நடனம் ஆடினாள். அனைத்து நாட்டவரும் அவள் ஆட்டத்தை வியந்து பாராட்டினர். தமிழ்ப்பாவையின் அழகையும் பண்புநலன்களையும் கேள்வியுற்ற தங்கநாட்டு மன்னன் தருமசீலன் அவளைத் தன் மகனுக்கு மணம்கேட்டுத் தூதனுப்பினான். தங்கநாட்டு மன்னன் தமிழறியா வேற்று மொழிக்காரன். பேரரசனாகிய அவன் உறவைச் சீராளன் விரும்பினான். எனினும், தமிழ்ப்பாவை வேற்றுமொழியாளனை

மணக்க விருப்பமில்லை என்றதால் தூதுச்செய்தியை ஏற்க இயலாமையை அறிவித்தான்!

மல்லிநாடு முல்லை நாட்டுக்கு அண்டை நாடு. சீராளன் பங்காளியான அழகன் அந்நாட்டை ஆண்டு வந்தான். சீராளனின் ஓங்கு புகழினால் பொறாமை கொண்டிருந்த அவன், சீராளனை எவ்வகையிலேனும் அழிக்க வேண்டுமென எண்ணியிருந்தான். ஆதலின், தங்கநாட்டு மன்னனுக்கு ஆள் அனுப்பி, அம்மன்னன் சிறுபடையைத் துணைக்கு அனுப்பினால் முல்லைநாட்டை வென்று, தமிழ்ப்பாவையைச் சிறைப்பிடித்து அனுப்பி வைப்பதாகச் சொன்னான். தங்கநாட்டுப் படைத்துணையுடன் அழகன் முல்லை நாட்டின்மீது போர் தொடுத்தான்; எனினும், தோற்றான். தோற்றுப் பிடிபட்ட அவனுக்கு நல்லறிவு கூறி அவன் நாட்டை அவனிடமே திருப்பித் தந்தான், சீராளன். மனமாற்றத் திற்கு மாறாய் அழகன், சீராளன்மீது சீற்றமே கொண்டான். தங்கநாடு சென்று, அப்பேரரசனைச் சீராளன் இழிவுபடுத்திப் பேசியதாய்க் கோள்மூட்டித் தங்கநாட்டு மன்னனை முல்லை நாட்டின்மீது படையெடுக்கச் செய்தான்.

செய்தி கேட்ட முல்லைநாட்டுப் படைத்தலைவன் முருகவேள் அந்நாட்டுப் பெரியார் நக்கீரருடன் கலந்து பேசி, போருக்குச் செல்லுமுன் இளவரசி தமிழ்ப்பாவையைப் பாதுகாப்பாய் ஓரிடத்தில் மறைத்து வைக்க முடிவுசெய்து மன்னனிடம் கூறினான். மன்னனும் அக்கருத்தை ஏற்றான். மங்கை முதலில் மறுத்தாலும் முடிவில் ஏற்றாள். போர் நடந்தது. சீராளனும் படைத்தலைவனும் மாண்டனர். வெற்றிபெற்ற தங்கநாட்டான் தமிழ்ப்பாவையை எங்குத் தேடியும் காண முடியவில்லை.

முல்லை நாட்டில் நடந்தது கேட்டு அனைத்து நாட்டுக் கலைஞர்களும் கண்ணீர் சிந்தினர். பேரரசனைக் கண்டு முல்லை மன்னனின் அமைதிச் சிந்தனையையும் கலையுள்ளத்தையும் எடுத்துரைத்து, அவன் அந்நாட்டின்மீது படையெடுத்து அழித்தது தவறு என்பதைச் சுட்டிக்காட்டினர். பேரரசனும் தவறான செய்தியால் படையெடுத்ததை உணர்ந்து, "இளவரசி இன்னும் இரண்டு திங்களுக்குள் வெளிப்போந்தால் அவள் தன் மகனுக்குத் துணைவியாகி மாண்புடனே வாழலாம்" என்றும், அவ்வாறு வெளிப்படாவிட்டால், "அவள் ஆட்சியை இழப்பாள்; ஆயினும் குடிமகளாய் உரிமையுடன் வாழ்ந்து வருவாள்" என்றும் அறிவிப்புச் செய்தான். தமிழ்ப்பாவை அரசேற்க வாராததால் பேரரசன்,

அனந்தன் என்பவனை முல்லை நாட்டு மன்னன் ஆக்கினான். புதிய மன்னன் அனந்தன் தன் மொழி பயில்வோர்க்கே அரசுப்பணிகள் என ஆணை பிறப்பித்தான். வயிற்றைபே பெரிதென நம்பிய சிலர் அம்மொழியைப் பயின்று பணியேற்றுப் பணிந்தனர். ஆட்சியகங்களிலும், இறை இல்லங்களிலும் வேற்றுமொழி அரசோச்சியது.

தமிழ்ப்பெரியார் நக்கீரரும், மணிமாலன் என்னும் வீரனும் நாட்டை வேற்றுமொழி ஆதிக்கத்திலிருந்து மீட்பதற்காக வழிவகைகள் கண்டுவந்தனர்.

இளவரசி தமிழ்ப்பாவை, நல்லூர் எனும் சிற்றூரில் பெண்களுக்காகப் பல்கலைக் கழகம் ஒன்றை நிறுவிப் பணியாற்றி வந்தாள். அங்கே பெண்களுக்கு உடற்பயிற்சியும் உளப்பயிற்சியும் ஒருங்கே அளிக்கப்பட்டன. பெரியார் நக்கீரரும் மணிமாலனும் மற்றும் இளைஞர்களும் நாட்டு நிலை குறித்துப் பேசி, நாட்டு விடுதலைக்கான பணிகளில் ஈடுபட்டு வந்தனர். நாட்டுமக்களின் எழுச்சியை அறிந்த மதிமுடியான் என்பான் அதை அனந்தனிடம் எடுத்துச் சொல்லி, அவனை நத்தி, உயர்பதவி பெற்று வாழ்ந்தான். மதிமுடியானைப்போலத் தன் சொந்த நலனுக்கும் உயர்வுக்குமாக நாட்டைக் காட்டிக் கொடுத்து வாழும் வஞ்சகர்கள் சிலர் இருக்கவே செய்தனர்.

அனந்தனின் அட்டூழியம் மிகுந்தது. பெண்களுக்குப் பயிற்சி தந்து வந்த பல்கலைநகரை முற்றுகையிட்டுத் தமிழ்ப்பாவையையும் ஏனைய பெண்களையும் கைது செய்து சிறையில் அடைத்தான். செய்தி கேட்ட மக்களும் மறவர்களும் துடித்தனர். பெரியார் நக்கீரர், சுரங்கப்பாதை வழியே கோட்டையினுள் நுழைந்தார். பெண்கள் போராடிக் கோட்டைக் கதவைத் திறந்துவிட்டனர். மல்லிநாட்டு அழகன் தான் முன்னர்ச் செய்த துரோகத்தை எண்ணி வருந்தியமையால், முல்லைநாட்டு விடுதலைக்கு உதவ முன்வந்தான். எளிதாய் வெற்றி கொள்ளப்பெற்றது.

விடுதலை பெற்ற நாட்டாட்சியைத் தமிழ்ப்பாவை ஏற்க விரும்பவில்லை; குடியாட்சியே மலரவேண்டுமென்றாள். அதே வேளை, எதிர்பாராத ஒரு செய்தியையும் கூறினாள். அவள், தான் சிறைப்பட்டபோது தனக்கு நஞ்சூட்டப்பட்ட உணவு தந்ததால் தான் இறந்துகொண்டே இருப்பதாயும், தான் படைத் தலைவனை மனத்தால் மணாளனாய் வரித்துவிட்டதால் அவன் இறந்த பிறகு தான் மட்டும் வாழ விரும்பவில்லையெனவும், நாடு விடுதலை பெற்ற நிலையில் தான் இறப்பதில் மகிழ்வு கொள்வதாகவும்

தெரிவித்து உயிர் விட்டாள். நாடு விடுதலை பெற்றுப் பாவை விரும்பியவண்ணம் மக்களாட்சி மலர்ந்து நலம் தழைத்தது! இதுவே இக்காப்பியத்தின் கதைச்சுருக்கம்.

எளிமை, இனிமை

தமிழ்ப்பாவை என்னும் இக்காப்பியம் எளிய, இனிய தனித்தமிழ் நடையில் அமைந்துள்ளது. "எளிய நடை, எளிதில் அறிந்துகொள்ளக்கூடிய சந்தம், பொதுமக்கள் விரும்பும் மெட்டு இவற்றினையுடைய காவியமொன்று தற்காலத்திலே செய்து தருவோன் நமது தாய்மொழிக்குப் புதிய உயிர் தருவோனாகின்றான். ஓரிரண்டு ஆண்டு நூற்பழக்கமுள்ள தமிழ்மக்கள் எல்லோருக்கும் நன்கு பொருள் விளங்கும்படி எழுதுவதுடன் காவியத்துக்குள்ள நயங்கள் குறைவுபடாமலும் நடத்தல் வேண்டும்" எனப் பாரதியார் குறிப்பிட்டுள்ளதற்கேற்ப இக் காவியம் யாக்கப்பட்டுள்ளது.

இன்பத்தின் மறுபிறப்பாம் இலக்கி யங்கள்;
    இன்னலுற்றார் இதயத்தை வருடி நீவித்,
துன்பத்தைப் போக்குகின்ற மூலி கைகள் (பக். 101)

என இலக்கியத்திற்கு இக்காவிய ஆசிரியர் தந்துள்ள வரையறைக்கேற்பவே இக்காவியத்தைப் படிப்போர் இதயங்களில் இன்பத்தைப் பாய்ச்சும்வண்ணம் இதனைப் படைத்தளித்துள்ளார்.

எரிதழலைத் தம்வீட்டில் தாமே வைத்தார். (பக். 42)

நாக்கின்றிப் பிறந்தவர்போல் ஊமை யானார். (பக். 60)

தீயவர்கள் ஒருநாளும் வாழ்ந்த தில்லை;
    தீமைகளும் தொடர்ந்ததில்லை. (பக். 154)

என்பன போன்ற அரிய சிறிய சொற்றொடர்கள் பல இக்காப்பியத்தில் அறிவுச்சுடர்களாய் ஒளி வீசுகின்றன.

அரிய உரைகள்

நாடகம், மக்களுக்கு மகிழ்வை நல்குவது. ஆள்கள் நேரில் தோன்றி, மெய்ப்பாடுகள் விளங்க நடிப்பதால் அனைவரும் கண்டு களிக்கின்றனர். நடிப்பைக் கண்டு மகிழ மொழி தடையாய் இருப்பதில்லை. மொழியும் அறிந்த நிலையானால் நாடகம் பொன்மலர் மணம் பெற்றது போலாம். நாடகத்தின் இயல்பை,

மொழிகடந்து மக்களுக்கு மகிழ்வு நல்கும்
    முத்தமிழில் ஒன்றான நாடகம்— (பக். 2)

எனக் கவிஞர் கூறுவது சிறந்த விளக்கம்.

> நகஞ்சதையைத் தின்பதைப்போல் பகைய ழைத்து
> நான்காட்டிக் கொடுத்து,நல்ல குடிய ழித்தேன் (பக். 124)

எனும் மல்லிநாட்டு அழகனின் கூற்றில், காக்க வேண்டியவர்களே அழிவுக்குத் துணைநின்றால் ஆக்கம் எங்கிருந்து தோன்றுமெனும் ஏக்கத்தை வெளிப்படுத்துகிறார், கவிஞர்.

நீரோடு வாழ்ந்து, நீர் வற்றின் தாமழியும் கொட்டியும் ஆம்பலும் போல ஒட்டியிருப்பதே உறவாகும். பழம் உள்ளவரை சூழ்ந்திருந்து, பழங்கள் இல்லையென்றதும் பறந்தோடும் பறவைகளைப்போல, செல்வம் உள்ளவரை நட்பாயிருந்து இல்லையென்றதும் விலகியோடுவது உண்மை நட்பாகாது! உலகில் கொட்டியும் ஆம்பலுமாயிருப்பவர் வெகுசிலரே! பலரோ வட்டமிடும் பறவைகளாய் மாறிச் சுழல்கின்றனரே எனக் கவிஞருள்ளம் வேதனைப்படுகிறது.

> கொட்டிஆம்பல் ஆயிரத்தில் சிலரி ருப்பார்;
> கொம்புதோறும் கனிச்சுவையை நாடி ஒடி
> வட்டமிடும் பறவைகள்போல் பலரி ருப்பார். (பக். 83)

இதுதானே உலகம்! என் செய்வது?

கொள்கை உரை

தமிழ்மக்கள் தம் உளத்தே என்றும் நிலைநிறுத்திக் கொள்ளவேண்டிய கொள்கை உரைகள் பலவற்றைக் கவிஞர் இக் காப்பியத்தில் ஆங்காங்கே சுட்டிச் செல்கிறார்.

> தலையிழந்து போனாலும், நமக்கே உள்ள
> தன்மானம் இனமானம் காக்க வேண்டும். (பக். 28)

> கிளையொடித்து மடியாமல், நமக்குள் நாமே
> கீழ்ப்படிந்து கிடக்காமல், நிழல்கொ டுத்துத்
> தளராமல் நம்குடியைக் காப்போம். (பக். 37)

> பொங்கிடுவோம் விரைந்தின்று; தமிழர் மானம்
> போனபின்னால் உயிர்வாழ்தல் சிறுமை யாகும். (பக். 72)

> இனப்பற்று, மொழிப்பற்று, விடுத லையை
> எள்முனையும் இழக்காத நாட்டுப் பற்று...
> முனைப்புற்று, மிகவிரைவாய் உலகந் தன்னில்,
> முன்னேற்றம் வரப்பெற்றுச் சிறக்க வேண்டும். (பக். 159)

இவையனைத்தும் தமிழ்மக்கள் உள்ளங்கொள்ள வேண்டிய உயரிய கருத்துக் கோவைகள்.

பெண்கள் முன்னேற்றம்

"பெண்ணின் பெருமை பேசுவமே; மண்ணில் அடிமை வீசுவமே" என்பார் திரு.வி.க. "ஆண்களோடு பெண்களும் சரிநிகர்

சமானமாக வாழ்வம் இந்த நாட்டிலே" எனக் குரல் கொடுத்தார், பாரதியார். "பெண்ணடிமை தீரும்மட்டும் பேசும் திருநாட்டு மண்ணடிமை தீர்ந்து வருதல் முயற்கொம்பே" எனப் புரட்சி முழக்கம் செய்தார், பாவேந்தர். கவிஞர் சங்கரலிங்கனாரும்,

பெண்களெல்லாம் ஆற்றலோடு வாழ்ந்தி ருந்தால்,
பெருமைகளை எந்நாடும் பெற்றி ருக்கும்;
கண்ணீரில் அவர்மட்டும் மிதந்தி ருந்தால்,
காவிரித்துச் சோலைகளாய்ப் பூத்து நிற்கும்;
தண்ணீரால் வளமுடைய கழனி நாடும்,
தரித்திரத்தைக் கடவாது, வாழா தென்ற
உண்மைதனை மனம்வைக்க வேண்டும்; நாளை
உலகமெலாம் நம்கருத்தைப் பரப்ப வேண்டும் (பக். 120)

என, பெண்ணின் பெருமையே மண்ணின் பெருமை யென்பதை மனங்கொளச் சொல்கிறார்.

காமத்தால் நெறி பிறழ்ந்து,

குலமகளை மாதர்களைக் கைப்பி டித்துத்
தீண்டுதற்கு விரும்புகின்ற கொடிய பேரைத்
தீக்குள்ளே விறகைப்போல் நுழைப்போம்... (பக். 145)

பெண்மைப் பேரறம் காக்கப்பட வேண்டும் என்பதற்கு கவிஞர் வலியுறுத்தும் வழி இது.

கவிதை நலம்

உவமைகளால் கவிதை சிறப்படைகிறது. இயல்பான பொருத்தமான உவமைகளைச் சொல்வதில் கவிஞர் சங்கரலிங்கம் சிறந்து விளங்குகிறார். உற்றார் உறவினரை இழந்து தனித்திருக்கும் இளமங்கை நிலைபற்றி அவர் தொடர்ந்த பல உவமைகளைக் கோத்து மாலையாக்குகிறார். இதோ பாடல்

புனிற்றாவை இழந்துநிற்கும் கன்று; நல்ல
பூமணத்தை இழந்துநிற்கும் சோலை; மிக்க
இனிக்கின்ற சுவையிழந்த நறுந்தேன்; கையில்
இன்னமுதைப் பெற்றிழந்த வறியோன்; ஊட்டும்
கனிமரத்தை இழந்திட்ட பறவை; வாழ்வில்
கவினழியும் வறுமைதரும் இளமை போலே,
தனியிருந்து துன்பத்தின் எல்லைக் கோட்டைத்
தாண்டாமல் அழுதிருந்தாள் அழகு மங்கை! (பக். 63)

உள்ளத்தை இன்பத்தால் நனைக்கும் உவமைச் சுனையாய்ப் பாடல் இனிக்கிறது.

குடியாட்சிக் கோட்பாடு

'ஒரு மனிதன் தேவைக்கே இந்தத் தேசம்' என்றெண்ணும் கோனாட்சி அழிந்து எங்கும் குடியாட்சி மலர வேண்டுமெனும் கொள்கையை மையமாய்க் கொண்டது, இக்காப்பியம். ஆதலின், குடியரசுக் கோட்பாடுகளைக் கவிஞர் விரிவாய்ப் பாடியுள்ளார்.

முடிசூடி ஒருகுடியே கால மெல்லாம்
முறைசெய்து காப்பாற்றும் வழக்கந் தன்னை,
அடியோடு நான்மாற்ற விரும்பு கின்றேன் (பக். 109)

எனத் தமிழ்ப்பாவையின் மொழியாய்க் கவிஞர் தம் கொள்கையை வெளிப்படுத்தியுள்ளார்.

மக்களெல்லாம் ஒன்றுகூடித், தம்மைத் தாமே,
மகிழ்ச்சியுடன் ஆளுதலே, உண்மை யான
சிக்கலற்ற ஆட்சி.... (பக். 110)

என்பதையும், அச்சிக்கலற்ற ஆட்சியைத் தேர்தல் முறைவழி தோற்றுவிக்க வேண்டுமென்பதையும் நன்கு விளக்கியுள்ளார். வல்லமை பெற்றவர்களே வாழ்வார் எனும் வகையற்ற பேச்சுக்கு முடிவு கட்டி, எல்லாரும் எல்லாமும் எய்துதற்கான வழிவகைகளை விரிவாய் எடுத்துரைக்கிறார். (பக். 113-114)

தன்னலக் கொடுமை

தன்னலத்திற்காய் இனநலனைக் காட்டிக் கொடுக்கும் ஈனர்களின் கயமைத் தன்மையைக் கவிஞர் வன்மையாய்ச் சாடுகிறார்

சலுகைகளும் பதவிகளும் கொடுத்த போது,
சார்ந்திருந்தார் நம்பக்கம்; இன்று நாட்டின்
அலுவல்களில் பங்குபெற மிகவி ரும்பி
அயல்மொழியைப் பயில்கின்றார்; பகைமுன் னாலே
வலிந்துசென்று கைகட்டி உடல்ந டுங்கி
வாய்பிதற்றி நிற்கின்றார்; அவர்கள் வீசும்
எலும்புக்கு வெகுநேரம் காத்தி ருந்தே
இலையென்றால் வருந்துகின்றார் மானங் கெட்டே (பக். 81)

எனத் தமிழ்ப்பெரியார் வருந்துவதாய்க் கவிஞர் பாடியுள்ள நிலை எந்நிலையிலும் எக்காலத்திலும் இங்குத் தோன்றாதிருக்கட்டும்!

கவிஞர் சிந்தனை

கவிஞர் இந்தக் காப்பியத்தைப் படைத்ததன் வாயிலாய் என்னென்ன எண்ணங்கள், விளைவுகள் நாட்டில் தோன்ற வேண்டுமென்பதை ஆங்காங்கே குறிப்பிட்டுச் செல்கிறார்.

நாட்டில் பகையுணர்வு மறைந்து அனைவரும் ஒரு குடும்பமாய் வாழ வேண்டும். பசியும் பிணியுமின்றி மக்கள் வசியும் வளனும் பெற்றுத் திகழ வேண்டும்.

யாரோடும் பகைவேண்டா நமக்கு; மக்கள்
  எல்லாமும் பெற்றிடவே, நிலத்தி னோடு
போராட்டம் நடத்திடுவோம்; பயிர்வ ளர்த்துப்
  பூமகளின் மேனியெல்லாம் ஆடை போர்த்திச்
சீராக்கி மகிழ்ந்திடுவோம்.... (பக். 18)

போர்க்கருவிகள் செய்வதை ஒழித்து உழவுக்கருவிகளை உருவாக்குவோம்!

எல்லாரும் ஒருகுடும்பம்; உலகந் தன்னில்
  இருப்பவர்கள் அனைவருமே உடன்பி றந்தார்;
பொல்லாங்கு நினைப்புகளே நமக்கு வேண்டா! (பக். 18)

மொழியோடே இனங்காத்து, நாட்டில் இன்று
  முகிழ்த்திருக்கும் சாதிமத வேற்று மையைக்
குழிதோண்டிப் புதைத்துவிட்டு, நமது மக்கள்
  குமுகாயம் ஒன்றுபட்டு வாழு தற்கு,
வழியொன்று நாம்காண்போம்!.... (பக். 155)

பஞ்சங்கள் பட்டினிகள் நீக்கி, இந்தப்
  பாரிலுள்ளார் அனைவருக்கும் வாழ்வு நல்க,
விஞ்ஞான முன்னேற்றம் மலர வேண்டும். (பக். 155)

உணவு,உடை, குடியிருக்க வீடு,கல்வி,
  உறுதிசெய்தே அனைவருக்கும் கிடைத்தி ருக்கும்
வண்ணத்தில் நாட்டாட்சி அமைக்க வேண்டும்! (பக். 156)

சிந்திக்கத் திறன்தந்து, தொழில்வ ளத்தில்
சிறந்திருக்கும் நாடாக்க வேண்டும். (பக். 156)

கவிஞரின் இந்த எண்ணங்கள் நிறைவேறிடின் நாடு இன்பப் பூங்காவாய் மணம் கமழும்.

பாவேந்தர் வழியில்—

கவிஞர் சங்கரலிங்கனார் இக்காவியத்தைப் பாவேந்தர் பாரதிதாசனாரின், 'பாண்டியன் பரிசை' அடியொற்றிப் படைத்திருக்கிறார். கதை, அமைப்பு, யாப்பு, சொல்லும் முறை ஆகிய அனைத்திலுமே, 'பாண்டியன் பரிசின்' தாக்கம் இதில் படிந்திருக்கக் காண்கிறோம்!

எனையீன்ற தந்தைக்கும் தாய்க்கும் மக்கள்
  இனம்ஈன்ற தமிழ்நாடு தனக்கும் என்னால்
தினையளவு நலமேனும் கிடைக்கும் என்றால்
  செத்தொழியும் நாளெனக்குத் திருநாள் ஆகும்
(பாண்டியன் பரிசு, பக். 96)

என்பார், பாவேந்தர் பாரதிதாசன். இக்கருத்து கவிஞர் சங்கரலிங்கனாரிடம்,

> எங்களுயிர் வெல்லமல்ல; தமிழைக் காக்க
> இழப்பதுதான் சிறப்பாகும். (பக். 72)

எனவும்,

> த்னைப்பெற்ற தமிழுக்கும், தாய்மண் ணுக்கும்,
> தன்னாலே ஆகின்ற அனைத்தும் செய்ய,
> நினைத்திருக்கும் எழிற்பாவை (பக். 4)

எனவும் உருப்பெறக் காண்கிறோம்.

> இருட்டறையில் உள்ளதடா உலகம்! சாதி
> இருக்கின்ற தென்பானும் இருக்கின் றானே!
> மருட்டுகின்ற மதத்தலைவர் வாழ்கின் றாரே!
> வாயடியும் கையடியும் மறைவ தெந்நாள்?
> சுருட்டுகின்றார் தம்கையில் கிடைத்த வற்றைச்
> சொத்தெல்லாம் தமதென்று சொல்வார் தம்மை
> வெருட்டுவது பகுத்தறிவே! இல்லை யாயின்
> விடுதலையும் கெடுதலையும் ஒன்றே யாகும்!

இது பாவேந்தரின் பகுத்தறிவுக் கொள்கை விளக்கப் பாடல். மேலும் அவர், 'நமக்கென்ன கிழியட்டும் பழம்பஞ்சாங்கம்' என்பர். இக்கருத்துகளில் ஊறிய சங்கரலிங்கம் அவர்களும்,

> கடைத்தேற வழியின்றி மக்க ளுக்குள்,
> கணக்கற்ற வேற்றுமையைத் தோற்று வித்துப்,
> படைத்தவனும் கடவுளென்றால், வறுமை நோயால்
> பரிதவிக்க வைத்தவனும் அவனே என்றால்,
> உடைத்தெறிவோம் கடவுள்சிலை; சாத்தி ரங்கள்
> உருவாக்கி வைத்து,மக்கள் ஒற்று மைக்குத்
> தடையாக உள்ளதென்றால் அதைக்கி ழித்துத்
> தகர்த்தெறிவோம். (பக். 104)

என முழக்கமிடுவதைக் காண்கிறோம்.

சாதி, மதம், இனம் ஆகியவற்றைத் தகர்த்தெறிந்து காதல் மணம் நிகழவேண்டும் என்பதை வலியுறுத்துபவரே, பாவேந்தர். ஆயினும், வேற்றுமொழி பேசுபவரின் காதல் இனிமை தாராது என்பதுவும் அவருடைய கொள்கையாகும்.

> மாதொருத்தி வேண்டும் எனக்கும்; – தமிழ்
> மகளாய் இருந்தால்தான் இனிக்கும்
> தேமதுரத் தமிழின்றிக் காதல் இன்பம்
> செல்லுமோ?

பொருள்விளங்க காமொழி புகலும் ஒருத்தி,
இருளில் இட்ட இன்ப ஓவியம்;
அழகும் பண்பும் தழையக் கிடப்பினும்,
பழகுதமிழ் அறியாப் பாவை, தமிழருக்கு
உயிரில் லாத உடலே அன்றோ?

இவை பாவேந்தரின் பாடல்கள். காதல் உடலுக்கு ஒன்றுபட்ட மொழியே உயிர் என்பதை இவை வலியுறுத்துகின்றன. இக் கருத்தையே தமிழ்ப்பாவை வழியாய்ச் சங்கரலிங்கனாரும் வழிமொழிகிறார்.

அழியாத நல்லின்பம் கிடைத்த போதும்,
அறியாத மொழியாற்குத் துணைவி யாகி,
இழிவெய்த விரும்பவில்லை; பொறுக்க வேண்டும்;
எங்குடியில் பிறந்தாரைத் தான்ம ணப்பேன்! (பக். 23)

இது தமிழ்ப்பாவையின் உறுதியுரை.

பொதிகைமலை விட்டெழுந்து, சந்த னத்தின்
புதுமணத்தில் தோய்ந்துபூந் தாது வாரி,
நதிதழுவி, அருவியின்தோள் உந்தி, தெற்கு
நன்முத்துக் கடலலையின் உச்சி தோறும்
சதிராடி, மூங்கிலிலே பண்எ ழுப்பித்,
தாழையெல்லாம் மடற்கத்தி சுழற்ற வைத்து,
முதிர்தெங்கின் இளம்பாளை முகம்சு வைத்து,
முத்துதிர்த்துத், தமிழகத்தின் வீதி நோக்கி,

அந்தியிலே இளமுல்லை சிலிர்க்க, செந்நெல்
அடிதொடரும் மடைப்புனலும் சிலிர்க்க, என்றன்
சிந்தைஉடல் அணுஒவ்வொன் றும்சி லிர்க்கச்
செல்வம்ஒன்று வரும்;அதன்பேர் தென்றற் காற்று.
(பாரதிதாசன் கவிதைகள், தொகுதி–2, பக். 42)

இது, பாவேந்தர் பாரதிதாசனார் தம் பாவிலே உலவவிட்ட தென்றல். சங்கரலிங்கனாரும் இத்தென்றலசைவிலே மகிழ்ந்து தம் தமிழ்த்தென்றலை உலவவிடுகிறார்!

சந்தனத்து மணமெடுத்தும், குற்றா லத்துச்
சாரலிலே குளிரெடுத்தும், நிறைமா தத்துச்
செந்தூரப் பொன்நிறத்துப் பாவை மார்கள்
சிரித்துவரும் நடையினிலே நடையெ டுத்தும்,
அந்தியிலே அரும்பெடுத்து மலர்ந்த பூக்கள்
அனைத்திலுமே மணமெடுத்தும், இனித்த மாலை
வந்தணைந்து நலங்கொடுக்கும்; அதுதான் மக்கள்
வரவேற்கும் தமிழ்த்தென்றல்— (பக். 84)

இவ்வாறு எங்கெங்கும் பாவேந்தரின் பாடல்கள் நினைவுக்கு வரும் வண்ணம் இக்காப்பியம் அமைந்துள்ளது.

கதைமாந்தர்

நாடு போரின்றி அமைதிப்பூங்காவாய்த் திகழ வேண்டு மென்பதை வலியுறுத்த முல்லைமன்னன் சீராளன்;

கோனாட்சி நீங்கிக் குவலயத்தில் குடியாட்சி தழைக்க வேண்டுமென்பதை எடுத்துக் கூறத் தமிழ்ப்பாவை;

பங்காளிச் சண்டை ·குடியையே அழிக்கும் என்பதற்குச் சான்று காட்ட மல்லிநாட்டு மன்னன் அழகன்;

அறியாது நடந்த செயலுக்கு வருந்தி, இனி அத்தகையவை நடக்காதவாறு எவரும் தம்மைக் காத்துக்கொள்ள வேண்டுமெனும் அறநெறியைக் காட்டத் தங்கநாட்டுத் தருமசீலன்;

ஆட்சிச் செருக்கால் அகந்தை கொள்வோர் அழிவது திண்ணம் எனும் உண்மையை உணரவைக்க அனந்தன்;

தன்னலம் கருதி இனநலத்தைக் காட்டிக் கொடுப் பவரைபோல் இழிந்தவர் எவருமிலர் என்பதைப் புலப்படுத்த மதிமுடியான்;

நாட்டுமக்கள் நலிவுறுங்கால் அந்நலிவு போக்கப் பாடுபடும் பெரியோர்கள் தோன்றவே செய்வர் என்பதை நிலைநாட்டத் தமிழ்ப்பெரியார் நக்கீரர்;

பெரியார் வழி நின்று பாடுபடுவதே விடுதலைக்கு வழி என்பதைக் காட்ட மணிமாலன் என இக்காப்பியத்தில் வரும் ஒவ்வொரு கதைமாந்தரும் ஒரு நோக்கத்தோடு படைக்கப் பட்டுள்ளனர். இது கவிஞரின் பாத்திரப் படைப்புத்திறனை நன்கு புலப்படுத்துகிறது.

வாழ்க

கருத்துச்செறிவும் காவிய நலமும் திகழத் தமிழ்ப்பாவையை யாத்துள்ள கவிஞர் சங்கரலிங்கம் இன்னும் பல காவியங்களைப் புனைந்து தமிழன்னைக்கு அணி சேர்க்க வேண்டுமென உளமார வாழ்த்துகிறேன்.

நூல் ஆக்கம்	கவிஞர் சங்கரலிங்கம்
வகைமை	குறுங்காவியம்
வெளியீடு	(1983)

20

நேதாஜி காவியம்

சுபாஷ் சந்திர போஸ் வங்க நாட்டில், 1897, சனவரி 23ஆம் நாள் பிறந்தார்; பதினேழாம் வயதில் துறவியாகி வீட்டை விட்டு வெளியேறினார். துறவறத்தில் ஏமாற்றமடைந்த அவர் வீடு திரும்பி, மீண்டும் கல்லூரிப் படிப்பைத் தொடர்ந்தார். 1919இல் இங்கிலாந்து சென்று, ஐ.சி.எஸ். தேர்வில் தேர்ச்சி பெற்று உயர் பதவி பெற்றார். ஆயினும், நாட்டு விடுதலையில் நாட்டம் கொண்ட அவர், பதவி விலகி காந்தியடிகளின் ஒத்துழையாமை இயக்கத்தில் சேர்ந்தார்; மாணவர் போராட்டங் களைத் தலைமை தாங்கி நடத்தினார். 1924இல் ஆங்கில அரசாங்கம் இவரைக் கைது செய்து பர்மாவில் சிறை வைத்தது; காந்தியடிகளின் முயற்சியால் விடுதலை பெற்றார்.

சுபாஷ் சந்திரபோஸ் தீவிரமான கொள்கைகள் கொண்ட வராயிருந்தார். வெள்ளையரோடு போரிட்டுச் சுதந்தரம் பெற இயலுமேயன்றி அமைதி முறையில் விடுதலையை அடைய முடியாதென்று எண்ணினார். அவர் கொள்கையினின்றும் காந்தியடிகள் போன்ற தலைவர்கள் மாறுபட்டிருந்தனர். சுபாஷ் 1938இல் காங்கிரஸ் தலைவரானார்; எனினும், கருத்து வேற்றுமை காரணமாகப் பதவி விலகி, முன்னணிக்கட்சி (Forward Bloc) என்ற ஓர் அமைப்பை நிறுவினார்; அரசுக்கு எதிராகப் பல போராட்டங்களை நடத்திச் சிறை சென்றார்.

ஹால்வெல் என்னும் வெள்ளையன் சிலையை அகற்ற இயக்கம் கண்டதால் இவர் சிறைப்படுத்தப்பட்டார். சிறையில் இறக்கும்வரை உண்ணாவிரதம் மேற்கொண்டமையால் ஆங்கில அரசு இவரை விடுதலை செய்தது; ஆயினும், இவர் வீட்டை விட்டு வெளியேறாவண்ணம் பெரும் காவலிட்டது.

1939இல் ஹிட்லர் போலந்தின்மீது தொடங்கிய போர் உலகப் பெரும்போராய் உருவெடுத்தது. காலப்போக்கில் இங்கிலாந்து,

அமெரிக்கா, ருசியா ஓரணியாகவும் ஜெர்மனி, ஜப்பான், இத்தாலி ஓரணியாகவும் மோதும் நிலை நேரிட்டது.

போரில் இங்கிலாந்து தோல்வி 'கண்டு வந்தது. அவ்வேளையில் ஆங்கிலேயரைப் படைகொண்டு தாக்கினால் இந்தியா விடுதலை பெறுவது எளிதென போஸ் நம்பினார். இதனால், 1941, சனவரித் திங்கள் இவர் ஒரு மௌல்வியைப் போல மாறுவேடம் பூண்டு, வீட்டைவிட்டு வெளியேறி, ஆப்கனிஸ்தானம் சென்றார். அங்கு ஊமை போலவும் செவிடர் போலவும் நடித்து, ஆப்கனிஸ்தான் காவல் படையினரிடமிருந்தும் தப்பி ஜெர்மனி சென்றடைந்தார்.

1941, டிசம்பரில் கிழக்காசியாவில் போர் தீவிரம் அடைந்தது. கடல், தரை, விண் ஆகிய மூவிடத்திலும் போர் கடுமையாயிற்று. இந்நிலையில் போஸ் துணிவுடன் ஒரு நீர்மூழ்கிப் படகில் பயணம் செய்து, மேற்கத்திய நாடுகளின் கடற்படை காவல் புரிந்த கடல்களையெல்லாம் கடந்து, 1943, சூன் 20ஆம் நாள் சப்பான் தலைநகர் டோக்கியோ வந்தடைந்தார். இந்திய விடுதலைக்கு உதவச் சப்பான் உறுதியளித்தது. சூலை 2ஆம் நாள் போஸ் சிங்கப்பூரை அடைந்தார். இதுவரை நிகழ்ந்தவை சுபாஷ் சந்திர போஸ் வாழ்க்கையின் முதற்கட்டம்; அவர் சிங்கப்பூரை அடைந்த பின்னர் இறுதிக்காலம்வரை அவர் நடத்திய வீரதீரச் செயல்கள் அவர் வாழ்க்கையின் இரண்டாம் கட்டம்.

2-7-1943 இல் சிங்கப்பூர் கத்தே மாளிகையில் பெருங் கூட்டமொன்றில் போஸ் பேசினார். சிங்கப்பூரில் ராஷ்பிகாரி போஸ் தலைமையில் இந்திய தேசிய சங்கம் ஒன்று இருந்த தாயினும் அது செயல்படாது முடங்கியிருந்தது. அச்சங்கத்தை அவர் சுபாஷ் சந்திர போஸிடம் ஒப்படைத்தார். தென்கிழக்கு ஆசியாவைச் சார்ந்த முப்பது இலட்சம் இந்தியரும் சுபாஷைத் தங்கள் தனிப்பெருந்தலைவராயும் வீரத் தளபதியாயும் ஏற்றனர். போஸை அன்பு பொங்கத் தலைவர் (நேதாஜி) என்று வழங்கலாயினர்.

5-7-1943இல் சிங்கப்பூரிலுள்ள ஜனவரி திடலில் வீரர் அணிவகுப்பை நேதாஜி பார்வையிட்டார். மறுநாள் ஜப்பான் பிரதமர் தோஜோவும் அவ்வணிவகுப்பைப் பார்வையிட்டதோடு அப்படைக்கு எல்லா உதவிகளையும் செய்வதாயும் வாக்களித்தார். 9-7-1943இல் அதே திடலில் கொட்டும் மழையில் நேதாஜி வீரவுரையாற்றிப் படையிற்சேருமாறு அனைவர்க்கும்

அழைப்பு விடுத்தார். இளைஞர்கள் போட்டியிட்டுப் படையிற் சேர்ந்தனர். போர்ப்பயிற்சியை யோகப் பயிற்சியாகவே ஏற்றனர்.

21-10-1943இல் 'விடுதலை இந்திய அரசு' ஒன்றை நேதாஜி சிங்கப்பூரில் அமைத்தார். அமைச்சர்கள், படைத்தலைவர்கள் எவரெவரென அறிவிக்கப்பட்டனர். வெளிநாட்டிலிருந்து, 'விடுதலை இந்திய அரசு' செயற்படத் தொடங்கியது. நேதாஜி தலைமையில் அமைந்த அப்புதிய அரசுக்கு ஜப்பான், ஜெர்மனி, இத்தாலி போன்ற நாடுகள் ஏற்பளிப்புச் செய்தன.

பெண்களும் போர்ப்படையில் அணியணியாய்ச் சேர்ந்தனர். 23-10-43இல் மாதரணிக்கு, 'ஜான்ஸி படை' என நேதாஜி பெயர் சூட்டினார்.

இந்திய தேசியப் படைக்கு நிதி கேட்டு நேதாஜி அறிக்கை விடுத்தபோது நிதி குவிந்தது.

தென்கிழக்காசியாவில் ஆங்கிலேய ஆட்சியிலிருந்த பல நாடுகளை ஜப்பான் வென்றது. பர்மாவை 1942, மேத் திங்களில் வென்ற ஜப்பான் அங்கு விடுதலை அரசை அமைத்துத் தந்தது. ஜப்பான் பிற நாடுகளின்மீது ஆதிக்கம் செலுத்த விரும்பவில்லை என்பதை இது காட்டியது.

7-1-1944இல் சிங்கப்பூரிலிருந்த நேதாஜி இந்திய விடுதலை அரசைப் பர்மாவுக்கு மாற்றினார். பாரத ஆட்சியை நிறுவப் பர்மா பரிவுடன் உதவியது.

அரக்கான் போர் முனையில் போர் தொடங்கியது. 16-1-1944இல் இந்திய தேசியப்படை போரில் இறங்க ஆணை வெளியிடப்பெற்றது. முதற்குண்டும் வெடித்தது. போர் தொடங்கிய அதே நாளில், 'தாங்பஜாரை' வெற்றி கொண்டது. வெற்றி மேல் வெற்றி கிட்டியது. 'காலாவா'வையும் வென்று இலட்சியப்படை முன்னேறியது. 18-3-1944இல் பர்மிய எல்லையைக் கடந்து விடுதலைப்படை இந்திய மண்ணை மிதித்தது. தொடர்ந்து பல இடங்களை வென்று, படையினர் மணிப்புரிக்குள் நுழைந்து, அதன் முக்கிய நகர், 'இம்பாலை' வெற்றி கொள்ள முயன்றனர்.

போர் நிலை மாறியது. அமைதிப்பெருங்கடல் தீவுகள் அமெரிக்கர் வசமாயின. இந்திய தேசியப்படைக்கு முழு ஆதரவு நல்கி வந்த ஜப்பானியர் இப்போது தங்களைக் காத்துக்கொள்ள வேண்டிய நிலை நேரிட்டது.

ஆங்கிலப்படையும் ஐராவதி நதியைக் கடந்து பர்மாவினுள் நுழைந்தது. பர்மாவின் முக்கிய நகர் மெக்டிலாவை ஆங்கிலேயர் மீட்டதோடு படிப்படியே முன்னேறி இரங்கூனையும் வென்றனர். தொடர்ந்து உயிருள்ளவரை போரிட நேதாஜி பிடிவாதமாய் இருந்தபோதிலும் படைத்தலைவர்களின் வற்புறுத்தலின்பேரில் வேளை வாய்க்கும்வரை காத்திருக்க முடிவெடுத்து, விடுதலை அரசின் தலைமையகமும் இரங்கூனிலிருந்து பாங்காக்குக்கு மாற்றப்பட்டது. போரில் இறந்த வீரர்களுக்கு நினைவுச் சின்னத்திற்கான அடிக்கல்லைச் சிங்கப்பூர் கடற்கரையில் நேதாஜி நாட்டினார்.

1945, ஆகஸ்டுத் திங்கள் 14ஆம் நாள் ஜப்பான் தோல்வி கண்டு அமெரிக்காவிடம் சரணடைந்தது. அதே நாளில் நேதாஜி விமானத்தில் டோக்கியோவுக்குச் சென்றுகொண்டிருந்தபோது பார்மோசா தீவில் விமானம் விபத்துக்குள்ளாகியது. காயங்க ளுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நேதாஜி அங்கு உயிரிழந்தார். (நேதாஜியின் மரணம்பற்றி ஐயம் எழுந்தது. இந்திய அரசாங்கம் நியமித்த குழு, டோக்கியோ சென்று விரிவாக ஆய்ந்து அவர் இறப்பை உறுதிப்படுத்தியது; ஆயினும், நேதாஜி இறக்க வில்லை என்று கூறுவோரும் உளர்.)

இவ்வீரமகனுடைய வரலாற்றினைப் புலவர் வாய்மைநாதன், 'நேதாஜி காவியம்' என எழுதியுள்ளார். "ஓ! என் தோழர்களே! விடுதலைப் போராட்டம் அந்த ஆகஸ்டு நள்ளிரவோடு முடிந்து விடவில்லை; தொடர்கிறது. அந்தக் களத்தில் நாம் வீரர்களாய் விளங்க எடுத்துக்காட்டாகிய முன்னோடிகளின் கதை நம் மூச்சுக்குள் பேச்சாகும்; நினைப்புக்கு முனைப்பாகும். இராம கதையும் தரும கதையும் மராட்டிய வீரன் சிவாஜியைப் படைத்தனவே! விடுதலை காக்கும் நம் போருக்கு நம்மை நேதாஜியும், வ.உ.சி.யும், பகத்சிங்கும் வார்த்தெடுக்கும் வள்ளலார்கள் அல்லவா? இந்தச் சிந்தனைதான் நேதாஜியின் காவியத்தைப் படைக்க ஊற்றுக்கண் ஆயிற்று" என்கிறார், வாய்மைநாதன்.

நேதாஜி வாழ்க்கையின் இரண்டாம் கட்டம் - அதாவது, சிங்கப்பூரை அடைந்து, இந்திய தேசியப் படை அமைத்ததிலிருந்து அவர் இறுதிக்காலம்வரையான நிகழ்ச்சிகள் மட்டுமே - இந்நூலுள் விரிவாய் விளக்கப்பெற்றுள்ளன.

சிங்கப்பூரில் தன் விடுதலை முரசொலி கேட்டு இந்தியத்தாய் வாழ்த்துச் சொல்ல அங்கே புறப்பட்டாள் என நூலைத் தொடங்கி,

திருமகன் தொடங்கிய போரினைக் கண்டுகளிக்க வந்த அத்தாய், மகனைச் சிதையில் கிடத்தி, எரியும் தீ முன் நின்று,

மகனே! விடுதலை வேள்வி வளர்த்த
புகழே! உன்போர் புகையில் விழாது!
இருளைத் தொடர்ந்து எழுங்கதிர் போல
வருவது விடுதலை! வாகை சூட
உன்சிதை நெருப்பில் உறுதி மொழிகிறேன்!
என்நிலம் விரைவில் இன்ப சுதந்தரப்
பண்ணினைப் பாடும்!

வெள்ளையராட்சி வேரோடு அறுக்கப்பட்டு விடுதலை அரசு அமையும்; நீ தாங்கிய கொடியை இனி நான் தாங்கி,

புகுந்தேன் போர்க்களம்! பூண்பேன் விடுதலை

எனச் சூளுரைப்பதாய் முடித்திருக்கும் உத்தி புதுமையானதும் போற்றற்குரியதுமாம்.

நேதாஜி சிங்கப்பூர் திடலில் பேச இருக்கும்போது தாய் ஒருத்தி தன் குழந்தையைத் தொட்டிலிலிட்டுத் தாலாட்டித் தூங்க வைப்பதாய் ஆசிரியர் ஒரு காட்சியைப் படைத்துக்கொள்கிறார். குழந்தை தூங்கியதும், தான் சென்று அக்கொள்கைக் குன்றைக் காண வேண்டுமெனத் தாய் விழைகிறாளாம்! குழந்தையைத் தூங்க வைக்கப் பாடும் அவள், "ஜானகி நாதர் தவப்புதல்வர்; பிரபாவதி பெற்ற பிள்ளை; சித்தரஞ்சன தாஸின் சீடர்; காந்தி எதிர்த்தாலும் காங்கிரசுத் தலைமை வென்றவர்; வெள்ளையர் சிறையிட்ட போதும் கலங்காத கர்மவீரர்; சிறை தப்பிக் காபூல் சென்ற அவர்,

போர்புரியும் ஜெர்மனிக்குள் போனார்; அவருதவ
நீர்மூழ்கிக் குள்ளிருந்து நிப்பானை வந்தடைந்தார்.

தொண்ணூறு நாள்கள் கடலுளேயே பயணம் செய்து, ஜப்பான் வந்த அவர் இப்போது நம் நகருக்கு வந்துள்ளார். அவரை,

வாழ்த்தி வரவேற்கும் வைபவத்தை நான்காணத்
தாழ்த்தாதே கண்ணுறங்கு! தண்ணிலவே! என்மகனே!

என்கிறாள். இவ்வாறு தாலாட்டுப் பாடலில் இக்காவியத் தொடக்கத்திற்கு முன்னிகழ்ந்தவற்றை ஆசிரியர் சுட்டிக்காட்டிக் காவியத் தலைவனின் வரலாற்றை நிறைவாக்கியிருப்பதும் ஒரு புது உத்தியே!

காவியத்தின் ஒவ்வோரடியுடனும் வீரமும் விடுதலை உணர்வும் ஒன்றி நிற்கின்றன. காவியத்தலைவர் நேதாஜியைக் குறிப்பிட ஆசிரியர் பயன்படுத்தியுள்ள சொற்களும் தொடர்களும் அம்மாவீரரின் இயல்புகளையும் குறிக்கோள்களையும் நம் கண்முன் நிற்க வைக்கின்றன.

கங்கை பெற்றெடுத்த கனலின் கொழுந்து.

அடிமைப் பிசாசின் வாய்கிழிக்கும் வாள்.

கரும தருமத்தின் ஒருரு.

வீரத்தின் வேந்து; வெள்ளையர் கொடுமைக்கு
மருந்து; தோல்விக் கறைபடா மானிட வடிவு.

நெருப்புக்கு நெருப்பான நெஞ்சத்தன்.

நெஞ்ச விளக்கில் நெருப்பை ஏற்றிச் சுடராய் நின்றவர்

என்றெல்லாம் நேதாஜியைக் குறிப்பிடுவதோடு,

பாரதத்து இளைஞர்களின் ஆற்றல், ஆர்வம்,
பார்வியக்கும் ஊக்கமுடன், உறுதி என்ற
சீரனைத்தும் திரட்டிஉருச் செய்தா லென்னத்,
திகழுபவர் நேதாஜி

எனப் பாராட்டிப் போற்றுகிறார்.

நாட்டு விடுதலை இன்றியமையாதது என்பதை,

வஞ்சிய ருக்கொரு மஞ்சளைப் போன்றது
மானிடருக்குச் சுதந்தரமே!

எனக் குறிப்பிட்டு, அதனை எப்பாடு பட்டேனும் அடைந்தே தீர வேண்டுமென்பதை

பாரத மீட்சிநல் மாளிகை – நம்
பச்சை உயிர்ச்சாந்தில் கட்டுவோம்

என்றும்,

சுதந்தரத்தை,
என்(பு)அதனை ஈடாக்கி மீட்டுக் கொள்ளும்
இறுதிவரை உறுதிகொண்டு இணைந்து நிற்போம்

என்றும் வலியுறுத்தியிருப்பது நாம் பெற்றுள்ள விடுதலையைப் பேணிக் காக்க உறுதிபூணச் செய்யும்.

மேலும், நாட்டுப்பற்றினை வளர்த்திடத் தூண்டும் பல அரிய காட்சிகளை அழகுறப் படைத்துக் காட்டுகிறார், ஆசிரியர். அழகன் என்ற மணமகன் முதலிரவில் முத்துச்சிரிப்பாளைக் காணச் செல்கிறான். அப்போது வானொலியில் நேதாஜியின்,

காளையர் காதலை ஒத்திவைப்பீர்! – துயில்
கட்டிலோ போர்க்களக் கொட்டிலிலே!
தோளைத் தழுவும் கரங்களிலே – பெருந்
துப்பாக்கி ஏந்துவீர்...

எனும் வீரவுரை கேட்கிறது. முதலிரவை மறந்து, முல்லைச் சிரிப்பாளையும் மறந்து ஓடுகிறான், போர்ப்படை நோக்கி!

மற்றொரு மணமகன், பரிமணம்; மணவேளை, வேதியர் சொல்லும் மந்திரம் வீரர் போஸின் சங்கநாதமாய்க் கேட்கவே, எழிலரசி கழுத்தில் மங்கலநாண் கட்டாமல் படைநோக்கிப் பாய்கிறான்!

ஓலையைக் கையில் வாங்கி,
உருவுவாள் மறுகை வாங்கி,
மாலையை மணத்தை நீக்கும்,
மகம்மது கானையும்

விஞ்சியது பரிமணத்தின் வீரம்!

பொன்னன் என்பான் புகழ் மிகுந்த கடைக்காரன்; கோடி கோடியான உடைமைகட்குச் சொந்தக்காரன். நேதாஜியின் உரை கேட்ட அவன் தன் கடையை ஊழியர்க்கே உரிமையாக்கி உடனே புறப்பட்டான், படையிற்சேர!

கருப்பையா காவல்துறை வீரன். திருமணம் ஆன அன்றே அவனும் மனைவியும், சேவலும் கோழியும்போல் சென்றனர், படையிற்சேர! மருந்தகம் வைத்திருந்த பொன்னையா மருந்து முழுவதையும் படைவீரர் நலத்துக்கீந்து தானும் படையிற் சேர்ந்தான்.

தனியே வெளியே செல்லவும் அஞ்சுகின்ற பெண்குலமும் ஆண்கட்குச் சற்றும் பின்வாங்கினார் அல்லர். பாதம் பீபி என்பாள் தன் இருமகளையும் கணவனிடம் ஒப்படைத்த பிறகு, 'ஜான்ஸி' படையில் சேர்ந்தாள். சீக்கியப் பெண்ணொருத்தி, தன் கைவளையல்களைப் போர் நிதிக்காக ஈந்தாள்.

சலவைத் தொழிலாளி ஒருவன், படையுடைகளைச் சலவை செய்யப் படையைத் தொடர்ந்தான். பினாங்கில் வாழ்ந்த செட்டிமார்கள், படை நிதிக்குக் கற்பகத்தருவென அள்ளி வழங்கினர். அங்கிருந்தோர் கன்னனின் அண்ணன்களாய் விளங்கினர்.

கண்ணை நிகர்த்த சுதந்தரத்தை – உயிர்க்
காவு கொடுத்தேனும் காத்திருப்போம்

என அவர்கள் உரைத்த சூளுரை என்றென்றும் நம் உணர்வை நாட்டோடிணையச் செய்து ஊக்கமூட்டி நிற்கும்.

சுதந்தரப்படை இந்திய மண்ணை மிதித்ததும் ஆடிப் பாடிக்களித்ததை ஆசிரியர் உணர்வு பொங்கப் பாடியுள்ளார். தாய் நாட்டு மண், வீரர்கட்கு அமுதாய் இனிக்கிறது.

பற்றிக் கனகமென மண்து களையே – அள்ளிப்
பரிவொடு வாயிலிட்டார் தங்கமே தங்கம்!

இந்தி எதிர்ப்புப் போர்ப்படையினர்,

மங்கை ஒருத்தி தரும்சுகமும் – எங்கள்
மாத்தமிழ்க்கு ஈடில்லை என்றுரைப்போம்!

என ஆர்த்தெழுந்ததைப் பாவேந்தர் பாரதிதாசன் பாடிக் களிக்கிறார். இதே நிலையை இந்திய தேசியப் படையினர் அடைந்ததாய் ஆசிரியர் பாடுகிறார். தாய் மண்ணைத் தொட்டதும் வீரர்கள்,

மதர்க்கும் மனைவிமுலை இத்தனைஇன்பம் – எந்த
மனிதர்க்கும் தந்ததில்லை தங்கமே தங்கம்

என ஆடிக் களிக்கிறார்களாம்! இவ்வாறாய் நாட்டுப்பற்றை ஊட்டிடும் நயமிகு பகுதிகள் நூலுள் பொதிந்துள்ளன.

காவியத்தில் நயமான பல பகுதிகள் நம் நெஞ்சைத் தொடுகின்றன. தாய் தன் குழந்தையைத் தோள் சேர்த்துச் செல்வதை,

குடலிற் கிடந்த கொடியைத் தோள்சேர்த்துச்

செல்வதாய் உரைப்பதும்; விண்ணிலிருந்து மழை, தாரை தாரையாய்க் கொட்டுவதை,

தறிக்கட்டிலே பாவுநூல் மட்டிலும் ஒடிடும் காட்சி

எனச் சொல்வதும்; உயர்ந்து வளர்ந்த மரங்களின் இலைகள் விண்ணிலே அசைவதை,

காற்றுவெளி வயிற்றுக்குள் கத்தி பாய்ச்சும்
கணக்கான இலைகள்

எனக் கூறுவதும்; பெண்கள் நகங்களில் மருதோன்றியிட்டதால் தோன்றிய சிவப்பை,

அங்கை நகத்தில் மருதோன்றி – அவன்
ஆசையைப் பற்றும் பெருநெருப்போ?

என ஆணின் ஆசையைப் பற்றவைக்கும் நெருப்பென மொழிவதும்; திருமண வீட்டில் பன்னீர் தெளிக்கக் கைகளில் ஏந்தியுள்ள பன்னீர்ச் செம்புகளை,

மணநீரைக் குடித்திருக்கும் பன்னீர்ச் செம்பு
வாயாலே உமிழ்வதற்குத் தவமி ருக்க

எனப் பகர்வதும்; போரிலே பலர் மாள்வதை எண்ணி வருந்தி,

சவப்பெட்டி விற்கிறவர் சௌகரியம் இவ்வாறு
அவப்பேறாய் மூள்கிறதோ?
பொட்டல்வெளி ஆகுவதோ பூச்சொரியும் நந்தவனம்?

எனப் புலம்புவதும்; வீசவீச வியர்வை உலர்வதும், வீசுவதை நிறுத்தினால் உடனே பெருகுவதுமாய் இருப்பதை,

> வியர்வைக்கும் விசிறிக்கும் வெற்றி தோல்வி
> விடாக்கண்டன் போராட்டம்

என வியப்பதும்; செய்தி நிருபர்களை,

> ஏடுகட்குச் செய்தித்தேன் திரட்டுகின்ற
> இதழ்நிருபர் தேனீக்கள்

என்றுரைப்பதும்; காடுகளின் நெருக்கம் தோற்றுவிக்கும் அச்சத்தை,

> வீமன் இமைகளும் அச்சத்தால் தாளிடும்
> விண்தொடும் காடுகளாம்

என விள்ளுவதும்; டாங்கிகள் உடைபட்டு அதனுள்ளே சிக்கித் தவித்தவர்களை,

> தார்க்கு ழும்பில் வீழ்ந்த வண்டாய்த்

தத்தளித்ததாய்ச் சாற்றுவதும் போற்றத்தக்கனவும் சுவைக்கத் தக்கனவும் ஆம்.

இக்காவியத்தை உவமைக்களஞ்சியம் என்றே குறிப்பிடலாம். தூய்மையான தரையில் வண்ணப்பொடிகளால் இடப்பட்ட மாக்கோலம் குளத்தில் பூத்த மலர்களை ஒத்தன.

> தண்ணீர் நிறமாய்த் தரையிருந்தால் – அதில்
> தாமரை ஆம்பல்போல் மாக்கோலம்.

உயர்ந்த மாளிகைகளில் ஆங்காங்கே சாளரங்கள் விளங்குவது, வானத்தின் அழகைப் பார்க்க மாளிகை உடலில் வைக்கப்பட்ட கண்கள்போல் தோன்றின.

> வானத்தின் அழகைப் பார்க்க
> மாளிகை உடலில் வைத்த
> தேனொத்த கண்ணா டிக்கே
> நிகர்,மூடித் திறக்கும் ஜன்னல்!

பனியில் நனைந்த இளங்கன்றின் உடல் தளதளவென்றும் நெளிந்தும் இருப்பதுபோன்ற தோற்றத்தைத் தருகிறது பெண்கள் கொய்து உடுத்திய பட்டாடை!

> பெய்யும் பனியில் நனைந்திருந்த – பசுப்
> பிள்ளை இளங்கன் றுடலெனவே
> கொய்து உடுத்திய பட்டொளிரப் – பல
> கோதையர் மொய்த்தனர் ஆதரவாய்.

பணம் பாதாளம் மட்டும் பாயும் என்பர். ஒரு பேச்சு விரைந்து எங்கும் பரவியது எதைப் போன்றது? ஆசிரியர் அழகிய உவமையில் கூறுகிறார்

பணம்படைத்தார் சொல்போல, இந்தப் பேச்சு
பலம்பெற்றுப் பரவியது!

பர்மாவில் நெல் நிறைய விளைவதால் அங்கு உணவுப் பஞ்சம் என்பதே பற்ற வழியில்லை என்பதனை,

அரப்பிட்டு மூழ்க எண்ணெய்
அற்றுப்போ வதுபோல், பஞ்சம்
நிரம்பிய நெல்லில் மூழ்கி,
நெடுமூச்சும் இறுகிச் சாகும்

என எளிய காட்சியில் அரிய உவமையைப் பெய்து விளக்கி விடுகிறார். இவ்வாறு பன்னூறு உவமைகள் நூலில் பரந்து கிடக்கின்றன.

ஆசிரியர்க்கு அன்னப் பறவையை மிகவும் பிடித்ததாகத் தெரிகிறது. இந்நூற்பொய்கையுள் அன்னம் ஆங்காங்கே நீந்திச் செல்கிறது. கொடி, விண்ணிலே,

அன்னம் உயர்வெளி பாய்தல்போல்

ஆடினவாம். பொன்னன் கடைக்குள்ளே நுழைபவர்கள் இக்கடைக்குள் நுழையப் பேறு பெற்றோமே எனப் பெருமித நடையிடுவார்களாம். அதனை,

அன்னம் நடந்த நடைவருமே – அதன்
அகத்துள் நடக்கிற வாத்தினுக்கும்

என்பார்.

பெண்கள் வீதியிலே,

மண்ணிலே நீந்திடும் அன்னமென

நடையிட்டனராம். நேதாஜியும் அவரைச் சூழ்ந்த அலுவலர்களும்,

அன்னங்கள் பொய்கையில் தோன்றுதல்போல்

அமர்ந்து இருந்தனராம்.

நேதாஜியும் அமைச்சர்களும் இரங்கூனை விட்டு நீங்கிப் பாங்காக்குக்குள்,

பொய்கைக்குள் அன்னமே போன்று

புகுந்தனராம்! இவ்வாறு அன்னம் ஆசிரியரின் எண்ணப் பொய்கையில் இடையறாது நீந்திடக் காண்கிறோம்!

பர்மாவில், போர் முனையில், காட்டினூடே வழிகளை உருவாக்கிக்கொண்டு முன்னேறுகின்றனர், வீரர்கள். எத்தகைய காடு?

காட்டுப் புலிகள் உறுமும்; களிறு
  பிளிறும் புதரினிலே;
நீட்டி நெளியும் மலைஅரவு ஆயிரம்
  நீளக் கிளைகளிலே;
கூட்டைக் குலைக்கும் குரங்கு, கழுகுகள்;
  காய்ந்த சருகினிலே
வேட்டைக் கரடி நடக்கும் பயமெலாம்
  விஞ்சும் இருளினிலே!

நாட்டு விடுதலைக்காக இத்தகைய தொல்லைகளையெல்லாம் ஏற்ற வீரர்களின் நினைவு, பெற்ற விடுதலையைப் பேணிக் காக்கப் பயன்படட்டும்.

நூலை அழகிய வருணனைகள் பல அணி செய்கின்றன. சிங்கப்பூரின் சிறப்பு, பினாங்கின் பெருமை, பர்மாவின் பாங்கு, திருமண நிகழ்ச்சிகள், களக் காட்சிகள், பூங்காக்களின் பொலிவு ஆகியவை மேலும் மேலும் படிக்கும்வண்ணம் திறம்பட ஆக்கப்பட்டுள்ளன.

வீரத்தையும் தியாகத்தையும் நாட்டுப்பற்றையும் விடுதலை உணர்வையும் ஒருசேர நம் நெஞ்சில் நிலையாய்ப் பதிய வைக்கும் அரிய படைப்பாய் இந்நூல் திகழ்கிறது. எவ்வளவோ எழுத ஆசை; அணிந்துரை அளவை விஞ்சிவிடக் கூடாதே என்பதாலேயே முடிக்கிறேன்.

வாழ்க ஆசிரியர்! வளர்க அவர் தொண்டு!

நூல் ஆக்கம்	கவிஞர் வாய்மைநாதன்
வகைமை	குறுங்காவியம்
வெளியீடு	இலக்கிய வட்டம், வாய்மை மேடு, தஞ்சாவூர். (1986)

21

நாலும் பொருளும்

நாலடியார்

பண்டைத் தமிழ் இலக்கியங்களை மேற்கணக்கு நூல்கள், கீழ்க்கணக்கு நூல்கள் என இரண்டாகப் பகுப்பர். மேற்கணக்கு நூல்கள் பதினெட்டு; அவை பத்துப்பாட்டும் எட்டுத் தொகையுமாம். கீழ்க்கணக்கில் திருக்குறள், நாலடியார், பழமொழி முதலிய பதினெட்டு நூல்கள் உள்ளன. நீண்ட அடிகளால் ஆகிய நூல்களை மேற்கணக்கு என்றும், குறுகிய அடிகளால் ஆகிய நூல்களைக் கீழ்க்கணக்கு என்றும் வகுத்தனர். மேல், கீழ் என்பது பாடல்களின் நீளம் கருதியேயன்றி, உயர்வு தாழ்வு குறித்து அன்று.

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றான நாலடியார் நானூறு வெண்பாக்களைக் கொண்டது. இது, 'நாலடி' என்றும், 'நாலடி நானூறு' என்றும் கூறப்படுவதுண்டு. சமண முனிவர்கள் பலர் எழுதிய பாடல்களிலிருந்து நானூறு பாடல்களைத் தேர்ந்தெடுத்து இந்நூல் தொகுக்கப்பெற்றது என்பர்.

திருக்குறளோடு ஒப்பிட்டுப் பேசும் பெருமைக்குரியதாய் நாலடியார் விளங்கி வருகிறது. 'கபிலபரணர்' என்பது போல, திருக்குறளையும் நாலடியாரையும் சேர்த்து, 'நாலும் இரண்டும்' எனத் தொன்றுதொட்டுக் கூறுவதுண்டு. 'நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி', 'பழகுதமிழ்ச் சொல்லருமை நாலிரண்டில்' என நாலடியைத் திருக்குறள் பெருநூலோடு சேர்த்துப் பாராட்டி யிருக்கின்றனர். "பொருள் வளத்திலும் நுணுக்கத்திலும் திருக்குறள் இந்நாலடியாரினும் விஞ்சிப் பெருநயம் பயப்பதாயினும் இதன் சொல்வளம், சுவை தெரிந்து பருகுவோர்க்குப் பேரினிமை கலந்த தேனூறலாகவே ஒழுகாநின்றது" என்பர், அறிஞர்.

டாக்டர் ஜி.யு. போப் தாம் எழுதிய நாலடியார் பதிப்புரையில், "சிறந்த ஒழுக்கத்தில் மிகப்பற்றுள்ள மக்களாவார் தனிப்பட்ட பேரின்பத்தை எய்துவார்களென நான் கருதுகிறேன்

அன்னாரை இவ்வழியில் நிலைநாட்டியது திருக்குறளும் நாலடியுமே ஆகும்" எனக் கூறியுள்ளார்.

நாலடியார் சொல் வளம், பொருள் வளம் நிறைந்து விளங்கும் நீதி நூல். இந்நூல் அறம், பொருள், இன்பம் என முப்பால் கூறுவதாயினும் இன்பத்துப்பால் மற்றைய இரண்டனைப் போல் மிகுத்துக் கூறப்பெறவில்லை. இந்நூலுக்குப் பாலும் இயலும் அதிகார அடைவும் செய்தவர், பதுமனார். அவரே உரையும் எழுதியுள்ளார். மற்றும் தருமர், விளக்கவுரைகாரர் (பெயர் தெரியவில்லை) என வேறு இரு பண்டைய உரையும் உண்டு.

பாடல் உரை

சிறந்த பாடல்களுக்கு உரை எழுதுவது மரபாய் இருந்து வருகிறது. உரை, பதினான்கு வகையாய் - பாடம், கருத்து, சொல்வகை; சொற்பொருள், தொகுத்துரை, உதாரணம், வினா, விடை, விசேடம், விரிவு, அதிகாரம், துணிபு, பயன், ஆசிரிய வசனம் எனச் - சொல்லப்படும் என்கிறது, நன்னூல். இந்த உரைகள் உரைநடையிலேயே அமைந்து வந்தன. இந்நூற்றாண்டில் உரையினைப் பாடலாகவே எழுதும் புதியதொரு முறை தோன்றி யுள்ளது. சங்கப் பாடல்கள், திருக்குறள் முதலாயவற்றிற்குக் கவிதை நடையில் உரைகள் தோன்றியுள்ளன.

கருத்துரைப் பாட்டு என்னும் தலைப்பின்கீழ், பாவேந்தர் பாரதிதாசன் இரு குறுந்தொகைப் பாடல்களுக்குக் கவிதையில் உரை எழுதியுள்ளார். புறநானூற்றில், "யாண்டு பலவாக நரையில ஆகுதல் யாங்காகியரோ என வினவுதிராயின்" என்று தொடங்கும் பிசிராந்தையார் பாடலுக்கு, பாவேந்தர், கவிதையிலேயே உரை செய்துள்ளார். கண்ணதாசன், 'பழம்பாடல் புதுக்கவிதை' என்னும் தலைப்பில் முத்தொள்ளாயிரப் பாடல்கள் 5, நளவெண்பாப் பாடல் 1, நற்றிணைப்பாடல் 1 ஆக ஏழு பாடல்களுக்குக் கவிதையில் உரை தந்துள்ளார்.

பாவேந்தர் குறுந்தொகைப்பாடலுக்கு எழுதிய கவிதை உரையில், அடிகளை விரிக்கவில்லை. குறுந்தொகை 188ஆம் பாடலில் 7 அடிகள் உள்ளன. பாவேந்தர் அப்பாட்டுக்குத் தரும் கருத்துரைப்பாட்டிலும் 7 அடிகளே உள்ளன. குறுந்தொகை 186ஆம் பாட்டு 4 அடிகள்; பாவேந்தரின் கருத்துரைப்பாடலில் 5 அடிகள் உள்ளன. பிசிராந்தையாரின் புறநானூற்றுப்பாடல் 7 அடிகள் கொண்டது. அதற்கு உரை விளக்கமாயுள்ள பாவேந்தரின் பாடலில் 23 அடிகள் உள்ளன. கண்ணதாசனோ நான்கு அடிகள்

கொண்ட முத்தொள்ளாயிரப்பாடல்களுக்கு 16 அடிகள் முதல் 60 அடிகள்வரை விளக்கவுரை தந்துள்ளார்; நற்றிணையின் 12 அடிப் பாடற்பொருளை 53 அடிகளில் விரித்துள்ளார்.

இவை போன்ற உரைக்கவிதைகள் மூலக்கவிதைகளிலுள்ள உவமம், உள்ளுறை, உணர்ச்சி முதலான கூறுகளை எளிய நடையில் தெளிவாகவும் விரிவாகவும் எடுத்துக் கூறுவனவாய் அமைந்துள்ளன. இந்தப் புது உத்தியை வளம் பெற்ற, ஆழ்ந்த புலமைத்திறம் உள்ள கவிஞர்கள் மட்டுமே கையாண்டுள்ளதால் மூலக்கவிதையின் சிறப்புக் குன்றாது, மாறாகப் பெருகிய நிலையில் அமைந்துள்ளது என்பது மகிழ்ச்சிக்குரியது.

திருக்குறள் – பாடல் உரைகள்

ஒவ்வொரு திருக்குறளையும் ஒவ்வொரு வெண்பாவின் ஈற்றடிகளாய் வைத்து, இரண்டாம் அடியில் குமரேசா என்று விளித்து, தொடர்புள்ள ஒரு கதை அமையுமாறு 1330 அருங்குறளுக்கும், 'குமரேச வெண்பா' எனும் பெயரில் பாடல் உரை எழுதியுள்ளார் பண்டித செகவீர பாண்டியனார். காட்டாய் ஒன்று :

பண்டு துறவுகொண்ட பட்டினத்தார், மாண்புலகில்
கொண்(ட)உயர் (வு)என்னே குமரேசா! – கண்ட
இருமை வகைதெரிந்(து) ஈண்(டு)அறம் பூண்டார்
பெருமை பிறங்கிற்(று) உலகு.[1]

இராய. சொக்கலிங்கனார் அவர்கள் வெண்பாவின் முதலிரு அடிகளில் காந்தியடிகள்பற்றிக் கூறியுள்ளார். பின்னிரு அடிகளில் ஒரு திருக்குறளை அமைத்துக் காட்டியுள்ளார். 125 திருக்குறளை மட்டும் தெரிவு செய்து இவர், 'காந்திக் கவிதை' (காந்தியும் வள்ளுவரும்) பாடியுள்ளார்.

காவி உடையணியான்; காந்தி சடைமுடியான்
மேவு தவமிதுவோ; மெய்ப்புலவர் – ஓஓ
மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற.[2]

ஒவ்வொரு திருக்குறளையும் மூன்றடி நேரிசை ஆசிரியப் பாவால் விளக்கி, திரு. வேதாசலம் என்பவர் திருக்குறள் அகவல் பாடியுள்ளார்.

---

1. ஜெகவீரபாண்டியன், திருக்குறட் குமரேச வெண்பா, பாடல் 23
2. இராய. சொக்கலிங்கம், காந்திக் கவிதை (காந்தியும் வள்ளுவமும்), பாடல் 8

ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு[1]

என்பது திருக்குறள். இதற்கு வேதாசலனார் மூன்றடி நேரிசை ஆசிரியப்பாவில் தந்துள்ள பாட்டுரை வருமாறு

ஊருண் கேணி உறுபுனல் அற்றே,
ஒப்புர வதனை யுவக்கும்
பேரறி வாளன் பெரிய திருவே.[2]

திருக்குறள் ஒவ்வொன்றையும் ஓர் அடி நூற்பாவாய்ச் சுருக்கிப் பாடுவது; திருக்குறளின் ஓர் அதிகாரத்தில் உள்ள பத்துக் குறட்பாக்களின் கருத்தும் ஒரு வெண்பாவில் அமையுமாறு தொகுத்துரைப்பது ஆகிய உத்திகளைக் கையாண்டும் திருக் குறளுக்கு உரைப்பாட்டுகளை அமைத்துள்ளனர்.

குறளும் பொருளும் – பாடல் விளக்கம்

இந்நூலாசிரியர் கவிமாமணி இறையரசன், முன்னரே திருக்குறளுக்கு அரை விருத்தத்தில் அகல உரை தந்துள்ளார். குறளும் பொருளும் என்னும் நூலில் ஒவ்வொரு குறளையும் அரை விருத்தக் கண்ணிகளால் விரித்துப் பாடியிருக்கிறார்.

பிறர்க்கின்னா முற்பகல் செய்யின்; தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும் (குறள் 319)

என்னும் திருக்குறளை, இறையரசன்;

பிறர்உள்ளம் வருந்துகின்ற தீங்கு தன்னைப்,
பிழைபட்டுக் காலையிலே செய்வான் ஆயின்,
பிறர்எவரும் செய்யாமல், தனக்குத் தீங்கு
பேரளவாய் மாலையிலே தாமே சேரும்!

என அருமையாய் விளக்கியுரைக்கிறார்.

நாலும் பொருளும்

திருக்குறளுக்கு உரைகண்ட கவிமாமணி இறையரசன், தொடர்ந்து, நாலடியார்க்கும் பாடல்வாயிலாகவே உரை எழுதியுள்ளார். ஈரடிகள் கொண்ட திருக்குறளுக்கு அரை விருத்தத்தில் உரை செய்த இறையரசன், நான்கடி கொண்ட நாலடியார்க்கு உரையை முழு விருத்தத்தில் செய்துள்ளார். அவ்வுரையின் தொகுப்பே இவ்வழகிய நூல். நாலடிப்பாடல் ஒவ்வொன்றன் பொருளும் எண்சீர் விருத்தம் ஒன்றில் விளக்கப் பட்டுள்ளதால் இந்நூல் 400 எண்சீர் ஆசிரியக் கழிநெடிலடி

1. திருக்குறள், 215
2. வேதாசலம், திருக்குறள் அகவல், பாடல் 215

விருத்தங்களைக் கொண்டுள்ளது. திருக்குறளுக்குக் கவிதையிலேயே சிலர் உரையெழுதியிருப்பதை முன்னர்க் குறிப்பிட்டுள்ளோம்.

ஆனால், நாலடியார்க்கு உரை, கவிதை வடிவில் வெளிவருவது இதுவே முதல் முறை என்று கருதுகிறேன். கவிதையில் உரை தருவது இந்நூற்றாண்டில் ஓர் உத்தியாய் அமைந்துள்ளது என்றாலும், நாலடிக்குக் கவிதை உரை தந்த முதல்வராய்க் கவிமாமணி இறையரசன் திகழ்கிறார் என்பது பெருமைக்குரியது.

உரைச்சிறப்பு

இறையரசனின் உரை, பாடலேயாயினும், எளிமையாய் எவரும் பொருள் விளங்கிக்கொள்ளும் வகையில் அமைந்துள்ளது. மூலத்தின் முழு அழகையும் உரை பெற்றிருக்கிறது; பாடலுக்கு நேர் கருத்தாகவும் அமைந்திருக்கிறது.

நாலடி :

குஞ்சி அழகும், கொடுந்தானைக் கோட்டழகும்,
மஞ்சள் அழகும், அழகல்ல; – நெஞ்சத்து,
நல்லம்யாம், என்னும் நடுவு நிலைமையால்,
கல்வி அழகே அழகு. (நாலடி 131)

பொருள்

தலைமுடியால் ஆண்களெலாம் தாங்கழகும், நண்ணும்
    தனிக்கரையின் மடிப்பாடை தருமெழிலும், பெண்கள்
குலைமஞ்சள் சாந்தாலே கூட்டுமெழில், யாவும்
    குறிப்பிடும்நல் அழகல்ல; கோடாத நெஞ்சுள்
நிலையான நற்குணங்கள் நிறைந்தவர்தாம் என்னும்,
    நிகரில்லா நடுநிலைமை நேர்வதனால், அந்த
நிலையீனும் செழுங்கல்வி நிறைவாகக் கற்று
    நிறைகின்ற அழகேதான் அழகென்ப தாகும்!

இதைப் படிக்கும்போது நாலடிப் பாடலின் முழுப் பொருளையும் நன்குணர முடிகிறது.

உரை மரபு

பண்டை உரையாசிரியர்கள் உரைகளில், அதிகாரப் பொருள் கூறுமிடத்துச் சில மரபுகளைக் கையாண்டுள்ளனர். பரிமேலழகர், 'அஃதாவது' என்று தொடங்குவார்; பேராசிரியர், 'இவ்வோத்து என்ன பெயர்த்தோ எனின்' என்றும், 'அஃதியாதோ எனின்' என்றும் தொடங்குவதுண்டு; இளம்பூரணர், 'இவ்வதிகாரம் என்ன பெயர்த்தோ எனின்' என்றும், 'இதன் பொருள்' என்றும்

கூறுவார். இவ்வுரையாசிரியர் இறையரசன் அவர்களோ, ஒவ்வோர் அதிகாரத்திற்கும் நான்கு சீர் கொண்ட அளவடியால் பொருள் கூறிப் போகிறார்.

எடுத்துக்காட்டு

அதிகாரம் ஈகை

பரிமேலழகர் அஃதாவது, வறியராய் ஏற்றாற்கு மாற்றாது கொடுத்தல்.

மணக்குடவர் ஈகையாவது இல்லென இரந்துவந்தார் யாவர்க்கும் வரையாது கொடுத்தல்.

பதுமனார் வறியராயினார் யாவராயினும் யாதானு மொன்றை வேண்டி வந்தால், அவர்தம் வறுமை கூறுவதன் முன்னே அறிந்து, தமக்கு இயன்றபடி, கிருபையினாலே உவந்து கடுகக் கொடுத்தலும், அறம் புகழென்பது கருதிக் கொடுத்தலுமாகிய கொடை.

இறையரசன் : வறியோர்க் கீந்து வான்புகழ் பெறுகெனல்.

அதிகாரம் அனைத்துக்கும் இவ்வாறு பொருள் சொல்லி யிருப்பது போல ஒவ்வொரு பாலுக்கும் பிற உரையாசிரியர்கள் விளக்கம் கொடுத்திருக்கின்றனர். இறையரசன், பால் விளக்கம் தரவில்லை.

தெளிவுரை

கவிமாமணி இறையரசனின் உரை, மூலத்தில் உள்ள சொற்களுக்கு நேரடிப் பொருளோடு வேண்டிய விளக்கங்களை யும் இணைத்துச் சொல்கிறது. நாலடிப் பாடல் 13இல் 'சோர்ந்த நடையினராய்' என்றுள்ளதைச் 'சோர்வுற்றுத் தளர் நடைக்கே சொந்தமுடையோராய்' என விரிவு செய்து தெளிவுபடுத்துகிறார்.

பிறந்த குலம்மாயும், பேராண்மை மாயும்,
சிறந்த கல்வியும் மாயும் (நாலடி. 285)

என்பன நாலடியாரடிகள். இவற்றிற்கு உரையாய் இறையரசன்,

நலம்வாய்ந்த தன்குடியின் நற்பெருமை மாயும்;
நன்கமைந்த பேராண்மை நலக்குணமும் மாயும்;
பலவற்றுள் மிகச்சிறந்த பயன்கல்வி மாண்பும்,
பழுதுற்று, மதிப்பற்றுப், பயனற்று மாயும்;

என உரையெழுதிக் குலம், ஆண்மை, கல்வி என்ற சொற்களுக்குப் பொருந்திய விளக்கம் தந்து பொலிவு கூட்டியுள்ளார்.

பாலால் கழீஇப் பலநாள் உணக்கினும்
வாலிதாம் பக்கம் இருந்தைக் கிருந்தன்று. (நாலடி. 258)

இவை நாலடிப் பாடலின் முதலிரண்டடிகள். இதற்கு,

கரித்துண்டைப் பலநாளும், கறந்தநற்பால் கொண்டு
　கழுவிவைத்துக், கதிரொளியில் காயவிட்டால் கூடக்,
கரியநிறம் வெண்ணிறமாய்க் கவின்மாறும் தன்மை,
　கடுகளவும் இருந்ததில்லை!

என இறையரசன் உரை காண்கிறார். மூலத்தைத் தெளிவாய்ப் புலப்படுத்தும் உரைக்கு இது தக்கதொரு சான்று.

விரிவுரை

இவ்வுலகில் பேரரசர்களேயாயினும் அவர்கள் இறந்தவர் என்ற சொல்லுக்கு ஆளாவரே அன்றி இறவாது உலகத்தில் நிலையாய் இருப்பவர்கள் என்னும் நிலைக்கு ஆளாகார் என்னும் கருத்தமைந்த நாலடிப் பாடல்,

எஞ்சினார் இவ்வுலகத்(து) இல் (நாலடி. 21)

என்று முடிகிறது. இறையரசன் இதற்கு,

நிலையாக இறவாமல் உயிர்வாழ்ந்தார் இல்லை;
நிலையில்லா உடம்பியல்பை நினைந்தறங்கள் செய்வீர்!

என உரை வரைகிறார். 'உடம்பு நிலையில்லாததை நினைந்து அறங்கள் செய்வீர்' என்ற கருத்துக்கு மூலப்பாடலில் தொடர் இல்லை. ஆயினும், இப்பாடல் யாக்கை நிலையாமை என்னும் அதிகாரத்தில் வருவதால், இறையரசன் அதற்கேற்ப இக்கருத்தைத் தாமே சேர்த்து நிறைவு செய்கிறார்.

பரத்தை வீடு சென்ற தலைவன் தன்னை ஏற்க வேண்டித் தலைவியிடம் பாணனைத் தூது விடுகிறான். தலைவி அப்பாணனை நகையாடி, "நான் உடுக்கையின் இடப்பக்கத்தைப் போன்றவளாயிருக்கிறேன். நீ சொல்ல வேண்டியதை அவ்வுடுக்கையின் வலப்பக்கம் போன்று இருப்பவரிடம் போய்ச் சொல்" என்கிறாள்.

இடக்கண் அனையம்யாம் ஊரற்(கு); அதனால்
வலக்கண் அனையார்க்கு உரை. (நாலடி. 386)

உடுக்கையின் வலப்பக்கம் அடிபட்டுப் பயன்படும்; இடப்பக்கம் அடிபட்டுப் பயன்படுவதில்லை. நான் இப்போது இடப்பக்கம் போன்றுளேன்; பரத்தையோ வலப்பக்கம் போன்று உள்ளாள் என்னும் விரிவு பாடலில் இல்லை. உய்த்துணர வேண்டிய இக்கருத்தை - விரிவை - உரை ஏற்றுச் சிறப்புறுகிறது. இதற்கான உரை வருமாறு :

அடிக்குதவா இடப்பக்கம் அனையவளாய் உள்ளேன்;
அறையத்தான் வேண்டுமென ழுகத்தெணின்நீ, மைய
அடியெடுத்தே இவ்விடத்தை அகன்றொதுங்கிச் சென்றே
அடியுடுக்கை வலப்பக்கம் அதன்பயனைப் போன்ற
கொடிய,விலை மகளிரிடம் கூறவந்த தெல்லாம்
கூறிடுக.—

நுட்பவுரை

அறம் பொருள் இன்பம் என்னும் மூன்றனுள் நடுவிலுள்ள பொருளை அடைய மற்ற இரண்டும் தாமே வந்து சேரும் என்கிறது, நாலடி;

நடுவண(து) எய்தாதான் எய்தும் உலைப்பெய்து
அடுவது போலும் துயர் (நாலடி. 114)

நடுவிலுள்ள பொருளைப் பெறாதவன், "உலைப் பெய்து அடுவதுபோலும் துயர் எய்துவான்" என்பது கருத்து.

"உலைப்பெய்து அடுவது போலும் துயர் எய்தும்" என்ற தொடருக்கு, "உலையிலிட்டுக் கொல்லுகிற ஆமை எய்தும் துயரத்தை எய்துவான்" என உரை வகுக்கிறார், தருமர். இதே பொருளைப் பழைய விளக்கவுரை ஒன்றும் தருகிறது. "உலையின்கண் பெய்தடுவது போலும் துயரினை எய்துவன்" என்று பதுமனாரும், "(கொல்லனது) உலைக்களத்திலே இட்டுக் காய்ச்சப்படுவதனாலாகும் துன்பத்தைப் போன்ற துன்பத்தை அடைவான்" என்று வை.மு.கோ. அவர்களும், "உலைக்களத்தில் போட்டுச் சுடுவது போன்ற துன்பத்தை அடைவான்" என இளவழகனாரும் பொருள் உரைத்துள்ளனர். 'உலை' என்பதற்குச் சமையல் உலை, கொல்லன் உலைக்களம் என இருவகையாய்ப் பொருள் கொண்டுள்ளனர். 'அடுவது' என்பதற்கு உலையிலிட்டுக் காய்ச்சப்படுவது என்றே அனைவரும் பொருள் தந்துள்ளனர். இரும்பு, உலையில் காய்ச்சப்படுவதோடு சம்மட்டியால் அடிபடவும் செய்கிறது. இதைக் காணும் இறையரசன், "உலையில் இரும்பு காய்ச்சப்பட்டு உளியால் அறுக்கப்படுவது போன்ற துயரத்தை அடைவான்" எனத் துன்பத்தை மேலும் பெருக்கிக் காட்டும் வகையில் உரை தருகிறார். அவர் உரை :

'குலைத்திரும்பை மிகக்காய்ச்சிக் குறுக்கறுத்தல் போலக்
குன்றாத நெடுந்துயரில் குமைந்தழிய நேரும்' (பா. 114)

மிகக் காய்ச்சி, குறுக்கறுத்து என்ற தொடர்கள் துன்பத்தின் மிகுதியை எடுத்துரைக்கின்றன. இவ்வாறு நுட்பமறிந்து உரை சொல்லும் சீரிய பாங்கினை இறையரசனிடம் காண்கிறோம்.

உரைச்சிறப்பு

கவிஞர் இறையரசனுடைய உரையில் பல்வேறு சிறப்புக் கூறுகள் அடங்கியுள்ளன.

(அ) உரை, உவமைகளைச் சிறப்புற விளக்கி, உள்ளத்தே நன்கு பதிய வைக்கும் பாங்கினதாய் உள்ளது.

பாடல்

கூர்த்துநாய் கௌவிக் கொளக்கண்டும், தம்வாயால்
பேர்த்துநாய் கௌவினார் ஈங்கில்லை. (நாலடி. 70)

உரை

நனிசினந்து, நாயொன்று, நம்தசையைப், பற்கள்
நன்கழுந்தக் கடித்தொழுகும் செங்குருதி கண்டும்,
முனிவுற்று, மாறாக, நாய்த்தசையை, வாயால்
முனைந்தோடிக் கடித்தெடுத்தோர் இல்லை.

நாய் கௌவிக்கொள்வதன் கடுமையை உரைப்பாடல் இயல்பாகவும் தெளிவாகவும் எடுத்தியம்புகின்றது.

(ஆ) ஒருவரை முன்னிலைப்படுத்திக் கூறுவதுபோல் பாடல்கள் அமைக்கப்படுவதுண்டு. ஆண்களை விளித்துப் பாடினால் அஃது, 'ஆடூஉ முன்னிலை' என்றும், பெண்களை விளித்துப் பாடினால், அது 'மகடூஉ முன்னிலை' என்றும் சொல்லப்படும். முன்னிலைப்படுத்திப் பாடப்பட்டுள்ள பாடல்களை உரையும் தக்கவாறு முன்னிலைப்படுத்திப் பாடியுள்ளது.

.... கயற்புலால்
புன்னை கடியும் பொருகடல் தண்சேர்ப்ப! (நாலடி. 97)

என்னும் ஆடூஉ முன்னிலை,

புன்னைமலர் நறுமணம்போய், புரள்கயல்மீன் மேலே
பொருந்தியுள்ள ஊன்நாற்றம் போக்கலுடன், ஓயா
வன்மையலை மோதுகுளிர் வன்கரைகள் கொண்ட
வளநாட்டின் பெருமன்ன!

எனவும்;

கூர்மையின், முல்லை அலைக்கும் எயிற்றாய் (நாலடி. 97)

என்னும் மகடூஉ முன்னிலை,

முல்லைமலர் கூரரும்பை, முத்துப்பற் கோவை
முழுவருத்தும் உறச்செய்யும் முழுவனப்புப் பெண்ணே

எனவும் உரையாக்கம் பெற்றுள்ளன. அரசனுடைய நாட்டு வளப்பமும், பெண்ணின் சிறப்பும் மூலத்தைவிட உரையில் அழகு பெற்றுத் திகழ்கின்றன.

(இ) மூலத்தில் வினாப் பொருளில் கூறப்பட்ட பகுதிகள் உரையிலும் வினாப் பொருளிலேயே தரப்பட்டுள்ளன.

——மடமாக்கள்
பொன்றில்என்? பொன்றாக்கால் என்? (நாலடி. 323)

என்னும் வினாக்கள், உரையிலும்,

—— இழிமடையர் எல்லாம்
மண்மீதில் செத்தொழிந்தால் மண்டுதுயர் என்ன?
மாளாமல் வாழ்ந்தாலும் மல்குபயன் என்ன?

என வினாப் பொருளிலேயே அமைந்திருப்பதைக் காணலாம்.

(ஈ) வெண்பாவின் இறுதி அடியின் பொருளை அவ்வடியின் நயம் மிளிர, உரை விருத்தத்தின் இறுதியில் அரையடியாகவோ ஓரடியாகவோ திறம்பட அமைக்கப்பட்டுள்ளது.

வாழாதார்க்கு இல்லை தமர் (நாலடி. 290)

என்னும் வெண்பாவின் ஈற்றடி,

உயர்வளத்துள் வாழார்க்கோர் உறவினரும் இல்லை

என உரை, விருத்தத்தின் ஈற்று அரையடியாகவும்,

ஒருவர் பொறைஇருவர் நட்பு (நாலடி. 223)

என்னும் வெண்பா ஈற்றடி,

ஒருநண்பர் செய்தபிழை ஒருநண்பர் தாங்கி
உடன்படினே இருநண்பர் உறவென்றும் நிற்கும்

என உரை, விருத்தத்தின் ஈற்று ஓரடியாகவும் அமைந்திருப்பதைக் காணலாம்.

(உ) மூலத்தில் அணிகள் பயின்று வருமிடங்களில் அதே அணிகளைப் பயன்படுத்தி உரைப்பாடலை ஆசிரியர் அமைத்திருக்கிறார்.

வைகலும் வைகல் வரக்கண்டும் அஃதுணரார்
வைகலும் வைகலை வைகுமென்(று) இன்புறுவார்
வைகலும் வைகல்தம் வாழ்நாள்மேல் வைகுதல்
வைகலை வைத்துணரா தார். (நாலடி. 39)

என்பது நாலடிப்பாடல். வந்த சொல்லும் பொருளும் பின்னும் பலமுறை வந்ததனால் இது சொற்பொருள் பின்வரு நிலையணி என்பர். இப்பாடலின் உரையும் இதே அணியில் அமைந் திருப்பதைக் காணலாம்.

நாள்தோறும் வரும்ஒவ்வொர் நாளாகத் தோன்றி
நம்வாழ்நாள் குறைக்கிறதே! அதையுணரா மாந்தர்,
நாள்தோறும் வருகின்ற நாள்தன்னை, அந்த
நாள்கழிந்த தென்றெண்ணி நனிமகிழ்ந்து வாழ்வார்!

நாள்தோறும் வரும்நாளோ, நாள்கழிதல் அன்றி,
நாம்வாழும் வாழ்நாளில் ஒருநாளைத் தின்று,
நாள்தோறும் குறைக்கிறதே எனும்உண்மை கண்டு,
நல்லறங்கள் செயநினையா(து) உழல்கின்றார் அந்தோ!

(ஊ) அடுக்குத்தொடர் பாடலில் வருமிடங்களில் உரையிலும் அடுக்குத்தொடர்களே பயன்படுத்தப்பட்டுள்ளன.

எ–டு

சென்றன சென்றன வாழ்நாள் (நாலடி. 4)

– செல்கிறதே செல்கிறதே உம்வாழ்நாள்

வந்தது வந்தது கூற்று (நாலடி. 4)

-கொடுஞ்சாவும் வருகிறது வருகிறது காண்பீர்

(எ) பாடலில் ஏவற்பன்மை உள்ள இடங்களை உரையிலும் ஏவற்பன்மையாகவே அமைத்திருக்கிறார்.

அறிமின் அறநெறி; அஞ்சுமின் கூற்றம்;
பொறுமின் பிறர்கடுஞ்சொல்; போற்றுமின் வஞ்சம்! (நாலடி. 172)

உரை

எப்போதும் அறவழியை இனிதறிந்து கொள்வீர்!
இடைநாளில் சாவுவரும் இயல்பஞ்சி வாழ்வீர்!
தப்பான பிறர்கடுஞ்சொல் தாங்கிடுவீர் பண்பால்!
தனிவஞ்சம் தோன்றாமல் தம்நெஞ்சைக் காப்பீர்!

(ஏ) பாடலில் (6) சாப்பறை 'தழீஇம் தழீஇம்' என்னும் ஓசையுண்டாம்படி அடிக்கப்படும் என வருகிறது. உரையில், 'திடும் திடும்' என்று முழங்கப்படும் என அவ்வொலிக்குறிப்பைச் செவ்வனே கொண்டுவந்துள்ளார்.

.........மணங்கொண் டீண்டு
உண்டுண்டுண் டென்னும் உணர்வினாற் சாற்றுமே
டொண்டொண்டொடு என்னும் பறை. (நாலடி. 25)

(உறவினர் கூட்டங்கூடிக் 'கல்'லென்று அல்றி அழப் பிணத்தை எடுத்துக்கொண்டு போய், இடுகாட்டில் கிடத்துவாரை நேரில் பார்த்திருந்தும், யாக்கை நிலையாமையைக் கருதாமல்) மணம் செய்துகொண்டு இவ்வுலகத்தில் இன்பம் உண்டு உண்டு என்று கருதி மயங்குகின்றவனுக்கு அதன் நிலையாமையை, 'டொண் டொண் டொண்' என்று ஒலிக்கின்ற சாவுமேளம் அறிவிக்கும் என்பது பாடற்பொருள். உரையாசிரியர் இங்கே,

சிற்றின்பம் உண்டுஉண்டாம் எனக்கூறி இங்கே,
சேர்ந்துவக்க மணமுடித்தே, இன்புணர்வில் வாழும்,

அறமறியார்க்(கு) உணர்த்திடவே சாப்பறையின் ஓசை
'ஆசைவிடும் ஆசைவிடும்' என்பதுபோல் கேட்கும்

எனக் குறிப்பிடுகிறார். 'டொண் டொண்' என்னும் ஒலிக்குறிப்பு, 'ஆசைவிடும் ஆசைவிடும்' என்று ஒலிப்பதுபோலக் கேட்பதாய் நயம்மிளிரக் கூறப்பட்டுள்ளது.

(ஐ) சொல்லின் பொருளை நன்கு அறிந்து அதனைத் தக்கவாறு பயன்படுத்துவதிலும் ஆசிரியர் வல்லவராய் உள்ளார்.

பண்டம் என்னும் சொல்லுக்குப் 'பொருள்' என்பது பொருள். உடலாகிய பொருள் என்னும் பொருளில் நாலடி 13, 48, 50 ஆகிய பாடல்களில் பண்டம் என்ற சொல் பயன்படுத்தப் பட்டுள்ளது. உரையாசிரியரும் இம்மூவிடங்களிலும் உடம் பென்னும் கூடு, உடம்பு, உயிர் நிற்கும் உடம்பு என்று கூறி யிருக்கக் காண்கிறோம்.

(ஒ) உரையாசிரியர்கள் தங்கள் நுண்மாண் நுழைபுலத் தேர்ச்சி கொண்டு சில சொற்களுக்கு வரையறை (Definition) போன்று விளக்கம் தருவதுண்டு. மானம் என்ற சொல்லுக்குப் பரிமேலழகர், "எஞ்ஞான்றும் தம் நிலையில் தாழாமையும், தெய்வத்தால் தாழ்வு வந்துழி உயிர் வாழாமையும்" என்பார். "நாண் ஆவது, செயத்தகாதவற்றின்கண் உளம் ஒடுங்குதல்" என்பர், நச்சினார்க்கினியர். இறையரசன் அவர்களும் வரையறை போன்ற பொருள் விளக்கம் தந்துள்ளதைப் பல இடங்களில் காண முடிகிறது. தலைமக்கள் (பா. 205) என்ற சொல்லுக்கு இவர், 'நன்மாந்தர் எனும் எல்லா நல்லோருக்குள்ளும் நனி முதன்மை வாய்ந்தவர்' எனப் பொருள் தருகிறார்.

அருள் என்பது, "யாதானும் ஓர் உயிர் இடர்ப்படின் அதற்குத் தன்னுயிர்க்கு உற்ற துன்பத்தினால் வருந்துமாறு போன்ற ஈரம்" என்பார், மணக்குடவர். திரு. இறையரசன், "அருள் என்னும் இல்லாரை அரவணைக்கும் பண்பு" என்கிறார். (பா. 273)

"புறமாகிய செல்வத்தின்கண்ணும் அகமாகிய யாக்கையின் கண்ணும் உளதாம் பற்றினை, அவற்றது நிலையாமை நோக்கி விடுதல் துறவு" என்பார், பரிமேலழகர். இறையரசன், "இருபற்றாம் அகப்பற்றும் புறப்பற்றும் விடுதல்" என்கிறார்.

பொதுமகளிரை, "நல்லவர் தீயவர் என்னாமல், வரைவின்றிப் பொருள் கொடுப்பார் எல்லார்க்கும் பொதுப்பட்ட உடம்பினை உடையராகிக் குணத்தினாலன்றி வடிவினாற் பெண்டிர் என்னும் வடிவுடையவர்" என்பார், தருமர். வேசியர் என்போர்,

"தொகைக்காக உடல் விற்கும் தொழில் மாதர்" என்கிறார், இறையரசன். (பா. 371)

(ஓ) பண்டைய ஆசிரியர்களின் கருத்துகளைத் தக்க இடத்தில் தக்கவாறு பயன்படுத்துகின்ற ஆற்றலையும் இறையரசன் உரையில் காண முடிகிறது. "பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம் கருமமே கட்டளைக் கல்" என்பார், திருவள்ளுவர். இதைக் கருத்திற்கொண்டு இறையரசன், கீழ்களைச் செய்தொழிலால் காணப்படும் என்ற நாலடித்தொடருக்கு, 'அவர்செய்யும் செய்கை அவரை அறிந்துகொள்ளும் உரைகல்லாய் அமைந்துவிடும்' (பா. 347) என்கிறார்.

புத்துரை

திரு. இறையரசன் பகுத்தறிவுப் பாசறையினர்; அவ்வழியில் நாலடியார்க்குப் பொருள் காண முயன்றுளார். நாலடியாரோ ஊழ், இம்மை - மறுமை, சுவர்க்கம் - நரகம், நல்வினை - தீவினை ஆகிய கொள்கைகளை நம்பி ஏற்றுக்கொண்டவர்களால் பாடப்பெற்றது. ஆதலின், அங்கு முற்றாய்ப் பகுத்தறிவுக் கோட்பாடுகளை நாம் காண முடியாது. வாய்க்கும் இடங்களில் ஆசிரியர் புத்துரை காண்கிறார் என்றாலும், வலிந்து பொருள் கொள்ள முற்படவில்லை. "ஊழ், மேலுலகம், தேவர், தெய்வம் போன்ற யாவும் தீய வழியில் செல்லாமல் மாந்தர்களை நெறிப்படுத்தச் சான்றோர் காட்டிய கற்பனை உருவங்களே ஆகும். காலப் போக்கில் சில தன்னலவிரும்பிகளால் அவை உண்மைபோல் ஆக்கப்பட்டுக் கேடு பயக்கும் நிலை உருவாகிவிட்டது" என்ற கொள்கையர், இவ்வுரையாசிரியர். அப்போக்கிலேயே உரையும் அமைந்துள்ளது.

மறுமை என்பதனை, 'இறந்த பின்னும் பெயர் வாழும் இறவாச்சீர்' (பா. 183), 'மறுமை என்னும் நெடும்புகழ்' (பா. 275), 'மறுமையெனும் தன்புகழ்' (பா. 329) எனப் புகல்வதன்வழி, மறுமை என்பது, ஒருவர் மறைவுக்குப் பிறகும் நிற்கும் புகழ் எனப் பொருள் கொள்கிறார்.

கூற்று, கூற்றம் என்பவற்றிற்குச் 'சாவு' என்றே பொருள் கொள்கிறார். 'கூற்றெனும் கொடுஞ் சாவு' (பா. 4, 6); 'எந்நாளும் மாறுபடாக் கொடுஞ்சாவு' (பா. 5) என்பன உரைகள். ஆனால், 330ஆவது பாடலில் 'கூற்றாம் எமன் என்னும் சாவு' என்பார். இங்கு, 'எமன்' ஏமாற்றி நுழைந்துவிடுகிறான்.

நிரையம் என்பதற்கு மற்றையோர், 'நரகம்' என்று பொருள் கொள, இவரோ, 'நமை வருத்தும் கொடுந்துயர்' என்கிறார்

(பா. 233). 'உம்பர்' என்பதனை மேலுலகத்தினர் எனாது, 'மேல்நிலை' எனக் கொள்கிறார். பழவினை, என்பதனை, 'முன் செய்த செயலால் நேரிடும் தீங்கு' என்கிறார்.

'வீடு' என்பதற்குப் பிற உரையாசிரியர்கள் 'வீடுபேறு' என்று பொருள் கொண்டுள்ளனர். இவ்வுரைகாரர், 'கொழும்புகழ்' என்கிறார் (பா. 59). வீடு - (எல்லாப் பற்றுகளையும்) விட்டு அடையும் இடம் எனக் காரணப் பெயராய் வீடுபேறு (முக்தி) எனப் பொருட்பொருத்தம் காட்டியுள்ளனர், முன்னையோர். 'வீடு' என்பதற்குப் புகழ் எனும் பொருளை எப்படி இறையரசன் பொருத்துகிறார் என்பதற்கான விளக்கமில்லை.

'ஆண்டைக் கதவு' என்பதற்குத் தருமர், பதுமனார் போன்றோர், 'மேலுலகக் கதவு' என்ற பொருள் கொண்டுள்ளனர். இவ்வுரைகாரர், 'புகழ் நிறைந்த நல்வாழ்வாம் அந்த நற்கதவு' (பா.91) என்றும், 'புகழ் உலகின் வாயில்' (பா. 271) என்றும் பொருள் கொண்டிருக்கிறார்.

பிறர்க்குக் கொடுத்துத் தான் நுகரினும் செல்வம் திரளுதற்குரிய (நல்வினைக்) காலத்தில் மேலும் மேலும் திரளும். நல்வினை முடிந்துவிட்டபோது (விடுக்கும் வினை உலந்தக்கால்) அதனை எவ்வளவு இறுக்கிப் பிடிக்கினும் நில்லாது என்னும் பொருளமைந்த பாடலில் (பா. 93), 'விடுக்கும் வினை உலந்தக்கால்' என்ற தொடருக்கு, 'அறச்செயலைக் குறைக்கின்ற அழிசூழல் நேர்ந்தால்' என இவ்வுரைகாரர் பொருள் கூறுகிறார். நல்வினை, தீவினை என்பவற்றை இவ்வுரைகாரர் நற்சூழல், அழிசூழல் எனப் பொருள் கொண்டு விளக்கியிருப்பது பொருத்தமேயாம்!

'சான்றோர் கொடுத்தார் எனப்படும் சொல் அடுக்கிய மூவுலகும் கேட்கும்' என்பது பாடல் (பா. 100). மூவுலகு - மேல், நடு, கீழ் உலகு எனக் கொள்ளாது, இவ்வுலகம் மட்டும் அல்லாது இன்னும் மூன்று பங்கு அடுக்கினாலும் புகழ் அங்கும் சென்று பரவும் என்றுரைப்பது மிகவும் நயமாய் உள்ளது. புத்துரை என்றாலும் பொருந்திய உரையே என்பதை இது காட்டுகிறது.

> தோணி இயக்குவான், தொல்லை வருணத்துக்
> காணின், கடைப்பட்டான் என்றிகழார்— (நாலடி. 136)

படகு செலுத்துவோன் பழைமையான சாதிகளுள் கடைப்பட்ட சாதியைச் சார்ந்தவனென்று புறக்கணியாது (அவன் துணையாக ஆற்றைக் கடப்பர்) என்ற கருத்துக் கொண்டது, இப்பாடல். இதற்கு,

> படகோட்டும் தொழிலாளர் பழம்புரட்டர் செய்த
> பாழ்முறையால் கீழ்சாதிப் பட்டிருந்தும், ஆற்றைக்
> கடப்பதற்கே அவனைஎள்ளிக் கைத்துணையாய் நீந்தார்

என்று பொருள் உரைப்பதன்வழி, உரையாசிரியர், மேல் சாதி, கீழ் சாதி என்பனவெல்லாம் பழம் புரட்டர் செய்த கொடுமை, பாழ்முறை எனச் சாடித் தம் கருத்தைத் தக்கவாறு இடம் பெறச் செய்கிறார்.

இதே போன்று,

'அகல்வானத்து உம்பர்உறைவார் பதி' (நாலடி. 137)

என்பதற்கு,

> காணும்அகல் வானுலகம் கவின்தேவர் என்று
> அழிபொய்யைக் கதைத்துளரே....

எனப் பொருளெழுதி, வானுலகம், தேவர் என்பவெல்லாம் கட்டுக்கதை, அழிபொய் எனப் புகல்கிறார்.

இராகு, கேது என்னும் கரும்பாம்பு, செம்பாம்பு கவ்வுவதாலேயே நிலவு மறைகிறது (கிரகணம் உண்டாகிறது) என்பது புராண வழக்கு. நிலவைப் பூமியின் நிழல் மறைப்பதாலேயே இத்தோற்றம் நிகழ்கிறது என்பது அறிவியல் கருத்து.

ஒருபுடை பாம்பு கொளினும் (நாலடி. 148)

என்னும் பாடலடிக்கு உரை காணும்போது, இறையரசன் அறிவியல் கருத்தைப் புராண வழக்கு மறைத்துவிட்டதைச் சுட்டிக் காட்டுகிறார்.

> ஒருபக்கம் பரிதிநிழல் ஒளிப்பதனைப் பாம்பே
> உண்டதெனத் தவறாக உலகுணர்ந்த(து)

என இறையரசன் உரை அமைகிறது. இதையே மற்றொரு பாடல் உரையிலும்,

> வருத்துகின்ற இராகுவெனும் வலுவமைந்த பாம்பும்
> வளர்கின்ற இளம்பிறையாய் வான்தோன்றும் போழ்து
> விரும்பிப்போய் நிலவதனை விழுங்காதாம்! திங்கள்
> விரிநிழலால் மறைவதனை விளம்புவர்இவ் வாறாய்! (நாலடி. 241)

என விரிவாய்க் கூறியிருக்கக் காணலாம்.

கலைமகளும் திருமகளும் கல்விக்கும் செல்வத்திற்கும் உள்ள குறியீடுகள் என்ற கருத்தில் நாவின் கிழத்தி, பூவின் கிழத்தி என்ற தொடர்களுக்கு முறையே,

நலநாவிற் குரியபழ மாண்பு கொண்ட
நலிவகற்றும் கல்வித்தாய்—
மலருக்கே உரியளெனும் மாச்செல்வத் தாயாள் (நாலடி. 252)

எனப் பொருள் கொண்டுள்ளார்.

இவ்வாறு நாலடிப்பொருள் சிதையாமல், எங்கெங்கு புதுமைக் கருத்துகளை - அறிவியல் கருத்துகளைச் - சொல்ல முடியுமோ அங்கெல்லாம் தவறாது சொல்லிச் செல்கின்ற புத்துரையாய் இந்நூல் திகழ்கிறது. பொருந்திய புதுப் பொருளுக்கு இடமளிக்காத, 'அயிராணி', 'மன்மதனை எரித்து உயிர்ப்பித்த மாதவன்' போன்றவற்றிற்கு உள்ளவாறே உரை செய்து செல்கிறார்.

உரைமாமணி

"பொழிப்புரை, அகலவுரை, நுட்பவுரை, எச்சவுரை என்னும் இந்நால்வகை உரைகளாலும் நூலை ஆராய்ந்து தெரிந்து, அதன் விரிந்த பொருட்பெருக்கை விளக்கிக் காட்டாதவருடைய சொற்கள் நூலிற்குச் சிறந்த உரையாகமாட்டா" என்கிறது, நாலடிப் பாடல் (பா. 319).

அப்பாடலுக்கு இறையரசன்,

....சீர்மலிந்த நூற்கு
சேர்மதியால் விரிவுரையும், கருத்துரையும், ஆன்ற
பொழிப்புரையும், எஞ்சிநிற்கும் பொருளுரையாம் நான்கும்
பொருத்தமுடன் ஆராய்ந்து; பொருள்விரிவைக் காட்டி
மொழியாதோர் உரைகள்,அந்த முறைசிறந்த நூற்கு
மொழிந்தவற்றுள் சிறப்புரையாய் முதன்மையுறல் உண்டோ?

என அருமையாய் உரை வரைந்துள்ளார். உயர்வான உரை எவ்வாறு இருக்கவேண்டும் என்பதை உணர்த்தும் பாடலை அசை போட்டு அசைபோட்டு உரை கண்டவருடைய நூல் என்பதால், இது முதன்மை பெற்றுச் சிறந்திருக்கிறது என்பது தெளிவு.

இவருடைய முந்தைய, 'குறளும் பொருளும்' என்னும் உரைநூலுக்கு எழுதியுள்ள முன்னுரையில், டாக்டர் கலைஞர் அவர்கள், "நூலாசிரியர் இறையரசன் அவர்களை நேரில் பார்க்கும் பொழுது, 'இவரா இத்துணை அற்புதக் கருவூலத்தை அளித்துள்ளார்!' என்றே வியந்திடத் தோன்றும்" என உளம் நெகிழ்ந்து பாராட்டியுள்ளார்கள். இந்நூலைப் படிக்கும்போது, "இவரே இத்தகைய அறிவுக் கருவூலத்தை அளிக்க முடியும்" என்ற உறுதி பெறுகிறோம்!

இவரது வளம் நிறைந்த புலமைப் பூங்காவில் இன்னும் எண்ணரிய அறிவு மலர்கள் விரிந்து, அவற்றின் மணம் தமிழ்த் தென்றலிலே தவழ்ந்து, நம் சிந்தை அணு உடல் ஒவ்வொன்றும் சிலிர்க்கச் செய்யும் என்னும் நம்பிக்கையோடு, உரைமாமணியாய் ஓங்கியுள்ள திருமாமணியாம் இறையரசனைப் போற்றுகின்றேன் - பாராட்டுகிறேன்.

நூல் ஆக்கம்	பாவலர் இறையரசன்
வகைமை	கவிதையுரை
வெளியீடு	மணிமேகலை பதிப்பகம், சின்னதாராபுரம், கரூர் மாவட்டம். (1991)

22

தமிழ் நாடக வரலாறு

முத்தமிழின் ஒன்றியம்

தமிழ் மொழி இயல், இசை, நாடகம் என முப்பிரிவுகளைக் கொண்டது. இதனைப் பிங்கல நிகண்டு,

"இயற்றமிழ் இசைத்தமிழ் நாடகத் தமிழென
வகைப்படச் சாற்றினர் மதியுணர்ந் தோரே"

என்று குறிப்பிடும். இலக்கியமும் இலக்கணமும் அடங்கியது இயற்றமிழ்; பண்ணொடு கூடிய பாடல்களையுடையது இசைத்தமிழ்; ஒரு கதையை அல்லது செயலை உரிய கதை மாந்தர்களைக் கொண்டும், உரையாடல்களை அமைத்தும், பாடல்களைப் பாடியும், மெய்ப்பாட்டுடன் பிறர்க்கு நடித்துக் காட்டுவது நாடகமாகும். நாடகத்தில் இயற்றமிழும் இசைத் தமிழும் இணைந்திருக்கக் காண்கிறோம். எனவே, நாடகம் என்பது முத்தமிழும் பொருந்திய ஒன்றாகும். இத்தகு பெருமை வாய்ந்த நாடகம் நம் நாட்டில் தோன்றி வளர்ந்ததையும், அஃது அவ்வப்போது பெற்ற மாற்றங்களைப்பற்றியும் பெரியவர் கு.சா.கி. அவர்கள் சென்னைப் பல்கலைக் கழகத்தில் ஆற்றிய ஆய்வுரை இந்நூலாய் உருப்பெற்றுள்ளது.

பட்டறிவு பேசுகிறது

ஒன்றனோடு நெருங்கிய தொடர்பு கொண்டவர் அதைப் பற்றிச் சொல்வது மிகவும் பொருத்தமானதும் சிறப்புடையது மாகும். திரு. கு.சா.கி. அவர்கள் நாடக உலகில் அரை நூற்றாண்டுக்கு மேலாகப் பல்வேறு நிலைகளில் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளவர். ஆதலால், பிறரிடம் அறிய முடியாத பல அரிய செய்திகளை இந்நூலுள் காண்கிறோம். பழம்பெரும் நடிகர் திரு.எம்.கே. இராதா அவர்கள் திரு. கு.சா.கி. அவர்கட்கு எழுதியுள்ள கடிதத்தில், "நமது இளமைப் பருவ நிகழ்ச்சிக ளெல்லாம் என் நினைவில் நிழலாடின; அன்று அப்பாவின்

ஆணைப்படி - நாடகப் பாடங்களைச் சொல்லிக் கொடுக்கும் போதும், ஒத்திகை பார்க்கும்போதும் எத்தனையோ முறை உன்னைக் கண்டித்தும், தண்டித்தும், ஏன் அடித்துங்கூட இருக்கிறேன். ஆனால், இன்று உன்னைக் கவிஞனாக, நாடக ஆசிரியனாக, பல்கலைக் கழகப் பேச்சாளனாகக் காணும்போது என் உள்ளம் பெருமிதம் அடைகிறது" என்று குறிப்பிட்டுள்ளதி லிருந்து நாடகக் கலைக்கும் திரு. கு.சா.கி.க்கும் உள்ள நீண்டகாலத் தொடர்பு நன்கு புலனாகிறது. நாடக உலகின் பழந் தலைமுறையைச் சார்ந்தவர் என்பதனாற்றான் இன்றைய இளைஞர்கள் அறியமுடியாத பல புதிய தகவல்களை இந்த உரைக்கோவையில் அவர் தந்திருக்கிறார். படிப்பறிவினால் அன்றிப் பட்டறிவினால் தரப்படுகின்ற செய்திகளாதலின் அவை உயிர்ப்புடன் விளங்குகின்றன. இதை அவரே, "நடிகனாகவும், நாடக ஆசிரியனாகவும், பாடலாசிரியனாகவும் பணியாற்றிய அனுபவத்தைக்கொண்டு சில புதிய தகவல்களைத் தரமுடியும் என்ற நம்பிக்கையுடன் உரையைத் தொடங்குகிறேன்" (பக். 21) எனக் குறிப்பிட்டுள்ளார்.

நாடகம்

"நாடகம் நாட்டிற்கு அணிகலன்; நாகரிகத்தின் அளவுகோல்; நாட்டின் படப்பிடிப்பு; பாமரர்களின் பல்கலைக் கழகம்..." எனப் பலவாறாய் அவர் அடுக்கிச் சொல்வதிலிருந்து (பக். 22) அவருக்கு நாடகத்தின்பால் உள்ள ஈடுபாட்டை நன்குணர்கிறோம். நாடகம் என்ற சொல்லை, நாடு + அகம் எனப் பிரித்து, நாட்டின் நிலையைத் தன் அகத்தே பிரதிபலித்துக் காட்டுவது; நாட்டின் இதயமாய் (அகமாய்) விளங்குவது; அகம் நாடுவது எனப் பல்வேறு பொருள் விளக்கம் தந்திருப்பது சிறப்பாய் உள்ளது (பக். 26). நாடகத்தைக் குறிக்கப் பிற மொழிகளில் உள்ள சொற்களான Play, Drama என்பவற்றைவிட நாடகம் என்ற சொல் எத்தகைய பொருள் பொதிந்தது என்பதையும் வேறுபடுத்திக் காட்டுகிறார் (பக். 27).

நாடகத்தில் அடங்குபவை

நாட்டியம் நாடகத்தின் ஒரு பகுதியே; நாடகமும் நாட்டியமும் கூத்து என்ற பொதுப்பெயரால் வழங்கப்படுகின்றன என்பதற்குச் சான்றுகள் தந்துள்ளார் (பக். 38, 39). மேலும், "பாடியும் ஆடியும், நவரச பாவ பேதங்களுக்கு ஏற்பவும், கதையில் வரும் பாத்திரங்கட்கேற்பவும் பேசியும் நடித்துக் காட்டியும், கதையை நடத்திக்காட்டும் கதாகாலட்சேப நிகழ்ச்சிகளையும்

நாடகத்தின் ஒரு கூறாகவே கருதுகிறேன்" என்கிறார் (பக். 52). அதுபோன்றே கிராமப்புறங்களில் விழாக் காலங்களில் பம்பை, உடுக்கை முழங்க, சிலம்பு ஒலிக்கப் பெண்கள் மிகுந்த ஆவேசங் கொண்டு கூச்சலிட்டு ஆடுவதும் ஒருவகை நாடக அங்கமே (பக். 54). கிராமக்கலைகளில் இன்றும் உயிர்ப்போடு விளங்கும் கும்மி, கோலாட்டம், கரகம், காவடியாட்டம், ஒயிலாட்டம், வில்லுப் பாட்டு, பொய்க்கால் குதிரையாட்டம் ஆகிய கலைகளெல்லாங்கூட ஒருவகை நாடக அங்கம் என்று கொள்ள வேண்டும் (பக், 54). இவ்வாறு ஆசிரியர் 'நாடகம்' என்ற சொல்லுக்குப் பரந்த அளவில் பொருள் கொண்டு ஆய்வு செய்துள்ளார்.

முக்காலம்

நாடகத்திற்குப் பொருளும், நாடகத்துள் அடங்குபவை எவையெவை என்றும் விளக்கியவர், அதனை முற்காலம், இடைக்காலம், இக்காலம் என மூன்று பிரிவுகளாகக்கொண்டு, அவ்வக்காலத்தில் நாடகத்தின் அமைப்பு, அவற்றில் ஏற்பட்ட மாறுதல்கள் ஆகியவற்றைத் தக்க சான்றுகளுடன் விளக்கிச் செல்கிறார்.

முற்காலம்

நூலாசிரியர் அகத்தியம்முதல் சிலப்பதிகாரம்வரையுள்ள காலத்தை நாடகக்கலையின் முற்காலமாய்க் கொள்கிறார்.

> "நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
> பாடல் சான்ற புலனெறி வழக்கம்"

எனத் தொல்காப்பியம் கூறுவதால், தொல்காப்பியர் காலத்திலேயே நாடகம் ஏற்றம் பெற்றிருந்தது என்பதை அறிகிறோம். ஒருவரிடம் செல்வம் வந்து சேர்வதானது கூத்தாடுமிடத்தில் கூட்டம் சேர்வதைப் போன்றது; அது நீங்கிப்போதலானது கூத்து முடிந்ததும் கூட்டம் கலைவதைப் போன்றதாகும் என்பதை,

> "கூத்தாட்டு அவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
> போக்கும் அதுவிளிந் தற்று"

எனத் திருக்குறள் குறிப்பிடும். விழாவின்கண் ஆடும் கூத்தரது வேறுபட்ட கோலம்போல, மக்கள் அடைவடைவே தோன்றி, இயங்கி, இறந்து போகும் இயல்புடையது இவ்வுலகம் என்ற கருத்தைச் சோழன் நலங்கிள்ளியின்,

> .... விழவில்
> கோடியர் நீர்மை போல, முறைமுறை
> ஆடுநர் கழியும்இவ் வுலகம்

என்ற புறநானூற்றுப் பாடலடிகள் தெரிவிக்கும். இவற்றால் பண்டே நாடகங்களில் பலர் பல்வேறு கோலம் புனைந்து நடித்ததையும், மக்கள் கூடி அந்நாடகங்களைக் கண்டு சென்றதையும் நாம் அறிய முடிகிறது. "சிலம்பில் காணப்படும் நாடக மேடை அமைப்பு முறை, 15ஆம் நூற்றாண்டுவரையிலும் கூட ஆங்கில நாட்டு மேதைகள் காணாத புதுமையாகும்" என்பதை ஆசிரியர் குறிப்பிட்டுக் காட்டுகிறார் (பக். 64). இவற்றால் பண்டைய நாள்களில் நாடகம் பெற்றிருந்த உயர்வு நன்கு புலனாகிறது.

இடைக்காலம்

அத்தகைய பண்டைய நாடக இலக்கியங்கள் எங்கே என்னும் வினாவை எழுப்பி, அவை அழிந்ததற்குக் காரணம் வேற்றினத்தினர், வேற்று மதத்தினர், வேற்று மொழியினர் ஆகியோரின் ஆட்சியும் பண்பாட்டுப் படையெடுப்புமே ஆகும் என்ற காரணத்தையும் ஆசிரியர் கூறுகிறார் (பக். 56).

"கி.பி. 3ஆம் நூற்றாண்டு தொடங்கி ஆறாம் நூற்றாண்டு முடியத் தமிழகத்தின் இருண்ட காலமென வரலாற்றறிஞர்களால் குறிக்கப்பெறும் களப்பிரர்களின் கொடுங்கோன்மை நடந்த காலங்களில் தமிழர்களின் கலை, கலாச்சாரம் முதலிய அனைத்துமே சீரழிக்கப்பட்டன" (பக். 59).

சமண, பௌத்த மத வளர்ச்சியும் நாடகக்கலை அழிவுக்குக் காரணமானது. இதனைப் பரிதிமாற்கலைஞரும் தம் தமிழ்மொழி வரலாற்றில், "சிறப்புடைய நாடகக் கலை வளர்ந்து வந்தபோது நம் நாட்டில் செல்வாக்குப் பெற்ற புத்தமும் சமணமும், நாடகம் காமத்தை மிகுதிப்படுத்துவதென்று தவறாய் எண்ணினர். அதனால் அவர்கள் செல்வாக்கு மிகுந்திருந்த காலத்தில் நாடகத் தமிழை வளரவொட்டாது தடுத்தனர்" என்று குறிப்பிடக் காணலாம்.

நூலாசிரியர், சிலப்பதிகார காலத்திற்குப் பின்னே 19ஆம் நூற்றாண்டின் இறுதிவரையுள்ள காலத்தை இடைக்காலமாய்க் கொண்டு இச்செய்திகளை ஆய்கிறார். ஆய்வின் பயனாய், "நாடகத்தைப் பொறுத்தவரை சிலப்பதிகாரத்திற்குப் பின் 17ஆம் நூற்றாண்டின் இறுதிவரை இருண்ட காலமென்றே சொல்ல வேண்டும்" என்கிறார் (பக். 66).

17ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு நொண்டி நாடகங்கள் குறவஞ்சி நாடகங்கள், பள்ளு நாடகங்கள், மந்தை நாடகங்கள் போன்ற நாடகங்கள் நடத்தப்பட்டு வந்தன என்பதையும் தெளிவுபடுத்துகிறார் (பக். 67).

இக்காலம்

19ஆம் நூற்றாண்டின் இடையிலும் இறுதியிலும் நாடகக் கலை மறுமலர்ச்சி பெற்றது. ஆங்கில ஆட்சி, ஆங்கிலக் கல்வி நம் நாட்டில் வேரூன்றியதன் காரணமாய் இந்திய நாடக உலகிலும், தமிழ் நாடக உலகிலும் மாறுதல் உண்டாகியது. மேலைநாட்டுப் புதினங்களைத் தழுவி நாடக உத்திகளைக் கையாளும் முறை தோன்றியது. பம்மல் சம்பந்த முதலியார், சங்கரதாஸ் சுவாமிகள், சதாவதானம் கிருஷ்ணசாமிப் பாவலர் போன்ற பெரும்புலவர்கள் நாடகங்களை எழுதியும் நடத்தியும் வந்த அருந்தொண்டினால் நாடகக்கலை புத்துயிர் பெற்றதை, ஆசிரியர் வரலாற்றடிப்படையில் விரிவாய் விளக்கிச் சொல்கிறார். "இருபதாம் நூற்றாண்டு தொடங்கி அரை நூற்றாண்டுவரை தமிழ் நாடகக்கலையின் பொற்காலம் என்றே கூறவேண்டும்" என்பது ஆசிரியர் துணிபு (பக். 146).

ஒழுங்கும் கட்டுப்பாடும் நிறைந்த நாடகக் குழுவினர் மக்களிடையே பெற்ற செல்வாக்கினால் நாடகக்காரனுக்குக் கூத்தாடி, ஒழுக்கமற்றவன் என்றிருந்த அவப்பெயர் சிறிது சிறிதாய் மறைந்து, நடிகர்களைக் கலைஞர்கள் என்று போற்றும் நிலைமையும் வளர்ந்தது. பல்வேறு நாடகக் குழுக்கள் தோன்றின, என்றாலும் அவற்றுள் காலப்போக்கில் கன்னையா கம்பெனி, நவாப் ராஜமாணிக்கம் கம்பெனி, டி.கே.எஸ். சகோதரர் கம்பெனி போன்ற சிலவே நிலைத்து நின்றன. இருபதாம் நூற்றாண்டின் பின் அரைப்பகுதியை டி.கே.எஸ். சகோதரர்கள் சகாப்தம் என்றே கூறலாம் என்பதையும் ஆசிரியர் விளக்குகிறார். தமிழில் குழந்தை நாடகங்களும் தோன்றித் திறம்பட நடித்துக் காட்டப்பட்டன. நாடகத்திலிருந்து திரைப்படம் வளர்ச்சியுற்றது. திரையுலகிற்கு நாடகமேடை அளித்த நடிகர்கள் மிகப்பலராவர்.

இன்றைய நிலை

இவ்வாறு வளர்ந்துவந்த நாடகம் பல்வேறு காரணங்களால் இன்று சூனிய நிலையில் உள்ளது என ஆசிரியர் வருந்துகிறார். இந் நூற்றாண்டின் முன் அரைப்பகுதியில் போட்டிபோட்டு வளர்ந்த நாடக வளர்ச்சி இன்று பொய்யாய், கனவாய், பழங்கதையாய்ப் போனதை எண்ணி வெதும்புகிறார். "தமிழுக்கென்றே தனியான இலக்கணம் வகுத்து அகத்தியம், பரதம், தொல்காப்பியம் என்று 'வழிவழியாய் எண்ணற்ற நாடக இலக்கண நூல்களைப் படைத்துப் பெருமை பேசிக்கொண்டிருக்கும் தமிழ்க்குலம், இந்த அவல

நிலைக்கு வரலாமா, நாளைய வரலாறு நம்மைக் கண்டு நகைக்காதா என்பதுதான் என் கவலை" எனக் குமுறுகிறார் (பக். 212). இவர் காலத்திலேயே நாடகத்திற்குப் பண்டைய ஏற்றம் நேரிட்டு, இவர் உளம் மகிழும் நிலை உருவாக வேண்டும் என நாம் உளமார விழைவோமாக.

நாடகங்களின் பயன்

நாடக வரலாற்றை விளக்கிய ஆசிரியர், நாடகங்களின் பயனைச் சுட்டிக் காட்டுகிறார். நாடக நிகழ்ச்சிகள், அவை தோன்றும் காலத்தில் நாடு இருக்கும் நிலையைப் படம் பிடித்துக் காட்டுவன என்பதைச் சுதந்தரப் போராட்ட காலத்தில் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கக் காலத்தில் - நடைபெற்ற நாடக மேடைக் காட்சிகளைக்கொண்டு ஆசிரியர் விரிவாய் விளக்குகிறார்.

அக்காலத்தில் வள்ளித் திருமணம் நாடகம் நடைபெறும்; தினைப்புனத்தில் வள்ளி ஆலோலம் பாடிக் குருவிகளை விரட்டுவாள்; அவளைக் காண வேலன், வேடன் வடிவில் அங்கு வருவான். அவ்வாறு வரும் அவன்,

ஆயலோட்டும் பெண்ணே
ஆவியே! என்னாருயிர்ச் சஞ்சீவியே!
மன்மதன் என்னும் பாவியே!
மலர்க் கணைகள் தூவியே
வாட்டுறான் கண்ணே (ஆயலோ)

என்று பாடி வரவேண்டும். ஆயினும், சுதந்தரப் போராட்ட வேகத்தினால் உந்தப்பட்ட நிலையில் வேடன்,

கதர்க் கப்பல் கொடி தோணுதே
கரம் சந்த்ர மோகனதாஸ்
காந்தி இந்தியா சுதேச (கதர்க்)

என்று பாடி வருவான். வள்ளியைக் காண வரும் வேடனுக்கும், 'கதர்க் கப்பல் கொடிக்கும்' எந்தத் தொடர்பும் இல்லை; ஆயினும், இதைக் கேட்கும் மக்கள் கரவொலி எழுப்புவதோடு மீண்டுமொரு முறை (once more) பாடக் கேட்பதையும், நான் சிறுவனாய் இருந்தபொழுது, விழாக் காலங்களில், என் சிற்றூரில் நடந்த நாடகங்களில் கண்டது ஆசிரியரின் இந்நூலைப் படிக்கும்போது என் நெஞ்சில் நிழலாடுகிறது; அதனால் ஆசிரியர் கூறும் நிகழ்ச்சிகளைப் படிக்கும்போது எனக்குக் கூடுதல் சுவை ஏற்படுகிறது.

விடுதலை இயக்கத்தில் நாடகக் கலைஞர்கள் கொண்ட பங்கை ஆசிரியர் மிகு விரிவாய் நயம்பட எடுத்துரைத்துள்ளார். "தெருக்கூத்துக் கலைஞர்கள் திறந்த வெளிகளில் நாடகம் போட்டுச் சுதந்தரக் கனலை அணையாது காத்து வந்ததை" ஆசிரியர் அருமையாய்க் கூறுகிறார். அன்றைய நாடக மேடையில் ஒலித்த ஐம்பதுக்கும் மேற்பட்ட இத்தகைய உணர்ச்சியூட்டும் பாடல்களை இந்நூலுள் நாம் காண முடிகிறது.

நாடகங்கள் கொள்கை பரப்புக் கருவிகளாகவும் பயன்பட்டுள்ளன. சமுதாய சீர்திருத்தக் கருத்துகளைப் பரப்பியதில் பேரறிஞர் அண்ணாவின் நாடகங்கள், நகைச்சுவை மன்னர் என்.எஸ். கிருஷ்ணன் அவர்களின் கதா காலட்சேபங்கள் போன்றவை ஆற்றியுள்ள பெருந்தொண்டினைச் சான்றாய் ஆசிரியர் சுட்டிக் காட்டுகிறார்.

தமிழிசை

நாடகம்பற்றிய தம் உரையில் திரு. கு.சா.கி. தமிழிசை பற்றிக் கூறியுள்ள கருத்துகள் சிந்தனைக்குரியன. பழைய தமிழிசைப்பண்களே இன்று இராகங்கள் என்ற பெயர் பெற்றுப் பிற மொழிகளில் புகுந்துள்ளன. தமிழிசை தலையாய இசையாயிருந்தும் பிற மொழி இசைதான் இசை என்ற நிலை உருவானது நியாயந்தானா? "நூற்றுக்கு நூறு தமிழர்களே நிறைந்திருக்கும் அவையில் ஒரேயொரு தமிழ் உருப்படிகூடப் பாடாமல், தொடக்கம்முதல் இறுதிவரை பிற மொழிப் பாடல்களையே பாடும் கொடுமையைத் தடுத்து நிறுத்தும் துணிவு – சொரணை – தமிழ் மக்கட்கு வர வேண்டாவா?" என்பது ஆசிரியர் வினா (பக். 45).

இவ்வினாவுக்கான மறுமொழியைத் தமிழகம் எண்ணிப் பார்க்கக் கடமைப்பட்டுள்ளது. இசைக்கருவிகள் தோற்கருவி, துளைக்கருவி, நரம்புக்கருவி என மூவகைப்படும். தோற்கருவி முழவு எனப்படுகிறது; துளைக்கருவி குழல் ஆகும்; நரம்புக்கருவி யாழ் எனப் பெயர் பெற்றுள்ளது. முழவு, குழல், யாழ் ஆகிய முத்திறக் கருவிகளின் பெயர்களில் தமிழுக்கே உரிய தனிச் சிறப்பெழுத்தான, 'ழ'கரம் இடம் பெற்றுள்ளதால் இவ்விசைக் கருவிகளைக் கண்டவர்கள் தமிழர்களே, இசையை வளர்த்தவர்கள் தமிழர்களே என ஆசிரியர் குறிப்பிடுவது தமிழிசைக்கு ஆக்கம் தருவதாகும்.

கலைக்களஞ்சியம்

சுருங்கக் கூறுமிடத்து, இந்நூல் தமிழ் நாடகக் கலையின் தோற்றம், வளர்ச்சி, மாற்றம் ஆகியனபற்றி அறியப் பயன்படுகின்ற முழுமை பெற்ற நூலாய்த் திகழ்கிறது. 19, 20ஆம் நூற்றாண்டுகளில் இயங்கி வந்த நாடகக் குழுக்கள், நாடக நடிகர்கள், நாடக ஆசிரியர்கள் ஆகியோர்பற்றிய செய்திகளை விரிவாய் விளக்குகிறது. இதனால், நாடகங்களினால் நாட்டுக்கு ஏற்பட்ட நன்மைகளையும் தெரிந்துகொள்ள முடிகிறது; பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் தீவெட்டி வெளிச்சத்தில் நாடகங்களை இயக்கிய முறை, தெருக்கூத்து நாடகங்களை நடத்திய முறை ஆகியவற்றை அறிய முடிகிறது. மேலும் இதனுள், நாடக மேடையில் அன்று பாடப்பட்டு இன்று நாம் அறிந்துகொள்ளும் நிலையிலில்லாத பல அரிய பாடல்கள் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. நாடகம்பற்றிய எல்லா விவரங்களையும் தன்னகத்தே பெற்றுள்ள இந்நூலை, 'நாடகக் கலைக்களஞ்சியம்' என்றே குறிப்பிடலாம்.

நூல் ஆக்கம்	கவிஞர் கு. சா. கிருஷ்ணமூர்த்தி
நூல் வகை	ஆய்வுரை
வெளியீடு	வானதி பதிப்பகம், சென்னை. (1979)

23

தமிழ்க் கவிதைநாடகங்களில் பாத்திரப் படைப்பு

கவிதைநாடக ஆய்வு நூல்

அருமை நண்பர் சேமுமு. முஹமதலி 'தமிழ்க் கவிதை நாடகங்களில் பாத்திரப் படைப்பு' என்னும் மிகச்சிறந்த ஆய்வு நூலை ஆக்கித் தமிழுக்கு அணி சேர்த்துள்ளார். அவர்தம் அரிய உழைப்பு, ஆராய்ச்சி நலம், பரந்துபட்ட புலமை ஆகியவற்றின் ஒன்றிணைப்பே இவ்வுயரிய நூல். நாடகக்கலைபற்றிய ஆய்வு நூல்கள் தமிழில் மிகக்குறைவு. அக்குறையைப் போக்கும் வகையில் இந்நூல் உருவாகியிருப்பது பாராட்டுக்குரியது.

நாடகத்தமிழின் தொன்மை

இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் என முத்திறத்ததாய் 'முத்தமிழ்' எனத் தமிழ்மொழி போற்றப்படுகிறது. சங்க காலத்துக்கு முன்பே தமிழ்நாட்டில் நாடகக்கலை செழித்து வளர்ந்திருந்ததென்பதைத் தொல்காப்பியத்தாலும், சிலப்பதிகாரம், சீவக சிந்தாமணி போன்ற காப்பியங்களாலும், அவற்றுக்கெழுந்த உரைகளாலும் நாம் உணர முடிகிறது. நாடக மேடையமைப்பு, அம் மேடையிலமைந்திருந்த எழினிகள், ஒலித்த இசைக்கருவிகள் ஆகியனபற்றிச் சிலப்பதிகார அரங்கேற்று காதை அறிவிக்கிறது. இவ்வாறான சான்றுகள் இருந்தபோதிலும், நாடகத்தமிழ் எனச் சிறப்பித்து வழங்கப்படும் தமிழின் பண்டைய நாடக நூல்கள் நமக்குக் கிட்டாது போனமை நமது பேரிழப்பேயாம்.

இன்றைய கவிதைநாடகத் தோற்றம்

கி.பி. 17, 18ஆம் நூற்றாண்டுகளில் உழத்திப்பாட்டு, குறத்திப் பாட்டு, பள்ளு, குறவஞ்சி, குளுவ நாடகம் என இலக்கிய வகைகள் தோன்றலாயின. இவற்றை இன்றைய கவிதைநாடகங்களுக்கு அடிப்படை எனலாம். அருணாசலக் கவிராயரின் இராம நாடகக்

கீர்த்தனை, கோபாலகிருஷ்ண பாரதியாரின் நந்தனார் சரித்திரக் கீர்த்தனை ஆகியவை இசைநாடகங்களாய் விளங்கின. இவ்விலக்கியங்கள் நாடகக் கூறுகளைக் கொண்டிருப்பினும் இன்று Drama எனச் சொல்லப்படும் ஆங்கிலச் சொல்லுக்குப் பொருந்திய நாடகங்களாய் இவற்றைக் கொள்ள முடியாது. ஒரு கதையைக்கொண்டு அதற்குப் பொருந்திய கதைமாந்தர்களைப் படைத்து, அக்கதைமாந்தர்களின் உரையாடல் வாயிலாகவே கதையை வளர்த்துச் சென்று முடிப்பதே நாடகம் (Drama) ஆம். இவ்விலக்கணத்திற்கேற்ற கவிதைநாடகங்களை 19ஆம் நூற்றாண்டின் இறுதியிற்றான் தமிழில் காண முடிகிறது. லார்டு லிட்டன் என்பார் எழுதிய 'இரகசிய வழி' என்னும் ஆங்கிலக் கதையைத் தழுவி, 1891இல், பேராசிரியர் சுந்தரம் பிள்ளை 'மனோன்மணீயம்' என்னும் கவிதை நாடகத்தை எழுதி வெளியிட்டார். தமிழில் தோன்றிய முதல் கவிதைநாடக நூல் இதுவேயாம். பின்னர்த் தோன்றிய கவிதை நாடக நூல்கள் அனைத்துக்கும் இந்நூலே வழிகாட்டியாய் அமைந்தது. பேராசிரியர் சுந்தரம் பிள்ளை தமிழ்க் கவிதைநாடகத்தின் தந்தை என்னும் சிறப்புக்குரியவராகிறார்.

கவிதைநாடக இலக்கணம்

பண்டு தோன்றிய நாடக இலக்கணங்கள் அழிந்த நிலையில், புதிதாய் நாடக இலக்கணம் வகுக்கும் முயற்சியும் 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் தோன்றியது. தொல்காப்பியம், சிலப்பதிகாரம், அடியார்க்கு நல்லார் உரை போன்ற பல தமிழ் நூல்களையும், பரதமுனிவரின் நாட்டிய சாத்திரம், காவிய தரிசம் போன்ற வடமொழி நூல்களையும் நன்கறிந்து, அவற்றிற் கண்டவற்றை அடிப்படையாய்க்கொண்டு வி.கோ. சூரிய நாராயண சாஸ்திரியார் (பரிதிமாற்கலைஞர்), 'நாடகவியல்' என்னும் நாடக இலக்கண நூலை 1897இல் முதன் முதலாக வெளியிட்டார். 1926இல் விபுலானந்த சுவாமிகள், "வடமொழி யாசிரியராகிய தனஞ்செயனாரும் ஆங்கில மகாகவியாகிய சேக்ஸ்பியர் செவ்விதினுரைத்த நுண்பொருள் முடிவுகளை நிரைபட வகுத்து முறைபடக் கூறுமுகத்தான்" மதங்க சூளாமணி என்னும் நாடகவிலக்கணச் சார்புடைய நூலை இயற்றினார்.

கவிதைநாடகச் சிறப்பு

"ஒரு மொழி வளர்ச்சி பெற வேண்டுமானால் அதில் சிறந்த கவிதைநாடகங்கள் உருவாக வேண்டும்" எனக் குறிப்பிடும் சுத்தானந்த பாரதியார் உலக இலக்கியங்களில் கவிஞர்கள் கவிதை

நாடகங்களை எழுதியே புகழ் பெற்றுள்ளனர் என்பதைச் சுட்டிக் காட்டுகிறார். "ஆங்கிலம் சாகா வரம் பெற்றது ஷேக்ஸ்பியர், மில்தன், ஷெல்லி, பைரன் போன்ற புலவர்மணிகளால்; பிரெஞ்சு மொழி உலகம் மெச்ச விளங்குவது ரஸீன், கொர்ரெய், மோலியர், விக்தர் ஹியூகோ போன்ற நாடகப்புலவர்களால்; ஜெர்மன் மொழி ஷில்லர், கெத்தே போன்ற நாடகப்புலவர்களாலேயே புகழ் பெற்றது. வடமொழியை உலகம் அறிந்தது முதன்மையாகக் காளிதாசனின் சாகுந்தலத்தாலேதான். மேற்சொன்ன புலவர்களெல்லாரும் தம் நாடகங்களைக் காவியங்களாகவே அமைத்தனர்." "காவியங்களில் நாடகக்காவியமே இனியது (காவ்யேஷு நாடகம் ரம்யம்)" என்பது அவர் கூற்று.

கவிதைநாடக வளர்ச்சி நிலை

முன்பிருந்து மறைந்துபோன கவிதைநாடகத்துறை இருபதாம் நூற்றாண்டின் வளர்ச்சியின் முதற்கட்டத்திலிருக்கிறதெனலாம். சிறந்த நாடக உத்திகளை அறிந்துகொள்வதற்கான நாடக நூல்களும், நாடக இலக்கண நூல்களும் பலவாக இல்லையாதலின் மனோன்மணீயத்தை மாதிரியாகக்கொண்டே இக்காலக் கவிதைநாடகங்கள் தோன்றலாயின. அவ்வாறு தோன்றியவையும் எண்ணிக்கையில் மிகவும் குறைவேயாம். ("கவிதைநாடகம் நமது இலக்கிய மலர்ச்சோலையில் எண்ண முடியாத மலர்த்தொகுதிகளாய்க் காணப்படவில்லை; எப்போதோ உதிக்கும் குறிஞ்சி மலராகத்தான் காட்சி தருகிறது" என்பார், கலைஞர் கருணாநிதி.)

1901 முதல் 1980 முடிய எண்பதாண்டுக் காலங்களில் 49 கவிதை நாடக நூல்களே வெளியாகியுள்ளதைத் திரு. முஹமதலி பட்டியலிட்டுக் காட்டியுள்ளார். 1901 முதல் 1910 முடிய 3 நூல்களும், 1911 முதல் 1920 முடிய 4 நூல்களும், 1921 முதல் 1930 முடிய 1 நூலும், 1931 முதல் 1940 முடிய 1 நூலும், 1941 முதல் 1950 முடிய 5 நூல்களும், 1951 முதல் 1960 முடிய 3 நூல்களும், 1961 முதல் 1970 முடிய 6 நூல்களும், 1971 முதல் 1980 முடிய 26 நூல்களும் தோன்றியிருப்பதை ஆய்வாளர் விளக்கமாய் இந்நூலுள் தந்துள்ளார். 1901 முதல் 1970 முடியவுள்ள எழுபதாண்டுகளில் எத்துணைக் கவிதை நாடக நூல்கள் தோன்றியுள்ளனவோ (23) அத்துணை எண்ணிக்கையையும்விட அதிகமான நாடகங்கள் (26) 1971-1980 ஆகிய பத்தாண்டுகளில் தோன்றியுள்ளதை ஆய்வாளர் தந்துள்ள விவரம் சுட்டுகிறது. 1891இல் வெளிவந்த மனோன்மணீயத்துக்குப் பிறகு அதே

போன்று மக்களின் எண்ணத்தையும் இதயத்தையும் கவரத்தக்க வகையில் பிறிதொரு நாடகம் தோன்றவில்லையென்னும் குறையைப் போக்கச் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் ஆயிரம் வெண் பொற்காசுகளைப் பரிசுத் தொகையாகக்கொண்ட 'மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளை நாடகப் போட்டியை" 1971இல் நடத்தினர். அப்போட்டி பலரை ஊக்குவித்ததே, 1971 தொடங்கிக் கவிதைநாடக நூல்கள் பல வெளிவந்தமைக்குக் காரணம் எனலாம். 1981 முதல் 1985 முடிய கடந்த ஐந்தாண்டுகளில் 7 நூல்களே வெளி வந்துள்ளன. 1971-80 லிருந்த வளர்ச்சி வேகம் குறைந்துள்ளதை அறிய முடிகிறது. கவிதைநாடகங்கள் பெருமளவில் வெளிவர அத்துறையிலுள்ளோர் முயல வேண்டும். 1971-1980 ஆகிய பத்தாண்டுக்காலம், தமிழ்க் கவிதைநாடகத் தோற்றப் பொற்காலமாய் விளங்குகிறது.

கவிதைநாடகக் கதையமைப்பு

தமிழ்க் கவிதைநாடகங்களை,

(அ) வரலாற்று நாடகம்

(ஆ) இலக்கியக் கவிதைநாடகம்

(இ) சமுதாயக் கவிதைநாடகம்

(ஈ) கற்பனை அல்லது தத்துவக் கவிதைநாடகம்

(உ) மொழிபெயர்ப்பு அல்லது தழுவல் கவிதைநாடகம்

என ஐந்து வகையாகப் பிரிக்கலாமென்பார், டாக்டர் இரா.குமரவேலன். இவற்றுள் தமிழில் இலக்கியத் தழுவல் நாடகங்களே மிகுதியாய்த் தோன்றியுள்ளன. மனோன்மணீயம் தொடங்கி 1980 வரை தோன்றியுள்ளதாக திரு. முஹமதலி குறித்துள்ள 56 நாடகங்களுள் இலக்கியத் தழுவல் நாடகங்கள் 28-ம் (தமிழ் இலக்கியத் தழுவல் 16, பிற இலக்கியத் தழுவல் 12), சமூகக் கற்பனை நாடகங்கள் 12-ம், வரலாற்று நாடகங்கள் 9-ம், மொழி பெயர்ப்பு நாடகங்கள் 7-ம் அடங்கியுள்ளன. வரலாறு, இலக்கிய, தழுவல் நாடகங்களில், ஆசிரியர் முன்னரேயுள்ள கதையை எடுத்துக்கொண்டு அதில் தம் கற்பனையை இணைத்துக் கொள்கிறார். நேரிடையான மொழிபெயர்ப்பு நூல்களில் ஆசிரியர் மொழிநடைக்கு மட்டுமே சொந்தக்காரர் ஆகிறார். சமூக-கற்பனை நாடகங்களைப் பொறுத்தமட்டில் கதையை ஆசிரியர் தாமே புனைந்துகொள்ள வேண்டியவராகிறார். இவ்வடிப்படையில் நோக்கும்போது ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ள 56 நாடகங்களுள் 21இல் மட்டுமே (38%) கதைகள் சொந்தமாய்ப்

புனையப்பட்டுள்ளன. இதிலிருந்து, புதிய கதைகளைப் புனைவதைவிடப் பழைய கதைகளை எடுத்து அவற்றில் தம் கற்பனையைச் சேர்த்து நாடகங்களைப் படைக்கும் போக்கே தமிழ் நாடகக்கவிதைகளில் தலைமையிடம் பெற்றிருப்பதை அறிகிறோம்! தமிழ் இலக்கியத் தழுவல் நாடகங்கள் 16இல் அனிச்ச அடி, அன்னி மிஞிலி, அன்னி மகள், ஆதிமந்தி, ஊமைக்குயில், கரிகால்வளவன், நெடுமானஞ்சி, புரவலர் உள்ளம், புலவர் உள்ளம், மான விஜயம் ஆகிய பத்தும் சங்க இலக்கியக் கதைக்கருவைக் கொண்டுள்ளன. இராமாயணத்தில் உள்ள கதையைக்கொண்டு கனகை நாடகமும், மணிமேகலையிலுள்ள செய்திகொண்டு ஆபுத்திரன் அல்லது சமூக ஊழியன் நாடகமும், சிலப்பதிகாரத்தின் மூலநூல் அடிகளைப் பயன்படுத்திச் சிலம்புச் செல்வி, பாண்டியன் நெடுஞ்செழியன் ஆகிய நாடகங்களும் எழுதப்பட்டுள்ளன. புகழேந்தி, ஒட்டக்கூத்தர் ஆகியோர் கதைகளை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டது, புகழேந்தி நாடகம். நளவெண்பாவை ஒட்டி எழுதப்பட்டது, தமயந்தி நாடகம். இவற்றை ஒன்றிணைத்து நோக்கும்போது, சங்க இலக்கியச் செய்திகளைக் கதைக்கருவாய் எடுத்தாளுவதில் நாடகப் படைப்பாளர்களுக்குப் பெருவிருப் பிருப்பது புலனாம்.

கதை முடிவு

நாடகத்துக்கான கதையை உருவாக்கிக்கொண்டதும் அதற்குரிய கதைமாந்தர்கள் படைக்கப்படுகின்றனர். நன்மையும் தீமையும் கலந்ததுதான் உலகமாதலின், நாடகங்களில் நன்மாந்தர்களும், எதிர் மாந்தர்களும் தோன்றுகின்றனர். நன்மை தீமைகளின் மோதலே கதையை வளர்த்துச் செல்கின்றது. இறுதியில், நன்மை வெல்லுமாயின் முடிவு இன்பமாகும்; தீமை ஓங்குமாயின் முடிவு துன்பமாகும். எனவே, நாடகங்கள் இன்பியல் நாடகங்கள், துன்பியல் நாடகங்கள் என இருதிறத்தனவாம். இன்பியலையும் துன்பியலையும் பரிதிமாற்கலைஞர் முறையே 'நற்பொருளிறுதி', 'தீப்பொருளிறுதி' என்று குறிப்பிட்டு, நாடகத் தலைவன் தனக்கேற்ற தலைவியை மணஞ்செய்துகொள்ளுதலும் மணிமுடி தரித்தலும் இவைபோல்வன பிறவுமாகியவை கொண்டு முடிவதை நற்பொருளிறுதி என்றும், நாடகத்தலைவன் தீமை பல அடைவதோடு உயிரையிழத்தலுமாகிய தீய முடிவுறுவதைத் தீப்பொருளிறுதி என்றும் விளக்குகிறார். வரலாற்று நாடகங்கள், மொழிபெயர்ப்பு நாடகங்கள் ஆகியவற்றில் துன்பியல் முடிவு சற்றுக் கூடுதலாய்க் காணப்படுகின்றது. சமூக, கற்பனை

நாடகங்களில் ஒன்றிரண்டு தவிரப் பிற அனைத்துமே இன்பியல் முடிவுகளையே கொண்டுள்ளன. பொதுவாகத் தமிழர்கள் துன்பியல் முடிவை விரும்புவதில்லை. லைலாமஜ்னு, அம்பிகாபதி. அமராவதி போன்று காதலர்கள் மடிந்தழியும் முடிவுள்ள கதைகளைத் திரைப்படமாக்கும்போதுகூட, இறந்த இருவரும் கை கோத்து விண்ணுலகம் செல்வது போன்ற மகிழ்வான காட்சியோடு முடிப்பதில்தான் விருப்பம் கொள்கின்றனர். சேக்ஸ்பியரின் துன்பியல் முடிவுகொண்ட 'லியர் மன்னன்' நாடகத்தைத் தமிழில் பெயர்த்த வடுவூர் கே. துரைசாமி ஐயங்கார் அந்நாடக முடிவை மாற்றி இன்பியலாய் முடித்துள்ளார். ஆங்கில நாடகங்களின் தாக்குரவால் துன்பியல் நாடகங்களைப் படைத்துள்ளபோதிலும் தமிழ்க்கவிதை நாடகாசிரியர்களின் நாட்டம் இன்பியல் முடிவாகவே உள்ளது என அறிய முடிகிறது.

சுவை

"உள்ளத்து நிகழ்ச்சியைப் பிறர்க்குப் புலப்படுத்துவது இயற்றமிழ்த் தன்மை; மொழிப்பொருளோடு இசையுஞ்சேர்ந்து நிற்க மனக்குறிப்பினை வெளிப்படுத்துவது இசைத்தமிழ்த் தன்மை; மொழிப்பொருள் இசையென்னும் இரண்டனோடு அவிநயமும் சத்துவமும் சேரவைத்து உள்ளத்தெழுந்த மனக்குறிப்பினைப் பிறர்க்குப் புலப்படுத்துவது நாடகத்தமிழின் தன்மை" என்பர், அறிஞர். நகைச்சுவை, அவலச்சுவை, இழிப்புச்சுவை, மருட்கைச் சுவை, அச்சச் சுவை, வீரச் சுவை, வெகுளிச் சுவை, இன்பச் சுவை, சமநிலைச் சுவை எனச் சுவை ஒன்பதாம். சுவை என்பது உணர்வு; அவ்வுணர்வு தோற்றுவிப்பது குறிப்பு; அக்குறிப்பின்வழித் தோன்றும் உடலசைவு மெய்ப்பாடு எனப்படும். ஒன்பது சுவைகளுள் சமநிலைச் சுவையை நீக்கி மற்றச் சுவைவழித் தோன்றும் மெய்ப்பாடுகளை,

> நகையே, அழுகை, இளிவரல், மருட்கை,
> அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை,என்று
> அப்பால் எட்டாம் மெய்ப்பா டென்ப

என்பார், தொல்காப்பியர். இம்மெய்ப்பாடுகளைத் தோற்றுவித்தற்கான சுவைகளைக்கொண்டு நாடகங்கள் இலங்க வேண்டும். தமிழ்க் கவிதைநாடகங்களில் அவலம், இன்பம், வீரம், வெகுளி, பெருமிதம் ஆகிய சுவைகளையே பரக்கக் காண முடிகிறது. இளிவரல், மருட்கை, நகை ஆகிய சுவைகள் அருகியே தென்படுகின்றன. "குறிப்பாக நகைச்சுவை மிகக்குறைந்த அளவிலேயே உள்ளது. ஆங்கிலத்தில் Comedy என்பது

நற்பொருளிறுதியை மட்டுமல்லாது, அந்நாடகத்தில் பிற சுவைகளினும் நகைச்சுவை மிகுதியாய் உள்ளது என்பதையும் சுட்டுவதாகும். நகைச்சுவை மிகுந்த தமிழ்க் கவிதைநாடகங்களை நம்மால் காண இயலவில்லை. முழு நீள நகைச்சுவை உரையாடல் கொண்ட கவிதைநாடகம் தமிழில் எதுவுமே இல்லை. நகைச்சுவை இடம் பெற வேண்டுமென்பதற்காகச் சில கதைமாந்தர்கள் படைக்கப்பட்டு நகைச்சுவை உரையாடல்கள் புகுத்தப்பட்டுள்ளனவே தவிர, நகைச்சுவை தன்னியல்பாய் இழையோடியுள்ள தன்மையை உணர முடியவில்லை என்பதை ஆய்வாளர் தக்க சான்றுகளுடன் நிறுவுகின்றார்.

பாத்திரப் படைப்பு

கதைக்கரு, கதைப்பின்னல், கதைமாந்தர் அமைப்பு, உரையாடல், சொல்லாட்சி, கருத்து, சுவைகள், காட்சியமைப்பு, கதைமுடிவு என நாடகக் கூறுகள் பல இருப்பினும் இவை ஒவ்வொன்றுபற்றியும் பொதுவான இயல்புகளை மட்டும் கூறி, கதைமாந்தர் படைப்புப்பற்றி மட்டும் இந்நூலில் ஆய்வாளர் விரிவாய் ஆய்வு செய்கிறார்.

நாடகத்தின் தேவைக்கு வேண்டிய கதைமாந்தர்களை மட்டுமே ஆசிரியர் படைத்துக்கொள்ளவேண்டும். தலைவன், தலைவி, முரணன் என்பார் முக்கியக் கதைமாந்தர்கள் எனவும், இவர்கள் செயல்களுக்குத் துணை நிற்போர் துணை மாந்தர்கள் எனவும் வழங்கப்படுகின்றனர். தலைவன், தலைவியர் சிறந்த பண்புகளைப் பெற்றவர்களாய்க் காட்டப்பெறுகின்றனர்; 'தீய பண்புகளைக் கொண்டவர்களாகவும் தலைமாந்தர்களுடன் மாறுபடுவதன் வாயிலாக நாடகச் செயலோட்டத்தை ஊக்குவிக்கும் சக்திகளாகவும் முரணர்கள் விளங்குகின்றனர்.'

நாடக மாந்தர்களை அவரவர்களுக்குரிய தனிப் பண்புகளுடன் படைத்து உலவவிடுவதில் தமிழ்க் கவிதை யாசிரியர்கள் வெற்றி கண்டுள்ளனர் என்பதை ஆய்வாளர் நன்கு விளக்கியிருக்கிறார். ஒவ்வொரு நாடகத்திலும் உள்ள கதை மாந்தர்களின் எண்ணிக்கையையும், அவர்களுள் முதன்மைக் கதைமாந்தர்கள், துணைக் கதைமாந்தர்களின் எண்ணிக்கை யினையும் ஆண், பெண் பாகுபாட்டுடன் ஆய்வாளர் பட்டியலிட்டுக் காட்டியிருக்கிறார்.

நாடகப் பெயர்கள்

தமிழ்க் கவிதைநாடகங்கள் மிகுதியும் தலைமாந்தர்கள் பெயர்களாலேயே பெயரிடப்பட்டுள்ளன. வரலாற்று நாடகங்களும் கற்பனைப் புனைவு நாடகங்களும் பெரும்பாலும் தலைவர்கள் பெயர்களில் அமைந்துள்ளன. தலைவியர் பெயரை நாடகப்பெயராய்க்கொண்ட தமிழ்க் கவிதைநாடகங்கள் மிகவும் குறைவு. இலக்கியத் தழுவல் நாடகங்கள் தலைவியர் பெயர்களாலேயே பெரும்பான்மை அமைந்துள்ளன.

கதைமாந்தர் பெயர்கள்

கதைமாந்தர்களின் நற்பண்பு, நற்செயல்களுக்கேற்பப் பண்பழகன், கனிமொழி, அருளாழி எனவும், தீய பண்பு தீய செயல்களுக்கேற்ப இகலன், உலுத்தன், காமுகன் எனவும் பெயரிடப்படும் போக்கு தமிழ்க் கவிதை நாடகங்களில் தென்படுகிறது. சில வேளைகளில், பண்புக்கும் செயலுக்கும் நேர்மாறான பெயர்களை இடும் உத்தியும் கையாளப்படுகிறது. தீய பண்புகள் மிகுதியும் பெற்றிருப்பவர்களுக்கு .இனியன் (அன்னி மிஞிலி நாடகத்தில்), அன்பழகன் (பொன்னி நாடகத்தில்) எனப் பெயரிடப்பட்டிருப்பதையும் காண முடிகிறது. இலக்கியத் தழுவல் நாடகங்களில் கதைமாந்தர்கள் தூய தமிழ்ப்பெயர் பெற்றுள்ளனர்.

உரையாடல்

நாடகம் கதைமாந்தர்களின் உரையாடலால் வளர்வது. உரையாடலுக்கு ஏற்றது நால்வகைப் பாக்களுள் அகவற்பா வேயாம்! அகவற்பா உரைநடைக்கு வெகு அண்மையது எனலாம். ஆதலின், கவிதை நாடகங்களுள் மிகப்பெரும்பாலானவை அகவற்பாவிலே அமைந்துள்ளன. பெரும்பாலான நாடகங்களில் அகவலின் இடையிடையே வெண்பா, கலிப்பா, வஞ்சிப்பா ஆகிய பாக்களும் ஆசிரிய விருத்தம், கலி விருத்தம், வஞ்சி விருத்தம், வஞ்சித் தாழிசை, கலித்தாழிசை, வெண்டுறை, கட்டளைக் கலித்துறை ஆகிய பாவினங்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன. வேங்கையின் மைந்தன் நாடகத்தில் பஃறொடை வெண்பாவும் இணைக்குறளாசிரியப்பாவும் பெருமளவில் உள்ளன. சில நாடகங்களில் இசைப்பாடல்கள் இடம் பெற்றுள்ளன. பொதுவாக, தமிழ்க் கவிதைநாடக ஆசிரியர்கள் தங்கள் படைப்புகளை அகவலில் இயற்றியுள்ளனர் என்று கூறுவது பொருத்தமாம்.

வாழ்த்து

இதுவரை கூறப்பட்ட கருத்துகள் இந்நூலுள் உள்ளவற்றின் பிழிவேயாம். இவ்வாறாக நாடகம்பற்றிய ஆய்வுக் கருத்துகளைக் கொண்டு இந்நூல் விளங்குகிறது. எளிய சொற்கள், தெளிந்த போக்கு, நறுக்குத் தெறித்தாற்போன்ற நடை, பொருத்தமான மேற்கோள்கள், ஆய்வாளர் கண்ட முடிவுகள் என ஓர் ஆய்வுக்குத் தேவையான அனைத்து நலங்களும் கொண்டு இதனை ஆக்கியுள்ள திரு. சேமுமு. முஹமதலியைப் பாராட்டுவதோடு, நாடக இலக்கியங்களை இன்னும் ஆய்ந்து, மேலும் பல நூல்களை இயற்றிச் சிறக்க வேண்டுமென உளமார வாழ்த்துகிறேன்.

நூல் ஆக்கம்	முனைவர் சேமுமு. முஹமதலி
வகைமை	நாடக இலக்கிய ஆய்வு
வெளியீடு	சம்யிட் பதிப்பகம், சென்னை. (1985)

24

சோழ மண்டல நாட்டுப்புறப் பாடல்கள்

மக்கள் தோன்றிச் சிந்தனையை வெளிப்படுத்தத் தொடங்கிய காலத்திலேயே தோன்றியது நாட்டுப்புற இலக்கியம். நாட்டுப்புறப் பாடல்கள் என்பன கிராம மக்கள், தம் வாழ்வில் நேரும் இன்பதுன்ப உணர்வுகளை, உணர்ந்தது உணர்ந்தவாறே, உணர்ந்த அளவிலேயே வெளிப்படுத்துவன. திரு. சங்கர் சென்குப்தா என்னும் அறிஞர், "நாட்டுப்புற இலக்கியம் கிராம மக்களின் பட்டறிவுக் கருவூலம்; அது மனிதனோடு மனிதனை நேரடியாக மட்டுமன்று, நெஞ்சோடு நெஞ்சைப் பிணைப்பது" என்பார். இப்பாடல்கள் ஏட்டிலே எழுதப்படாது, வாய்மொழி யாகவே, வாழையடி வாழையாய் வளர்ந்து வருவன; மக்கள் பிறப்புமுதல் இறப்புவரை உள்ள நிகழ்ச்சிகள் அனைத்தும் பாடுபொருள்களாகின்றன; உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை ஒளிவு மறைவு இன்றி வெளிப்படுத்துகின்றன. நாட்டுப்புறப் பாடல்கள், இலக்கணத்திற்குக் கட்டுப்படா; எனினும், இயல் பாகவே இசையோடு கூடியனவாய் அமைவன.

வழிவழியாய் வழங்கிவரும் நாட்டுப்புறப் பாடல்கள் தொகுக்கப்பெற்று அண்மைக் காலத்தில் நூல்கள் பல வெளிவந்துள்ளன. நாட்டுப்புறப் பாடல் - தொகுப்பே தவிர, அதைப் பாடியவர் யார் என்பதை அறிய இயலாத பழமை கொண்டது.

கவிஞர் திரு. வேணுகோபாலன் அவர்கள், நாட்டுப்புறப் பாங்கில் தாமே பாடல்களை இயற்றி, "சோழமண்டல நாட்டுப்புறப் பாடல்கள்" எனும் இந்நூலைப் புதிய படைப்பாய் நமக்களித்துள்ளார்.

சோழமண்டல அமைப்பு; அம்மண்டலத்தின் தலைநகராம் தஞ்சையின் எழில்; அத்தஞ்சைத் தரணியில் ஓடும் ஆறுகள்; சிறந்து விளங்கும் கோவில்கள்; கரை புரண்டோடும் காவேரி ஆறு;

ஏருழுது, பரம்படித்து, நடவு நட்டு, நீர் பாய்ச்சி, நெல் வளர்த்துப் பொங்கலிடும் பொலிவு; நீரெடுத்த பொன்வயலில் நெல்லெடுத்து வீசுதற்கு ஏரெடுத்துச் செல்லும் இளைய தம்பி; கோடை வெயில் தோலுரிக்க உழுது பயிர் விளைக்கும் உழவன்; வண்டியும் மாடும் போல வாழ்க்கையில் இணைந்து வாழும் உழவன் - உழத்தி;

நாற்று நடும் சின்னப் பெண்ணின் நளினம்; 'ஆடும் அழகாக' நாற்று நடும் காதலியைக் கண்டு களிப்புக்கொள்ளும் இளைஞன்; அத்தை மகன் வரப்போவதை நினைத்து மனம் துள்ளும் கன்னி; அத்தை மகன் அழகை ஆசை தீரக் கண்டு களிக்க முடியாத மாமன் மகள் தவிப்பு; மாமனைக் காணாது மயங்கிக் கலங்கும் மங்கை; மல்லிகைப்பூ விற்கும் மாமன் மகளை, காலிரண்டும் பின்னலிட வண்டுபோலச் சுற்றிச்சுற்றி, அவளழகைக் கண்டு சொக்கி நிற்கும் அத்தை மகன்; மாமனைப் பார்த்து மயங்கியும் பதுங்கியும், மறைந்தும் குலுங்கியும் நிற்கும் முறைப்பெண்; பனங்காட்டில் கால் கடுக்கக் காத்து நின்று, காதலனைக் காண முடியாது வேதனையோடு வீடு திரும்பும் காதலி; தான் முறைப்பெண் மீது கொண்டுள்ள காதலை அவள் அறியாதவளாய் இருக்கிறாளே என அங்கலாய்க்கும் இளைஞன்; காதல் கொண்டுள்ள ஆணும் பெண்ணும் ஒருவரையொருவர் நையாண்டி செய்தல்;

தஞ்சாவூர் மண்ணில் நடைபெறும் திருமணச் சிறப்பு; சித்திரையில் பெண் பார்த்துப் பங்குனியில் மணம் செய்து கொள்ளுதல்; அரும்பு மீசை கருகருத்து அழகைக் காட்டும் நேரத்திலும் துரும்பைக்கூடத் தூக்கி வீசத் துணிவில்லாத மச்சானின் கோழைத்தனத்தைக் கேலி செய்யும் மங்கை; மனைவிக்கு அஞ்சி நடுங்கும் கணவன்; பிறந்த வீட்டில் தான் பெற்ற நலன்களை மாமியார் வீட்டிலும் பெறக் கொடுத்து வைத்துள்ளதை எண்ணிப் பெண் ஒருத்தி அடையும் மகிழ்ச்சி; வேலை எதுவுமில்லாமல் வெட்டியாக மீசையை முறுக்கிவிடும் கணவனை நினைந்து அழுகின்ற பெண்; கள் குடித்தும், சூதாடியும் வாழ்வைக் கெடுத்துக்கொள்ளும் கணவனோடு வாழ நேர்ந்த கொடுமையை எண்ணித் துடிக்கும் மனைவி; சிங்கப்பூர் சென்ற கணவனைப் பற்றிய சேதி ஏதும் இல்லாமல் கண்ணீர் விட்டு அழும் பெண்; ஏமாளி மாப்பிள்ளை படுகின்ற பாடு; முக்கனியும் சக்கரையும் முத்தமிழும் சேர்ந்ததுபோல் இனிக்கும் தாலாட்டு;

கட்டைவண்டியில் - அதிலும் மொட்டை வண்டியில் – செல்லும் பட்டுக்கோட்டைப் பயணம்; ஐவேலிக் குளத்தில்

குளிக்கும் அருமை; கரை புரண்டோடும் காட்டாற்று வெள்ளத்தைக் கடக்கமுடியாத தவிப்பு; குப்பைகூளம் அத்துணையும் அள்ளி வீசும் ஆடிக்காற்றின் வேகம்;

தஞ்சை மண்ணில் தழைக்கும் மரங்களின் சிறப்பு; காயும் கனியுமாய் நிற்கும் மரங்கள் சூறாவளியில் அடியோடு சாய்தல்; புயலாலே கடல்நீர் ஊரினுள் நுழையக் குடும்பமெலாம் சந்தியில் நிற்கும் அவலம்; கரம்பையும் காடும் மணல்வெளியாகின்ற வறட்சி;

ஏழை உழவர்களின் மனச்சுமை; அவர் வாழ்வு வளம் பெற வேண்டுமெனும் வேட்கை; உழைத்தும் உரிய பயன் பெறாமல் உயர வழியின்றித் துடிக்கும் குடிசைவாழ் மக்கள்;

உலகத்தோடு ஒன்றி வாழப் பழகுதல்; அப்பன் மகனுக்குக் கூறும் அறிவுரை; தன்னலம் கருதாது குடும்ப நலனைப் பொன்னெனப் போற்றி வாழும் குடும்பத்தின் மூத்த பிள்ளை; பட்டணத்திற்குச் சென்று பண்பிழந்து, 'போன வழி சரியில்லை' என்பதைப் புரிந்து பட்டிக்காட்டிற்குப் பறந்து திரும்பும் இளைஞன்; பட்டம் பெற்றுப் பதவிக்காகப் பட்டணம் சென்று வாழ்ந்தாலும் ஒய்வுக்குப்பின், 'சொந்த ஊர் வந்திடுங்கோ' எனும் பாச அழைப்பு;

அருள் வழங்கும் சந்நிதியில் துயரை மறந்து பாடிக் கொண்டாடும் குல தெய்வத் திருவிழா;

கவிஞரின் சொந்த ஊரான தென்றல் விளையாடும் தென்னம நாடு

என, இந்நூலிலுள்ள பாடல்கள் அனைத்தும் நாட்டுப்புறப் பாடல்களுக்கான பாடுபொருளையே கொண்டுள்ளன. இயற்கை, தொழில், உழைப்பு, கிராமிய எளிய வாழ்க்கை, விளையாட்டுகள் என நாட்டுப்புற மக்களோடு தொடர்பு கொண்டனவாய் ஒவ்வொரு பாடலும் புனையப்பட்டுள்ளது. நாட்டுப்புறப்பாடல் தன்மைகளைக் கவிஞர் தம் பாடல்களில் முற்றிலுமாய் இழையோடவிட்டிருக்கிறார். இதை இயற்றியவர் இவர் என்று சொல்லாமல், பாட்டை மட்டும் படித்தால், கேட்பவர், 'இது நாட்டுப்புறப் பாடல்' என்று சொல்லுமளவுக்குக் கவிஞரின் பாடல்கள் நாட்டுப்புறத்தன்மை கொண்டுள்ளன.

நூலின் இறுதியில், 'மனிதவேலி' என்றுள்ள பகுதியில் 36 அருமையான இசைப்பாடல்களைத் தந்துள்ளார். அவை தத்துவ விளக்கம் போல் பொருள் பொதிந்தவை; ஆயினும், நாட்டுப்புறப் பாடல் சாயலைக் கொண்டுள்ளன.

நாட்டுப்புறப்பாடல் முறையிலேயே கவிஞர் வேணு கோபாலன் தம் பாடல்களைப் பாடுகிறார்.

'சோழ வளநாடு சோறுடைத்து' என்பது பழமொழி.

காசா படியளந்தா கனத்தநேரம் ஆகுமின்னு
அரிசியா படியளந்தா அதிகநேரம் ஆகுமின்னு
நெல்லா படியளந்தா நீண்டநேரம் ஆகுமின்னு
சோறா படியளக்கும் சோழமன்னர் தேசமிது

என்பது ஒரு நாட்டுப்புறப்பாடல். இதைக் கவிஞர் வேணு கோபாலன் சுருக்கமாகவும் தெளிவாகவும் நாட்டுப்புறப் பாடல் பாங்கிலேயே,

சோழன் பிறந்த மண்ணில்
சோற்றுக்குப் பஞ்சமில்லை;
சொர்க்கத்தைப்போல் நமக்குச்
சொந்தமோ கொஞ்சமில்லை; (பக். 17)

என்கிறார்.

நாட்டுப்புறப்பாடல்களில் மண்ணின் மணம் முதலிடம் பெறும். தஞ்சை என்றாலே வெற்றிலை போடும் மக்கள் கண்முன் தோன்றுவர். கும்பகோணம் சீவல், ஆடுதுறை வெற்றிலை என்பன அன்றாடம் நாம் கேட்கும் பெயர்கள். தஞ்சை மக்களின் எழிற்கோலம் என்ன தெரியுமா? வேணுகோபாலன் கூறுகிறார்

வாய்முழுதும் வெற்றிலையாம்
வழிந்துஓடும் இரத்தினமாம். (பக். 20)

வாய் சிவப்பாய் (இரத்தினமாய்) மட்டும் இல்லை; சாறு உதட்டில் வழிந்துகொண்டே இருக்கிறது என்பதை 'வழிந்தோடும் இரத்தினமாம்' என அருமையாய்க் குறிப்பிடுகிறார்.

மண்ணின் சிறப்பை - பெருமையை - கும்மியடித்துப் பாடுவது மிகவும் சிறப்பாய் உள்ளது. பாடலடிகளைக் கண் பார்க்கும்போதே வாய் பாடத் துடிக்கின்ற அருமையான பாடல்.

கோடி அழகின் கலைகள் மலர்ந்திடும்
கூடமும் கோபுரமும் – குளிர்க்
கோடை நிலவின் எழிலில் ஒளிவிடும்
மாடமும் மாளிகையும்— (பக். 19)

என்ற அடிகளை உண்மையில் நானே பலமுறை பாடிச் சுவைத்தேன். நீங்களும் பாடி மகிழுங்கள். அருமையான பல கருத்துகள் அடங்கியுள்ள இக்கும்மிப் பாடலில் விருந்தோம்பற் சிறப்பைக் கவிஞர் நம் நெஞ்சில் இடம் பெறும் வகையில் பாடியிருக்கிறார்.

வந்த விருந்தினர் நெஞ்சில் இடம்பெற
வாழ்க்கை இருக்குமடி – மனம்
வாடும் உறவினர் வந்துநின் றால்பொருள்
வாரிக் கொடுக்குமடி... (பக். 20)

தஞ்சையில் எவ்வெவ்வூர் எவ்வெவற்றிற்குப் பெயர் பெற்றவை என்பதை ஒரு பாடலில் அருமையாய்த் தொகுத்தளிக்கிறார்.

பட்டுக்குத் திருப்புவனம்
பாத்திரங்கள் கும்பகோணம்
வெற்றிலைக்குக் கண்டியூரு
வாழையிலை திருவையாறு
பாக்குக்குப் பட்டுக்கோட்டை
பந்தலுக்கு ஒரத்தநாடு (பக். 27)

நாட்டுப்புறப்பாடல்கள், சொன்ன ஒரு செய்தியைப் பல்வேறு வகைகளில் திரும்பத் திரும்பச் சொல்லுவதற்கு இடமளிக்கும். அடிகளைத் திரும்பத் திரும்பப் பாடுவதன்மூலம் கருத்து வலுப்பெறுகிறது; கேட்கவும் இனிமை பயக்கிறது. இவ்வுத்தியை வேணுகோபாலன் சிறப்பாக ஆள்கிறார்.

தஞ்சாவூரு சந்தையிலே
தைரு விற்கும் பொண்ணு – அங்கே
தம்பிக் கோட்டை மாமன் வந்தால்
தள்ளி நிற்கும் கண்ணு...

இந்தப் பாடல்,

பட்டுக் கோட்டைச் சந்தையிலே
பாக்கு விற்கும் பொண்ணு...

ஒரத்த நாட்டுச் சந்தையிலே
உளுந்து விற்கும் பொண்ணு... (பக். 52)

என இப்படித் தொடர்ந்து, எத்தனை ஊர்களை வேண்டுமானாலும் சொல்லிச் செல்ல இடங்கொடுக்கிறது. ஊருக்கு ஊர், விற்கும் பொருள் மாறும்; மாமன் ஊரும் மாறும். இப்படி மாற்றி மாற்றிச் சொல்லும்போது, அடுத்து எந்த ஊரைச் சொல்வாரோ என்று எதிர்பார்க்கும் ஆவலைத் தூண்டுகிறது. எண்ணம் நீளும்வரை நாம் எத்தனை ஊர்ச் சந்தைக்கு வேண்டுமானாலும் போய்க்கொண்டே இருக்கலாம்.

தாலாட்டு, நாட்டுப்புறப்பாடல் வகையது. பாச உணர்வை வெகு சிறப்பாய் வெளிப்படுத்துவது, தாலாட்டு. தன் குழந்தையை எப்படியெப்படியெல்லாம் உயர்வாக வைத்துப் பார்க்க முடியுமோ அப்படி அப்படியெல்லாம் பார்ப்பது, தாயுள்ளம். கவிஞர் பெரி. சிவனடியான்,

நிலவின் ஒளியெடுத்து நின்முகத்தைத் தொட்டானோ
பலவின் சுளையெடுத்துப் பதிந்தானோ கன்னத்தில்
மூக்கு கிளிமூக்கோ முனைமூரியா முந்திரியோ
நாக்கை நறுந்தமிழில் நனைத்தெடுத்துச் சேர்த்தானோ?—

எனத் தாலாட்டுப்பாடல் பாடியுள்ளார். தாலாட்டு, 'எழுதிப் படிக்காமல் இதயம் இசைக்கும் பாட்டு' ஆகும்.

வேணுகோபாலன் சோழ நாட்டைப் பாடுவதால், சோழர் குலக் கொழுந்துக்குத் தாலாட்டுப் பாடுகிறார்.

சோழர் குலக்கொழுந்தே சுந்தரனே சூரியனே
ஆளப் பிறந்தவனே அள்ளவரும் தெள்ளமுதே
பாட்டன் வழிநடந்து பாராள வந்தவனே
நாடுகள் அத்தனையும் நீயாள வேணுமடா (பக். 42)

என்ற ஆசையைத் தாயாய் நின்று பாடுகிறார்.

காதல் அடைதல் உயிர் இயற்கை. நாட்டுப்புறக் காதல் பாடல்களில் சொல் இறுக்கமின்றி, கருத்துக்குப் புனைவு ஏதுமின்றி, எண்ண ஓட்டம் எழுந்தது எழுந்தவாறே இடம் பெற்றிருப்பதைக் காணமுடியும். காதலி நாற்றினைச் சேற்றிலே நடுகிறாள். அந்தப் பயிராய்த் தானிருந்தால் அவள் கை படும் பாக்கியம் தனக்குக் கிடைக்குமே என்று காதலன் நினைக்கிறான்!

நாத்துநடும் சின்னப்புள்ளே — என்னையும்
சேத்துநட லாகாதோ?

இஃது ஒரு நாட்டுப்புறப்பாடல். காதலன் காதலியின் கைக்குள் கட்டுண்டு கிடக்க வேண்டும்; எப்படியாவது அவள் கை தன்மேல் படவேண்டும் எனத் தவிக்கிறான்.

கருக்கரிவாள் கைக்கொண்டு
கழனிசெல்லும் பெண்மயிலே
அறுத்துவிட்டாய் என்னுளத்தை
அஞ்சனக்கண் வாளாலே!

இப்படிப் பாடுகிறார், பெ. தூரன்.

நாட்டியமாடிச் செல்கிறாள், மங்கை. அவளைக் காதலிக்கும் வீரன், அவள் சென்ற பிறகு அவளாடிய இடத்தில் கால் சுவடு இருக்கிறதா எனப் பார்க்கிறான். பளிங்குத்தரை. சுவடு எங்கே இருக்கப்போகிறது?

சித்திரத்தாள் அடிச்சுவட்டைத் தேடிப் பார்த்தான்;
தென்றலது சென்றதற்குச் சுவடு ஏது?
கைத்திறத்தால் தரைதடவிப் பார்த்தான்; அன்னாள்
கால்பட்ட இடத்தில் இளஞ்சூடு கண்டான்!

காதலி கால் பட்ட இடத்தைத் தடவிப்பார்ப்பதிலே தனி இன்பம்! கவிஞர் கண்ணதாசனின் 'மாங்கனி' காவியத்தில் இக்காட்சியைக் காணுகின்றோம்! காதலர் உள்ளமே இப்படித்தான் அவாவும் போலும்! கவிஞர் வேணுகோபாலன் பாடுகிறார்

வயலுக்குள்ளே காலை வைத்தாள்
வளையல் சத்தம் கேட்க – அந்த
வரப்புமேலே நானும் வந்தேன்,
அவளும் திரும்பிப் பார்க்க; (பக். 48)

காதலியைப் பார்க்கிறான். அவள் சிரிப்பின் அழகும் அவள் பேச்சின் இனிமையும் அவனைக் கவர்ந்திழுக்கின்றன.

பல்லழகு என்ன! முத்துப்
பல்லக்கையே காட்டுகிறாள்!
சொல்லழகு என்ன! தேனைச்
சொட்டுச் சொட்டாய் ஊற்றுகிறாள்.... (பக். 43)

அந்தச் சின்னமலர் அவனுக்கு இனிக்கிறாள்.

தான் விரும்புபவனைக் கன்னி முத்தமிடுகிறாள் என்பதை நயம் கொப்புளிக்கக் கவிஞர் எழுதுகிறார்.

கழுத்தில் தாலிஏற வேண்டிக்
கன்னி போரைத் தொடுத்தாள்; – அவன்
கன்னம் ரெண்டும் வீங்கியது,
காளை ஏற்று மகிழ்ந்தான். (பக். 30)

நாட்டுப்புறப் பாடல்களே பிற்காலத்தில் செவ்விலக்கியங் களாய் வடிவம் பெற்றன. செவ்விலக்கியங்களில் காணப்படும் அரிய கருத்துகளை எளிய முறையில் நாட்டுப்புறப் பாடல்கள் சொல்லுகின்றன.

இலமென்று அசைஇ இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும்

என்பது திருக்குறள். நிலத்தில் எல்லாம் இருக்க அதை அறியாமல் எம்மிடம் ஒன்றுமில்லையே என்று சோம்பித் திரிபவர்களைக் கண்டு நிலமங்கை சிரிக்காது என்ன செய்வாள்?

இக்குறளுக்கு அரிய விளக்கம்போல் டாக்டர் கலைஞர் அவர்கள் பாடல் ஒன்று அமைந்துள்ளது.

எதுவும் இல்லையென ஏங்கியிருப்பாரைக் கண்டு,
எது இல்லை என் மகனே!
வெடித்திருக்கும் என் வயிற்றில் மண்வளம்பார்!
வெகுதூரம் அகழ்ந்திட்டால் வைரமணி வழங்கிடுவேன்.

வெகுளியாய் வாழாமல் வேளாண்குடி பெருக்கிடு;
எனச் சிரித்து நிலமடந்தை நிற்கின்றாள்

என்பது கவிஞரின் விளக்கம். கவிஞர் வேணுகோபாலன்,

பொன்னாக விளையுதடி
பூமியெல்லாம் மின்னுதடி
கண்ணாக உழைத்தகைகள்
காசுபணம் எண்ணுதடி! (பக். 34)

என மேற்சொன்ன குறளின் பொருளை உள்ளடக்கியதாய்ப் பாடலை அமைந்திருக்கக் காண்கிறோம்!

காக்கை கரைந்தால் விருந்து வரும் என்பது நம்பிக்கை. தலைவன் பிரிந்திருந்த காலத்தில் காக்கை கரைய, அதனால் தலைவன் வருவான் என்ற மகிழ்ச்சியால், காக்கைக்கு விருந்து படைக்கப்போவதாகத் தலைவி மகிழ்ந்திருப்பதுபற்றி ஒரு பாடலை நச்செள்ளையார் என்ற பெண்பாற்புலவர் பாடினார். காக்கைபற்றிய இச்செய்தியைப் பாடியதால் அவர் காக்கை பாடினியார் நச்செள்ளையார் என்றே வழங்கப்பட்டார். இக்கருத்தை வேணுகோபாலன், 'அத்தை மகன்' எனும் தலைப்பில் அழகாகப் பாடியுள்ளார்.

காலையிலே காகம்வந்து
கத்தியதும் இதுக்குத்தாண்டி!
கன்னிமகள் என்னைத்தேடி
காளையவன் வருகிறாண்டி! (பக். 28)

நாட்டுப்புறப்பாடல்கள் இசையுடன் பாடவேண்டியவை. எந்த உணர்வைப் பாடல் கொண்டிருக்கிறதோ, அவ்வுணர்வை நாம் அடையும் முறையில் வேணுகோபாலன் பாடல்களைப் படைத்திருக்கிறார். திடீரென வானம் இருள்கிறது; பெரும் மழை கொட்டுகிறது; காட்டாறு தறிகெட்டு ஓடுகிறது; அக்காட்டாற்றைக் கடக்க முடியாது தவிக்கும் பெண் ஒருத்தி தன் உள்ள உணர்வுகளை எடுத்துரைக்கும் பாடல் ஒன்று,

வானம் வெளுக்கவில்லை,
வந்தமழை நிற்கவில்லை;
மேகம் கலையவில்லை,
மின்னல்இடி குறையவில்லை;
சூரியனும் தோன்றவில்லை,
சூழ்ந்தஇருள் விலகவில்லை. (பக். 63)

ஆற்றைக் கடக்க வழி காணாது தவிக்கும் பெண்ணின் தவிப்பு, படிக்கும் நமக்கும் ஏற்படுகிறதன்றோ? இதே போன்றே எல்லாப் பாடல்களும் பொருந்திய இசையில் உள்ளன.

நாட்டுப்புறப்பாடல்களில் பெரும்பாலும் உவமையணி ஒன்று மட்டுமே இருக்கும். அவ்வுவமைகளும் அவர்கள் கண்முன் காணும் பொருள்களை மட்டுமே உள்ளடக்கியனவாய் இருக்கும்.

வேணுகோபாலன் அவர்களும் இவ்வாறான உவமைகளையே தம் பாடல்களில் ஆண்டுள்ளார். வயலிலே வேலை செய்த பெண்கள் மேனி முழுதும் சேறு படிந்து கறுத்த நிறத்துடன் இருக்கிறார்கள். அவர்கள் பொன் நிறத்தவர்தாம்; ஆனாலும், சேறு படிந்ததால் கறுப்பு வண்ணமாய் இருக்கிறார்கள். அவர்கள் அனைவரும் ஐவேலிக் குளத்திலே குளித்து எழுகின்றார்கள். எவ்வாறு?

நெய்வேலி நிலக்கரிபோல்
இருந்ததடி அங்கம்; – நம்ம
நீராடி வெளியில் வந்தால்
உடம்பு இப்ப தங்கம்! (பக். 25)

நெய்வேலிச் சுரங்கத்தையும் கோலார்ச் சுரங்கத்தையும் உவமையில் அருமையாய் இணைத்துவிடுகிறார்.

ஏழை மக்கள் வாழ வழியின்றிப் பெருஞ்சுமைப்படுகிறார்கள். அந்நிலையில் ஏதோ கொஞ்சம் கிடைத்தால் வன்நெஞ்சர்கள் அதையும் சுரண்டிக்கொள்கிறார்கள். இதற்கு வேணுகோபாலன் பயன்படுத்தியுள்ள உவமை நம்மைப் பெரிதும் சிந்திக்கவைக்கிறது.

கொக்குத் தலையில் பனம்பழத்தை வைத்துக்
கூவியே விற்றிடச் சொன்னான் – அதைக்
கொள்ளை யிடவழி செய்தான். (பக். 32)

மனிதவேலி எனும் தலைப்பில் பல அரிய கருத்துகள் இன்றைய நடைமுறைக்கு ஏற்றவாறு இசைப்பாடல்களாய் ஆக்கப்பட்டுள்ளன.

வாழ்க்கைத் தோட்டத்தில் மண மலர்கள் பூத்துக் குலுங்கிட மனிதர்கள் அத்தோட்டத்திற்கு வேலிகளாய் விளங்கவேண்டும்.

அறிவே உலகத்தின் ஆட்சி; இன்று அதுவே நாம் காணும் காட்சி எனும் தெளிவு பிறந்திட வேண்டும்.

படைப்பின் இயல்பைப் புரிந்து, தன் நலம் துறந்து பிறர் நலம் பேணி வாழ வேண்டும்.

மூடப் பழக்கங்களை ஒழித்து முற்போக்கு உலகினைச் சமைக்க எழுச்சிகொள்ள வேண்டும்.

உழைத்து முன்னேறிடும் கடமையை ஒவ்வொருவர்க்கும் உணர்த்த வேண்டும்.

செல்வம் இருந்தால் உலகம் நம்மை மதிக்கும்; இல்லையேல் அது நம்மை மிதிக்கும். ஆதலின்,

வரவுக்கு வழியொன்றைத் தேடு – வீண்
செலவிடும் பாதையை மூடு.

ஏழையின் சிரிப்பு சிரிப்பா? இல்லை; அது எரிகின்ற நெருப்பு. அஃது உலகக் கொடுமையைக் கண்டு கொதிக்கும் எரிமலைச் சிரிப்பு.

கடவுள் என்றாலும் என்ன – இங்கு .
மனிதன் என்றாலும் என்ன – அவன்
கருணையால் நாளும் கடமையால் வாழவேண்டும்.

நல் எண்ணமும் அறிவும் எழுச்சியும் நாட்டின் வாட்டத்தைப் போக்கிட வேண்டும்.

சொந்தப் புத்தியும் இல்லை; சொன்னால் கேட்பதும் இல்லை. இந்தப் பொல்லாப் போக்கினை மாற்றிட வேண்டும்.

என, இவை போன்ற கருத்துச் செறிந்த தேன்கூடாய் இசைப் பாடல்கள் இனிக்கின்றன.

பறவைகள் வெவ்வேறு வகையின ஆயினும் அவை சாதி வகுத்துக்கொள்ளவில்லை; சமயம் வகுத்துக்கொள்ளவில்லை. மேல் கீழ் என்ற பாகுபாடும் இல்லை. பாவேந்தர் பாரதிதாசன்,

இட்டதோர் தாம ரைப்பூ
இதழ்விரித் திருத்தல் போலே,
வட்டமாய்ப் புறாக்கள் கூடி
இரையுண்ணும்; அவற்றின் வாழ்வில்
வெட்டில்லை, குத்தும் இல்லை—

எனப் புறாக்கள் ஒத்துண்டு வாழ்வதைப் பாடுகிறார். பறவைகளிடமுள்ள அரிய குணங்களை மாந்தரினம் கற்று வாழ வேண்டும் என விழைகிறார், நம் கவிஞர் வேணுகோபாலனார்.

நாடுவிட்டு நாடுவந்து
நல்லஇடம் தேடிநின்று
கூடுகட்டும் பறவைகளே – உங்கள்
கொள்கைகளை எங்களுக்குக்
கொஞ்சம் சொல்லுங்களே! (பக். 56)

என்ன இனம், என்ன நிறம் என்ற பேதம் ஏதுமில்லையே என்று பறவைகளைக் கேட்பதன் வாயிலாகச் சாதி சமயப் பிணக்கற்ற நல்லிணக்கச் சமுதாயத்தைக் காண விழையும் கவிஞரைக் காண்கிறோம்.

ஏழை எளியவர்கள்
இதயத்தில் இடம்பிடித்து
ஊழல் அரசியலில்

உள்ளிருந்து வேரறுத்துக்
காலத்தை நீவெல்வாய் – வளம்
காணவழி யைச்சொல்வாய் (பக். 64)

என அரசியலில் தூய்மையும் துணிச்சலும் வேண்டும்; அதற்காக இளைஞர்கள் உறுதியுடன் உழைக்கவேண்டும் எனத் தம்பிக்கு அறிவுறுத்துவதன் வாயிலாகக் கவிஞர் தூய்மையான அரசியல்வாதி யாகக் காட்சியளிக்கிறார்!

அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்
கேடும் நினைக்கப் படும்

என்பது, திருக்குறள். பொறாமை மனம் கொண்டவனிடத்துச் செல்வம் சேர்தலும், நல்ல மனம் உடையவன் கேடு அடைதலும் ஆராயப்பட வேண்டியனவாகும் என்கிறார், திருவள்ளுவர். கவிஞர் வேணுகோபாலனாரோ, நல்லவர்கள் அல்லலுறுவதும் அல்லவர்கள் வளமாய் வாழ்வதும் கண்டு பொறுத்துக் கொண்டிருப்பதில் பயனில்லை; பொங்கியெழ வேண்டும் என்கிறார்.

பொய்யின் பெருங்கடலில்
நீச்சல் அடிப்போர்க்குப்
பையில் பணம்வந்து சேருதடா – இனிப்
பொறுக்க முடியாது
புலம்பும் இதயங்கள்
பொறுமை காட்டியது போதுமடா (பக். 104)

இங்கே வஞ்சனையும் சூதும் வாழ்விழந்து அழியவேண்டு மெனும் கவிஞரின் ஆசை வெளிப்படுகிறது.

அன்பிற்கு மரணமில்லை – அது
அலைமோதும் இதயத்தில் அழிவுமில்லை;
இன்பத்தில் குறைவுமில்லை – அதற்கு
இணையாக உலகத்தில் எதுவுமில்லை (பக். 120)

என உலகம் அன்பின் வழியதாய் இயங்கவேண்டும் என மக்களுக்கு அறிவுறுத்தும் கவிஞராய் வேணுகோபாலனாரைக் காண்கிறோம்.

நாட்டுப்புறப்பாடல்கள், இயற்றியவர் யார் என்று தெரிதற்கியலாதவை. இந்நூலிலுள்ள பாடல்களை இயற்றியவர் யார் என அறிகிறோம்; ஆதலின், இது புதிய படைப்பாகிறது. நாட்டுப்புறப்பாடல்களில் சொற்கள் பெருமளவில் பேச்சு வழக்கினவாய் இருக்கும். வேணுகோபாலனார் பாடல்களில் பெருமளவு இலக்கிய வழக்குச் சொற்கள் ஆளப்பட்டிருப்பதால் அந்த வகையிலும் இது புதுமைப் படைப்பாகிறது. ஆசிரியர்

பெயருடன் கூடிய நாட்டுப்புறப்பாடல்களுக்கு இந்நூல் அடித்தளமாய் அமையட்டும்.

பாடல்களில் தமிழ் வளம் செழித்துள்ளது; பல்வேறு இசைகளில் பாடுதற்கேற்ற வகையில் பாடல்கள் தேனாய் இனிக்கின்றன.

இந்தப் பாடலே சிறந்தது எனத் தனியே பிரித்தெடுத்துச் சொல்லற்கியலாதவாறு நூலிலுள்ள எல்லாப் பாடல்களுமே சிறப்புடையனவாய் விளங்குகின்றன.

கிராமிய இசை மேடைகள், செவ்விசை மேடைகள் என இருநிலை மேடைகளிலும் இப்பாடல்களைப் பாடலாம். இசை மேடைகளில் இப்பாடல்கள் ஒலிக்கவேண்டுமென விழைகிறேன்.

கவிஞர் வேணுகோபாலனார் இதுபோன்று இன்னும் பல நூல்களை வெளியிட்டுச் சிறக்க வேண்டுமென வாழ்த்துகிறேன்.

நூல் ஆக்கம்	கவிஞர் ஒரத்தநாடு வேணுகோபாலன்
வகைமை	நாட்டுப்புறவியல்
வெளியீடு	பொன்முடிச் சோழன் பதிப்பகம், சென்னை. (1995)

25

வடார்க்காடு நாட்டுப்புறப் பாடல்கள்

இலக்கியம் என்பது எக்காலத்திலும் ஒரே அமைப்பாய் இருப்பதில்லை. இது எல்லா நாட்டு, எல்லா மொழி இலக்கியத் திற்கும் பொருந்தும். இலக்கியத்தின் தன்மை, வடிவம், யாப்பு, கருப்பொருள் முதலியன காலத்திற்குக் காலம் வேறுபடும் இயல்புடையவை. ஒரு காலத்தில் போற்றப்பட்ட ஒன்று பிற்காலத்தில் சிறப்பிழக்கலாம்; ஒருகாலத்தில் சிறப்பைப் பெறாத ஒன்று வேறொரு காலத்தில் போற்றப்படலாம். எது, எவ்வாறா யினும் நடுவுநிலைக் கருத்தும் உண்மைத்தன்மையுமே ஒரு படைப்பினை நிலை பெறச் செய்யும். இத்தகைய படைப்புகள் சமுதாயப் பொருத்தப்பாட்டினையும் கொண்டிலங்கும்.

தமிழிலக்கியத்தைப் பொறுத்தவரை ஒருகாலத்தில் எல்லாக் கருத்துகளுமே ஆசிரியப்பாவால் சொல்லப்பட்டன. பிறகு, வெண்பாவில் சொல்லுவது சிறப்பிடம் பெற்றது. சிந்தாமணி, கம்பராமாயணம் போன்றவற்றால் விருத்தப்பாடலால் கருத்தைச் சொல்லுவது முதலிடம் பெறலாயிற்று. புதுக்கவிதைகள் இன்று பரவலான இடத்தைப் பிடித்து முந்த முயலுகின்றன. புதுக்கவிதை ஒரு கவிதையாகுமா என்ற வினாவும், புதுக்கவிதை ஏன் கவிதையாகாது எனும் எதிர்மொழிகளும் நம் காதில் விழுகின்றன. இலக்கிய வளர்ச்சிக்கும் நிலைபேற்றுத் தன்மைக்கும் இத்தகைய விவாதங்கள் இன்றியமையாதவையே. இதே போலத்தான் நாட்டுப்புறப்பாடல்களும் ஒரு காலத்தில் இலக்கிய வகையில் சேர்க்கப்படாமல் ஒதுக்கப்பட்ட நிலையிலிருந்தன. படிக்காத, பாமர மக்கள் பாடும் நாட்டுப்புறப்பாடலில் என்ன இருக்கப்போகிறது என எண்ணி, அதை ஓர் இலக்கியமாய்க் கருதாமல் அலட்சியப்படுத்திய காலம் அகன்றுவிட்டது. இன்று நாட்டுப்புற இலக்கியங்கள் தலைமையான இடத்தைப் பெற்று வருகின்றன. பல்கலைக் கழகங்கள் தங்கள் பாடத் திட்டங்களில் நாட்டுப்புற இலக்கியத்திற்குச் சிறப்பிடம் தருகின்றன. அதுபற்றிய

ஆய்வுகள் வெளிவந்தவண்ணம் உள்ளன. இலக்கிய வரலாற்றில் காலந்தோறும் ஏற்படும் இவ்வகை மாற்றங்கள் போற்றி வரவேற்கப்பட வேண்டிய ஒன்றேயாம்.

நாட்டுப்புறப்பாடல்கள், படிக்காத பாமர மக்களால் பாடப்பட்டு வருபவை; காலங்காலமாய் வாய்மொழியாகவே வழங்கப்பட்டு வருபவை; இலக்கண வரம்புக்குட்படாதவை என்பனவே கொண்டு அவற்றை ஒதுக்குதல் பொருத்தமாகாது. நாட்டுப்பாடல்களின் தன்மை, சிறப்பு ஆகியன அறிந்து அவற்றைப் போற்றுவதே நலம்.

"இலக்கியத்தைப் புரிந்துகொள்ள நாட்டின் இதயபாவம் தெரியவேண்டும். கிராமத்துப் பாட்டுகளே அதற்குச் சான்றுகள்" என்பது புதுமைப்பித்தன் அவர்களின் கூற்று.

"ஒரு நாட்டுப் பண்பாட்டின் முக்கியக் கூறு அந்நாட்டில் வழங்கும் நாட்டுப்பாடல்கள்: இலட்சக்கணக்கான கிராமிய மக்களின் இசையிது. சோர்ந்திருக்கும் விவசாயிகளுக்கு உற்சாகத்தையும், அவர்கள் இல்லக்கிழத்திக்கு மட்டிலா மகிழ்ச்சியையும் தரவல்லன இந்த நாட்டுப்பாடல்கள். கிராம மக்களிடையே அன்றாடம் காணும் உள்ளுணர்வுகள் இப் பாடலிலே பிரதிபலிக்கும்" என்கிறார், இசைப்பேராசிரியர் திரு. பி. சாம்பமூர்த்தி.

கள்ளங்கபடமற்ற வெள்ளை உள்ளங்களின் உணர்ச்சி வெளிப்பாடே நாட்டுப்புறப்பாடல்கள். அவற்றில் எளிமை இருக்கும்; இனிமை இருக்கும்; இசை இருக்கும்; உணர்ச்சி இருக்கும்; உண்மை இருக்கும். தமிழ்நாட்டு மக்களின் உண்மையான வாழ்க்கை நிலையைக் கண்டறிய இந்நாட்டுப்புறப் பாடல்களை அணுகுவதும் ஆராய்வதும் சிறந்த வழியாகும்.

இக்கருத்துகளை மனத்திற்கொண்டே டாக்டர் மா. கோதண்டராமன் அவர்கள் வடார்க்காடு மாவட்ட நாட்டுப்புறப் பாடல்கள்பற்றிய அரியதோர் ஆய்வு நிகழ்த்தி இந்நூலை உருவாக்கியுள்ளார்.

நாட்டுப்பாடல், நாட்டார் பாடல், நாட்டுப்புறப்பாடல் எனும் மூன்று பெயர்களையும் நன்கு ஆய்ந்து, அவற்றுள் நாட்டுப்புறப்பாடல் எனும் பெயரே பொருத்தமுடையது என ஆசிரியர் நிறுவியிருக்கிறார். நாட்டுப்புறப்பாடல்கள் ஆக்கப் பெறுபவை அல்ல; மக்களின் நெஞ்சினின்றும் தாமாய் எழுபவை, உணர்ச்சியால் உந்தப்பட்டு, பாடுபவர் தாம் நினைத்ததை நினைத்தபடியே பாடிவிடுவதால் நாட்டுப்புறப் பாடற்சொற்கள்

செம்மைத் தன்மையுடையனவாய் இருப்பதில்லை. ஆனால், செவ்வியல் இலக்கியங்களிலோ கவிஞர் நினைந்து உணர்ந்து பாடுவதால் சொற்கள் செம்மை பெறுகின்றன.

அக இலக்கியங்களில் தலைவனும் தலைவியும் பகலில் ஒருவரையொருவர் கண்டு உறவாடுதல் பகற்குறி எனும் துறையாம். பகற்குறிக்கான இடம் அறிவிக்கப்பெறும் பாடல்கள் பல உண்டு. "எம்மூர்க்கு அருகே ஓர் ஊருணி உள்ளது; அதன் அருகே ஒரு சிறு கான்யாறு ஓடுகிறது; அக்கான்யாற்றின் கரையருகே வெள்ளைக் கொக்குகள் தவிர மக்கள் நடமாட்டமில்லாத ஒரு சோலை உள்ளது; யான் கூந்தலுக்கு எருமண் கொணரும்பொருட்டு அங்கு வருவேன்; என்னோடு தலைவியும் வருவாள்" எனத் தலைவனுக்குக் குறியிடத்தைத் தோழி குறிப்பால் புலப்படுத்துகின்ற குறுந்தொகைப்பாடல் ஒன்று உண்டு.

ஊர்க்கும் அணித்தே பொய்கை; பொய்கைக்குச்
சேய்த்தும் அன்றே சிறுகான் யாறே;
இரைதேர் வெண்குரு கல்லது யாவதும்
துன்னல்போ கின்றாற் பொழிலே; யாம்எம்
கூழைக்கு எருமண் கொணர்கம் சேறும்;
ஆண்டும் வருகுவள் பெரும்பே தையே! (குறுந். 113)

என்பது அப்பாடல்.

இந்த இலக்கியச் செவ்வியை நாட்டுப்புறப்பாடல்களில் காண இயலாது. எனினும், இந்த உணர்ச்சிக்கு எவ்வகையிலும் குறையாத, கேட்டதும் மனத்தை ஈர்ப்பதான இயல்பை நாட்டுப்புறப்பாடல்களில் அறியலாம்.

புள்ளி போட்ட ரவிக்கைக் காரி
புளியங் கொட்டைச் சேலைக்காரி
நெல்லறுக்கப் போகும்போது – நான்
நெல்லிமரம் காவலடி!

கஞ்சிக் கலயங் கொண்டு
கருக்கரிவாள் தோளி லிட்டு
அறுப்பறுக்கப் போகும் பெண்ணே – உன்
இருப்பிடத்தைச் சொல்லிடடி.

இது தலைவன் குறியிடம் வினவுகின்ற பாங்காகும். காதலர்கள் பிறரறியாமல் பகலில் சந்திக்க வழி கூறும் பாடல்கள் பல உண்டு.

வேலி அழிஞ்சு தின்னு
விறகுக்கு நீவாடி
காளை ஒண்ணு தப்பிச்சின்னு
காட்டுவழி நான்வாரேன்

என்று தலைவனும்,

பாக்கைத் தான்அடக்கி
 வெற்றிலையைக் கைப்பிடிச்சு
சுண்ணாம்பு இல்லையின்னு
 சூதாடி நீவாடா

என்று தலைவியும் குறியிடங்கள் சொல்வது இயல்பாய் அமைந்து நம் நெஞ்சங்களை இனிக்கச் செய்கின்றன.

நாட்டுப்புறப்பாடல்களை (1) தாலாட்டுப் பாடல்கள் (2) விளையாட்டுப் பாடல்கள் (3) தொழிற்பாடல்கள் (4) காதற் பாடல்கள் (5) பக்திப் பாடல்கள் (6) ஒப்பாரிப்பாடல்கள் என வகைப்படுத்திக்கொண்டு, இந்த ஆறு வகைகளிலும் வடார்க்காடு மாவட்டத்தார் பயன்படுத்தும் பாடல்களைத் தொகுத்து, அவை கொண்டு சமுதாய நிலை, மக்களின் மனப்பாங்கு, நாகரிக வளம், பண்பாட்டுச் சிறப்பு, ஆட்சித் தாக்கம் போன்ற பல செய்திகளை ஆசிரியர் அருமையாக ஆய்ந்திருக்கிறார்.

தாலாட்டுப் பாடல்கள் நாட்டுப்புறப்பாடலில் முக்கிய இடம் பெறுவனவாகும். தாய்மார்கள் குழந்தைகளைத் தூங்க வைக்க இனிய குரலில் எளிய முறையில் பாடுவதே, தாலாட்டு. இத்தாலாட்டில் தாய் தன் குடிப்பெருமை, தன் பிறந்தகத்துக் குடிப்பெருமை, குழந்தையின் எதிர்காலம் முதலியவற்றை யெல்லாம் உள்ள நிலையிலேயும் உயர்த்திய நிலையிலேயும் பாடுவதுண்டு. தாய் படிப்பறியாதவளாய் இருந்தாலும் அவள் பாட்டில் உவமைகளும் உருவகங்களும் தாலாட்டோடு தாலாட்டாய் ஆடி மகிழ்கின்றன.

ஏனம்மா நீஅழுதாய் – கண்ணேஉன்
 ஏலக்கிளி வாயாலே
தேனம்மா உன்குரலும் – என்கண்ணே
 தெவிட்டாது எந்தனுக்கு

குழந்தையின் வாய், கிளியின் வாய்போல் உள்ளதாம். குழந்தையின் குரல், தேனாய் - அதுவும் தெவிட்டாத தேனாய் - பாய்கிறது, தாயின் காதில்.

செந்தமிழ் நாடெனும் போதினிலே – இன்பத்
 தேன்வந்து பாயுது காதினிலே

என்பார், பாரதியார். இத்தேன் பழந்தமிழ் நாட்டுப்புறத்தாயின் பாட்டிலே பயின்று பயின்று, பாரதியின் காதினை அடைந்துள்ளது. குழந்தையைப் பாடிடும் தேனாய்க் கண்டாள், பண்டைய தாய். ஆடிடும் தேனாய்க் காண்கிறார், பாரதியார்.

பிள்ளைக் கனியமுதே – கண்ணம்மா
 பேசும்பொற் சித்திரமே

அள்ளி அணைத்திடவே – என்முன்னே
ஆடிவரும் தேனே

என்பது அவர் பாட்டு.

உன்கண்ணில் நீர்வழிந்தால் – என்நெஞ்சில்
உதிரம் கொட்டுதடீ

என்பார், பாரதியார். தாலாட்டும் அக்காலத் தாயோ, "கண்ணே! மழையைப் போல, ஏன் கண்ணீர் வடித்து அழுகிறாய்?" எனக் கேட்கிறாள்.

மாரி மழையிறங்க – என்கண்ணே
மழைக்கால் தானிறங்க
ஏனம்மா நீயழுதாய்.

வடார்க்காடு மாவட்டத் தாலாட்டுப் பாடல்களை ஆராய்ந்த இந்நூலாசிரியர், பெண் குழந்தையின் தாலாட்டில் குழந்தையைக் கிளியாகவும் மானாகவும், மணியாகவும், இரத்தினமாகவும், தாராவாகவும், நிலாவாகவும் உருவகம் செய்துள்ளனர். ஆண் குழந்தையின் தாலாட்டில் குழந்தையைக் குலவிளக்கு, முத்து, தூங்காமணி விளக்கு, துத்திப்பூச்செண்டு என உருவகம் செய்துள்ளனர். கண்ணே, மணியே, கண்மணியே போன்ற விளிகள் இருபால் குழந்தைக்கும் பொதுவாய் அமைகின்றன எனும் ஆராய்ச்சிக் குறிப்பைத் தந்துள்ளார்.

குழந்தைப் பாடல்கள் குழந்தையின் மொழித்திறமையை வளர்ப்பதோடு அப்பாடல்களின் வாயிலாய் அறச்செயல்களையும் அவற்றின் நலங்களையும் குழந்தைகள் உணர வழி செய்கின்றன. விளையாடும்போதே பாடல்கள் பல பாடப்படுகின்றன. அம்மானை, சுந்துகம், ஊசல், கும்மி, ஒயில்கும்மி, கோலாட்டம், பாவை முதலான விளையாட்டுகள் நிகழும்போது பாடலும் பாடப்படுகிறது. உற்சாகத்தை மிகுதிப்படுத்தவும், விளையாட்டு பற்றிய பாக்களைப் புதிது புதிதாய்ப் புனையவும் ஊக்குவிப்ப தோடு வெற்றி தோல்வியைத் தாங்கிக்கொள்ளும் மனப் பக்குவத்தையும் விளையாட்டுப் பாடல்கள் உருவாக்குகின்றன,

நாற்று நடும்போதும், கதிர் அறுக்கும் போதும், ஏற்றம் இறைக்கும்போதும், மாடு மேய்க்கும் போதும் வேலையின் களைப்புத் தோன்றாமல் இருப்பதற்குப் பாடல்களைப் பாடிக் கொண்டே தொழிலாற்றுவதை நாட்டுப்புறங்களில் இன்றும் காணலாம். பலர் ஒன்றுசேர்ந்து இரயில் தண்டவாளங்களை விட்டு விட்டு நகர்த்துதல், பெரிய இரும்புப் பாளங்களைச் சாக்கடைக் குழிகளின் ஓரங்களில் இறக்குதல் போன்ற பணிகளைச்

செய்யும்போது நகர்ப்புறங்களிலும் இத்தகைய தொழிற் பாடல்களை நாம் கேட்க முடிகிறது. பெண்களும் ஆண்களும் கூட்டம் கூட்டமாகவும் தனித்தனி நிலையிலும் தமது தொழிலுக்கேற்பப் பாடிக்கொண்டே செய்யும் தொழில்கள் பலப்பல. தொழிற்பாடல்கள் தனிமையைப் போக்கிக்கொள்ளவும் பாடப்படுகின்றன. இவ்வாறான செய்திகள் பலவற்றை ஆசிரியர் விளக்கியிருப்பது நூலுக்கு அணி சேர்க்கிறது.

தொழிலாளர் படும் துயரங்கள் சொல்லில் அடங்கா. உடல் உழைப்பு அவர்களை உருக்குலைக்கிறது. வேலை செய்வோர் வாடுகின்றனர். வேலை வாங்கும் முதலாளிகளோ, கங்காணிகளோ செய்யும் கொடுமைகள் எல்லையில்லாதன.

உழவர் களையெடுக்க வயலில் இறங்கினர்
வில்லாய் வளைந்தது மேனி; அவர்தோள்
விசையாய் களைந்தது களையின் விளைவை!
முகவிழி கவிந்து வயலில் மொய்த்தது;
காலைப் போதினைக் கனலாற் பொசுக்கிச்
சூரியன் ஏறி உச்சியிற் சூழ்ந்தான்;
சுடுவெயில் உழவர் தோலை உரித்தது

எனச் சுட்டெரிக்கும் வெயிலில் உழவர் படும் பாட்டைப் பாரதிதாசனார் கூறுவார்.

கரும்புத் தோட்டத்திலே – அவர்
கால்களும் கைகளும் சோர்ந்து விழும்படி
வருந்து கின்றனரே – இந்து
மாதர்தம் நெஞ்சு கொதித்துக் கொதித்துமெய்
சுருங்கு கின்றனரே

எனப் பிஜித்தீவில் கரும்புத் தோட்டங்களில் தமிழ்நாட்டுப் பெண்கள் படும் பாட்டைக் கண்ணீர் மல்கப் பாடினார், பாரதி.

தொழிலாளர்களின் துயரங்களை நாட்டுபுறப்பாடல்கள் நெஞ்சைப் பிழிந்தெடுக்கும்வண்ணம் சொல்லுகின்றன. காப்பி, தேயிலைத் தோட்டங்களில் வேலைக்குப் பெண்கள் அமர்த்தப் படுவதுண்டு. பகலவன் மறைகிறான்; இருள் சூழ்வதால் தவளைகள் சத்தமிடுகின்றன. வீட்டிலே பால் குடிக்கும் பச்சைக்குழந்தை. இன்னும் வீட்டுக்கனுப்ப கங்காணி மறுக்கிறான். குமுறுகிறது கூலிப்பெண்ணின் கூழாக்கப்பட்ட உள்ளம்.

தண்ணி கருத்திருச்சு,
  தவளைச்சத்தம் கேட்டிருச்சு,
புள்ளை அழுதிருக்க,
  புண்ணியரே வேலைவிடு.

கொல்லுகிறான் வேலையிலே,
குறைக்கிறான் சம்பளத்தை,
காணாமே ஓடிப்போனால்
கைவிலங்கை மாட்டுகிறான்

கொத்தடிமைகளாய் இவர்கள் படும் துயரம் கொஞ்சநஞ்சமா?

மலைநாட்டில் வாழும் குறத்தியர் சமநிலத்துக்கு வந்து, விரும்புவோர்க்கு விரும்பும்வண்ணம் பச்சை குத்திவிடுவர்.

வேலூரு டேசனாண்ட
வேண்டிக் குத்தும் பச்சை
காட்பாடி டேசனாண்டே
காட்டிக் குத்தும் பச்சை

என ஒருத்தி பாடிக்கொண்டே பச்சை குத்துகிறாள்.

தொழிற்பாடல்கள் மக்கள் பழக்கவழக்கங்கள், தொழில் முறைகள், தொழிற்களப் போராட்டங்கள் ஆகியவற்றை அறிவிப்பன; என்றாலும், தொழில் செய்யும் போது களைப்புத் தோன்றாதிருப்பதற்காகவே அப்பாடல்கள் எழுகின்றன என்பதனை ஆய்வாசிரியர் குறிப்பிடுகிறார்.

மனித குலம் தோன்றிய நாள்தொட்டு என்றென்றும் மாறாதது, காதல். ஆகவே, நாட்டுப்புறப்பாடல்களில் காதற் பொருண்மை அமைந்த பாடல்கள் மிகுதியாய் இருப்பது இயல்பே என்பதை ஆசிரியர் சுட்டிக் காட்டுகிறார். பக்திப் பாடல்கள்வழி மக்களின் வழிபாட்டு முறையை அறிந்துகொள்ள வாய்ப்பேற்படுகிறது. காவடி ஆட்டம், கரக ஆட்டம் ஆகியன பக்திப் பாடல்களில் முக்கிய இடம் பெற்றுள்ளதை வடார்க்காடு மாவட்ட நாட்டுப்புறப்பாடல்கள்வழி ஆசிரியர் நமக்கு அறிவிக்கிறார்.

உணர்ச்சிக்குக் கண்களில் நான்கு நிலைகளை எடுத்துக் காட்டுவதுண்டு. கண்ணின் முற்பகுதி (மூக்கருகே உள்ள பகுதி) அளவுக்கு மிஞ்சிய போகத்தால் சிவக்கும்; பிற்பகுதியோ அளவுக்கு மிஞ்சிய சினத்தால் சிவக்கும். அளவுக்கு மிஞ்சிய வருத்தத்தால் கண்ணில் முற்பகுதியில் - மூக்கருகில் - நீர் வழியும்; அளவுக்கு மிஞ்சிய அன்பாலோ, பக்தியாலோ கண்ணீர் கண்ணின் கடைக்கோடியில் வழியும். கண்ணின் இந்த நான்கு நிலைகளிலும் உணர்ச்சிப்பெருக்கு உச்சத்தை அடைவது இயல்பு. இந்நான்கு நிலைகளிலும் உரைக்கப்படுபவை மொழியால் வேறுபட்டிருந் தாலும் உணர்ச்சியின் உள்ளடக்கம் ஒன்றாகவே இருக்கும். இந்த உண்மையை ஆசிரியர் தந்துள்ள ஒப்பாரிப் பாடல்களால் நாம் உணரமுடிகிறது.

கணவனை இழந்தபோது மனைவி புலம்புகிற,

குட்டைப் புளியமரம்
　குயிலடையும் நந்தவனம்!
குட்டைமரம் பட்டுப்போச்சு
　குயிலுபோயி எங்கடையும்?

மட்டப் புளியமரம்
　மயிலடையும் நந்தவனம்
மட்டமரம் பட்டுப்போச்சு
　மயிலுபோயி எங்கடையும்?

இந்த உணர்ச்சி எங்கிருந்தாலும் ஒன்றுதானே!

நாட்டுப்புறப்பாடல்களில் அரிய சொல்லாட்சிகள் உண்டு. ஓசை நீட்டிப்புக்காகச் சங்கொலித் தொடர்கள் பயன்படுத்தப் படுகின்றன; பிறமொழிச் சொற்கள் விரவி வருகின்றன; சொற்கள் பேச்சு வழக்கிற்கேற்பப் பலவாறு திரிபடைகின்றன; கொச்சை மொழிகள் இடம் பெறுகின்றன என்னும் முடிவுகளை ஆசிரியர் ஆராய்ச்சிவழி நிறுவிக் காட்டுகிறார்.

தொழில்கள், வழிபாட்டு முறைகள், திருமணச் சடங்குகள், ஆடை அணிகலன்கள், புராணக் கதைகள், நம்பிக்கைகள், ஊர்திகள் போன்ற சமூகப் பழக்கவழக்கங்களையும் பண்பாட்டுக் கூறுகளையும் ஆசிரியர் மிகவும் சிறப்பாக இந்நூலில் விளக்கியுள்ளார்.

இந்நூல் ஆய்வு நெறி நின்று அரிய பல செய்திகளை உள்ளடக்கியுள்ளது. ஆசிரியர் நாட்டுப்புறப் பாடல்களில் ஆய்வை மேலும் தொடர்ந்து, இன்னும் பல நூல்களை வெளியிட்டுச் சிறக்க வேண்டுமென உளமார வாழ்த்துகின்றேன்.

ஆசிரியர் தம் எளிய, இனிய, கதை சொல்லும் போக்கிலமைந்த நடையினால் ஆய்வு நூலைப் படிக்கிறோம் என்னும் எண்ணமின்றி, ஒரு புதினத்தைப் படிப்பது போன்ற உணர்வை நம்மிடம் உண்டாக்கிவிடுகிறார். அவர்க்கு என் உளமார்ந்த பாராட்டுதல்கள்.

நூல் ஆக்கம்	முனைவர் மா. கோதண்டராமன்
வகைமை	நாட்டுப்புறவியல்
வெளியீடு	முனைவர் மா. கோதண்டராமன், சென்னை. (1988)

26

பாலை மலைப்பாடல்கள்

நாட்டுப்புற இலக்கியம்

இலக்கியம் என்பது காலங்காட்டும் கண்ணாடியாகும் என்பர், அறிஞர். ஒவ்வோர் இலக்கியமும் அது எழுந்த காலகட்டத்தைப் படம் பிடித்துக் காட்டுகின்றது. மக்கள் வாழ்க்கை, நாகரிகம், பண்பாடு முதலிய அனைத்துக் கூறுகளையும் இலக்கியங்கள் உள்ளடக்கி நிற்கின்றன. கவிஞனின் புலமைக்கும் கற்பனைக்கும் சூழ்நிலைக்கும் ஏற்றவாறு பாடுபொருள் பல்வேறு வகையாய் அமைந்தாலும் அதில் அந்தக் காலத்தின் தாக்கம் மட்டும் முறையாய் அமைந்திருக்கும்.

புலவர்களால் படைக்கபபடும் ஏட்டிலக்கியங்களுக்கும், நாட்டுப்புற மக்களால் வழங்கப்பட்டு வரும் வாய்மொழி இலக்கியங்களுக்கும் இது பொருந்தும். ஏட்டிலக்கியங்களைவிட நாட்டுப்புற இலக்கியங்களில் உண்மைத் தன்மை (Realism) மிகுந்திருக்கும். இதற்குக் காரணம், நிகழ்ச்சிகளோடு நேரிடை யாகத் தொடர்புடைய நாட்டுமக்களே அந்நிகழ்ச்சிகளைப் பாடல்களாய்ப் பாடுவதுதான். அன்றியும், வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்த உண்மை நிகழ்ச்சிகளே உணர்ச்சிப் பாடல்களாய் வெளிவருவதால் நாட்டுப்புறப்பாடல்களில் உண்மைக்குப் புறம்பான அல்லது ஐயத்திற்கிடமான செய்திகள் இடம் பெற வாய்ப்பில்லை. எனவே, ஒரு நாட்டில் சமுதாயத்தின் உண்மையான வாழ்க்கை நிலையை அறிந்துகொள்ளுவதில் அந்நாட்டிலும் சமுதாயத்திலும் வழங்கப்பட்டு வரும் நாட்டுப்புற இலக்கியங்களுக்குப் பெரும்பங்கு உண்டு என்பது உண்மையாகும்.

கோ.பெ.நா. பணி

நண்பர் கவிஞர் கோ.பெ.நா. அவர்கள் சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டத்தில் உள்ள பாலை மலையிலும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளிலும் சென்று தங்கி, அங்கு வாழும் மலைவாழ் மக்களோடு

பழகி, அவர்களிடம் வழக்கில் இருந்து வரும் நாட்டுப்புற இலக்கியச் செல்வத்தைத் திரட்டி, செப்பம் செய்து, விளக்கம் எழுதித் தமிழுலகிற்குத் தந்திருக்கிறார்கள். இஃது ஒரு பெரிய அரிய முயற்சியாம். புதிதான ஒரு சூழ்நிலையில் சென்று தங்கி, அங்குள்ள மக்களோடு மனம்விட்டுப் பழகி, அவர்களிடமிருந்து செய்திகளை - அதுவும் இலக்கிய வடிவங்களை பெறுவது என்பது எல்லோராலும் முடியக்கூடிய எளிமையான செயல் அன்று. இதுபோன்ற சூழ்நிலையில் ஏற்படும் இன்பதுன்பங்களை ஒன்றாகவே கருதும் உயர்ந்த மன உறுதியும், தளரா ஊக்கமும், இடைவிடா உழைப்பும், குறிக்கோள் நோக்கும், பேராற்றலும் நிறைந்த ஒருவரால்தாம் இத்தகு அரிய செயலை இனிதே முடித்திட முடியும். அந்த வகையில் நண்பர் கோ.பெ.நா. அவர்களின் அரும்பணி மிகவும் பாராட்டப்பட வேண்டியதாகும்.

பாடல் தொகுப்பு முறை

இலக்கியச் செல்வங்களைத் திரட்டிய ஆசிரியர், அவற்றைத் தாலாட்டுப் பாடல்கள், பால் உணர்வுப் பாடல்கள், சமுதாய நோக்குப்பாடல்கள், நகைச்சுவைப் பாடல்கள், கதை பொதி பாடல்கள், பன்மணிக் குவியல் என்ற ஆறு தலைப்புகளில் வகைப்படுத்தித் தந்துள்ளார்.

நான் முன்னர்க் குறிப்பிட்டது போல, நாட்டுப்புறப் பாடல்கள், நிகழ்ச்சிகளோடு நேரிடையான தொடர்புடையன வாதலால், அப்பாடல்கள் எழுந்த சூழ்நிலையையும் பின்னணியையும் முதற்கண் புரிந்துகொண்டு, பிறகு பாடல்களை அணுகுவது நலம். அதற்குப் பயன்படும் வகையில் இந்நூலாசிரியர் ஒவ்வொரு பாடலின் தொடக்கத்திலும், இடையிடையேயும் அப்பாடலுக்குரிய சூழ்நிலையையும் விளக்கத்தையும் கொடுத் துள்ளார்.

இவ்விளக்கம் பாடலைப் படிப்போருக்குத் தெளிவை ஏற்படுத்துகிறது. 'பொய்க்கண்ணு நித்திரையாம்', 'பட்டுச்சீலை கட்டமாட்டேன்', 'மயிலி பொழைக்கலையே', 'எடுத்தவங்க கொடுத்திடுங்க' என்பன போன்ற குறுந்தலைப்புகள் பெயரளவி லேயே நம்மைக் கவர்ந்திழுத்துப் படிக்கத் தூண்டுகின்றன. நூலினுள் நுழையும் ஒவ்வொருவரும் பாலை மலையின் சுற்றுவட்டாரத்திற்குள் தாங்கள் இருப்பதாகவே உணரும் வகையில் பாடல்கள் முழுவதிலும் நாட்டுப்புற மணம் வீசுகின்றது.

மலை வளம்

புங்கந்தூரி புளியந்தூரி
மூக்குச் சுத்திப் பூப்பூக்கும்
நாக்குறிஞ்சிப் பூப்பூக்கும்
கொல்லிமலை மூங்கில்
பாலை மலை மூங்கில் (பக். 4, 5)

தங்க ஊசி இறங்கும் மலை
தள்ளி நிற்கும் கொல்லிமலை
பொன்னூசி இறங்கும் மலை
பொறகிருக்கும் கொல்லிமலை (பக். 65)

வடக்கே மழைபொழியும் வாணியாத்துத் தண்ணிவரும்
தெக்கே மழைபொழியும் தேனியாத்துத் தண்ணிவரும் (பக். 69)

வடக்குக் கரைத்தோட்டம் வாழை மடல்விரியும்
தெற்குக் கரைத்தோட்டம் தென்னை மடல்விரியும் (பக். 70, 71)

ஆலாஞ் சருவிலே
ஆனைவந்து மேயுது
....
புளியஞ் சருவிலே
புலிவந்து மேயுது (பக். 122 – 23)

என்றெல்லாம் வரும் அடிகள் பாலை மலையின் சுற்றுச் சூழலையும் இயற்கை வளத்தையும் நமக்குப் படம்பிடித்துக் காட்டுகின்றனவாய் உள்ளன.

மலைமக்கள் தொழில்

ஏறாத மலையேறி – தாயே
இளமூங்கில் நார்வாங்கி (பக். 11)

பாலைமலை ஓரத்திலே
பல்லையாடு மேய்ப்பவளே (பக். 34)

ஒருஉட்டான் கல்பொறுக்கி
வாங்கிவந்த மூக்குத்தி (பக். 79)

ஒருதட்டு ஏலேலோ மண்ணெடுத்து – அய்லசா
போட்டனக்கா ஏலேலோ தங்கசரம் – அய்லசா (பக். 80)

சக்கிலி வந்தா சொல்லு புள்ளே
கம்பறுக்க வேணும் புள்ளே (பக். 105)

பருத்தி எடுக்கையிலே
பலநாளும் பார்த்த மச்சான் (பக். 119)

மூங்கில் நார் உரித்தல், ஆடு மேய்த்தல், கல் பொறுக்குதல், மண் எடுத்தல், கம்பறுத்தல், பருத்தி பொறுக்குதல் முதலியன பாலை மலைமக்களின் தொழில்கள் என அறிகிறோம்.

அன்னை உள்ளம்

தாய், தாலாட்டுப் பாடுகிறாள். தாலாட்டில் தாய், தன் மன உணர்வுகளையெல்லாம் வெளிப்படுத்துவாள். குழந்தை அறிகிறதோ இல்லையோ, அவள் தன் மனத்தில் பட்டவற்றை யெல்லாம் கொட்டிவிடுவாள். தன் குடும்பத்தின் உண்மை நிலையைக் கூறுவதாயும் இருக்கும்; உயர்வுபடுத்தித் தன் கற்பனை விரியுமளவுக்கு உயர்த்திப் பாடுவதாயும் இருக்கும். சான்றோர் இலக்கியங்களில் இப்பாடல்கள் இலக்கணம் பொருந்திச் செம்மைத் தன்மையனவாய் விளங்கும்.

தேக்கு மரம்கடைந்து செய்ததொரு தொட்டிலிலே
ஈக்கள் நுழையாமல் இட்ட திரைநடுவில்
பொன்முகத்தி லேஇழைத்த புத்தம் புதுநீலச்
சின்னமணிக் கண்ணை இமைக்கதவால் மூடிவைப்பாய்

எனும் பாடல், 'படுக்கைத் தொட்டிலில்' உறங்கும் குழந்தைக்குப் பாவேந்தர் பாடுவது. நாட்டுப்புறப்பாடல் தொட்டில்களெல்லாம் துணியில் கட்டப்படும் தொங்கு தொட்டில்களே!

செல்வச் செழிப்பில் திளைப்பவள் தன் உள்ளமெலாம் நிறையப் பாடுகிறாள்.

காடெல்லாம் தேடிக் காராம் பசுஓட்டிக்
கொண்டுவந்த பாற்பசுக்குக் கொம்பெல்லாம் பொன்னிறமாம்!
உட்கார்ந்து பால்கறக்க முக்காலி பொன்னாலே!
அணைத்துப் பால்கறக்க அணைகயிறு பொன்னாலே!
பிடித்துப் பால்கறக்கப் பிடிசெம்பு பொன்னாலே!

அத்தனையும் பொன் அவளுக்கு. பட்டினி கிடக்கும் தாய் எப்படிப் பாடுவாள் இப்படி? அவள் பாட்டு,

முத்துச் சிரிப்பழகா, முல்லைப்பூப் பல்லழகா,
வெத்துக் குடிசையிலே விளையாட வந்தாயோ?
ஏழைக் குடிசையிலே, ஈரத் தரைமேலே,
தாழம்பாய் போட்டுத் தவழ்ந்தாட வந்தாயோ?
தரையெல்லாம் மேடுபள்ளம், தவழ்ந்தால் உறுத்தாதோ?
பளிங்கால் அரண்மனையும் பவளத்தூண் மாளிகையும்
பணக்காரன் வீடிருக்கப் பஞ்சையிடம் வந்ததுஏன்?
பச்சரிச் சோளம் பாதிநாள் பட்டினிதான்—

இப்படித்தான் இருக்க முடியும். ஏழ்மை என்றாலும் பெரும்பாலும் அன்னையர், தம் குழந்தை செல்வக் குடும்பத் திலே பிறந்ததாய்க் கொண்டே தாலாட்டுப் பாடுவர். பாலைமலைத் தாய் பாடுகிறாள் :

பொன்தூரி பொன்தூரி
பொன்மாமன் கட்டும்தூரி
அத்திதூரி ஆலந்தூரி
அம்மாமன் கட்டுத்தூரி
அம்மாமன் தூரியிலே
அரைக்கண்ணு நித்திரையாம்

புங்கந்தூரி புளியந்தூரி
பொன்மாமன் கட்டுந்தூரி
பொன்மாமன் தூரியிலே
பொய்க்கண்ணு நித்திரையாம்

முதலில் பொன்மாமன் கட்டும் பொன்தூரியைப் பாடுகிறாள். உண்மைநிலை நினைவுக்கு வருகிறது. உடனே அத்தி மரத்திலேயும் ஆலமரத்திலேயும் புங்கமரத்திலேயும் புளிய மரத்திலேயும் கிளைகளில் கட்டித் தொங்கவிடப்படும் தூரியைப் பாடிவிடுகிறாள். பொன்னை நினைக்கிறது உள்ளம்; ஆனாலும், 'புளியம்'தான் உண்மை என்பதும் புலப்பட்டுவிடுகிறது.

நாட்டுப்புறத்தாயின் பாடலென்றாலும் அவள் சொல்லாட்சி நம்மை வியக்க வைக்கிறது.

அரைக்கண்ணு நித்திரை : கண் மூடியும் மூடாமலும் இரு இமைகளுக்கு இடையே ஒரு சிறிய கோடாய் இருக்கும் நிலை; கண்ணதாசன் கூறுவது போல மலர்ந்தும் மலராத காலை மலர் போன்ற கண்.

பொய்க்கண்ணு நித்திரை புலவர்களையும் வியக்கச் செய்யும் சொல்லாட்சி. கண்கள் மூடியிருக்கின்றன; ஆனாலும், இன்னும் குழந்தை தூங்கவில்லை. 'பொய்க்கண்ணு நித்திரை' என்பது 'அறிதுயில்' என்று பாராட்டப்பெறும் தன்மையை ஒத்ததாம்.

சமுதாயப் பார்வை

ஆசிரியர் தொகுத்துத் தந்துள்ள சமுதாய நோக்குப் பாடல்களில் நாம் பாலைமலைச் சமுதாய வாழ்வைக் காண முடிகிறது. தொடக்கத்தில் மகிழ்ச்சியாய் இருந்த திருமண வாழ்க்கை கூட்டுக் குடும்ப முறையால் நாளடைவில் சீரழியும் நிலைமையை உண்டாக்கிவிடுகிறது. "சூழ்நிலை நெருக்கடியாலும், தன்னைப் பெற்றவர்களும் உடன்பிறப்புகளும் தன்னை, 'மனைவிதாசன்' என்று கூறுவார்களோ என்னும் அச்சத்தாலும் அன்புள்ள கணவன்கூடத் தன் மனைவியிடம் அன்பற்றவனாய்க் காட்டிக்கொள்கிறான். அவள் நெஞ்சம் அழுகிறது.

சாஞ்சி படுத்திருக்கும்
தங்கப் பசுமாடு;
தட்டி எழுப்பாம(ல்)
தடியால் அடிக்கிறியே!

என அப்பெண் அவனை மென்மையாய்த் திருத்த வேண்டி இருக்கிறது.

கணவன் - மனைவி, அண்ணன் - தங்கை, பெற்றோர் - குழந்தைகள் உறவு முறைகள் எவ்வளவு மேலோங்கி இருக்கின்றன என்பதை,

மயிலி பொறைக்கலையே (பக். 52)
உடன் பிறப்புகள் (பக். 57)
தாயும் தந்தையும் (பக். 69)

முதலிய பாடல்கள் தெள்ளத் தெளிவாகக் காட்டுகின்றன.

அதே நேரத்தில், கணவனைப் பிரிந்து பிறந்த ஊர் வந்திருந்த பெண் ஒருத்தியைப்பற்றிச் சமுதாயம் பலவாறாய் இழித்துப் பேசியதால் அவள் தற்கொலை செய்துகொள்ளும் அவல நிலையும் காணக்கிடக்கிறது. அவள்மேல் எந்தத் தவறும் இல்லை; அவளிடம் கொடுமையாய் நடந்துகொண்டது தன் தவறுதான் என்று அவள் கணவன் புலம்புவது நம் நெஞ்சைத் தொடுகிறது.

காந்தி மணிவிளக்கு
கம்பத்திலே நின்னெரியும்;
காத்துப்பட்டு அணையாம(ல்)
கவலைப்பட்டு அணைஞ்சதம்மா!

தூண்டா மணிவிளக்கு
தூணுமேலே நின்னெரியும்;
தூசுபட்டு அணையாம
துக்கப்பட்டு அணைஞ்சதம்மா! (பக். 51)

என்பது அவன் புலம்பலாகும்.

பாலுணர்வுப் பாடல்கள்

பரத்தமை கண்டிக்கப்பட்டாலும் பரத்தையர் வீடு சென்று வருவது சங்க இலக்கியங்களில் காணப்படவே செய்கிறது. பண்ணை அமைப்பு முறையில் பரத்தை வீடு செல்வது பெருமையாகக்கூடப் பேசப்பட்டதுண்டு.

தங்கக் குடைபிடிச்சு – என்கண்ணே
தாசிமாரை முன்னவிட்டு – உன்மாமன்
தாசிக்கே விட்டபணம் – ரெண்டு
தங்கமடம் கட்டலாமே!

வெள்ளிக் குடைபிடிச்சு — என்கண்ணே
வேசிகளை முன்னவிட்டு — உன்மாமன்
வேசிக்கே விட்டபணம் — ரெண்டு
வெள்ளிமடம் கட்டலாமே

எனத் தாலாட்டும் தாய் தன் குழந்தையிடம் அதன் மாமன் பெருமையை இப்படிப் பாடுகிறாள்.

பாலை மலையிலேயும் பெண் ஒருத்தி கணவனின்மீது பெருமிதம் கொண்டிருக்கிறாள். அவன் வைத்திருக்கும் நெருப்புப் பெட்டிகள்கூடத் தங்கம் வெள்ளிதான். ஆனால், அவன் தாசி வீடே தஞ்சமெனப் போய்விட்டானே! அதற்கு அவன் காரணமல்லவாம், தாசிதான் காரணமாம்! அவன் திரும்பிவந்து சேர மாட்டானா என ஏங்குகிறாள்.

தங்க நெருப்பெட்டியாம்
தலைமேலே பிடிக்கட்டாம்,
தடத்திலே நின்னிருந்தா
தடமும் வெளிச்சமாகும்!

தாசிவீடு தாள்வாங்கும்
தாசிவச்ச கைமருந்து
தவிக்குதம்மா பொந்திக்குள்ளே!
தாசியை மறப்பதெப்போ?
திரவுவந்து சேர்வதெப்போ? (பக். 52)

இப்பாடற்பகுதியின் முடிவில் ஆசிரியர், "பெண் நிலை அன்றுமுதல் இன்றுவரை ஆண்களின் தவறுகளுக்கு அங்கீகாரம் அளித்து, தன்பால் வர வேண்டிப் பிச்சை கேட்பதாகவே உள்ளது. பெண்கள் இனியாகிலும் தம் உரிமைகளை நாட்டப் புறப்படு வார்களா" எனக் கொடுத்திருக்கும் குறிப்பு செயற்படுத்த வேண்டிய ஒன்று. (பக். 56)

சான்றோர் இலக்கியங்களில் செம்மையான நெறிகள் மட்டுமே உரைக்கப்படுகின்றன. அல்லவை சொல்லப்படுவதில்லை. நாட்டுப்புறப்பாடலில் உலகியல் நடப்பு நிலைகள் ஒளிவு மறைவின்றி உரைக்கப்படுகின்றன. சங்க இலக்கியங்களில் தலைவி, காதலால் உருகினாலும், தலைவனிடம் தன் காதலை நேரடியாய்க் கூறுவதாகச் செய்தி இல்லை. நாட்டுப்பாடல்களில் பெண்களும் ஆண்களுக்குச் சரிநிகர் சமானமாய்க் காதல் மொழி பேசத் தவறுவதில்லை. காதலன் உலக நினைவே இல்லாமல் அரசு மரத்தடியில் அமர்ந்திருக்கிறான். அவள் அவன் கோபத்தைத் தீர்க்க எண்ணுகிறாள்.

மந்தையிலே மாடிருக்க
மந்திரிமகள் நானிருக்க
கொண்டையிலே பூவிருக்க
கோபமென்ன ராசாவே (பக். 2)

எனக் கோபத்தைத் தீர்க்கிறாள்.

அவள் திருமணமானவள்; என்றாலும், பார்க்கின்ற அவனுக்கு அது தெரியவில்லை. அவள் குறிப்பாகச் சொல்லிப் பார்த்தும் அவன் புரிந்துகொள்ளவில்லை. அவளிடம் அன்றிரவு அவள் வீட்டுக்கு வரப்போவதாகச் சொன்னவன் அவ்வாறே வந்து,

தாயார் அறியாம – பாவிப் பெண்ணே
தாள்திறந்தால் ஆகாதோ? (பக். 39)

என்றான். அவளுக்குக் குரல் புரிந்துவிட்டது.

பாலு அடுப்பு மேலே – அடபாவி
பாலகிளி தொட்டிலிலே;
பாலகனைப் பெற்றெடுத்த – என்
பர்த்தாவும் கட்டிலிலே; (பக். 40)

'பாலகனைப் பெற்றெடுத்த பர்த்தா (கணவன்)' என்றதுந்தான், அந்தப் பாவிக்கு அவள் திருமணமானவள் என்பது உறைத்தது. மெல்ல நழுவிட்டான்.

திருமணம் ஆனவரையும் தவறான வழிக்கு இழுக்க முயல்பவர் இல்லாமல் இல்லை. இத்தகைய முறைபிறழ்ந்த பாலுணர்வுகள்கூட நாட்டுப்புறப் பாடல்களில் இடம் பெற்று விடுகின்றன. அவை கண்டிக்கத்தக்கவை. ஆனாலும் ஒன்றிரண்டு அவ்வாறு நடப்பதால், நடந்ததை நடந்தவாறே பாடிவிடுகிறது நாட்டுப்புறப் பாடல். அத்தகு பாடல்களுள் ஒன்று :

ஊரார் உறங்குட்டண்டி – பெண்ணே
உன்புருஷன் தூங்கட்டுண்டி—
நான்வருவேன் சாமத்திலே – பெண்ணே
மாட்டேனென்று சொல்லிடாதே! (பக். 40)

கதைபொதி பாடல்

பண்ணையார் ஒருவர் தம் பண்ணையில் வேலை செய்யும் சக்கிலிப் பெண்ணை விரும்பி அவளை அடையப் பல்வேறு முயற்சி செய்கிறார்.

ஒருநாள் பண்ணாடிச்சி (பண்ணையார் மனைவி) கொட்டைமுத்து இடிக்க, 'பொழுது சாய ஊட்டுப்பக்கம்' வரச் சொன்னதாய்ச் சொன்னார். அவள் சென்றாள். பண்ணாடிச்சி வீட்டில் இல்லை. அவர் எண்ணம் அவளுக்குப் புரிந்தது.

ஆனாலும், உரலில் இருந்த கொட்டைமுத்தை இடித்தாள். பண்ணாடி அவள் அழகில் மயங்கி அருகே நின்றிருந்தார். அப்பெண்,

பச்சைத்தண்ணி எடுங்க சாமி
மூஞ்சிமேலே அடிங்க சாமி
மோசம்போக வேணாம் சாமி – உங்க
மோகம்நல்லாத் தெளியும் சாமி

என, 'மூஞ்சிமேலே' அடித்ததுபோலச் சொன்னாள். ஆயினும் அவருக்கு உறைக்கவில்லை.

ஒரு நாள் சந்தைக்குக் கம்பு விற்க வண்டியில் தம்முடன் வரச் சொன்னார். வண்டி அவள் குடிசைப்பக்கம் வந்ததும் நிறுத்தி இரண்டு மூட்டை கம்பை அவள் வீட்டில் இறக்கிப் போட்டார்.

இன்னும் எத்தனை கொடுத்தாலுமே, சாமி
இந்த ஒண்ணுக்கு இணங்கமாட்டேன்

என உறுதிபடச் சொன்னாள். பின்னொரு நாள், இதேபோல் நெல் விற்கப் போகவேண்டுமெனச் சொல்லி, 'எத்தனை மூட்டை நெல் வேண்டுமானாலும் உன் வீட்டிலே எடுத்துப் போடு, புள்ளே' என்றார். அவளோ,

நானு கையிலே தீண்ட மாட்டேன் – சாமி
நல்ல பாம்பு தீண்டிவிடும்

என மறுத்தாள். அவரே நெல் மூட்டைகளை எடுத்துப் போட்டுவிட்டுப் பழையபடி கெஞ்சினார். இப்படிப் பலமுறை முயன்றும் அவரால் முடியாது போகவே, ஒருநாள் வண்டியில் தீ மூட்டி, எரியும் தீயில் குதித்துவிடுகிறார். செய்தியறிந்த சக்கிலிப் பெண் அங்கே ஓடி வருகிறாள். பண்ணாடிச்சி சினத்தோடு, 'கம்பும் நெல்லும் மூட்டை மூட்டையா போட்டதையெல்லாம் எடுத்துக் கொடுடி; உன்னைச் சும்மா விட மாட்டேண்டி'' என்று குதிக்கிறாள்.

சக்கிலிப் பெண்ணோ,

கவுண்டரு நெருப்பிலே வேகுராரு – சாமி
கண்டபடி பேசலாமா?
எதையும்நானு தொடலைசாமி – போயி
எடுத்துக்குங்கோ எல்லாத்தையும்

என்று சொல்லி, பண்ணாடி நெருப்பில் எரிந்து சாம்பலாவதைக் கண்ணீருடன் பார்த்து நின்றாள். பண்ணாடிச்சியோ கணவனைப் பொருட்படுத்தாமல் தானிய மூட்டைகளை எடுத்துக்கொள்ள ஓடுகிறாள். சக்கிலிச்சியை, ஏழ்மை எரித்தாலும், வறுமை

வாட்டினாலும், கற்பெனும் திண்மையோடு வாழ்ந்த பெருந்தக்க பெண்ணாய் நிற்கிறாள். அவள் தீண்டத்தகாதவளாய் இருக்கலாம்; ஆனாலும், 'பண்பாட்டு மீறல்' தன்னைத் தீண்டவிடாமல் தடுத்து நிற்கிறாள்.

ஓசை (அதாவது, பண்பு) தட்டினாலும், சுவை தட்டாத சமுதாயப் படைப்பு இது என்கிறார், ஆசிரியர். (பக். 104)

ஆசிரியர் ஒருவர், தாம் கல்வி புகட்டிய இளம் பெண்ணைத் தாம் அடையச் சூழ்ச்சி செய்து, அது நிறை வேறாது இறக்க நேரிடும் ஒரு கதையும் கூறப்பட்டுள்ளது. இவையாவும் சமுதாயத்தில் நிலவும் அவலக் கேடுகளைக் காட்டுவனவாய் உள்ளன.

சுருங்கச் சொன்னால், பாலை மலை மக்களின் இன்பதுன்ப நிகழ்ச்சிகளை, பழக்கவழக்கங்களை, தொழில் முறைகளை, பண்பாடுகளை எல்லாம் அறிந்துகொள்ள இந்நூல் பெரிதும் பயன்படுகிறது. கள்ளங்கபடமற்ற உள்ளங்களி லிருந்து பிறந்து வந்த பாடல்கள் ஆதலால் இப்பாடல்கள் அனைத்தும் உணர்ச்சியோடு கலந்து நம் உள்ளத்தில் இடங்கொள்ளுகின்றன. இலக்கிய நோக்கிலும் வரலாற்று நோக்கிலும் இந்நூல் பெரிதும் பயன்படும். இத்தகைய அரிய நூலைத் தொகுத்துத் தந்த ஆசிரியரை மனமாரப் பாராட்டி மகிழ்கிறேன். அவர்தம் தொண்டு தொடர வாழ்த்துகிறேன். தமிழுலகம் இதனை நன்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நூல் ஆக்கம்	புலவர் கோ. பெ. நாராயணசாமி
வகைமை	நாட்டுப்புறவியல்
வெளியீடு	நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை. (1986)

27

அறிவியல் பாட்டு

தமிழ்க்கவிதைகளில் அறிவியல் கருத்துகளைச் சொல்லும் நிலை வளர்ந்துள்ளது என்று சொல்ல இயலாது; போதிய முயற்சி இல்லை என்பதே குறையாம். அக்குறையைப் போக்கும் முறையில் அறிவியற்கருத்துகளைத் தமிழ்க்கவிதை வடிவில் தர ஒற்றியூர் உத்தமன் எடுத்துக்கொண்டுள்ள முயற்சி பாராட்டுதற்குரியது. அறிவியல் கருத்துகள் கொண்ட அவர் கவிதைகள் பள்ளிச் சிறுவர்க்கானவையாய் இருப்பது மேலும் பாராட்டுக்குரியதாகும். அறிவியல் செய்திகளை எளிய இனிய தமிழில் பள்ளிப் பிள்ளைகட்குச் சொல்லித் தரமுடியும் என்பதை மெய்ப்பிப்பதாய் இந்நூல் விளங்குகிறது.

அறிவுப் பாட்டைக்
  கேட்டு – நின்
அறியா மையை
  ஓட்டு (பக். 9)

என்பது குழந்தைகட்குரிய அறிவுரை மட்டுமன்று; அனைவர்க்கும் பொருந்தியதேயாம்.

முற்றிலும் அறிவியற்கருத்துகளாய் மட்டுமன்றி நாடு, மொழி முதலியனபற்றி அறிந்துகொள்ளவும் கவிதைகளை ஆசிரியர் தந்திருக்கிறார்.

முந்துறும் அறிவியல் நூல்கள் – நான்
முத்தமிழ் மொழியினில் சேர்ப்பேன் (பக். 16)

என்ற கவிஞரின் கூற்று ஒவ்வொரு தமிழனின் எண்ணமாய் இருக்கவேண்டும்.

நூலில் அறிவியல் வரையறைகள் பலவற்றை அழகுத் தமிழில் தந்திருப்பது பாராட்டுக்குரியது. சூரியக் குடும்பம் எது என்பதற்கு,

சூரியன் ஒன்பது கோளும் – இயைந்தே
சூரியக் குடும்பம் ஆகும் (பக். 21)

எனக் கவிதையிலேயே விடை கிடைக்கிறது.

அண்மைக் காலத்திய விஞ்ஞானச் செய்திகளும் கவிதைகளில் இடம் பெற்று அறிவூட்டுகின்றன. நிலா பேசுவதுபோல ஒரு பாட்டு உள்ளது. (பக். 23–25) அதில் நிலா,

என்றன் மடியில் ஆம்ஸ்டிராங்கும் – உடன்
இளைய தம்பி ஆல்டிரினும்

நடந்த விந்தையினைக் கற்றோரைக் கேட்டு அறிந்துகொள் எனக் கூறுகிறது. நிலவில் மனிதன் சென்று இறங்கிய அறிவியற்செய்தி இங்கே அருமையாய்க் கூறப்படுகிறது.

நூலில் அறிவியல் உண்மைகள் எளிய முறையில் குழந்தைகட்கு விளக்கப்படுகின்றன. தாவரங்கள் உணவு தயாரிக்க, வளர, சூரிய ஒளி, உயிர்வளி (ஆக்ஸிஜன்), தண்ணீர் ஆகிய மூன்றும் வேண்டும் என்பதை ஒரு வாய்பாடுபோல நினைவில் வைத்துக்கொள்ளத் தக்கவண்ணம் கவிதையில் தந்திருக்கிறார் :

கட்டாயம் வேண்டும் ஆக்ஸிஜனே,
கதிரவன் ஒளியும் உணவுந்தான்,
தட்டாமல் வேண்டும் தண்ணீரே
தாவரங்கள் வளர்ச்சிக்கே. (பக். 37)

பச்சையான இலைகள் உணவு தயாரிப்பதுவும், பன்னிற மலர்கள் காய்த்துக் கனியாகி இனப்பெருக்கத்திற்குப் பயன்படுவதும் நயமாய் விளக்கப்பட்டுள்ளன (38–39). பூவின் பல பாகங்களும் அவற்றின் பயன்களும் பேசப்படும் பாடல் அருமையாய் உள்ளது (பக். 40).

கோடையில் மக்கள் மலைவாழிடங்களுக்குச் செல்வது போலப் பறவைகளும் தட்பவெப்ப மாற்றம் கருதி இடம் பெயர்வதை,

கோடையின் வெப்பம் தாளாமல் – மக்கள்
கோடையும் ஊட்டியும் செல்வதுபோல,
கோடையில் வெம்மை தவிர்த்திடவே – பறவை
கூட்டமாய் வேற்றூர் பறந்துசெல்லும் (பக். 53)

எனப் பறவைகள், 'வெயிற்கேற்ற நிழல்' தேடிப் பறப்பதைச் சிறக்கப் பாடுகிறார். வானவில்லைப் பார்க்கும்போது,

பெண்களெல்லாம் மார்கழியில்
போடும்வண்ணக் கோலமோ?

எனப் பாடும் அடிகளில் கவிஞரின் கற்பனையை உணரமுடிகிறது. தீவு, தீபகற்பம் ஆகியவைபற்றி விளக்கும்போது செய்தியைத் துல்லியமாய் எடுத்துச் சொல்லும் கவிஞரின் திறனை அறிய முடிகிறது.

குழந்தைகட்கு அறிவியல் அறிவுரைகள் மிகவும் பொருத்தமான முறையில் சொல்லப்படுகின்றன.

விரைவாக உணவு உண்ணக் கூடாது என்பதை,

விரைவாக உணவுண்ணல் கூடா – அது
விளைந்திடுமே உன்னுயிர்க்குக் கேடாய் (பக். 69)

என்றும், சாலையில் நடக்கும்போது சாலை விதிகளைக் கடைப்பிடித்து நடக்கவேண்டும் என்பதை,

பள்ளிக்கு போகின்ற வேளை – தம்பி
பார்த்தேநீ போக வேண்டும் சாலை (பக். 71)

என்றும் குறிப்பிட்டு இளம் உள்ளங்களில் கருத்தினை நன்கு பதிய வைக்கிறார்.

இவ்வாறாய்ப் பக்கத்திற்குப் பக்கம், பயின்று பயன் பெற வேண்டிய முறையில் நூல் அமைந்திருக்கிறது.

இன்றைய குழந்தைகள் எதிர்காலப் பெரியோர்கள். எதிர்காலத்தில் அவர்கள் பொறுப்புடன் நடப்பதற்கு இளமையில் அவர்கள் உள்ளங்களில் நல்ல கருத்துகள் பதிக்கப்பட வேண்டும். எதிர்காலத்தில் படர்ந்து ஆலாய் விரிந்து வளரவேண்டிய கருத்து விதைகளை இந்நூல் வழியாக ஆசிரியர் பிஞ்சு உள்ளங்களில் தூவி விடுகிறார். அவர் இன்னும் இதுபோன்ற நூல்கள் பலவற்றை நாட்டுக்கு அளித்துச் சிறக்க வேண்டுமென உளமார வாழ்த்துகிறேன்.

நூல் ஆக்கம்	ஒற்றியூர் உத்தமன்
வகைமை	குழந்தை இலக்கியம்
வெளியீடு	இரத்தினம் பதிப்பகம், சென்னை.(1979)

28

ஊமை ராகங்கள்

கால்நடை மருத்துவராகவும், சிறந்த கவிஞராகவும் விளங்குகின்ற திரு. மதியழகனின், 'ஊமை ராகங்கள்' உயிருருக்கும் இன்னிசையாய்ச் சிறக்கிறது.

தமிழிலே மருத்துவம் எழுது — நீங்கும்
தரணிக்கு நேர்ந்திடும் பழுது

என அவர் கூறுவதால், "எங்கும் தமிழ், எதிலும் தமிழ்" என்பது இக்கவிஞரின் கொள்கை என நன்கு விளங்குகிறது. இவரது தமிழ்த்தாய் வாழ்த்து உணர்ச்சித் தளும்பலாய் அமைந்திருக்கிறது.

விலங்கினம் தோன்றிடும் முன்பே
விளங்கிடும் தமிழே எம்தாயே!
விலங்கின மருத்துவர் நாங்கள்
வணங்குவோம் ஏற்றருள் வாயே!

இவை பன்முறையும் படித்துப் படித்து அசைபோட வேண்டிய அருமையான அடிகளாய் உள்ளன.

கால்நடைகளின் பெருமையை அருமையாய்க் கூறுகிறார். கால்நடைகளைச் "செல்வம் அற்றோரின் சேமிப்பு வங்கிகள்" என்கிறார். மனித குலம் 'அம்மா' என்ற சொல்லைப் பெற்றதே கால்நடைகளிடமிருந்துதான் எனப் பெருமையாய்க் கூறுகிறார். "காரியென்றும், வெள்ளையென்றும் எங்களிலே நிறங்கள் உண்டு; ஆனால், நிறவெறி இல்லை" என விலங்குகள் சொல்வதாய்க் கவிஞர் அமைத்துள்ள பகுதி, ஆறறிவு படைத்த மக்கட்குலத்திற்கு ஒருமைப்பாட்டுணர்வைத் தூண்டும் அரிய சிந்தனைச் சுடராகும்; நிற வெறியர்களுக்குச் சாட்டை அடியும் ஆகும்.

கால்நடை, கால்நடை மருத்துவம் ஆகியனபற்றிய அரிய செய்திகளை இனிய கவிதைகளில் தருகிறது, இந்நூல்.

பசுவின் பாலில்,

கொழுப்புச்சத்து இருக்குனுண்ணா தங்கரத்தினமே
கொழுக்கட்டைப்புல் போடவேணும் பொன்னுரத்தினமே

நெய்யும்நல்லா இருக்குனுண்ணா தங்கரத்தினமே
'நேப்பியர்புல்' போடவேணும் பொன்னுரத்தினமே

என்பது சிறந்த கால்நடைப்பேணல் கவிதையாகிறது.

கோமாரிநோய் வந்திடாமல் தங்கரத்தினமே
குத்தவேணும் தடுப்பூசி பொன்னுரத்தினமே
வெக்கைநோயைத் தடுப்பதற்குத் தங்கரத்தினமே
இரிண்டர்பெஸ்ட்டு தடுப்பூசி போடணுமே பொன்னுரத்தினமே

இப்பகுதி கால்நடை மருத்துவத்தைக் கவிதையில் கூறுகிறது.

சிந்தி, ஜெர்சி என உயர்ந்த இன மாடுகளாய் இருந்து விடுவதாலேயே அவை தவலை நிறையப் பால் தந்துவிடா. சாதிமாடு என்றாலும் சத்துணவு கொடுத்தால்தான் நிறையக் கறக்கும் என்பதை "என்னா பொன்னு" என்ற கவிதை விளக்குகிறது.

"கோழிப்பண்ணை கோடிப் பணம் தரும்" என்பதை விளக்கி, அதை அமைக்க அரசு வங்கிகளில் கடனுதவி பெறலாம் என்ற அறிவுரையையும் தருகிறார்.

"நாட்டில் செல்வம் பெருக நல்லதொரு மாட்டுப்பண்ணை வேண்டும்" எனக் கால்நடைப் பெருக்கத்தின் இன்றியமை யாமையை உணர்த்துகிறார்.

ஏட்டினிலே கால்நடையின்
அறிவு தன்னை;
இளமைமுதல் மாணவர்க்கு
அளிக்க வேண்டும்

எனக் கால்நடைச்செல்வம்பற்றிய அறிவு அனைவர்க்கும் கற்பிக்கப்பட வேண்டும் என்றும் விழைகிறார்.

நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்

என்பது, திருக்குறள். இதனை நன்குணர்ந்த இம்மருத்துவக் கவிஞர் வெக்கை நோயைப் பாடும்போது, நோய் பரவும் முறையையும், நோயின் அறிகுறிகளையும், அதைத் தடுப்பதற்கான முறைகளையும் அருமையாக எடுத்துக் கூறுகிறார்.

இந்நோய் வெப்ப நாள்களில் விரைந்து பரவும். நோய் கண்டதும் மாட்டின் உமிழ்நீர் ஓயாது வடியும்; காய்ச்சல் மிகுதியாகும்; கண்களிலும் வாயிலும் கட்டியாய் நீர் வடியும்; கட்டான உடல் தளர்ந்து காய்ந்த தட்டுப் போல மெலியும்; நாக்கின் அடிப்புறத்திலும், 'ஈறு' மீதும் புண்கள் தாக்கும்.

அம்மாடு குடித்த நீரை மற்ற மாடுகள் குடித்தால் அவற்றை உடனே இந்நோய் தாக்கிவிடும்.

இந்நோய் ஏற்படாமல் தடுக்க, 'இளம்பிள்ளை வாதம்' தாக்காதிருக்க நம் குழந்தைகட்குத் தடுப்பூசி போடுவதுபோல, கால்நடைக் கன்றுகளுக்கும் பிறந்த ஆறு அல்லது ஏழு திங்களில் தடுப்பூசி போட வேண்டும்.

நோய் கண்ட மாட்டினை மற்ற மாடுகளினின்று தனியே பிரித்து வைக்க வேண்டும். மாடுகள் இறந்தால் உடனே ஆழக் குழி தோண்டிப் புதைக்க வேண்டும்; அதன் கயிறு, கழிவு அனைத்தையும் தீயிட்டுக் கொளுத்திவிட வேண்டும் என மருத்துவ அறிவுரை கூறுகிறார்.

"தமிழால் முடியும்; அதுவும் மருத்துவத்தையும் தமிழால் கவிதையாக்க முடியும் என்ற உணர்ச்சியோடு இந்த நூலை எழுதத் தொடங்கிய எனக்கு,

சாதிக் கொடுமைகள், மதத்தின் அட்டூழியங்கள், வறுமையின் சீற்றம், வாட்டும் பசி, கடவுள் பெயரால் தாண்டவமாடும் தகாத செயல்கள், சாக்கடையோர வாசிகளின் பரிதாப நிலை, சதிகாரக் கும்பலின் ஆணவப் போக்கு என இந்நாட்டில் புரையோடிவிட்ட சமுதாயப் புற்றுநோய்கள்பற்றிய சிந்தனையும் எழுந்தது. எனவே, விலங்குகட்கு மட்டுமன்று, விலங்குகட்கும் கீழாய் நடத்தப்படுகின்ற மக்கள்பற்றியும் எழுதவேண்டியதாயிற்று" எனக் கூறிச் சமுதாயச் சிந்தனைபற்றிய சில கவிதைகளையும் ஆசிரியர் இந்நூலில் தந்துள்ளார்.

உழவர்கள் கடுமையாய் உழைத்துத் தங்கள் உழைப்பின் பயனை நுகர முடியாதவர்களாய் இருக்கும் இழிநிலையை உணர்த்த அவர்களை, 'விதவை போட்ட பூந்தோட்டம்' எனக் குறிப்பிடுவது மிக நுணுக்கமான சிந்தனையாகும். விதவைகள் நீரூற்றிப் பூந்தோட்டத்தைச் செழிப்பாய் வளர்க்கலாம்; ஆனாலும், அதில் பூக்கும் பூக்களை அவர்களால் சூட முடியாதே!

எங்களின் உழைப்பே
விதவை போட்ட
பூந்தோட்டம் போல
எங்களுக்கு இல்லையே!

என்பது உழைக்கும் விவசாயிகளின் ஊமைக்குரல்.

நாங்கள் பிறக்கும்போதே
கறுப்புச் சட்டையோடு பிறக்கிறோம்
காரணம் –

இன்னும் விலங்குக் காட்சிச் சாலையில்
எங்களுக்கு
இடம் ஒதுக்கவில்லை

எனக் காகங்கள் கூறுகின்றனவாம்! விலங்குக் காட்சிச்சாலைகளில் காகம் இடம் பெறுவதில்லை என்பதை மிகவும் நாசூக்காகவும் நகைச்சுவையாகவும் கவிஞர் இவ்வாறு குறிப்பிடக் காண்கிறோம்.

தந்தை பெரியாரின் அடிச்சுவட்டிலே நடைபோடும் கவிஞர்,

கல்லுக்கும் செம்புக்கும்
இந்த நாட்டில் கோபுரங்கள்;
கடிதாக உழைப்பவர்க்கோ
கூவம்நதிச் சமவெளிகள்

எனக் கொதிப்பது நியாயந்தானே?

தீண்டாமைக் கொடுமையைச் சாடுவதில் கவிஞர் காட்டும் வேகம் வரவேற்கத்தக்கது. தீண்டத்தகாதவர் விரல் பட்டாலே தீட்டாம்; ஆனால், அவர்கள் தொட்டுப் பயிராக்கும் வெண்டைக்காயில் அத்தீட்டு இல்லையோ? அரிசனங்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதைவிட்டு அரிசனங்களையே 'தீர்க்கிறார்களே' பாவிகள் எனக் கவிஞர் நெஞ்சு உருகுகிறார். "விழுப்புரத்தில் எரிந்தது அரிசனங்களின் வீடுகளுமல்ல, மனிதக் கூடுகளுமல்ல; அங்கே சாம்பலானது மனிதப் பண்பாடு" எனக் குமுறுகிறார்.

காதல் கவிதைகளைப் பாடுவதிலும் கவிஞர் உயர்ந்து நிற்கிறார். காதலியின் கண்களைச் 'சிரிப்புக் கண்' என்றும், "தேவி உன் தரிசனத்திற்காக யுகம் யுகமாய்க்கூட காத்திருக்க முடியும் ஆனால்...... உன் பாத பூசைக்காக வாங்கிவந்த ரோசாக்கள் வாடிவிடுமே!" என்றும் குறிப்பிடும் இடங்கள் எண்ணி மகிழத்தக்கன. காதலன் காதலியிடம் கூறுகிறான்

உன் அப்பாவிடம் சொல்
        நான் கேட்கும்
வரதட்சணையே, உன்
        புன்'னகை'யைத்தான்.

நகை கேட்கிறான்; பொன் நகை அன்று; அவள் புன்னகை. காதற்சாறு வடியும் கரும்புக் கவிதை இது.

கரையான் புற்றுத்தானே என்று
களங்கமற்றுக் கையை விட்டேன்;
கடிபட்ட பிறகுதான் தெரிந்தது – அது
கருநாகத்தின் கண்ணாடி மாளிகை என்று.

இவை போன்று இதயத்தில் இருத்திக்கொள்ள வேண்டிய பாடலடிகள் பல இந்நூலில் உள்ளன.

அரிய கற்பனைகள் இந்நூலில் ஆங்காங்கே பளிச்சிடு கின்றன.

வானக் குமரிக்கும்
வெய்யோ னுக்கும்
நடைபெற்ற திருமணத்தில்,
மணப்பெண் கூந்தலில்
கதம்ப மாலை

ஆக, வானவில், கவிஞர்க்குக் கதம்ப மாலையாய்க் காட்சியளிக்கிறது.

இரவு அரசன் மேகப்பெண்ணை முரட்டுத்தனமாய் அணைக்கிறான். அவன் அணைத்த அணைப்பின் இறுக்கத்தில் ஆடையே கிழிகிறது. அக்கிழிசலே மின்னல்.

இடியரசனின்
முரட்டுத் தழுவலில்
கார்மேகத்து
ஆடையின் கிழிசல்.

கவிஞர் உள்ளத்தில் இப்படியொரு கற்பனையைப் பளிச்சிடச் செய்கிறது, மின்னல்.

மெழுகுவத்தி எரியும்போது கண்ணீர் விடுகிறதே ஏன்? 'நாம் காலங்காலமாய் ஒளி தந்து வருகிறோம். நேற்று வந்த சக்களத்தி மின்விளக்கு நம்மை மங்கச் செய்துவிட்டாளே!' என்ற ஏக்கத்தால் பிறந்த கண்ணீரோ?

இரவுப் பள்ளியில்
நேற்று வந்த
மின்விளக்குச் சக்களத்திக்கு
இவ்வளவு செல்வாக்கா? என
ஏக்கக் கண்ணீர் உகுக்கிறதோ!

எரியும் மெழுகுவத்தி ஏற்றிவைத்த கற்பனை இது.

அட்ரினலின் (Adrenaline) என்பது நம் உடலில் உள்ள நாளமில்லாச் சுரப்பு நீர். சினத்தின் போதும் அச்சத்தின் போதும் நம் உடலில் இது அதிகம் சுரப்பதால் முகம் சிவப்பாகிறது. அந்திவானச் சிவப்புக்கு இந்த அறிவியல் உண்மை ஒரு கற்பனையைத் தோற்றுவிக்கிறது.

இருளரக்கனைக்
கண்ட பயத்தில்

'அட்ரீனலின்' அதிகம் சுரந்ததால்
வான தேவிக்கு
முகம் சிவந்ததோ?

கூந்தலை,

மூப்பைக் காட்டும் அறிவிப்புப் பலகை

குடும்பச் சண்டையில் மாமியாருக்குக்
கிடைக்கும் அருமையான கைப்பிடி

என்றும்;

அருவியை,

குறிஞ்சி மன்னனைப் பிரிந்ததனால்
விதவைக் கோலம் பூண்டு
வெள்ளையாடை புனைந்ததுவோ?

என்றும்;

அன்னத்தை,

பாலிலிருந்து தண்ணீரைப் பிரித்த முதல் விஞ்ஞானி

என்றும்;

கொசுக்களை,

இரவுப் பள்ளியறைகளில் மெல்லிசை வாணர்கள்

என்றும்;

அழகை,

உலகிலேயே சிறந்த சிபாரிசுக் கடிதம்

என்றும்;

விதவைகளை

நாளும் கரைந்து கொண்டிருக்கிற பச்சை மண்பானைகள்

என்றும் கூறும் இடங்கள் கவிஞரின் கற்பனைத் திறத்திற்கு முத்தாய்ப்புகளாய் விளங்குகின்றன.

இளமையில்
ஞாயிற்றுக்கிழமைகூட
எங்கட்கு விடுமுறை கிடையாது

எனத் தாசியர் கூறுவதாய் உள்ள பகுதி, சமுதாய இழிநிலையைக் காட்டுவதோடு அப்பெண்களின் வேதனையை வெளிப்படுத்துவ தாயும் அமைகிறது.

நம் நாடு அடிமைத்தளையிலிருந்து நீங்கியது; ஆயினும், அடிமைக் கொடுமைகள் இன்றும் ஆட்சி செய்தவண்ணம்

இருக்கின்றன. விடுதலை பெற்றும் பெறாத நிலையே! தேசபக்தன் தன் சகோதரனுக்கு எழுதுவதாய் ஒரு கடிதம் :

சுதந்தரமே!
உன்னைக் காணாமல்,
அப்பா மரணப் படுக்கையில்
இருக்கிறார்;
அம்மா அழுது கொண்டே
இருக்கிறாள்;
நடந்ததை யெல்லாம்
மறந்து விடு
உடனே வீடு வந்து சேர்

அன்புச் சகோதரன்,
'தேசபக்தன்'

'அங்கதம்' படைப்பதிலும் கவிஞர் வல்லவர் என்பதை இங்கே மெய்ப்பிக்கிறார்.

இந்நூல் கவிஞரின் முதற்படைப்பாகும். ஊமை இராகத்தில் நாம் உயர்ந்த இராகத்தையே உணர முடிகிறது. முதற் படைப்பிலேயே அவர் வெற்றி பெற்றிருப்பதோடு, எழுச்சிக் கவிஞர் என்ற முத்திரையையும் பெற்றிருக்கிறார். இவரது கவிதைத் திறன் மேலும் ஓங்கிச் சிறக்க வேண்டுமென உளமார வாழ்த்துகிறேன்.

நூல் ஆக்கம்	கவிஞர் பெரு. மதியழகன்
வகைமை	புதுக்கவிதை
வெளியீடு	முத்தமிழ்ப் பண்ணை, பொம்மிடி, தருமபுரி மாவட்டம். (1980)

29

ஓர் அழகின் வெளிச்சம்

அண்மைக் காலத்தில் புதுக்கவிதைப் படைப்புகள் பல வெளிவந்த வண்ணம் உள்ளன. கவிஞர் பா. உதயகுமார் அவர்களின், 'ஓர் அழகின் வெளிச்சம்' எனும் இந்நூல் அவ்வரிசையில் ஒன்றாகிறது. மரபுக் கவிதை, புதுக்கவிதை - இரண்டும் நோக்கிலும், போக்கிலும், யாப்பிலும் முற்றும் மாறானவை; வேறானவை. எனவே, இரண்டையும் ஒன்றுபடுத்தி நோக்குவது அல்லது ஆய்வு செய்வது பொருத்தமாகாது. சமுதாய அவலங்களை, கொடுமைகளைப் படிப்போர் மனத்தில் நறுக்கெனப் பதிப்பதே புதுக்கவிதைப் போக்காய் இருந்துவருகிறது. இந்நூலுள் அத்தகைய கருத்து வீச்சுகளை நாம் காண முடிகிறது.

இலங்கையில் தமிழர்கள் படுகொலை செய்யப்படுவதையும், தமிழ்ப்பெண்டிரின் கற்பு சூறையாடப்படுவதையும், சிங்கள வெறியர்களின் கொடுமைப் போக்கையும் அனல் கக்கும் சொற்களால் கவிஞர் சுட்டிக் காட்டுகிறார். கொல்லாமையை அறமெனக் கொண்டுள்ள புத்த மதம் தழைத்துள்ள அங்குத்தான் எத்துணை எத்துணை உயிர்க்கொலை; கவிஞர், நெஞ்சு குமுறிப் பாடுகிறார்;

> தோட்டா மழையில்
> 'தம்மபத' நாற்றுகள்
> அடித்துச் செல்லப்படுகின்றன.
>
> 'மகாயானம்'
> அங்கே
> மயானம் ஆகிறது.
>
> தமிழச்சியின் குருதியிலே
> 'புத்தச் சிலைகள்'
> துடைக்கப்படுகின்றன.
>
> இப்போது
> நீர்த் திடலில்
> நெருப்புப் பந்தாட்டம்!

சிங்களர்கள்
எல்லோருமே
'இராமதூதர்' ஆகிறார். (பக். 22–23)

மகாயானம் (புத்தமதத்தின் ஒரு பிரிவு) மயானமாகிறது என்பதும் சிங்கள வெறியர்கள் இராமதூதர்கள் ஆகின்றனர் என்பதும் சிங்களவர்களின் கொடுமையைப் புலப்படுத்துகின்றன. இலங்கையை, 'நீர்த்திடல்' என்கிறார், கவிஞர்.

நாடு விடுதலை பெற்றும் அடிமை வாழ்வில் அனுபவித்த தொல்லைகள் இன்னும் அகலவில்லையே எனும் ஏக்கத்தை,

பாரதத் தாயின்
விலங்குகள் எல்லாம்
மறுபடியும்
வளையல்களாக
இந்தியர் கைகளிலே
ஏற்றப் படுகின்றன (பக். 26)

என்னும் அடிகளில் உணரமுடிகிறது.

வாக்களிக்கும் உரிமை இருந்தால் மட்டும் போதுமா? மக்கள் வாழ்வில் இன்பம் கொழித்தாலல்லவா நாட்டு விடுதலையை நாம் துய்க்கிறோம் என்பது பொருள். வாக்காளர் பட்டியலில் இடம் பெறுவோர் நல்வாழ்வுப் பட்டியலிலேயும் இடம்பெற ஏற்ற செயல்களைச் செய்ய வேண்டுவதே விடுதலையின் பயன்!

வாக்காளர் பட்டியலிலே
இடம்பெற்ற நாங்கள்
வாழ்க்கைப் பட்டியலில்
இடம்பெறவே இல்லை! (பக். 71)

இந்த இதய வேதனையைப் போக்க வேண்டியது நம் பொறுப்பல்லவா?

இருக்க இடமின்றி நடைபாதையிலே மக்கள்; குப்பையும் கூளமும் கொசுக்களுமே அவர்களுடைய கூட்டாளிகள்! இந்நிலை நாட்டில் மாறவேண்டாவா? நடைபாதை வாசிகளின் குரலாகக் கவிஞர் பாடுகிறார் :

கொசுக்களின்
விவாதக் கருத்தரங்குகளே
எங்கள் மேனிமேடையில்தான்
அடிக்கடி நடக்கும்!
அவற்றிற்கு நீதிபதிகள்
எங்கள்
கைகளும் கால்களும்தான்! (பக். 66–67)

கவிஞர்கள் காதலைப் பாடாமல் இருக்க முடியுமா? அந்தப் பொது இலக்கண வரம்புக்குள் இந்தக் கவிஞரும் இடம் பெறுகிறார்.

காதலியின்,

அழகின் மடியில்
அடிமையாய்க் கிடப்பதுதான்
என்
ஆத்ம சுதந்திரம் (பக். 19)

என்கிறார்.

இருநோக்கு இவளுண்கண் உள்ளது ஒருநோக்கு
நோய்நோக்(கு) ஒன்(று)அந்நோய் மருந்து. (குறள் 1091)

பெண்ணின் ஒரு நோக்கு நோயைத் தரும் நோக்கு! அந்நோயைத் தீர்க்கும் மருந்து அவளின் மற்றொரு நோக்கே தவிர, வேறு எதுவுமில்லை என்பார் திருவள்ளுவர். இக்கருத்தைக் கவிஞர் உதயகுமாரும் நயமாக எடுத்துரைக்கிறார்.

பெண்களே!
நீங்கள் பாருங்கள்;
நோக்காதீர்கள்!
நோய் ஆவது
ஆடவர் இதயம் தான்! (பக். 27)

ஊமையர்கள் தங்களால் பேசமுடியாததை எண்ணிக் கண்ணீர் வடிப்பதைப் பாடியுள்ள அடிகளில் சோகம் இழையோடுகிறது.

மொழி வேறுபாடு தெரியாது என்பதால் ஊமையர்களை 'மௌன சோஷலிஸ்டுகள்' என்று கவிஞர் குறிப்பிடுவது நயம் நிறைந்தது. உருவகங்கள் இந்நூலுள் உயிர்த்தன்மை பெற்றுச் சிறக்கின்றன.

நதியை, 'யுகத்தின் அனுபவ நரை' என்றும் (பக். 20), மலடாயுள்ளவர்களைப் 'பருவ விளைவுக்கு ஒத்துவராத பாவ பூமிகள்' என்றும் (பக். 39), பசியைப் 'புரட்சியின் ஊதுகுழல்' என்றும் கூறியிருப்பது (பக். 50) சிந்தனைக்குரியது.

நாட்டுத் தலைவர்களை நன்றியுணர்வோடு கவிஞர் நினைவு கூர்ந்திருப்பது பாராட்டுக்குரியது. அண்ணா எனும் ஆலமரம் விட்டுச் சென்ற சிந்தனை விழுதுகள் கோடிகோடி! மன வளையங்களை எங்கோ எறிந்துவிட்டு மலர் வளையங்களை மட்டும் வைப்பது அவருக்குச் செய்யும் அஞ்சலியாகாது என்கிறார் கவிஞர். தலைவர்களின் சிந்தனைவழி நடப்பதுவே அவர்கட்கு உண்மையான வழிபாடாம்! கவிஞரே சொல்வதுபோல ஆகா நெறியை அகற்றி ஆகும் நெறியைப் புதுப்பிக்க அண்ணா தந்த,

அந்த
விழுதுகளையே
நாம்
ஊஞ்சலாக்குவோம்! (பக். 83)

மூடத்தனத்தின் முடைநாற்றம் வீசிய தமிழகத்தைத் தம் அயரா உழைப்பால் பகுத்தறிவுப் பூஞ்சோலையாக்கினர் தந்தை பெரியார். இதனைக் கவிஞர்,

அந்த ஞானக் கதிரின்
நிழல் பட்டால்
அமாவாசை யான
மனங்கள் கூடப்
பௌர்ணமி யாகும் (பக். 88)

என்கிறார். நம்பிக்கையிருந்தால் நாட்டில் எதையும் சாதிக்கலாம். நம்பிக்கையை இழந்தால் நாம் அனைத்தையும் இழந்தவர்க்ளாவோம்! நெஞ்சில் நம்பிக்கை நிலைபெற்று நின்றால் எதிர்ப்படும் எதையும் தூள் தூளாக்க முடியும் எனக் கவிஞர் ஊட்டும் நம்பிக்கைச் சொற்கள் இதோ!

உன்றன் சூரிய விழுதுகள்
என் மண பூமியில்
ஊன்றி நிற்கின்றவரை,
என்னை நோக்கி வருகின்ற
மிருக பலங்கள் எதுவானாலும்
சந்திப்பதில் என்றும்நான்
இரணியன்தான்! (பக். 80)

நாட்டில் இல்லாமை, கல்லாமை ஆகியவை அகன்று உண்மை, உழைப்பு ஆகியவை மேலோங்கி மக்கள் நல்வாழ்வு பெறும்நாள் விரைவில் மலரும் எனும் நம்பிக்கையோடு கவிஞர் பாடுகின்றார்.

நிச்சயம் ஒருநாள்
நெருஞ்சிகள் அழியும்
குறிஞ்சிகள் மலரும்! (பக். 79)

துன்பமாம் நெருஞ்சி அகன்று, இன்பமாம் குறிஞ்சி பூத்திடக் கவிஞரோடு சேர்ந்து நாமும் நாளும் உழைப்போம்.

நூல் ஆக்கம்	கவிஞர் பா. உதயகுமார்
வகைமை	புதுக்கவிதை
வெளியீடு	கலைச்செல்வி பதிப்பகம், சென்னை. (1984)

30

வெளிச்சம் வருகிறது

கவிஞர் ஜெயமாலிகா கண்ணனின் 'வெளிச்சம் வருகிறது' என்னும் இக் கவிதை நூல் கைக்குக் கிடைத்ததும் உடனே படித்துப் பார்த்தேன்.

அடக்கமான நூல்; அழகான அச்சுப் பதிவுகள்; விலையுயர்ந்த தாள்; விவரம் செறிந்த கவிதைகள்; ஆங்காங்கே கவிதைக் கருத்துணர்த்தும் வண்ண வண்ண ஓவியங்கள் - என் கண்ணையும் கருத்தையும் ஒருங்கே கவர்ந்தன.

கூடுதல் செலவுக்கஞ்சி இன்று குறைப்பேறாய் வெளிவரும் நூல்களுக்கிடையே, இந்நூல் கண்ணையும் கருத்தையும் கவரும் வண்ணம் உருவாக்கப்பட்டிருப்பது மகிழ்ச்சியாயிருக்கிறது. சிறு நூலானாலும் சிந்தைக்கினியதாய் அழகுணர்ச்சியோடு வழங்கும் மேனாட்டு நன் மனப்பான்மை நமக்கும் உண்டு என்பதற்கு இந்நூல் சிறந்த எடுத்துக்காட்டாய் விளங்குகின்றது.

இத்தகு இனிய கவிதை நூலை ஆக்கித் தந்த கவிஞர் அவர்களை மனமாரப் பாராட்டி மகிழ்கிறேன்.

இஃது ஒரு சிறு நூல்; ஆனாலும் சிறந்த நூல். 98 கவிதைகள் இதில் அடங்கியுள்ளன. ஒன்றிரண்டைத் தவிர எல்லாக் கவிதைகளுக்கும் ஒரு சில அடிகள்தான் உருவங்கள்.

கவிதை அடிகள் குறைவுதான்; ஆனாலும் வனப்பு மிகுதி. ஒவ்வொரு கவிதையும் கற்கண்டுத் துண்டாய் இனிக்கிறது.

"இலக்கணம் இல்லை; எதுகை மோனை எழில் இல்லை; வட சொற்கள் தடையின்றி வழங்கப்படுகின்றன; பல கவிதைகளுக்குப் பொருளே புரிவதில்லை; வெறுப்படைந்த மனத்தின் வெளிப்பாடு தான் தெரிகிறது; உருவகங்களே உருவங்களாய் உள்ளன; நேரே எழுதும் உரைநடையைச் சற்றே நிறுத்தி - சொற்களை உடைத்துச் சிதைத்து மேலிருந்து கீழாய் எழுதிவிட்டால் அதுவே புதுக்கவிதை; புதிதாக எதுவுமே இல்லாத ஒன்றுதான் புதுக்கவிதை-" இவை போன்ற பற்பல கருத்துகளைப் புதுக்கவிதையை ஏற்காதவர்கள்

கூறுவதுண்டு. ஒரு சில புதுக்கவிதைகள் மேற்கூறிய இயல்புகளைக் கொண்டிருக்கலாம். அதற்காகப் புதுக்கவிதையே பொல்லாதது – தீண்டத்தகாதது என்று ஒதுக்குவது அழகன்று. 'ரோசா'வில் முள் இருக்கிறது என்பதற்காகப் 'பூவே' வேண்டாம் என்று சொல்லி விடக்கூடாது - முடியாது.

கன்னித் தமிழ்த்தாய் காலத்திற்கேற்றவாறு கோலம் புனைந்து முன்னைப் பழமைக்கும் பழமையாய்ப் பின்னைப் புதுமைக்கும் புதுமையாய் என்றென்றும் வனப்போடு விளங்குகிறாள்.

ஒரு காலத்தில் செய்யுள் இலக்கியமேயன்றி, சோதிடம், தத்துவம், வானவியல், காப்பியம் அத்துணையும் பாட்டு வடிவத்திலேயே பெற்று மகிழ்ந்திருந்தவள், பிற்காலத்தில் அவற்றையே கவிதையாய் கதையாய் புதினமாய் உரைநடையாய்ப் பெற்றுச் சிறந்து வருவதைக் காண்கிறோம்.

அந்த வரிசையில் காலம் 'புதுக்கவிதை' இலக்கியத்தையும் அவளுக்குச் சூட்டிப் பெருமை கொள்கிறது.

'புதுக் கவிதை கவிதையாகுமா?' என்ற ஆராய்ச்சியில் ஈடுபடுவதைவிட, தோன்றிவிட்ட புதுக்கவிதை கவிதையாய் இருக்கிறதா என்று பார்ப்பதே நம் நோக்கமாய் இருக்கவேண்டும்.

உரைநடைகூட அழகோடு - உணர்ச்சியோடு - நெஞ்சில் நிற்கும் தகுதியோடு அமைந்தால், அதுவும் கவிதையாய்த்தான் வாழ்வு பெறுகிறது. பாட்டுக்கொரு புலவன் பாரதியின் வாக்கில்வந்த உரைநடைகளெல்லாம் 'வசன கவிதை' என்று வழங்கப்படுவதை எண்ணிப் பார்க்கவேண்டும்.

எந்தக் கவிதை பொருள் பொருந்தி நிற்கிறதோ, உண்மையை உள்ளடக்கமாய்க் கொண்டிருக்கிறதோ, அதைக் கவிதை என்று ஏற்றுக் கொள்ளத் தடையோ தயக்கமோ தேவையில்லை. அந்த வகையில் உள்ளத்து உள்ளதாய், நெஞ்சைத் தொட்டு நிலைப்பதாய் இருக்கும் புதுக்கவிதைகளை வரவேற்பது வரவேற்கத்தக்கதே!

புதுக்கவிதையாளர்களில் பலர் வடமொழிச் சொற்களையும், ஆங்கிலச் சொற்களையும் வலுக்கட்டாயமாகப் புகுத்துவதும், பொருளே புரியாத புதிர்க் கவிதைகளைப் படைத்துப் படிப்போருக்கு மயக்கம் ஏற்படும்படிச் செய்வதும் ஒரு குறையாய்த்தான் அமைந்து விடுகிறது.

தமிழில் எழுதப்படும் புதுக்கவிதைகளில் வேற்றுமொழிச் சொற்கள் ஆதிக்கம் இருந்தால், தமிழில், 'சொல் வறுமை' இருக்கிறது என்றுதானே பொருள்? அதனால், தமிழுக்குத்தானே இழுக்கு? இதனை எண்ணிப் பார்த்தப் புதுக்கவிஞர்கள் செயற்படவேண்டும் என்பது என் வேண்டுகோள்.

இந்தக் கண்ணோட்டத்தோடு நோக்கும்போது கவிஞர் ஜெயமாலிகா கண்ணனின் இப் புதுக்கவிதை நூல் உயர்ந்து நிற்கிறது. தமிழ்த்தாய் வாழ்த்து முதல், தமிழக முதல்வர் தாயகம் திரும்பியுள்ளதுவரை பல கருத்துகளை இவர் கவிதையாய்த் தந்துள்ளார். சமுதாயப் படப்பிடிப்பு நூலாய் இஃது அமைந்துள்ளது.

இதோ
வெளிச்சம்
வருகிறது!
இருட்டு உலகின்
குருட்டு மனங்களே
விலகிப் போங்கள்!
என்னை எண்ணெய் ஆக்கி – நல்
எண்ணத் திரிகள் வைத்து
எரிய விடுகிறேன் இதயத்தில்!
எரிதழல் வெளிச்சம்
எங்கும் பரவட்டும்!

என்ற கவிதை 91ஆம் கவிதையாகப் பக்கம் 103இல் இடம் பெற்றுள்ளது. இதுதான், 'வெளிச்சம் வருகிறது' என்று இந்நூல் பெயர்பெறக் காரணமாயமைந்திருக்கிறது.

சமுதாயத்தில் உள்ள குறைபாடுகள் எனும் இருள் நீக்கக் கவிஞர் ஓர் ஒளி விளக்கு ஏற்றுகிறார். அந்த விளக்குக்கு எண்ணெய் கவிஞரே; திரி நல்லெண்ணம்; மற்றவர்கள் ஒளிபெறத் தன்னையே வழங்குகின்றது எண்ணெய்! அதுபோல், 'என்னைப் பற்றிக் கவலைப்படாமல் சமுதாய நல்வாழ்வையே நான் கருதுகிறேன்' என்று சொல்லாமற் சொல்லும் கவிஞரின் நல்லுள்ளத்தை இவர் கவிதைகளிலிருந்து நாம் புரிந்து கொள்ள முடிகிறது.

'தமிழ்! தமிழ்!' என்று நாம் பெருமையாய்ப் பேசுகிறோம். ஆனால், நம்முடைய உள்ளம் தமிழின்பால் உண்மையாகவே பற்றுடையதாய் இருக்கிறதா? தமிழில் பேசுவது குறையானது எனக் கருதும் தமிழர்களும் இருக்கத்தானே செய்கிறார்கள். இதனை,

அன்னைத் தமிழே!
அமிழ்தே! உந்தன்
காலடியில் வணக்கம்!
ஆனால் – எங்கள்
கண்கள் மட்டும்
ஆங்கில மொழிக்கே
அலைவதைப் பாரேன்... (பக். 11)

என்று நெஞ்சில் தைக்கும்படி கவிஞர் எடுத்துக் கூறுகிறார்.

"காதல் புனிதமானது; காதலினால் கலவி உண்டாகும்; கலவியினால் மகிழ்ச்சியுண்டாகும். மகிழ்ச்சியினால் மரணம் போகும். ஆதலினால் காதல் செய்வீர் உலகத்தீரே!" என வேண்டுகோள் விடுத்தான் பாரதி. என்றாலும், இந்தக் காதலின் உண்மையும் தூய்மையும் அறிந்து எத்துணை பேர் உள்ளன்போடு பழகுகிறார்கள்? இன்று காதல் என்பது பணத்திற்கும், பகட்டிற்கும், சாதிக்கும் அல்லவா கட்டுப்பட்டுக் கிடக்கிறது? கன்னித் தமிழ் போற்றும் காதல் இன்றைய சமுதாயச் சந்தையில் கானல் நீராக அல்லவா இருக்கிறது என்பதைக் கவிஞரின் பணநாயகி (பக். 26), என்றேனும் (பக். 47), மறைப்பு (பக். 57), குளியலுக்குப் பின் (பக். 66), பணவாசம் (பக். 67), எதிர்பார்ப்புகள் (பக். 85) முதலிய கவிதைகள் வெளிப்படுத்துகின்றன.

கொஞ்சம் நில்லு!
சிந்தனை செய்தால்
உலகத்தில் ஒன்றுமில்லை!
ஆனால்
மறுபடியும் நீ
சிந்தனை செய்வதோ
ஆசை
பாசம்
செல்வம் தானே? (பக். 28)

என்ற கவிதை, உலகில் மனிதனாக வாழவேண்டும் என்பதை வலியுறுத்துகிறது. மக்களாட்சி நடக்கும் நாட்டில் எல்லாமே பணமிருந்தால்தானே நடக்கிறது என்று மனம் புழுங்குகிறார் கவிஞர்.

நீங்கள்
உயர்வதற்காக
ஜனநாயகத்தை
உண்டாக்கினீர்கள்!
அதற்கு
ஏன்

பணநாயகத்தைக்
காவல் வைத்தீர்கள்? (பக். 83)

என்று ‘காவல்’ என்னும் கவிதை இதைத் துயரத்தோடு சொல்லுகிறது.

அன்புள்ள காதலியே!
உன்னை
அணுவணுவாகக்
காதலித்தேன்!
என்
பலவீனங்கள்
அறிந்த நீயோ
என்னால்
எட்ட முடியாதபடி
உன்
‘ரேட்’டை
உயர்த்தி விட்டாய்! (பக். 94)

என்ற கவிதை, அறிவுக் களஞ்சியங்களாக விளங்கும் புத்தகங்களின் விலைகள்கூட உயர்ந்து விட்டனவே என்பதை உருக்கமாக எடுத்துரைக்கிறது.

குருவிகள்கூட உழைத்து உண்ணும் வாழ்க்கையை மேற்கொண்டிருக்கையில் (பக். 110) மனிதன் மட்டும் பிறருடைய உழைப்பில் உயர்ந்திட எண்ணுகிறானே! இஃதென்ன அறியாமை! இதனை,

உனக்கு
‘வளர வேண்டும்’
என்ற ஆசை உண்டு!
ஆனால்
உன்
‘நற்குணமோ’
மற்றவன் உழைப்பில்
உயர்ந்திட
எண்ணுகிறது (பக். 78)

என்று இடித்துக் கூறுகிறார்.

மனித சமுதாயத்தின் தீய போக்குகள் பலவற்றை ஆங்காங்கே பற்பல கவிதைகளில் எடுத்துரைக்கும் கவிஞர், மனம் வெதும்பி,

நான்
மனிதர்களை
நேசிக்க வில்லை!
மிருகங்களை நேசிக்கிறேன்!
கொடிய

மிருகங்களை நேசிக்கிறேன்!
ஏனென்றால்...
அவை
மனிதர்களைப் போல்
பின்புறம்
குத்துவதில்லை! (பக். 79)

எனக் குறிப்பிட்டுள்ளார். மேலும் சிங்களர் செய்யும் கொடுமைக்கும், இந்தியாவின் முன்னாள் தலைமையமைச்சர் திருமதி இந்திரா காந்தி அவர்களைக் கொன்ற வன்முறைக்கும் கண்டனம் தெரிவிப்பதோடு, தமிழக முதல்வர் அவர்கள் நலம் பெற்றுத் தாயகம் திரும்பியதற்குப் பாராட்டுத் தெரிவித்து மகிழுகின்ற கவிஞரை நோக்கும்போது, அவரின் பரந்த கூரிய பார்வை நமக்குப் புலப்படுகிறது.

கவிஞரின் ஒவ்வொரு கவிதையும் கற்கண்டாய் இனிக்கிறது என்று சொல்லி, உங்களுக்கு ஆசை காட்டிவிட்டு, அத்துணையையும் நானே சுவைக்க முற்படுவது சரியாகுமா? எனவேதான் நான் சில துண்டுகளைச் சுவைத்ததோடு நிறுத்திக்கொண்டு, எஞ்சியவற்றை நீங்கள் சுவைக்க உங்களுக்குக் கொடுத்து மகிழ்கிறேன்.

நூல் ஆக்கம்	கவிஞர் ஜெயமாலிகா கண்ணன்
வகைமை	புதுக்கவிதை
வெளியீடு	ஜெயமாலிகா, சென்னை. (1986)

31

இன்னொரு விடுதலை

தமிழில் புதுக்கவிதை நூல்கள் இப்போது பெருமளவில் வெளிவருகின்றன. பழமையின் செல்வாக்கு மரபு எனப் போற்றப்படுகிறது. கருத்துகள் வளர, வளர - தேவைகள் பெருகப் பெருக - மரபுகள் மாற்றம் பெறுகின்றன; மாற்றவும் படுகின்றன. இம்மாற்றம் இயல்பே! ‘பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல’ என்பது முன்னோர் மொழி. தமிழ்க் கவிதைகள் தோன்றிய காலம்தொட்டு இன்றுவரை அவ்வப்போது உருவத்தாலும் உள்ளடக்கத்தாலும் மாறுபட்டே வந்துள்ளன. அகவலில் தொடங்கிய பாக்கள் பின்னர்ப் பல்வகைப் பாக்களாகவும் பாவினங்களாகவும் விரிவடைந்தன. காதலையும் வீரத்தையும் பாடுபொருளாய்க் கொண்டிருந்த நிலை மாறி, நீதி நெறிகளையும் கடவுளரையும் பாடும் நிலைபெற்றுப் பின்னர்ச் சமூக எழுச்சிபற்றி எடுத்துக் கூறுவனவாயின. காலந்தோறும் அடைந்துவரும் மாறுதல் நிலைகளுள் ஒன்றே இன்றைய புதுக்கவிதை. கவிதையில் புதியவை, பழையவை என்றில்லை! உருவத்தால் மாறுபட்ட நிலையைக் குறிக்கப் ‘புது’ என்னும் அடைமொழி சேர்க்கப் பட்டுள்ளது; அவ்வளவே! யாப்புச் சிந்தனையின்றி, கருத்துகளை மையமாகக் கொண்டு, எழுதுவோர்க்கு இயைந்துவரும் வடிவத்தில் படைக்கப்படுவனவே இன்றைய புதுக்கவிதைகள்.

> இலக்கணச் செங்கோல்
> யாப்புச் சிம்மாசனம்
> எதுகைப் பல்லக்கு
> மோனைத் தேர்கள்
> தனிமொழிச் சேனை
> இவை ஏதும் இல்லாது,
> கருத்துகள் தம்மைத் தாமே
> ஆளக் கற்றுக் கொண்ட
> புதிய மக்களாட்சி முறையே

புதுக்கவிதை என்பார் மு. மேத்தா. அதனால் எழுதுவதெல்லாம் கவிதையென்றும் கொண்டுவிட முடியாது; முந்தியுள்ள யாப்பிலக்கணத்தில் அவை அடங்காது போயினும் தமக்குத்தாமே ஓர் ஒழுங்கை உண்டாக்கிக் கொண்டு படிப்போரை ஈர்க்க வேண்டும். அப்படியில்லையாயின் அவை கவிதையாகா! புது வெள்ளம் ஆகாதவற்றையும் சேர்த்து அடித்து வருவது இயல்பே! தெளியும்போது வேண்டாதவை அகலும்; இன்றைய புதுக்கவிதை நிலையும் அதுவே! ஆகாதவற்றைக் காலம் அகற்றிவிடும்! தெளிந்தவை - தேர்ந்தவையே நிலைபெற்று நிற்கும். கலங்கி யிருக்கிறது என்பதற்காக நீரே வேண்டாம் என்று சொல்ல முடியாதன்றோ?

பெரியார் வழியினர்

கவிஞர் எழிலரசு முற்போக்குச் சிந்தனைகளைச் செயலாற்றிடத் துடிப்பவர்; தந்தை பெரியார் பாதையில் தளராது ஊன்றி நடப்பவர் என்பதை இக் கவிதைத் தொகுதி நன்கு புலப்படுத்துகிறது. நாட்டில் சிலர் சித்துகள் செய்து, அவற்றைக் கடவுள் செயல் என நம்பச் செய்து மக்களை மடமைக்குள்ளாக்கி வருகின்றனர். கல்லை எடுத்தார் - லிங்கமாயிற்று; மண்ணைப் பிடித்தார் குங்குமமாயிற்று என்கிறார்களே! லிங்கத்தையும், குங்குமத்தையும் விடுத்து மக்களுக்கு இன்றியமையாத அரிசியையும், ஆடையையும் இவர்கள் உண்டாக்கலாமே? ஏன் முடியவில்லை?

என்ன கொடுத்தால்
அரிசி வருமாம்?
என்ன கொடுத்தால்
ஆடை வருமாம்?

என்னும் இவருடைய கேள்விகள் ஆண்டவன் பெயரால் மோசடி செய்வோர்க்குக் கொடுக்கப்படும் சாட்டையடிகளாம்!

நாட்டில் மூடப் பழக்க வழக்கங்கள் ஆட்சி செய்யும்வரை எந்த முற்போக்கு எண்ணமும் வளர இயலாது. புரட்சி, அதைப் புரிந்தவர்களாலேயே செய்ய முடியும்! அய்யர் என்பதும் அரிசனம் என்பதும் பொய்யாகாதவரை சமத்துவம் பூப்பதேது? தேரின் வடம் இழுத்தே பழகிய கைகள் வர்க்கப் போராட்டத்தை மேற்கொள்வதேது? எனவே,

ஜெர்மானியத் தாடிக்காரனோடு
ஈரோட்டுத் தாடிக்காரனையும்
இணைத்துக் கொள்......

அப்போதுதான், பொதுவுடைமைக் கொள்கை வெற்றி பெற முடியும் எனப் பொதுவுடைமைத் தோழர்களுக்கு எடுத்துரைக் கிறார்!

சாதியும் சனாதனமும் இன்று தலைதூக்கி நிற்பதைக் கண்டு தந்தை பெரியார் இன்றில்லையே - அவற்றைத் தகர்த்து அழிக்க - எனக் கலங்குகிறார், கவிஞர்.

அய்யா
உன்
கைத்தடி ஒன்று
காலமானதால்,
இங்கே
கண்டவரெல்லாம்
தடியை எடுக்கிறார்

எனும் கவிஞரின் கூற்று சரிதானே?

சமுதாய நல விரும்பி

தன்னுடைய காதலினும் சமுதாயநலமே பெரிதெனப் பாடுபடும் இயல்பினர் இக் கவிஞர்! காதலியிடம், "கண்ணே! அதோ பார்! கூழுக்கு அழுகிறானே கூரை வீட்டு முனியன்; அவன் வாழ்வுக்கு முதலில் வழிசெய்துவிட்டுப் பின்னர் உன்னிடம் ஓடோடி வருவேன்.

அதுவரையில்...
கொஞ்ச நேரம்
நீ
காத்திரு கண்ணே!

என்கிற இக் கவிஞர் ஓர் சமுதாய நல விரும்பி என்பதில் ஐயமேது?

விலைமகளிரை அந்த நிலைக்கு ஆளாக்கியது சமூகமேதான் எனக் கண்டித்துக் குரல் கொடுத்தார் கவிஞர் காமராசன்.

நாங்கள் நிர்வாணத்தை விற்பனை செய்கிறோம்
ஆடை வாங்குவதற்காக!

உணவுக் கொழுப்பில் பசி கொண்டவர்களுக்கு
பசிக்கிறக்கத்தில் உணவானவர்கள் நாங்கள்

என விலைமகளிரின் புலம்பலை வேதனையோடு வெளிப் படுத்துகிறார், அவர். இதே குரலைக் கவிஞர் எழிலரசும் எழுப்புகிறார்.

எங்கள்
இருட்டு வாழ்க்கைக்கு
வெளிச்சம்

வாங்கத்தானே
அச்சத்தை
நாங்கள்
விற்பனை செய்தோம்?

நாங்கள்
குற்றவாளிகளா?
நீங்களே சொல்லுங்கள்!

என விலைமகளிர் நியாயம் கேட்கின்றனர்!

இல்லாமையையே தமக்குச் சொத்தாகக் கொண்டவர்கள் இன்னும் இருக்கத்தானே செய்கிறார்கள்! ஆசிரியர் செருப்பைப் பற்றி ஒரு கட்டுரை எழுதச் சொன்னார். சிறுவன் ஒருவன் எழுதி முடித்தான்,

இன்னும் அதை
நான்
வாங்கவில்லை

என்று! இந்த இழிநிலை மாறுவது எப்போது? இவ்வாறு,

இதந்தரு மனைகள்
எல்லாம்
இன்னலில் கிடக்கும்போது

சுதந்திரம் என்பது சும்மா சொல்வது ஆகிவிடாதா?

அவலம் அகலாதா?

படித்துப் பட்டம் பெற்ற இளைஞர்கள் வேலையின்றித் திண்டாடும் வேதனை கவிஞரின் உள்ளத்தைப் பெரிதும் வாட்டுகிறது.

பட்டம் என்பது
என்னதான் தோழனே?
சட்டப்படி
நீ
அனாதை

என்பதைச் சுட்டுவதுதானே? என்ற குமுறல் மறைவது எப்போது?

நடுத்தரக் குடும்பத்தினர் நல்வாழ்வை எட்ட எட்ட அது எட்டியே போய்விடுகிறதே! நடுத்தரக் குடும்பத்து நாயகி ஒருத்தி பேசுகிறாள் :

எங்கள் கவலைகள்
இந்த
வானத்தைப் போன்றவை;
ஆமாம்

இவற்றின்
தொடு தூரத்தை
தொட்டவர்கள் யாருமில்லை!

பெண் விடுதலை என்பது பேச்சளவில் உள்ளதே தவிர நடைமுறைக்கு வந்ததாய்க் காணோம்!

இவர்கள்
நிமிர்ந்தது
விடுதலைப் படையின்
வேக நடைக்கா?

விலங்கு மனிதரின்
மோகப் படைக்கா?

இதற்குச் சமூகம் மறுமொழி சொல்லியாக வேண்டும்!

இலங்கைத் தமிழர்கள் ஈவிரக்கமின்றிக் கொன்றழிக்கப் படுவது கண்டு உலகம் கண்மூடி வாய் பேசாதிருக்கிறதே என்பதால்,

ஏ!
உலக சமாதான
நிறுவனங்களே!
உங்கள்
நாக்குகள் எப்போது
துண்டிக்கப்பட்டன?

என வேகமுடன் வினவுகிறார்.'

நயவுரைகள்

இன்றைய அலுவலகக் கோப்புமுறை இருக்கும்வரை விரைந்த முன்னேற்றம் காண முடியாது! நிருவாக முறையிலே மாற்றம் வேண்டுமென்பதைக் கவிஞர் நயமாக எடுத்துரைக்கிறார்.

கோப்புகளை
நம்புகின்ற வரையில்
இந்த
இந்தியா
பூப்படையப் போவதில்லை.

சொற்களைப் பொருத்தமுற ஆள்வதன் மூலம் கருத்தைச் சுருக்கெனத் தைக்க வைப்பது புதுக்கவிதை உத்திகளுள் ஒன்று. எங்கும் நேர்மையில்லை என்பதைக் கரை, கறை என்ற சொற்களாலேயே சுட்டி விடுகிறார்.

இந்தியாவில்
எல்லையாய்
இருப்பது
கரை;

எல்லாமாய்
இருப்பது கறை.

அருகே, தான் விரும்பிய பெண் அமர்ந்திருந்தாள் என்பதை,

என்
பக்கத்து இருக்கை
ஒரு
சொர்க்கத்தை யல்லவா
சுமந்து கொண்டிருந்தது—

எனச் சுவைபடக் கூறுகிறார்!

முதுகெலும்பையே
முறித்துக்கொண்டபின்
நிமிர்வது எப்போது?

இருட்டைக் கிழிக்கச்
சுருட்டு நெருப்பு போதாது!

என்பன போன்ற தொடர்கள் கவிஞருடைய சொல்லாட்சித் திறனுக்கு சான்றுகளாய் நிற்கின்றன.

விளக்குகள் எரியலாயின என்பதை, "விளக்குகள் பற்களைக் காட்டின" என்றும், இளம் மங்கையை, "முப்போதும் ஒளிவீசும் மொட்டு நிலா; தரைநிலா" என்றும், உயிரோடிருந்தும் பயனின்றி இருக்கிறார் என்பதை, "இவர் இறக்காமல் இருக்கின்ற இறந்த காலம்" என்றும் கூறுவதிலிருந்து இக் கவிஞர் புதுக்கவிதைப் போக்கையும் உத்திகளையும் புரிந்து கையாள்பவர் என்பது தெளிவாகிறது.

திரு. எழிலரசு, பாவேந்தர் பாரதிதாசனின் கவிதைகளில் ஊறித் தோய்ந்தவர். பாவேந்தரின் கருத்துகளைப் பாடு பொருளாகக் கொண்டவர்; ஆயினும், பாடல் வடிவத்தில் அவரினின்றும் வேறுபட்டுப் புதுக்கவிதைகள் புனைந்துள்ளார். இவருடைய இக் கன்னி முயற்சியிலேயே வெற்றிக் கனியை எட்டிப் பிடிக்கும் நிலையை எய்தியுள்ளார்!

மேலும் மேலும் வளர்ந்து நாட்டுக்கு நல்ல கருத்துகளைத் தொடர்ந்து தந்த வண்ணமிருப்பாராக!

நூல் ஆக்கம்	கவிஞர் எழிலரசு
வகைமை	புதுக்கவிதை
வெளியீடு	மதியரசன் பதிப்பகம், சென்னை. (1984)